# நன்னூல் உரை வளம்

7

உயிரிற்றுப் புணரியல் - II

இரா. கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies

நன்னூல் உரைவளம் (தொகுதி-7)

எழுத்ததிகாரம்

# உயிரீற்றுப் புணரியல் - 2

பதிப்பாசிரியர்

முனைவர் இரா. கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்

இரண்டாம் முதன்மைச் சாலை,

தரமணி, சென்னை-600 113

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Nannūl uraivaḷam (Vol. 7)**<br>**Uyirīṟṟup puṇariyaḷ - 2** |
| Author | : | Dr. R. Kannan<br>Associate Professor<br>Dept. of Tamil Language<br>Presidency College, Chennai - 5 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus, Tharamani<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 695 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2010 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 11 Point |
| No. of Pages | : | 368 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 160/-<br>(Rupees One hundred and sixty only) |
| Printed by | : | Sri Venkateswara Offset<br>New No. 47, Rajanga Mathya Street<br>Vadapalani, Chennai - 600 026.<br>Phone : 23621409 |
| Subject | : | Tamil Grammar |

**முனைவர் கரு.அழ. குணசேகரன்**
**இயக்குநர்**
**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**சென்னை – 113**

# அணிந்துரை

வாழ்வை இலகுவாக்க மனிதன் படைத்துக் கொண்ட கருவிகள் பற்பல. அவற்றுள் மொழியும் ஒன்று. ஆயினும் பிற கருவிகள் யாவற்றுள்ளும் தலையாயதும் தனிச் சிறப்புடையதும் மொழியே. மொழி இன்றேல் வேறு எக்கருவியும் தோன்றி யிராது. மொழி, மனத்தின் உயிர்; பிறபிற கலைகளுக்கும் கருவிகளுக்கும் தாய். மாந்தரின வாழ்விற்கு இத்துணை இன்றியமையாக் கருவியாய்த் திகழும் மொழி, உலகம் யாண்டும் பரவிக் கிடக்கும் மக்களினக் குழுக்களிடையே பலவாகக் காணக் கிடக்கிறது. அம் மொழிக்கூட்டத்திடையே பன்மீன் நாப்பண் விளங்கு பால்மதி போல் இலங்குவது தமிழ்.வரலாற்றுக்காலந் தொடங்கி இன்றளவும் தன்னேரிலாத் தகைசால் சீர்மை யுடன் திகழும் இத் தமிழ்மொழியின் இலக்கிய இலக்கணப் பரப்பு அளந்திட்டுக் கூற ஒண்ணா விரிவினை உடையது. காலமும் கடும்புனலும் கொண்டது போக எஞ்சியன சிலவே யாயினும், மறைந்து போனவற்றிற்கு மாற்றாகக் காலந் தோறும் தோன்றிய பனுவல்களோ பற்பல. அழகு தமிழில் அமைந்த அந்நூல்களின் பொதிபொருளைப் பழகு தமிழில் விளக்க எழுந்த உரைகளும் மிகப் பல.

ஒல்காப் புகழுடைய தொல்காப்பியத்திற்குப் பின் ஏறத்தாழ பன்னிரண்டு நூற்றாண்டுகள் கழித்துத் தோன்றி இன்றளவும் தனிச் சிறப்புடன் வாழ்வது நன்னூல். பெயருக்கு ஒப்பவே தமிழின் இலக்கணத்தை நலம்படவும் நயம்படவும் இயம்பும் இந்நூலிற்கு உரைவிளக்கம் கண்டோர் பலர். அவ்வுரைகளுள் பல, தம் பெயரை மட்டுமே நிறுத்தி தாம் மாய்ந்தன. வேறுபலவோ, அச்சேறியபோதும் இன்று காணுதற்கும் அரியனவாய் உள்ளன. இவ்வாறு காலச் செலவால் அருகி உள்ள உரைகளை அரிதின் முயன்று திரட்டி இருபத்திரண்டு தொகுதிகளாக உருவாக்கப் பெற்றுள்ள இவ்வுரை வளத்தினை எம் நிறுவனத்தின் வழி வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறோம்.

மயிலை நாதர், சங்கர நமச்சிவாயர்,சிவஞான முனிவர், கூழங்கைத் தம்பிரான், விசாகப் பெருமாளையர், ஆ.முத்துத் தம்பிப்பிள்ளை, இராமானுச கவிராயர், கா.கோபாலா சாரியார், தி.கோ.ரங்காசாரியார், ஆறுமுக நாவலர், வ.குமார சாமிப் புலவர், வை.மு.சடகோபராமானுசாசாரியார், சே.கிருட்டிணமாசாரியார், பவானந்தம் பிள்ளை, கொ.இராமலிங்கத் தம்பிரான், கா.நமச்சிவாய முதலியார், மோசசு பொன்னையா ஆகியோரின் உரைகளும், என்றி பவார் செய்த பாயிரப் பகுதிக்கான ஆங்கில மொழி பெயர்ப்பும், இலாசரசு செய்த எழுத்ததிகாரம் மற்றும் சொல் லதிகாரத்திற்கான ஆங்கில மொழிபெயர்ப்பும் இவ்வுரை வளத்தில் திரட்டப் பெற்றுள்ளன. நன்னூலைத் தழுவி இயற்றப் பெற்று ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் மேல் மீள்பதிப்புக் காணாத திருப்பாற்கடல்நாதன் கவிராயரின் தமிழிலக்கணம், சி.அருணாசலம் பிள்ளையின் TAMIL GRAMMAR, இ.சாமுவேல் பிள்ளையின் தொல்காப்பிய நன்னூல், G.U.போப்பின் காண்டிகையுரை, ஆ.முத்துத் தம்பிப்பிள்ளையின் நன்னூல் இலகுபோதம் ஆகியன இவ்வுரைவளத் திரட்டில் தனித்தனி நூல்களாக வெளியிடப் பெற்றுள்ளன. இவ்வுரைவளம் தமிழன்னைக்கு அணி சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

நன்னூல் உரைவளத்தின் பதிப்பாசிரியரான முனைவர் **இரா.கண்ணன்**, சென்னை மாநிலக்கல்லூரித் தமிழ்த் துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றுகிறார். இவர் அறுபதிற்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். இவ்வுரைவளத்தின் பதிப்புப் பணியோடு எழுத்துக் கோர்த்தல், மெய்ப்புத் திருத்தல், வடிவமைத்தல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் தனியொருவராக இருந்து சிறப்புடன் செய்துள்ள இப் பதிப்பாசிரியரை மனதார வாழ்த்துவதுடன் நன்றி நவிலுங் கடப்பாடுமுடையேன்.

நிறுவனப் ப்ணிகளில் எம்முடன் இணைந்து பணியாற்றும் துணை இயக்குநர், பேராசிரியப் பெருமக்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் ஆகிய அனைவர்க்கும் எம் நன்றி உரித்தாகுக.

**கரு.அழ.குணசேகரன்**

சென்னை – 113.

12.10.2010.

# முன்னுரை

தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐம்பெரும் பிரிவுகளை உடையது என்பர். இது பொது வழக்கே யாயினும் பிற்காலத்தில் பாட்டியல் அனைய புதுப்புது இலக்கணப் பிரிவுகள் தமிழில் தோன்றி நன்கு செழித்து வளர்ந்துள்ளன. அவ்வாறே எழுத்து, சொல் முதலான ஒவ்வொரு பிரிவினிலும் தோன்றிய இலக்கண நூல்களும் பல உள. தொல்காப்பியம், எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களை உடையதாதலான் அது மூன்றிலக்கணம் கூறும் நூல் என்பது போதரும். ஆயினும் பொருளதிகாரத்துள் அமைந்து கிடக்கும் உவமவியலும், செய்யுளியலும் முறையே அணியிலக்கணத்தையும், யாப்பிலக்கணத்தையும் வேண்டுமளவிற்கு விளக்கிக் கூறுதலான், அந்நூல் ஐந்திலக்கண நூலுமாம். தொல்காப்பியத்திற்குப் பின் பல்வேறு இலக்கண நூல்கள் எழுந்தன.பழங்காலத்தில் பெருவழக்காய் வழங்கிய அவ்விலக் கண நூல்கள் இன்று வீழ்ந்து போயின. இன்று வழங்கப் பெறும் இலக்கண நூல்களுள் வீரசோழியம், தொல்காப்பியத்திற்குப் பின் எழுந்த முதல் ஐந்திலக்கண நூலாகும். ஆயினும் அந்நூல் வடமொழி சார்பினைப் பெரும்பான்மை தழுவிச் செல்வதால் அது அவ்வளவாகப் போற்றப் படுவதில்லை. வீரசோழியத்திற்குப் பின் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண் டளவில் பவணந்தி முனிவரால் நன்னூல் இயற்றப்பட்டது. நன்னூல் ஐந்திலக்கணம் கூறிய நூல் என்றும், இன்று எழுத்து மற்றும் சொல்லிலக் கணம் உரைக்கும் பகுதி மட்டுமே கிடைக்கப் பெறுகிறது என்றும் எஞ்சிய பகுதிகள் காலச் செலவால் அழிந்திருக்கக் கூடும் என்றும் கருதுவாரும் உண்டு. இன்று வழக்கில் உள்ள நன்னூலின் மொத்த நூற்பாத் தொகை நானூற்று அறுபத்திரண்டு. பாயிரம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என மூன்று பகுதிகளாய் அமைந்துள்ள இந்நூலின்கண் பாயிரம் 55 நூற்பாக்களையும், எழுத்ததிகாரம் 202 நூற்பாக்களையும் சொல்லதிகாரம் 205 நூற்பாக்களையும் பெற்றுள்ளன. பாயிரம், பவணந்தியால் இயற்றப்பட்டதன்று என்பர்.

நன்னூலிற்கு இன்றுகாறும் எழுந்துள்ள உரைகள் பல. ஆயினும் மயிலைநாதரின் உரையே முதலில் எழுந்த உரையாகும். மயிலைநாதர் நன்னூல் ஆசிரியர் பவணந்தியின் சம காலத்தவர். மயிலைநாதரின் உரை நன்னூலிற்கு இன்று வரை எழுந்துள்ள உரைகள் யாவற்றிலும் தலைமை யானது, தனிச் சிறப்புடையது. இவ்வுரைக்குப் பின் பல உரைகள் எழுந்தன. அவற்றுள் சில அச்சேறாமலேயே இறந்தன.வேறுசில அச்சேறிய பின்னும், இன்று அருகியுள்ளன.இவ்வாறு காலச்செலவான் அருகி வரும் உரைகளைக் காத்தற் பொருட்டும், தமிழாய்விற்குத் தக்க கருவி நூலாய் அமையும் திறம் நோக்கியும் இவ்வுரைவளம் உருவாக்கப் பெற்றுள்ளது.இதில் நன்னூலின் சிறந்த உரைகள் அனைத்தும் திரட்டப் பெற்றுள்ளன.

நூற்பா அதன்கீழ் சீர் பிரிக்கப் பெற்ற நிலையில் நூற்பா,ஆங்கில எழுத்துப் பெயர்ப்பு, இலாசரசு செய்த மூல நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு, தொல்காப்பியம் முதல் சுவாமிநாதம் வரையிலான இலக்கண நூல்களில் இருந்து தரப்பெற்றுள்ள ஒப்புமைப் பகுதி,நன்னூல் உரைகள் ஆகியன இவ்வுரைவளத்தில் நிரல்படுத்தப்பட்டுள்ளன. மூலநூலின் பாட வேறுபாடும், மயிலை நாதர் உரையின் பாடவேறுபாடும் காட்டப் பெற்றுள்ளன.

நன்னூலிற்கு விருத்த யாப்பில் எழுந்த ஆண்டிப்புலவர் உரை அழிந்து போனது. அச்சேறிய உரைகளுள் பல இன்று அருகி, பெயரளவில் மட்டுமே அறியப் பெறுபவையாக உள்ளன. அச்சேறிய அரிய உரைகளையேனும் காக்கும் வகையில் இவ்வுரைவளம் இருபத்திரண்டு தொகுதிகளாக வெளியிடப் பெறுகின்றது. தமிழ் உலகம் ஏற்றுப் போற்றும் என நம்புகிறேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர், பேராசிரியர் முனைவர் ***கரு.அழ.குணசேகரன்*** அவர்களும், துணை இயக்குநர் **திரு.க.ந.வீரபாகு சுப்பிரமணியன்** அவர்களும் நன்னூல் உரைவள நூல்கள் அனைத்தையும் விரைந்து வெளிக் கொணர்ந்தனர். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இவ்வுரைவளத் திரட்டுப் பணியின்போது பல்லாற்றான் உதவிய சென்னை இராணிமேரி கல்லூரிப் பேராசிரியை **முனைவர் ந.கலைவாணி** அவர்களுக்கும், உற்றுழி உதவிய அனைவர்க்கும் உளமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்வதோடு, தோன்றாத் துணையாய் இருந்து எம்மை இயக்கி வரும் தில்லைக் கூத்தனின் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து அமைகிறேன்.

**இரா.கண்ணன்**

# நன்னூல் உரைவளம்

(தொகுதி – 7)

## எழுத்ததிகாரம்

## உயிரீற்றுப்புணரியல் – 2

# சுருக்க விளக்கம்

| | | |
|---|---|---|
| அவி | – | அவிநயம் |
| இடள் | – | இதன் பொருள் |
| இல, விள | – | இலக்கண விளக்கம் |
| உ–ம் | – | உதாரணம் |
| உணர்–ற்று | – | உணர்த்துதல் நுதலிற்று |
| எ–டு | – | எடுத்க்காட்டு |
| எ–று | – | என்றவாறு |
| எ–னின் | – | என் நுதலிற்றே எனின் |
| சுவாமி | – | சுவாமிநாதம் |
| சூ–ம் | – | சூத்திரம் |
| தொல், எழு | – | தொல்காப்பியம் எழுத்ததிகாரம் |
| தொல், சொல் | – | தொல்காப்பியம் சொல்லதிகாரம் |
| தொல், பொருள் | – | தொல்காப்பியம் பொருளதிகாரம் |
| தொன் | – | தொன்னூல் விளக்கம் |
| நச் | – | நச்சினார்க்கினியர் |
| ந.பா | – | நவநீதப் பாட்டியல் |
| நேமி | – | நேமிநாதம் |
| பா–டு | – | பாட வேறுபாடு |
| பொ–ரை | – | பொழிப்புரை |
| மா.அலங் | – | மாறனலங்காரம் |
| மு.வீ | – | முத்துவீரியம் |
| வீர | – | வீரசோழியம் |
| வெண், பாட் | – | வெண்பாப் பாட்டியல் |

---

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ ,ஒ, ஓ, ஔ, ஃ – இவ்வெழுத்துக்கள் முறையே a , ā , i , ī ,u ,ū ,e, ē ,ai ,o, ō, au, kh எனவும்,

க், ங் , ச், ஞ் , ட் ,ண், த், ந் , ப், ம், ய், ர் , ல் , வ், ழ், ள், ற் , ன் – வ்வெழுத்துக்கள் முறையே k, ṅ , s, ñ , t , ṇ, ṭ , n , p , m , y , r , l , v ,ḷ ,ḻ, ṟ , ṉ, kh

எனவும் ஆங்கில எழுத்துப்பெயர்ப்பில் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

# நன்னூல் உரைவளம் – தொகுதி – 7

## எழுத்ததிகாரம்

## உயிரீற்றுப் புணரியல் – 2

166. செய்யிய வென்னும் வினையெச்சம் பல்வகைப்
பெயரி னெச்சமுற் றாற னுருபே
அஃறிணைப் பன்மை யம்மமுன் னியல்பே.

செய்யிய என்னும் வினையெச்சம் பல வகைப்
பெயரின் எச்சம் முற்று ஆறன் உருபே
அஃறிணைப் பன்மை அம்ம முன் இயல்பே

seyyiya e̲n̲n̲um vi̲naiyessam palavakaip
peyari̲n̲ essam mur̤r̤u āra̲n̲ urupē
ak̲h̲r̤iṇaip pa̲n̲mai amma mu̲n̲ iyalpē

### இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**WORDS WITH a AS FINAL**

(The Hard initials) are not doubled after the following A finals: Verbal participles of the form **Ceyyiya** (present and past) Relative Participles, Finite verbs, (plural) sign of the Sixth Case, Plural Impersonals and the Particle **amma.**

### ஒப்புமைப் பகுதி

அன்ன என்னும் உவமக் கிளவியும்
அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியும்
செய்ம்மன என்னுந் தொழிலிறு சொல்லும்
ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும்
செய்த என்னும் பெயரெஞ்சு கிளவியும்
செய்யிய என்னும் வினையெஞ்சு கிளவியும்

அம்ம என்னும் உரைப்பொருட் கிளவியும்
பலவற் றிறுதிப் பெயர்க்கொடை உளப்பட
அன்றி அனைத்தும் இயல்பென மொழிப.

(தொல்.: 211)

செய்யிய வெனும்வினை யெச்சம் பலவகைப்
பெயரி னெச்சமுற் றார றுருபே
யஃறிணைப் பன்மை யம்மமுன் னியல்பே

(இ.வி.: 86)

வியங்கோ ளண்மை விளியு முவமையுஞ்
செய்த செய்யிய வெனுமீ ரெச்சமும்
அம்மவும் பலவு மிகாதியல் பாகும்

(மு.வீ.: 241)

## மயிலை நாதர்

எ-ன், எய்தியது விலக்குதல் நுதலிற்று.

இ-ள்.:- இச் சொன்ன ஆறிடத்தும் அகர முன் வல்லினம் வந்தால் இயல்பாய் முடியும், எ - று.

இதன் முதலீறுகளில் அகர வீற்று மொழிகளை வைத்தமையால் இடையனவும் அகர வீறே யாமெனக் கொள்க. 'பல்வகைப் பெயரினெச்சம்' என்றது, தொழிலும் ஒப்பும் பண்பு முதலானவும் எதிர்மறையில் வருவனவும் எல்லாம் தழுவுதற் கெனக் கொள்க.

வ-று.:-

உண்ணியகொண்டான்; (உண்ணிய) + (சென்றான், தந்தான், போயினான்) என வினையெச்ச முன் இயல்பாயின. (உண்ட, உண்ணா நின்ற) + (குதிரை, செந்நாய், தகர், பன்றி) எனத் தொழில் கொள் பெயரெச்ச முன் இயல்பாயின. (பொன்னன்ன, பொன்போன்ற, பொன்னனைய, பொன்னிகர்த்த, பொன்னொத்த[1]) + (குதிரை, செந்நாய், தகர், பன்றி) என[2]உவமப் பண்புகொள் பெயரெச்ச முன் இயல்பாயின. (பெரிய, சிறிய, செய்ய,

பாட வேறுபாடு.:-

1. அன்ன,இன்ன,என்ன +குதிரை

2. உவமத்தொழில்கொள் பெயரெச்சம் இயல்பாயிற்று

இனிய, தண்ணிய) + (காலம், சரோருகம், தாமரை, பங்கயம்) எனப் பல்வகைப் பண்புகொள் பெயரெச்ச முன் இயல்பாயின. (உண்ணாத, தின்னாத) + (குதிரை, செந்நாய், தகர், பன்றி) எனப் பெயரெச்ச எதிர்மறை முன் இயல்பாயின. (உண்டன, தின்றன, வாழ்க, செல்க) + (குதிரை, செந்நாய், தகர், பன்றி) என முற்றுவினை முன் இயல்பாயின. சாத்தன குதிரைகள்; செந்நாய்கள், தகர்கள், பன்றிகள் என ஆறனுருபின் முன் இயல்பாயின. சிலகுதிரை, பலகுதிரை; செந்நாய், தகர், பன்றி என அஃறிணைப் பன்மை முன் இயல்பாயின. அம்ம கொற்றா; சாத்தா, தேவா, பூதா என உரையசை யிடைச்சொல் முன் இயல்பாயின.

உண்ணாக்குதிரை, ஓடாப்பூட்கை எனவரும் பெயரெச்ச எதிர்மறை ஆகார வீறாகலின் விலக்கின வெனக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

## சிவஞான முனிவர்

**எ–னின்,** உயிரீறுகட்குத் தனித்தனி சிறப்புவிதி கூறுவான் தொடங்கி, அகர ஈற்றுச் சொல்லுள் சிலவற்றிற்கு *'க ச த ப மிகும்' எனம்* எய்தியது விலக்கல் நுதலிற்று.

**இ–ள்.:–** இங்ஙனம் விதந்த அகர ஈற்றுச் சொற்கள் ஆறன் முன்னும் வரும் வல்லினம் இயல்பாம், எ – று.

பல்வகை என்பதனை முற்று என்பதனோடும் ஒட்டுக.

பெயரின் எச்சம் என இன் சாரியை, தவிர்வழி வந்தமையின் விரித்தல் விகாரம்.

இதன் முதலிறுதிகளின் அகர ஈற்றுச்சொல் வைத்தமை யான் இடையனவும் அகர ஈற்ற என்பதூஉம், பல்வகை என்றதனான் வினையடி நான்கினும் பிறந்த பெயரெச்சம் முற்று என்பதூஉம், முற்று என விதந்தமையின் அஃறிணைப் பன்மை என்றது பெயர் என்பதூஉம் பெற்றாம்.

வினையடி நான்காவன: இயல்பாகிய வினையடி ஒன்றும், ஏனைப் பெயர் இடை உரி யடியாகப் பிறந்த வினையடி மூன்றும் ஆம்.

உ–ம்.:–

உண்ணிய கொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனச் செய்யிய என்னும் வினையெச்ச முன் இயல்பாயின.

உண்ட, உண்ணாநின்ற, உண்ணாத எனவும்; கடைக் கணித்த, சித்திரித்த, வெளுத்த, சினவிய, கறுவிய, அமரிய எனவும்; திண்ணென்ற, பொன்போன்ற எனவும்; சான்ற, உற்ற எனவும்; குதிரை, செந்நாய், தகர், பன்றி எனவும் நால்வகைத் தெரிநிலைப் பெயரெச்ச முன்னும் இயல்பாயின. அமர் முகத்த, கடுங்கண்ண, சிறிய, பெரிய, உள, இல, பல, சில எனவும்; பொன்னன்ன எனவும், கடிய எனவும், குதிரை, செந்நாய், தகர், பன்றி எனவும் மூவகைப் பெயரெச்சக் குறிப்பின் முன்னும் இயல்பாயின. முற்றிற்கும், பொருள் வேறுபாடு அன்றிச் சொல் வேறுபாடு இன்மையின் இவையே காட்டாகக் கொள்க. வாழ்க, வாழிய: கொற்றா, சாத்தா, தேவா, பூதா என வியங்கோள் முற்றின் முன் இயல்பாயின.

முற்று முன் இயல்பாம் என்றமையின், அருத்தா பத்தியான் வினைமுற்று வினை யெச்சமாயும் குறிப்பு முற்று ஈரெச்சமாயும் நின்றவழி வரும் வல்லினம் இயல்பாதலும் கொள்க.

வ–று.:–

உண்ட கண்டன எனவும், அமர்முகத்த குதிரை எனவும், அமர்முகத்த கலக்கின எனவும் வரும். தன கைகள், செவிகள், தாள்கள், பதங்கள் என ஆறனுருபின் முன் இயல்பாயின. பல குதிரை, செந்நாய், தகர், பன்றி எனவும்; பல கொடுத்தான், செய்தான், தந்தான், படைத்தான் எனவும் இருவழியும் அஃறிணைப் பன்மைப்பெயர் முன் இயல்பாயின. பிற பெயர்களும் அன்ன. அம்ம கொற்றா, சாத்தா, தேவா, பூதா என உரையசை இடைச்சொல் முன் இயல்பாயின.

ஒரு சொல்லையே பலவிடத்தும் காட்டியது என்னை யெனின்:– இங்ஙனம் காட்டியவற்றுள் பல என்னும் ஒருசொல், பெயரெச்சக் குறிப்பாயும், குறிப்பு வினை முற்றாயும், குறிப்பு முற்று ஈரெச்சமாகும் பெயரெச்சக் குறிப்பாயும் வினையெச்சக் குறிப்பாயும், குறிப்பு வினையாலணையும் அஃறிணைப் பன்மைப் பெயராயும், பொருளாதி ஆறனுள் பண்பு காரணமாக வரும் அஃறிணைப் பன்மைப் பெயராயும் அறுவகைப்பட்டுப் பொருள் நோக்கம் முதலியவற்றான் இன்னது என்று துணியப்படு மாதலான் என்க. பிற சொற்களும் அன்ன.

இவ்விகற்ப மெல்லாம் சொல்லதிகாரத்துள் காண்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், எய்தியது விலக்கி இயல்பாய் முடியு மெனக் கூறியது.

இ-ள்.:- **செய்யிய என்னும் வினையெச்சம்** - செய்யிய வென்று சொல்லப்படும் வினை யெச்சமாகிய அகர வீற்று வினைச்சொல் முன்னும், **பல்வகைப் பெயரினெச்சம்** - பல வகைப்பட்ட பெயரெச்சமாகிய அகரவீற்று வினைச் சொல் முன்னும், **முற்று** - குறிப்பு முற்றும் வினை முற்றுமாகிய அகர வீற்று வினைச்சொல் முன்னும், **ஆறனுருபே** - ஆறாம் வேற்றுமை யாகிய அகரவீற்று உருபு முன்னும், **அஃறிணைப் பன்மை** - பன்மைப் பொருளினை உணர்த்தும் அகர வீற்று அஃறிணைப் பெயர்கள் முன்னும், **அம்ம முன்** - அம்ம வென்று சொல்லும் எதிர்முகமாகிய அகர வீற்று இடைச்சொல் முன்னும், **இயல்பே** - வருமொழி முதல் வல்லினம் வந்தால் இயல்பாய் முடியும், எ-று.

**அருகியவுரை.:-**

முதலினும் ஈற்றினும் அகர வீற்றுச் சொல்லை வைத்தமையால் இடையினின்ற சொற்களும் அகர வீறே எனக் கொள்க.

பலவகைப்பட்ட பெயரெச்சமாவது தொழில் கொள் பெயரெச்சமும், உவமைத்தொழில்கொள் பெயரச்சமும், பண்புகொள் பெயரெச்சமும், எதிர்மறைப் பெயரெச்சமு மாம் என்க.

உ-ம்.:-

உண்ணிய கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என வினையெச்சம் இயல்பாயிற்று. உண்ட, உண்ணாநின்ற குதிரை, செந்நாய், தகர், பன்றி எனத் தொழில்கொள் பெயரெச்சம் இயல்பாயிற்று. பொன்போன்ற, பொன்னிகர்த்த, பொன்னொத்த, பொன்னுறழ்ந்த, பொன்புரைத்த, பொன்னிசைந்த, பொன்னேய்ந்த, பொன்னேர்ந்த குதிரை, செந்நாய், தகர், பன்றி யென உவமைத் தொழிலோடு பெயரெச்சம் இயல்பாயின. பொன்னன்ன, பொன்னனைய, பொன்னின் குதிரை, செந்நாய், தகர், பன்றி யென உவமைப் பண்புகொள் பெயரெச்சம் இயல்பாயின. செய்ய, சிறிய, சேய, தீய, வெய்ய, புதிய, மேல, திண்ணிய, உண்ணிய, நுண்ணிய, கமலம், சரோருகம், தாமரை, பங்கயம் எனப் பண்புகொள் பெயரெச்சம் இயல்பாயின. உண்ணாத, தின்னாத குதிரை,

செந்நாய், தகர், பன்றி யென எதிர்மறைப் பெயரெச்சம் இயல்பாயின. உண்டன, தின்றன, நல்லன, தீயன, வாழ்க, செல்க; குதிரை, செந்நாய், தகர், பன்றி யெனத் தெரிநிலை வினைமுற்று குறிப்பு வினைமுற்று முன்னும் இயல்பாயின. சாத்தன், கொற்றன்; குதிரை, செந்நாய், தகர், பன்றி யென ஆறனுருபின் முன் இயல்பாயின. சில, பல, உள, இல, அல, சில்ல, பல்ல, உள்ள, இல்ல, அல்ல குதிரை, செந்நாய், தகர், பன்றி யென அஃறிணைப் பன்மை முன் இயல்பாயின. அம்மகொற்றா, சாத்தா, தேவா, பூதா என உரையசை இடைச்சொல் முன் இயல்பாயின.

## விசாகப் பெருமாளையர்

இது, உயிரீறுகளுக்குத் தனித்தனி சிறப்புவிதி சொல்லத் தொடங்கி அகர வீற்றுச் சொற்களுக்குள்ளே சிலவற்றிற்கு எய்தியது விலக்குகின்றது.

இ–ள்.:– **செய்யிய வென்னும் வினையெச்சம்** – செய்யிய வென்னும் வினையெச்ச வினையும், **பல்வகைப் பெயரினெச்சம்** – பலவகைப்பட்ட பெயரெச்சவினையும், (பல்வகை) **முற்று** – பலவகைப்பட்ட முற்றுவினையும், **ஆறனுருபு** – ஆறாம் வேற்றுமை அகர வுருபும், **அஃறிணைப் பன்மை**– அஃறிணைப் பன்மைப்பெயரும், **அம்ம** – அம்ம வென்கின்ற வுரையசை யிடைச்சொல்லும், **முன்**–ஆகிய அகர வீற்றுச் சொற்களாறன்முன்னும், **இயல்பு**– வல்லெழுத்துக்க ளியல்யாம், எ–று.

உ–ம்.:–

உண்ணியகொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனச் செய்யிய வென்னும் வினையெச்ச முன் னியல்பாயின. உண்ட, உண்ணாநின்ற, உண்ணாத எனவும்; கடைக்கணித்த, சித்திரித்த, வெளுத்த, சினவிய, கருவிய, அமரிய எனவும், திண்ணென்ற, பொன்போன்ற எனவும், சான்ற, உற்ற எனவும்; வருகிற நால்வகைத் தெரிநிலைப் பெயரெச்ச வினை முன்னும், அமர்முகத்த, கடுங்கண்ண, சிறிய, பெரிய, உள, இல, பல, சில எனவும்; பொன்னன்ன எனவும்; கடிய எனவும், வருகிற மூவகை வினைக்குறிப்புப் பெயரெச்ச முன்னும், குதிரை, செந்நாய், தகர், பன்றி இவற்றை வருவித்து உண்டகுதிரை, உண்டசெந்நாய், உண்டதகர், உண்டபன்றி என முறையே கூட்டிப் பலவகைப் பெயரெச்ச முன் னியல்பாதல் காண்க. பொருள் வேறுபாடல்லாமற் சொல் வேறுபா டில்லாமையால் முற்றிற்கும் இவையே உதாரணமாகும். வாழ்க, கொற்றா, சாத்தா, தேவா, பூதா என வியங்கோண் முற்றின் முன்னியல்பாயின. வாழிய வென்பதனோடு மிப்படியே

கூட்டுக. முற்றின் முன்னியல்பா மெனவே அருத்தா பத்தியால் உண்ட கண்டன, அமர்முகத்த குதிரைகள், அமர்முகத்த கலக்கின என வினைமுற்று வினையெச்ச மாகியுங் குறிப்பு முற்றீ ரெச்சமாகியும் வந்த விடத்தும் இயல்பா மென்றறிக. தன்கைகள், செவிகள், தாள்கள், பதங்கள் எனவாறனுருபின் முன்னியல்பாயின. பல குதிரைகள், செந்நாய்கள், தகர்கள், பன்றிகள் எனவும், பலகொடுத்தான், செய்தான், தந்தான், போயினான் எனவும், அஃறிணைப் பன்மைப்பெயர் முன் னிருவழியு மியல்பாயின. அம்மகொற்றா, சாத்தா, தேவா, பூதா என வுரையசை யிடைச்சொல் முன்னியல்பாயின. இது வியங்கோள் முற்றிற்கு எய்தாத தெய்துவித்தலும், எய்தியவழிப் புணரும் வல்லினத்திற்கு எய்திபதிகந்து படாமைக் காத்தலுஞ் சொல்லுகின்றது.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

சில அகரவீற்றுச் சொற்களின் முன்னே வன்கணம் மிகாவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

செய்யிய வென்னும் வினையெச்சம் பலவகைப்
பெயரி னெச்சமுற் றாற னுருபே
அஃறிணைப் பன்மை யம்மமுன் னியல்பே.

(செய்யிய என்னும் வினையெச்சம், பல்வகைப் பெயரினெச்சம், முற்று, ஆறனுருபு, அஃறிணைப் பன்மை, அம்ம முன் இயல்பே)

**இ—ள்.:— செய்யிய என்னும் வினையெச்சம்** — செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சவினையும், **பல்வகைப் பெயரின் எச்சம்** — பலவகைப்பட்ட பெயரெச்சவினையும், (பல்வகை)முற்று பலவகைப்பட்ட முற்றுவினையும், **ஆறன் உருபு** — ஆறாம்வேற்றுமை அகரவுருபும், **அஃறிணைப் பன்மை** —அஃறிணைப் பன்மைப் பெயரும், **அம்மமுன் இயல்பே** — அம்ம என்னும் உரையசையிடைச் சொல்லும் ஆகிய அகரவீற்றுச் சொற்களாறன் முன்னும் வல்லெழுத்துக்கள் இயல்பாம், எ—று.

முதலிலும் ஈற்றிலும் அகரவீற்றுச் சொல் வைத்தமையால், இடை நின்றனவும் அகரவீற்றுச் சொற்கள் என்பது பெற்றாம்.

அவ்வகர வீற்றுச் சொற்கள் யாவை?

செய்யியவென்னும் வாய்பாட்டு வினையெச்சம், பலவகைப்பட்ட பெயரெச்சம், பலவகைமுற்று, ஆறாம் வேற்றுமை அகரவுருபு, அஃறிணைப் பன்மைப் பெயர் அம்ம என்னு மிடைச்சொல் என்னும் ஆறுமாம்.

பல்வகைப் பெயரெச்சமென்றது, வினையடி நான்கினும் பிறந்த பெயரெச்சங்களை, பலவகை முற்றென்றது, வினையடி நான்கினும் பிறந்த முற்றுவினைகளை. வினையடி நான்காவன, இயல்பாகிய வினையடி ஒன்றும், மற்றைப்பெயர் இடை உரியடியாகப் பிறந்த செயற்கைவினையடி மூன்றுமாம்.

முன்னே முற்றென விதந்தமையால், அஃறிணைப் பன்மை என்றது பெயரை.

செய்யிய வென்னும் வாய்பாட்டு வினையெச்சத்தின்முன் வலிவரின் எவ்வாறாம்?

"செய்யியவென்னும் வினையெச்ச முன் இயல்பே"

உ-ம்.:-

(1) உண்ணியகொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனச் செய்யியவென்னும் வினையெச்சமுன் இயல்பாயின. (உண்ணிய–உண்ண.)

அகரவீற்றுப் பெயரெச்சத்தின் முன் வல்லினம் எவ்வாறாம்?

"பல்வகைப் பெயரினெச்ச முன் இயல்பே"

(2) உண்ட, உண்ணாநின்ற, உண்ணாத. எனவும், கடைக்கணித்த, சித்திரித்த, வெளுத்த, சினவிய, கறுவிய, அமரிய, எனவும், திண்ணென்ற பொன்போன்ற எனவும், சான்ற, உற்ற எனவும், வரும் நால்வகைத் தெரிநிலைப் பெயரெச்சவினை முன்னும், அமர்முகத்த, கடுங்கண்ண சிறிய, பெரிய, உள, இல, பல, சில எனவும், பொன்னன் எனவும், கடிய எனவும், வரும் மூவகை வினைக்குறிப்புப் பெயரெச்சமுன்னும், குதிரை, செந்நாய், தகர், பன்றி இவற்றை வருவித்து, உண்டகுதிரை உண்டசெந்நாய், உண்ட தகர், உண்டபன்றி, என முறையே கூட்டிப், பல்வகைப் பெயரெச்சமுன் இயல்பாதல் காண்க. குறிப்புவினை, இயற்கைவினையடி ஏலாமையால், மூவகையாயிற்று.

அகரவீற்று வினைமுற்றின்முன் வல்லினம் எவ்வாறாம்?

"பல்வகை முற்று முன் இயல்பே"

(3) உண்டன, உண்ணாநின்றன, உண்பன, உண்ணாதன, என்னுந் தெரிநிலைவினை முற்று முன்னும், அமர் முகத்தன, கரியன, என்னுங் குறிப்புவினை முற்று முன்னும், அமர் முகத்தன, கரியன, என்னுங் குறிப்புவினை முற்றுமுன்னும் குதிரை, செந்நாய், தகர், பன்றி, இவற்றை வருவித்து,

உண்டன குதிரை, உண்டன செந்நாய், எனக் கூட்டி முற்றுமுன் இயல்பாதல் காண்க.

இனி, மேற்காட்டிய பெயரெச்சவினைகட்கும், அன்பெறாத அகரவீற்றுப் பல்வகை முற்றுவினைகட்கும், பொருள் வேறுபாடன்றிச் சொல்வேறுபாடின்மையால், அவையே உதாரணமாகக் கொள்க.

வாழ்க கொற்றா, சாத்தா, தேவா, பூதா என வியங்கோண்முற்றின் முன் இயல்பாயின. வாழிய என்பதனோடும் இப்படியே கூட்டுக.

முற்றுமுன் இயல்பாம் எனவே, அருத்தாபத்தியால் இவ்வினைமுற்று வினையெச்சமாகியுங், குறிப்புமுற்று ஈரெச்சமாகியும் நின்றபோது வரும் வல்லினம் இயல்பாதலுங் கொள்க.

வரலாறு:–

உண்ட கண்டன: இஃது உண்டுகண்டன எனப் பொருள்படுதலால், வினைமுற்று வினையெச்சமாயிற்று. அமர்முகத்த கலக்கின இஃது அமர்முகத்தவாகிக் கலக்கின எனப் பொருள்படுதலால், குறிப்புமுற்று வினையெச்ச மாயிற்று. அமர்முகத்தகுதிரை வந்தன: இஃது அமர்முகத்தனவாகிய குதிரை வந்தன எனப் பொருள்படுதலால் குறிப்புமுற்றுப் பெயரெச்சமாயிற்று. இவற்றின் முன் வல்லினம் இயல்பாதல் காண்க.

அ என்னும் ஆறானுருபின்முன் வலிவரின் எவ்வாறாம்?

"ஆறனுருபே முன்னியல்பே"

(4) தன கைகள், தன செவிகள், தன தாள்கள், தன பதங்கள் என ஆறனுருபின் முன் இயல்பாயின.

அகரவீற்று அஃறிணைப்பெயரின் முன் வலிவரின் எவ்வாறாம்?

"அஃறிணைப் பன்மை முன்னியல்பே"

(5) பலகுதிரைகள், பல செந்நாய்கள், பலதகர்கள், பல பன்றிகள் எனவும், பல கொடுத்தான். பலசெய்தான், பல தந்தான், பல போக்கினான் எனவும், அஃறிணைப் பன்மைப் பெயர்முன் இருவழியும் இயல்பாயின.

அம்ம என்னு முரையசை யிடைச் சொன்முன் வலிவரின் எவ்வாறாம்?

"அம்மமுன் இயல்பே"

(6) அம்மகொற்றா, அம்மசாத்தா, அம்மதேவா, அம்மபூதா, என உரையசை யிடைச்சொன் முன் இயல்பாயின.

இது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால்

எய்தியது விலக்கல்.

## முகவை இராமானுச கவிராயர்

இது உயிரீற்றிற்குத் தனித்தனி சிறப்பு விதி கூறத் தொடங்கினா ராதலால், அகர ஈற்றுச் சில சொற்களுக்கு எய்தியது விலக்குகின்றது.

இ–ள்.:– **செய்யிய வென்னும் வினையெச்சம்** – செய்யிய என்ற இந்த வாய்பாட்டு அகர வீற்று வினையெச்சமும், **பல்வகைப் பெயரினெச்சம்** – பல வகைப்பட்ட அகர வீற்றுப் பெயரெச்சங்களும், **முற்று**–பலவகைப்பட்ட அகர வீற்று முற்று வினைச் சொற்களும், **ஆறனுருபு**–ஆறாம் வேற்றுமை அகர உருபும், **அஃறிணைப் பன்மை**– அகர வீற்று அஃறிணைப் பன்மைப் பெயர்களும், **அம்ம** – இந்த அகர வீற்று இடைச் சொல்லும், (ஆகிய) **முன்**– இவற்றின் முன், **இயல்பு** – (வல்லினம் வந்து புணரின்) மிகாமல் இயல்பாம், எ–று.

'பல்வகை' யென்றதை முற்றென்ற இடத்திலுங் கூட்டுக. இச் சூத்திரத்தின் முதலிலும் ஈற்றிலும் அகர வீற்றுச்சொல் வைத்ததினாலே இடை நின்றனவும் அகர வீறென்பதும், பல்வகை யென்றதினால் வினையடி முதலிய நான்கினும் பிறந்த பெயரெச்ச மென்பதும், அவ்வாறு பிறந்த முற்று வினைக ளென்பதும் முற்றென வேறு கூறினமையால் அஃறிணைப் பன்மை என்றது பெயரென்பதும் பெறப்படும். வினையடி நான்காவன: இயல்பாகிய வினையடி ஒன்றும், மற்றப் பெயர், இடை, உரி அடியாகப் பிறந்த செயற்கை வினையடி மூன்றுமாம்.

உ–ம்.:–

உண்ணியகொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனச் செய்யிய வென்னும் வினையெச்ச முன் இயல்பாயின. உண்டகுதிரை, உண்ணாநின்ற குதிரை, உண்கின்ற குதிரை, உண்ணாத குதிரை, செந்நாய், தகர், பன்றி, எனவும், கடைக்கணித்த, சித்திரித்த, வெளுத்த, சினவிய, கறுவிய, அமரிய எனவும்; திண்ணென்ற, பொன்போன்ற எனவும்; சான்ற, உற்ற எனவும், நிறுத்தி, குதிரை, செந்நாய், தகர், பன்றி என வருவித்து, கடைக்கணித்த குதிரை, சித்திரித்தகுதிரை என முறையே ஒட்டி, நால்வகைத் தெரிநிலைப் பெயரெச்ச முன்னும், அமர்முகத்த, கடுங்கண்ண, சிறிய, பெரிய, உள, இல, பல, சில, எனவும், பொன்னன்ன எனவும், கடிய எனவும் நிறுத்தி, குதிரை,

செந்நாய், தகர், பன்றி என வருவித்து, அவ்வாறே ஒட்டி மூவகைப் பெயரெச்சக் குறிப்பின் முன்னும் இயல்பாயினவாறு காண்க. இக் குறிப்பிற்கு இயற்கை வினையடி யேலாததினாலே மூவகை யாயிற்று. உண்டன, சென்றன, கரியன என நிறுத்தி, செந்நாய், தகர், பன்றி என வருவித்தொட்டி, முற்றின்முன் னியல்பாதல்காண்க. இனி அன் சாரியை பெறாத அகர வீற்றுப் பல்வகை முற்றிற்கும், பொருள் வேறுபாடே யன்றிச் சொல் வேறுபாடின்மையால், இப் பெயரெச்ச உதாரணங்களையே உதாரணமாகக் கொள்க. வாழ்க, வாழிய என நிறுத்தி, கொற்றா, சாத்தா, தேவா, பூதா என வருவித் தொட்டி, வியங்கோள் முற்றின் முன் இயல்பாதல் காண்க. முற்றின்முன் இயல்பா மென்றதினால், அருத்தாபத்தியால் இந்த வினைமுற்றுக்கள் வினை யெச்சமாகியுங் குறிப்புமுற்றுக்கள் ஈரெச்சமாகியும் நின்றபோது வரும் வல்லினம் இயல்பாதலுங் கொள்க.

வ–று.:–

உண்டகண்டன–இது, உண்டு கண்டன என நிற்றலால், வினைமுற்று வினை யெச்சமாயிற்று. அமர்முகத்தகலக்கின–இது, அமர்முகத்தவாகிக் கலக்கின என நிற்றலால் குறிப்புமுற்று வினையெச்ச மாயிற்று. அமர்முகத்த குதிரை வந்தன, இது அமர் முகத்தவாகிய குதிரை வந்தன என நிற்றலால் குறிப்புமுற்றுப் பெயரெச்சமாயிற்று. இவற்றின் முன் வல்லெழுத்து இயல்பாதல் காண்க. தனகைகள், தனசெவிகள், தனதாள்கள், தனபுயங்கள் என ஆறாம் வேற்றுமை அகர உருபின் முன் இயல்பாயின. பலகுதிரை, சிலகுதிரை, செந்நாய், தகர், பன்றி, எனவும்; பலகொடுத்தான், சிலகொடுத்தான்; செய்தான், தந்தான், படைத்தான், எனவும் இருவழியும் அஃறிணைப் பன்மைப் பெயர் முன் இயல்பாயின. பிறவற்றோடு மொட்டுக. அம்மகொற்றா, அம்மசாத்தா, தேவா, பூதா, என உரையசை இடைச்சொல் முன் இயல்பாயின; பிறவுமன்ன.

ஒரு சொல்லையே பல இடத்துங் காட்டிய தென்னெனின், இங்கே காட்டியவற்றுள், பல என்னும் ஒருசொல் பெயரெச்சக் குறிப்பாகியும், குறிப்பு வினைமுற்றாகியும், குறிப்புமுற்று ஈரெச்சமாகும் பெயரெச்சக் குறிப்பாகியும், வினையெச்சக் குறிப்பாகியும், குறிப்பு வினையாலணையும் அஃறிணைப் பன்மைப் பெயராகிபும், பொருளாதி ஆறினுள்,

பண்பு காரணமாக வரும் அஃறிணைப் பன்மைப் பெயராகியும் ஆறுவகைப்பட்டுப் பொருள் நோக்க முதலியவற்றால் இன்னதென்று தெளியப்படுமாதலாலென்க. இந்த விகற்பங்களெல்லாஞ் சொல்லதிகாரத்துட் காண்க. இனி யுரையிற்கோடலால், அம்ம என்னும் இடைச்சொல், அம்மா கொற்றா என நீளினும் வல்லெழுத்து இயல்பாதலும், குணகடல், குடகடல், வடகடல், வடதலை என விதி அகர வீற்றுப் பெயர்ச்சொல் முன் இயல்பாதலுங் கொள்க. வல்லெழுத்து இயல்பா மென முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :–

**செய்யிய என்னும் வினையெச்சம்** – செய்யிய என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சமும், **பல்வகை பெயரினெச்சம்** – பலவகைப்பட்ட அகரவீற்றுப் பெயரெச்சங்களும், (பல்வகை) **முற்று** – (பலவகைப்பட்ட அகரவீற்று) வினைமுற்றுக்களும், **ஆறன் உருபே** – ஆறாம் வேற்றுமை அகர உருபும், **அஃறிணை பன்மை** – அகரவீற்று அஃறிணைப் பன்மைப் பெயர்களும், **அம்ம** – அம்ம என்னும் உரையசை இடைச்சொல்லும், **முன்** – ஆகிய இவற்றின் முன், **இயல்பு** – (வருகிற கசதபக்கள்) இயல்பாகும்.

குறிப்பு :–

'பல்வகை' என்றது 'முற்று' என்றதனோடுங் கூட்டப்பட்டது. முதலிலும் இறுதியிலும் அகரவீற்றுச்சொல் வைத்ததனால் இடையிலுள்ளனவும் அகரவீறு என்பதும், 'பல்வகை' என்றதனால் வினை நான்கினும் பிறந்த எல்லாப் பெயரெச்சங்களும் அவ்வாறு பிறந்த எல்லா வினைமுற்றுக்களும் என்பதும், முன் 'முற்று' என வேறு கூறியதனால், 'அஃறிணைப்பன்மை' என்றது பெயர் என்பதும் பெறப்பட்டன.

(வினை நான்காவன – இயல்பாகிய தெரிநிலை வினைப்பகுதி ஒன்றும், மற்றைப் பெயர் இடை உரிச்சொற்களிற்றோன்றும் பகுதிகள் மூன்றுமாம்).

உதாரணம் :

உண்ணியதந்தான், செய்யியபோனான் – செய்யிய என்னும் வினையெச்சம்.

உண்ட குதிரை, பெரிய பொருள் – பல்வகைப் பெயரினெச்சம்.உண்டன குதிரைகள், வாழியகொற்றா, – பல்வகை முற்று தனகைகள், தனதாள்கள் – ஆறனுருபு

பல குதிரைகள், சிலசெய்தான் – இருவழியிலும் அஃறிணைப் பன்மைஅம்மகொற்றா, அம்ம தேவா – அம்ம என்னு மிடைச்சொல்.

உரையிற்கோடல் என்னு முத்தியால் 'அம்ம' என்னு முரையசை இடைச்சொல் 'அம்மா' என நீண்டு வரினும் வலி இயல்பாதலும், 'வடகடல்', 'வடதிசை' என விதிஅகரவீற்றுப்பெயர்முன் இயல்பாதலுங் கொள்க. இனி, வடகடல் முதலிய புணர்ச்சி இயல்பாதலை, மேல் 'திசையொடு திசையும்' என்னுஞ் சூத்திரத்து "கவ்வொற்று நீங்கலும்" என்பதில் அடக்கலுமாம்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:– செய்யிய என்னும் வினையெச்சம்** – செய்யிய என்னும் வாய்பாட்டு வினை யெச்சவினையும், **பல்வகைப்பெயரினெச்சம்**– பலவகைப்பட்ட பெயரெச்சவினையும், (பல்வகை) **முற்று**–பலவகைப்பட்ட முற்றுவினையும், **ஆறனுருபு**–ஆறாம் வேற்றுமை அகர வுருபும், **அஃறிணைப்பன்மை** – அஃறிணைப் பன்மைப்பெயரும், **அம்ம**–அம்ம என்னும் உரையசை யிடைச்சொல்லும், **முன் இயல்பு** – ஆகிய அகரவீற்றுச் சொற்களாறன் முன்னும் வல்லெழுத்துக்கள் இயல்பாம், எ–று.

முதலிலும் ஈற்றிலும் அகரவீற்றுச் சொல் வைத்தமையால், இடை நின்றனவும் அகர வீற்றுச் சொற்கள் என்பது பெற்றாம்.

பல்வகைப் பெயரெச்ச மென்றது, வினையடி நான்கினும் பிறந்த பெயரெச்சங்களை. பல் வகை முற்றென்றது, வினையடி நான்கினும் பிறந்த முற்று வினைகளை. வினையடி நான்காவன, இயல்பாகிய வினையடி ஒன்றும், மற்றைப் பெயர் இடை உரியடியாகப் பிறந்த செயற்கை வினையடி மூன்றுமாம்.

முன்னே முற்றென விதந்தமையால், அஃறிணைப் பன்மை யென்றது பெயரை.

**உ – ம்.:–**

(1) உண்ணிய கொண்டான், சென்றான், தந்தான், போயினான், எனச் செய்யிய வென்னும் வினையெச்ச முன் இயல்பாயின. (உண்ணிய–உண்ண.)

(2) உண்ட, உண்ணாநின்ற, உண்ணாத எனவும்; கடைக்கணித்த, சித்திரித்த, வெளுத்த, சினவிய, கறுவிய, அமரிய எனவும்; திண்ணென்ற, பொன்போன்ற எனவும்; சான்ற, உற்ற எனவும்; வரும் நால்வகைத் தெரிநிலைப்

பெயரெச்சவினை முன்னும், அமர்முகத்த, கடுங்கண்ண, சிறிய, பெரிய, உள, இல, பல, சில எனவும்; பொன்னன்ன எனவும், கடிய எனவும்; வரும் மூவகை வினைக்குறிப்புப் பெயரெச்ச முன்னும், குதிரை, செந்நாய், தகர், பன்றி இவற்றை வருவித்து, உண்ட குதிரை, உண்ட செந்நாய், உண்ட தகர், உண்ட பன்றி என முறையே கூட்டிப், பல்வகைப் பெயரெச்ச முன் இயல்பாதல் காண்க. குறிப்புவினை, இயற்கை வினையடி ஏலாமையால், மூவகை யாயிற்று.

(3) உண்டன, உண்ணாநின்றன, உண்பன, உண்ணாதன என்னுந் தெரிநிலை வினைமுற்று முன்னும், அமர்முகத்தன, கரியன என்னுங் குறிப்புவினை முற்று முன்னும், குதிரை, செந்நாய், தகர், பன்றி இவற்றை வருவித்து, உண்டன குதிரை, உண்டன செந்நாய் எனக் கூட்டி, முற்றுமுன் இயல்பாதல் காண்க. இனி, மேற்காட்டிய பெயரெச்சவினைகட்கும், அன் பெறாத அகர வீற்றுப் பல்வகை முற்று வினைகட்கும், பொருள் வேறுபாடன்றிச் சொல் வேறுபாடின்மையால், அவையே உதாரணமாகக் கொள்க. வாழ்க கொற்றா, சாத்தா, தேவா, பூதா என வியங்கோண் முற்றின் முன் இயல்பாயின. வாழிய என்பதனோடும் இப்படியே கூட்டுக. முற்று முன் இயல்பாம் எனவே, அருத்தாபத்தியால், இவ் வினை முற்று வினையெச்சமாகியுங் குறிப்புமுற்று ஈரெச்சமாகியும் நின்றபோது வரும் வல்லினம் இயல்பாதலுங் கொள்க.

வ–று.:–

உண்ட கண்டன, இது உண்டு கண்டன எனப் பொருள்படுதலால், வினைமுற்று வினையெச்சமாயிற்று. அமர்முகத்த கலக்கின, இது அமர்முகத்தவாகிக் கலக்கின எனப் பொருள்படுதலால் குறிப்புமுற்று வினையெச்ச, மாயிற்று. அமர்முகத்த குதிரை வந்தன, இது அமர்முகத்தனவாகிய குதிரை வந்தன எனப் பொருள்படுதலால், குறிப்புமுற்றுப் பெயரெச்சமாயிற்று. இவற்றின் முன் வல்லினம் இயல்பாதல் காண்க.

(4) தனைகைகள், செவிகள், தாள்கள், பதங்கள் என ஆறனுருபின் முன் இயல்பாயின.

(5) பல குதிரைகள், செந்நாய்கள், தகர்கள், பன்றிகள் எனவும்; பல கொடுத்தான், செய்தான், தந்தான், பெற்றான் எனவும்; அஃறிணைப் பன்மைப்பெயர் முன் இருவழியும் இயல்பாயின.

(6) அம்மகொற்றா, சாத்தா, தேவா, பூதா என உரையசை யிடைச்சொன் முன் இயல்பாயின.

இது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கல்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள்.:– செய்யிய என்னும் வினையெச்சம்** – செய்யியவென்னும் வாய்பாட்டு வினையெச்ச வினையும், – **பல்வகைப் பெயரினெச்சம்** – பலவகைப்பட்ட பெயரெச்சவினையும், – (பல்வகை) **முற்று** – பலவகைப்பட்ட முற்றுவினையும், – **ஆறனுருபு** – ஆறாம்வேற்றுமை அகரவுருபும், – **அஃறிணைப் பன்மை** – அஃறிணைப்பன்மைப் பெயரும் – **அம்ம** – அம்மவென்னும் உரையசை யிடைச்சொல்லும், – **முன் இயல்பு** – ஆகிய அகரவீற்றுச் சொற்களறுவகையின் முன்னும் வரும் வல்லெழுத்துக்கள் இயல்பாம். எ–று.

இச்சூத்திரத்தின் முதலிலும் ஈற்றிலும் (செய்யிய என்றும், அம்ம என்றும்) அகரவீற்றுச் சொல் வைத்தமை இடைநின்றனவும் அகரவீற்றுச் சொற்கள் என்று கருதுக.

பல்வகைப் பெயரெச்சமென்றது நால்வகை வினையடியினும் பிறந்த பெயரெச்சங்களை, பல்வகை முற்றென்றது நால்வகைவினையடியினும் பிறந்த முற்று வினைகளை, வினையடி நான்காவன : இயற்கையான வினையடி ஒன்றும் பெயர் இடை உரி அடியாகப் பிறந்த மற்றை செயற்கை வினையடி மூன்றுமாம்.

முன்னே முற்றென வகுத்தமையால், பின் அஃறிணைப் பன்மையென்றது பெயரையென்றறிக.

உ–ம்.:–

(1) உண்ணியகொண்டான், உண்ணியசென்றான், தந்தான், போயினான் எனச் செய்யியவென்னும் வினையெச்சமுன் இயல்பாயின. (உண்ணிய என்பதன் பொருள் உண்ண என்று எதிர்காலத்திற் கொள்ளுக).

(2) உண்ட, உண்ணாநின்ற, உண்ணாத எனவும். கடைக்கணித்த, சித்திரித்த, வெளுத்த, சினவிய, கறுவிய, அமரிய எனவும். திண்ணென்ற, பொன்போன்ற எனவும். சான்ற, உற்ற எனவும் வரும் நால்வகைத் தெரிநிலைப் பெயரெச்ச வினைமுன்னும், அமர்முகத்த, கடுங்கண்ண, சிறிய, பெரிய, உள, இல, பல, சில எனவும். பொன்னனை எனவும். கடிய எனவும் வரும் மூவகை வினைக்குறிப்புப் பெயரெச்சமுன்னும், குதிரை, செந்நாய், தகர், பன்றி

இவற்றை வருவித்து உண்டகுதிரை, உண்டசெந்நாய், உண்டதகர், உண்டபன்றி, என முறையே கூட்டிப் பல்வகைப் பெயரெச்சமுன் வல்லினம் இயல்பாதல்காண்க. குறிப்புவினை இயற்கை (சுபாவம்) வினையடி ஏலாமையால் மூவகையாயிற்று.

(3)உண்டன, உண்ணாநின்றன, உண்பன, உண்ணாதன என்னுந் தெரிநிலை வினைமுற்று முன்னும், அமர் முகத்தன, கரியன என்னுங் குறிப்புவினை முற்றுமுன்னும், குதிரை, செந்நாய், தகர், பன்றி இவற்றை வருவித்து, உண்டனகுதிரை, உண்டன செந்நாய் எனக்கூட்டி முற்றுமுன் இயல்பாதல் காண்க. இனி, மேற்காட்டிய பெயரெச்சவினைகட்கும், அன்பெறாத அகரவீற்றுப் பலவகை முற்றுவினைகட்கும், பொருள்வேறு பாடன்றிச் சொல்வேறுபா டின்மையால் அவையே உதாரணமாகக் கொள்க. வாழ்கொற்றா, சாத்தா, தேவா, பூதா என வியங் கோண் முற்றின்முன் இயல்பாயின. வாழிய என்பதனோடும் இப்படியே கூட்டுக. முற்றுமுன் இயல்பா மெனவே, அருத்தாபத்தியால் இவ்வினைமுற்று வினை யெச்சமாகியும் குறிப்புமுற்று ஈரெச்சமாகியும் நின்றபோது வரும் வல்லினம் இயல்பாதலுங் கொள்க. வ–று:–உண்டகண்டன இது உண்டுகண்டன எனப் பொருள் படுதலால், வினைமுற்று வினையெச்சமாயிற்று. அமர்முகத்த கலக்கின இது அமர்முகத்தவாகிக் கலக்கின எனப் பொருள்படுதலால், குறிப்புமுற்று வினையெச்ச மாயிற்று.

அமர்முகத்தகுதிரை வந்தன இது அமர்முகத்தனவாகிய குதிரை வந்தன எனப் பொருள்படுவதால் குறிப்புமுற்றுப் பெயரெச்சமாயிற்று. இவற்றின்முன் வல்லினம் இயல்பாதல் காண்க.

(4)தனகைகள், செவிகள், தாள்கள், பதங்கள் என ஆறனுருபின் முன் வல்லினம் இயல்பாயின.

(5)பல குதிரைகள், செந்நாய்கள், தகர்கள், பன்றிகள் எனவும். பல கொடுத்தான், செய்தான், தந்தான், புகன்றான் எனவும். அஃறிணைப் பன்மைப் பெயர்முன் இருவழியும் இயல்பாயின.

(6)அம்மகொற்றா, சாத்தா, தேவா, பூதா என உரையசை யிடைச் சொன்முன் இயல்பாயின.

இது 'இயல்பினும் விதியினு' மென்னுஞ் சூத்திரத்தால் எய்தியது சில அகரவீற்றுச் சொற்களுக்கு விலக்கல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ—ள்.:— செய்யிய என்னும் வினையெச்சம்** — செய்யிய என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சத்துக்கும், **பல் வகை பெயரினெச்சம்** — பலவகைப்பட்ட (அகர வீற்றுப்) பெயரெச்சங் களுக்கும், **முற்று** — (பலவகைப்பட்ட அகரவீற்று) வினைமுற்றுக் களுக்கும், **ஆறன் உருபு**—ஆறாம் வேற்றுமை அகர வுருபுக்கும், **அஃறிணைப் பன்மை**—(அகரவீற்றுப்) பலவின்பாற் பெயர்களுக்கும், **அம்ம**—அம்ம என்னும் உரையசை யிடைச்சொல்லுக்கும், **முன்**—முன்னே, **இயல்பே** — (வருகிற க ச த பக்கள்) இயல்பே யாம்; **எ—று.**

'பல்வகை' என்பதை 'முற்று' என்பதனோடுங் கூட்டுக.

முதலிலும் இறுதியிலும் 'செய்யிய', 'அம்ம' என்ற அகர வீற்றுச் சொற்களை வைத்ததனால், இடையிலுள்ள பெயரெச்சம் முதலியனவும் அகர வீறென்பதும் 'பல்வகை' என்றதனால், வினையடி நான்கிலும் பிறந்த உடன்பாடும் எதிர்மறையுமாகிய எல்லாப் பெயரெச்சங்களும் அவ்வாறு பிறந்த எல்லா வினைமுற்றுக்களும் என்பதும்; முன்னே 'முற்று' என்றதில் பலவின்பால் வினைமுற்று அடங்கியதனால், பின்னே 'அஃறிணைப் பன்மை' என்றது பலவின்பாற் பெயர் என்பதும் பெறப்பட்டன, (வினையடி நான்காவன:— இயற்கையான வினையடி ஒன்றும், மற்றைப் பெயர் இடை உரி அடியாகப் பிறந்த செயற்கை வினையடி மூன்றுமாம்.)

**உ—ம்.:—**

உண்ணியதந்தான், செய்யியபோனான் — செய்யிய வென் வினையெச்சம். அல்வழி

உண்டகுதிரை, பெரிய பொருள் — பல்வகைப் பெயரினெச்சம். அல்வழி

உண்டன குதிரைகள், வாழிய கொற்றா, என்ப சிலர் — பல்வகை முற்று. அல்வழி

தன கைகள், தன தாள்கள் — ஆறனுருபு. வேற்றுமை.

பல குதிரைகள், சில செய்தான் — இருவழியிலும் அஃறிணைப்பன்மை

அம்ம கொற்றா, அம்ம தேவா — அம்ம என்னும் இடைச்சொல் அல்வழி.

(உண்ணிய — உண்ணுதற்கு. செய்யிய — செய்தற்கு, வாழிய — வாழ்க)

உயிரையிற்கோடலால், அம்மாகொற்றா என அம்ம என்னும் உரையசை யிடைச்சொல் நீண்டு வரினும் வலி இயல்பாதல் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– செய்யிய என்னும் வினையெச்சம் – செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சவினையும், பல்வகைப் பெயரினெச்சம் – பல வகைப்பட்ட பெயரெச்சவினையும், (பல்வகை) முற்று – பலவகைப் பட்ட முற்றுவினையும், ஆறனுருபு – ஆறாம் வேற்றுமை அகரவுருபும், அஃறிணைப் பன்மை – அஃறிணைப் பன்மைப் பெயரும், அம்ம – அம்ம என்னும் உரையசையிடைச்சொல்லும், முன் இயல்பு – (ஆகிய அகர வீற்றுச் சொற்களாறன்) முன்னும் வல்லெழுத்துக்கள் இயல்பாம். எ–று,

முதலிலும் ஈற்றிலும் அகரவீற்றுச் சொல் வைத்தமையால், இடை நின்றனவும் அகரவீற்றுச் சொற்கள் என்பது பெற்றாம்.

'பல்வகைப் பெயரெச்சம்' என்றது, வினையைடி நான்கினும் பிறந்த பெயரெச்சங்களை. 'பல்வகை முற்று' என்றது, வினையடி நான்கினும் பிறந்த முற்றுவினைகளை. வினையடி நான்காவன, இயல்பாகிய வினையடி ஒன்றும், மற்றைப் பெயர் இடை உரியடியாகப் பிறந்த செயற்கை வினையடி மூன்றுமாம்.

முன்னே முற்றென விதந்தமையால், அஃறிணைப் பன்மை யென்றது பெயரை.

உ–ம்.:–

(1) உண்ணிய + கொண்டான் = உண்ணியகொண்டான், உண்ணிய + சென்றான் = உண்ணியசென்றான், எனச் செய்யிவென்னும் வினையெச்சமுன் இயல்பாயின. (உண்ணிய –உண்ண) (2) உண்ட + குதிரை = உண்டகுதிரை, வெளுத்த + குதிரை = வெளுத்தகுதிரை, பொன்போன்ற + குதிரை = பொன்போன்ற குதிரை, கடிய + குதிரை = கடியகுதிரை எனப் பல்வகைப் பெயரெச்ச முன் இயல்பாதல் காண்க.

(3) உண்டன + குதிரை = உண்டனகுதிரை, கரியன + குதிரை = கரியனகுதிரை, வாழிய + கொற்றா + வாழியகொற்றா என முற்று முன் இயல்பாதல் காண்க.

இனி, மேற்காட்டிய பெயரெச்ச வினைகட்கும், அன் பெறாத

அகரவிற்றுப் பல்வகை முற்று வினைகட்கும், பொருள் வேறுபாடன்றிச் சொல்வேறுபாடின்மையால் அவைவே உதாரணமாகக் கொள்க. முற்றுமுன் இயல்பாம் எனவே, அருத்தாபத்தியால், இவ்வினை முற்று வினையெச்சமாகியுங் குறிப்பு முற்று ஈரெச்சமாகியும் நின்றபோது வரும் வல்லினம் இயல்பாதலுங் கொள்க. வரலாறு:– உண்ட + கண்டன = உண்டகண்டன. இது உண்டு கண்டன எனப் பொருள்படுதலால், வினைமுற்று வினையெச்சமாயிற்று. அமர்முகத்த + கலக்கின = அமர்முகத்த கலக்கின. இது அமர்முகத்தவாகிக் கலக்கின எனப் பெருள்படுதலால், குறிப்புமுற்று வினையெச்சமாயிற்று. அமர்முகத்த + குதிரை = அமர்முகத்த குதிரை. இது, அமர்முகத்தன்வாகிய குதிரை எனப் பொருள்படுதலால், குறிப்பு முற்றுப் பெயரெச்சமாயிற்று. இவற்றின் முன் வல்லினம்இயல்பாதல் காண்க.

(4) தன + கைகள் = தனகைகள்; தன + செவிகள் + தனசெவிகள் – என ஆறனுருபின் முன்இயல்பாயின.

(5) பல + குதிரைகள் = பலகுதிரைகள் – அல்வழி. பல + செய்தான் = பலசெய்தான் – வேற்றுமை. அஃறிணைப் பன்மைப்பெயர் முன் இருவழியும் இயல்பாயின.

(6) அம்ம + கொற்றா = அம்மகொற்றா – என உரையசையிடைச்சொன் முன் இயல்பாயின.

இது 'இயல்பினும்விதியினும்' என்னும் 165 ஆவது சூத்திரத்தால் எய்திபது விலக்கல்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள்.:– செய்யிய என்னும் வினையெச்சம்** – செய்யிய என்னும் வினையெச்ச வினையும், **பல்வகை பெயரினெச்சம்** – பலவகைப்பட்ட பெயரெச்ச வினையும், (பல்வகை) **முற்று** – பலவகைப்பட்ட முற்று வினையும், **ஆறன் உருபு** –ஆறாம்வேற்றுமை அகரவுருபும், **அஃறிணைப்பன்மை** – அஃறிணைப்பன்மைப் பெயரும், **அம்ம**–அம்ம என்கின்ற உரையசை இடைச்சொல்லும், **முன்** – (ஆகிப அகரவீற்றுச் சொற்கள் ஆறன்) முன்னும், **இயல்பு** – (வரும் வல்லெழுத்துக்கள்) இயல்பாம். எ–று.

பொ–ரை.:–

செய்யிய என்னும் வினையெச்சவினையும், பலவகைப்பட்ட பெயரெச்ச வினையும், (பலவகைப்பட்ட) முற்றுவினையும், ஆறாம்வேற்றுமை அகரவுருபும், அஃறிணைப்பன்மைப் பெயரும், அம்ம என்கின்ற உரையசை இடைச்சொல்லும்

(ஆகிய அகரவீற்றுச் சொற்கள் ஆறன்) முன்னும் (வரும் வல்லெழுத்துக்கள்) இயல்பாம்.

பல்வகை என்பதை முற்று என்பதனோடும் கூட்டுக. முதலிலும், கடையிலும் 'செய்யிய', 'அம்ம' என, அகரவீற்றுச் சொற்களை வைத்ததினாலே இடையிலுள்ள பெயரெச்ச முதலியனவும் அகரவீறு என்பதும், 'பல்வகைப் பெயரினெச்சமுற்று' என்றதனால் பெயர், வினை, இடை, உரி நான்கிலும் பிறந்த உடன்பாடும், எதிர்மறையுமாகிய எல்லாப் பெயரெச்சங்களும், அவ்வாறு பிறந்த எல்லா வினைமுற்றுக்களும் என்பதும், முன்னே, முற்று என வேறு கூறினமையால், பின்னே, 'அஃறிணைப் பன்மை' என்றது அஃறிணைப் பன்மைப் பெயர் என்பதும் பெற்றாம்.

(பெயர், வினை, இடை, உரி அடியாகப் பிறந்த வினையாவன இயற்கையான வினையடி ஒன்றும், மற்றைப் பெயர், இடை, உரி அடியாகப் பிறந்த செயற்கை வினையடி மூன்றுமாம்.)

உ–ம்.:–

உண்ணிய +கொண்டான்=உண்ணியகொண்டான்.
+சென்றான்=உண்ணியசென்றான்.
+தந்தான் = உண்ணியதந்தான்.
+போனான் = உண்ணியபோனான்.

எனச் செய்யிய என்னும் வினையெச்சத்தின்முன் வலி இயல்பாயின. (உண்ணிய – உண்ணுதற்கு.)

உண்ட +குதிரை = உண்டகுதிரை.
+செந்நாய் = உண்டசெந்நாய்.
+தகர் = உண்டதகர்.
+பன்றி = உண்டபன்றி.

உண்ணாநின்ற – உண்ணாத எனவும், கடைக்கணித்த – சித்திரித்த – வெளுத்த – சினவிய – கறுவிய – அமரிய எனவும், பொன் போன்ற – திண்ணென்ற எனவும், சான்ற – உற்ற எனவும் வருகிற நால்வகைத் தெரிநிலைவினைப் பெயரெச்ச வினைகளோடும், அமர்முகத்த – கடுங்கண்ண – சிறிய – பெரிய – உள– பல–சில எனவும், பொன்னன்ன எனவும், கடிய எனவும் வருகிற மூவகை வினைக் குறிப்புப் பெயரெச்சங்களோடும், மேலே காட்டியபடி குதிரை, செந்நாய், தகர், பன்றி இவற்றை முறையே கூட்டிப் பல்வகைப் பெயரெச்சங்களின் முன் வலி இயல்பாதல் காண்க.

உண்டன +குதிரை = உண்டனகுதிரை.

+செந்நாய் = உண்டனசெந்நாய்.

+தகர் = உண்டனதகர்.

+பன்றி = உண்டனபன்றி.

உண்ணாநின்றன – உண்பன – கடைக்கணித்தன – சித்திரித்தன – வெளுத்தன – சினவின – கறுவின – அமரின – திண்ணென்றன – பொன்போன்றன முதலிய நால்வகைத் தெரிநிலை வினைமுற்றுக்களோடும், அமர்முகத்தன – கடுங்கண்ணன் – சிறியன – பெரியன முதலிய மூவகைக் குறிப்பு வினைமுற்றுக்களோடும் குதிரை, செந்நாய், தகர், பன்றி இவற்றை முறையேகூட்டி இயல்பாதல் காண்க.

மேற்காட்டிய பெயரெச்ச வினைகளுக்கும் அகரவீற்றுப் பல்வகை வினைமுற்றுக்களுக்கும் பொருள் வேறுபாடேயன்றிச் சொல்வேறுபாடு இல்லாமையால் அவற்றையே உதாரணமாகவும் கொள்ளலாம். (அவற்றையே உதாரணமாகக் கொள்ளுதலாவது அப் பெயரெச்ச வினைகளைச் சாரியை இன்றி வந்த வினைமுற்றாகக் கொள்ளுதலாம்.)

வாழ்க, வாழிய என்னும் வியங்கோள் வினைமுற்றுக் களோடும் கொற்றா, சாத்தா, தேவா, பூதா என்பவற்றை முறையே கூட்டி வலி இயல்பாதல் காண்க. முற்றின்முன் இயல்பாமெனவே அருத்தாபத்தியால் உண்ட கண்டன, அமர்முகத்த குதிரை, அமர்முகத்த கலக்கின என வினை முற்று வினையெச்சமாகியும், குறிப்புமுற்று ஈரெச்சமாகியும் வந்த விடத்தும் இயல்பாமென்று அறிக.

(உண்டனவாய்க் கண்டன, போர்முகத்தை யுடைய குதிரைகள், போர்முகத்தை யுடையனவாய்க் கலக்கின.)

தன +கைகள் = தனகைகள். – ஆறனுருபின் முன்வல் இயல்பாயின.

+ செவிகள் = தனசெவிகள்.

+ தாள்கள் = தனதாள்கள்.

+ பதங்கள் = தனபதங்கள்.

**அல்வழி**

பல + குதிரைகள் = பலகுதிரைகள். – அஃறிணைப் பன்மைப் பெயர்முன் இருவழியும் வலி இயல்பாயின.

+செந்நாய்கள் = பலசெந்நாய்கள்.

+தகர்கள் = பலதகர்கள்.

+பன்றிகள் = பலபன்றிகள்.

**வேற்றுமை**

பல +கொடுத்தான் = பலகொடுத்தான்.

+ செய்தான் = பலசெய்தான்.

+தந்தான் = பலதந்தான்.

+ போக்கினான் = பலபோக்கினான்.

அம்ம + கொற்றா = அம்மகொற்றா. – உரையசை இடைச்சொல் முன்வல் இயல்பாயின.

+ சாத்தா = அம்மசாத்தா.

+ தேவா = அம்மதேவா.

+ பூதா = அம்மபூதா.

உரையிற் கோடலால், அம்மா கொற்றா என அம்மா என்னும் உரையசை இடைச்சொல் நீண்டு வரினும் வலி இயல்பாதல் கொள்க.

## கா.நமச்சிவாய முதலியார்

**செய்யிய என்னும் வினையெச்சம்** – செய்யிய என்னும் வினையெச்ச வினையும், **பல்வகைப் பெயரின் எச்சம்** – பல வகைப்பட்ட பெயரெச்ச வினையும். (பல்வகை) **முற்று** – (பல வகைப்பட்ட) முற்றுவினையும், **ஆறனுருபு** – ஆறாம் வேற்றுமை அகரவுருபும், **அஃறிணைப்பன்மை** – அஃறிணைப் பன்மைப் பெயரும், **அம்ம** – அம்ம என்னும் உரையசை இடைச் சொல்லும் ஆகிய, **முன்** – அகரவீற்றுச் சொற்கள் ஆறன்முன்னும், **இயல்பு** – (வல்லெழுத்துக்கள்) இயல்பாம்.

'பல்வகை' என்றதை, முற்று என்பதனோடுங் கூட்டுக.

உண்ணிய + கொண்டான் = உண்ணியகொண்டான்

செய்யிய என்னும் வினையெச்சம்.

| | | | |
|---|---|---|---|
| உண்ட | + குதிரை | = | உண்டகுதிரை |
| உண்கிற | + குதிரை | = | உண்கிற குதிரை |
| பெரிய | + பொருள் | = | பெரிய பொருள் |
| உண்ணாத | + குதிரை | = | உண்ணாத குதிரை |

**பல்வகைப் பெயரெச்சம்**

| | | | | |
|---|---|---|---|---|
| சென்றன | + | குதிரைகள் | = | சென்றனகுதிரைகள் |
| வாழ்க | + | கொற்றா | = | வாழ்ககொற்றா |
| பெரியன | + | குதிரைகள் | = | பெரியனகுதிரைகள் |

பல்வகை முற்று

| | | | | |
|---|---|---|---|---|
| தன | + | கைகள் | = | தனகைகள் |
| தன | + | தாள்கள் | = | தனதாள்கள் |

ஆறனுருபு

| | | | | |
|---|---|---|---|---|
| பல | + | குதிரைகள் | = | பல குதிரைகள் |
| பல | + | கற்றார் | | பலகற்றார் |

இருவழியிலும் அஃறிணைப் பன்மை.

| | | | | |
|---|---|---|---|---|
| அம்மா | + | கொற்றா | = | அம்மகொற்றா |

அம்ம என்னும் இடைச்சொல்.

**உரையிற் கோடலால்,** 'அம்ம' என்னும் உரையசை இடைச்சொல், '**அம்மா பெரிது**' என நீண்டு வரினும் வலி இயல்பாதல் கொள்க.

இச்சூத்திரத்தின் முதலிலும் ஈற்றிலும் அகரவீற்றுச் சொல் வைத்ததினாலே இடைநின்றனவும் அகரவீறு என்பதும்,

'**பல்வகை**' என்றதனால், வினையடி முதலிய நான்கினும் பிறந்த பெயரெச்சமென்பதும், அவ்வாறு பிறந்த முற்றுவினைகளென்பதும்,

முற்றென வேறு கூறினமையால் அஃறிணைப் பன்மை யென்றது பெயரென்பதும் பெறப்படும்.

வினையடி நான்காவன, இயல்பாகிய வினையடி ஒன்றும், பெயர் இடை, உரி அடியாகப் பிறந்த செயற்கை வினையடி மூன்றுமாம்.

முற்றின் முன் இயல்பாம் எனவே அருத்தாபத்தியால், உண்ட கண்டன, அமர்முகத்த குதிரைகள், அமர்முகத்த கலக்கின என வினைமுற்று வினையெச்ச மாகியும், குறிப்புமுற்று ஈரெச்சமாகியும் வந்த விடத்தும் இயல்பாம் என்றறிக.

அருத்தாபத்தியாவது, ஒரு பொருளைக் கூறிய மாத்திரத்தால் அதன் குறிப்பைக் கொண்டு கூறப்படாத மற்றொரு பொருளையும் அறிவது.உண்ட கண்டன என்பது உண்டு கண்டன எனவும், அமர் முகத்த குதிரைகள் என்பது அமர்முகத்த ஆகிய குதிரைகள் எனவும், அமர்முகத்த கலக்கின என்பது அமர்முகத்தவாகிக் கலக்கின எனவும் பொருள்படும்.

## மோசசு பொன்னையா

செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சமும், பல்வகைப்பட்ட பெயரெச்ச வினையும்,பலவகைப்பட்ட முற்று வினையும், ஆறாம் வேற்றுமை அகர உருபும், அஃறிணைப் பன்மைப் பெயரும் அம்ம என்னும் உரையசை இடைச்சொல்லுமாகிய இவ்வறுவகை அகர ஈற்றுச்சொற்களின் முன்னர் வரும் வல்லினம் இயல்பாம், எ–று.

முதலிலும், ஈற்றிலும் அகரவீற்றுச்சொற்களை அமைத்து இடைப்பட்டனவும் அகரவீற்ற என்பதைப்பெற வைத்தார். பல்வகை என்பதை முற்று என்பதனோடுங் கூட்டுக.

எ–டு.:–

உண்ணிய தந்தான்– செய்யிய என்னும் வினையெச்சம்.

உண்டகுதிரை,பெரிய பொருள்– பல்வகைப் பெயரெச்சம்.

உண்ட குதிரைகள்

வாழிய கொற்றா – பல்வகை முற்று.

தன கைகள் –ஆறனுருபு.

பல குதிரைகள்,சில செய்தான் – அஃறிணைப் பன்மை.

அம்ம கொற்றா – ஆம்ம என்னும் இடைச்சொல்

பல்வகை என்றதனால், உண்ணிய, உண்ணாநின்ற என்பன முதலிய வினையடிகளும்; கடைக்கணித்த, சித்திரித்த என்பன முதலிய பெயரடி வினைகளும்; திண்ணென்ற, பொன் போன்ற என்பன முதலிய இடையடி வினைகளும்; சான்ற, உற்ற, என்பன முதலிய உரியடி வினைகளுமாய்ப் பெயரெச்சமும் வினைமுற்றுமாக வருவன அனைத்தையும் கொள்க. இந்நூற்பா 'இயல்பினும் விதியினும்' என்னும் நூற்பாவால் எய்தியது விலக்கி நின்றது.

(17)

**167. வாழிய வென்பத னீற்றி னுயிர்மெய்**
**ஏகலு முரித்தஃ தேகினு மியல்பே.**

**வாழிய என்பதன் ஈற்றின் உயிர்மெய்**
**ஏகலும் உரித்து அஃது ஏகினும் இயல்பே**

vā!iya eṉpaṭaṉ īṟṟiṉ uyirmey
ēkalum uriṭṭu akhṭu ēkiṉum iyalpē

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Special rule for valiya

Though the final vowel-consonant of (the Optative) vâliya may be dropped, the Hard initial, still remain undoubled.

## ஒப்புமைப் பகுதி

வாழிய வென்னுஞ் சேயென் கிளவி
இறுதி யகரங் கெடுதலும் உரித்தே

(தொல்.: 212)

வாழிய வென்பத னீற்றி னுயிர்மெய்
யேகலும் முரித்தஃ தேகினு மியல்பே

(இ.வி.: 87)

வாழிய இறுதி கெடுதலு முரித்தே

(மு.வீ.:243)

## மயிலை நாதர்

எ – ன், எய்தாத தெய்துவித்தலும், எய்தியது [1]இகந்துபடாமற் காத்தலும் உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– வாழிய வென்னும் வியங்கோளின் ஈற்றுயிர்மெய் கெடலு முரித்து; அதுகெட்டு இகர வீறாய் [2]நின்றாலும் ஆண்டும் இயல்பேயாம், எ – று.

[3]உம்மைகள் எதிர்மறைக்கண்ண வாகலான், கெடாமையு முரித்தாகலும் இயல் பிகந்து படாமையும் கொள்க. வருமொழி உரையாமையின் நாற்கணமும் வரின் யகரம்கெடுதலும் [4]கெடாமையும் கொள்க.

வ – று.:–

வாழிய, வாழி, வாழிகொற்றா; சாத்தா, தேவா, பூதா, ஞெள்ளா, நாகா, மன்னா, யவனா, வ்ளவா, அபயா எனவரும்.

---

பாட வேறுபாடு.:–

1. இறந்து
2. நின்றாலும் இயல்பேயாம்
3. உம்மை
4. கெடாமலும்

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், வியங்கோள் முற்றுச் சொற்கு எய்தாதது எய்து வித்தலும், எய்தியவழிப் புணரும் வல்லினத்திற்கு எய்தியது இகந்துபடாமைக் காத்தலும் நுதலிற்று.

இ–ள்.:– வாழிய என்னும் வியங்கோள் முற்றினது ஈற்று உயிர்மெய் குறைதலும் உரித்து; குறைந்து இகர ஈறாய் நின்றாலும், வல்லினம் பொதுவிதியான் மிகாது, சிறப்பு விதியுள் கூறிய இயல்பேயாம், எ – று.

உ–ம்:–

ஆ வாழி அந்தணர் வாழி, “படாதி வாழி” என ஈற்றுயிர்மெய் குறைந்து வந்தது. வாழி கொற்றா, சாத்தா, தேவா, பூதா எனக் குறைந்தவழியும் வல்லினம் இயல்பாயின.

ஏகலும் உரித்து என முடித்துப் பின்பு அஃது எனச் சுட்டிப் புணர்ச்சிவிதி கூறுதலானும், செய்யுளிறுதிக்கண் வாழி என முடிந்து நிற்றலானும், இது புணர்ச்சி விகாரம் அன்று கடைக்குறை என்பதூஉம், இவ்வடிப்பாடாகக் குறைந்தியலும் தன்மை செய்யிய என்னும் வாய்பாட்டு வாழிய என்னும் வினையெச்சத்திற்கு இன்மையின் வாழிய என்னும் வியங்கோள் முற்றிற்கே இவ்விகாரம் கூறினார் என்பதூஉம் பெற்றாம்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், எய்தாதது எய்துவித்தலும் எய்தியது இகந்துபடாமற் காத்தலும் கூறியது.

இ–ள்.: வாழிய என்பதன் – வாழிய வென்று சொல்லப்படும் வியங்கோள் வினைமுற்றின், ஈற்றுயிர்மெய் ஏகலும் உரித்து – இறுதிக் கண்ணே நின்ற யகர உயிர்மெய் கெட்டு முடிதலும் உரித்து, அஃது ஏகினும் இயல்பே – அது கெட்டு இகர வீறாய் நின்றாலும் ஆண்டும் இயல்பே யாம். எ–று.

அரும்பதவுரை:–

உம்மை எதிர்மறைக்கண்ணாதலான் கெடாமையும் உரித்தாகலும் இயல்பிகந்து படாமையும் கொள்க. வருமொழி வரையாமையின் நாற்கணமும் வரினும் கெடுதலும் கெடாமலும் கொள்க.

உ–ம்.:–

வாழிய, வாழி கொற்றா, சாத்தா, தேவா, பூதா, ஞெள்ளா,

நாகா, மன்னா, வளவா, யவனா, அபயா எனவும் வரும்.

## விசாகப் பெருமாளையர்

**இ–ள்.:– வாழியவென்பதன்** – வாழிய வென்னும் வியங்கோண் முற்றினுடைய, **ஈற்றின்**–இறுதியிலுள்ள, **உயிர்மெய்**–யகர வுயிர்மெய்யானது, **ஏகலும்**–குறைதலும், **உரித்து**–உரித்தாகும், **அஃது** – அவ் வுயிர்மெய்யானது, **ஏகினும்**–குறைந்து இகர வீறாய் நின்றாலும், **இயல்பே**–வல்லினம் பொதுவிதியினாலே மிகாமற் சிறப்புவிதியிற் கூறிய இயல்பே யாம், எ – று.

**உ–ம்.:–**

ஆவாழி என வீற்றுயிர்மெய் குறைந்தது. வாழிகொற்றா சாத்தா, தேவா, பூதா குறைந்த விடத்தும் வல்லின மியல்பாயின.

இது சாவ என்கிற நிலைமொழிக்கு எய்தாத தெய்துவிக்கின்றது.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

இறுதியில் நின்ற உயிர்மெய்கெடப் பெறும் ஒரு வியங்கோண்முற்றுள தென்றும், அது கெட்டுநின்றவழியும் அதன்முன்வரும் வல்லினம் இயல்பேயாம் என்றுங் கூறுஞ் சூத்திரம் யாது?

வாழிய வென்பத னீற்றி னுயிர்மெய்
ஏகலு முரித்தஃ தேகினு மியல்பே.

(வாழிய என்பதன் ஈற்றின் உயிர்மெய்
ஏகலும் உரித்து; அஃது ஏகினும் இயல்பே.)

**இ–ள்.:– வாழிய என்பதன் ஈற்றின் உயிர்மெய் ஏகலும் உரித்து** – வாழிய என்னும் வியங்கோண்முற்றினுடைய இறுதியிலுள்ள யகரவுயிர்மெய் குறைதலும் உரித்தாகும். **அஃது ஏகினம் இயல்பே** – அவ்வுயிர்மெய் குறைந்து இகரவீறாய் நின்றாலும் வல்லினம் பொதுவிதியினாலே மிகாது சிறப்புவிதியிற் கூறிய இயல்பேயாம், எ–று.

இது மேற்கூறிய சூத்திரத்தில் அடங்குமேயாகவும் இச்சூத்திரத்தில் வகுத்தது யாதுபற்றி?

வாழியவென்னும் வியங்கோண்முற்று ஒரோவிடத்து ஈற்றுயிர் குறையப் பெறுதலின் அச்செய்தி "செய்யிய" வென்னுஞ் சூத்திரத்தினாற் பெறப்படாமையிற் பெறுவித்தற்கும், ஈற்றுயிர்மெய் குறைந்தவிடத்தும் வரும் வல்லினம் இயல்பே யாதலின் அவ்வியல்பு "செய்யிய"

வென்னுஞ் சூத்திரத்தினாற் பெறப்பட்டமையின் அதனைத் தழுவுதற்கும் இச்சூத்திரம் வகுக்கப்பட்டது.

ஏகலும் உரித்து என்ற உம்மையால் ஈற்றுயிர்மெய் கெடாமையே வலியுடைத்தெனக் கொள்க.

உ–ம்.:–

(1) ஆவாழி, அந்தணர்வாழி, என ஈற்றுயிர்மெய் குறைந்தது.

(2) வாழிகொற்றா வாழி சாத்தா வாழிதேவா வாழிபூதா, என ஈற்றுயிர்மெய் குறைந்தவிடத்து வல்லினம் இயல்பாயின.

வாழியவென்னும் வினையெச்சமும்வேறு; வாழிய வென்னும் வியங்கோண்முற்றும் வேறாதலின், இவ்விதி வாழியவென்னும் வியங்கோண் முற்றிற்கேயாம்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, நிலைமொழிக்கு எய்தாதது எய்துவித்தலும், வருமொழிக்கு எய்தியது பிறழாமற் காத்தலு முணர்த்திற்று.

**இ–ள்.:– வாழிய வென்பதன்** – வாழிய என்னும் வியங்கோள் முற்றுச் சொல்லினது, **ஈற்றினுயிர்மெய்** – இறுதியிலே நின்ற யகர உயிர்மெய்யானது, **ஏகலு முரித்து** – நீங்கலும் உரியதாம், **அஃதேகினு மியல்பு** – அது நீங்கினும் அதின்முன் வந்த வல்லெழுத்துப் பொதுவிதியால் மிகாமல் சிறப்புவிதியிற் சொன்ன இயல்பேயாம், எ–று.

உ–ம்.:–

வாழிகொற்றா, சாத்தா, தேவா, பூதா, என வாழிய கொற்றா என்பது ஈற்றுயிர்மெய் குறைந்து வல்லெழுத்து இயல்பாய் முடிந்தவாறு காண்க. ஏகலு முரித்து என முடித்து, பின் அஃது எனச் சுட்டிக் கூறினதினாலும், செய்யுளிறுதியிலே, வாழி என முடிந்து நிற்றலாலும் இது புணர்ச்சி விகார மன்றெனவும், கடைக்குறைந்த செய்யுள் விகார மெனவும், இது முற்று வினைச்சொல் லெனவுங்காண்க. இனி இவ்வாறு கூறவே இவ் வாய்பாடு கொண்ட வினை எச்சச்சொல் ஒன்றுள தென்பதும், அது இவ்வாறு குறைந்து நில்லா தென்பதும் பெறப்பட்டது. ஏகலுமுரித்து – வல்லெழுத்து இயல்பு – என இரு முடிபாக்குக.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– வாழிய என்பதன்** – வாழிய என்னும் வியங்கோள் வினை முற்றினுடைய, **ஈற்றின்** – இறுதியிலுள்ள, **உயிர்மெய்** – யகர உயிர்மெய், **ஏகலும்** – குறைந்து வருதலும், **உரித்து** – உரியதாம்; **அஃது** – அவ்வுயிர்

மெய். **ஏகினும்** - குறைந்து (இகரவீறாய்) நின்றாலும், **இயல்பே** - (வருகிற வல்லினம் பொதுவிதியால் மிகாமற் சிறப்பு விதியிற் கூறியபடியே) இயல்பேயாம்.

**உ-ம் :-**

ஆ வாழிய - ஆவாழி -ஈற்றுயிர் மெய் குறைந்தது.
வாழிய + கொற்றா = வாழிகொற்றா
வாழிய + சாத்தா = வாழி சாத்தா
- ஈற்றுயிர்மெய் குறைய வலி இயல்பாயிற்று.

## ஆறுமுக நாவலர்

**இ-ள்.:- வாழிய என்பதன் ஈற்றின் உயிர்மெய் ஏகலும் உரித்து -** வாழிய என்னும் வியங்கோண் முற்றினுடைய இறுதியிலுள்ள யகர வுயிர்மெய் குறைதலும் உரித்தாகும். **அஃது ஏகினும் இயல்பே**-அவ் வுயிர்மெய் குறைந்து இகர வீறாய் நின்றாலும் வல்லினம் பொதுவிதியினாலே மிகாது சிறப்பு விதியிற் கூறிய இயல்பே யாம், எ-று.

**உ-ம்.:-**

(1) ஆவாழி, அந்தணர்வாழி என ஈற்றுயிர்மெய் குறைந்தது.

(2) வாழிகொற்றா, சாத்தா, தேவா, பூதா என ஈற்றுயிர் மெய் குறைந்த விடத்தும் வல்லினம் இயல்பாயின.

(3) வியங்கோண் முற்றின் ஈற்றுயிர்மெய் குறையும் என்றது எய்தாததெய்துவித்தல், ஈற்றுயிர்மெய் குறைந்தவிடத்தும் வரும் வல்லினம் இயல்பே யாமென்றது, "செய்யிய" என்னுஞ் சூத்திரத்தால் எய்திய திகந்துபடாமைக் காத்தல்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ-ள். வாழிய **என்பதன் ஈற்றின் உயிர்மெய்** - வாழிய என்னும் வியங்கோண் முற்றினுடைய இறுதியிலிருக்கின்ற யகர வுயிர்மெய், - **ஏகலும் உரித்து** - நீங்கிப்போதலும் உரித்தாகும், - **அஃது ஏகினும் இயல்பே** - அவ்வுயிர்மெய் போய் இகரவீறாய் நின்றாலும் இதன்முன் வரும் வல்லினம் பொதுவிதியால் மிகாது சிறப்பு விதியிற் கூறிய இயல்பேயாம். எ-று.

**உ-ம்.:-**

(1) ஆவாழி, அந்தணர்வாழி, என ஈற்றுயிர் மெய் குறைந்தது.

(2) வாழி கொற்றா, சாத்தா, தேவா, பூதா என ஈற்றுயிர்மெய் குறைந்த விடத்தும் வந்த வல்லினம் இயல்பாயின.

வியங்கோண் முற்றின் ஈற்றுயிர்மெய் குறையுமென்றது எய்தாததெய்துவித்தல்; ஈற்றுயிர் மெய் குறைந்தவிடத்தும் வரும் வல்லினம் இயல்பேயாம் என்றது, 'செய்யிய' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதிகந்து படாமைக்காத்தல்

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: (1) வாழிய என்பதன் – வாழிய என்னும் வியங்கோள் வினைமுற்றினுடைய, ஈற்றின் – இறுதியிலுள்ள, உயிர் மெய் – யகரஉயிர்மெய், ஏகலும் – நீங்கலும், உரித்து – உரியதாம்; அஃது ஏகினும் – அவ்வுயிர்மெய் நீங்கி (இகர ஈறாய்) நின்றாலும், இயல்பே – (அதன் முன்வருகிற வல்லினம் பொதுவிதியால் மிகாமல் சிறப்புவிதியிற் கூறியபடி) இயல்பேயாம், எ–று. பொதுவிதி–'இயல்பினும் விதியினும்'' என்ற சூத்திரம். சிறப்பு விதி – "செய்யிய வென்னும் வினையெச்சம்'' என்ற சூத்திரம்.

உ–ம்.:–

(1) ஆ வாழிய – ஆ வாழி – ஈற்று உயிர் மெய் நீங்கிற்று.

(2) வாழிய + கொற்றா – வாழிகொற்றா ஈற்று உயிர்மெய் நீங்க வலி இயல்பாயிற்று.

வாழிய + சாத்தா – வாழிசாத்தா

இச் சூத்திரத்து உபலக்ஷணத்தால், போற்றிய என்பது 'போற்றி'என நிற்றல் முதலியனவும் கொள்க; (உபலக்ஷணமாவது – ஒரு சொல் ஒழிந்த தன் இனத்தையும் குறிப்பது; பொதுவியல் – ஆஞ் சூத்திரங் காண்க)

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:–வாழிய என்பதன் ஈற்றின் உயிர்மெய் – வாழிய என்னும்வியங்கோண் முற்றினுடைய இறுதியிலுள்ள யகரவுயிர்மெய், ஏகலும்உரித்து – குறைதலும் உரித்தாகும். அஃது ஏகினும் இயல்பே – அவ்வுயிர்மெய் குறைந்து இகரவீறாய் நின்றாலும் வல்லினம் பொதுவிதியினாலே மிகாது சிறப்பு விதியிற் கூறிய இயல்பேயாம். எ–று.

உ–ம்.:–

(1) ஆ + வாழிய = ஆவாழி, அந்தணர் + வாழிய = அந்தணர்வாழி – என ஈற்றுயிர்மெய் குறைந்தது.

(2) வாழிய + கொற்றா = வாழிகொற்றா. வாழிய + சாத்தா = வாழிசாத்தா – என ஈற்றுயிர்மெய் குறைந்தவிடத்தும் வல்லினம் இயல்பாயின.

வியங்கோண் முற்றின் ஈற்றுயிர்மெய் குறையும் என்றது எய்தாத தெய்துவித்தல் ஈற்றுயிர்மெய் குறைந்தவிடத்தும் வரும் வல்லினம் இயல்பேயாமென்றது, "செய்யிய" என்னும் மேற்சூத்திரத்தால் எய்திய திகந்துபடாமைக் காத்தல்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள்.:–** வாழிய என்பதன – வாழிய என்னும் வியங்கோள் முற்றினுடைய, **ஈற்றின்** – இறுதியிலுள்ள, **உயிர்மெய்** – யகரவுயிர் மெய்யானது, **ஏகலும்** – குறைதலும், **உரித்து** – உரித்தாகும்; **அஃது** – அவ் வுயிர்மெய்யானது, **ஏகினும்** – குறைந்து (இகாவீறாய்) நின்றாலும், **இயல்பே** – (வல்லினம் பொதுவிதியினாலே மிகாமல் சிறப்புவிதியிற் கூறிய படி ) இயல்பேயாம். எ–று.

பொ–ரை.:–

வாழிய என்னும் வியங்கோள் முற்றின் இறுதியிலுள்ள யகரவுயிர்மெய்யானது குறைதலும் உரித்தாகும்; அது குறைந்து (இகரவீறாய்) நின்றாலும் வலி இயல்பேயாகும்.

(பொதுவிதி – "இயல்பினும் விதியினும்" என்ற சூத்திரம். சிறப்புவிதி – "செய்யியவென்னும் வினையெச்சம்" என்ற சூத்திரம்.)

உ–ம்.:–

ஆ+வாழிய=ஆவாழி–ஈற்றுயிர்மெய் குறைந்து.

வாரிய + கொற்றா = வாழிகொற்றா. – ஈற்றுயிர்மெய்
குறைந்த விடத்தும்
வல்லின்ம் இயல்பாயின.

+ சாத்தா = வாழிசாத்தா.

+ தேவா = வாழிதேவா.

+ பூதா = வாழிபூதா.

இச் சூத்திரத்து உபலட்சணத்தால், 'போற்றிய' என்பது 'போற்றி' என நிற்றல் முதலியனவுங் கொள்க.

(உபலட்சணமாவது – ஒரு சொல் ஒழிந்த தன் இனத்தையுங் குறிப்புது.)

## கா.நமச்சிவாய முதலியார்

(1) வாழிய என்பதன் – வாழிய வென்னும் வியங்கோண்முற்றினுடைய, ஈற்றின் – இறுதியிலுள்ள, உயிர்மெய் – யகரவுயிர் மெய்யானது, ஏகலும் – நீங்குதலும், உரித்து – உரித்தாகும் ;(2)அஃது – அவ்வுயிர் மெய்யானது, ஏகினும் – குறைந்து இகரவீறாய் நின்றாலும், இயல்பே – (வல்லினம் பொதுவிதியினாலே மிகாமற் சிறப்பு விதியிற்கூறிய) இயல்பேயாம்.

ஈற்றுயிர்மெய் நீங்குதற்கும் இதுவே விதி.

உதாரணம்:–

| | | | |
|---|---|---|---|
| (1)ஆ | + வாழிய | = | ஆவாழி<br>என ஈற்றுயிர் மெய்<br>குறைந்தது. |
| (2)வாழிய | +கொற்றா | = | வாழிகொற்றா |
| | +சாத்தா | = | வாழிசாத்தா |
| | +தேவா | = | வாழிதேவா |
| | +பூதா | = | வாழிபூதா |

எனக் குறைந்தவிடத்தும் வல்லினம் இயல்பாயின.

## மோசசு பொன்னையா

பல்வகை முற்றுள் அடங்கிய வாழிய என்னும் அகரவீற்று, வியங்கோள் வினைமுற்று, வலிவரின் இயல்பாதலோடு, அதன் ஈற்று உயிர்மெய் நீங்கி அஃது இகரவீற்றதாய் நிற்பினும் இயல்பேயாம், எ–று.

எ–டு.:–

வாழி கொற்றா; வாழி தோழி.

வாழி என்னும் வியங்கோள் வினைமுற்று கடைக்குறை விகாரமாய், ஆவாழி, அந்தணர் வழி, என நிற்கும் என்பதற்கும் இதனையே விதியாகக் கொள்க.

(18)

168 சாவவென் மொழியீற் றுயிர்மெய்சா தலும்விதி

சாவ என் மொழி ஈற்று உயிர்மெய் சாதலும் விதி

sāva en̲ mol̥i īr̥r̥u uyirmey sāṭalum viṭi

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

It is also considered gramattical to drop (sometimes) the final Vowel-consonant of the (participle) Câva.

## ஒப்புமைப் பகுதி

சாவ என்னுஞ் செயவென் எச்சத்து
இறுதி வகரங் கெடுதலும் உரித்தே

(தொல்.: 210)

சாவ வென்னுஞ்ள செயவெ னெச்சத்
திறுதி வகரங் கெடுதலு முரித்தே

(இ.வி.: 85)

சாவவென் மொழியீற் றுயிர்மெய்சா தலும்விதி

(மு.வீ.: 240)

## மயிலை நாதர்

எ—ன், எய்தியதன் மேற் சிறப்புவிதி யுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.: சாவ வென்னும் மொழி யிறுதியில் நின்ற உயிர்மெய் கெடுதலும் முறைமை, எ – று.

வ – று.:– சாவ + குத்தினான் சாக்குத்தினான் என வரும்.

உம்மையால், [1]கெடாமையே வலியுடைத் தென்க.

## சங்கர நமச்சிவாயர்

எ—னின், சாவ என்னும் நிலைமொழிக்கு எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ—ள்.: சாவ என்னும் செயவெனெச்ச வினைச்சொல்லினது ஈற்று உயிர்மெய் கெட்டுப் புணர்தலும் விதியாம், எ—று.

உ–ம்.:–

சாக் குத்தினான் என வரும்.

இப் புணர்ச்சி சாவக் குத்தினான் என்னும் புணர்ச்சி போல்
சிறந்த தன்மையின் சாதலும் என்றும், ஒரோவழி அருகி

---

பாட வேறுபாடு.:–

1. கெடாமலே

வருதலின் விதி என்றும் கூறினார்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், இதுவுமது.

இ–ள்.:– சாவவென் மொழி – சாவ வென்று சொல்லப்படும் செய வென்னும் வாய்பாட்டு வினை யெச்சத்து, ஈற்றுயிர்மெய் – இறுதிக்கண் நின்ற வகர உயிர்மெய், சாதலும் விதி – கெட்டு நிற்றலும் விதியாம், எ–று.

அரும்பதவுரை.:– "சாதலும் விதி"யெனவே கெடாமல் நிற்றலே வலியுடைத்து என்க.

உ–ம்.:–

சாக்குத்தினான் சீறினான், தகர்த்தான், படைத்தான் எனவும் ஒட்டுக. வருமொழி, வரையாமையின் நாற்கணமும் கொள்க. சாநீண்டான், மாண்டன், யார்த்தான், வீழ்ந்தான், அடைந்தான் என ஒட்டுக.

## விசாகப் பெருமாளையர்

இது, சாவ என்கிற நிலைமொழிக்கு எய்தாத தெய்துவிக்கின்றது.

இ–ள்.:– சாவவென் மொழி – சாவ வென்னுஞ் செய்திவெனெச்ச வினைச்சொர்லினுடைய, ஈற்று – இறுதியிலிருக்கின்ற, உயிர்மெய் – வகரவுயிர் மெய்யானது, சாதலும் – கெட்டுப் புணர்தலும், விதி – விதியாகும், எ–று.

உ–ம்.:–

சாவ – குத்தினான் – சாக்குத்தினான், எனவரும். (இப்புணர்ச்சி சாலக்குத்தினான் என்னும், புணர்ச்சிபோற் சிறந்ததல்லாமையாற் "சாதலும் விதி" யென்றார்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஈற்றுயிர்மெய் கெடவும்பெறும் வினையெச்சமு மொன்றுண்டெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

சாவவென் மொழியீற் றுயிர்மெய் சாதலும்விதி.

(சாவ என் மொழி ஈற்று உயிர்மெய் சாதலும்விதி)

**இ—ள்.:— சாவ என் மொழி ஈற்று உயிர்மெய்** — சாவவென்னுஞ் செயவெனெச்ச வினைச்சொல்லினுடைய இறுதியில் உள்ள வகர வுயிர்மெய், **சாதலும் விதி** — கெட்டுப் புணர்தலும் விதியாகும், எ—று.

இங்ஙனம் வருதலுண்டேனும் சாவவென்பதே சிறப்புடைத்தென்பது உம்மையாற் பெறப்படும்.

உ—ம்.:—

சாவ—குத்தினான் = சாக்குத்தினான் எனவரும்.

சாவவென்னும் வினையெச்சம் உயிர்மெய்யீறு போய்ச் சாவென நிற்பினும் வரும் வல்லினம் " இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திர விதிப்படியே புணரு மென்பது இச்சூத்திரக் கருத்தாம்.

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

**இ—ள்.:—** சாவவென் மொழி யீற்று — சாவ வென்னுஞ் செய வென் வாய்பாட்டு வினை யெச்சத்து இறுதியிலே நின்ற, **உயிர்மெய் சாதலும் விதி** — உயிர்மெய் கெட்டுப் புணர்தலும் இலக்கணமாம், எ—று.

உ—ம்.:—

சாக் குத்தினான் எனவரும். இப்புணர்ச்சி, சாவக் குத்தினான் என்பது போலச் சிறந்திலாமையால், இழிவு சிறப்பு உம்மை கொடுத்துச் சாதலுமென்றும், ஒரோரிடங்களிற் குறைந்து வழங்கலால் 'விதி' என்றுங் கூறினார். சாதலும் விதி யென முற்றிற்று.

## கா. கோபாலாசாரி — தி.கோ.ரங்காசாரி

**உரை :— சாவ என் மொழி** — சாவ என்னும் செயவென் வாய்பாட்டு வினையெச்சத்தினுடைய, **ஈறு** — இறுதியிலுள்ள, **உயிர்மெய்** — வகரஉகர உயிர்மெய், **சாதலும்** — கெட்டு வருமொழியோடு புணர்தலும், — **விதி** — விதியாம்.

உ—ம் :—

சாவ + குத்தினான் = சாக்குத்தினான்.

குறிப்பு :—

'சாதலும் விதி' என்ற இழிவு சிறப்பும்மையால் சாவக் குத்தினான் என்பதே சிறந்ததென்க.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– சாவ என் மொழி ஈற்று உயிர்மெய் சாதலும் விதி – சாவ வென்னுஞ் செய வெனெச்ச வினைச்சொல்லினுடைய இறுதியில் உள்ள வகர வுயிர்மெய் கெட்டுப் புணர்தலும் விதியாகும், எ – று.

உ–ம்.:–

சாவ+குத்தினான் = சாக்குத்தினான் என வரும்.

இப் புணர்ச்சி சாவக்குத்தினான் என்னும் புணர்ச்சி போறச் சிறந்ததல்லாமையாற் சாதலும் விதி என்றார். இது நிலைமொழிக்கு எய்தாததெய்துவித்தல்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– சாவ என் மொழி ஈற்று உயிர்மெய் – சாவவென்னுஞ் செயவெனெச்ச வினைச் சொல்லினுடைய இறுதியிலுள்ள வகரவுயிர்மெய், சாதலும் விதி – கெட்டுப்புணர்தலும் விதியாகும். எ–று.

உ–ம்.:–

சாவ + குத்தினான் = சாக்குத்தினான் என வரும்.

இப்புணர்ச்சி சாவக்குத்தினான் என்னும் புணர்ச்சிபோறச் சிறந்ததல் லாமையாற் சாதலும் விதி என்றார்.

இது நிலைமொழிக்கு எய்தாததெய்துவித்தல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– சாவ என் மொழி – சாவ என்னுஞ் செய வென் வாய்பாட்டு வினையெச்சத்தினுடைய, ஈறு – இறுதியிலுள்ள, உயிர் மெய் – வகர உயிர்மெய், சாதலும் – (வருமொழியோடு புணர்கையில்) கெடுதலும், விதி– விதியாம், எ–று.

உ–ம்.:–

சாவ + குத்தினான் – சாக்குத்தினான்.

இப் புணர்ச்சி சாவக்குத்தினான் என்னும் புணர்ச்சி போலச் சிறந்த தல்லாமையால், 'சாதலும் விதி' என இழிவு சிறப்பும்மை கொடுத்துக் கூறினார்.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– சாவ என் மொழி ஈற்று உயிர்மெய் – சாவ வென்னுஞ்

செயவெனெச்ச வினைச்சொல்லினுடைய இறுதியில் உள்ள வகர யு;ரமெய், **சாதலும் விதி** – கெட்டுப்புணர்தலும் விதியாகும். எ–று.

உ–ம்.:–

சாவ + குத்தினான் = சாக்குத்தினான்.

இப் புணர்ச்சி சாவக்குத்தினான் என்னும் புணர்ச்சிபோற் சிறந்த தல்லாமையாற் சாதலும் விதி என்றார்.

இது நிலைமொழிக்கு, எய்தாத 'தெய்துவித்தல்'.

## கா.நமச்சிவாய முதலியார்

சாவ என்மொழி – சாவ என்னுஞ் செயவெனெச்ச வினைச் சொல்லினுடைய, ஈறு – இறுதியிலிருக்கின்ற, **உயிர்மெய்** – வகர வுயிர்மெய்யானது, சாதலும் – கெடுதலும், **விதி** – விதியாகும்.

உதாரணம்.:–

சாவ + குத்தினான் = சாக்குத்தினான்

இப்புணர்ச்சி சாவக்குத்தினான் என்னும் புணர்ச்சிபோற் சிறந்ததல்லாமையால் 'சாதலும் விதி' என்றார்.

## மோசசு பொன்னையா

சாவ என்னும் செயவென் வாய்பாட்டு வினையெச்சத்தின் ஈற்று உயிர்மெய் புணர்ச்சியின்கண் கெடுதலும் விதியாகும், எ–று.

எ–டு.:–

சாவ + குத்தினான் – சாக்குத்தினான்

உம்மையால் சாவக்குத்தினான் எனப் புணர்தலே சிறப்பு எனவும், சாக்குத்தினான் எனப் புணர்தல் அருகிய வழக்கு எனவுங் கொள்க.

(19)

**169.** **பலசில வெனுமிவை தம்முன் றாம்வரின்**
**இயல்பு மிகலு மகர மேக**
**லகரம் றகர மாகலும் பிறவரின்**
**அகரம் விகற்ப மாகலு முளபிற.**

பல சில எனும் இவை தம் முன் தாம் வரின்
இயல்பும் மிகலும் அகர ஏகல்
அகரம் றகரம் ஆகலும் பிற வரின்
அகரம் விகற்பம் ஆகலும் உள பிற

pala sila eṉum ivai ṭam muṉ ṭām variṉ
iyalpum mikalum akara ēkal
akaram ṟakaram ākalum piṟa variṉ
akaram vikaṟpam ākalum uḻa piṟa

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Special rule for Pala and Cila

When pala and cila combine, each with itself, the Hard initials may or may not be doubled—or, the final a may be dropped and **l changed into r;** but when they combine with other words, the a may or may not be retained.

## ஒப்புமைப் பகுதி

தொடரல் இறுதி தம்முன் தாம்வரின்
லகரம் றகரவொற் றாதலு முரித்தே

(தொல்.: 215)

வல்லெழுத் தியற்கை உறழத் தோன்றும்

(தொல்.: 216)

பலசில வெனுமிவை தன்முன் றாம்வரி
னியல்பு மிகலு மகர மேக
லகரம் றகர மாகலும் பிறவரி
னகரம் விகற்ப மாகலு முளபிற

(இ.வி.: 88)

சிலபல தம்மொடு சேர்புளி இயல்பும்
முதல்மெய்க் கடைமெய் மிகலும் ஈறுபோய்
லறவ் ஆதலும் லா ஆதலுமாம்
பிறவரின் அகரம் நிற்றலும் கெடலுமாம்.

(தொ.வி.: 31)

பலசில வெனுமிவை தம்முன் றாம்வரின்
இயல்பு மிகலும் அகர மேக
லகரம் றகர மாகலும் பிறவரின்
அகரம் விகற்ப மாகலு முளபிற.

(மு.வீ.: 244)

## மயிலை நாதர்

எ—ன், எய்தாதது எய்துவித்தலும் எய்தியது இகந்துபடாமற் காத்தலும் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.:— பலசில வென்னும் இவ்விரு சொல்லும் தம் முன்னர்த் தாம் வரின் இயல்பாதலும், மிகுதலும், அகரங்கெட லகரம் றகரமாதலும், இவற்றின் முன்னே பிற மொழி யனைத்தும் வரின் அகரம் நிற்றலும் நீங்கலும் உளவாம், எ — று.

வ — று.:—

(பலபல) + (கொண்டார், செய்தார், தந்தார், பற்றினார்) என இயல்பாயின. பலப்பலகொண்டார் என மிக்கது. பற்பல கொண்டார் என அகரம் கெட லகரம் றகரமாகத் திரிந்தது. பலசான்றீரே, 'பல்சான்றீரே, பலகலை பல்கலை, பலசாலை, பல்சாலை, பலதாழிசை பஃறாழிசை, பலபடை பல்படை, பலஞாட்பு, பன்ஞாட்பு, பலநாள் பன்னாள், பலமணி பன்மணி, பலயானை பல்யானை, பலவளை பல்வளை, பலஅணி பல்லணி, பலஆயம் பல்லாயம், பலஇழை பல்லிழை என அகரம் விகற்பித்தது. சிலவுக்கும் இவ்வாறே ஒட்டிக் கொள்க.

'பிற' என்ற மிகையானே, பல்லபல, சில்லசில என்ற மிகையும், ''பலாஞ் சிலாம்'' என அகரம் ஆகாரமாய் ஒற்றுமிகலும் பிறவல்லினம் வந்தவழி லகரம் திரியாமையும் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

## சிவஞான முனிவர்

எ—னின், வருமொழிக்குச் *'செய்யிய என்னும்' என்ற சூத்திரத்தான்* எய்தியது இகந்துபடாமைக் காத்தலும், அதன் மேல் சிறப்புவிதியும், நிலைமொழிக்கு எய்தாதது எய்துவித்தலும் நுதலிற்று.

இதனுள் மிகுதல் 'செய்யிய' என்னும் சூத்திரத்தான் விலக்கி ஈண்டு விதித்தமையின் சிறப்புவிதி யாயிற்று.

---

பாட வேறுபாடு.:—

1 (1).பல்சான்றீரே யென அகரம் ஏகிற்று

(2) பல்சான்றீரேயென அகரம் கெட்டது

இ–ள்.:– பல சில என்னும் இவ்விருசொல்லும் தம் முன்னர்த் தாம் வருமாயின் இயல்பாகலும், மிகுதலும், அகரம் கெட லகரம் றகரமாகலும், இவற்றின்முன் பிறமொழிகளுள் யாதானும் ஒன்று வரின் அகரம் நிற்றலும், நீங்கலும் உளவாம், எ – று.

உ– ம்.:–

பலபல, சிலசில என இயல்பாயின. பலப்பல சிலச்சில என மிக்கன. இம் மிகுதி இயல்புபோல் பயின்று வாராமையின் வல்லினம் விகற்பமாகலும் என்னாது இயல்பும் மிகலும் என்றார். பற்பல சிற்சில என அகரமேக லகரம் றகரமாயின. பலகலை, பல்கலை, பலசாலை, பல்சாலை; பலதாழிசை, பஃறாழிசை; பலபடை பல்படை; பலஞானம், பன்ஞானம்; பலநாள், பன்னாள், பலமணி, பன்மணி; பலவளை, பல்வளை, பலயானை, பல்யானை; பல அணி, பல்லணி; பல ஆயம், பல்லாயம் எனப் பிறவரின் அகரம் விகற்பமாயின. சில என்பதற்கும் இவ்வாறே கொள்க.

பிற என்ற மிகையானே பல்பல சில்சில என அகரம் ஏக லகரம் றகரமாகாது அருகி வருதலும், பிற வல்லினமொழி வரின் லகரம் றகரத்தோடு உறழும்வழி உறழாது இயல்பாதலும், அகர ஈற்றுப் புணர்ச்சியுள் அமையா தொழிந்தன உளவேல் அவையும் கொள்க.

அகரம் நீங்க நின்ற பல்லாயம் முதலியன, நன்மை வன்மை மென்மை அன்மை இன்மை என்பன போல, லகர மெய்யீற்றுப் பண்படியாய் நின்று வருமொழியோடு புணர்ந்தன அன்றோ, அவற்றை அகர ஈற்றனவாக வைத்துப் புணர்த்தது என்னை யெனின்:– அப்பண்படி, பன்மை சின்மை எனப் பகுதிப்பொருள் விகுதியோடேனும், பலர் பல சிலர் சில என விகுதிப்பொருள் விகுதியோடேனு மன்றித் தனித்து நில்லா ஒற்றுமை நயம்பற்றி என்க.

இஃது ஒன்றினமுடித்தல் தன்னினமுடித்தல் என்னும் உத்திக்கு இனம்.

அகரம் விகற்பமாம் என்ற துணையானே பல் சில் எனப் பண்படி தோன்றினமையின், இவ்விதி அல்வழிக்கே என்பது கூறாதே அமையும் என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், பல சில என்னும் இவ்விரு சொல்லும் புணருமாறு கூறியது.

**இ-ள்.:- பல சிலவெனும் இவை** - அஃறிணைப் பன்மைப் பொருளை உணர்த்தும் அகரவீற்றுப் பெயராகிய பல சில வென்னும் இவ்விரு சொற்களும், **தம்முன் தாம் வரின்** - பலவின் முன் பல வந்தாலும் சிலவின் முன் சில வந்தாலும், **இயல்புமிகலும்** - இயல்பாய் முடிதலும் மிக்கு முடிதலுமாம்; **அகரமேக** - தம்மீற்றி னின்ற அகரம் கெட, **லகரம் றகரமாதலும்** - அதனாற் பற்றப்பட்ட லகர வொற்று றகர வொற்றாய்த் திரிந்து முடிதலுமாம், **பிற வரின்** - இவற்றின் முன் பிற சொற்கள் வரினும், **அகரம் விகற்பமாகலும் உள பிற** - ஈற்றி னின்ற அகரம் நிற்றலும் நீங்கலும் உள, எ-று.

**உ-ம்.:-**

பலபல, சிலசில, பலப்பல, சிலச்சில என இயல்பாயும் மிக்கும் வந்தன. "பல் சான்றீரே" என அகரம் கெட்டது. பற்பல, சிற்சில என அகரம் கெட்டு லகரம் றகரமாய்த் திரிந்தது. பல்கலை பலகலை, பல்சாலை, பலசாலை, பஃறாழிசை, பல தாழிசை, பல்படை, பல படை, பல நாள், பன்னாள், பல்மணி, பன்மணி, பல்வளை, பலவளை, பல்யானை, பலயானை, பலவணி பல்லணி, பலவாயம் பல்லாயம், பலவிழை பல்லிழை, பலவுரை, பல்லுரை என அகரம் விகற்பித்து வந்தது. சிலவுக்கும் இவ்வாறே எடுத்துக் கொள்க.

'பிற'வென்ற மிகையானே பல்ல பல, சில்ல சில என்று வருவனவும், பலாம், சிலாம் என வருவனவும் பிற வல்லினம் வந்தவழி லகரம் திரியாமல் வருவதும் கொள்க.

## விசாகப் பெருமாளையர்

இது, வருமொழிக்கு எய்தியது இகந்து படாமைக் காத்தலும் அதன்மேற் சிறப்புவிதியும் நிலைமொழிக்கு எய்தாத தெய்துவித்தலுஞ் சொல்லுகின்றது.

**இ-ள்.:- பலசில வெனுமிவை** - பல சில என்கின்ற வ்விவ்விரு சொல்லும், **தம்முன்**-தமக்கு முன்னே, **தாம் வரின்**-தாம் வருமாயின், **இயல்பும்**-இயல்பாதலும், **மிகலும்**-மிகுதலும், **அகரம்**-அகரமானது, **ஏக**-கெட, **லகரம்**-லகரமானது, **றகரமாகலும்** - றகரமாகத் திரிதலும், **பிற** - இவற்றின் முன் பிறமொழிகளுள் யாதாயினு மொன்று, **வரின்**-வந்தால், **அகரம்**-அகரமானது, **விகற்பமாகலும்** - நிற்றலு நீங்கலும், **உள**-உளவாம், எ-று.

**உ-ம்.:-**

பலபல, சிலசில, இயல்பாயின, பலப்பல, சிலச்சில - மிக்கன. பற்பல, சிற்சில, அகரங் கெட லகரம் றகர மாயிற்று, பலகலை, பல்கலை, பலசாலை, பல்சாலை, பலதாழிசை, பஃறாழிசை. பலபடை, பல்படை, பலஞானம், பல்ஞானம், பலநாள், பன்னாள், பலமணி, பன்மணி, பலவளை, பல்வளை,

பலயாழ், பல்யாழ், பலவணி, பல்லணி, பலவாயம், பல்லாயம் – பிற வர அகரம் விகற்பமாயிற்று. (''பிற'' என்ற மிகையால், பல்பல, சில்சில என அகரங் கெட லகரம் றகரமாகாம லொரோவிடத்து வருதலும் இன்னும் அகர வீற்றுப் புணர்ச்சியுள் அடங்காது வருவனவுங் கொள்க.)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

பலசில வென்னுஞ் சொற்கள் தம்முன்னேதாமும் பிறவும்வரின் புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

பலசில வெனுமிவை தம்முன் றாம்வரின்
இயல்பு மிகலு மகர மேக
லகரம் றகர மாகலும் பிறவரின்
அகரம் விகற்ப மாகலு முளபிற.
(பலசில எனும் இவை தம்முன் தாம்வரின்
இயல்பும் மிகலும், அகரம் ஏக
லகரம் றகரம் ஆகலும், பிற வரின்
அகரம் விகற்பம் ஆகலும் உள)

**இ–ள்.:– பல சில எனும் இவை தம்முன் தாம்வரின் இயல்பும்** – பல சில என்னும் இவ்விருசொல்லுந் தமக்கு முன்னே தாம் வருமாயின் இயல்பாதலும், **மிகலும்** – மிகுதலும், **அகரம் ஏக லகரம் றகரம் ஆகலும்** – அகரங் கெட லகரம் றகரமாகத் திரிதலும், **பிறவரின் அகரம் விகற்பம் ஆகலும் உள** – இவற்றின் முன் பிறமொழிகளுள் யாதாயினுமொன்று வரின் அகரம் நிற்றலும் நீங்கலும் உளவாம், எ–று.

இச்சூத்திரத்திற் சொல்லப்பட்ட செய்கைகள் எத்தனை?

இயல்பும், மிகலும், திரிதலும், விகற்பமாகலும் என நான்கு செய்கைகள்.

பலசில என்னும் இருசொல்லும் தம்முன்னே தாம்வரின் இந்நான்கு செய்கைகளுள் எவற்றைப் பெறும்?

''பலசில வெனுமிவை தம்முன் றாம்வரின் இயல்பும் மிகலும் அகரமேக லகரம் றகரமாகலும் உள''

உ–ம்.:–

(1) பல பல, சில சில என இயல்பாயின.

(2) பலப்பல, சிலச்சில என மிக்கன.

(3) பற்பல, சிற்சில என அகரங்கெட லகரம் றகரமாயிற்று.

பலசில என்பன அல்வழியிற் பிறமொழிகள் வரின்

எவ்வாறாம்?

பலசில வெனுமிவை தம்முன் பிறவரின் அகரம் விகற்பமாகலு முள"

(4) பலகலை, பல்கலை பலசாலை, பல்சாலை.

பலதாழிசை, பஃறாழிசை பலபடை, பல்படை.

பலஞானம், பன்ஞானம் பலநாள், பன்னாள்.

பலமணி, பன்மணி பலவளை, பல்வளை,

பலயாழ், பல்யாழ் பலவணி, பல்லணி.

பலவாயம், பல்லாயம் (சில என்பதும் இவ்வாறே)

எனப் பிறவர அகரம் விகற்பமாயிற்று.

பிறவென்ற மிகையினாலே, பல்பல சில்சில என அகரங் கெட லகரம் றகர மாகாது ஒரோவிடத்து அருகி வருதலும், இன்னும், அகரவீற்றுப் புணர்ச்சியுள் அடங்காது வருவனவுங் கொள்க.

பலசிலவெனுமிவை. தம்முன் றாம்வரின் னியல்பு என்றது வருமொழிக்குச் "செய்யிய" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது இகந்துபடாமைக் காத்தல்; மிகல் என்றது, அதன்மேற் சிறப்புவிதி, இம்மிகுதல் "செய்யிய" என்னுஞ் சூத்திரத்தால் விலக்கி இங்கே விதித்தமையாற் சிறப்புவிதி; அகரமேகலகரம் றகரமாதலும் பிறவரின் அகரம் விகற்பமாகலும் உள என்றது நிலைமொழிக் கெய்ததாதது எய்துவித்தல்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, வருமொழிக்கு எய்தியது பிறழாமற் காத்தலும், அதன்மேற் சிறப்பு விதியும், நிலைமொழிக்கு எய்தாதது எய்துவித்தலு முணர்த்திற்று; மிகுதல் செய்யிய வென்னுஞ் சூத்திரத்தால் விலக்கி இங்கே சொல்லுதலால் சிறப்புவிதியாயிற்று.

இ–ள்.: **பலசில வெனுமிவை** – இவ் விரண்டு சொற்களும், **தம் முன் றாம்வரின்** – அவற்றின் முன் அவையே வந்து புணருமாயின், **இயல்பு மிகலும்** – இயல்பா யிருத்தலும் மிக்கு முடிதலும், **அகரமேக லகரம் றகரமாகலும்** – இறுதியில் நின்ற அகரம் நீங்க நின்ற லகர ஒற்று றகர ஒற்றாகத் திரிதலும். **பிறவரின்** – (இவ்விரண்டுசொல் முன்னும்) பிறசொற்கள் வந்து புணரின். **அகரம் விகற்பமாகலுமுள**–அந்த அகரம் நிற்பதும் நீங்குவதுமாகி விகற்பித்தலு முளவாம். எ – று.

உ–ம்.:–

பலபல சிலசில என வியல்பாயின. பலப்பல சிலச்சில என மிக்கன. பற்பல சிற்சில என அகரமேக லகரம் றகரமாயிற்று. பலகலை, பல்கலை, பலசாலை–பல்சாலை, பலதாழிசை–பஃறாழிசை, பலபடை–பல்படை, பலஞானம்–பன்ஞானம், பலநாள்–பன்னாள், பலமணி–பன்மணி, பலயானை–பல்யானை, பலவளை–பல்வளை, பலவணி–பல்லணி, பலவாயம்–பல்லாயம் எனப் பிற வர அகரம் விகற்பமாயிற்று, சில வென்பதனொடும் இவ்வாறே ஒட்டிக் காண்க.

இனிப் பிறவென்றதினாலே பல்பல சில்சில என அகர்ம் நீங்க லகரம் றகரமாகாது சிறுபான்மை வருதலும், 'பலா அஞ்சிலா அமென்மனார் புலவர்' எனச் செய்யுளில் ஒரோரிடத்துப் பலவென்பதன் முன் சிலவென்பது வந்த புணர்ந்த இடத்து இறுதி அகரம் நீண்டு அளபெடுத்து மகர ஒற்றுப் பெற்று முடிதலும், இன்னும் அகர வீற்றுப் புணர்ச்சியுள் அடங்காதன உளவாயின், அவையுங் கொள்க. அகரம் நீங்க நின்ற பல்லாயம் முதலியன, நன்மை–வன்மை என்பன போல, லகர மெய்யீற்றுப் பண்புப்பகுதியாய் நின்று, வருமொழியொடு புணர்ந்ததன்றோ, அவற்றை அகர ஈறாக வைத்துப் புணர்த்தது என்னெனின், அந்தப் பண்புப்பகுதி பன்மை, சின்மை எனப் பகுதிப்பெருள் விகுதியோடாயினும், பலர், பல; சிலர்; சில – என விகுதிப்பொருள் விகுதியோடாயினும் அன்றித் தனித்து நில்லாத ஒருமைப்பாடு பற்றி அகர வீற்றனவாக வைத்துப் புணர்த்ததென்க. இது ஒன்றின முடித்தலென்னும் உத்திக்கு இனம். பிறவரின் அகரம் விகற்பமா மென்ற மாத்திரமே, பண்புப் பகாப்பதம் விளங்கி நிற்றலாலும், 'தம்முன்தாம் வரின்' எனவே அடுக்கு என்பது தோன்றலாலும், இவ்விதி அல்வழிக்கே என்பது கூறாதே யமையு மென்க. எண்ணும்மையோடு கூடிநின்ற நான்கையுங் கூட்டி உளவென முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :–** **பலசில எனும் இவை** – பலசில என்னும் இவ்விருசொல்லும், **தம்முன் தாம்வரின்** – தமக்குமுன்னே தாமேவருமாயின் (பல என்பதன் முன் பல என்பதும், சில என்பதன்முன் சில என்பதும் வந்தால்), **இயல்பும்** – வலி இயல்பாதலும், **மிகலும்** – வல்லெழுத்து மிக்குமுடிதலும், **அகரம் ஏக** – (இறுதியிலுள்ள) அகரம்கெட, **லகரம் றகரமாகலும்** – லகர மெய் றகர மெய்யாகத் திரிதலும், **பிறவரின்** – (இவ்விரண்டு சொற்களின் முன்) வேறு சொற்கள் வந்தால், **அகரம்** – (இறுதியிலுள்ள) அகரம், **விகற்பம் ஆகலும்** – நிற்பதும் நீங்குவதுமாகிய விகற்பித்தலும், **உள** – உள்ளனவாம்.

உ-ம் :-

பலபல = பலபல — சிலசில – இயல்பாயின
பல+பல = பலப்பல — சிலச்சில – மிக்கன
பல+பல = பற்பல, — சிற்சில – அகெடலறகரமாயிற்று.
பல + கலை = பலகலை, பல்கலை, சிலவளை, சில்வளை
சில + நாள் = சிலநாள், சின்னாள், பலவாயம், பல்லாயம்

(பிறவர அகரம் நின்று நீங்கியும் விகற்பித்தது)

குறிப்பு : –

'பிற' என்றமிகையால் பல்பல, சில்சில எனத் தம்முன் தாம்வர அகரங்கெட்டு லகரம் றகரமாகாமற் சிறுபான்மை வருதலும்; பற்பகல், சிற்கலை எனப்பிறவர அகரங்கெட்டு லகரம் றகரமாகத் திரிதலும்; இன்னும் அகரவீற்றுப் புணர்ச்சியுள் அடங்காது வருவனவுங்கொள்க.

இனி, 'தம்முன் தாம்வரின்' எனவே அருத்தாபத்தியால் தம்முன் பிறவரின் லகரம் றகரவொற்றாகாது அகரம் கெடுமென்று கொள்ளப்படும் என்று கூறி, 'பல்கடல்', 'சில்காடு' என உதாரணங் காட்டுவர் ஆசிரியர் இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும்.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: பல சில எனும் இவை தம்முன் தாம் வரின் – பல சில என்னும் இவ்விரு சொல்லுந் தமக்கு முன்னே தாம் வருமாயின், இயல்பும் மிகலும் – இயல்பாதலும் மிகுதலும், அகரம் ஏக லகரம் றகரம் ஆகலும் – அகரங் கெட லகரம் றகரமாகத் திரிதலும், பிறவரின் அகரம் விகற்பம் ஆகலும் உள, – இவற்றின் முன் பிறமொழிகளுள் யாதாயினு மொன்று வரின் அகரம் நிற்றலு நீங்கலும் உளவாம். எ–று.

உ-ம்.:-

(1) பல பல, சில சில என இயல்பாயின.

(2) பலப்பல, சிலச்சில என மிக்கன.

(3) பற்பல, சிற்சில என அகரங்கெட லகரம் றகரமாயிற்று.

(4) பலகலை, பல்கலை; பலசாலை, பல்சாலை; பலதாழிசை, பஃறாழிசை; பலபடை, பல்படை; பலஞானம், பன்ஞானம்; பலநாள், பன்னாள்; பலமணி, பன்மணி; பலவளை, பல்வளை; பலயாழ், பல்யாழ்; பலவணி, பல்லணி; பலவாயம், பல்லாயம் எனப் பிற வர அகரம் விகற்பமாயிற்று.

பிறவென்ற மிகையினாலே, பல்பல, சில் சில என அகரங்

கெட லகரம் றகரமாகாது ஒரோவிடத்து அருகி வருதலும், இன்னும், அகர வீற்றுப் புணர்ச்சியுள் அடங்காது வருவனவுங் கொள்க.

பலசில வெனுமிவை தம்முன் றாம்வரி னியல்பு என்றது வருமொழிக்குச் "செய்யிய" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது இகந்துபடாமைக் காத்தல்; மிகல் என்றது, அதன்மேற் சிறப்புவிதி; இம் மிகுதல் "செய்யிய" என்னுஞ் சூத்திரத்தால் விலக்கி இங்கே விதித்தமையாற் சிறப்புவிதி, அகரமேக லகரம் றகரமாகலும் பிறவரின் அகரம் விகற்பமாகலும் உள என்றது நிலைமொழிக் கெய்தாதது எய்துவித்தல்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ-ள்.:- பல சில எனும் இவை தம்முன் தாம் வரின்** - பலசில என்னு மிவ்விரு சொல்லுந் தமக்கு முன்னே தாம் வருமாயின், **இயல்பும் மிகலும்** - இயல்பாதலும் மிகுதலும், **அகரம் ஏக லகரம் றகரமாகலும்** - அகரங்கெட லகரம் றகரமாகத்திரிதலும், **பிறவரின் அகரம் விகற்பம் ஆகலும் உள** - இற்றின்முன் பிறமொழிகளுள் யாதாயினு மொன்று வரின் அகரம் நிற்றலும் நீங்கலும் உளவாம். எ-று.

உ-ம்:-

(1) பல பல, சில சில என இயல்பாயின.

(2) பலப்பல, சிலச்சில என மிக்கன.

(3) பற்பல, சிற்சில என அகரங்கெட லகரமெய் றகரமெய்யாயிற்று.

(4) பலகலை, பல்கலை, பலசாலை, பல்சாலை; பலதாழிசை, பஃறாழிசை; பலபடை, பல்படை; பல ஞானம், பன்ஞானம்; பல நாள், பன்னாள்; பல மணி, பன்மணி; பல வளை, பல்வளை; பல யாழ், பல்யாழ்; பல வணி, பல்லணி; பலவாயம், பல்லாயம் எனப் பிறவர அகரம் விகற்பமாயிற்று.

பிறவென்ற மிகையினாலே, பல்பல, சில்சில என அகரங்கெட லகரம் றகரமாகாது ஒரோவிடத்து அருகிவருதலும், இன்னும் அகரவீற்றுப் புணர்ச்சியுள் அடங்காது வருவனவுங் கொள்க.

பலசில வெனுமிவை தம்முன்றாம்வரி னியல்பு என்றது, வருமொழிக்கு 'செய்யிய' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதிகந்து படாமைக்காத்தல்; மிகல் என்றது, அதன்மேற்

சிறப்புவிதி; இம்மிகுதல் 'செய்யிய' என்னுஞ் சூத்திரத்தால் விலக்கி இங்கே விதித்தமையாற் சிறப்புவிதி; அகரமேக லகரம் றகரமாகலும் பிறவரின் அகரம் விகற்பமாகலும் உள என்றது நிலை மொழிக்கு எய்தாதது எய்துவித்தல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.: **பல சில எனும் இவை** – பல சில என்னும் இவ் விரு சொல்லும், **தம்முன் தாம் வரின்** – தமக்கு முன்னே தாமே வருமாயின் (பல என்பதற்கு முன் பல என்பதும் சில என்பதற்கு முன் சில என்பதும் வந்தால்), **இயல்பும்** – (வருமொழிமுதல் மெய்) இயல்பாதலும், **மிகலும்** – மிகுதலும், **அகரம் ஏக லகரம் றகரம் ஆகலும்** – (நிலைமொழி யிறுதியில் நின்ற அகரம் கெட லகர மெய் றகர மெய்யாகத் திரிதலும்;–**பிற வரின்** – (இவ்விரண்டு சொற்களின் முன்) வேறு சொற்களி லொன்று வந்தால், **அகரம்**–(நிலைமொழி யிறுதியில் நின்ற) அகரம், **விகற்பம் ஆகலும்** – (நிற்பதும் நீங்குவதுமாகிய) விகற்பித்தலும், **உள** – உள்ளனவாம்; எ—று.

உ—ம்.:—

(1) பலபல சிலசில—இயல்பாயின.

பலப்பல சிலச்சில – மிக்கன.

பற்பல, சிற்சில, – அகரம்கெட லகரம் றகரமாயிற்று.

பலகலை, பல்கலை, சிலவளை, சில்வளை பலநாள், சின்னாள், பலவாயம், பல்லாயம் – பிற வர அகரம் நின்றும் நீங்கியும் விகற்பித்தது.

'பிற' என்றமிகையால் – பற்பல, சிற்சில எனத் தம் முன் தாம் வர அகரம் கெட்டு லகரம் றகரமாகாமல் சிறுபான்மை வருதலும்; பற்பகல், சிற்கலை எனப் பிற வர அகரம் கெட்டு லகரம் றகரமாகத் திரிதலும், இன்னும் இங்குக் கூறிய அகர வீற்றுப் புணர்ச்சியுள் அடங்காது வருவன உளவாயின் அவையும் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

இ—ள்.:– **பல சில எனும் இவை** – பல சில என்னும் இவ்விரு சொல்லும் **தம்முன் தான் வரின்** – தமக்கு முன்னே தாம் வருமாயின், **இயல்பும் மிகலும்** – இயல்பாதலும் மிகுதலும், **அகரம் ஏக லகரம் றகரம் ஆகலும்** – அகரங்கெட லகரம் றகரமாகத் திரிதலும், **பிற வரின் அகரம் விகற்பம் ஆகலும் உள** – இவற்றின் முன் பிறமொழிகளுள் யாதாயினுமொன்று வரின்

அகரம் நிற்றலும் நீங்கலும் உளவாம். எ–று.

உ–ம்.:–

(1) பல பல, சில சில – என இயல்பாயின.

(2) பலப்பல, சிலச்சில – என மிக்கன.

(3) பற்பல, சிற்சில – என அகரங்கெட லகரம் றகரமாயிற்று.

(4) பலகலை, பல்கலை; பலசாலை, பல்சாலை; பலதாழிசை, பஃறாழிசை; பலபடை, பல்படை; பலஞானம், பன்ஞானம்; பலநாள், பன்னாள்; பலமணி, பன்மணி; பலவளை, பல்வளை; பலயாழ், பல்யாழ்; பலவணி, பல்லணி; பலவாயம், பல்லாயம் – எனப் பிற வர அகரம் விகற்பமாயிற்று.

'பிற' என்ற மிகையினாலே, பல்பல, சில்சில என அகரங்கெட லகரம் றகரமாகாது ஒரோவிடத்து அருகிவருதலும். இன்னும், அகர வீற்றுப் புணர்ச்சியுள் அடங்காது வருவனவுங் கொள்க.

'பலசிலவெனுமிவை தம்முன் றாம்வரி னியல்பு' என்றது வருமொழிக்குச் "செய்யிய" என்னும் 167–வது சூத்திரத்தால் எய்தியது இகந்துபடாமைக் காத்தல்; 'மிகல்' என்றது, அதன்மேற் சிறப்ப விதி; இம் மிகுதல் "செய்யிய" என்னும் சூத்திரத்தால் விலக்கி இங்கே விதித்தமையாற் சிறப்பு விதி 'அகரமேக லகரம் றகரமாகலும் பிறவரின் அகரம் விகற்பமாகலும் உள' என்றது நிலைமொழிக்கெய்தாதது எய்துவித்தல்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:– பல சில எனும் இவை – பல சில என்கின்ற இவ் விரு சொல்லும், **தம் முன் தாம் வரின்** – தமக்கு முன்னே தாம் வருமாயின், **இயல்பும்** – இயல்பாதலும், **மிகலும்** – மிகுதலும், **அகரம் ஏக** – அகரம் கெட, **லகரம் றகரம் ஆதலும்** – லகரம் றகரமாகத் திரிதலும், **பிறவரின்** – (இவற்றின் முன்) பிற மொழிகளுள் யாதாயினும் ஒன்று வந்தால், **அகரம்** – அகரமானது, **விகற்பம் ஆதலும்** – நிற்றலும் நீங்கலும், **உள** – உளவாம். எ–று.

பொ–ரை.:–

பல சில என்கின்ற இவ் விரு சொல்லும் தமக்கு முன்னே தாம் வருமாயின் இயல்பாதலும் மிகுதலும், அகரம் கெடலகரம் றகரமாகத் திரிதலும், (இவற்றின்முன்) பிறமொழிகளுள் யாதாயினும் ஒன்று வந்தால் அகரமானது நிற்றலும் நீங்கலு முளவாம்.

தம்முன் தாம் வருதலாவது – பல என்பதற்குமுன் பல என்பதும், சில என்பதற்கு முன் சில என்பதும் வருதல். அகரம் என்பது – நிலைமொழியில் நின்ற அகரம், பிறவருதலாவது – இவ்விரண்டு சொற்களின் முன் வேறு சொற்கள் வருதல், விகற்பித்தலாவது – நிற்றலும் நீங்கலும்.

உ–ம்.:–

| | | |
|---|---|---|
| பல | +பல | =பலபல. – இயல்பாயின. |
| சில | +சில | =சிலசில |
| பல | +பல | =பலப்பல.–மிக்கன. |
| சில | +சில | =சிலச்சில. |
| பல | +பல | =பற்பல. – அகரங்கெட லகரம் றகரமாயிற்று. |
| சில | +சில | =சிற்சில. |
| பல | +கலை | = பலகலை, பல்கலை.–பிறவர அகரம் விகற்பமாயிற்று. |

+சாலை = பலசாலை, பல்சாலை.

+தாழிசை = பலதாழிசை, பஃறாழிசை.

+படை = பலபடை பல்படை.

+ஞானம் = பலஞானம், பன்ஞானம்.

+நாள் = பலநாள், பன்னாள்.

+மணி = பலமணி, பன்மணி.

+ வளை = பலவினை, பல்வனை.

+ஆயம் = பலவாயம், பல்லாயம்.

சில என்பதற்கும் இவ்வாறே கொள்க. 'பிற' என்ற மிகையால், பல்பல; சிலசில என அகங் கெட லகரம் றகரமாகாமல் ஒரோவிடத்து வருதலும். பற்பகல், சிற்கலை எனப் பிறவர, அகரம் கெட்டு லகரம் றகரமாகத் திரிதலும் இன்னும் அகர வீற்றுப் புணர்ச்சியுள் அடங்காது வருவனவுங் கொள்க.

("பலாஅஞ் சிலாஅம் என்மனார் புலவர்" எனச் செய்யுட் கண் ஒரோவழிப் பல என்பதன் முன்னர்ச் சில என்பது வந்துழி, இறதி அகரம் நீண்டு ஒரு அகரமும் மகர வொற்றும் பெற்று முடிதலுங் கொள்க. பலசில என்பவை பண்படியாகப் பிறந்த அஃறிணைப் பலவின்பாற் பெயர்ச்சொல்லாதலால் அல்வழியில் வருமெனக் கொள்க.)

## கா.நமச்சிவாய முதலியார்

(1) பலசில எனுமிவை – பலசில என்னும் இவ்விரு சொல்லும், தம்முன் – தமக்குமுன்னே, தாம்வரின் – தாம் வருமாயின், இயல்பும் – இயல்பாதலும் ;

(2) மிகலும் – மிகுதலும் ;

(3) அகரம் – அகரமானது, ஏக – கெட, லகரம் – லகரமானது, றகரமாகலும் – றகரமாத் திரிதலும் ;

(4) பிற – இவற்றின்முன் பிறமொழிகளுள் யாதாயினுமொன்று, வரின் – வந்தால், அகரம் – அகரமானது, விகற்பமாதலும் – நிற்றலும் நீங்கலும், உள – உளவாம்.

உதாரணம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | பல | + | பல | = | பலபல | இயல்பு | |
| | சில | + | சில | = | சிலசில | | |
| (2) | பல | + | பல | = | பலப்பல | | |
| | சில | + | சில | = | சிலச்சில | மிகுதல் | |
| (3) | பல | + | பல | = | பற்பல | அகரங்கெட லகரம் றகர | |
| | சில | + | சில | = | சிற்சில | மாதல் | |
| (4) | பல | + | கலை | = | பலகலை | பல்கலை | |
| | சில | + | நாள் | = | சிலநாள் | சின்னாள் | பிற சொற்கள் |
| | | + | வளை | = | சிலவளை | சில்வளை | வர அகரம் |
| | பல | + | ஆயம் | = | பலவாயம் | பல்லாயம் | விகற்பித்தது |

'பிற' என்றமிகையால், பல் பல, சில் சில என அகரங்கெட லகரம் றகரமாகாமல் ஒரோவிடத்து வருதலும், இன்னும் அகரவீற்றுப் புணர்ச்சியுள் அடங்காது வருவனவுங் கொள்க.

## மோசசு பொன்னையா

பல சில என்னும் இவ்விரு சொற்களும் ஒன்று ஒன்றனைத் தொடர்ந்து வருமாயின், இயல்பாதலும், மிகுதலும், நிலைமொழி ஈற்று அகரம் கெட லகரமெய் றகரமெய்யாய்த்திரிதலும், அவ்விரு சொற்களின் பின்னர் வேறு வல்லெழுத்து முதன் மொழி வரின், ஈற்று அகரம் நிற்றலும், நீங்குதலும், திரிதலுமாகிய விகற்பநிலை உளதாகும். எ–று.

எ–டு.:–

பல பல; சில சில – இயல்பாயின.

பலப்பல; சிலச்சில – மிக்கன.

பற்பல; சிற்சில – அகரங்கெட லகரம் றகரமாயிற்று.

பலகலை, பல்கலை

பலதாழிசை, பஃறாழிசை

பலஞானம், பன்ஞானம்

பலநாள், பன்னாள் அகரம் விகற்பமாயின.

சிலகலை, சில்கலை

சில தாழிசை, சிஃறாழிசை

சில அணி, சில்லணி

சிலநாள், சின்னாள்

பிற என்ற மிகையால் பல்பல, சில்சில எனத் தம்முள் தாம் வர அகரக்கேட்டின் பின் லகரம் திரியாது நின்று புணருவதையும் அமைக்க. மிகுதலும் ஈறுதிரிதலும் சிறப்பு விதிகளாக அமைந்தன.

(20)

**170. அல்வழி யாமா மியாமுற்று முன்மிகா.**

அல்வழி ஆமா மியா முற்று முன் மிகா

alvaḻi āmā miyā muṟṟu muṉ mikā

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### WORDS WITH _â AS FINAL

(The Hard initials) are not doubled after the words a, ma and miya and (the final â of negative) Finite Verbs.

## ஒப்புமைப் பகுதி

ஆவு மாவும் விளிப்பெயர்க் கிளவியும்
யாவென் வினாவும் பலவற் றிறுதியும்
ஏவல்குறித்த உரையசை மியாவும்
தன்தொழில் உரைக்கும் வினாவின் கிளவியோ
டன்றி அனைத்தும் இயல்பென மொழிப.

(தொல்.: 225)

அல்வழி யாமா மியாமுற் றிறுதி

யாவினா விவற்றுமுன் வல்லெழுத்து இயல்பே

(இ.வி.: 89)

ஆமா அல்வழி ஆஈறு முற்றும்
மியா இவைமுன் வலிமிகாது இயல்புமாகும்.

(தொ.வி.: 32)

ஆவு மாவு மழைப்பும் வினாவு
மியாவும் பலவு மிகாதியல் பாகும்

(மு.வீ.: 249)

## மயிலை நாதர்

எ–ன், எய்தியது விலக்குதல் நுதலிற்று.

இ–ள்.:– அல்வழிக்கண் ஆவும் [1]மாவுமாகிய இருபெயரும், மியா வென்னும் உரையசையும், முற்றுவினையுமான இவ் வாகார வீற்றின் முன் வல்லினம் இயல்பாய் முடியும், எ – று.

வ – று.:–

ஆகுறிய, மாகுறிய; சிறிய, தீய, பெரிய எனவும்; கேண்மியாகொற்றா; சாத்தா, தேவா, பூதா எனவும்; உண்ணா குதிரை, தின்னா குதிரை; செந்நாய், தகர், பன்றி எனவும் முறையே காண்க.

## சங்கர நமச்சிவாயர்

## சிவஞான முனிவர்

எ – னின், ஆகார ஈற்றுச் சொல்லுள் சிலவற்றிற்கு, *'க ச த ப மிகும்' என* எய்தியது ஒருமருங்கு விலக்குதல் நுதலிற்று.

இ–ள்.:– அல்வழிக்கண் ஆவும் மாவுமாகிய இருபெயரும், மியா என்னும் முன்னிலையசை இடைச்சொல்லும், ஆகார ஈற்று அஃறிணைப்பன்மை எதிர்மறை முற்றுவினையும் நிற்க இவற்றின் முன்வரும் வல்லினம் மிகா, எ – று.

உ – ம்.:–

ஆ குறிது, மா குறிது, சிறிது, தீது, பெரிது எனவும்; கேண்மியா கொற்றா, சாத்தா, தேவா, பூதா எனவும்; உண்ணா குதிரைகள், தின்னா குதிரைகள், செந்நாய்கள்,

---

பாட வேறுபாடு.:–

1. மாவுமென்னுமிவ்விரு

தகர்கள், பன்றிகள் எனவும் வரும்.

ஆமா என்ற துணையானே காட்டா எனவும் பொருள்தர இரட்டுற மொழிந்தமையான் ஆமாகுறிது, சிறிது, தீது, பெரிது என மிகாமையும்; முற்று முன் மிகா என்றமையான் அருத்தாபத்தியான் அவ் வினையாலணையும் பெயர்முன் உண்ணா குதிரைகள், தின்னாகுதிரைகள், செந்நாய்கள், தகர்கள், பன்றிகள் என மிகாமையும்; அவ் வினைமுற்று வினையெச்சமாயவற்றின் முன் உண்ணா கிடந்தன, தின்னா கிடந்தன, சென்றன, தந்தன, போயின என மிகாமையும் கொள்க. உண்ணாக் குதிரைகள், உண்ணாக் கிடந்தன எனப் பொதுவிதியான் மிகுமேல், எதிர்மறைப் பெயரெச்சமும் செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சமும் ஆம் என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், எய்தியது விலக்கல் கூறியது.

இ-ள்.:- **அல்வழி** - அல்வழிப் பொருட் புணர்ச்சிக்கண் வரும், **ஆ மா** - ஆவென்னும் பெயரும் மாவென்னும் பெயரும், **மியா** - முன்னிலை ஏவல்வினையைக் கருதி வரும் எதிர்முகமாக்கும் சொல்லினைச் சேர்ந்த மியாவென்னும் உரையசை இடைச்சொல்லும், **முற்று** - அஃறிணைப் பன்மைப் பொருளை யுணர்த்தும் ஆகார வீற்று எதிர்மறை முற்றுவினைச் சொல்லும், **முன் மிகா** - இச் சொற்களின் முன் வல்லினம் இயல்பாய் முடியும் என்றவாறு.

உ-ம்.:-

ஆ குறிது, மா குறிது, சிறிது, தீது, பெரிது, குறிய, சிறிய, தீய, பெரிய என ஒட்டி இயல்பாயினவாறு காண்க. கேண்மியா கொற்றா, சாத்தா, தேவா, பூதா என ஒட்டி இயல்பாயினவாறு காண்க. உண்ணா, தின்னா குதிரை, செந்நாய், தகர், பன்றி என இயல்பாயினவாறு காண்க.

ஆமா என்பதனை ஒரு சொல்லாக வைத்து முடிப்பினுமாம். ஆமா வென்பது காட்டா. ஆமா குறிது, சிறிது, தீது, பெரிது, குறிய, சிறிய, பெரிய என ஒட்டுக.

## விசாகப் பெருமாளையர்

இது, ஆகார வீற்றுட் சிலவற்றிற்கு எய்திய தொருமருங்கு விலக்குகின்றது.

**இ–ள்.:–** அல்வழி–அல்வழியில், ஆமா –ஆவுமாவுமாகிய விருபெயரும், மியா–மியா வென்னு முன்னிலை யசை யிடைச்சொல்லும், முற்று–ஆகார வீற்றஃறிணைப் பன்மை யெதிர்மறை முற்று வினையுமாகிய, முன்– இவற்றின் முன், மிகா–வருகிற வல்லினம் இயல்பாகும், எ–று.

உ–ம்.:–

ஆ குறிது–மா குறிது; சிறிது, தீது, பெரிது; எனவும், கேண்மியா–கொற்றா, சாத்தா, தேவா, பூதா, எனவும், உண்ணா குதிரைகள்; செந்நாய்கள், தகர்கள், பன்றிகள் என வரும். (இரட்டுறமொழிதலாற் காட்டுப்பசு வென்னும் பொருளைத் தருகிற ஆமா வென்பதன் முன்னும் ஆமாகுறிது என வியல்பாமெனக் கொள்க.)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

முன் "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தில் விதித்த ஆகாரவீற்றுட் சிலவற்றிற்குச் சிறப்புவிதி கூறுஞ் சூத்திரம்யாது?

உ–ம்.:–

அல்வழி யாமா மியா முற்று முன்மிகா.

(அல்வழி ஆ மா மியா முற்று முன்மிகா)

**இ–ள்.:–** அல்வழி ஆமா – அல்வழியில் ஆவும் மாவுமாகிய இருபெயரும், மியாமுற்று முன் மிகா – மியா என்னும் முன்னிலையசை இடைச்சொல்லும் ஆகாரவீற்றஃறிணைப் பன்மை யெதிர்மறைமுற்றுவினையுமாகிய இவற்றின் முன் வரும் வல்லினம் இயல்பாகும், எ–று.

அல்வழியில் ஆ மா என்பவற்றின் முன்வரும் வல்லினம் எவ்வாறு புணரும்?

"அல்வழி ஆமா முன்மிகா"

உ–ம்.:–

ஆகுறிது, மாகுறிது, சிறிது, தீது, பெரிது என அல்வழியில் ஆவுமாவுமாகிய இருபெயர் முன்னும் வலி இயல்பாயின. மா இங்கே விலங்கு.

மியாமுன் வல்லினம் எவ்வாறாம்?

"மியா முன்மிகா"

உ–ம்.:–

(2) கேண்மியா கொற்றா, கேண்மியா சாத்தா, தேவா பூதா என மியா என்னும் முன்னிலையசையிடைச்சொல் முன் வலி

இயல்பாயின.

ஆகாரவீற்றஃறிணைப் பன்மை எதிர்மறை முற்றுமுன் வல்லினம் எவ்வாறாம்?

"முற்று முன்மிகா"

(3) உண்ணா குதிரைகள், உண்ணா செந்நாய்கள், தகர்கள், பன்றிகள், என ஆகாரவீற்றஃறிணைப் பன்மை யெதிர்மறை முற்றுவினைமுன் வலி இயல்பாயின.

உண்ணாக் குதிரைகள் எனப் பெதுவிதியால் மிகுமாயின் தகரவீறு குறைந்த எதிர்மறைப் பெயரெச்சமானெக் கொள்க.

ஆமா என்ற மாத்திரமே காட்டுப்பசு எனவும் பொருள்பட இரட்டுற மொழிந்தமையால், ஆமா என்னும் பெயர் முன்னும் வலி மிகாமை கொள்க.

வ–று.:–

ஆமாகுறிது, ஆமாசிறிது. தீது, பெரிது என வரும்.

முற்றுமுன் மிகா எனவே, அருத்தாபத்தியால் அவ்வினையா லணையும் பெயர்முன்னும், அவ்வினைமுற்று வினையெச்சமா யவற்றின் முன்னும் அவ்வாறு மிகாமை கொள்க.

வ–று.:–

உண்ணாகிடந்தன, சென்றன, தந்தன, போயின எனவரும், இங்கே உண்ணா என்றது, வினையாலணையும் பெயராயின் உண்ணாதனவாகிய குதிரைகள் கிடந்தன எனவும், வினைமுற்று வினையெச்சமாயின், உண்ணாதனவாய்க் கிடந்தன எனவும், பொருள்படும். உண்ணாக் கிடந்தன எனப் பொதுவிதியால் மிகுமாயின், உண்டு எனப் பொருள்படுஞ் செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சமும், உண்ணாது எனப் பொருள்படுந் துவ்வீறு குறைந்த செய்யா என்னும் எதிர்மறை வினையெச்சமு மானெக் கொள்க.

இது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது ஒருமருங்கு விலக்கல்.

## முகவை இராமானுச கவிராயர்

இது ஆகார ஈற்றுச் சொற்களில் சிலவற்றிக்கு எய்தியது ஒரு பக்கம் விலக்குகின்றது.

**இ–ள்.:–** அல்வழி – அல்வழிச் சந்தியில், ஆ மா மியா – ஆவும் மாவும் மியா என்னும் இடைச்சொல்லும், முற்று–ஆகார ஈற்று முற்று வினைச்சொல்லுமாகிய, முன் – இந்த நான்கு சொற்களின் முன்னும், மிகா – (வல்லினம் வந்து புணரின்) அவை மிக்கு முடியாவாம், எ–று.

உ–ம்.:–

ஆகுறிது, மாகுறிது; சிறிது, தீது, பெரிது எனவும், கேண்மியாகொற்றா; சாத்தா, தேவா, பூதா, எனவும், உண்ணா குதிரைகள், செந்நாய்கள், தகர்கள், பன்றிகள் எனவும் வரும். 'ஆமா' என்ற மாத்திரமே காட்டுப்பசு எனவும் பொருள்பட இரட்டுற மொழிந்ததினாலே, ஆமாகுறிது; சிறிது, தீது, பெரிது என மிகாமையும், முற்று முன் மிகா எனவே அருத்தாபத்தியால், அந்த வினையாலணையும் பெயர் முன்–உண்ணாகிடந்தன; சென்றன, தந்தன, போயின என மிகாமையும், அவ் வினைமுற்று வினையெச்ச மாயவற்றின் முன்னும் அவ்வாறு மிகாமையுங் கொள்க. உண்ணா கிடந்தன என்றபோது வினையாலணையும் பெயராயின், உண்ணாதனவாகிய குதிரைகள் கிடந்தன எனவும், வினைமுற்று வினையெச்சமாயின், உண்ணாதனவாய்க் கிடந்தன எனவும் விரியும். உண்ணாக்குதிரைகள், உண்ணாக்கிடந்தன எனப் பொது விதியால் மிகுமாயின், ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமும், செய்யா வென்னும், வாய்பாட்டு வினையெச்சமுமா மென்க. உண்ணாக்கிடந்தன என்பதற்கு உண்டுகிடந்தன என்பது பொருள். வல்லினம் மிகாவென முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :–** அல்வழி – அல்வழிப்புணர்ச்சியில், ஆ மா – ஆ என்னும் பெயரும் மா என்னும் பெயரும், மியா – மியா என்னும் முன்னிலையசை இடைச்சொல்லும், முற்று – (ஆகாரவீற்று அஃறிணைப் பன்மை எதிர்மறை) வினைமுற்றுமாகிய இவற்றின், முன் –, மிகா – (வருகிற வல்லினம்) இயல்பாகும்.

(ஆ–பசு, மா – விலங்கின் பொதுப்பெயர்).

உதாரணம்:–

ஆ + குறிது = ஆகுறிது.

மா + சிறிது = மாசிறிது.

(ஆமா முன் வலியியல்பாயிற்று.)

கேண்மியா + புலவா = கேண்மியா புலவா.

(மியா முன் வலி யியல்பாயிற்று)
உண்ணா + குதிரைகள் = உண்ணா குதிரைகள்(முற்றுமுன் வலி யியல்பாயிற்று.)

குறிப்பு : –

இரட்டுறமொழிதலால் காட்டுப்பசு என்னும் பொருளைத் தருவதாகிய 'ஆமா' என்பதன் முன்னும் ஆமாகுறிது, ஆமாசிறிது என இயல்பா மெனக்கொள்க.

'முற்றுமுன் மிகா' எனவே, அருத்தாபத்தியால் அவ்வினை யாலணையும் பெயர் முன்னும், அவ்வினைமுற்று வினையெச்சமானவற்றின் முன்னும் அவ்வாறு மிகாமையுங் கொள்க.

உ–ம் :–

உண்ணாகிடந்தன.

இங்கே, 'உண்ணா' என்றது வினையாலணையும் பெயராயின் 'உண்ணாதனவாகிய குதிரைகள் கிடந்தன' எனவும்; வினைமுற்று வினையெச்சமாயின், 'உண்ணாதனவாய்க்கிடந்தன' எனவும் பொருள்படும். இவ்வாய் பாட்டுச்சொல் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமும், ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சமும், உடன்பாட்டு இறந்தகால வினையெச்சமுமாயின் பொதுவிதியால் வலிமிகும் என்றறிக.

உ–ம் :–

உண்ணாக்குதிரைகள் – (உண்ணாத.)
உண்ணாக்கிடந்தன

– (உண்ணாமல்)
உண்ணாக்கிடந்தான் – (உண்டு.)

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:–** அல்வழி ஆ மா – அல்வழியில் ஆவும் மாவுமாகிய இருபெயரும், மியா–மியா என்னும் முன்னிலையசை யிடைச் சொல்லும், முற்று–ஆகாரவீற்றஃறிணைப்பன்மை யெதிர்மறை முற்று வினையுமாகிய, முன் மிகா–இவற்றின் முன் வரும் வல்லினம் இயல்பாகும், எ – று.

உ–ம்.:–

(1) ஆகுறிது, மாகுறிது, சிறிது, தீது, பெரிது என

அல்வழியில் ஆவு மாவுமாகிய இருபெயர் முன்னும் வலி இயல்பாயின. மா இங்கே விலங்கு.

(2) கேண்மியா கொற்றா, சாத்தா, தேவா, பூதா என மியா என்னும் முன்னிலை யசையிடைச்சொன் முன் வலி இயல்பாயின.

(3) உண்ணா குதிரைகள், செந்நாய்கள், தகர்கள், பன்றிகள் என ஆகார வீற்றஃறிணைப் பன்மை யெதிர்மறை முற்றுவினை முன் வலி இயல்பாயின. உண்ணாக் குதிரைகள் எனப் பொதுவிதியால் மிகுமாயின், தகர வீறுகுறைந்த எதிர்மறைப் பெயரெச்சமா மெனக் கொள்க. ஆமா என்ற மாத்திரமே காட்டுப்பசு எனவும் பொருள்பட இரட்டுறமொழிந்தமையால் ஆமா என்னும் பெயர் முன்னும் வலி மிகாமை கொள்க.

வ – று.:–

ஆமாகுறிது, சிறிது, தீது, பெரிது என வரும்.

முற்று முன் மிகா எனவே, அருத்தாபத்தியால், அவ் வினையாலணையும் பெயர் முன்னும், அவ் வினைமுற்று வினையெச்சமாயவற்றின் முன்னும் அவ்வாறு மிகாமை கொள்க.

வ – று.:–

உண்ணாகிடந்தன, சென்றன, தந்தன, போயின என வரும். இங்கே, உண்ணா என்றது, வினையாலணையும் பெயராயின், உண்ணாதனவாகிய குதிரைகள் கிடந்தன எனவும், வினைமுற்று வினையெச்சமாயின், உண்ணா தனவாய்க் கிடந்தன எனவும், பொருள்படும். உண்ணாக் கிடந்தன எனப் பொது விதியால் மிகுமாயின், உண்டு எனப் பொருள்படுஞ் செய்யா என்னும் வாய்பாட்டு வினை யெச்சமும்; உண்ணாது எனப் பொருள்படுந் துவ்வீறு குறைந்த செய்யா என்னும் எதிர்மறை வினையெச்சமுமா மெனக் கொள்க.

இது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் **எய்தியது ஒரு மருங்கு விலக்கல்.**

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள்.:– அல்வழி ஆமா** – அல்வழியில் ஆவும் மாவுமாகிய இருபெயரும், – **மியா** – மியா என்னும் முன்னிலையசையிடைச் சொல்லும், – **முற்று** – ஆகாரவீற்றஃறிணைப்பன்மை யெதிர்மறை முற்றுவினையுமாகிய,

– முன்மிகா – இவற்றின் முன் வரும் வல்லினம் இயல்பாகும். எ–று.

உ–ம்:–

(1) ஆகுறிது, மாகுறிது, சிறிது, தீது, பெரிது என அல்வழியில் ஆவுமாவுமாகிய இருபெயர்முன்னும் வலி இயல்பாயின.

(2) கேண்மியா கொற்றா, சாத்தா, தேவா, பூதா என மியா என்னும் முன்னிலை யசையிடைச் சொன்முன் வலி இயல்பாயின.

(3) உண்ணா குதிரைகள், செந்நாய்கள், தகர்கள், பன்றிகள் என ஆகார வீற்றஃறிணைப் பன்மை யெதிர்மறை முற்று வினைமுன்வலி இயல்பாயின.

உண்ணாக்குதிரைகள் எனப் பொதுவிதியால் மிகுமாயின், தகர வீறு குறைந்த எதிர்மறைப் பெயரெச்சமாமெனக் கொள்க.

ஆமா என்ற மாத்திரமே காட்டுப்பசு எனவும் பொருள்பட இரட்டுறமொழிந்தமையால், ஆமா என்னும் பெயர் முன்னும் வலிமிகாமை கொள்க.

வ–று:–

ஆமாகுறிது, சிறிது, தீது, பெரிது என வரும்.

முற்றுமுன் மிகா எனவே, அருத்தாபத்தியால், அவ்வினையாலணையும் பெயர் முன்னும், அவ்வினைமுற்று வினையெச்சமாயவற்றின் முன்னும் அவ்வாறு மிகாமை கொள்க.

வ–று:–

உண்ணாகிடந்தன, சென்றன, தந்தன, போயின எனவரும். இங்கே உண்ணா என்றது, வினையாலணையும் பெயராயின், உண்ணாதனவாகிய குதிரைகள் கிடந்தன. எனவும். பொருள்படும். உண்ணாக் கிடந்தன எனப் பொதுவிதியால் மிகுமாயின், உண்டு எனப் பொருள்படுஞ் செய்யா என்னும் வாய்பாட்டு வினை யெச்சமும், உண்ணாது எனப் பெருள்படுந் துவ்வீறு குறைந்த செய்யா என்னும் எதிர்மறை வினையெச்சமு மாமெனக் கொள்க.

இங்கே மா என்றது மரமன்று விலங்கேயாம். முற்றெனப் பொதுவாகக் கூறினும், ஆகாரவீற்றுச் சிறப்புவிதி கூறுமிடமாதலின் ஆகாரவீற்று முற்றென்பது அதிகாரத்தால் விளங்கியது.

இது 'இயல்பினும் விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது ஒரு மருங்கு விலக்கல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– அல்வழி – அல்வழிப் புணர்ச்சியில், ஆ – ஆ என்னும் பெயர்க்கும், மா – மா என்னும் பெயர்க்கும், மியா – மியா என்னும் முன்னிலையசை இடைச்சொல்லுக்கும், முற்று – (ஆகார வீற்று எதிர்மறைப் பலவின்பால்) வினைமுற்றுக்கும், முன் – முன்னே, மிகா–(வருகிற வல்லினம்) இயல்பாகும்; எ–று.

'முற்று' எனப் பொதுவாகக் கூறினும், ஆகார வீற்றுச் சிறப்புவிதி கூறுமிடமாதலால், ஆகார வீற்று முற்றென்பது அதிகாரத்தால் விளங்கியது.

உ–ம்.:–

ஆ குறிது, மா சிறிது – ஆ, மா, முன் வலி இயல்பாயிற்று.

கேண்மியா, தேவா – மியா முன் வலி இயல்பாயிற்று.

உண்ணா பன்றிகள் – முற்று முன் வலி இயல்பாயிற்று.

இரட்டுறமொழிதலால், காட்டுப்பசு என்னும் பொருளைத் தருகிற ஆமா என்பதன் முன்னும் ஆமா குறிது, ஆமா சிறிது, என வலி இயல்பாம் என்க.

'முற்றுமுன் மிகா' எனவே, அருத்தாபத்தியால் – அவ் வினையாலணையும் பெயரின்முன்னும் அவ் வினைமுற்று வினையெச்ச மானவற்றின் முன்னும் மிகாமையும் கொள்க.

(அருத்தாபத்தியாவது – ஒருபொருளைக் கூறிய மாத்திரத்தில் அதன்குறிப்பைக் கொண்டு கூறப்படாத மற்றொரு பொருளையும் அறிவது.)

உ–ம்.:–

உண்ணா கிடந்தன, சென்றன, தந்தன, போயின. இங்கே, உண்ணா என்றது, வினையாலணையும் பெயராயின், உண்ணாதனவாகிய பிராணிகள் கிடந்தன எனவும்; வினைமுற்று வினையெச்சமாயின், உண்ணா தனவாய்க் கிடந்தன எனவும் பொருள்படும்.இவ் வாய்பாட்டுச் சொல், ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்ச மாயின் உண்ணாக் குதிரை என்றும், ஈறுகெட்ட எதிர்மறை வினை யெச்சமாயின் உண்ணாக் கிடந்தன என்றும், உடன்பாட்டு இறந்தகால வினையெச்ச மாயின் உண்ணாக்கிடந்தன என்றும் பொதுவிதியால் வலிமிக்கு வருமென்று அறிக. இவற்றிற்கு முறையே உண்ணாத, உண்ணாமல், உண்டு

என்று பொருள். உண்ணாது என்ற ஒன்றன்பால் முற்று உண்ணா எனத் தொகுத்தல் விகாரப்பட்டு வரும்பொழுது அதன்முன் வலிஇயல்பா மென உணர்க.

## பவானந்தம் பிள்ளை

இ-ள்.:- அல்வழி ஆ மா - அல்வழியில் ஆவும் மாவுமாகிய இருபெயரும், மியா - மியா என்னும் முன்னிலையசையிடைச் சொல்லும், முற்று - (ஆகாரவீற் றஃறிணைப் பன்மை யெதிர்மறை, முற்று வினையுமாகிய, முன் மிகா - (இவற்றின்) முன் வரும் வல்லினம் இயல்பாகும். எ-று,

உ-ம்.:-

(1) ஆ + குறிது = ஆகுறிது, மா + சிறிது = மாசிறிது - என அல்வழியில் ஆவும் மாவுமாகிய இருபெயர் முன்னும் வலி இயல்பாயின. (மா இங்கே விலங்கு.)

(2) கேண்மியா + கொற்றா = கேண்மியா கொற்றா - என மியா என்னும் முன்னிலையசை யிடைச்சொன் முன் வலி இயல்பாயிற்று.

(3) உண்ணா + குதிரைகள் = உண்ணாகுதிரைகள் - என ஆகாரவீற்று அஃறிணைப் பன்மை யெதிர்மறை முறறு வினைமுன் வலி இயல்பாயிற்று. (உண்ணாக் குதிரைகள் எனப் பொதுவிதியால் மிகுமாயின, தகரவீறு குறைந்த எதிர்மறைப் பெபரெச்சமாமெனக் கொள்க.)

'ஆமா' என்ற மாத்திரமே காட்டுப்பசு எனவும் பொருள்பட இரண்டுறமொழிந்தமையால், ஆமா என்னும் பெயர் முன்னும் வலி மிகாமை கொள்க.

உ-ம்.:-

ஆமா + குறிது = ஆமாகுறிது, ஆமா + சிறிது = ஆமா சிறிது.

'முற்றுமுன் மிகா' எனவே, அருத்தாபத்தியால், அவ்வினையாலணையும் பெயர்முன்னும், அவ் வினைமுற்று வினையெச்சமாயவற்றின் முன்னும் அவ்வாறு மிகாமை கொள்க.

உ-ம்.:-

உண்ணா + கிடந்தன = உண்ணா கிடந்தன - அங்கே, உண்ணா என்றது வினையாலணையும் பெயராயின், உண்ணாதனவாகிய குதிரைகள் கிடந்தன எனவும்,

வினைமுற்று வினையெச்சமாயின், உண்ணாதனவாய்க் கிடந்தன எனவும் பொருள்படும். உண்ணாக்கிடந்தன எனப் பொதுவிதியால் (சூ–165) மிகுமாயின், உண்டு எனப் பொருள்படுஞ் செய்யா என்னும் வாய்பாட்டுவினை யெச்சமும், உண்ணாது எனப் பொருள்படுந் துவ்வீறு குறைந்த செய்யா என்னும்எதிர்மறை வினையெச்சமுமா மெனக் கொள்க.

இது "இயல்பினும் விதியினும்" என்னும் 165–வது சூத்திரத்தால் எய்தியது ஒரு மருங்கு விலக்கல்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள்.:–** அல்வழி –அல்வழியில், **ஆ மா** – ஆவு மாவுமாகிய இரு பெயரும், **மியா** – மியா என்னும் முன்னிலையசை இடைச்சொல்லும், **முற்று** – (ஆகாரவீற்று அஃறிணைப்பன்மை எதிர்மறை) முற்று வினையுமாகிய, **முன்** – (இவற்றின்) முன், **மிக–** (வருகிற வல்லினம்) இயல்பாகும். எ–று.

**பொ–ரை.:–** அல்வழியில் ஆவும் மாவும் ஆகிய இருபெயரும், மியா என்னும் முன்னிலையசை இடைச்சொல்லும், (ஆகரவீற்று அஃறிணைப் பன்மை எதிர்மறை) முற்று வினையுமாகிய (இவற்றின்) முன் (வருகிற வல்லினம்) இயல்பாகும்.

**உ–ம்.:–**

ஆ + குறிது = ஆகுறிது.
+ சிறிது = ஆசிறிது.
+ தீது = ஆதீது.
+ பெரிது = ஆபெரிது.
மா + குறிது = மாகுறிது.
+ சிறிது = மாசிறிது.
+ தீது = மாதீது.
+ பெரிது = மாபெரிது.
கேண்மியா + கொற்றா = கேண்மியாகொற்றா.
+ சாத்தா = கேண்மியாசாத்தா.
+ தேவா = கேண்மியாதேவா.
+ பூதா = கேண்மியாபூசா.
உண்ணா + குதிரைகள் = உண்ணாகுதிரைகள். – முற்றுமுன்

வலி இயல்பாயின.

+ செந்நாய்கள் = உண்ணாசெந்நாய்கள்

+ தகர்கள் = உண்ணாதகர்கள்.

+ பன்றிகள் = உண்ணாபன்றிகள்.

இரட்டுற மொழிதலால் காட்டுப்பசு என்னும் பொருளைத் தருகிற ஆமா என்பதன் முன்னும் ஆமாகுறிது, ஆமாசிறிது, ஆமாதீது, ஆமாபெரிது என இயல்பாம் எனக் கொள்க.

'முற்றுமுன்மிகா' எனவே அருத்தாபத்தியால் அவ் வினையாலணையும் பெயரின்முன்னும், அவ் வினைமுற்று வினையெச்ச மானவற்றின் முன்னும் இயல்பாம் எனவுங் கொள்க.

(அருந்தாபத்தியாவது ஒரு பொருளைக் கூறிய மாத்திரத்தில் அதன் குறிப்பைக்கொண்டு கூறப்படாத மற்றொரு பொளையும் அறிவது.)

உண்ணா கிடந்தன, சென்றன, தந்தன, போயின. இங்கே, உண்ணா என்றது வினையாலணையும் பெயராயின் உண்ணாதனவாகிய பிராணிகள் கிடந்தன எனவும், வினைமுற்று வினையெச்சமாயின் உண்ணாதனவாய்க் கிடந்தன எனவும் பொருள்படும். இவ் வாய்பாட்டுச் சொல் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாயின் உண்ணாக் குதிரை எனவும், ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்ச மாயின் உண்ணாக் கிடந்தன எனவும், உடன்பாட் டிறந்தகால வினையெச்சமாயின் உண்ணாக் கிடந்தன எனவும், பொதுவிதியால் வலிமிக்கு வருமெனக் கொள்க.

இவற்றிற்கு முறையே உண்ணாத, உண்ணாமல், உண்டு எனவும் பொருள்படும். உண்ணாது என்ற ஒன்றன்பால் முற்று உண்ணா எனத் தொகுத்தல் விகாரம் பெற்று வரும்பொழுது அதன்முன் வலி இயல்பாகு மென அறிக.

## கா.நமச்சிவாய முதலியார்

**அல்வழி** – அல்வழியில், **ஆ மா** – ஆவும் மாவுமாகிய இருபெயரும், **மியா** – மியா என்னும் முன்னிலையசையிடைச் சொல்லும், **முற்று** – ஆகாரவீற்றஃறிணைப் பன்மை யெதிர்மறை முற்று வினையுமாகிய, **முன்** – இவற்றின் முன், **மிகா** – வருகிற வல்லினம் இயல்பாகும்.

**உதாரணம்:–**

| | | | | |
|---|---|---|---|---|
| ஆ | + | குறிது | = | ஆகுறிது |
| மா | + | சிறிது | = | மாசிறிது |

ஆ மா முன் வலி இயல்பு

கேண்மியா + தேவா = கேண்மியா தேவா

மியா முன் வலி இயல்பு

உண்ணா + குதிரைகள் = உண்ணாகுதிரைகள்

முற்று முன் வலி இயல்பு

இரட்டுற மொழிதலால், காட்டுப்பசு என்னும் பொருளைத் தருகிற ஆமா என்பதன் முன்னும் ஆமா குறிது, ஆமா சிறிது என இயல்பாம் எனக் கொள்க.

'முற்றுமுன் மிகா' எனவே, அருத்தாபத்தியால், அவ்வினை யாலணையும் பெயர்முன்னும், அவ்வினை முற்று வினையெச்சமானவற்றின் முன்னும் அவ்வாறு மிகாமை கொள்க.

உதாரணம்:–

| | | | | |
|---|---|---|---|---|
| உண்ணா | + | கிடந்தன | = | உண்ணா கிடந்தன |
| | + | சென்றன | = | உண்ணா சென்றன |
| | + | தந்தன | = | உண்ணா தந்தன |
| | + | போயின | = | உண்ணா போயின |

இங்கே உண்ணா என்றது வினையாலணையும் பெயராயின் உண்ணாதனவாகிய குதிரைகள் கிடந்தன எனவும் ; வினைமுற்று வினையெச்சமாயதெனின், உண்ணாதன வாய்க் கிடந்தன எனவும் பொருள்படும்.

இவ்வாய்பாட்டுச் சொல் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாயின் 'உண்ணாக்குதிரை, என்றும், ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சமாயின் 'உண்ணாக் கிடந்தான்' என்றும், உடன்பாட்டு இறந்தகால வினை யெச்சமாயின் 'உண்ணாக் கிடந்தான்' என்றும் பொது விதியால் வலிமிகுந்து வருமென அறிக. இவற்றிற்கு முறையே உண்ணாத, உண்ணாமல், உண்டு எனப் பொருள் கொள்க.'

## மோசசு பொன்னையா

அல்வழிப் புணர்ச்சியில் ஆ, மா என்னும் பெயர்களையும், மியா என்னும் முன்னிலை அசை இடைச்சொல்லையும், ஆகார ஈற்று, அஃறிணைப்பன்மை எதிர்மறை வினைமுற்றினையும் அடுத்து வல்லினம் வரின் இயல்பாகும்,

எ—று.

எ—டு.:—

ஆ குறிது, ஆமா குறிது — ஆ மா முன் வலி இயல்பாயிற்று.

கேண்மியா தேவா — மியா முன் வலி இயல்பாயிற்று.

உண்ணா பன்றிகள் — முற்றுமுன் வலி இயல்பாயிற்று.

இவ்வாறன்றி, உண்ணாப்பன்றி எனப் புணரின் அது முற்று வினையன்று; ஈறு கெட்ட எதிர்மறைப்பெயரெச்சம் எனக் கொள்க. இரட்டுறமொழிதல் என்னும் உத்தியால் ஆமா குறிது, ஆமாசிறிது என முடிதலையும் கொள்க ஆமா — காட்டுப்பசு.

உண்ணாகிடந்தன எனப் புணர்ந்து உண்ணாதனவாகிய அவை கிடந்தன எனவும், உண்ணாதனவாய் அவைகிடந்தன எனவும் பொருள் கொள்ளுமாறு முறையே வினையாலணையும் பெயராகவும், முற்றெச்சமாகவும் நின்று இயல்பு புணர்ச்சியாய் முடிவனவற்றையும் 'முற்றுமுன்மிகா' என்றதன் அருத்தாபத்தியாகக் கொள்க. உண்ணாக் கிடந்தன எனப் புணரின், அது செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சமாகவும், துவ்வீறு குறைந்த எதிர்மறை வினையெச்சமாகவும் கொள்ளப்படும் ஆதலின் ஈண்டைக்கு எய்ததாயிற்று.

(21)

171. குறியதன் கீழாக் குறுகலு மதனோ
டுகர மேற்றலு மியல்புமாந் தூக்கின்.

குறியதன் கீழாக் குறுகலும் அதனோடு
உகரம் ஏற்றலும் இயல்பும் ஆம் தூக்கின்

kuṟiyataṉ kīḻāk kuṟukalum ataṉōṭu
ukaram ēṟṟalum iyalpum ām tūkkiṉ

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Final â in Poetry

In poetry, final â preceded by a short vowel may be shortened. and an u may or may not be added to it; (while in a few cases, it may not be changed at all).

ஒப்புமைப் பகுதி

குறியதன் இறுதிச் சினைகெட உகரம்
அறிய வருதல் செய்யுளுள் உரித்தே

(தொல்.: 235)

குறியதன் கீழாக் குறுகலு மதனோ
டுகர மேற்றலு மியல்புமாந் தூக்கின்

(இ.வி.: 90)

தனிக்குறில் ஈற்று ஆத்தகும் பெயர் செய்யுட்கே
ஆ அவ்வாதலும் அதனோடு உவ் அணையலும் ஆம்

(தொ.வி.: 33)

குறியதன் கீழாக் குறுகலு மதனோ
டுகர மேற்றலு மியல்புமாந் தூக்கின்

(மு.வீ.: 251)

## மயிலை நாதர்

எ–ன், செய்யுட்கு ஆவதோர் முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– குற்றெழுத்தின் கீழ்நின்ற ஆகாரம் குறுகலும் அக் குறுகலுடனே இறுதி உகரம் வருதலும் அவ்விரண்டு மின்றி இயல்பாதலும் என்னும் இம் மூன்று விதியும் செய்யுளுள் ஆம், எ – று.

வ–று.:–

"சுறமறிவனதுறையெல்லாம்", "நிலவிரிகானல்வாய்" எனவும், "இறவுப்புறத்தன்ன", "சுறவுக்கோட்டன்ன" எனவும். "'நீலநீர்ச்சுறாவினம்போல்", "நிலாவணங்கு நேர்மணன்மே னின்று" எனவும் முறையே காண்க.

ஈண்டு இயல்பு ஐய மறுத்தற் குரைத்தாரென்க.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், ஆகார ஈற்றுள் சில சொல்லினது இறுதிக்கு எய்தாதன எய்துவித்தலும், அவ்வழி வருதோர் ஐயம் அறுத்தலும் நுதலிற்று.

இ – ள்.:– குற்றெழுத்தின் கீழ் நின்ற ஆகாரம் குறுகலும், அக் குறுகலுடனே உகரம் பெறுதலும், அவ்விரண்டும் இன்றித் தன்னியல்பில்

---

பாட வேறுபாடு.:–

1. நிலாசசுசுறாவினமபொனபொனறன

நிற்றலும் ஆகிய மூன்று விதியும் பெறும் செய்யுட்கண், எ – று.

உ–ம்.:–

"சுறமறிவன துறைபெல்லாம்"
"நிலவிரி கானல்வாய்" எனவும்,
"இறவுப் புறத்தன்ன"
"சுறவுக்கோட்டன்ன"
"மருவினென்செய்புமோ நிலவு" எனவும்,
"நிலாவணங்கு வெண்மணன் மேனின்று"
"நெடிய கழியும் இரா" எனவும் முறையே காண்க.

ஈண்டு இயல்பு ஐயமறுத்தற்கு உரைத்தார் என்க. இம் மூன்றுமாம் தூக்கின் எனவே, வழக்கில் இரண்டும் ஒன்றும் ஆம் என்றாராயிற்று.

வ–று.:–

உதித்தது நிலவு, நிலா; கண்டேன் கனவு, கனா எனக் குறுகுதலோடு உகரம் ஏற்றலும் தன்னியல்பும் ஆகிய இரண்டும் வந்தன. தரா, மிடா எனத் தன்னியல்பு ஒன்றுமாய் நின்றன.

இவ் விகாரங்கள் அல்வழி வேற்றுமைப் புணர்ச்சியான் வந்தன அல்ல என்று ஐயமறுத்தற்குக் கூறப்பட்டன என்க. இவ்வாறு வருவன எல்லாம் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** ஆகார வீற்றுள் சிலவற்றிற்குச் செய்யுள் முடிவு கூறியது.

**இ–ள்.: குறியதன் கீழாக் குறுகலும்** – குற்றெழுத்தின் இறுதிக்கண் நின்ற ஆகாரத்தினது இரண்டு மாத்திரையிலே ஒரு மாத்திரை கெட்டு அது அகரமாய் நிற்றலும், **அதனோடுகர மேற்றலும்,** – அந்த அகரத்துடனே இறுதியுகரம் வருதலும், **இயல்புமாம்** – இவ் விரண்டு விதியு மின்றி இயல்பாதலும், **தூக்கின்** – இம் மூவிதியும் செய்யுளிடத்து உரித்தாம், எ–று.

உ–ம்.:–

"சுறமறிவன துறையெல்லாம்", நிலவிரி கானல்வாய்" எனவும் "இறவுப் புறத்தன்ன", "சுறவுக் கோட்டன்ன", "நிலாச் சுறவினும் பொன் போன்றன", "நிலாவணங்கு மென்மணன்மே னின்று" என முறையே காண்க.

ஈண்டு இயல்பு ஐயமறுத்தற்கு உரைத்தார்.

## விசாகப் பெருமாளையர்

**இது,** ஆகார வீற்றுட் சிலசொல்லிற்கு எய்தாதன வெய்துவித்தலும் அவ்விடத்து வருவதோரைய மொழித்தலுஞ் சொல்லுகின்றது.

**இ–ள்.:–** குறியதன் **கீழா**–குற்றெழுத்தின் கீழ் நின்ற ஆகாரம், **குறுகலும்**–அகரமாதலும், **அதனோடு**–அவ்வகரமாதலுடனே, **உகர மேற்றலும்**–உகரம் பெறுதலும் இயல்பும் அவ் விரண்டு மில்லாம லியபாதலும் ஆகிய மூன்று விதியும், **ஆம்**–ஆகும், **தூக்கின்**–பாட்டினிடத்து, எ–று.

**உ–ம்.:–**

"நிலவிரிகானல்" "மருவினென் செய்யுமோ நிலவு"
"நிலாவணங்கு வெண்மணன் மேனின்று" என வரும்
(செய்யுளிலே மூன்றுமா மெனவே இரா–இரவு, புறா–புறவு,
சுறா–சுறவு என வியல்பும், குறுகி யுகர மேற்றலும் வழக்கில்
வருமெனக் கொள்க.)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஆகாரவீற்றுட் சிலவற்றிற்குச் செய்யுண்முடிபு கூறுஞ் சூத்திரம் யாது?

குறியதன் கீழாக் குறுகுலு மதனோ

டுகர மேற்றலு மியல்புமாந் தூக்கின்.

(குறியதன் கீழ் ஆக் குறுகலும் அதனோடு

உகரம் ஏற்றலும் இயல்பும் ஆம் தூக்கின்)

**இ–ள்.:–** குறியதன் **கீழ் ஆக் குறுகலும்** – குற்றெழுத்தின் கீழ் நின்ற ஆகாரம் அகரமாதலும், **அதனோடு உகரம் ஏற்றலும்** –அவ்வகரமாதலுடனே உகரம் பெறுதலும், **இயல்பும் ஆம் தூக்கின்** – அவ்விரண்டுமின்றித் தன்னியல்பின் நிற்றலுமாகிய மூன்றுவிதியும் ஆகும் பாட்டினிடத்து, எ–று.

நிலா, சுறா, இரா என்பன செய்யுளிலே நில, சுற, இர
எனக் குறுகியும், நிலவு, சுறவு, இரவு எனக் குறுகலோடு
உகரம் பெற்றும், இவ்வாறின்றி நிலா, சுறா, இராவென
இயல்பாயும் வருமென்பது கருத்து.

**உ–ம்.:–**

"நிலவிரிகானல்வாய் நின்று." நிலா விரி; (குறுகல்.)
"மருவினென்செய்யுமோ நிலவு". நிலா: (குறுகலோடு

உகரமேற்)

"நிலாவணங்கு வெண்மணன்மேனின்று"
(இயல்புறல்.)

வழக்கின்கண்ணே இம்மூன்றனுள் எவ்விதி பெறும்?

செய்யுளில் இம்மூன்றுமாமெனவே, வழக்கில் இரண்டும் ஒன்றுமாம் என்றாராயிற்று.

வ–று.:–

உதித்தது நிலவு, உதித்தது நிலா; கண்டேன் கனவு, கண்டேன் கனா எனக் குறுகலோடு உகரமேற்றலுந் தன்னியல்புமாகிய இரண்டும் வந்தன. தரா, மிடா எனத் தன்னியல் பொன்றுமாய் நின்றன. இம்மூன்றுமே யன்றி அம்முப் பெறுதலுமுண்டு.

உ–ம்.:–

"நறவங்கண்ணி நற்போர்ச்செம்பியன்" "குரவநீடிய கொன்றையுங்கானல்" என்பன ஆகாரங்குறுகி அம்முப்பெற்றமை காண்க.

ஆக் குறுகலும் அதனோடுகரமேற்றலுமாம் என்றது எய்தாத எய்துவித்தல்; இயல்புமாம் என்றது அவ்விடத்து வருவதோரையமறுத்தல்.

## முகவை இராமானுச கவிராயர்

இது நிலைமொழிக்கு எய்தாதது எய்துவித்தலும், ஆங்கு வருதோரைய மறுத்தலு முணர்த்திற்று.

இ–ள்.: குறியதன் கீழா–குற்றெழுத்தின் பின்னின்ற ஆகாரம், **குறுகலும்** – குறுகி அகர ஈறாய் நிற்றலும், **அதனோடு** – அக் குறுகுதலுடனே, **உகர மேற்றலும்** – உகரச் சாரியை பெறுதலும், **இயல்புமாந் தூக்கின்** – அந்த இரண்டு மன்றித் தன்னியல்பாய் நிற்றலுமாகிய மூன்று விதிகளுமாம் செய்யுளிடத்து. எ–று.

எனவே வழக்கிடத்து இரண்டும் ஒன்றுமா மென்றாராயிற்று.

உ–ம்.:–

சுறா– 'சுறமறிவனதுறையெல்லாம்', நிலா–'நிலவிரி கானல் வாய்' எனவும், இறா– 'இறவுப் புறத்தன்ன', சுறா– 'சுறவுக்கோட்டன்ன', நிலா– 'மருவிலென் செய்யுமோ நிலவு' எனவும், 'நிலா வணங்கு வெண்மணன்மே னின்று', 'நெடிய கழியு மிரா' எனவுஞ் செய்யுளிடத்து மூன்று விதிகளும்

முறையே வருதல் காண்க. இங்கே இயல்பு ஐயமறுத்தற்கு உரைத்தாரெனக் காண்க. உதித்தது நிலவு - நிலா, கண்டேன் கனவு-கனா எனக் குறுகி உகரமேற்றலும் தன்னியல்புமாகிய இரண்டும், தரா-மிடா என்பன தன்னியல்பு ஒன்றும் வழக்கிடத்து வந்தன. பிறவுமன்ன. 'நறவங் கண்ணி நற்போர்ச் செம்பியன்', 'குரவ நீடிய கொன்றையங் கானல்' என்பன ஆகாரங் குறுகியவழி அம்முச் சாரியை பெறுதலுரையிற் கொள்க. இந்த விகாரங்கள் அல்வழி வேற்றுமைப் புணர்ச்சியால் வந்தன அல்ல வென்று ஐய மறுத்தற்குக் கூறப்பட்டன வென்க.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

உரை :- **குறியதன்கீழ் ஆ** - குற்றெழுத்தின்கீழ் நின்ற ஆகாரம், **குறுகலும்** - அகரமாகக் குறுகுதலும், **அதனோடு** - அவ்வாறு குறுகுதலுடனே, **உரகம் ஏற்றலும்** - உகரம் பெறுதலும், **இயல்பும்** - (அவ்விரண்டுமின்றி) இயல்பாதலும் (ஆகிய மூன்று விதியும்), **தூக்கின்** - பாட்டினிடத்து, **ஆம்** - ஆகும்.

உ-ம் :-

"நிலவிரிகானல்" - குறியதன்கீழ் ஆ குறுகிற்று.
"என்செய்யுமோ நிலவு" - குறுகி உகரம் ஏற்றது.
"நிலாவணங்கு' - இயல்பாயிற்று.

குறிப்பு : -

செய்யுளில் இம்மூன்றும் ஆமெனவே, வழக்கில் இரண்டும் ஒன்றும் ஆகுமென்பது பெறப்படும். குறுகி உகரமேற்காமல் 'நில' என நிற்றல் வழக்கில் இல்லை.

உ-ம் :-

நிலவு, நிலா; கனவு, கனா - குறுகி உகரமேற்றும் இயல்புமாயிற்று.

தரா, மிடா - இயல்புமாத்திரம் ஆயிற்று.

## ஆறுமுக நாவலர்

இ-ள்.:- **குறியதன் கீழ் ஆக் குறுகலும்** - குற்றெழுத்தின் கீழ் நின்ற ஆகாரம் அகரமாதலும், **அதனோடு உகரம் ஏற்றலும்** - அவ்வகரமாதலுடனே உகரம் பெறுதலும், **இயல்பும்**-அவ்விரண்டு மன்றித் தன்னியல்பின் நிற்றலுமாகிய மூன்று விதியும், **ஆம் தூக்கின்**-ஆகும் பாட்டினிடத்து, எ-று.

உ—ம்.:—

நிலவிரி கானல்வாய் நின்று. . . நிலாவிரி:—(குறுகல்)

மருவினென் செய்புமோ நிலவு. . . நிலா: (குறுகலோடு உகர மேற்றல்) நிலாவணங்கு வெண்மணன்மேனின்று (இயல்பு.)

செய்யுளில் இம் மூன்றுமா மெனவே, வழக்கில் இரண்டும் ஒன்றுமாம் என்றாராயிற்று.

வ—று.:—

உதித்தது நிலவு, உதித்தது நிலா; கண்டேன் கனவு, கண்டேன் கனா எனக் குறுகுதலோடு உகர மேற்றலும் தன்னியல்புமாகிய இரண்டும் வந்தன. தரா மிடா எனத் தன்னியல் பொன்றுமாய் நின்றன.

ஆக் குறுகலும் அதனோடு உகர மேற்றலுமாம் என்றது **எய்தாதன எய்துவித்தல்**; இயல்புமாம் என்றது அவ்விடத்து வருவதோர்ரைய மறுத்தல்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள். குறியதன் கீழ் ஆக்குறுகலும்** — குற்றெழுத்தின் கீழ்நின்ற ஆகாரம் அகரமாதலும், — **அதனோடு உகரம் ஏற்றலும்** — அவ்வகரமாதலுடனே உகரம் பெறுதலும், — **இயல்பும்** —அவ்விரண்டு மின்றித் தன்னியல்பின் நிற்றலுமாகிய மூன்று விதியும், — **ஆம் தூக்கின்** — ஆகும் பாட்டினிடத்து. எ—று.

உ—ம்.:—

நிலவிரிகானல்வாய் நின்று ......... நிலா— குறுகல்.
மருவினென் செய்புமோ நிலவு...........நிலா— குறுகலோடு உகரமேற்றல்.

நிலாவணங்குவெண்மணன்மேனின்று — இயல்பு.

செய்புளில் இம்மூன்றுமாமெனவே, வழக்கில் இரண்டுமாம் ஒன்றுமாம் என்றாராயிற்று.

வ—று:—

உதித்தது நிலவு, உதித்தது நிலா; கண்டேன் கனவு, கண்டேன் கனா எனக் குறுகுதலோடு உகரமேற்றலுந் தன்னியல்புமாகிய இரண்டும் வந்தன.

குறுகலும், உகரமேற்றலும் என்றதினால் : இயல்பா

யிருத்தலு மேயன்றி என்று கருதப்பட்டு, அது இயல்புமா யிருக்குமென்பது விளங்கும்; விளங்கவும் அதன்மேலும் இயல்புமாம் என்றது குறுகுதல், உகரமேற்றல் என்னு மிரண்டினுளொன்றும் பெறாதியல்பாகவே யிருக்குங் குறியதன் கீழாகாரமொழிகளு முளவென் றறிவுறுத்தற்பொருட்டாம்.

உ–ம்.:–

தரா, மிடா, கடா என்பன. இவை – தர, தரவு; மிட, மிடவு; கட, கடவு என்று விகாரப் படாமல் இயல்பாயே யிருத்தலறிக.

"நறவங்கண்ணி நற்போர்ச் செம்பியன்"

"கழித்துணி நறவமாந்தி"

குரவநீடிய கொன்றையங்கானல்"

"குரவங்குமிழ் கொங்கலர் கொம்பினொடும்" என்பன ஆகாரங் குறுகிய வழி அம்முச் சாரியை பெறுதல் உரையிற் கொள்க.

இயல்புமாம் என்று சுபாவமுங் கூறப்பட்டதினால் இவ்வியல்பு விகாரங்கள் அல்வழி வேற்றுமை இரண்டினும் வருமென்றும், வருமொழியாக நாற்கணங்கள் வரினு மிம்மூவகையுமாமென்றும் அறிக.

ஆக்குறுகலும் அதனோடுகரமேற்றலுமாம் என்றது எய்தாதன எய்துவித்தல்; இயல்புமாம் என்றது அவ்விடத்து வருவதோரைய மறுத்தல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: குறியதன் கீழ் ஆ–குற்றெழுத்தின் கீழ் நின்ற ஆகாரம், குறுகலும் – (அகரமாகக்) குறுகுதலும், அதனோடு – அவ்வாறு குறுகுதலுடனே, உகரம் ஏற்றலும் – உகரம் பெறுதலும், இயல்பும்– (அவ்விரண்டு மில்லாமல்) தன் இயல்பில் நிற்றலும், (ஆகிய இம் மூன்று விதியும்), தூக்கின் – செய்யுளில், ஆம் – ஆகும்; எ–று. தூக்கு – செய்யுள். 162–ஆஞ் சூத்திரத்திலும் இது வந்தது.

உ–ம்.:–

"நில விரி கானல்" – குறியதன்கீழ் ஆ, குறுகிற்று.

"என் செய்யுமோ நிலவு" – குறுகி, உகர மேற்றது.

"நிலா வணங்கு" – இயல்பாயிற்று.

செய்யுளில் இம் மூன்றும் ஆம் எனவே, வழக்கில் இரண்டும் ஒன்றும் ஆம் என்றாராயிற்று; குறுகி உகர மேற்காமல் நிற்றல், வழக்கில் வாராது.

உ-ம்.:-

நிலவு, நிலா; கனவு, கனா-குறுகி உகர மேற்றலும், இயல்பும். தரா, மிடா, கடா-இயல்பு மாத்திரம். (இவை விகாரப்படா.)

## பவானந்தம் பிள்ளை

இ-ள்.:- **குறியதன் கீழ் ஆக் குறுகலும்** - குற்றெழுத்தின் கீழ் நின்ற ஆகாரம் அகரமாதலும், **அதனோடு உகரம் ஏற்றலும்** - அவ்வகரமாதலுடனே உகரம் பெறுதலும், **இயல்பும்** - அவ்விரண்டு மின்றித் தன்னியல்பின் நிற்றலுமாகிய மூன்று விதியும், **ஆம் தூக்கின்** - ஆகும் பாட்டினத்து. எ-று.

உ-ம்.:-

'நிலவிரிகானல்வாய் நின்று' .......... நிலா - நில (குறுகல்)

'மருவினென் செய்யுமோநிலவு நிலா-நிலவு' (குறுகலோடு உகரமேற்றல்.)

'நிலாவணங்கு வெண்மணன்மேனின்று' (இயல்பு)

செய்யுளில் இம்மூன்றுமா மெனவே, வழக்கில் இரண்டும் ஒன்றுமாம் என்றாராயிற்று.

உ-ம்.:-

உதித்தது நிலவு, உதித்தது நிலா; - கண்டேன் கனவு, கண்டேன் கனா எனக் குறுகுதலோடுஉகரமேற்றலும் தன்னியல்புமாகிய இரண்டும் வந்தன. தரா, மிடா -எனத் தன்னியல் பொன்றுமாய் நின்றன.

ஆக் குறுகலும்அதனோ டுகரமேற்றலுமாம் என்றது எய்ததாதன எய்துவித்தல்; இயல்புமாம் என்றது அவ்விடத்து வருவதோர் ஐய மறுத்தல்.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) **குறியதன் கீழ் ஆ** - குற்றெழுத்தின் கீழ் நின்ற ஆகாரம், **குறுகலும்** - அகரமாதலும் ;

(2) **அதனோடு** - அவ்வகரமாதலுடனே, **உகரமேற்றலும்** - உகரம் பெறுதலும் ;

(3) **இயல்பும்** - அவ்விரண்டுமல்லாம லியல்பாதலும் ஆகிய மூன்று

விதியும், தூக்கின் – பாட்டினிடத்து, ஆம் – ஆகும்.

உதாரணம்:–

(1) 'நிலவிரிகானல்'

நிலா என்பது, நில எனக் குறியதன்கீழ் ஆ குறுகிற்று.

(2) 'என்செயுமோநிலவு'

நிலா என்பது, நிலவு என ஆ குறுகி உகரமேற்றது.

(3) 'நிலாவணங்கு'

நிலா என்பது இயல்பாயிற்று.

செய்யுளிலே இம்மூன்றுமாம் எனவே,

இரா – இரவு சுறா – சுறவு
புறா – புறவு அரா – அரவு

என இயல்பும், குறுகி உகரமேற்றலும் வழக்கில் வருமெனக் கொள்க.

## மோசகு பொன்னையா

குற்றெழுத்தை அடுத்து வரும் ஆகாரம் அகரமாகக் குறுகிநிற்றலும், அதனுடன் உகர உயிரையும் பெறுதலும், அவ்வேறுபாடுகளை யடையாமல் தன் இயல் உருவில் நிற்றலும் செய்யுளில் பொருந்துவனவாம், எ–று.

எ–டு.:–

நில விரிகானல்
சுற மறிவன துறை – குறியதன் கீழ் ஆக் குறுகிற்று.
என் செய்யுமோ நிலவு
இறவுப்புறத்தன்ன – குறுகி உகரம் ஏற்றது.
நிலவுப் பயன்
நிலாக்கோட்டம்
தீக்கனாத்திறம் – இயல்பாயிற்று

செய்யுளில் இம்மூன்றும் என்றதனால் வழக்கில் இரண்டும் ஒன்றும் வரும் எனக்கொள்க. குறுகின் உகரமேற்காது வழக்கில் வருதல் இல்லை. இவை புணர்ச்சி விகாரங் களல்ல.

172. அன்றி யின்றியென் வினையெஞ் சிகரம்
தொடர்பினு ளுகர மாய்வரி னியல்பே.

அன்றி இன்றி என் வினை எஞ்சு இகரம்
தொடர்பினுள் உகரம் ஆய் வரின் இயல்பே

anṟi inṟi en viṉai eñsu ikaram
ṭotarpiṉuḷ ukaram āy variṉ iyalpē

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### WORDS WITH I AS FINAL

### Special rule for anri, inri

(The Hard initials) are not doubled, if the final i of (the participles) anri and inri, is changed in poetry into.

## ஒப்புமைப் பகுதி

இன்றி யென்னும் வினையெஞ் சிறுதி
நின்ற இகரம் உகர மாதல்
தொன்றியல் மருங்கின் செய்யுளுள் உரித்தே
(தொல்.: 238)

அன்றி யின்றியென் வினையெஞ் சிகரந்
தொடர்பினு ளுளகர மாய்வரி னியல்பே.
(இ.வி.: 91)

யாப்பினு ளின்றியு மன்றியு முகரம்
ஆய்வரின் மிகாதியல் பாமென மொழிப
(மு.வீ.: 260)

## மயிலை நாதர்

இதுவுமது.

இ—ள்.: இவ்விரு மொழி யீற்று இகரமும் செய்யுளுள் உகரமாயும் வரப்பெறும்; அவ்வழி இயல்பாய் நிற்கும், மேல்வரும் வல்லினம், எ—று.

'வரின்' எனவே உகரமாதல் ஒருதலை யன்றெனவும்
உகரம் ஆகாத வழி மிகுமெனவும் கொள்க.

வ—று.:—

"வாளன்று பிடியா வன்க ணாடவர்", "நாளன்று

போகிப்புள்ளிடை தட்ப", "உப்பின்று, புற்கை யுண்கமா கொற்கையோனே" என வரும்.

## சங்கர நமச்சிவாயர்
## சிவஞான முனிவர்

எ – னின், இகர ஈற்றுச் சொற்களுள், அன்றி இன்றி என்னும் வினையெச்சக் குறிப்பிற்கு எய்தாதது எய்துவித்தலும், எய்தியவழிப் புணரும் வல்லினத்திற்கு, *'க ச த ப மிகும்' என* எய்தியது விலக்கலும் நுதலிற்று.

இ–ள்.:– அன்றி இன்றி என்னும் வினையெச்சக் குறிப்புச் சொற்களினது ஈற்று இகரம் செய்யுட்கண் உகரமாய் வருமாயின் க ச த பக்கள் பொதுவிதியான் மிகாது இயல்பாம், எ– று.

என் என்னும் வினைத்தொகையும், எஞ்சு என்னும் வினைத்தொகையும், சொல் என்னும் முதற்பெயரோடு. முடியாது அதனகத்து இகரம் என்னும் சினைப்பெய ரோடு முடிந்தன.

இவ்வாறு உடம்பொடு புணர்த்திக் கூறினமையின் இதற்கு இதுவே விதி என்பதூஉம், உகரமாய் வரின் எனவே உகரமாதல் உடன்பாடு என்பதூஉம், அஃது ஒருதலை யன்று என்பதூஉம் பெற்றாம்.

உ–ம்.:–

"நாளன்று போகிப் புள்ளிடை தட்பப் பதனன்று
புக்குத் திறனன்று மொழியினும்
வறிது பெயர்குநர் அல்லர் நெறிகொளப்
பாடான் றிரங்கும் அருவிப்
பீடுகெழு மலையற் பாடி யோரே" (புறம்.: 124)

எனவும்,

"உப்பின்று புற்கை உண்கமா
கொற்கையோனே"

எனவும் வரும். பிறவும் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், இகரவீற்றுள் சில சொற்களுக்குச் செய்யுள் முடிவு கூறியது.

இ–ள்.: **அன்றி இன்றியென்** – அன்றி யென்றும் இன்றி யென்றும் சொல்லப்படும், **வினையெஞ்சிகரம்** – வினையெச்சக் குறிப்பின் இறுதிக்கண் நின்ற இகரம், **தொடர்பினுள் உகரமாய்** – செய்யுளுள்ளே உகரமாகியும் வரப்பெறும், **வரின் இயல்பே** – அவ்வழி வந்த விடத்து

மேல்வரும் வல்லின மகரம் இயல்பாய் முடியும், எ-று.

**உ-ம்.:-**

"வாளன்று பிடியா வன்க ணாடவர்", "நாளன்று போகிப் புள்ளிடை தட்பப் பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்" எனவும் இது முற்றியலிகரம் குற்றியலிகர மாய் நின்றது. "உப்பின்று புற்கை யுண்கமா கொற்கை யோனே" எனவும் வரும்.

## விசாகப் பெருமாளையர்

**இது,** அன்றி யின்றி யென்னும் வினையெச்சக் குறிப்பிற்கு எய்தாத தெய்துவித்தலும் எய்தியவழிப் புணரும் வல்லினத்திற்கு எய்தியது விலக்கலுஞ் சொல்லுகின்றது.

**இ-ள்.:** அன்றி யின்றி யென் - அன்றி யின்றி என்கின்ற, **வினையெஞ் சிகரம்** - வினையெச்சக் குறிப்புச் சொற்களி னீற்றிலிருக்கின்ற இகரம், **தொடர்பினுள்** - செய்யுளில், **உரகமாய் வரின்** - உகரமாய்த் திரிந்து வரின், **இயல்பு** - வருகிற க ச த பக்கள் இயல்பாகும், எ - று.

**உ-ம்.:-**

"நாளன்று போகி" "உப்பின்று புற்கை யுண்கமா" என வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

"இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரவிதி பெறற்பாலனவாகிய சில வினையெச்சக் குறிப்புச் சொற்கள் செய்யுளிலே குற்றுகரவீறும் பெறுமெனவும், அங்ஙனம், பெறும்போது வருமொழி வல்லெழுத்து இயல்பாமெனவுங் கூறஞ் யாது?

அன்றி யின்றியென் வினையெஞ் சிகரந்
தொடர்பினு ளுகர மாய்வரி னியல்பே.
(அன்றி இன்றி என் வினையெஞ்சு இகரம்
தொடர்பினுள் உகரம் ஆய் வரின் இயல்பு)

**இ-ள்.:- அன்றி இன்றி என் வினையெஞ்சு இகரம்**-அன்றி இன்றி என்னும் வினையெச்சக் குறிப்புச் சொற்களின் ஈற்றிலுள்ள இகரம், **தொடர்பினுள் உக்ரம் ஆய்வரின் இயல்பு** -செய்யுளில் உகரமாய்த் திரிந்து வரின் வருங் கச்தபக்கள் பொது விதியான் மிகாது இயல்பாகும், எ-று.

தொடர்பு என்பதன் பொருள் யாது?

தொடர்பு-செய்யுள்.

**உ-ம்.:-**

வாளன்றுபிடியா வன்கணாடவர்... வாள் அன்றி

விண்ணின்று பொய்ப்பின்...... விண் இன்றி.

அன்றி இன்றி என்பன செய்யுளில் உகரவீறாய்த் திரிதல் நியதியோ?

"உகரமாய்வரின்" என்றமையால் அங்ஙனம்வருதல் நியதியன்று என்பதும், வராதவழி வருமொழிவல்லினம் "அறிவின்றிக் கொடுத்தான்" என மிகுமென்பதும் பெறப்படும்.

வினையெஞ்சிகரந் தொடர்பினுள் உகரமாமென்றது எய்தாததெய்துவித்தல்; அஃதெய்தியவிடத்துப் புணரும் வல்லினம் இயல்பாம் என்றது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கல்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, இகர ஈற்று வினையெச்சக் குறிப்பிற்கு எய்தாதது எய்துவித்தலும், அதன்முன் வரும் வல்லினத்திற்கு எய்தியது விலக்கலு முணர்த்திற்று.

இ–ள்.:– அன்றி யின்றி யென்வினை யெஞ்சிகரம் – இந்த இரண்டு வினையெச்சக் குறிப்பினது இறுதி இகரமானது, தொடர்பினுள் – செய்யுளிலே, உகரமாய் வரின்–உகரமாகத் திரிந்து வருமாயின், இயல்பு– (அதன் முன் வரும் வல்லெழுத்து) மிகாது இயல்பாம், எ – று.

உகரமாய் வரி னெனவே, உகரமாகத் திரிதல் உடன்பா டென்பதும் அது நிச்சயமன் றென்பது மாயிற்று.

உ–ம்.:–

"நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது பெயர்குந ல்லர்"

எனவும், 'விண்ணின்று பொய்ப்பின்', 'உப்பின்று புற்கையுண்கமா கொற்கையோனே' எனவும் காண்க. உகரமாகத் திரியாவிடின், நாளன்றிப்போகி, பதனன்றிப்புக்கு, விண்ணின்றிப் பொய்ப்பின், உப்பின்றிப் புற்கையுண்கமா என வல்லெழுத்து மிகு மெனக் காண்க. வல்லெழுத்தியல்பு என முடிக்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :– அன்றி இன்றி என் வினையெஞ்சு இகரம் – 'அன்றி' 'இன்றி' என்னும் எதிர்மறைக் குறிப்பு வினையெச்சங்களின் ஈற்றிலுள்ள,

**இகரம் –, தொடர்பினுள் –** செய்யுளில், **உகரம் ஆய் வரின் –** உகரமாய்த் திரிந்துவந்தால், **இயல்பே –** (வருகிற கசதபக்கள்) இயல்பாகும்.

**உ–ம்:–**

அன்றி + போகி = "அன்று போகி"
இகரம் உகரமாக வலி
இன்றி + புற்கை = "இன்று புற்கை"
இயல்பாயிற்று.

**குறிப்பு :–**

உகரமாகத் திரியாவிடின் 'அன்றிப்போகி', 'இன்றிப்புற்கை' எனப் பொதுவிதியால் வல்லெழுத்து மிகுமென்றறிக.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: **அன்றி இன்றி என் வினையெஞ்சு இகரம் –** அன்றி இன்றி என்னும் வினையெச்சக் குறுப்புச் சொற்களின் ஈற்றிலுள்ள இகரம், **தொடர்பினுள் உகரம் ஆய்வரின் –** செய்யுளின் உகரமாய்த் திரிந்து வரின், **இயல்பு –** வருங் க ச த பக்கள் பொதுவிதியான் மிகாது இயல்பாகும், எ – று.

**உ–ம்.:–**

வாளன்றுபிடியா வன்கணாடவர் . . . வாள், அன்றி.

விண்ணின்று பொய்ப்பின் . . . விண், இன்றி,

உகரமாகத் திரியாவிடின். வாளன்றிப்பிடியா, விண்ணின்றிப் பொய்ப்பின் என வல்லெழுத்து மிகுமெனக் காண்க.

வினையெஞ்சிகரந் தொடர்பினுள் உகரமாமென்றது எய்தாத தெய்துவித்தல்; அஃதெய்தியவிடத்துப் புணரும் வல்லினம் இயல்பாம் என்றது. "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கல்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– **அன்றி இன்றி என்வினையெஞ்சு இகரம் –** அன்றி இன்றி என்னும் வினையெச்சக்குறிப்புச் சொற்களின் ஈற்றிலுள்ள இகரம் – **தொடர்பினுள் உகரம் ஆய்வரின் –** செய்யுளில் உகரமாய்த் திரிந்துவரின், இயல்பு – வருங் க ச த ப க்கள் பொதுவிதியான் மிகாது இயல்பாகும். **எ–று.**

**உ–ம்:–**

வாளன்றுபிடியாவன்கணாடவர் (வாள், அன்றி)
விண்ணின்று பொய்ப்பின் (விண், இன்றி)
உகரமாய்வரின் எனவே உகரமாதற்கும் விதி

(வேறுகூறாமையால்) இதுவேயாமென்பதும், உகரமாதல் நியமமன்று என்பதும் பெறப்பட்டன.

வினையெஞ்சிகரந் தொடர்பினுள் உகரமாமென்றது எய்தாததெய்து வித்தல்? அஃதெய்தியவிடத்துப் புணரும் வல்லினம் இயல்பாம் என்றது 'இயல்பினும் விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதுவிலக்கல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– அன்றி இன்றி என் வினை எஞ்சு இகரம் – 'அன்றி' 'இன்றி' என்னும் எதிர்மறைக் குறிப்பு வினையெச்சங்களின் ஈற்றிலுள்ள இகரம், தொடர்பினுள் – செய்யுளில், உரகம் ஆய் வரின் – உகரமாய்த் திரிந்து வந்தால், இயல்பு–(வருகிற கசதபக்கள்) இயல்பாகும்; எ–று. தொடர்பு – செய்யுள்.

உ–ம்.:–

"நாளன்று போகி" = அன்றி + போகி

"உப்பின்று புற்கை யுண்க" = இன்றி–புற்கை.

உகரமாகத் திரியாவிடின், நாளன்றிப்போகி, உப்பின்றிப் புற்கை எனப் பொதுவிதிப்படி வல்லெழுத்து மிகுமெனக் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– அன்றி இன்றி என் வினையெஞ்சு இகரம் – அன்றி இன்றி என்னும் வினையெச்சக் குறிப்புச் சொற்களின் ஈற்றிலுள்ள இகரம், தொடர்பினுள் உகரம் ஆய்வரின் – செய்யுளில் உகரமாய்த் திரிந்து வரின், இயல்பு – வருங் க ச த பக்கள் பொதுவிதியான் மிகாது இயல்பாகும். எ–று.

உ–ம்.:–

வாளன்றுபிடியா வன்கணாடவர் ........ வாள், அன்றி.

விண்ணின்று பொய்ப்பின் .......... விண், இன்றி.

(உகரமாகத் திரியாவிடின், வாளன்றிப்பிடியா, விண்ணின்றிப் பொய்ப்பின் என வல்லெழுத்து மிகுமெனக் காண்க.)

வினையெஞ்சிகரந் தொடர்பினுள் உகரமாமென்றது எய்தாததெய்துவித்தல்; அஃதெய்தியவிடத்துப் புணரும் வல்லினம் இயல்பாம் என்றது "இயல்பினும் விதியினும்"

என்னும் 165–வது சூத்திரத்தால் எய்தியது விலக்கல்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள.:– அன்றி இன்றி என்** – அன்றி இன்றி என்கின்ற, **வினை எஞ்சு இகரம்** – வினையெச்சக் குறிப்புச் சொற்களினீற்றி லிருக்கின்ற இகரம், **தொடர்பினுள்** – செய்யுளில், **உகரம் ஆய் வரின்** – உகரமாய்த் திரிந்து வரின், **இயல்பு** – (வருகிற கசதபக்கள்) இயல்பாகும் எ–று.

**பொ–ரை.:–** அன்றி, இன்றி என்கின்ற எதிர்மறை வினையெச்சக் குறிப்புச் சொற்களி னீற்றி லிருக்கின்ற இகரம், செய்யுளில் உகரமாய்த் திரிந்து வந்தால், (வருகிற கசதபக்கள்) இயல்பாகும்.

உ–ம்.:–

நாள் + அன்றி + போகி – நாளன்று போகி.

உப்பு+இன்றி+புற்கையுண்கமா= உப்பின்றுபுற்கையுண்கமா.

உகரமாக்த திரிபாவிடின்,

நாள் + அன்றி + போகி = நாளன்றிப்போகி.

விண் + இன்றி + பொய்ப்பின் = விண்ணின்றிப்பொய்ப்பின்.

உப்பு+இன்றி+புற்கை=உப்பின்றிப்புற்கை.

எனப் பொதுவிதியால் வல்லொற்று மிகுமெனக் கொள்க.

தொடர்பு – செய்யுள்.

## கா.நமச்சிவாய முதலியார்

**அன்றி இன்றி என்** – அன்றி இன்றி என்கின்ற, **வினையெஞ்சு இகரம்** – வினையெச்சக் குறிப்புச் சொற்களி னீற்றிலிருக்கின்ற இகரம், **தொடர்பினுள்** – செய்யுளில், **உகரமாய்வரின்** – உகரமாய்த் திரிந்துவரின், **இயல்பு** – வருகிற கசதபக்கள் இயல்பாகும்.

**உதாரணம்:–**

'நாளன்றுபோகி', அன்றி+போகி,

'உப்பின்று புற்கை யுண்கமா' இன்றி + புற்கை

உகரமாகத் திரியாவிடின், நாளன்றிப் போகி, உப்பின்றிப் புற்கை எனப் பொதுவிதியால் வல்லெழுத்து மிகும்.

## மோசசு பொன்னையா

அன்றி இன்றி என்னும் எதிர்மறைக் குறிப்பு வினையெச்சங்களின் ஈற்று இகரம் செய்யுளின்கண் உகரமாய்த் திரிந்து நின்றவிடத்து, வருமொழி முதலில் வலிவரின் இயல்பாகவே புணரும், எ–று.

தொடர்பு – செய்யுள்.

எ–டு.:–

நாளன்று போகி

இடையின்று குறுகி

வரின் இயல்பே என்றதனால்,திரிந்து வருதல் ஒருதலையன்று என்பதும், திரியாது பொதுவிதிப்படி வலிமிக்கு முடிவதும்உண்டு என்பதும் போதரும்.

(23)

**173. உரிவரி னாழியி னீற்றுயிர் மெய்கெட**
**மருவும் டகர முரியின் வழியே**
**யகர வுயிர்மெய்யா மேற்பன வரினே.**

உரி வரின் நாழியின் ஈற்று உயிர்மெய் கெட
மருவும் டகரம் உரியின் வழியே
யகர உயிர்மெய் ஆம் ஏற்பன வரினே

uri varin̲ nāḷiyin̲ īṟṟu uyirmey keṭa
maruvum ṭakaram uriyin̲ vaḻiyē
yakara uyirmey ām ēṟpan̲a varin̲ē

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Special rule for nali and uri**

When **nali** is followed by uri, the final vowel-consonant of the former is dropped, and the consonant d is inserted; but when **uri** combines with appropriate words, the vowel-consonant 'ya' may be affixed to it.

## ஒப்புமைப் பகுதி

உரிவரு காலை நாழிக் கிளவி
இறுதி இகரமெய் யொடுங் கெடுமே
டகார மொற்றும் ஆவயி னான.

(தொல்.: 241)

உரிவரி னாழியி னீற்றுயிர் மெய்கெட
மருவும் டகரமாம் வல்லினப் புள்ளி

(மு.வீ.: 262)

---

பாட வேறுபாடு.:–

1. ஆங்கட் டகர

## மயிலை நாதர்

எ–ன், முதலதற்கு எய்தியதன் மேற் சிறப்பு விதியும் ஏனையதற்கு எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதியும் வகுத்தல் நுதலிற்று.

இ–ள்.:– உரி யென்னும் அளவுச்சொல் வரின் நாழி யென்னும் அளவுப்பெயரீற்று உயிர்மெய் கெட 'ஆங்கே டகர வொற்று வரும்; உரி யென்னும் அளவுப்பெயரின் பின் ஏற்றமொழிகள் வரின் யகர வுயிர்மெய் மிகும், எ – று.

வ–று.:–

நாழி+உரி= நாடுரி எனவும்; உரி+உப்பு = உரியவுப்பு; கொள்ளு, சாமை, தினை, பயறு, மிளகு, வரகு, எனவும் வரும்.

'ஏற்பனவரின்' என்றதனான் உரியரிசி, உரியாழக்கு, உரியெண்ணெய் முதலானவற்று மிகாதெனக் கொள்க.

வருமொழியை முற்கூறியவதனால் நாடுரி யென்புழி டகாரம் மிகாமையும் நாழியுரி யென்னு முடிபும் கொள்க.

## சங்கர நமச்சிவாயர் சிவஞான முனிவர்

எ–னின், *'இஈஐவழி' என்னும் சூத்திரத்தானும், 'இயல்பினும் விதியினும்' என்னும் சூத்திரத்தானும், 'எண்மூவெழுத்தீற்று' என்னும் சூத்திரத்தானும்* எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ–ள்.: உரி என்னும் அளவுப்பெயர் வரின், நாழி என்னும் அளவுப்பெயரினது ஈற்றுயிர்மெய் கெட, அவ்வழி டகர ஒற்று வரும்; உரி என்னும் அளவுப்பெயரின் பின் யகரவுயிர்மெய் வரும்; அவ்வுயிர்மெய் வருதற்கேற்ற வருமொழிகள் வருமாயின், எ–று.

உ–ம்.:–

நாடுரி எனவும்; உரியவுப்பு, உரியபயறு, உரியமிளகு, உரியவரகு எனவும் வரும்.

ஏற்பன வரின் எனவே, ஏலாதன வரின் உரியரிசி, உரியாழாக்கு, உரியெண்ணெய் என இச் சிறப்புவிதி பெறாது பொதுவிதியே பெறுதல் கொள்க. நாடுரி என்பது நாவுரி என இக்காலத்து மரீஇயிற்று. பொதுவிதியான் வரும் உடம்படுமெய்யை இச் சிறப்புவிதி விலக்கின மையின், நாழியுரி என்பது இலக்கண மன்று என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், முதலதற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதியும் ஏனையதற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதியும் கூறியது.

இ–ள்.:– உரி வரின் – உரி யென்னும் அளவுச் சொல் வருமொழியாய் வருங்காலத்து, நாழியின் ஈற்றுயிர்மெய் கெட – நாழி யென்னும் அளவுப் பெயரீற்று நின்ற உயிர்மெய் கெட, மருவும் டகரம் – அவ்விடத்து டகர வொற்று வரும், உரியின் வழியே – உரி யென்னும் அளவுப் பெயர் முன், யகர உயிர்மெய்யாம் – யகர உயிர்மெய் தோன்றி நிற்கும், ஏற்பன வரினே – ஏற்ற மொழிகள் வருமொழியாக வந்தவிடத்து, எ–று.

உ–ம்.:–

நாடுரி எனவும், உரிய உப்பு, கொள்ளா, சாமை, தினை, பயறு, மிளகு, வரகு எனவும் ஒட்டுக.

"ஏற்பன" என்றதனால் உரியரிசி, உரியாழாக்கு, உரியெண்ணெய் முதலானவற்றில் யகர உயிர்மெய் மிகாதெனக் கொள்க.

## விசாகப் பெருமாளையர்

இது, எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது,

இ–ள்.: உரி வரின்–உரி யென்னு மளவுப்பெயர் வந்தால், நாழியின்– நாழி யென்னு மளவுப்பெயரினது, ஈற்றுயிர்மெய்–ஈற்றிலுள்ள ழிகரமானது, கெட–நீங்க, டகரம் – டகர மெய்யானது, மரூஉம் – வரும், உரியின் வழி– உரியென்னு மளவுப் பெயரின் பின், யகர வுயிர்மெய்யாம் – யகர வுயிர்மெய் வரும், ஏற்பன – அவ் வுயிர்மெய் வருதற்கு ஏற்ற மொழிகள், வரின் – வந்தால், எ–று.

உ–ம்.:–

நாழி+உரி–நாடுரி, எனவும், உரி+உப்பு–உரியவுப்பு, உரி+பயறு–உரியபயறு, உரி+மிளகு–உரியமிளகு, உரி+வரகு–உரியவரகு எனவும் வரும்.

("ஏற்பன வரின்" எனவே, ஏலாதன வரின் உரியரிசி எனப் பொதுவிதி பெறுதல் கொள்க. நாடுரி என்பது நாவுரி என இக்காலத்து மருவிற்று.)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

இ ஈ ஐ வழி என்னுஞ் சூத்திரவிதியில் அடங்காத ஓர் அளவுப் பெயர்க்கு விதிகூறுஞ் சூத்திரம் யாது?

உரிவரி னாழியி னீற்றுயிர் மெய்கெட
மருவும் டகர முரியின் வழியே
யகரவுயிர் மெய்யா மேற்பன வரினே.

(உரி வரின் நாழியின் ஈற்றுயிர்மெய் கெட
மருவும் டகர முரியின் வழியே
யகர உயிர்மெய் ஆம் ஏற்பன வரினே)

**இ—ள்.:— உரிவரின்** — உரி என்னும் அளவுப்பெயர் வரின், **நாழியின் ஈற்றுயிர்மெய் கெட டகரம் மருவும்** — நாழி என்னும் அளவுப்பெயரினது ஈற்றிலுள்ள ழகர இகர வுயிர்மெய் நீங்க டகரமெய்வரும்; **உரியின் வழி யகர உயிர்மெய் ஆம் ஏற்பன வரின்**—உரியென்னும் அளவுப்பெயரின் பின் யகர வுயிர்மெய் வரும். அவ்வுயிர்மெய் வருதற்கு ஏற்ற வருமொழிகள் வருமாயின், எ—று.

நாழி என்பது உரிவரின் எவ்வாறு புணரும்?

"உரிவரின் நாழியி னீற்றுயர் மெய்கெட மருவும்டகரம்"

**உ—ம்.:—**

**(1)** நாழி—உரி—நாடுரி எனநாழியின் ஈற்றுயிர் மெய்கெட்டு டகரம் தோன்றிற்று. "உரிவரின் நாழியி னீற்றுயிர் மெய்கெட" எனக் கெடுதலைமுற் கூறியவதனால் "நாவுரி" என வருதலுங் கொள்க.

உரியின் பின்னே ஏற்பனவரின் யாது தோன்றும்?

" உரியின் வழியே யகர உயிர்மெய்யா மேற்பனவரினே"

உரியகொள், உரியசாமை, உரியபயறு, உரியமிளகு உரியவரகு என உரியின்பின் யகரவுயிர்மெய் வந்தது.

ஏற்பன வரின் எனவே, ஏலாதன வரின், உரியரிசி, உரியாழக்கு, உரியெண்ணெய் எனப் பொதுவிதி பெறுதல் கொள்க.

ஆழாக்கிரண்டு கொண்டது உழக்கு; உழக்கிரண்டு கொண்டது உரி; உரியிரண்டு கொண்டது நாழி.

உரிவரின் நாழியின் ஈற்றுயிர்மெய் கெட டகரமருவும் என்றது " இ ஈ ஐ வழி" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல்; உரியின்வழி யகரவுயிர் மெய்யாம் ஏற்பன வரின் என்றது எய்தாததெய்துவித்தல்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுகின்றது.

இ–ள்.:– உரி வரின் – உரி யென்னும் அளவுப்பெயர் பின் வருமாயின், நாழியினீற் றுயிர்மெய் கெட–நிலைமொழியாக நின்ற நாழி யென்னும் அளவுப் பெயரினது ஈற்றிலே நின்ற உயிர்மெய் கெட்டுப் போக, மருவும் டகரம் – அவ்விடத்திலே டகர ஒற்று வரும், உரியின் வழி – உரி யென்பது நிலைமொழியாக நிற்க அதன்பின், ஏற்பன வரின்–அதற்குப் பொருந்திய வருமொழிகள் வந்து புணருமாயின், யகர வுயிர்மெய்யாம் – யகர உயிர்மெய் வரும், எ–று.

உ–ம்.:–

நாடுரி எனவும், உரியவுப்பு, உரியப்பயறு, உரியமிளகு, உரியவரகு எனவும் வரும். 'ஏற்பன வரி'னெனவே ஏலாதன வரின், உரியரிசி, உரியாழாக்கு, உரியெண்ணெய் என இச் சிறப்பு விதி பெறாமல் பொதுவிதியே பெறுமென்க. நாடுரி யென்பது, பழையன கழிதலாக வழங்காதாயிற்று. அது புதியன புகுதலாக, நாவுரி என இக் காலத்து வழங்குகின்றது. டகரம் மருவும், யகரவு யிர்மெய் ஆம் என இரு முடிபாக முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :– உரிவரின் – உரி என்னும் முகத்தலளவைப் பெயர் (வருமொழியாக) வந்தால், நாழியின் – (நிலைமொழியாக நின்ற) நாழி என்னும் முகத்தலளவைப் பெயரினது, ஈறு உயிர்மெய் – ஈற்றிலுள்ள ழி என்னும் உயிர்மெய், கெட – நீங்க, டகரம் – டகரமெய், மருவும் – (அவ்விடத்தில்) வரும்; உரியின்வழி – (நிலைமொழியாக நின்ற) உரி என்னும் முகத்தலளவுப் பெயரின் பின், ஏற்பன – அதற்குப்பொருந்திய மொழிகள், வரின் – (வருமொழியாக) வந்து புணர்ந்தால், யகர உயிர்மெய் ஆம் – யகர உயிர் மெய்வரும்.

உ–ம்:–

நாழி + உரி = நாடுரி

–ழி கெட டகரந் தோன்றிற்று.

உரி + உப்பு = உரியவுப்பு

உரி+மிளகு=உரியமிளகு

உரி + பயறு = உரியபயறு

உரி + வரகு = உரியவரகு.

–உரிவழி யகரந் தோன்றிற்று.

குறிப்பு:–

'ஏற்பனவரின்' எனவே, ஏலாதனவரின் 'உரியரிசி' 'உரியாழாக்கு' எனச் சிறப்பு விதி பெறாமல் பொதுவிதி பெறுதல் கொள்க. 'ஏற்பன', 'ஏலாதன' இவையென வழக்கு நோக்கியறிக. உரி இரண்டு கொண்டது நாழி.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: உரி வரின் நாழியின் ஈற்றுயிர்மெய் கெட டகரம் மருவும்** – உரி என்னும் அளவுப்பெயர் வரின், நாழி என்னும் அளவுப்பெயரினது ஈற்றிலுள்ள ழிகர வுயிர்மெய் நீங்க டகரமெய் வரும், **உரியின் வழி யகரவுயிர்மெய் ஆம் ஏற்பன வரின்** – உரி யென்னும் அளவுப்பெயரின் பின் யகர வுயிர்மெய் வரும் அவ் வுயிர்மெய் வருதற்கு ஏற்ற வருமொழிகள் வருமாயின், **எ – று.**

**உ–ம்.:–**

நாழி + உரி = நாடுரி என நாழியின் ஈற்றுயிர்மெய் கெட்டு டகரந் தோன்றிற்று; இது நாவுரி என இக்காலத்து மருவிற்று.

உரி+உப்பு= உரியவுப்பு, உரியபயறு, உரியமிளகு, உரியவரகு என உரியின் பின் யகர வுயிர்மெய் வந்தது.

ஏற்பன வரின் எனவே, ஏலாதன வரின், உரியரிசி, உரியாழாக்கு, உரியெண்ணெய் எனப் பொதுவிதி பெறுதல் கொள்க.

ஆழாக்கிரண்டு கொண்டது உழக்கு; உழக்கிரண்டு கொண்டது உரி; உரியிரண்டு கொண்டது நாழி.

உரி வரின் நாழியின் ஈற்றுயிர்மெய் கெட டகர மருவும் என்றது "இ ஈ ஐ வழி" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்; உரியின்வழி யகர வுயிர்மெய்யாம் ஏற்பன வரின் என்றது எய்தாத தெய்துவித்தல்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். உரி வரின் நாழியின் ஈற்றுயிர் மெய்கெட டகரம் மருவும்** – உரி என்னும் அளவுப்பெயர்வரின், நாழி என்னும் அளவுப்பெயரினது ஈற்றிலுள்ள ழிகரவுயிர்மெய் நீங்க டகரமெய் வரும், – **உரியின்வழி யகரவுயிர்மெய் ஆம் ஏற்பனவரின்** – உரியென்னும் அளவுப் பெயரின் பின் யகரவுயிர்மெய் வரும் அவ்வுயிர்மெய் வருதற்கு ஏற்ற வருமொழிகள் வருமாயின். **எ–று.**

**உ–ம்.:–**

1) நாழி + உரி = நாடுரி என நாழியின் ஈற்றுயிர்மெய், கெட்டு டகரந் தோன்றிற்று. இது நாவுரி என இக்காலத்து மருவிற்று.

(2) உரி + உப்பு = உரியவுப்பு, உரியபயறு, உரியமிளகு, உரியவரகு என உரியின்பின் யகரவுயிர்மெய் வந்தது.

ஏற்பனவரின் எனவே, ஏலாதனவரின், உரியரிசி, உரியாழாக்கு, உரியெண்ணெய் எனப் பொதுவிதி பெறுதல் கொள்க.

ஆழாக்கிரண்டு கொண்டது உழக்கு; உழக்கிரண்டு கொண்டது உரி; உரியிரண்டு கொண்டது நாழி.

உரிவரின் நாழியின் ஈற்றுயிர்மெய்கெட மருவும் "டகரம் என்றது ஈ ஐவழி" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிது விதிவகுத்தல்; உரியின்வழி யகர வுயிர்மெய்யாம் ஏற்பன வரின் என்றது· எய்தாத தெய்துவித்தல்.

## வை.மு.சடகோபராமானுசாசாரியார்
## சே.கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– உரி வரின் – உரி என்னும் முகத்தலளவுப் பெயர் (வருமொழியாக) வந்தால், நாழியின் – (நிலைமொழியாக நின்ற) நாழி என்னும் முகத்தலளவுப் பெயரினது, ஈறு உயிர்மெய் – ஈற்றிலுள்ள 'ழி' என்னும் உயிர்மெய், கெட – நீங்க, டகரம் – டகர மெய், மருவும் – (அவ்விடத்தில்) வரும்; உரியின் வழி – (நிலைமொழியாக நின்ற) உரி என்னும் முகத்தலளவுப்பெயரின் பின், யகர உயிர்மெய் ஆம்–யகர வுயிர்மெய் வரும்; ஏற்பன–(அவ் வுயிர்மெய் வருவதற்கு) ஏற்ற மொழிகள், வரின்–(வருமொழியாக) வந்து புணர்ந்தால்; எ–று.

**உ–ம்.:–**

நாழி + உரி = நாடுரி–'ழி' கெட, டகரம் தோன்றிற்று.

உரி +உப்பு–உரியவுப்பு, உரி + மிளகு உரியமிளகு

+பயறு–உரியபயிறு உரி + வரகு–உரியவரகு உரிவழி யகரம் தோன்றிற்று.

(உரி இரண்டு கொண்டது, நாழி.)

'ஏற்பன வரின்' எனவே, ஏலாதன வரின் உரியரிசி, உரியாழாக்கு என இச் சிறப்புவிதி பெறாமற் பொதுவிதி பெறுமெனக் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

**இ-ள்.:- உரி வரின்** - உரி என்னும் அளவுப்பெயர் வரின், **நாழியின் ஈற்றுயிர்மெய் கெட டகரம்மருவும்** - நாழி என்னும் அளவுப்பெயரினது ஈற்றி லுள்ள ழிகர வுயிர்மெய் நீங்க டகரமெய் வரும், **உரியன் வழி** - உரியென்னும் அளவுப் பெயரின் பின், **யகரவுயிர்மெய் ஆம் ஏற்பன வரின்** - யகரயுயிர்மெய் வரும் அவ்வுயிர்மேய் வருதற்கு ஏற்ற வருமொரிகள் வருமாயின். எ-று.

உ-ம்.:-

(1)நாழி + உரி = நாடுரி.

(நாழியின் ஈற்றுயிர் மெய்கெட்டுமகரந் தோன்றிற்று; இது நாவுரி என இக்காலத்து மருவிற்று.)

(2) உரி + உப்பு = உரியவுப்பு; (உரியபயறு,, உரியமிளகு, உரியவரகு) என உரியின் பின் யகரவுயிர்மெய் வந்தது.

ஏற்பன வரின் எனவே ஏலாதன வரின், உரியரிசி, உரியாராக்கு, உரியெண்ணெய் எனப் பொதுவிதி பெறுதல் கொள்க.

(ஆழாக்கிரண்டு கொண்டது உழக்கு; உழக்கிரண்டு கொண்டது உரி; உயிரண்டு கொண்டது நாழி.)

'உரி வரின் நாழியின் ஈற்றுயிர்மெய் கெட டகரமருவும்' என்றது "இ ஈ ஐ வழி" என்னும் 162-வது சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்; 'உரியின் வழி யகரவுயிர்மெய்யாம் ஏற்பன வரின்' என்றது எய்தாத தெய்துவித்தல்.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) **உரிவரின்** - உரியென்னும் அளவுப் பெயர் வந்தால், **நாழியின்** - நாழியென்னு மளவுப் பெயரினது, **ஈற்றுயிர்மெய்** - ஈற்றிலுள்ள 'ழி' என்னும் உயிர்மெய்யெழுத்து, **கெட** - நீங்க, **டகரம்** - டகர மெய்யானது, **மருவும்** - வரும்;

(2) **உரியின் வழி** - உரியென்னும் அளவுப் பெயரின் பின், **யகர உயிர்மெய் ஆம்** - யகரவுயிர்மெய் வரும், **ஏற்பன** - (அவ்வுயிர்மெய் வருவதற்கு) ஏற்ற மொழிகள், **வரின்** - வந்தால்.

உதாரணம்:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | நாழி | + | உரி | = | நாடுரி |
| (2) | உரி | + | உப்பு | = | உரியவுப்பு |

| | | | |
|---|---|---|---|
| + | பயறு | = | உரியபயறு |
| + | மிளகு | = | உரியமிளகு |
| + | வரகு | = | உரியவரகு |

'ஏற்பனவரின்' எனவே ஏலாதனவரின் உரியரிசி எனப் பொது விதி பெறுதல் கொள்க. நாடுரி என்பது நாவுரி என இக்காலத்து மருவிற்று.

## மோசகு பொன்னையா

உரி என்னுஞ் சொல் வருமொழியாக வரின், நிலை மொழியாக நின்ற நாழி என்னும் சொல்லினது ஈற்றின்கண் உள்ள ழி என்னும் உயிர்மெய் நீங்க டகரமெய் வரும். குறிப்பிட்ட சிலசொற்கள் வருமொழியாக வரின், உரி என்னுஞ் சொல்லின் பின்னர் யகர உயிர்மெய் வரும், எ–று.

உரி, நாழி என்பன முகத்தலளவைப் பெயர்கள், உரி இரண்டு கொண்டது ஒரு நாழி.

எ–டு.:–

நாழி + உரி – நாடுரி. ழி கெட டகரந் தோன்றிற்று. உரிய உப்பு; உரிய பயறு – உரிவழி யகரந் தோன்றிற்று.

ஏற்பன வரின் என்றதனால் ஏலாதனவரின் உரியரிசி, உரியாழாக்கு எனப் பொது விதியால் முடிக்க.

உயிரீற்றின் முன் உயிர் முதன்மொழிகள் வரின், உடம்படு மெய் பெற்றுப் புணரும்; அல்லது நிலைமொழி யின் ஈற்றுயிர் கெட்டுப் புணரும்; அவ்வாறின்றி, நாழி என்னுஞ் சொல்லின் ழகரமெய்யின் கேடும், அவ்விடத்தே டகரமெய்யின் தோற்றமும் இலக்கண விதிகளால் அமைதியுறு மாறில்லை. பண்டைத் தமிழில் நாழி என்ற சொல்லின் மாற்று வடிவமாக நாடி என்ற சொல்லும் இருந்தது என்றும், அவற்றுள் நாடி என்னும் வடிவம் வழக்கொழிந்தாலும் புணர்ச்சியில் தோற்றமளிக்கின்றது என்றும் கொளல் பொருந்தும். இதற்குச்சான்றாகச் சுட்டுப் புணர்ச்சிகளைக் காட்டலாம். அவ்வாறாயின், நாடி + உரி –நாடுரி எனப் புணருதல் வேண்டும். நச்சினார்க் கினியர் 'ஒல்வழியறிதல் வழக்கத்தான்' என்பதனால் கட்டி + இடி = கட்டிடி; கட்டி + அகல் = கட்டகல் என முடித்துக் கூறியிருப்பதே போல், இதனையும் முடித்தல் அமையும். இனி, இதனை விதித்தவற் றியலான் வகுத்துரை யாதவும் வகுத்தனர் கொளலே' என்ற அதிகாரப் புறனடை நூற்பாவால் அமைப்பதும் ஒன்று.

உயிரின் பின்னர் குறிப்பிட்ட சில சொற்கள் வரின்,இடையில் யகரம் வரும் என்று இவ்வாசிரியர் அமைக்கும் விதி தங்கால வழக்கு நோக்கிய தாகலாம். தொல்காப்பியர் இதனைக் குறிப்பிடவில்லை. கல்வெட்டுக் களில் இய்பொன், நீய்க்கி, கையிலேய் கொடுத்து, பிழைய்க்க, உரிய்நெய்,குடிய்மை, உரிய் நறுநெய்,ஐந்தேய் முக்கால், படைய்வந்து, இவரேய் இட்ட என இவ்வாறு இ, ஈ, ஏ, ஐ என்னும் உயிரெழுத்துக்கள் நாற்கணங்களுள் எது தொடரினும் யகர ஒலி பெற்று அண்ணச்சாயல் அடைவதைக் காண்கிறோம். எனவே உரிய நெய் என்பதும் அவ்வாறு பெற்ற யகர ஒலியோடு அகரச் சாரியையும் பெற்று முடிந்ததே யாகும் எனக் கூறல் ஏற்புடையதாகும்.

(24)

**174. சுவைப்புளி முன்னின மென்மையுந் தோன்றும்.**

**சுவைப் புளி முன் இன மென்மையும் தோன்றும்**

suvaip pu<u>l</u>i mu<u>n</u> i<u>n</u>a me<u>n</u>maiyum ṭō<u>n</u>ṛum

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Special rule for puli**

Even a kindred Nasal may be (occasionally) inserted in the combination of the taste-name puli with the Hard initials.

## ஒப்புமைப் பகுதி

ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே
(தொல்.: 246)

சுவைப்புளி முன்னின மென்மையுந் தோன்றும்
(இ.வி.: 92)

சுவைப்புளி முன்னின மென்மையுந் தோன்றும்
(மு.வீ.: 267)

வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை
ஒல்வழி யறிதல் வழக்கத் தான
(தொல்.: 247)

## மயிலை நாதர்

எ–ன், எய்தியதன் மேற் சிறப்புவிதி யுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– மரமல்லாத சுவைப்புளி முன் வல்லெழுத்துக்கள் வந்தால் அவற்றிற்கு இனமான மெல்லெழுத்துக்களும் மிகப்பெறும், எ–று.

வ–று.:–

புளிங்கறி, புளிஞ்சோறு, புளிந்தயிர், புளிம்பாளிதம் என வரும்.

உம்மையாற் பொதுவான வல்லெழுத்துப் பேறுங்கொள்க.

## சங்கர நமச்சிவாயர்
## சிவஞான முனிவர்

எ–னின், *'இயல்பினும் விதியினும்' என்னும் சூத்திரத்தான்* எய்தியதன் மேல் சிறப்புவிதி உணர்–ற்று.

இ–ள்.:– புளி என்னும் மரமும் பழமுமன்றி அறுசுவையுள் ஒன்றை உணர்த்தும் பெயர்முன் வரும் வல்லினம் மிகுதலே யன்றி, அவற்றிற்கு இனமாய மெல்லினமும் ஒரோவழி மிகும், எ– று.

உ–ம்.:–

புளிங்கறி, சோறு, தயிர், பாளிதம் என வரும்.

பல சுவையும் உடைத்தேனும் மிகுதி பற்றிப் புளிப்பாகிய கறி எனவும் புளிப்பையுடைய கறி எனவும் விரிதலின், இருவழிக்கும் இவையே காட்டாகும் என்க.

மென்மையும் என்ற இறந்தது தழீஇய **இழிவுசிறப்பும்மையால்** புளிக்கறி எனப் பொதுவிதியான் வரும் வல்லெழுத்துப் பேறே சிறப்புடைத்து என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், எய்தியதன் மேற் சிறப்புவிதி கூறியது.

இ–ள்.: **சுவைப்புளி முன்** – மரமல்லாத சுவைப்புளி முன்னர் வல்லெழுத்து வந்தால், **இன மென்மையும் தோன்றும்** – அதற்கினமான மெல்லெழுத்துக்களும் மிகப்பெறும் என்றவாறு.

உ–ம்.:–

புளிங்கறி, சோறு, தயிர், பாளிதம் என ஒட்டுக.

உம்மையால் பொதுவிதியான் வந்த வல்லெழுத்துப் பேறும்

கொள்க.

## விசாகப் பெருமாளையர்

இது, எய்தியதன்மேற் சிறப்புவிதி யுணர்த்துகின்றது.

**இ–ள்.: சுவை–**அறுசுவையு ளொன்றை யுணர்த்துகின்ற, **புளிமுன்–** புளி யென்னும் பெயர்முன், **இன மென்மையும் –** வருகிற வல்லெழுத்துகள் மிகுதலல்லாமல் அவற்றிற்கு இனமாகிய மெல்லெழுத்துகளும், **தோன்றும்–** ஒரோவிடத்து மிகும், எ – று.

**உ–ம்.:–**

புளிங்கறி–புளிஞ்சோறு, புளிந்தயிர்–புளிம்பாளிதம் என வரும், (புளிப்பாகிய கறி எனவும், புளிப்பையுடைய கறி எனவும், விரிக்கப்படுதலால் இருவழிக்கு மாகும். உம்மையால் புளிக்கறி எனப் பொதுவிதி பெறுதலே சிறப்புடைத்தாகும்.)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

சுவைப்புளிமுன் வன்கணம்வரின் எவ்வாறாம்?

சுவைப்புளி முன்னின மென்மையுந் தோன்றும்)

(சுவைப்புளி முன்இன மென்மையுந் தோன்றும்)

**இ–ள்.:– சுவைப்புளி முன் –** மரத்தையுணர்த்தாது புளிப்புச் சுவையை யுணர்த்துகின்ற புளியென்னும் பெயர்முன், **இனமென்மையும் தோன்றும் –** வல்லெழுத்து வரின் அவ்வல்லெழுத்தேயன்றி அவற்றிற்கினமாகிய மெல்லெழுத்து மிகவும் பெறும், எ–று.

**உ–ம்.:–**

புளிக்கறி புளிங்கறி,புளிச்சோறு, புளித்தயிர், புளிந்தயிர், புளிப்பாளிதம். புளிம்பாளிதம் என வரும். புளிப்பையுடைய கறி என விரிக்கப்படுதலால் இவ்விதி வேற்றுமை வழிக்கேயா மென்க.

மென்மையும் என்ற இறந்தது தழீஇய இழிவு சிறப்பும்மையால், புளிக்கறி எனப் பொதுவிதியால் வரும் வல்லெழுத்து மிகலே சிறப்புடைத்தெனக் கொள்க. உரையிற்கோடலால் மரப்புளிக்கு அம்சாரியை வருமெனக் கொள்க.

**உ–ம்.:–**

புளி–காய் புளியங்காய். புளியங்கோடு, புளியமரம் என வரும்.

இனமென்மையுந் தோன்றும், என்றது, “இயல்பினும் விதியினும்”

என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி.

## முகவை இராமானுச கவிராயர்

இது, எய்தியதன் மேற் சிறப்புவிதி யுணர்த்துகிறது.

**இ–ள்.: சுவைப் புளி முன்** – (அறுசுவையுள் ஒன்றை யுணர்த்தும்) புளி யென்னும் பெயர் முன், **இன மென்மையுந் தோன்றும்** – (வல்லினம், வந்து புணரின் அந்த வல்லின மிகுதலே யன்றி) அவற்றிற்கு இனமாகிய மெல்லினமும் ஒரோரிடங்களில் மிகும், எ–று.

உ–ம்.:–

புளிங்கறி, புளிஞ்சோறு, புளிந்தயிர், புளிம்பாளிதம் என வரும். இப்புணர்ச்சி மிகுதி பற்றிப் புளிப்பாகிய கறி யெனவும், குறைவு பற்றிப் புளிப்பை யுடைய கறி யெனவும் விரிதலின், அல்வழி வேற்றுமை இரண்டிற்கும் பொதுப்படக் கூறினாரெனக் காண்க. மென்மையு மென்ற இறந்தது தழுவிய இழிவுசிறப்பு உம்மையால், புளிக்கறி யெனப் பொதுவிதியால் வரும் வல்லெழுத்து மிகலே சிறப்புடைத்தெனக் கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– சுவை** – அறுசுவையுள் ஒன்றையுணர்த்துகின்ற, **புளி முன்** – புளி என்னும் பெயர்முன் (வல்லினம் வந்து புணர்ந்தால்), **இனம் மென்மையும்** – (அவ்வல்லெழுத்துக்கள் மிகுதலன்றி அவற்றிற்கு) இனமாகிய மெல்லெழுத்துக்களும், **தோன்றும்** – (ஒரோவிடத்து) மிகும்.

உ–ம்.:–

| | |
|---|---|
| புளி + கறி = புளிங்கறி | புளி + தயிர் = புளிந்தயிர் |
| புளி + சோறு = புளிஞ்சோறு | புளி + பாளிதம் = புளிம்பாளிதம் |

குறிப்பு:–

புளிப்பாகியகறி எனவும், புளிப்பையுடைய கறி எனவும் விரிதலால் இவற்றையே அல்வழி வேற்றுமை இரண்டுக்கும் உதாரணங்களாகக் கொள்க. ‘மென்மையும்’ என்ற இறந்தது

தழுவிய இழிவு சிறப்பும்மையால் புளிக்கறி எனப் பொதுவிதியால் வலிமிகுதலே சிறப்புடைத் தென்க.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:– சுவைப் புளி முன்** – அறுசுவையுள் ஒன்றை யுணர்த்துகின்ற புளி யென்னும் பெயர்முன், **இனமென்மையும் தோன்றும்** – வரும் வல்லெழுத்துக்கண் மிகுதலன்றி அவற்றிற்கு இனமாகிய மெல்லெழுத்துக்களும் ஒரோவிடத்து மிகும், எ – று.

**உ–ம்.:–**

புளிங்கறி, புளிஞ்சோறு, புளிந்தயிர், புளிம்பாளிதம் என வரும். புளிப்பாகியகறி எனவும், புளிப்பையுடைய கறி எனவும் விரிக்கப்படுதலால், இருவழிக்கும் இவையே உதாரணமா மென்க.

மென்மையும் என்ற இறந்தது தழீஇய இழிவுசிறப்பும்மையால், புளிக்கறி எனப் பொதுவிதியால் வரும் வல்லெழுத்து மிகலே சிறப்புடைத்தெனக் கொள்க.

இன மென்மையுந் தோன்றும், என்றது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதி.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். சுவைப்புளிமுன்** – அறுசுவையுள் ஒன்றை யுணர்த்துகின்ற புளியென்னும் பெயர்முன், – **இன மென்மையுந் தோன்றும்** – வரும் வல்லெழுத்துக்கண் மிகுதலன்றி அவற்றிற்கு இனமாகிய மெல்லெழுத்துக்களும் ஒரோவிடத்து மிகும். எ–று.

**உ–ம்.:–**

புளிங்கறி, புளிஞ்சோறு, புளிந்தயிர், புளிம்பாளிதம் என வரும். புளிப்பாகிய கறி எனவும், புளிப்பையுடைய கறி எனவும் விரிக்கப்படுதலால், இருவழிக்கும் இவையே உதாரணமாமென்க.

மென்மையும் என்ற இறந்தது தழீஇய இழிவு சிறப்பும்மையால், புளிக்கறி எனப் பொதுவிதியால் வரும் வல்லெழுத்து மிகலே சிறப்புடைத்தெனக் கொள்க.

இனமென்மையுந் தோன்றும், என்றது 'இயல்பினும்

விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ-ள்.: சுவை - அறுசுவையுள் ஒன்றை யுணர்த்துகின்ற, புளி முன்- புளி என்னும் பெயரின் முன், (வல்லினம் வந்து புணர்ந்தால்), இனம்மென்மையும் - (அவ் வல்லெழுத்து மிகுதலன்றி அதற்கு) இனமாகிய மெல்லெழுத்தும், தோன்றும் - (ஒரோவிடத்து) மிகும்; எ-று.

உ-ம்.:-

புளி+கறி = புளிங்கறி

புளி + தயிர் = புளிந்தயிர்

புளி+சோறு = புளிஞ்சோறு

புளி + பாளிதம் = புளிம்பாளிதம்

புளிப்பாகிய கறி எனவும், புளிப்பையுடைய கறி எனவும் விரிக்கப்படுதலால், இவையே வேற்றுமை அல்வழி இரண்டுக்கும் உதாரணமாம்.

'மென்மையும்' என்ற இறந்தது தழுவிய இழிவு சிறப்பும்மையால் புளிக்கறி யெனப் பொதுவிதிப்படி வலிமிகுதலே சிறப்பை யுடையதாமென அறிக.

## பவானந்தம் பிள்ளை

இ-ள்.:- சுவைப் புளி முன் - அறுசுவையுள் ஒன்றை யுணர்த்து கின்ற புளியென்னும்பெயர்முன், இனமென்மையும் தோன்றும் - வரும் வல்லெழுத்துக்கண் மிகுதலன்றி அவற்றிற்கு இனமாகிய மெல்லெழுத்துக்களும் ஒரோவிடத்து மிகும். எ-று.

புளி + கறி = புளிங்கறி புளி + சோறு = புளிஞ்சோறு. புளி + தயிர் = புளிந்தயிர். புளி + பாளிதம் = புளிம்பாளிதம். (புளிப்பாகிய கறி எனவும், புளிப்பையுடைய கறி எனவும்விரிக்கப்படுதலால், இருவழிக்கும் இவையே உதாரணமாம்.)

'மென்மையும்' என்ற இறந்தது தழீஇய இழிவு சிறப்பும்மையால், புளிக்கறி எனப் பொதுவிதியால் வரும் வல்லெழுத்து மிகலே சிறஸபடைத்தெனக் கொள்க.

"இனமென்மையுந் தோன்றும்" என்றது "இயல்பினும் விதியினும்" என்னும் 165-வது சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்பு விதி.

## கா.நமச்சிவாய முதலியார்

சுவை – அறுசுவையு ளொன்றை உணர்த்துகின்ற, **புளிமுன்** – புளியென்னும் பெயர்முன், **இனமென்மையும்** – (வருகிற வல்லெழுத்துக்கள் மிகுதல், அல்லாமல் அவற்றிற்கு) இனமாகிய மெல்லெழுத்துக்களும், **தோன்றும்** – ஒரோவிடத்து மிகும்.

**உதாரணம்:–**

புளி +கறி= புளிங்கறி
+சோறு புளிஞ்சோறு
+தயிர் புளிந்தயிர்
+ பாளிதம் = புளிம்பாளிதம் எனவரும்.

புளிப்பாகிய கறி எனவும், புளிப்பையுடைய கறி யெனவும் விரிக்கப்படுதலால் இருவழிக்கும் இவையே உதாரணமா மென்க. உம்மையால் புளிக்கறி எனப் பொதுவிதி பெறுதலே சிறப்புடைத்தாகும்.

## மோசசு பொன்னையா

புளி என்னும் சுவைப் பெயரின் முன் வல்லின முதன் மொழி வரின், அவ்வெழுத்து மிகுதலுடன் அதற்கு இனமான மெல்லெழுத்தும் ஒரோரிடத்து மிகுதலும் உண்டு, எ–று.

எ–டு.:–

புளிங்கறி
புளிஞ்சோறு
புளிந்தயிர்
புளிம்பாளிதம் – புளிப்பாகிய கறி, புளிப்பையுடைய கறி என விரியும் ஆதலின் இருவழியும் மெலி மிகற்கு இவையே காட்டாயின.

மென்மையும் என்ற உச்ச உம்மையால், புளிக்கறி, புளிச்சோறு, புளித்தயிர், புளிப்பாளிதம் எனப் பொது விதியால் முடித்நலே சிறப்பு எனக் கொள்க.

175. அல்வழி இஐ முன்ன ராயின்
இயல்பு மிகலும் விகற்பமு மாகும்.

அல்வழி இ ஐ முன்னர் ஆயின்
இயல்பும் இகலும் விகற்பமும் ஆகும்.

alvaḷi i ai mun̲n̲ar āyin̲
iyalpum ikalum vikaṟpamum ākum.

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**I and ai before Hard initials**

In the incasual combination of the Impersonal Nouns ending in i and ai, —in some instances the Hard initials are not doubled; in others, they are: and in other again, they are doubled as well as undoubled.

ஒப்புமைப் பகுதி

வேற்றுமை யல்வழி இஐ யென்னும்
ஈற்றுப் பெயர்க் கிளவி மூவகை நிலைஇய
அவைதாம்
இயல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவும்
உறழா குநவும் என்மனார் புலவர்

(தொல்.: 159)

வேற்றுமை யல்வழி இஐ யென்னு
மீற்றுப்பெயர்க் கிளவி மூவகை நிலைய
வவைதா மியல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவு
முறழா குநவு மென்மனார் புலவர்

(இ.வி.: 77)

அல்வழி இஐ முனரியல் பாதலு
மிகுதலு முறழ்தலும் வேண்டப் படுமே

(மு.வீ.: 198)

மயிலை நாதர்

எ–ன், எய்தாதது எய்துவித்தலும் எய்தியது இகந்துபடாமைக்

காத்தலும் நுதலிற்று.

இ—ள்.:— அல்வழிக்கண் இகரமே ஐகாரமே யென்றிவற்றின் முன் வல்லினம் வருமாயின் இயல்பாயும் மிக்கும் ஒன்றற்கே ஒருகால் மிகாதும் ஒருகால் மிக்கும் வரும், எ — று.

வ—று.:—

பருத்திகுறிது, ஒதிகுறிது; சிறிது, தீது, பெரிது எனவும்; யானைகுறிது, குதிரைகுறிது; சிறிது, தீது, பெரிது எனவும் இயல்பாயின. "ஆடித்திங்கள்", அலிக்கொற்றன் எனவும்; "சித்திரைத்திங்கள்", புலைக்கொற்றன் எனவும் மிக்கன. கிளிகுறிது கிளிக்குறிது எனவும், தினைகுறிது தினைக்குறிது எனவும் விகற்பித்தன. பிறவுமன்ன.

[1]மிகுதி இறந்துபடாமற்கு [2]ஈண்டுங் கூறினாரென்க.

## சங்கர நமச்சிவாயர்

## சிவஞான முனிவர்

எ—னின், இகர ஐகார ஈற்று அஃறிணைப்பெயர் முன் வரும் வல்லினத்திற்கு *'இயல்பினும்விதியினும்' என்னும் சூத்திரத்தான்* எய்தியது ஒருவழி விலக்கலும், எய்தியது இகந்துபடாமைக் காத்தலும், எய்தியது விலக்கலுடன் விலக்காமையும் உணர் — ற்று.

இ—ள்.:— இகர ஐகார ஈற்று அஃறிணைப்பெயர் முன், வல்லினம் அல்வழிக்கண் வருமாயின் இயல்பாயும், பொதுவிதியான் மிகுந்தும், ஒன்றற்கே ஒருகால் மிகாதும் ஒருகால் மிகுந்தும் புணரும், எ—று.

இவ்வீற்று உயர்திணைப்பெயர் பொதுப்பெயர்கட்கு 'ஆவியர முன் வன்மை மிகா' என்றும், 'க ச த ப மிகும்' என்றும்; வினைகட்கு 'இயல்பொடு விகற்பே' என்றும், 'க ச த ப மிகும்' என்றும் பொதுச்சூத்திரங்களான் இம்மூன்று விதியும் அமைந்து கிடந்தமையின், இச் சூத்திரத்தாற் கூறுதல், மிகுதி ஒன்றுமே அமைந்து கிடந்த அஃறிணைப் பெயர்க்கு என்பது பெற்றாம்.ஒப்பின் முடித்தலான் ஐகார ஈறும் உடன் கூறினார்.

உ —ம்.:—

---

பாட வேறுபாடு.:—

1. மிகுதியும் விகற்பமும்

2. ஈண்டுக்

பருத்தி, ஒதி, யானை, குதிரை: குறிது, சிறிது, தீது, பெரிது என இயல்பாயின. கிளிகுறிது கிளிக்குறிது, தினை குறிது தினைக்குறிது என விகற்பித்தன. பிறவும் அன்ன.

மிகுதி எய்தியது இகந்துபடாமைக் கூறினமையின் காட்டிற்றிலம்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், எய்தாதது எய்துவித்தலும் எய்தியது இகந்துபடாமற் காத்தலும் கூறியது.

**இ–ள்.:– அல்வழி** – அல்வழிப் பொருட் புணர்ச்சிக்கண்ணே, **இ ஐ முன்னராயின்** – இகர ஐகாரத்தின் முன்னே வருமொழி வல்லெழுத்து வந்ததாயின், **இயல்புமிகலும்** – இயல்பாய் முடிதலும் மிக்கு முடிதலும், **விகற்பமுமாகும்** – ஒன்றற்கே ஒருகால் மிக்கும் மிகாதும் வருவனவாம், எ–று.

**உ–ம்.:–**

பருத்தி, பொதி, யானை, குதிரை: குறிது, சிறிது, தீது, பெரிது என இயல்பாயின. "ஆடித்திங்கள்", அலிக் கொற்றன் எனவும்; சித்திரைத் திங்கள், புலைக் கொற்றன் எனவும் மிக்கு முடிந்தன. கிளிகுறிது, கிளிக்குறிது எனவும் தினைகுறிது, தினைக்குறிது எனவும் உறழ்ந்து வந்தன. பிறவுமன்ன.

மிகுதி இறந்துபடாமற்கு ஈண்டுக் கூறினாரென்க.

## விசாகப் பெருமாளையர்

**இது,** இகர ஐகார வீற்றஃறிணைப் பெயர் முன் வருகிற வல்லினத்திற்கு ஒருவழி எய்தியது விலக்கலும் எய்தியதிகந்து படாமைக் காத்தலும் எய்தியது விலக்கலுடன் விலக்காமையும் உணர்த்துகின்றது.

**இ–ள்.:– இ ஐம் முன்னர்** – இகர ஐகார வீற்றஃறிணைப் பெயர்முன், **அல்வழி**–அல்வழியினிடத்து, **ஆயின்**–வல்லினம் வருமாயின், **இயல்பும்**–இயல்பாதலும், **மிகலும்**–பொதுவிதியான் மிகுதலும், **விகற்பமும்**–ஒன்றற்கே பொருகான் மிகாமையும் ஒருகான்–மிகுதலும், **ஆகும்** – ஆகும், எ–று.

ஒப்பின் முடித்தலால் ஐகாரவீறு முடன்கூறினார்.

**உ–ம்.:–**

பருத்தி, ஒதி, யானை, குதிரை இவற்றின் முன் குறிது, சிறிது, தீது, பெரிது, இவற்றை வருவித்து, பருத்தி குறிது என முறையே கூட்டி இயல்பாதல் காண்க.

கிளி+குறிது–கிளிக்குறிது.

தினை+குறிது–தினைக்குறிது; விகற்பித்தன.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

அல்வழியிலே இஐ முன்னே வன்கணம் எவ்வாறு புணரும்?

அல்வழி இ ஐம் முன்ன ராயின்
இயல்பு மிகலும் விகற்பமு மாகும்.
(அல்வழி இ ஐம் முன்னர் ஆயின்
இயல்பும் மிகலும் விகற்பமும் ஆகும்)

இ–ள்.:– இ ஐம் முன்னர் அல்வழி ஆயின் – இகர ஐகாரவீற்றஃறிணைப் பெயர்முன் வல்லினம் அல்வழியினிடத்து வருமாயின், **இயல்பும் மிகலும் விகற்பமும் ஆகும்** – இயல்பாதலும் பொது விதியான் மிகுதலும் ஒன்றற்கே ஒருகான் மிகாமையும் ஒரு கான் மிகுதலும் ஆகும், எ–று.

ஒப்பின் முடித்தலால், ஐகாரவீறும் உடன் கூறினார்.

இயல்பு எழுவாய்த்தொடர், உம்மைத் தொகைகளிலும், மிகுதி பண்புத்தொகை, உவமைத் தொகைகளிலும் விகற்பஞ் சில பெயர்முன் எழுவாய்த் தொடரிலுங் கொள்ளப்படும்.

உ–ம்.: –

(1) பருத்திகுறிது, யானைகரிது என எழுவாய்த்தொடரிலும், பரணி கார்த்திகை, யானை . குதிரை என உம்மைத் தொகையிலும், வலி இயல்பாயின.

(2)மாசித்திங்கள், சாரைப்பாம்பு எனப் பண்புத் தொகையிலும், காவிக்கண், பனைக்கை என உவமைத் தொகையிலும், வலி மிக்கன.

(3)கிளிகுறிது, கிளிக்குறிது, தினைகுறிது, தினைக் குறிது, என எழுவாய்த் தொடரில் விகற்பித்தன.

இயல்பு என்றது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்திய தொருவழி விலக்கல்; மிகல் என்றது எய்தியதிகந்து படாமைக் காத்தல்; விகற்பம் என்றது எய்தியது விலக்கலுடன் விலக்காமை.

## முகவை இராமானுச கவிராயர்

இது, இகர ஐகார ஈற்று அஃறிணைப் பெயர் முன் வரும் வல்லினத்திற்கு எய்தியது ஒரு பக்கம் விலக்கலும், எய்தியது பிறழாமற் காத்தலும், எய்தியது விலக்கலுடன் விலக்காமையு முணர்த்திற்று.

**இ–ள்.:– அல்வழி இ ஐ முன்னராயின்** – அல்வழிச் சந்தியில் இகர ஐகார ஈற்று அஃறிணைப்பெயர் முன் வல்லினம் வந்து புணருமாயின், **இயல்பு மிகலும் விகற்பமு மாகும்** – இயல்பாகியும் பொது விதியால் மிகுந்தும் ஒன்றிற்கே ஒருகால் மிகுந்து ஒருகால் மிகாது விகற்பித்தும் புணரும், எ–று.

இவ் விதி மிகுதி யொன்றுமே பொதுச் சூத்திரத்தால் அமைந்து கிடந்த அஃறிணைப்பெயர்க் கெனக் கொள்க. **ஒப்பின்முடித்த லென்னும்** உத்தியால் ஐகார ஈறுமுடன் கூறினார்.

**உ–ம்.:–**

பருத்தி, ஒதி, யானை, குதிரை, என நிறுத்தி, குறிது–சிறிது–தீது–பெரிது என வருவித்து ஒட்டி இயல்பாதல் காண்க. ஆடித்திங்கள், சித்திரைத்திங்கள் என மிக்கன. கிளிகுறிது கிளிக்குறிது, தினைகுறிது தினைக்குறிது என விகற்பித்தன. பிறவுமன்ன. இவ்விதி மூன்றினுள் மிகுதி எய்தியது இகந்துபடாமற் கூறினார். (இகந்துபடுதல்–பிறழுதல்.)

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :– அல்வழி – அல்வழிப் புணர்ச்சியில், இ ஐ முன்னர் – (நிலைமொழி) இகர ஐகாரங்களின் முன், ஆயின் – (வல்லினம்) வருமாயின், **இயல்பும் – இயல்பாதலும், மிகலும் – (பொதுவிதியால்) மிகுதலும், விகற்பமும்** – விகற்பித்தலும் (ஒன்றற்கே ஒருகால் மிகாமையும், ஒருகால் மிகுதலும்) ஆகும்.

குறிப்பு :–

இவ்வாறு பொதுப்படக் கூறினாரேனும், எழுவாய்த் தொடர், உம்மைத் தொகை, வினைத் தொகைகளில் இயல்பும்; பண்புத் தொகை, உவமைத்தொகைகளில் மிகுதலும்; சில எழுவாய்த் தொடர்களில் விகற்பமுமாம் எனக் கொள்க. ஒப்பின் முடித்தல் என்னும் உத்தியால் ஐகார வீறுமுடன் கூறினார்.

**உதாரணம். :–**

பருத்தி + குறிது = பருத்தி குறிது.

பருத்தி சிறிது.

பருத்தி + தீது = பருத்தி தீது.

பருத்தி பெரிது.

இடி+சுவர்=இடிசுவர்.

யானை + கரிது = யானை கரிது.

யானை சிறிது

யானை + தீது = யானை தீது

யானை பெரிது

உரை + கல் = உரைகல்

– அல்வழியில் இ ஐ முன் வலி இயல்பாயிற்று.

மார்கழி + திங்கள் = மார்கழித் திங்கள்.

பனை + கை = பனைக்கை

– வலி மிக்கது

கிளி + குறிது = கிளி குறிது; கிளிக்குறிது

தினை + சிறிது = தினை சிறிது; தினைச்சிறிது

– விகற்பித்தது

கீழ்க்கூறிய "உரிவரின்", "சுவைப்புளி" என்னும் சூத்திரங்களும், மேற்கூறப்படும் "ஆமுன்" என்னும் சூத்திரமும் பெயர்க்கேயாதலால் இடைநின்ற இச்சூத்திர மும் பெயர்க்கே எனவும்; பொதுப் பெய ருயர்திணைப் பெயர்கட்கு விதி முன்னரே கூறியுள்ளமையால் இவை அஃறிணைப் பெயர்க்கெனவும் கொள்ளநிற்கும். இங்ஙன மாயின், 'இடிசுவர்' 'உரைகல்' முதலிய உதாரணங்களை "இயல்பினும் விதியினும்" என்ற பொதுவிதியுளடக்குக.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– இ ஐம் முன்னர் – இகர ஐகார வீற்றஃறிணைப்பெயர் முன், அல்வழி ஆயின் – வல்லினம் அல்வழியினிடத்து வருமாயின், இயல்பும் – இயல்பாதலும், மிகலும் – பொதுவிதியான் மிகுதலும், விகற்பமும் ஆகும்– ஒன்றற்கே ஒருகான் மிகாமையும் ஒருகான் மிகுதலும் ஆகும், எ – று.

ஒப்பின்முடித்தலால், ஐகாரவீறும் உடன் கூறினார்.

இயல்பு எழுவாய்த்தொடர் உம்மைத்தொகைகளிலும், மிகுதி பண்புத்தொகை உவமைத்தொகைகளிலும், விகற்பஞ் சில பெயர்முன் எழுவாய்த்தொடரிலுங் கொள்ளப்படும்.

உ–ம்.:–

(1)பருத்திகுறிது, யானைகரிது என எழுவாய்த் தொடரிலும், பரணி கார்த்திகை, யானை குதிரை என உம்மைத் தொகையிலும், வலி இயல்பாயின.

(2)மாசித்திங்கள், சாரைப்பாம்பு எனப் பண்புத்தொகையிலும், காவிக்கண், பனைக்கை என உவமைத்தொகையிலும், வலிமிக்கன.

(3) கிளிகுறிது, கிளிக்குறிது, தினைகுறிது, தினைக்குறிது என எழுவாய்த் தொடரில் விகற்பித்தன.

இயல்பு என்றது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்திய தொருவழி விலக்கல்; மிகல் என்றது எய்தியதிகந்துபடாமைக் காத்தல்; விகற்பம் என்றது எய்தியது விலக்கலுடன் விலக்காமை.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். இ ஐம் முன்னர்** – இகர ஐகாரவீற்றஃறிணைப் பெயர்முன், – **அல்வழி ஆயின்** – வல்லினம் அல்வழியினிடத்து வருமாயின், – **இயல்பும்** – இயல்பாதலும், – **மிகலும்** – பொதுவிதியான் மிகுதலும், – **விகற்பமும் ஆகும்** – ஒன்றற்கே ஒருகான் மிகாமையும் ஒருகான் மிகுதலும் ஆகும். எ–று.

ஒப்பின் முடித்தலால், ஐகாரவீறும் உடன் கூறினார்.

உ–ம்.:–

(1) பருத்திகுறிது, யானைகரிது என எழுவாய்த்தொடரிலும், பரணி கார்த்திகை, யானைகுதிரை என உம்மைத் தொகையிலும், வலி இயல்பாயின.

(2) மாசித்திங்கள், சாரைப்பாம்பு, எனப் பண்புத் தொகையிலும், காவிக்கண், பனைக்கை என உவமைத் தொகையிலும் வலிமிக்கன.

(3) கிளிகுறிது, கிளிக்குறிது, தினைகுறிது, தினைக்குறிது என எழுவாய்த் தொடரில் விகற்பித்தன.

இயல்பு என்றது 'இயல்பினும் விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதொரு வழிவிலக்கல்; மிகல் என்றது எய்தியதிகந்து படாமைக்காத்தல்; விகற்பம் என்றது எய்தியது விலக்கலுடன் விலக்காமை.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ-ள்.:- அல்வழி** - அல்வழிப் புணர்ச்சியில், **இ ஐ முன்னர்** (நிலைமொழி யீற்று) இகர ஐகாரங்களின் முன், **ஆயின்** - (வல்லினம்) வருமாயின், **இயல்பும்** - இயல்பாதலும். **மிகலும்** - (பொதுவிதிப்படியே) மிகுதலும், **விகற்பமும்**-விகற்பித்தலும் (ஒன்றுக்கே ஒருகால் மிகாமையும் ஒருகால் மிகுதலும்), ஆகும், எ-று. இவ்வாறு பொதுப்படக் கூறினாராயினும், இயல்பு மிகுதி விகற்பங்களை இடத்துக்கு ஏற்றபடி கொள்க.

**ஒப்பின்முடித்தல்** என்னும் உத்தியால், ஐகாரவீறும் உடன் கூறினார். பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்கட்கு விதி முன்னமே அமைந்திருத்தலால், இச் சூத்திரவிதி அஃறிணைப் பெயர்க்கும் வினை முதலியவற்றிற்குமாம்.

**உ-ம்.:-**

(1) புலி + சிறிது = புலிசிறிது, யானை + பெரிது = யானைபெரிது, செடி + கொடி = செடிகொடி, யானை + குதிரை = யானைகுதிரை, இடி + சுவர் = இடிசுவர், உரை + கல் = உரைகல் - இ ஐ முன் அல்வழியில் வலி இயல்பாயின.

(2) மார்கழி + திங்கள் = மார்கழித்திங்கள், ஆடி + கொண்டான் = ஆடிக்கொண்டான், பனை + கை = பனைக்கை - வலி மிக்கன.

(3) கிளி + குறிது = கிளிகுறிது, கிளிக்குறிது; கடி + கமலம் = கடிகமலம், கடிக்கமலம்; தினை + சிறிது = தினைசிறிது, தினைச்சிறிது- விகற்பித்தன.

## பவானந்தம் பிள்ளை

**இ-ள்.:- இ ஐம் முன்னர்** - இகர ஐகாரவீற்று அஃறிணைப் பெயர் முன், அல்வழிஅயின் - வல்லினம் அல்வழியினிடத்து வருமாயின், இயல்பும் - இயல்பாதலும், மிகலும் - பொதுவிதியான் மிகுதலும், விகற்பமும் ஆகும் - ஒன்றற்கே ஒருகான் மிகாமையும் ஒருகான் மிகுதலும்ஆகும். எ-று.

'ஒப்பின் முடித்த' லால், ஐகாரவீறும் உடன் கூறினார்.

இயல்பு எழுவாய்த் தொடர் உம்மைத் தொகைகளிலும், மிகுதி பண்புத் தொகை உவமைத்தொகைகளிலும், விகற்பஞ் சில பெயர்முன் எழுவாய்த தொடரிலுங் கொள்ளப்படும்.

**உ-ம்.:-**

(1) பருத்தி + குறிது = பருத்திகுறிது, யானை + கரிது = யானைகரிது - என எழுவாய்த தொடரிலும், பரணி +

கார்த்திகை = பரணிகார்த்திகை. யானை + குதிரை = யானைகுதிரை – என உம்மைத் தொகையிலும், வலி இயல்பாயின.

(2) மாசி + திங்கள் = மாசித்திங்கள். சாரை + பாம்பு = சாரைப்பாம்பு – எனப் பண்புத்தொகையிலும், காவி + கண் = காவிக்கண், பனை + கை = பனைக்கை – என உவமைத்தொகையிலும், வலி மிக்கன.

(3) கிளி + குறிது – களிஸகறிது, கிளிக்குறிது; தினை + குறிது – தினைகுறிது, தினைக்குறிது – எஉன எழுவாய்த் தொடரில் விகற்பித்தன.

'இயல்பு' என்றது "இயல்பினும் விதியினும்" என்னும் 165–வது சூத்திரத்தால் எய்திய தொருவழி விலக்கல்; 'மிகல்' என்றது எய்திய திகந்துபடாமைக் காத்தல்; விகற்பம் என்றது எய்தியது விலக்கலுடன் விலக்காமை.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள்.:–** **இ ஐ முன்னர்** – இகர ஐகாரவீற்று அஃறிணைப் பெயர்முன், **அல்வழி** – அல்வழியினிடத்து, **ஆயின்** – (வல்லினம்) வருமாயின், **இயல்பும்** – இயல்பாதலும், **மிகலும்** – (பொதுவிதியால்) மிகுதலும், **விகற்பமும் ஆகும்** – (ஒன்றற்கே) ஒருகான் மிகாமையும் ஒருகான் மிகதலும் ஆகும். எ–று.

பொ–ரை.:– அல்வழிப் புணர்ச்சியில் நிலைமொழி ஈற்று இகர ஐகார அஃறிணைப் பெயர்முன் (வல்லினம்) வருமாயின் இயல்பாதலும், பொதுவிதியால் மிகுதலும், ஒன்றற்கே ஒருகால் மிகாமையும், ஒருகால் மிகுதலும் ஆகும்.

இவ்வாறு பொதுப்படக் கூறினாராயினும் இயல்பு மிகுதி விகற்பங்களை இடத்துக்கு ஏற்றபடி கொள்க.

ஒப்பின் முடித்தல் என்னும் உத்தியால், ஐ கார ஈறும் உடன் கூறினார். (ஒப்பின் முடித்தல் என்றது – இகரவீற்றிற்குச் சொல்லப்பட்ட இலக்கணம் ஐகாரவீற்றிற்கும் ஒத்துவரு தலால், அதற்கு அதுவே இலக்கணமாக வருதலை.)

பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கட்கு விதி முன்னமே அமைந்திருத்தலால், இச் சூத்திரவிதி அஃறிணைப் பெயர்க்கும், வினை முதலியவற்றிற்கும் ஆம்.

உ–ம்.:–

பருத்தி+குறிது = பருத்திகுறிது.–இ ஐ முன் அல் வழியில் இயல் பாயின.

+சிறிது = பருத்திசிறிது.

+தீது = பருத்திதீது.

+பெரிது = பருத்திபெரிது.

யானை + குறிது = யானைகுறிது.

+சிறிது =யானைசிறிது.

+தீது = யானைதீது.

+பெரிது = யானைபெரிது.

சாரை + பாம்பு = சாரைப்பாம்பு. – வலிமிக்கன.

பனை + கை = பனைக்கை.

கிளி + குறிது = கிளிகுறிது, கிளிக்குறிது. – விகற்பித்தன.

தினை + குறிது = தினைகுறிது, தினைக்குறிது.

## கா.நமச்சிவாய முதலியார்

இ ஐ முன்னர் – இகர ஐகாரவீற் றஃறிணைப் பெயர் முன், அல்வழி – அல்வழியினிடத்து, ஆயின் – வல்லினம் வருமாயின், இயல்பும் – இயல்பாதலும், மிகலும் – பொது விதியால் மிகுதலும், விகற்பமும் – ஒன்றற்கே ஒருகால் மிகாமையும் ஒருகால் மிகுதலும், ஆகும் – ஆகும்.

ஒப்பின் முடித்தலால் ஐகாரவீறும் உடன் கூறினார்.

இயல்பு எழுவாய்த் தொடர் உம்மைத் தொகைகளிலும், விகுதி பண்புத்தொகை உவமத் தொகைகளிலும், விகற்பம் இரண்டு குறிலாவது குறில் நெடிலாவது இணைந்து வரும் சொற்களை நிலைமொழியாகக் கொண்ட சில எழுவாய்த் தொடரிலும் கொள்க.

உதாரணம்.:–

| | | | |
|---|---|---|---|
| பருத்தி | + | குறிது | = பருத்திகுறிது |
| யானை | + | கரிது | = யானைகரிது |
| | | எழுவாயில் இயல்பு. | |
| ஆவணி | + | புரட்டாசி | = அவணிபுரட்டாசி |
| யானை | + | குதிரை | = யானைகுதிரை |

உம்மைத் தொகையில் இயல்பு.

| | | | | |
|---|---|---|---|---|
| மாசி | + | திங்கள் | = | மாசித்திங்கள் |
| சாரை | + | பாம்பு | = | சாரைப்பாம்பு |

பண்புத்தொகை முன் மிகுதல்.

| | | | | |
|---|---|---|---|---|
| காவி | + | கண் | = | காவிக்கண் |
| பனை | + | கை | = | பனைக்கை |

உவமத் தொகை முன் மிகுதல்

| | | | | |
|---|---|---|---|---|
| கிளி | + | குறிது | = | கிளி குறிது, கிளிக்குறிது |
| தினை | + | குறிது | = | தினை குறிது, தினைக்குறிது |

– எழுவாய்த் தொடரில் விகற்பம்.

## மோசகு பொன்னையா

அல்வழிப் புணர்ச்சியில் இகர ஐகார ஈற்று நிலைகளின் முன்னர் வல்லின முதன்மொழி வருமாயின் இயல்பாதலும், பொது விதியால் மிக்கு முடிதலும், ஒன்றே மிக்கும் மிகாதும் முடிதலும் ஆகும், எ–று.

இவ்விதி முன்னர் அமைக்கப்படாத அஃறிணைப் பெயருக்கே என்றும்;இயல்பு எழுவாய்த்தொடர் உம்மைத் தொகைகளிலும்; மிகுதி பண்புத்தொகை, உவமைத் தொகைகளிலும்; விகற்பம் எழுவாய்த் தொடரிலுமே கொள்க. ஒப்பின் முடித்தலால் ஐகார ஈறும் உடன் கூறப்பட்டது.

எ–டு.:–

புலி சிறிது, யானை பெரிது – (எழுவாய்)
யானை குதிரை; செடி கொடி – (உம்மை)
– இயல்பாயின

மாசித்திங்கள்; சாரைப்பாம்பு – (பண்பு)
காவிக்கண்; பனைக்கை – (உவமை)
– வலிமிக்கன

கிளி குறிது; கிளிக்குறிது

(எழுவாய்) விகற்பித்தன
திணை குறிது; திணைக்குறிது

(26)

176. ஆமுன் பகரவீ யனைத்தும்வரக் குறுகும்
மேலன வல்வழி யியல்பா கும்மே.

ஆ முன் பகர வீ அனைத்தும் வரக் குறுகும்
மேலன அல்வழி இயல்பு ஆகுமே

ā mun̲ pakara vī an̲aiṭṭum varak
kuṟukum
mēlan̲a alvaḷi iyalpu ākumē

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### WORD WITH I AS FINAL

### Special rule â and pi

a plus pl becomes âppi whatever initials may follow the latter; and in the combination (of âppi with Hard initials), the latter are not doubled.

## ஒப்புமைப் பகுதி

ஆன்முன் வரூஉம் ஈகார பகரம்
தான்மிகத் தோன்றிக் குறுகலு முரித்தே.

(தொல்.: 234)

ஆமுன் பகரவீக் குறுகுமம் வழியும்
வல்லெழுத் தியற்கை யல்வழி யான.

(இ.வி.: 94)

ஆமுன் பகரவீ யனைத்தும் வரக் குறுகும்

(மு.வீ.: 258)

## மயிலை நாதர்

எ – ன், எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ–ள்.:– ஆ வென்னும் பெயரீற்றி னின்ற பகர வீகாரம் நாற்கணத்தோடும் புணருமிடத்து இருவழியும் குறுகும்; குறுகிநின்ற அதன்மீதே வரும் வல்லினம் அல்வழிக்கண் இயல்பாம், எ– று.

வ – று.:–

ஆப்பி யரிது; குளிரும், நன்று, வலிது எனவும், ஆப்பியருமை; குளிர்ச்சி, நன்மை, வன்மை எனவும் இருவழியும் குறுகிற்று.

ஆப்பிகுறிது; சிறிது, தீது, பெரிது என அல்வழிக்கண் வல்லெழுத்துக்கள் இயல்பாயின.

ஆப்பிப்புழு என வேற்றுமைக்கண் வல்லெழுத்து மிக்கதெனக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

## சிவஞான முனிவர்

எ – னின், தொடர்மொழியுள் பின்நின்ற இடக்கர்ச் சொல்லினது ஈற்று ஈகாரத்திற்கு எய்தாதது எய்துவித்தலும், எய்தியவழி அதன்முன் வரும் வல்லினத்திற்கு ***ம்மேலைச் சூத்திரத்தான்ம்*** எய்தியது இகந்துபடாமைக் காத்தலும் நுதலிற்று.

இ–ள்.:– ஆ என்னும் பெயர்முன் நின்ற பகர ஈகாரம் இருவழியும் நாற்கணங்களும் வரின் குறுகும்; குறுகி விதி இகர ஈறாக நின்ற அதன்மேல் வரும் வல்லினம், அல்வழிக்கண் மேலைச் சூத்திரத்துள் கூறிய விதி மூன்றனுள் இயல்பைப் பெறும், எ–று.

குறுகுதற்குக் காரணம் அனைத்தும் வருதலே யன்றி மேல்நின்ற ஆவுமாம் என்பார் ஆ முன் என்றார்.

பகரவீ என்றது இடக்கரடக்கல். வரும் சூத்திரத்துள் பவ்வீயும் அது.

ஆ என்னும் சொல்லும், நாற்கணத்துள் ஒன்று முன்னும் பின்னும் தொடராதேல் குறுகாது என்பார் வரக் குறுகும் என்றார். இருமொழியை நிலைமொழியாக நிறீஇப் புணர்த்தமையான் வரும் ஈறு விதி இகர ஈறாதலின் எய்தியது இகந்துபடாமை இயல்பாகும் என்றார்.

ஆகும்மே என்றது விரித்தல் விகாரம்.

உ–ம்.:–

ஆப்பியரிது, ஆப்பி குளிரும், ஆப்பி நன்று, ஆப்பி வலிது எனவும்; ஆப்பி யருமை, ஆப்பிக் குளிர்ச்சி, ஆப்பி நன்மை, ஆப்பி வன்மை எனவும் இருவழியும் ஈகாரம் குறுகுதலும் அல்வழிக்கண் வல்லின இயல்பு இகந்துபடாமையும் காண்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், ஈகார வீற்றிற்கு எய்திபது விலக்கிப் பிறிது விதி கூறியது.

**இ-ள்.:** **ஆமுன் பகரவீ** - ஆவென்னும் பெயரீற்று நின்ற பகரவீகாரம், **அனைத்தும் வரக் குறுகும்** - இருவழியும் நாற்கணத்தோடும் புணருமிடத்துக் குறுகும், **மேலன** - அங்ஙனம் குறுகி நின்ற ஈகாரத்தின் மேலே வரும் வல்லினம், **அல்வழி** - அல்வழிப் பொருட்புணர்ச்சிக்கண்ணே, **இயல்பாகும்மே** - மிகாது இயல்பாய் முடியும், எ-று.

உ-ம்.:-

ஆப்பியரிது, குளிரும், நன்று, வலிது எனவும்; ஆப்பியருமை, குளிர்ச்சி, நன்மை, வன்மை எனவும் இரு வழியும் குறுகின. ஆப்பி குறிது, சிறிது, தீது, பெரிது என இயல்பாயின. ஆப்பிப்புழு என வேற்றுமைக்கண் மிக்கது.

## விசாகப் பெருமாளையர்

**இது,** ஆ முன்னின்ற பகர வீகாரத்திற்கு எய்தாததெய்து வித்தலும் எய்தியவழி வருகிற வல்லினத்திற்கு எய்திய திகந்துபடா மைக் காத்தலுஞ் சொல்லுகின்றது.

**இ-ள்.:-** **ஆமுன்பகரவீ** - ஆ முன் னின்ற பகர வீகாரம், **அனைத்தும்** - நாற்கணமும், **வர**-வந்தால், **குறுகும்**-குறுகும், **அல்வழி**-அல்வழியில், **மேலன**-மேலைச்சூத்திரத்தினுட் கூறிய விதி மூன்றனுள், **இயல்பாகும்**-வருகிற வல்லினம் இயல்பைப் பெறும், எ-று.

உ-ம்.:-

ஆப்பியரிது, ஆப்பிகுளிரும் , ஆப்பிநன்று, ஆப்பிவலிது எனவும், ஆப்பியருமை, ஆப்பிக்குளிர்ச்சி, ஆப்பிநன்மை, ஆப்பிவன்மை, எனவும் வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஆப்பீ என்பது நாற்கணத்தோடும் புணரும்போது எவ்வாறாம்?

ஆமுன் பகரவீ யனைத்தும் வரக் குறுகும்
மேலன வல்வழி யியல் பாகும்மே.
(ஆ முன் பகரவீ அனைத்தும் வரக் குறுகும்
மேலன அல்வழி இபல்பு ஆகும்)

**இ–ள்.:– ஆ முன் பகரவீ அனைத்தும் வரக்குறுகும் –** ஆ என்னும் பெயர் முன் நின்ற பகரவீகாரம் இருவழியும் நாற்கணமும் வரிற் குறுகும்; **மேலன அல்வழி இயல்பு ஆகும் –** குறுகி விதியிகர வீறாக நின்ற அதன்மேல் வரும் வல்லினம் அல்வழியிலே மேலைச் சூத்திரத்துட் கூறிய விதி மூன்றனுள் இயல்பைப் பெறும், எ–று.

பகரவீ என்றது இடக்கரடக்கல்; வருஞ் சூத்திரத்திற் பவ்வீ என்பதும் அது. இடக்கரென்பது சபையிலே சொல்லத் தகாத சொல். இடக்கர், அவையல்கிளவி என்பன ஒரு பொருட் சொற்கள். இடக்கரடக்கல் என்பது சொல்லத் தகாத சொல்லை அவ்வாய்பாடு மறைத்துப் பிறவாய்பாட்டாற் சொல்லல்.

உ–ம்.:–

ஆப்பியரியது, ஆப்பிகுளிரும், ஆப்பிநன்று, ஆப்பிவலிது என வரும். இனி வேற்றுமையில், ஆ ப்பியருமை, ஆப்பிக்குளிர்ச்சி ஆப்பிநன்மை, ஆப்பிவன்மை எனவரும்.

ஆமுன் பகரவீ அனைத்தும் வரக் குறுகும் என்றது எய்தாததெய்துவித்தல்; அஃதெய்தியவழி வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாகும் என்றது மேலைச் சூத்திரத்தால் எய்தியதிகந்து படாமைக் காத்தல்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, ஈகாரங் குறுகுமென எய்தாதது எய்துவித்தலும் வரும் வல்லினத்திற்கு எய்தியது பிறழாமற் காத்தலு முணர்த்திற்று.

**இ–ள்.: ஆ முன் பகரவீ** – ஆ வென்னுஞ் சொல்லின் பின்னின்ற பகர ஒற்றின் மேலேறிய ஈகாரமானது, **அனைத்தும் வரக் குறுகும்**–(இரு வழியிலும்) நாற்கணங்களும் வந்து புணரக் குறுகி இகர ஈறாய் நிற்கும், **மேலன**–மேற்கூறிய விதி முன்றினுள், **அல்வழி** – (அல்வழி யியல்பு போல) அல்வழிச் சந்தியில், **இயல்பாகும்** – இயல்பு விதியைப் பெறும், எ–று.

இதிற் 'பகரவீ' என்றதும், வருஞ் சூத்திரத்திற் 'பவ்வீ' என்பதும், இடக்கரடக்கல். இடக்கரடக்கல் என்றது, மறைத்துச் சொல்லுஞ்சொல். இருமொழியை நிலைமொழியாக வைத்துப் புணர்த்த செயற்கை இகர ஈறாதலால் எய்தியது பிறழாமல் 'இயல்பாகு'மன்றார்.

உ–ம்.:–

ஆப்பி யரிது, ஆப்பி குளிரும், ஆப்பி நன்று, ஆப்பி வலிது, எனக் குறுகுதலும் வல்லெழுத்தியல் பாதலுங் காண்க.

'அல்வழி யியல்பாகு' மெனவே, ஆப்பிக் குளிர்ச்சி, ஆப்பிச் செறிவு, ஆப்பித்திரட்சி, ஆப்பிப்பொலிவு என வேற்றுமையில் பொதுவிதியால் மிக்கு முடியுமெனக் காண்க. பகர வீ குறுகும், வல்லெழுத் தியல்பாம் என முடிக்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :–** ஆ முன் பகர ஈ–ஆ என்னும் பெயரின் முன்நின்ற பகர ஈகாரம் (ஆப்பீ), **அனைத்தும்வர** – (இருவழியிலும்) நாற்கணமும் வந்தால், **குறுகும்** – குறுகி இகரமாகும்; **அல்வழி** – அல்ழியில், **மேலன** – மேல் "அல்வழி இ ஐ" என்னும் சூத்திரத்திற் கூறியவிதி மூன்றனுள், **இயல்பு ஆகும்** – (குறுகி விதியிகரவீறான அதன்முன் வருகிற வல்லினம்) இயல்பைப் பெறும். (ஆப்பீ – பசுச்சாணம்)

**உதாரணம். :–**

ஆப்பீ + அரிது = ஆப்பியரிது

ஆப்பீ + நன்று = ஆப்பிநன்று.

ஆப்பீ + குளிரும் = ஆப்பிகுளிரும்

ஆப்பீ + வலிது = ஆப்பிவலிது.

குறிப்பு.:–

'அல்வழி யியல்பாகும்' எனவே வேற்றுமையில் ஆப்பிக் குளிர்ச்சி, ஆப்பித்திரட்சி எனப் பொதுவியால் வலிமிகு மெனக்கொள்க.

இச்சூத்திரத்தில் "பகரவீ" என்றதும், வருஞ்சூத்திரத்தில் "பவ்வீ" என்பதும் இடக்கரடக்கல்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:– ஆ முன் பகரவீ அனைத்தும் வரக் குறுகும்** – ஆ என்னும் பெயர்முன் நின்ற பகர வீகாரம் இருவழியும் நாற்கணமும் வரிற் குறுகும், **அல்வழி மேலன இயல்பு ஆகும்** – குறுகி விதி யிகரவீறாக நின்ற அதன்மேல் வரும் வல்லினம் அல்வழியிலே மேலைச் சூத்திரத்துட் கூறிய விதி மூன்றனுள் இயல்பைப் பெறும், எ–று.

பகரவீ என்றது இடக்கரடக்கல்; வருஞ் சூத்திரத்திற் பவ்வீ என்பதும் அது. இடக்கரென்பது சபையிலே சொல்லத் தகாத சொல். இடக்கர், அவையல்கிளவி என்பன ஒருபொருட்சொற்கள். இடக்கரடக்கல் என்பது சொல்லத் தகாத சொல்லை அவ் வாய்பாடு மறைத்துப் பிற

வாய்பாட்டாற் சொல்லல்.

உ–ம்.:–

ஆப்பியரிது, ஆப்பிகுளிரும், ஆப்பிநன்று, ஆப்பிவலிது எனவும், ஆப்பியருமை, ஆப்பிக்குளிர்ச்சி, ஆப்பிநன்மை, ஆப்பிவன்மை. எனவும் வரும்.

ஆ முன் பகரவீ அனைத்தும் வரக் குறுகும் என்றது எய்தாத தெய்துவித்தல்; அஃதெய்தியவழி வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாகும் என்றது மேலைச் சூத்திரத்தால் எய்தியதிகந்துபடாமைக் காத்தல்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– ஆ முன் பகரவீ அனைத்தும் வரக் குறுகும் – ஆ என்னும் பெயர் முன் நின்ற பகரவீகாரம் இருவழியும் நாற்கணமும்வரிற் குறுகும், – அல்வழி மேலன இயல்பு ஆகும் – குறுகி விதியிகரவீறாக நின்ற அதன்மேல்வரும் வல்லினம் அல்வழியிலே மேலைச் சூத்திரத்துட் கூறிய விதி மூன்றனுள் இயல்பைப் பெறும். எ–று.

பகரவீ என்றது இடக்கரடக்கல்; வருஞ் சூத்திரத்திற் பவ்வீ என்பதும் அது, இடக்கரென்பது சபையிலே சொல்லத்தகாதசொல். இடக்கர் அவையல்கிளவி என்பன ஒருபொருட்சொற்கள். இடக்கரடக்கல் என்பது செல்லத்தகாதசொல்லை அவ்வாய்பாடு மறைத்துப் பிறவாய்பாட்டாற் சொல்லல்.

உ–ம்.:–

ஆப்பியரிது, ஆப்பிகுளிரும், ஆப்பிநன்று, ஆப்பிவலிது, எனவும். ஆப்பியருமை, ஆப்பிக்குளிர்ச்சி, ஆப்பிநன்மை ஆப்பிவன்மை எனவும் வரும்.

ஆமுன் பகரவீ அனைத்தும் வரக்குறுகும் என்றது எய்தாததெய்துவித்தல். அஃதெய்தியவழி வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாகும் என்றது மேலைச்சூத்திரத்தால் எய்திய திகந்து படாமைக்காத்தல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– ஆ முன் பகர ஈ – 'ஆ' என்னும் பெயரின் முன் நின்ற பகர ஈகாரம் (ஆப்பீ) அனைத்தும் வர–(இருவழியிலும்) நாற்கணமும் வந்தால், குறுகும்–குறுகி இகரமாகும்; அல்வழி – அல்வழியில், மேலன–மேல் "அல்வழி இ ஐ" என்னுஞ் சூத்திரத்திற் கூறிய விதி மூன்றில், இயல்பு ஆகும் – (குறுகிய அதன் முன் வருகிற வல்லினம்) இயல்பைப் பெறும்; எ–று.

உ-ம்.:-

ஆப்பீ + அரிது = ஆப்பி யரிது,

ஆப்பீ + நன்று = ஆப்பி நன்று,

ஆப்பி + குளிரும் = ஆப்பி குளிரும்,

ஆப்பி + வலிது = ஆப்பிவலிது.

'அல்வழி இயல்பாகும்' எனவே, வேற்றுமையில் ஆப்பிக் குளிர்ச்சி, ஆப்பித் திரட்சி எனப் பொதுவிதிப்படியே வலி மிகுமெனக் கொள்க.

இதில் "பகரவீ" என்றதும், வரும் சூத்திரத்தில் "பவ்வீ" என்பதும் இடக்கரடக்கல். பகரஈ, பவ்வீ-பகர மெய்யின் மேல் ஏறிய ஈகாரம். (ஆப்பீ-பசுச் சாணம்.)

## பவானந்தம் பிள்ளை

**இ-ள்.:- ஆ முன் பகரவீ அனைத்தும்வரக் குறுகும்** - ஆ என்னும் பெயர்முன் நின்ற பவரவீகாரம் இருவழியும் நாற்கணமும்வரிற் குறுகும், **அல்வழி மேலன இயல்பு ஆகும்** - குறுகி விதியிகரவீறாக நின்ற அதன்மேல் வரும் வல்லினம் அல்வழியிலே மேலைச்சத்திரத்துட் கூறிய விதிமூன்றனுள் இயல்பைப் பெறும். எ-று.

பகரவீ என்றது இடக்கரடக்கல்; வருஞ்சூத்திரத்திற் பவ்வீ என்பதும் அது. (இடக்கரென்பது சபையிலே சொல்த்தகாத சொல். இடக்கர், அவையல்கிளவி என்பன ஒருபொருட்சொற்கள். இடக்கரடக்கல் எனப்து சொல்லத்தகாத சொல்லை அவ்வாய்பாடு மறைத்துப் பிறவாய்பாட்டாற் சொல்லல்.

உ-ம்.:-

ஆப்பி + அரிது = ஆப்பியரிது, ஆப்பி + குளிரும் = ஆப்பிகுளிரும், ஆப்பி + நன்று = ஆப்பிநன்று, ஆப்பி + வலிது = ஆப்பிவலிது. - எனவும், ஆப்பி + அருமை = ஆப்பியருமை, ஆப்பி + குளிர்ச்சி = ஆப்பிக்குளிர்ச்சி, ஆப்பி + நன்மை = ஆப்பிநன்மை, ஆப்பி + வன்மை + ஆப்பி வன்மை - எனவும் பகரா இருவழியிலும் நாற்கணமும் வரக் குறுகலும், வல்லினம் அல்வழியில் இயல்பாதலும் காண்க.

அல்வழியியல்பாகும் என்றதால் வேற்றுமையில் பொதுவிதிப்படி (சூ. 165) மிக்கது.

'ஆமுன் பகரவீ அனைத்தும்வரக் குறுகும்' என்றதுஎய்தாத தெய்துவித்தல்; அஃதெய்தியவழி வரும் வல்லினம்

'அல்வழியில் இயல்பாகும்' என்றது மேலைச் சூத்திரத்தால் எய்திய திகந்துபடாமைக் காத்தல்.

## கா.நமச்சிவாய முதலியார்

ஆ முன் பகர ஈ – ஆமுன் னின்ற பகர ஈகாரம் (பீ), அனைத்தும் – நாற்கணமும், வர – வந்தால், குறுகும் – குறுகும்; அல்வழி – அல்வழியில், மேலென – மேலைச் சூத்திரத்துட் கூறிய விதி மூன்றனுள், இயல்பாகும் – வருகிற வல்லினம் இயல்பைப்பெறும்.

உதாரணம்.:–

| | | | | |
|---|---|---|---|---|
| ஆப்பீ | + | அரிது | = | ஆப்பியரிது |
| | + | குளிரும் | = | ஆப்பிகுளிரும் |
| | + | நன்று | = | ஆப்பிநன்று |
| | + | வலிது | = | ஆப்பிவலிது |
| ஆப்பீ | + | அருமை | = | ஆப்பியருமை |
| | + | குளிர்ச்சி | = | ஆப்பிக்குளிர்ச்சி |
| | + | நன்மை | = | ஆப்பிநன்மை |
| | + | வன்மை | = | ஆப்பிவன்மை |

'அல்வழி இயல்பாகும்' எனவே வேற்றுமையில் பொது விதியால் வலி மிகுந்தது. இச்சூத்திரத்தில், 'பகரவீ' என்றதும், வருஞ் சூத்திரத்தில், பவ்வீ என்பதும் இடக்கரடக்கல்.

## மோசசு பொன்னையா

ஆ என்ற சொல்லின் முன்னர் வரும் பகர ஈகாரம் வருமொழியாக நாற்கணம் வந்து புணரினும் குறுகி இகரமாய் நிற்கும்; அவ்வாறு குறுகிய இகரம் 'அல்வழி இ ஐம் முன்னர்' என்ற நூற்பாவால் அமைந்த மூன்று விதிகளுள் இயல்புவிதி ஒன்றையே பெறும், எ–று.

எ–டு.:–

ஆப்பியரிது; ஆப்பிகுளிரும்

ஆப்பி நன்று; ஆப்பிவலிது

அல்வழி இயல்பாகும் என்றதனால் வேற்றுமையில் ஆப்பிக்குளிர்ச்சி; ஆப்பித்திரட்சி எனப்பொது விதியால் மிகுதல் கொள்க. பகர ஈகாரம் – இடக்கரடக்கல்.

(27)

**177. பவ்வீ நீமீ முன்ன ரல்வழி**

இயல்பாம் வலிமெலி மிகலுமா மீக்கே.

பவ்வீ நீ மீ முன்னர் அல்வழி
இயல்பு ஆம் வலிமெலி மிகலும் ஆம் மீக்கே

pavvī nī mī munnar alvaḷi
iyalpu ām valimeli mikalum ām mīkkē

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Special rule for pî, nî, mî

In Incasual combination the Hard initials are not doubled after (the three vowels) pi, ni and mi; but after ( the last of these) mî, even Tenses or Nasals may be sometimes inserted.

## ஒப்புமைப் பகுதி

நீஎன் பெயரும் இடக்கர்ப் பெயரும்
மீஎன மரீஇய இடம்வரை கிளவியும்
ஆவயின் வல்லெழுத் தியற்கை யாகும்

(தொல்.: 251)

இடம்வரை கிளவிமுன் வல்லெழுத்து மிகூஉம்
உடனிலை மொழியும் உளவென மொழிப.

(தொல்.: 252)

பவ்வீ யல்வழி யியல்பு மீமுன்
இயல்பும் வலிமெலி மிகலுமாம் வேற்றுமை

(இ.வி.: 93)

ஈகார பகரமு நீயு மியல்பே

(மு.வீ.: 269)

மீயியல் பாதலு மெலிவலி மிகுதலும்
ஆகு மென்மனா ரறிந்திசி னோரே

(மு.வீ.: 271)

## மயிலை நாதர்

எ – ன், எய்திபது விலக்கலும் பிறிதுவிதி வகுத்தலும் நுதலிற்று.

இ–ள்.:– பகரத்தோடு கூடி நின்ற ஈகார வீற்றுப் பெயரே நீ யென்னு முன்னிலைப்பெயரே மீ யென்னும் இடப்பெயரே என்றிவற்றின் முன் வல்லினம்

அல்வழிக்கண் இயல்பாம்; மீ யென்பதன் முன் ஒரோவழி வல்லெழுத்து மெல்லெழுத்து மிகவும் பெறும், எ – று.

வ–று.: –

பீகுறிது; சிறிது, தீது, பெரிது எனவும், நீகுறியை; சிறியை, தீயை, பெரியை எனவும், மீகண் எனவும் இயல்பாயின. மீக்கோள், மீப்பாய் எனவும், மீங்குழி, மீந்தோல் எனவும் வலிமெலி மிக்கன.

## சங்கர நமச்சிவாயர்
## சிவஞான முனிவர்

எ–னின், ஈகார ஈற்று இடக்கர்ப்பெயர்க்கும் நீ என்னும் பெயர்க்கும் மீ என்னும் பெயர்க்கும் முன்னர் வரும் வல்லினத்திற்கு ஒருவழி *'இயல்பினும் விதியினும்' என்னும் சூத்திரத்தான்* எய்தியது விலக்கலும், இவற்றுள் மீ என்பதன் முன்வரும் வல்லினத்திற்கு *அச் சூத்திரத்தான்* எய்தியது இகந்துபடாமைக் காத்தலும், எய்தியது விலக்கிப் பிறிது விதியும் உணர்–ற்று.

இ–ள்.:– பகர ஒற்றை ஊர்ந்து நின்ற ஈகார ஈற்று இடக்கர்ப்பெயரும், நீ என்னும் முன்னிலை யொருமைப் பொதுப்பெயரும், மீ என்னும் மேலாய பண்பையும் அப்பண்பாகு பெயராய் மேலாய இடம் முதலியவற்றையும் உணர்த்தி நிற்கும் பலபொரு ளொருசொல்லும் நிற்க, இவற்றின்முன் வரும் வல்லினம் அல்வழிக்கண் இயல்பாம். இங்ஙனம் புணரும் மீ என்னும் சொற்கு முன் அல்வழிக்கண் வல்லெழுத்து மிகலுமாம்; மெல்லெழுத்து மிகலுமாம், எ–று.

உ–ம்.:–

பீ குறிது, சிறிது, தீது, பெரிது எனவும், நீ குறியை, சிறியை, தீயை, பெரியை எனவும்; மீகண் எனவும் இயல்பாயின. மீக்கூற்று, மீக்கோள் என எய்திய திகந்துபடாமை மிக்கது. மீந்தோல் என மெலி மிகுந்தது. பிறவும் ஏற்றபெற்றி வருவன உளவேல் கொள்க.

மீகண் என்பது, கண்ணினது மேலிடம் எனப் பொருள் தந்து நிற்குமேனும், ஆறனுருபின் பயனிலையாகும் மீ என்னும் வருமொழி நிலைமொழியாய் நின்று வல்லெழுத்து மிகாது புணர்ந்தமையின் இலக்கணப் போலியாய் அல்வழியாயிற்று.

மீக்கூற்று என்பது புகழ்; அது மேலாய சொல்லாற் பிறந்த புகழ் என்னும் மேம்பாடு எனப் பொருள் தந்து நிற்றலின் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

மீக்கோள் என்பது மேற்போர்வை; அது யாக்கையின் மேற்

கொள்ளுதலை யுடைய போர்வை எனப் பொருள் தந்து நிற்றலின் ஏழாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. ஈண்டு மீ, என்றது, இடப்பொரு ளோடு ஏழாம் வேற்றுமை யுருபின் பொருள்பட நின்றதேனும், கண்ணாதி யுருபு வேண்டாமையின் வேற்றுமைத் தொகை யாயிற்று.

மீந்தோல் என்பது மேற்றோல்; அது மேலாய தோல் எனப் பொருள்தந்து நிற்றலின் பண்புத்தொகை. இஃது இக்காலத்துப் பீந்தோல் என மரீஇயிற்று.

நீ என்பதன் முன் வல்லினம் இயல்பாதல் 'பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்கள் ஈற்றுமெய்' என்னும் சூத்திரத்தான் அமையாதோ எனின்:– விகாரமொழி யன்றி அல்வழிக் கண்ணும் வேற்றுமைக்கண்ணும் ஆவி யரக்களின் ஓரீற்றதாய் நின்று புணரும் பொதுப்பெயர்க்கே வன்மை மிகா என இருவழிக்கும் கூறியது அமையு மன்றி, அல்வழிக்கண் நீ என உயிரீறாயும் வேற்றுமைக்கண் நின் என நெடில் குறுகி னகர, வொற்றீறாயும் விகாரப்பட்டு நிற்கும் இப் பொதுப்பெயர்க்கு அவ்விதி அமையா தென்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், ஈகார வீற்றிற்கு எய்தியது விலக்கலும் எய்தாதது எய்துவித்தலும் கூறியது.

இ–ள்.:– பவ்வீ நீ மீ முன்னர் – இடக்கர்ப் பெயராகிய பகரத்தோடு கூடிநின்ற ஈகார வீற்றுப் பெயர் முன்னரும் நீ யென்னும் முன்னிலைப் பெயர் முன்னரும் மீ யென்னும் பெயர் முன்னரும். அல்வழி – அல்வழிப்பொருட் புணர்ச்சிக்கண்ணே, இயல்பாம் – வருமொழி முதல் வல்லினம் வந்தால் மிகாது இயல்பாய் முடியும், வலிமெலி மிகலுமாமீக்கே – மீ யென்னும் சொல் முன்னர் ஓரோவிடத்து வல்லெழுத்து மெல்லெழுத்து மிகவும் பெறும், எ–று.

உ–ம்.:–

பீ குறிது, சிறிது, தீது, பெரிது எனவும்; நீ குறியை, சிறியை, தீயை, பெரியை எனவும்; மீகண், செவி, தலை, புறம் எனவும் இயல்பாயின. மீக்கோள், மீப்பாய், மீங்குழி, மீந்தோல் என வலி மெலி மிக்கன. மீகண் என்பது மேலிடத்துக்கண். இது வேற்றுமைப் புணர்ச்சி எனினும் இயல்பு பற்றி உடன் கூறினார்.

## விசாகப் பெருமாளையர்

இது, பவ்வீ நீ மீ என்கிற பெயர்களுக்கு முன் வருகிற வல்லினத்திற்கு ஒருவழி "இயல்பினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கலும் இவற்றுள்ளே பவ்வீக்கு முன்வருகிற வல்லினத்திற்கு அச்சூத்திரத்தால் எய்தியதிகந்துபடாமைக் காத்தலும் எய்தியது விலக்கிப் பிறிது விதியும் உணர்த்துகின்றது.

**இ–ள்.:–பவ்வீ**–பகர மெய்யின் மேலேறி நின்ற ஈகார வீற்றிடக்கர்ப்பெயரும், **நீ** – நீ என்கிற முன்னிலைப் பெயரும், **மீ**–மீ என்கிற மேலாகிய பண்பையும் மேலிடத்தையும் உணர்த்தும் பெயருமாகிய, **முன்னர்** – இம் மூன்றன் முன்னும், **அல்வழி** – அல்வழியில், **இயல்பாம்** – வருகிற வல்லின மியல்பாகும், **மீக்கு**–இவற்றுள்ளே மீ யென்னுஞ் சொல்லுக்கு, **வலி**–வல்லெழுத்து, **மிகலுமாம்**–மிகுதலுமாகும், **மெலி**–மெல்லெழுத்து, **மிகலுமாம்**–மிகுதலுமாகும், எ–று.

**உ–ம்.:–**

பீகுறிது; சிறிது, தீது, பெரிது எனவும், நீகுறியை, சிறியை, தீயை, பெரியை எனவும், மீகண் எனவும், இயல்பாயின. மீக்கூற்று என வெய்திய திகந்துபடாமல் வலி மிகுந்தது. மீந்தோல் என மெலிமிகுந்தது. மீக்கூற்று–மேலாய சொல்லாற் பிறந்த புகழ். மீந்தோல்–மேலாயதோல். இது இக்காலத்துப் பீந்தோலென வழங்குகின்றது. நீ என்னும் பொதுப்பெயர் அல்வழியிலே நீயென்றும் வேற்றுமையிலே நின்னென்றும் நிற்கையினாலே "பொதுப்பெயருயர் திணைப்பெயர்" என்னுஞ் சூத்திரத்துளடங்கவில்லை.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

பீ நீ மீ முன் வல்லினம்வரின் அல்வழியில் எவ்வாறாம்?

பவ்வீ நீ மீ முன்ன ரல்வழி
இயல்பாம் வலிமெலி மிகலுமா மீக்கே.
(பவ்வீ நீ மீ முன்னர் அல்வழி
இயல்பு ஆம் வலி மெலி மிகலும் ஆம் மீக்கே)

**இ–ள்.:– பவ்வீ நீ மீ முன்னர்** – பகர மெய்யின்மேல் ஏறிநின்ற ஈகார வீற்றிடக்கர்ப் பெயரும், நீ என்னு முன்னிலைப் பெயரும், மேலிடத்தை உணர்த்தும் மீ என்னும் பெயருமாகிய இம்மூன்றன் முன்னும், **அல்வழி இயல்பு ஆம்** – வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாகும். **மீக்கு வலி (மிகலுமாம்) மெலிமிகலுமாம்** – மீ யென்னுஞ் சொற்குமுன் வல்லெழுத்து மிகுதலுமாகும், மெல்லெழுத்து மிகுதலுமாகும், எ–று.

உ–ம்.:–

(1) பீகுறிது, சிறிது, தீது, பெரிது எனவும், நீ குறியை, தீயை, பெரியை, எனவும், மீகண் எனவும், இயல்பாயின.

(2) மீக்கூற்று, மீக்கோள், என வெய்தியதிகந்துபடாமல் வலிமிக்கது; மீந்தோல் என மெலி மிக்கது.

மீகண் என்பது அல்வழிமுடிபன்றாகவும் இங்கே கூறப்பட்டது யாதுபற்றி?

இயல்பாதல்நோக்கி உடன் கூறப்பட்டது.

மீகண்–மேற்கண். மீக்கோள்–மேற்போர்வை. மீந்தோல்–மேற்றோல். இவை வேற்றுமைப்புணர்ச்சி.

நீ என்னும் பொதுப்பெயர், அல்வழியிலே நீ என்றும் வேற்றுமையிலே நின் என்றும் நிற்கையினாலே, ''பொதுப்பெயருயர்திணைப்பெயர்'' என்னுஞ் சூத்திரத்துள் அடங்கவில்லை.

பவ்வீ நீ மீ முன்னரல்வழி யியல்பாம் என்றது ஒருவழி '' இயல்பனும் விதியினும்''என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலகல்; மீக்கு முன் வலி மிகலாம் என்றது அச்சூத்திரத்தால் எய்தியதிகந்து படாமைக்காத்தல், மீக்குமுன் மெலி மிகலாம் என்றது அச்சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, இம் மூன்று ஈகார ஈற்றுப் பெயர் முன் வரும் வல்லினத்திற்கு ஒருவழி எய்தியது விலக்கலும், இவற்றுள் மீ என்பதன் முன் வரும் வல்லினத்திற்கு எய்தியது பிறழாமற் காத்தலும், எய்தியது விலக்கிப் பிறிது விதியுங் கூறுகின்றது.

**இ–ள்.:– பவ்வீநீ மீமுன்னர்,** – பகர ஈகாரமும் நீயும் மீயுமாகிய இந்த மூன்று பெயர்க்கு முன், **அல்வழி யியல்பாம்**–அல்வழியில் வல்லினம் வந்து புணரின் மிகாவாம், **மீக்கு** – மீ என்னுஞ் சொல்லுக்கு, **வலி மெலி மிகலுமாம்**–வல்லெழுத்தும் மெல்லெழுத்தும் – மிக்கு முடியவும் பெறும், எ–று.

உ–ம்.:–

பீகுறிது–சிறிது, தீது, பெரிது எனவும், நீகுறியை–சிறியை, தீயை, பெரியை எனவும், மீகண்–எனவும், இயல்பாயின. மீக்கூற்று, மீக்கொள், மீத்தோல் எஎன மிக்கது. மீந்தோல்–என மெலி மிகுந்தது. பிறவும் ஏற்றபடி வருமாயிற் கொள்க.

மீகண் என்பது, கண்ணினது மேலிடம் என மாறி நின்றதினாலே இலக்கணப் போலியாய் அல்வழி யாயிற்று. மீக்கூற்று என்பது புகழ். அது, மேலாய சொல்லாற் பிறந்த புகழென்னு மேம்பாடெனப் பொருடந்து நிற்றலால், பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. மீக்கொள்ளன்பது, மேற்போர்வை, அது தேகத்தின் மேற் கொள்ளுதலை யுடைய போர்வை யெனப் பொருடந்து நிற்றலின், ஏழாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. மீந்தோல் என்பது மேற்றோல், அது மேலாய தோலெனப் பொருடருதலிற் பண்புத்தொகை. இது, இக்காலத்துப் பீந்தோலென மருவிற்று. நீ யென்பதன் முன் வல்லின மியல்பாதல், பொதுப்பெயருயர்திணைப் பெயர்களீற்று மெய்யென்னுஞ் சூத்திரத்தா லமையாதோ வெனின், அமையாதென்க. என்னை? அல்வழிக்கண் நீ யென வுயிரீறாகியும், வேற்றுமைக்கண் நின்னென ஒற்றீறாகியும், நிற்பதொன்றாகலினென்க. வல்லெழுத் தியல்பாம் – வலிமெலிமிகலுமா மென முடிக்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :–** ப ஈ – பகர ஈகாரமும், நீ – நீ என்ற (முன்னிலைப்) பெயரும், மீ – மீ என்ற (மேலாகிய பண்பையும் மேலிடத்தையும் உணர்த்தும்) பெயரும் ஆகிய, முன்னர் – இம்மூன்றன் முன்னும், அல்வழி – அல்வழிப் புணர்ச்சியில், இயல்பு ஆகும் – (வருகிற வல்லினம்) இயல்பாகும்; மீக்கு – இவற்றுள் மீ என்னும் சொல்லுக்கு, வலி மெலி மிகலும் ஆம் – வல்லெழுத்து மிகுதலும் மெல்லெழுத்து மிகுதலும் ஆகும்.

**உதாரணம்.:–**

பீ+குறிது=பீகுறிது,சிறிது,தீது,பெரிது

நீ + குறியை = நீகுறியை, சிறியை, தீயை, பெரியைஇயல்பாயினமீ + கண் = மீகண், செவி, தலை, புரம்மீ + கூற்று = மீக்கூற்று

–வலிமிக்கது

மீ + தோல் = மீந்தோல்

–

மெலிமிக்கது

**குறிப்பு :–**

நீ என்னும் இருதிணைப் பொதுப்பெயர் அல்வழியிலே 'நீ' என்று உயிரீறாகியும், வேற்றுமையில் 'நின்' என்று மெய்யீறாகியும் நிற்கையினாலே பொதுப்பெயர் என்னுஞ் சூத்திரத்துள் அடங்காதென்பர்.

இனி, 'நீ' என்னும் முன்னிலை பொருமைப் பெயர், "பொதுப் பெயர்" என்னுஞ் சூத்திரத்தில் அடங்கு வதாகவே கொண்டு இங்குக் கூறிய 'நீ', 'நீக்குதல்' என்னும் பொருள்கொண்ட முதனிலைத் தொழிற்பெய ரென்றும், அதற்கு முன் வருகிற வலி 'நீகுறிது, நீதீது என இயல்பாம் என்றுங் கொள்ளலாம்.

## ஆறுமுக நாவலர்

**இ—ள்.:— பவ்வீ நீ மீ முன்னர் அல்வழி இயல்பு ஆம்**—பகர மெய்யின் மேல் ஏறி நின்ற ஈகார வீற்றிடக்கர்ப்பெயரும் நீ என்னு முன்னிலைப் பெயரும் மீ என்னு மேலாகிய பண்பையும் மேலிடத்தையும் உணர்த்தும் பெயருமாகிய இம்மூன்றன் முன்னும் வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாகும், **மீக்கு வலி (மிகலும் ஆம்) மெலி மிகலும் ஆம்** – இவற்றுள்ளே மீ யென்னுஞ் சொற்கு முன் வல்லெழுத்து மிகுதலுமாகும் மெல்லெழுத்து மிகுதலுமாகும், எ – று.

உ—ம்.:—

(1) பீகுறிது, சிறிது, தீது, பெரிது எனவும், நீ குறியை, சிறியை, தீயை, பெரியை எனவும், மீகண் எனவும் இயல்பாயின.

(2) மீக்கூற்று, மீக்கோள் என எய்திய திகந்துபடாமல் வலிமிக்கது; மீந்தோல் என மெலி மிக்கது.

மீகண் என்பது, கண்ணினது மேலிடம் எனப் பொருடந்து நிற்குமாயினும், வருமொழி நிலைமொழியாக மாறி நின்றதனால், இலக்கணப்போலியாய், அல்வழியாயிற்று.

மீக்கூற்றென்பது புகழ்; அது மேலாய சொல்லாற் பிறந்தது எனப் பொருள்படும். மீக்கோளென்பது மேற்போர்வை, அது சரீரத்தின்மேற் கொள்ளப்படுவது எனப் பொருள்படும். மீந்தோலென்பது மேற்றோல்; இது இக்காலத்துப் பீந்தோல் என மருவிற்று.

நீ என்னும் பொதுப்பெயர், அல்வழியிலே நீ என்றும் வேற்றுமையிலே நின் என்றும் நிற்கையினாலே, "பொதுப்பெயருயர்திணைப்பெயர்" என்னுஞ் சூத்திரத்துள் அடங்கவில்லை.

பவ்வீ நீ மீ முன்னரல் வழியியல்பாம் என்றது ஒருவழி

"இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கல்; மீக்கு முன் வலி மிகலாம் என்றது அச்சூத்திரத்தால் எய்திய திகந்துபடாமைக் காத்தல்; மீக்குமுன் மெலி மிகலாம் என்றது அச் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். பவ்வீ நீ மீ முன்னர் அல்வழி இயல்பு ஆம்** – பகரமெய்யின் மேல் ஏறிநின்ற ஈகாரவீற் றிடக்கர்ப்பெயரும் நீ என்னு முன்னிலைப் பெயரும் மீ என்னு மேலாகிய பண்பையும் மேலிடத்தையும் உணர்த்தும் பெயருமாகிய இம்மூன்றன் முன்னும் வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாகும், – **மிக்கு வலி (மிகலும் ஆம்) மெலி மிகலும் ஆம்** – இவற்றுள்ளே மீயென்னுஞ் சொற்கு முன் வல்லெழுத்து மிகுதலுமாகும் மெல்லெழுத்து மிகுதலுமாகும். எ–று.

**உ–ம்.:–**

(1) பீகுறிது, சிறிது, தீது, பெரிது எனவும் நீகுறியை, சிறியை, தீயை, பெரிய எனவும். மீகண் எனவும். இயல்பாயின.

(2) மீக்கூற்று, மீக்கோள் என எய்தியதிகந்து படாமல் வலிமிக்கது; மீந்தோல் என மெலிமிக்கது.

மீக்கண் என்பது, கண்ணினது மேலிடம் எனப் பொருடந்து நிற்குமாயினும், வருமொழி நிலைமொழியாக மாறி நின்றதனால் இலக்கணப் போலியாய் அல்வழியாயிற்று.

மீக்கூற்றென்பது புகழ்; அது மேலாயசொல்லாற் பிறந்தது எனப் பொருள்படும். மீக்கோளென்பது மேற்போர்வை; அது சரீரத்தின்மேற் கொள்ளப்படுவது எனப் பொருள்படும். மீந்தோலென்பது மேற்றோல்; இது இக்காலத்துப் பீந்தோல் என மருவிற்று.

நீ என்னும் பொதுப்பெயர், அல்வழியிலே நீ என்றும் வேற்றுமையிலே நின் என்றும் நிற்கையினாலே, 'பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்' என்னுஞ் சூத்திரத்துள் அடங்காது.

பவ்வீ நீ மீ முன்னரல்வழியியல்பாம் என்றது ஒருவழி 'இயல்பினும் விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கல்; மீக்கு முன் வலிமிகலாம் என்றது அச்சூத்திரத்தால் எய்தியதிகந்துபடாமைக் காத்தல்; மீக்குமுன் மெலிமிகலாம் என்றது அச்சூத்திரத்தால்

எய்தியது விலக்கிப் பிறிது விதிவகுத்தல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– ப ஈ – (இடக்கர்ப் பெயராகிய) பகர ஈகாரத்துக்கும், நீ– (நீக்குதலென்னும் பொருள்கொண்ட) 'நீ' என்ற முதனிலைத் தொழிற்பெயர்க்கும், மீ–(மேலாகிய பண்பையும் மேலிடத்தையும் உணர்த்தும்) 'மீ' என்ற சொல்லுக்கும், முன்னர்–முன்னே, அல்வழி–அல்வழிப் புணர்ச்சியில், இயல்பு ஆம்–(வருகிற வல்லினம்) இயல்பாகும்; மீக்கு– (இவற்றுள்ளே) 'மீ' என்னுஞ் சொல்லுக்கு, வலி மெலி மிகலும் ஆம்– வல்லெழுத்து மிகுதலும் மெல்லெழுத்து மிகுதலும் ஆகும்; எ–று.

உ–ம்.:–

(1) பீ+குறிது = பீகுறிது, சிறிது, தீது, பெரிது; நீ+கடிது = நீகடிது, சிறிது, தீது, பாற்று; மீ+கண் = மீகண், செவி, தலை, புறம் – இயல்பாயின.

(2) மீ+கூற்று = மீக்கூற்று–வலிமிக்கது, மீ+தோல் = மீந்தோல்–மெலிமிக்கது.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– பவ்வீ நி மீ முன்னர் – பகர மெய்யின்மேல் ஏறிநின்ற ஈகாரவீற் றிடக்கர்ப் பெயரும்நீ என்னும் முன்னிலைப்பெயரும் மி என்னும் மேலாகிய பண்பையும் மேலிடத்தையும் உணர்த்தும் பெயருமாகிய இம்மூன்றன் முன்னும் வரும் வல்லினம், அல்வழி இயல்பு ஆம் – அல்வழியில் இயல்பாகும். மீக்கு வலி (மிகலும் ஆம்) மெலிமிகலும் ஆம் – இவற்றுள்ளே மீயென்னுஞ் சொற்கு முன் வல்லெழுத்து மிகுதலுமாகும் மெல்லெழுத்து மிகுதலுமாகும். எ–று.

உ–ம்.:–

(1) பீ + குறிது = பீகுறிது.

நீ + குறியை + நீகுறியை

மீ + கண் = மீகண் – அல்வழியில் பவ்வீ நீ மீ முன் வலி இயல்பாயின.

(2) மீ + கூற்று = மீக்கூற்று – என மீமுன் வலி மிக்கது.

மீ + தோல் = மீந்தோல் – என மீ முன் மெலி மிக்கது.

மீகண் என்பது, கண்ணினது மேலிடம் எனப் பொருள் தந்து நிற்குமாயினும், வருமொழி நிலைமொழியாக மாறி நின்றதனால், இலக்கணப் போலியாய், அல்வழியாயிற்று.

மீக்கூற்றென்பது புகழ்; அது மேலாய சொல்லாற் பிறந்தது எனப் பொருள்படும். மீந்தோலென்பது மேற்றோல்; இதுஅக்காலத்துப் பீந்தோல் என மருவிற்று.

நீ என்னும் பொதுபெயர், அல்வழியிலே நீ என்றும் வேற்றுமையிலே நின் என்றும் நிற்கையினாலே, "பொதுப்பெயருர்திணைப் பெயர்" என்னும் 159–வது சூத்திரத்துள் அடங்கவில்லை.

"பவ்வீ நீ மீ முன்ன ரல்வழி யியல்பாம்" என்றது ஒருவழி "இயல்பினும் விதியினும்" என்னும் 165 ஆவது சூத்திரத்தால் எய்தியது விலக்கல்; மீக்கு முன் வலி மிகலாம் என்றது அச்சூத்திரத்தால் எய்திய திகந்துபடாமைக் காத்தல்; மீக்குமுன் மெலி மிகலாம் என்றதுஅச்சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) பவ்வீ – பகரமெய்யின் மேலேறி நின்ற ஈகாரவீற்றிடக்கர்ப் பெயரும், நீ – நீ என்கிற முன்னிலைப் பெயரும், மீ – மீ என்கிற மேலாகிய பண்பையும் மேலிடத்தையும் உணர்த்தும் பெயருமாகிய இம்மூன்றன், முன்னர் – முன்னும், அல்வழி – அல்வழியில், இயல்பாம் வருகிற வல்லினம் இயல்பாகும் ;

(2) மீக்கு – இவற்றுள்ளே மீ என்னுஞ் சொல்லுக்கு, வலி – வல்லெழுத்து, மிகலுமாம் – மிகுதலுமாகும், மெலி – மெல்லெழுத்து, மிகலுமாம் – மிகுதலுமாகும்.

உதாரணம்.:–

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) | பீ | + | குறிது | = | பீகுறிது | |
| | | + | சிறிது | = | பீசிறிது | |
| | | + | தீது | = | பீதீது | |
| | | + | பெரிது | = | பீபெரிது | |
| | நீ | + | குறியை | = | நீகுறியை | |
| | | + | சிறியை | = | நீசிறியை | |
| | | + | தீயை | = | நீதீயை | – இயல்பாயின |
| | | + | பெரியை | = | நீபெரியை | |
| | மீ | + | கண் | = | மீகண் | |
| | | + | செவி | = | மீசெவி | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | + | தலை | : | மீதலை | |
| | | + | புறம் | : | மீபுறம் | |
| (2) | மீ | + | கூற்று | : | மீக்கூற்று | – வலிமிக்கது |
| | மீ | + | தோல் | : | மீந்தோல் | – மெலிமிக்கது |

நீ என்னும் இருதிணைப் பொதுப்பெயர் அல்வழியிலே 'நீ' என்று உயிரீறாகியும் வேற்றுமையிலே 'நின்' என்று மெய்யீறாகியும் நிற்கையினாலே 'பொதுப்பெயருயர்திணைப்பெயர்' என்னுஞ் சூத்திரத்துள் அடங்காதென்க.

## மோசகு பொன்னையா

பகர ஈகாரப்பெயரும், நீ மீ என்னும் பெயர்ச் சொற்களும் நிலைமொழியாக நிற்க, அவற்றின் முன்னர் வரும் வல்லினம் அல்வழிக்கண் இயல்பாம்; மீ என்னும் சொல்லின் முன்னர் வல்லெழுத்தும் மெல்லெழுத்தும் மிக்கு முடிதலும் ஆம். பவ்வீ – இடக்கரடக்கல்.

எ–டு.

பீகுறிது, நீகுறியை, மீகண் –இயல்பாயின.

மீக்கூற்று, மீக்கோள் – மீ முன் வலி மிக்கு முடிந்தது.

மீந்தோல் – மீ முன் மெலி மிக்கு முடிந்தது.

மீகண் –இலக்கணப் போலி;

மீக்கூற்று – பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை;

மீக்கோள் ஏழாம் வேற்றுமைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; இவை அல்வழி.

நீ என்னும் முன்னிலை ஒருமைப் பெயர் வேற்றுமைப் புணர்ச்சியில் நின் என்று விகாரப்பட்டு நின்று புணருதலால், விகாரப்படாது நின்று புணரும் பொதுப் பெயர் உயர்திணைப் பெயர்களுள் அடக்காது, அல்வழியில் இயல்பாதற்குத் தனிவிதி அமைத்தார்.

(28)

**178. மூன்றா றுருபெண் வினைத்தொகை சுட்டீ
றாகு முகர முன்ன ரியல்பாம்.**

**மூன்று ஆறு உருபு எண் வினைத்தொகை சுட்டு
ஆகும் உகரம் முன்னர் இயல்பு ஆம்**

mūṉṟu āṟu urupu eṇ viṉaiṭṭokai suttu
ākum ukaram muṉṉar iyalpu ām

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### WORD WITH u AS FINAL

(The Hard initials) are not doubled after the following u finals; the signs of the Third and Sixth Cases, Numerals, Verbal adjectives, and the Demonstrative Pronouns.

## ஒப்புமைப் பகுதி

சுட்டுமுதல் இறுதி இயல்பா கும்மே

(தொல்.: 258)

அன்றுவரு காலை ஆ ஆகு தலும்
ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்
செய்யுள் மருங்கின் உரித்து என மொழிப.

(தொல்.: 259)

எண்ணி னிறுதியுஞ் சுட்டுமுத லிறுதியு
நண்ணிய வுகரமுன் னியல்பா மதுச்சொலீ
றன்றுவரு காலை யாவா குதலும்
ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்
செய்யுண் மருங்கி னுரித்தென மொழிப.

(இ.வி.: 95)

அன்றது முன்வரி னாவா கலும்ஐ
வரினுக ரங்கெடு தலுமாந் தூக்கின்

(மு.வீ.: 272)

## சங்கர நமச்சிவாயர்
## சிவஞான முனிவர்

எ–னின், முற்றுகர ஈற்றுள் சிலவற்றின் முன் வரும்

குறிப்பு :– இந்நூற்பாவிற்கான விளக்கத்தினை அடுத்த நூற்பாவிற்கு விளக்கங் கூறுங்கால் கூறுவார் மயிலைநாதர்.

வல்லினத்திற்கும் *'இயல்பினும் விதியினும்' என்னும் சூத்திரத்தான்ம்* எய்தியது விலக்கல் நுதலிற்று.

**இ–ள்.:–** முற்றுகர ஈற்று மூன்றாம் உருபே, ஆறாம் உருபே, இயல்பாயும் விகாரமாயும் வரும் எண்ணே, வினைத்தொகையே, சுட்டுப்பெயரே என்னும் இவற்றின் முன் வரும் வல்லினம் இயல்பாம், **எ– று.**

மூன்றாறுருபு என்புழி ஆம் என்னும் சாரியை தொக்கது.

**உ – ம்.:-**

சாத்தனொடு கொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவும்; சாத்தனது கை, செவி, தலை, புறம் எனவும்; ஏழு, ஒரு, இரு, அறு: கை, செவி, தலை, புறம் எனவும்; அடு களிறு, சேனை, தானை, படை எனவும்; அது, இது, உது: குறிது, சிறிது, தீது, பெரிது எனவும்; கண்டான், செகுத்தான், தந்தான், படைத்தான் எனவும் வரும்.

உது காண், உதுக்காண் என இயல்பாயும், விகாரமாயும் வரப்பெறுமாலோ எனின்:– அஃது 'இயல்பின் விகாரமும்' என்னும் சூத்திரத்து 'அன்ன பிறவும்' என்பதனான் அமையும் என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், முற்றுகரத்திற்கு எய்தியது விலக்கலும் பிறிது விதி வகுத்தலும் கூறியது.

**இ–ள்.:–** மூன்றாறுருபு – மூன்றாம் வேற்றுமை ஒடு வென்னும் உருபின் முன்னரும் ஆறாம் வேற்றுமை அது வென்னும் ஒருமை யுருபின் முன்னரும், **எண்** – முற்றுகரமாய் வந்த எண்ணுப் பெயர் முன்னரும், **வினைத்தொகை** – உகர வீறாய் வந்த வினைத்தொகைச் சொல் முன்னரும், **சுட்டீறாகும் உகர முன்னர்** – சுட்டுச் சொல் ஈற்றினின்ற உகரத்தின் முன்னரும், **இயல்பாம்** – வருமொழி முதல் வல்லினம் வந்தால் மிகாது இயல்பாய் முடியும், **அதுமுன் வருமன்று** – அதுவென்னும் சுட்டின் முன் வந்த அன்றென்னும் மறைமொழி, **ஆன்றாந் தூக்கின்** – செய்யுளிடத்து வந்தால் முதனீளும், **எ–று.**

**உ–ம்.:–**

சாத்தனொடு கொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவும்; சாத்தனது கை, செவி, தலை, புறம் எனவும்; ஒரு காசு, சின்னம், தலை, பகல், இரு கண், எழு கண், எழு கடல், அறு கலம் எனவும்; அடு களிறு, சேனை,

தானை, படை எனவும்; அது, இது உது குறிது, சிறிது, தீது, பெரிது எனவும் முறையே இயல்பாயின. அதான்று என வருமொழி முதல் ஆகாரம் நீண்டது.

## விசாகப் பெருமாளையர்

**இது,** முற்றுகர வீற்றுட் சிலவற்றின் முன் வருகிற வல்லினத்திற்கு “இயல்பினும் விதியினும்” என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்குகின்றது.

**இ–ள்.:– மூன்(றுருபு)** – மூன்றாம் வேற்றுமை யுருபிற்கும், **ஆறுருபு**– ஆறாம் வேற்றுமை யுருபிற்கும், **எண்**–இயல்பாயும் விகாரமாயும் வருகிற எண்ணிற்கும், **வினைத்தொகை**–வினைத்தொகைக்கும், **சுட்டு**–சுட்டுப் பெயருக்கும், **ஈறாகும்**–ஈறாகிய, **உகர முன்னர்**–முற்றிய லுகரத்தின் முன்னே, **இயல்பாம்**–வருகிற வல்லினம் இயல்பாகும், எ–று.

உ–ம்.:–

சாத்தனொடு கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவும், சாத்தனதுகை; செவி, தலை, புறம் எனவும், மூன்றாமுருபின் முன்னும் ஆறாமுருபின் முன்னு மியல்பாயின. ஒரு கை; செவி, தலை, புறம் என எண்ணுப்பெயர் முன் னியல்பாயின. இரு, அறு, எழு, ஏழு இவற்றோடும் அப்படியே கூட்டுக. அடுகளிறு; சேனை, தானை, படை என வினைத்தொகை முன் னியல்பாயின. தரு, புகு, தெறு, எழு, விரவு முதலியவற்றோடு மொட்டுக. அது குறிது; சிறிது, தீது, பெரிது எனவும், அது கண்டான்; செகுத்தான், தந்தான், படைத்தான் எனவும், சுட்டுப்பெயர் முன் னிருவழியு மியல்பாயின, (இது உது என்பவற்றோடு மிப்படியே யொட்டுக. உதுகாண்– உதுக்காண் என விகற்பித்து வருவது “இயல்பின் விகாரமும்” என்னுஞ் சூத்திரத்தில் “அன்னபிறவும்” என்றதனாலமையும்.)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

வல்லினம் வந்து இயல்பாகப் புணரும் உகரவீற்றுச் சொற்கள் யாவை?

மூன்றா றுருபெண் வினைத்தொகை சுட்டீ
றாகு முகர முன்ன ரியல்பாம்.
(மூன்று ஆறுஉருபு எண் வினைத் தொகை சுட்டு
ஈறு ஆகும் உகரமுன்னர் இயல்பு ஆம்)

**இ–ள்.:– மூன்று ஆறு உருபு** – மூன்றாம் வேற்றுமை யுருபிற்கும், ஆறாம் வேற்றுமை யுருபிற்கும், **எண்** – இயல்பாயும் விகாரமாயும் வரும்

எண்ணிற்கும், வினைத்தொகை–வினைத்தொகைக்கும்; சுட்டு ஈறு ஆகும் உகரம் முன்னர்–சுட்டுப்பெயருக்கும் ஈறாகிய உகரத்தின்முன், இயல்பு ஆம் – வரும் வல்லினம் இயல்பாகும், எ–று.

உ–ம்.:–

(1) சாத்தனொடு கொண்டான், சாத்தனோடு கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என மூன்றாம் வேற்றுமை யுருபின்முன் வல்லினம் இயல்பாயின.

(2) சாத்தனதுகை, தனாதுகை. செவி, தலை, புறம் என ஆறாம் வேற்றுமையுருபின்முன் வல்லினம் இயல்பாயின.

(3) ஒருகை, ஒருசெவி, தலை, புறம் என எண்ணுப்பெயர் முன் இயல்பாயின. இரு, அறு, எழு, ஏழு என்பவற்றோடும் இப்படியே ஒட்டுக. ஏழு என்பது இயல்பாய எண்ணுப்பெயர்; மற்றவை விகார வெண்ணுப்பெயர்.

(4) அடுகளிறு, கூட்டுசேனை, தானை, படை என வினைத்தொகைமுன் இயல்பாயின. தரு, புகு, தெறு, எழு, விரவு; நாட்டு, ஏறு இவற்றோடும் ஒட்டுக.

(5) அதுகுறிது; அதுசிறது; தீது, பெரிது எனவும், அது கண்டான், செகுத்தான், தந்தான், படைத்தான் எனவும், சுட்டுப்பெயர்முன் இருவழியும் இயல்பாயின. இது உது என்பவற்றோடு இப்படியே ஒட்டுக.

உதுகாண், உதுக்காண், என விகற்பித்து வருவது "இயல்பின் விகாரமும்" என்னும் இரண்டாம் வேற்றுமைப் புறனடைச் சூத்திரத்தில் "அன்னபிறவும்" என்பதனால் அமையும்.

இது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கல்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, முற்றுகர வீற்றுட் சிலவற்றிற்கு முன் வரும் வல்லினத்திற்கு எய்தியது விலக்குகின்றது.

இ–ள்.:– மூன்றாறுருபு–முற்றுகர வீற்று மூன்றாம் வேற்றுமை யுருபும் ஆறாம் வேற்றுமை யுருபும், எண்–இயல்பாகியும் விகாரமாகியும் வரும் எண்ணுப் பெயரும், வினைத்தொகை–வினைத்தொகைச் சொல்லும், சுட்டு – சுட்டுப்பெயர்களுமாகிய இவற்றிற்கு, ஈறாகு முகர முன்ன ரியல்பாம் – ஈறாகி வரு முற்றுகரத்தின் முன் வல்லினம் வந்து புணரின் மிகாது இயல்பாகும், எ–று.

உ–ம்.:–

சாத்தனொடுகொண்டான் – சென்றான், தந்தான், போயினான் எனவும்,

சாத்தனதுகை–செவி, தலை, புறம், எனவும்,

ஏழுகை, ஒருகை, இருகை, அறுகை, செவி, தலை, புறம், எனவும்,

அடுகளிறு, அடுசேனை, அடுதானை, அடுபடை எனவும், அது, இது, உது, குறிது, சிறிது, தீது, பெரிது, எனவும்,

அதுகண்டான், செகுத்தான், தந்தான், படைத்தான், எனவும், முறையே காண்க.

உதுகாண், உதுக்காண் என விகற்பித்து வரப் பெறுமெனின், அது இரண்டாம் வேற்றுமைப் புறனடைச் சூத்திரத்து, 'அன்னபிறவு' மென்பதினா லமையு மென்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை** :– **மூன்று ஆறு உருபு** – 'ஒடு' என்னும் மூன்றாம் வேற்றுமை யுருபும் 'அது' என்னும் ஆறாம் வேற்றுமை யுருபும், **எண்** – (இயல்பாயும் விகாரமாயும் வரும்) எண்ணுப் பெயர்களும், **வினைத்தொகை** – வினைத்தொகையும், **சுட்டு** – சுட்டுப் பெயர்களும் ஆகிய இவற்றிற்கு, **ஈறு ஆகும்** – இறுதியாகிய, **உகரம் முன்னர்** – முற்றியலுகரத்தின் முன்னே, **இயல்பு ஆகும்** – (வருகிற வல்லினம்) இயல்பாகும்.

உதாரணம்.:–

| | | |
|---|---|---|
| அவனொடு + கொண்டான் | = | அவனொடுகொண்டான் – மூன்றனுருபு. |
| சாத்தனது + செவி | = | சாத்தனது செவி – ஆறனுருபு. |
| ஏழு + தலை | = | ஏழுதலை – இயல்பெண்ணுப்பெயர் |
| ஒரு + புறம் | = | ஒருபுறம் – விகார எண்ணுப்பெயர் |
| விடு + கணை | = | விடுகணை – வினைத்தொகை |
| அது + கண்டான் | = | அதுகண்டான் – வேற்றுமை |
| இது + குறிது | = | இதுகுறிது – அல்வழி – சுட்டு |

குறிப்பு :–

'சுட்டீறாகும்' என்றதன் உபலக்ஷணத்தால், எது கண்டான், எது பெரிது என வினாவீறாகும் முற்றியலுகரத்தின் முன்னும் இயல்பாதல் கொள்க. உது + காண் = உதுகாண், உதுக்காண் என விகற்பித்து வருவது, "இயல்பின்

விகாரமும்" என்ற சூத்திரத்து 'அன்ன பிறவும்' என்பதனால். இச்சூத்திரத்தை மேல், "வன்றொடரல்லன" முதலான குற்றியலுகரச் சிறப்பு விதிச் சூத்திரங்களைச் சாரவைக்காது "அது முன்வருமன்று" என்ற முற்றியலுகர விதிச் சூத்திரத்தைச் சாரவைத்தமையால் இதில் கூறிய உகரம் முற்றியலுகரமென்றறிக; அன்றியும், குற்றியலுகரவீறாகிய 'ஒடு' என்னும் மூன்றனுருபும், 'ஆது' என்னும் ஆறனுருபும், ஒன்று முதலிய எண்ணுப் பெயர்களும், வன்றொடர் ஒழிந்த வினைத்தொகைகளும், அஃது முதலிய சுட்டுப் பெயர்களும் என்னுமிவற்றிற்கு விதி மேல் "வன்றொடரல்லன", "இடைத்தொடராய்தத் தொடர்" என்னும் இரண்டு சூத்திரங்களிலும் அடங்குமாறு காண்க. 'நாட்டுபுகழ்' என்னும் வன்றொடர் வினைத்தொகைமுன் வலியியல்பாதலை மாத்திரம் கீழ் "விதவானமன்னே" என்றதில் அடக்கினதும் இதுபற்றியே என்க.

இனி, "மூன்றாறுருபு" எனப் பொதுப்படக் கூறினமையின், "அரசனோடு சென்றான்", 'தனாதுதலை' என ஒடு, ஆது என்னும் குற்றிய லுகர உருபுகளின் முன்னும் இயல்பாதலை இவ்விதியுளடக்கலாம்; இங்ஙனமாயின், இது 'முற்றியலுகர வீற்றுச் சிறப்புவிதி' என்பது மிகுதிபற்றி யென்க. "'ஒடு', 'ஆது' தொடர்ந்த சொற்களின் முன் அதிகார வல்லெழுத்துப் பெறாது இயல்பாய் முடியும்" என்று இலக்கண விளக்க நூலாசிரியர் கூறியதுங்காண்க.

## ஆறுமுக நாவலர்

இ-ள்.: மூன் (றுருபு) - மூன்றாம் வேற்றுமை யுருபிற்கும், ஆறுருபு - ஆறாம் வேற்றுமை யுருபிற்கும், எண்-இயல்பாயும் விகாரமாயும் வரும் எண்ணிற்கும், வினைத்தொகை-வினைத்தொகைக்கும், சுட்டு-சுட்டுப்பெயருக்கும், ஈறு ஆகும் உகர முன்னர் இயல்பு ஆம் - ஈறாகிய முற்றியலுகரத்தின் முன் வரும் வல்லினம் இயல்பாகும், எ - று.

உ - ம்.:-

(1) சாத்தனொடு கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என மூன்றாம் வேற்றுமை யுருபின் முன் இயல்பாயின.

(2) சாத்தனது கை, செவி, தலை, புறம் என ஆறாம் வேற்றுமை யுருபின் முன் இயல்பாயின.

(3) ஒருகை, செவி, தலை, புறம் என எண்ணுப்பெயர் முன்

இயல்பாயின. இரு, அறு, எழு, ஏழு என்பவற்றோடும் இப்படியே ஒட்டுக. ஏழு என்பது இயல்பாய எண்ணுப்பெயர்; மற்றவை விகார வெண்ணுப்பெயர்.

(4) அடுகளிறு, சேனை, தானை, படை என வினைத்தொகை முன் இயல்பாயின. தரு, புகு, தெறு, எழு, விரவு முதலியவற்றோடும் இப்படியே ஒட்டுக.

(5) அதுகுறிது, சிறிது, தீது, பெரிது எனவும், அது கண்டான், செகுத்தான், தந்தான், படைத்தான் எனவும், சுட்டுப்பெயர் முன் இருவழியும் இயல்பாயின. இது உது என்பவற்றோடும் இப்படியே ஒட்டுக.

உதுகாண், உதுக்காண் என விகற்பித்து வருவது. "இயல்பின் விகாரமும்" என்னும் இரண்டாம் வேற்றுமைப் புறனடைச் சூத்திரத்தில் "அன்ன பிறவும்" என்பதனால் அமையும்.

இது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கல்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– மூன் (றுருபு) – மூன்றாம் வேற்றுமையுருபிற்கும், – ஆறுருபு – ஆறாம் வேற்றுமையுருபிற்கும், – **எண்** – இயல்பாயும் விகாரமாயும் வரும் எண்ணிற்கும், – **வினைத்தொகை** – வினைத்தொகைக்கும், – **சுட்டு** – சுட்டுப் பெயருக்கும், – **ஈறு ஆகும் உகரமுன்னர் இயல்புஆம்** – ஈறாகிய முற்றியலுகரத்தின் முன் வரும் வல்லினம் இயல்பாகும். எ–று.

உ–ம்.:–

(1) சாத்தனொடு கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என மூன்றாம் வேற்றுமை யுருபின்முன் இயல்பாயின.

(2) சாத்தனதுகை, செவி, தலை, புறம் என ஆறாம் வேற்றுமையுருபின் முன் இயல்பாயின.

(3) ஒருகை, செவி, தலை, புறம் என எண்ணுப் பெயர்முன் இயல்பாயின. இரு, அறு, எழு, ஏழு என்பவற்றோடும் இப்படியே ஒட்டுக. ஏழு என்பது இயல்பாய எண்ணுப்பெயர்; மற்றவை விகார வெண்ணுப்பெயர். ஏழ் என்பதே இயல்பானதென்பது தொல்காப்பியர் கருத்து. ஏழு என்பது இயல்பானதென்பது நன்னூலார் கருத்து.

(4) அடுகளிறு, சேனை, தானை, படை என வினைதொகை

முன் இயல்பாயின. தரு, புகு, தெறு, எழு, விரவு முதலியவற்றோடும் இப்படியே ஒட்டுக.

(5) அதுகுறிது, சிறிது, தீது, பெரிது எனவும். அதுகண்டான், செகுத்தான், தந்தான், படைத்தான், எனவும். சுட்டுப்பெயர்முன் இருவழியும் இயல்பாயின. இது உது என்பவற்றோடும் இப்படியே ஒட்டுக. உதுகாண், உதுக்காண் என விகற்பித்து வருவது 'இயல்பின் விகாரமும்' என்னும் இரண்டாம் வேற்றுமைப்புறனடைச் சூத்திரத்தில் 'அன்னபிறவும்' என்பதனால் அமையும்.

இது 'இயல்பினும் விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.:— மூன்று (உருபு) — ('ஒடு' என்னும்) மூன்றாம் வேற்றுமையுருபுக்கும், ஆறு உருபு — ('அது' என்னும்) ஆறாம் வேற்றுமை யுருபுக்கும், எண்—(இயல்பாயும் விகாரப்பட்டும் வரும்) எண்ணுப் பெயர்கட்கும், வினைத்தொகை—வினைத்தொகைக்கும், சுட்டு—சுட்டுப்பெயர்கட்கும், ஈறு ஆகும்—இறுதியாகிய, உகரம் முன்னர் — முற்றியலுகரத்தின் முன்னே, இயல்பு ஆம் — (வருகிற வல்லினம்) இயல்பாகும்; எ—று.

உ—ம்.:—

அவனொடு + கொண்டான் = அவனொடுகொண்டான்— மூன்றனுருபு. பொன்னனது + செவி = பொன்னனதுசெவி— ஆறனுருபு.

ஏழு + தலை = ஏழுதலை—இயல்பு; எண்ணுப்பெயர்.

ஒரு, இரு, அறு, எழு + புறம் = ஒருபுறம்—விகார எண்ணுப்பெயர்.

விடு+கணை= விடுகணை, விரவு+படை= விரவுபடை: வினைத்தொகை.

அது+கண்டான் = அதுகண்டான்—வேற்றுமை.

இது, உது + குறிது = இதுகுறிது—அல்வழி. சுட்டுப்பெயர்.

'சுட்டீறாகும்' என்றதன் உபலக்ஷணத்தால், எதுகண்டான், எதுபெரிது என வினா வீறாகும் முற்றியலுகரத்தின் முன்னும் வலி இயல்பாதல் கொள்க.

உது+காண்= உதுகாண், உதுக்காண் என இரண்டாம் வேற்றுமைத் தொகையில் விகற்பித்து வருவது, "இயல்பின் விகாரமும்" என்னுஞ் சூத்திரத்து 'அன்னபிறவும்' என்பதனால் அமையும்.

(இச்சூத்திரத்தில் 'உகரம்' எனப் பொதுப்படக் கூறியிருக்கவும், முற்றியலுகர மென்றே சிறப்பாகக் கொண்டது, இச் சூத்திரத்தை மேல் "வன்றொடரல்லன" என்பது முதலாக வருங் குற்றியலுகரச் சிறப்புவிதிச் சூத்திரங்களைச் சார வைக்காமல் "அதுமுன்வரு மன்று" என்னும் முற்றியலுகர விதிச் சூத்திரத்தின் முன் வைத்ததனாலென்று அறிக. அன்றியும், குற்றியலுகர வீறாகிய 'ஒடு' என்னும் மூன்றனுருபும், 'ஆது' என்னும் ஆறனுருபும், ஒன்று முதலிய எண்ணுப்பெயர்களும், வன்றொடரொழிந்த வினைத்தொகைகளும், 'அஃது' முதலிய சுட்டுப்பெயர்களும் என்பவற்றிற்கு விதி, மேல் "வன்றொடரல்லன", "இடைத்தொட ராய்தத்தொடர்" என்னும் இரண்டு சூத்திரங்களிலும் அடங்குமாறு காண்க. இதுபற்றியே, வன்றொடர் வினைத் தொகை முன் வலியியல்பாதலை மாத்திரம் கீழ் "விதவாதனமன்" என்றதில் அடக்கியதும்.)

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– மூன் (றுருபு)–மூன்றாம் வேற்றுமை யுருபிற்கும், ஆறுருபு – ஆறாம் வேற்றுமை யுருபிற்கும், எண் (இயல்பாயும் விகாரமாயும் வரும்) – எண்ணிற்கு, வினைத்தொகை – வினைத்தொகைக்கும், சுட்டு – சுட்டுப் பெயருக்கும், ஈறு ஆகும் உகரமுன்னர் இயல்பு ஆம் – ஈறாகிய முற்றிய லுகரத்தின் முன் வரும் வல்லினம் இயல்பாகும். எ–று.

உ–ம்.:–

(1)சாத்தனொடு கொண்டான் = சாத்தனொடுகொண்டான் – என மூன்றாம் வேற்றுமை யுருபின் முன் இயல்பாயிற்று.

(2) சாத்தனது + கை = சாத்தனதுகை – என ஆறாம்வேற்றுமை யுருபின் முன் இயல்பாயிற்று.

(3) ஒரு இரு + கை = ஒருகை, இருகை ; ஏழு + கை = ஏழுகை என எண்ணுப்பெயர் முன் இயல்பாயிற்று. (ஏழு என்பது இயல்பாய எண்ணுப்பெயர்; மற்றவை விகாரவெண்ணுப் பெயர்.)

(4) அடு + களிறு =அடுகளிறு – என வினைத்தொகை முன்

இயல்பாயிற்று. (தரு, புகு, தெறு, எழு, விரவு முதலியவற்றோடும் இப்படியே ஒட்டுக.)

(5) அது +குறிது = அதுகுறிது, அது + கண்டான் = அதுகண்டான், – எனச் சுட்டுப்பெயர் முன் இருவழியும் இயலபாயிற்று. இதுஉது என்பவற்றோடும் இப்படியே ஒட்டுக.

உது + காண் = உதுகாண், உதுக்காண் – என விகற்பித்து வருவது "இயல்பின்விகாரமும்" (சூ–255) என்னும் இரண்டாம் வேற்றுமைப் புறனடைச் சூத்திரத்தில் 'அன்னபிறவும்' என்பதனால் அமையும்.

இது "இய்லபினும் விதியினும்" என்னும் 165 ஆவது சூத்திரத்தால் எய்தியது விலக்கல்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:– மூன்று ஆறு உருபு – ஒடு அது என்னும் மூன்றாம் வேற்றுமை ஆறாம் வேற்றுமை உருபுகளுக்கும், எண் – (இயல்பாயும் விகாரமாயும் வருகிற) எண்ணுப் பெயர்கட்கும், வினைத்தொகை– வினைத்தொகைக்கும், சுட்டு–சுட்டுப்பெயருக்கும், ஈறு ஆகும் – இறுதியாகிய, உகர முன்னர்–(முற்றியல்) உகரத்தின் முன்னே, இயல்பு ஆம்– (வருகிற வல்லினம்) இயல்பாகும்.எ–று.

பொ–ரை.:– ஒடு அது என்னும் மூன்றாம் வேற்றுமை ஆறாம் வேற்றுமை உருபுகளுக்கும், (இயல்பாயும் விகாரமாயும் வருகிற) எண்ணுப் பெயர்க்கட்கும் இறுதியாகிய (முற்றியல்) உகரத்தின் முன்னே வருகிற வல்லினம்) இயல்பாகும்.

உ–ம்.:–

சாத்தனொடு +கொண்டான் = சாத்தனொடுகொண்டான்.

+ சென்றான் = சாத்தனொடுசென்றான்.

+ தந்தான் = சாத்தனொடுதந்தான்.

+ போயினான் = சாத்தனொடுபோயினான்.

என மூன்றனுருபின்முன் வலி இயல்பாயின.

சாத்தனது + கை = சாத்தனதுகை – ஆறனுருபின் முன் வலி இயல்பாயின.

+ செவி = சாத்தனதுசெவி.

+ தலை = சாத்தனதுதலை.

+ புறம் = சாத்தனதுபுறம்.

ஒரு + கை = ஒருகை. – எண்ணுப்பெயர் முன்வலி இயல்பாயின.

+ செவி = ஒருசெவி.

+ தலை = ஒருதலை.

+ புறம் = ஒருபுறம்.

இரு, அறு, எழு, ஏழு என்னும் எண்களோடும் மேலே காட்டிய படியே கை, செவி, தலை, புறம் என்பவற்றைக் கூட்டி வலி இயல்பாதல் காண்க.

அடு +களிறு=அடுகளிறு. – வினைத்தொகை முன் வலி
இயல்பாயின.

+சேனை = அடுசேனை.

+ தானை = அடுதானை.

+ படை = அடுபடை.

தரு, புகு, தெறு, எழு, விரவு முதலிய வினைத்தொகைகளோடும் மேலே காட்டியபடியே களிறு, சேனை, தானை, படை என்பவற்றைக் கூட்டி வலி இயல்பாதல் காண்க.

## அல்வழி

அது + குறிது = அதுகுறிது – சுட்டுப்பெயர் முன் இருவழியும் வலி
இயல்பாயின.

+ சிறிது = அதுசிறிது.

+ தீது = அதுதீது.

+ பெரிது = அதுபெரிது.

## வேற்றுமை

அது + கண்டான் = அதுகண்டான்.

+ செகுத்தான் = அதுசெகுத்தான்.

+ தந்தான் = அதுதந்தான்.

+ படைத்தான் = அதுபடைத்தான்.

இது, உது என்பவற்றோடும் மேலே காட்டியபடியே கூட்டிவலி இருவழியும் இயல்பாதல் காண்க.

உது+காண்=உதுகாண், உதுக்காண் என விகற்பித்து வருவது, "இயல்பின் விகாரமும்" என்னுஞ் சூத்திரத்தில், "அன்ன பிறவும்" என்றதனால் அமையும்.

"சுட்டீறாகும்" என்ற உபலட்சணத்தால் 'எதுகண்டான்' 'எது பெரிது' என வினாவீறாகும் முற்றியலுகரத்தின் முன்னும் வலி இயல்பாதல் கொள்க.

## கா.நமச்சிவாய முதலியார்

**மூன் (றுருபு)** – ஒடு என்னும் மூன்றாம் வேற்றுமையுருபிற்கும், **ஆறுருபு** – அது என்னும் ஆறாம் வேற்றுமையுருபிற்கும், **எண்** – இயல்பாயும் விகாரமாயும் வருகிற எண்ணிற்கும், **வினைத்தொகை** – வினைத் தொகைக்கும், **சுட்டு** – சுட்டுப் பெயருக்கும், **ஈறாகும்** – ஈறாகிய, **உகரமுன்னர்** – முற்றியலுகரத்தின் முன்னே, **இயல்பாம்** – வருகிற வல்லினம் இயல்பாகும்.

**உதாரணம்.:-**

அவனொடு + கொண்டான் = அவனொடுகொண்டான்
– மூன்றனுருபு

சாத்தனது + செவி = சாத்தனதுசெவி = ஆறனுருபு.

ஏழு + தலை = ஏழுதலை – இயல்பெண்ணுப்பெயர்.

ஒரு + கை = ஒருகை – விகார எண்ணுப்பெயர்.

இரு, அறு, எழு என்னும் எண்ணுப் பெயர்களோடு மேலே காட்டியபடி கை, செவி, தலை, புறம் என்பவற்றைக் கூட்டி வலி இயல்பாதல் காண்க.

விடு+கணை=விடுகணை
விரவு + படை = விரவுபடை –வினைத்தொகை
அது + கண்டான் = அதுகண்டான் – வேற்றுமை.
இது + குறிது = இதுகுறிது – அல்வழி
சுட்டுப்பெயர்

**'சுட்டீறாகும்'** என்றதன் உபலக்ஷணத்தால், எதுகண்டான், எதுபெரிது என வினாவீறாகும் முற்றியலுகரத்தின் முன்னும் வலி இயல்பாதல் கொள்க.

உது + காண் = உதுகாண், உதுக்காண் என விகற்பித்து வருவது, 'இயல்பின் விகாரமும்' (சூ–255) என்னுஞ் சூத்திரத்தில் 'அன்ன பிறவும்' என்பதனால் அமையும்.

## மோசசு பொன்னையா

மூன்றாம் ஆறாம் வேற்றுமை உருபுகள், விகாரமாகவும் இயல்பாகவும் வரும் எண்கள், வினைத்தொகை, சுட்டுப்பெயர் ஆகியவற்றின் ஈறாக வரும் உகரத்தின் முன்னர்வரும் வல்லினம் இயல்பாகும், எ–று.

எ–டு.:–

வண்டொடு புக்க – மூன்றன் உருபு
கானது பழியே –ஆறன் உருபு
ஒரு குடை, ஏழுகளிறு – எண்ணுப்பெயர்
அடுதோள் – வினைத்தொகை
அது குறிது, அது தந்தான் – சுட்டுப்பெயர்
உதுக்காண் என்பதை 'இயல்பின் விகாரமும்' என்ற புறனடை நூற்பாவால் அமைக்க. மூன்றாம் ஆறாம் வேற்றுமையுருபொடு வரும் வேற்றுமைத் தொடர் இயல்பாம் என்றது இவ்வாசிரியர் வழக்கு நோக்கியமைத்த புதுவிதியாகும்.

(29)

**179. அதுமுன் வருமன் றான்றாந் தூக்கின்**

அது முன் வரும் அன்று ஆன்று ஆம் தூக்கின்

aṭu mun̲ varum an̲ṟu ān̲ṟu ām ṭūkkin̲

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Special rule for au before anru**

In poetry atu plus anru becomes atanru,

## மயிலை நாதர்

எ – ன், முற்றுகரத்துக்கு எய்தியது விலக்கலும் பிறிதுவிதி வகுத்தலும் நுதலிற்று.

**இ—ள்.:—** மூன்றும் ஆறுமான உருபே எண்ணே வினைத் தொகையே சுட்டே யென்றிவற்றின் ஈற்றுகர முன் வல்லினம் இயல்பாம்; அது வென்னுஞ் சுட்டின் முன் வந்த அன்றென்னும் மறைமொழி செய்யுளுள் வந்தால் முதல்நீளும், எ — று.

வ — று.:—

சாத்தனொடுகொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவும்; சாத்தனதுகை; செவி, தலை, புறம் எனவும்; ஒருகாசு; சின்னம், தலை, பகல்; இருகண், அறுசுவை, எழுகண், எழுகடல், எனவும்; அடுகளிறு; சேனை, தானை, படை எனவும்; (அது, இது, உது) + (குறிது, சிறிது, தீது, பெரிது) எனவும் முறையே இயல்பாயின. "அதான்று" என வருமொழி முதல் நீண்டது.

மூன்றும் ஆறுமான உருபென விரித்துரைக்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ—னின்,** அது என்னும் சுட்டுப்பெயர் முன்வரும் அன்று என்னும் சொற்கு எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

**இ — ள்.:—** அது என்னும் சுட்டுப்பெயர் முன்வரும். அன்று என்னும் வினைக்குறிப்புச் சொல் முதல் நீளும், செய்யுளகத்து, எ — று.

உ—ம்.:—

அதான்று என வரும்.

ஆன்றேயாம் என இயல்பை விலக்காமையின், அதுவன்று அதன்று என வருவனவும் கொள்க. அதுமுன் வரும் அன்று ஆன்று ஆம் என விதந்தமையான், ஏனை இது உது முன்வரும் அன்று ஆன்று ஆகாது என்பது பெற்றாம்.

## விசாகப் பெருமாளையர்

**இது,** அதுவென்பதற்கு முன் வரும் அன்றென்பதற்கு எய்தாத தெய்து விக்கின்றது.

**இ—ள்.:—** அது முன்—அது வென்னுஞ் சுட்டுப்பெயர் முன், **வரும்—** வருகிற, **அன்று —** அன்றென்னும் வினைக்குறிப்பு முற்றானது, **தூக்கின்—** பாட்டினிடத்து, **ஆன்றாம்—**முதனீளும். எ—று.

உ—ம்.:—

அதான்று எனவரும் (ஆன்றே யாமென வியல்பை
விலக்காமையால் அதன்று–அதுவன்று எனவும் வரும்.)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

அன்று என்பது ஆன்றென எங்கே வரும்?

அதுமுன் வருமன் றான்றாந் தூக்கின்.

(அதுமுன் வரும் அன்று ஆன்று ஆம் தூக்கின்)

**இ–ள்.:–** **அதுமுன் வரும் அன்று** – அது என்னுஞ் சுட்டுப்பெயர்முன் வரும் அன்றென்னும் வினைக்குறிப்பு முற்று, **தூக்கின் ஆன்று ஆம்** – பாட்டினிடத்து முதனீளும், எ–று.

உ–ம்.:–

அது–அன்று–அதான்று எனவரும்.

ஆன்றேயாம்என இயல்பை விலக்காமையால்,
அதுவன்றி, அதன்று எனவும் வரும்.

அதுமுன் வருமென விதந்தமையால் இது உதுமுன்
வரும் அன்று அங்ஙனமாகாது.

## முகவை இராமானுச கவிராயர்

இது, எய்தாதது எய்துவிக்கின்றது.

**இ–ள்.:–** **அது முன் வருமன்று** – அது வென்னுஞ் சுட்டுப் பெயர் முன் வரும் அன்றென்னும் வினைக்குறிப்புச் சொல், **ஆன்றாந் தூக்கின்** – ஆன்றென முதல் நீளுஞ் செய்யுளகத்து, எ–று.

உ–ம்.:–

'அதான் றம்ம வெண்பா வீறே' என வரும். ஆன்றே
யாமெனத் தெற்றேகாரங் கொடாமையால், அதுவன்று –
அதன்று என வருவனவுங் கொள்க. இவ்விதி, மற்றை இது
உது என்பனவற்றிற்கு இல்லை யென்பதை, அது முன்
வருமன்றெனப் பிரித்ததனா லுணர்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :–** அது முன் – அது என்னும் சுட்டுப் பெயரின் முன், வரும் – (வருமொழியாக) வருகிற, **அன்று** – அன்று என்னுங் குறிப்புவினைமுற்று,

**தூக்கின்** – பாட்டினிடத்து, **ஆன்று ஆகும்** – ஆன்று என முதல் நீளும்.

**உ–ம் :–**

அது + அன்று = அதான்று.

அன்றேயாம் என்னாமையால், அதன்று அதுவன்று என நீளாமலும் வரும்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: அது முன் வரும் அன்று** – அது என்னுஞ் சுட்டுப்பெயர் முன் வரும் அன்றென்னும் வினைக்குறிப்புமுற்று, **தூக்கின் ஆன்று ஆம்** – பாட்டினிடத்து முதனீளும், எ – று.

**உ – ம்.:–**

அது + அன்று = அதான்று என வரும். ஆன்றேயாம் என இயல்பை விலக்காமைபால், அதுவன்று, அதன்று எனவும் வரும். அன்றான்றாம் என்றது எய்தாத தெய்துவித்தல்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். அதுமுன் வரும் அன்று** – அது என்னுஞ் சுட்டுப்பெயர்முன் வரும் அன்றென்னும் வினைக்குறிப்புமுற்று, – **தூக்கின் ஆன்று ஆம்** – பாட்டினிடத்து முதனீளும். எ–று.

**உ–ம்.:–**

அது+அன்று=அதான்று எனவரும். ஆன்றேயாம் என இயல்பி விலக்காமைபால், அதுவன்று, அதன்று எனவும் வரும். அன்றான்றாம் என்றது எய்தாததெய்துவித்தல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.:–** அது முன் – 'அது' என்னுஞ் சுட்டுப்பெயரின் முன், **வரும்** – (வருமொழியாக) வருகிற, **அன்று** – 'அன்று' என்னும் எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று, **தூக்கின்**–செய்புளில், **ஆன்றுஆம்** – 'ஆன்று' என முதல் நீளும்; எ–று.

**உ–ம்.:–**

அது + அன்று = அதான்று.

'ஆன்றேயாம்' என்னாமையால் அதன்று, அதுவன்று

என நீளாமலும் வரும்.

## பவானந்தம் பிள்ளை

இ–ள். அது முன் வரும் அன்று – அது என்னுஞ் சுட்டுப் பெயர் முன்வரும் அன்றென்னும் வினைக்குறிப்புமுற்று, தூக்கின் ஆன்று ஆம் – பாட்டினிடத்து முதனீளும். எ–று.

உ–ம்.:–

அது + அன்று = அதான்று.

ஆன்றேயாம் என இயல்பை விலக்காமையால், அதுவன்று அதன்று எனவும் வரும்.

'அன்றன்றாம்' என்றது எய்தாததெய்துவித்தல்.

## கா.நமச்சிவாய முதலியார்

அதுமுன் – அதுவென்னுஞ் சுட்டுப்பெயர் முன், வரும் – வருகிற, அன்று – அன்றென்னும் குறிப்புவினை முற்றானது, தூக்கின் – பாட்டினிடத்து, ஆன்றாம் – ஆன்று என முதல் நீளும்.

உதாரணம்.:–

அது + அன்று = அதான்று.

ஆன்றேயாமென இயல்பை விலக்காமையால், அதன்று – அதுவன்று என நீளாமலும் வரும்.

## மோசசு பொன்னையா

அது என்னும் சுட்டுப்பெயர் முன்னர் வரும் அன்று என்னும் வினைக்குறிப்புச் சொல் செய்யுளுள் ஆன்று என்று முதல் நீண்டு முடியும், எ–று.

எ–டு.:–

அதான்று

அன்றேயாம் என்னாததால், அதுவன்று, அஃதன்று என முடிதலையுங் கொள்க. அதுமுன்னர், அன்று விதந்து கூறப்பட்டமையின் இது, உது முன்னர் வரும் அன்று ஆன்றாகாது எனவுங்கொள்க.

அது இது உது என்பன வட மலையாளத்தில் அத, இத, உத என்று வழங்குவது போல் தமிழ்நாட்டிலும் அத, இத, உத என்று வழங்கியிருக்கலாம். அகர ஈற்றுச்சொற்களின் முன்னர் அகரம் வரின், 'குன்றிசை மொழிவயின்' என்ற தொல்காப்பிய விதிப்படி இசையொலி நீண்டு வருமொழி

முதற் குறிலையும்பெற்று அதா அன்று என முடிந்து, பின்னர் அதான்று என மருவிற்று எனக் கோடலே பொருந்தும். மர + அடி – மராடி என முடிவது அதற்குச் சான்று. வீரசோழிய ஆசிரியர் கூறும்,

நின்ற சொல் வீற்றுமெய்ம் முன்னா முதலுயிர்
நீண்டுமெய்யும்
பொன்று முயிரோ டுயிர்மெய்வந் தால்வந்த
ஆவியும்போய்க்
குன்று மொரோவழி.

என்ற நூற்பாவும் அதன் உரையும் அவ்வாறு மருவி முடிதற்கு ஆதரவு தருகின்றன.

(30)

**180. வன்றொட ரல்லன முன்மிகா வல்வழி.**

வன்தொடர் அல்லன முன் மிகா அல்வழி

vanṯoṭar allaṉa muṉ mikā alvaḻi

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Special rule for shortened u

In Incasual combination, the Hard initials are not doubled after Short u preceded by any letter except a Hard consonant.

## ஒப்புமைப் பகுதி

அல்லது கிளப்பின் எல்லா மொழியும்
சொல்லிய பண்பின் இயற்கை ஆகும்
(தொல்.: 426)

வன்றொட ரல்லன முன்மிகா வல்வழி
(இ.வி.: 100)

அல்வழிக் கண்ணெலா மிகாதியல் பாகும்
(மு.வீ.: 408)

---

பாட வேறுபாடு.:–

1. தொள்கு
2. இறந்து
3. வன்தொடரின் மிக்கனவும்

(2) இன்னீர்த்தாயிற்றென்றானும்

## மயிலை நாதர்

எ–ன், குற்றுகர வீற்றுள், வன்றொடரல்லாத ஐந்தற்கும் எய்தியது ஒருவழி விலக்குதல் நுதலிற்று.

இ–ள்.: வன்றொட ரொழிந்த ஐந்து குற்றுகர வீற்று முன்னும் வல்லினம் மிகா, வேற்றுமை யல்லாவழி, எ – று.

வ–று.:–

(நாகு, எஃகு, வரகு, கோங்கு, [1]தெள்கு) + (கடிது, சிறிது, தீது, பெரிது) என இயல்பாயின. உறங்குகின்றான், அஞ்சுகின்றான், உண்டுபோயினான், [2]எறிந்து போயினான் என்பன முதலாயினவும் கொள்க. சுக்குக் கடிது, பதக்குப்பெரிது என [3]வன்றொடர் முன் மிக்கவாறு காண்க.

## சங்கர நமச்சிவாயர்

## சிவஞான முனிவர்

எ–னின், குற்றுகர ஈற்றுள் சிலவற்றிற்கு *ம்'இயல்பினும் விதியினும்' என்னும் சூத்திரத்தான்ம்* எய்தியது ஒருவழி விலக்கல் நுதலிற்று.

இ–ள்.: வன்றொடர் ஒழிந்த ஐந்து தொடர்க் குற்றுகர ஈற்றின் முன்னும் வரும் வல்லினம் மிகா, அல்வழிக்கண், எ – று.

உ – ம்.:–

நாகு, எஃகு, வரகு, குரங்கு, தெள்கு: கடிது, சிறிது, தீது, பெரிது எனவும்; ஏகுகால், அஃகுபிணி, பொருது சென்றான், அறிந்து தந்தான், எய்து கொன்றான் எனவும் வரும். பிறவும் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், குற்றுகரத்துள் வன்றொடரல்லாத ஐந்துக்கும் எய்தியது ஒருவழி விலக்கல் கூறியது.

இ–ள்.:– வன்றொடரல்லன முன்–வன்றொடரொழிந்த ஐந்து குற்றுகர ஈற்றின் முன்னும், மிகாஅல்வழி–வந்த வல்லினம் மிகாது இயல்பாய் முடியும் அல்வழிப் பொருட் புணர்ச்சிக்கண் எ–று.

உ–ம்.:–

நாகு, எஃகு, வரகு, குரங்கு, தெள்கு கடிது, சிறிது, தீது, பெரிது எனவும் முறையே இயல்பாயின.

உறங்குகின்றான் துஞ்சுகின்றான், உண்டுபோயினான், எறிந்துபோயினான் என்பன முதலாயினவும் கொள்க. சுக்குக்கடிது, பதக்குப்பெரிது என வன்றொடர் மிக்கவாறு காண்க.

## விசாகப் பெருமாளையர்

**இது,** குற்றியலுகர வீற்றுட் சிலவற்றிற்கு "இயல்பினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்திய தொருவழி விலக்குகின்றது.

**இ-ள்.: வன்றொட ரல்லன முன்**-வன்றொட ரொழிந்த ஐந்து குற்றியலுகர வீற்றின் முன்னும், **அல்வழி**-அல்வழியில், **மிகா**-வருகிற வல்லினம் இயல்பாகும், **எ-று.**

**உ-ம்.:-**

நாகுகடிது, எஃகுசிறிது, வரகுதீது, குரங்குபெரிது, தெள்குகொடிது எனவும், எகுகால், அஃகு பிணி, பொருதுசென்றான், அறிந்துதந்தான், எய்துகொன்றான் எனவும் அல்வழியிலே யியல்பாயின.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

அல்வழியிலே தம்முன்வரும் வல்லெழுத்து இயல்பாகப் பெறுங்குற்றுகரங்கள் யாவை?

வன்றொட ரல்லன முன்மிகா வல்வழி

(வன்றொடர் அல்லன முன்மிகா அல்வழி)

**இ-ள்.: வன்றொடர் அல்லனமுன்** - வன்றொடரொழிந்த ஐந்து குற்றியலுகரவீற்றின் முன்னும், **அல்வழி மிகா** - வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாகும், **எ-று.**

அல்வழியிலே தம்முன்வரும் வல்லினம் மிகப்பெறுங் குற்றுகரம் யாது?

"வன்றொடரல்லன முன்மிகா வல்வழி" என்றமையால் வல்லினம் வன்றொடர் முன்னே அல்வழியில் மிகும்.

**உ-ம்.:-**

எழுத்து-சிறிது எழுத்துச்சிறிது, பற்று-பெரிது, பற்றுப் பெரிது எனவரும்.

வன்றொடரல்லன முன்மிகா வல்வழி என்ற எதிர்மறையாற் பெறப்படுவன யாவை?

ஒழிந்த ஐந்து தொடரும் அல்வழியில் இயல்பாகுமென்பதும், வன்றொடர் அல்வழியில் மிகுமென்பதும். வேற்றுமையில் விதவாத எல்லாத்தொடரும் மிகுமென்பதும் பெறப்படும்.

உ–ம்.:–

நாகுகடிது, எஃகு சிறிது, வரகுதீது, குரங்குபெரிது, தெள்கு கொடிது எனவும், எஃகுகால், அஃகுபிணி, பெருகுதனம், ஒங்குகலம், எய்துபொருள் எனவும், சேறுகொற்றா வருது சாத்தா, வந்துதேவா, செய்துபூதா எனவும், பொருது சென்றான், அறிந்துதந்தான், எய்துசென்றான் எனவும், அல்வழியில் இயல்பாயின.

ஏழாம் வேற்றுமை யிடப்பொருளுணர நின்ற அங்குமுதலிய சொற்களின் முன் வரும் வல்லினம் எவ்வாறாம்?

ஏழாம் வேற்றுமை யிடப்பொருளுணர நின்ற அங்கு, இங்கு, உங்கு. எங்கு, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, யாங்கு, யாண்டு என்னும் மென்றொடர்க் குற்றுகரவீற்றிடைச் சொற்களின் முன்வரும் வல்லினம் மிகும்.

வ–று.:–

அங்குக் கொண்டான், இங்குக்கொண்டான், உங்குக் கொண்டான், எங்குக்கொண்டான், ஆங்குக் கொண்டான், ஈங்குக் கொண்டான், ஊங்குக்கொண்டான், யாங்குக் கொண்டான்; சென்றான், போயினான் எனவரும்.

ஏழாம் வேற்றுமைக் காலப் பொருளுணர நின்ற அன்று முதலியன முன் வரும் வல்லினம் எவ்வாறாம்?

ஏழாம்வேற்றுமைக் காலப் பொருளுணர நின்ற அன்று, இன்று, என்று, பண்டு, முந்து என்னும் மென்றொடர்க்குற்றுகர வீற்றிடைச் சொற்களின் முன் வரும் வல்லினம், அன்றுகண்டான், இன்றுசென்றான், என்றுதந்தான், பண்டுபெற்றான், முந்று கொண்டான் என இயல்பாயே முடியும்.

வன்றொடர்முன் வரும் வல்லினம் இயல்பாதலும் உண்டோ?

கூப்புக்கரம், நாட்டுபுகழ், கூட்டுசேனை, என இயல்பாதலுமுண்டு.

வினைத்தொகையில் வரும் வன்றொடர்முன் வல்லினம் இயல்பாமென்க.

அஃது எச்சூத்திரத்தாற் பெறப்படும்?

"மூன்றாறுருபெண் வினைத்தொகை" என்னுஞ் சூத்திரத்தாற் பெறப்படும்.

இது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்திய தொருவழி விலக்குதல்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, குற்றுகர வீற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்குகின்றது.

இ-ள்.:- வன்றொட ரல்லன முன்-வன்றொடர்க் குற்றுகர மொழிந்த மற்ற ஐந்தொடர்க் குற்றுகர மொழி முன்னும், மிகா வல்வழி-அல்வழியில் வரும் வல்லின மிகாவாம், எ-று.

உ-ம்.:-

நாகுகடிது, எஃகுகடிது, வரகுகடிது, குரங்குகடிது,
தெள்குகடிது, சிறிது, தீது, பெரிது, எனவும், ஏகுகால்,
அஃகு பிணி, பொருதுசென்றான், அறிந்துதந்தான்,
எய்துகொன்றான் எனவும், இயல்பாயின. பிறவுமன்ன.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

உரை :- வன்றொடர் அல்லன முன் - வன்றொடர் ஒழிந்த ஐந்து தொடர்க் குற்றியலுகரத்தின் முன்னும், (வருகிற வல்லினம்), அல்வழி - அல்வழிப் புணர்ச்சியில், மிகா - இயல்பாகும்.

உ-ம் :-

| | | | | |
|---|---|---|---|---|
| ஆறு + கலை | = | ஆறுகலை | - | நெடிற்றொடர் |
| எஃகு + சிறிது | = | எஃகுசிறிது | - | ஆய்தத்தொடர் |
| வரகு + தீது | = | வரகுதீது | - | உயிர்த்தொடர் |
| வந்து + போனான் | = | வந்துபோனான் | - | மென்றொடர் |
| எய்து + கொள் | = | எய்துகொள் | - | இடைத்தொடர் |

குறிப்பு :-

ஏழாம் வேற்றுமை இடப்பொருளுணர நின்ற அங்கு, இங்கு, உங்கு, எங்கு, யாங்கு, ஆண்டு, ஈண்டு, யாண்டு என்னும் மென்றொடர்க் குற்றியலுகரவீற்று இடைச்சொற்களின் முன் வல்லினம் மிகும்.

உ-ம் :-

அங்குக்கண்டான்

எங்குப்போனான்
ஆண்டுச்சென்றான்
இங்குச்சென்றான்
ஈண்டுத்தந்தான்
உங்குத்தந்தான்
யாங்குப்போனான்
யாண்டுப்போயினான்

ஏழாம்வேற்றுமை இடப்பொரு ளுணரநின்ற அன்று, இன்று, என்று, பண்டு முந்து என்னும் மென்றொடர்க் குற்றியலுகரவீற்று இடைச் சொற்களின் முன் வல்லினம் – அன்று கண்டான், இன்று சென்றான், என்று தந்தான், பண்டுபோயினான், முந்து பெற்றான் என இயல்பாயே முடியும். ஐகாரச்சாரியை பெறின் பொதுவிதியால் வலிமிகு மென்றறிக. இவையெல்லாஞ் சொல்லால் அல்வழியும் பொருளால் வேற்றுமையு மாதலால் சில அல்வழி விதியையும், சில வேற்றுமை விதியையும் ஏற்றன.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: வன்றொடர் அல்லன முன் அல்வழி மிகா–வன்றொட ரொழிந்த ஐந்து குற்றியலுகர வீற்றின் முன்னும் வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாகும், எ–று.

உ–ம்.:–

நாகுகடிது, எஃகுசிறிது, வரகுதீது, குரங்குபெரிது, தெள்குகொடிது எனவும், ஏகுகால், அஃகு பிணி, பெருகு தனம், ஓங்கு குலம், எய்து பொருள் எனவும், சேறுகொற்றா, வருது சாத்தா, வந்துதேவா, செய்துபூதா எனவும், பொருதுசென்றான், அறிந்துதந்தான், எய்து கொன்றான் எனவும், அல்வழியில் இயல்பாயின.

ஏழாம் வேற்றுமை யிடப்பொருளுணர நின்ற அங்கு, இங்கு, உங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, யாங்கு, யாண்டு என்னும் மென்றொடர்க் குற்றுகர வீற்றிடைச் சொற்களின் முன் வரும் வல்லினம் மிகும்.

வ – று.:–

அங்குக் கொண்டான், இங்குக் கொண்டான், உங்குக் கொண்டான், எங்குக் கொண்டான், ஆங்குக் கொண்டான், ஈங்குக் கொண்டான், ஊங்குக் கொண்டான், யாங்குக்

கொண்டான், யாண்டுக்கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என வரும்.

ஏழாம் வேற்றுமைக் காலப்பொருளுணர நின்ற அன்று, இன்று, என்று, பண்டு, முந்து என்னும் மென்றொடர்க் குற்றுகர வீற்றிடைச்சொற்களின் முன் வரும் வல்லினம், அன்று கண்டான், இன்று சென்றான், என்று தந்தான், பண்டு பெற்றான், முந்து கொண்டான் என இயல்பாயே முடியும்.

இது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்திய தொருவழி விலக்குதல்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ—ள். வன்றொடர் அல்லன முன் அல்வழி மிகா — வன்றொடரொழிந்து ஐந்து குற்றியலுகரவீற்றின் முன்னும் வரும் வல்லினம் அல்வழியின் இயல்பாகும். எ—று.

உ—ம்.:—

நாகுகடிது, எஃகுசிறிது, வரகுதீது, குரங்குபெரிது, தெள்குகொடிது எனவும், ஏகுகால், அஃகுபிணி, பெருகுதனம், ஓங்குகுலம், எய்துபொருள் எனவும் சேறுகொற்றா, வருதுசாத்தா, வந்துதேவா, செய்து பூதா எனவும் பொருதுசென்றான், அறிந்துதந்தான், எய்துகொன்றான் எனவும் அல்வழியில் இயல்பாயின.

ஏழாம் வேற்றுமையிடப் பொருளுணரநின்ற அங்கு, இங்கு, உங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு ஊங்கு, யாங்கு, யாண்டு என்னும் மென்றொடர்க் குற்றுகர வீற்றிடைச் சொற்களின் முன்வரும் வல்லினம் மிகும்.

வ—று.:—

அங்குக் கொண்டான், இங்குக்கொண்டான், உங்குக் கொண்டான், எங்குக்கொண்டான், ஆங்குக்கொண்டான், ஈங்குக்கொண்டான், ஊங்குக்கொண்டான், யாங்குக் கொண்டான், யாண்டுக் கொண்டான், சென்றான், தந்தான், போயினான், என வரும்.

ஏழாம் வேற்றுமைக்காலப் பொருளுணர நின்ற அன்று, இன்று, என்று, பண்டு, முந்து என்னும் மென்றொடர்க்குற்றுகர வீற்றிடைச் சொற்களின் முன்வரும் வல்லினம், அன்று கண்டான், இன்று சென்றான், என்று

தந்தான், பண்டு பெற்றான், முந்து கொண்டான் என இயல்பாயே முடியும்.

இது 'இயல்பினும் விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதொருவழி விலக்குதல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– வன்றொடர் அல்லன முன் – வன்றொட ரொழிந்த ஐந்து தொடர்க் குற்றியலுகரத்தின் முன்னும் (வருகிற வல்லினம்), அல்வழி–அல்வழிப் புணர்ச்சியில், மிகா–இயல்பாம்; எ–று.

உ–ம்.:–

ஆறு + தலை = ஆறுதலை – நெடிற்றொடர்

எஃகு + பெரிது = எஃகுபெரிது – ஆய்தத்தொடர்.

வரகு + சிறிது = வரகுசிறிது – உயிர்த்தொடர்

வந்து + தந்தான் = வந்துதந்தான் – மென்றொடர்

எய்து + பொருள் = எய்துபொருள் – இடைத்தொடர்

'வன்றொடரல்லனமுன்மிகா' என்றதனால் வன்றொடரின் முன் 'எழுத்துச் சிறிது', 'படித்துத் தந்தான்' என அல்வழியில் வலி மிகு மென்க.

ஏழாம் வேற்றுமை யிடப்பொருளுணர நின்ற அங்கு, இங்கு, உங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, யாங்கு, ஆண்டு, ஈண்டு, யாண்டு என்னும் மென்றொடர்க் குற்றியலுகர வீற்று இடைச்சொற்களின் முன்வரும் வல்லினம் மிகும்.

உ–ம்.:–

அங்குக்கண்டான், இங்குச்சென்றான், உங்குத் தந்தான், எங்குப்பெற்றான், ஆங்குக்கற்றான், ஈங்குச்சேர்ந்தான், ஊங்குப்பார்த்தான், யாங்குக்கண்டான், ஆண்டுச்சென்றான், ஈண்டுத்தந்தான், யாண்டுப் போயினான் என வரும்.

ஏழாம்வேற்றுமைக் காலப்பொருளுணர நின்ற அன்று, இன்று, என்று, பண்டு, முந்து என்னும் மென்றொடர்க் குற்றியலுகர வீற்று இடைச்சொற்களின் முன் வரும்

வல்லினம், அன்று கண்டான், இன்றுசொன்னான், என்று தந்தான், பண்டுபோயினான், முந்துபெற்றான் என இயல்பாயே முடியும்.

இவையெல்லாம் சொல்லால் அல்வழியும் பொருளால் வேற்றுமையுமாதலால், சில அல்வழி விதியையும் சில வேற்றுமை விதியையும் ஏற்றன.

## பவானந்தம் பிள்ளை

**இ-ள்.:- வன்றொடர் அல்லன முன் அல்வழி மிகா** - வன்றொடரொழிந்த ஐந்துகுற்றியலுகர வீற்றின் முன்னும் வரும்வல்லினம் அல்வழியில் இயல்பாகும். எ-று.

உ-ம்.:-

நாகு + கடிது = நாகுகடிது - நடெிற்றொடர்.

எஃகு + சிறிது = எஃகு சிறிது - ஆய்தத்தொடர்.

வரகு +தீது = வரகுதீது - உயிர்த்தொடர்

வந்து + தந்தான் = வந்துதந்தான் - மென்றொடர்.

எய்து + கொன்றான் = எய்துகொன்றான் - இடைத்தொடர்.

அல்வழியில் இயல்பாயின.

'வன்றொடரல்லன முன்மிகா அல்வழி' என்றதனால் வன்றொடர்முன்மிகும்அல்வழி என்றாராயிற்று.

ஏழாம் வேற்றுமை யிடப்பொரு ளுணரநின்ற அங்கு, இங்கு, உங்கு, எங்கு, ஆங்கு, ஆங்கு, ஊங்கு யாங்கு, யாண்டு என்னும் மென்றொடர்க் குற்றுகரவீற் விடைச்சொற்களின் முன் வரும் வல்லினம் மிகும். (இங்கே இடப்பொருள் என்றது இடம் இடமாக நின்றதை.)

உ-ம்.:-

அங்குக் கொண்டான், இங்குக் கொண்டான், உங்குக் கொண்டான், எங்குக் கொண்டான், ஆங்குக் கொண்டான், ஈங்குக் கொண்டான், ஊங்குக் கொண்டான், யாங்குக் கொண்டான், யாண்டுக் கொண்டான் என வரும்.

ஏழாம் வேற்றுமை இடப்பொரு ளுணர நின்ற அன்று, இன்று, என்று, பண்டு, முந்து என்னும் மென்றொடர்க்

குற்றுகரவீற் றிடைச் சொற்களின் முன் வரும் வல்லினம், அன்று கண்டான், இன்று சென்றான், என்று தந்தான், பண்டு பெற்றான், முந்து கொண்டான் என இயல்பாயே முடியும். (இங்கே இடப்பொருள் என்பது காலம் இடமாக நின்றதை)

(இவையெல்லாம் சொல்லால் அல்வழியும் பொருளால் வேற்றுமையு மாதலால், சில அல்வழி விதியையும், சில அல்வழி விதியையும், சில வேற்றுமை விதியையும் பெற்றன.)

இது "இயல்பினும் விதியினும்" என்னும் 165–ஆவது சூத்திரத்தால் எய்திய தொருவழி விலக்குதல்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:– வன்றொடர் அல்லன முன்–வன்றொட ரொழிந்த ஐந்து குற்றியலுகர வீற்றின் முன்னும், அல்வழி –அல்வழியில், மிகா– (வருகிற வல்லினம்) இயல்பாகும். எ–று.

பொ–ரை.:– வன்றொடர் அல்லாத மற்றைத் தொடர்களின் பின் அல்வழியில் வருகிற வல்லினம் இயல்பாம்.

உ–ம்.:–

நாகு + கடிது = நாகுடிது – நெடிற்றொடர்.

எஃகு + சிறிது = எஃகுசிறிது – ஆய்தத்தொடர்.

வரகு + தீது = வரகுதீது – உயிர்த்தொடர்.

குரங்கு + பெரிது = குரங்குபெரிது – மென்றொடர்.

தெள்கு + கொடிது – தெள்குகொடிது – இடைத்தொடர்.

ஏகு + கால் = ஏகுகால் – நெடிற்றொர்.

அஃகு + பிணி = அஃகுபிணி – ஆய்தத்தொடர்.

பொருகு + சென்றான் = பொருதுசென்றான் –
– உயிர்த்தொடர்.

அறிந்து + தந்தான் = அறிந்துதந்தான் – மென்றொடர்.

எய்து + கொன்றான் =எய்துகொன்றான் – இடைத்தொடர்.

என, அல்வழியில் வலி இயல்பாயின.

வன்றொடரல்லனமுன்மிகா என்றமையால், வன்றொடரின்முன் அல்வழியில் 'எழுத்துச்சிறிது', 'கொக்குப்பறந்தது', 'படித்துத் தந்தான்' 'கற்றுத்தேர்ந்தான்' என வலிமிகு மென்க.

ஏழாம்வேற்றுமை இடப்பொருளுணாத்தும் அங்கு, இங்கு, உங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, யாங்கு, ஆண்டு, ஈண்டு, யாண்டு என்னும் மென்றொடர்க்குற்றியலுகர வீற்று இடைச்சொற்களின் முன் வரும் வல்லினம் மிகும்.

உ–ம்.:–

அங்குக்கண்டான், இங்குச்சென்றான், உங்குத்தந்தான், எங்குப்பெற்றான், ஆங்குக்கற்றான், ஈங்குச்சேர்ந்தான், ஊங்குப்பார்த்தான், யாங்குக்கண்டான், ஆண்டுச்சென்றான், ஈண்டுத்தந்தான், யாண்டுப்போயினான் எனவரும்.

ஏழாம்வேற்றுமைக்காலப் பொருளுணர்த்தும் அன்று, இன்று, என்று, பண்டு, முந்து என்னும் மென்றொடர்க் குற்றியலுகர வீற்று இடைச் சாற்களின் முன் வரும் வல்லினம் அன்று கண்டான், இன்று சொன்னான், என்றுதந்தான், பண்டுபோயினான், முந்துபெற்றான் என இயல்பாயே முடியும்.

இவையெல்லாம் சொல்லால் அல்வழியும் பொருளால் வேற்றுமையு மாதலால், சில அல்வழி விதியையும் சில வேற்றுமை விதியையும் பெற்றன. இச் சூத்திரம்.

வன்றொடர்முன் வலி மிகும் என்று கூறியதாயிற்று.

## கா.நமச்சிவாய முதலியார்

வன்றொடர் அல்லன முன் – வன்றொடரொழிந்த ஐந்து குற்றியலுகர வீற்றின் முன்னும், அல்வழி – அல்வழியில், மிகா – (வருகிற வல்லினம்) இயல்பாகும்.

உதாரணம்.:–

நெடிற்றொடர் :

நாகு + கடிது : நாகுகடிது

ஆறு + தூண் : ஆறுதூண்

ஆய்தத்தொடர் :

எஃகு+ சிறிது : எஃகுசிறிது

அஃகு+ பிணி : அஃகுபிணி

உயிர்த்தொடர் :

வரகு + தீது : வரகுதீது

பொருது +சென்றான்பொருதுசென்றான்

மென்றொடர் :

வந்து+போனான் = வந்துபோனான்
சென்று +கொடுத்தான் –சென்றுகொடுத்தான்

**இடைத்தொடர்**

எய்து + கொன்றான் = எய்துகொன்றான்
செய்து +கொடுத்தான் = செய்துகொடுத்தான்

'வன்றொடர் அல்லனமுன்மிகா' என்றதனால்,
வன்றொடர்முன்

கொக்கு + பெரிது = கொக்குப்பெரிது

என அல்வழியில் வலிமிகும்.

ஏழாம் வேற்றுமை இடப்பொருளுணர்த்தும் அங்கு, இங்கு, உங்கு, எங்கு, யாங்கு, ஆண்டு, ஈண்டு, யாண்டு என்னும் மென்றொடர்க் குற்றியலுகர வீற்று இடைச்சொற்களின் முன் வரும் வல்லினம் மிகும்.

**உதாரணம்.:–**

| | |
|---|---|
| அங்குக்கண்டான் | யாங்குக்கண்டான் |
| இங்குச்சென்றான் | ஆண்டுச்சென்றான் |
| உங்குத்தந்தான் | ஈண்டுத்தந்தான் |
| எங்குப்போயினான் | யாண்டுப்போயினான். |

ஏழாம்வேற்றுமை காலப் பொருளுணர்த்தும் அன்று, இன்று, என்று, பண்டு, முந்து என்னும் மென்றொடர்க் குற்றியலுகரவீற்று இடைச் சொற்களின்முன் வரும் வல்லினம்,

அன்றுகண்டான்
பண்டுபோயினான்
இன்றுசென்றான்
முந்துபெற்றான்
என்று தந்தான் என இயல்பாயே முடியும்.

## மோசசு பொன்னையா

வன்றொடரல்லாத பிற ஐந்து குற்றுகரத் தொடர் மெழிகளின் முன்னர்வரும் வல்லினம் அல்வழிக்கண் மிகுவதில்லை, எ–று.

எ–டு.

ஆறுதலை
எஃகு பெரிது    வன்றொடர் அல்லாத ஐந்து குற்றுகரத்
வரகு சிறிது    தொடர்களும் அல்வழிக்கண் வலிவர

வந்து போனான் இயல்பாயின.
தெள்கு கொடிது

சுக்குக்கடிது
பதக்குப்பெரிது வன்றொடர்முன் அல்வழிக்கண் மிக்கன.

அங்குக்கண்டான், இங்குக்கண்டான், உங்குக்கண்டான், ஆங்குக்கண்டான், ஈங்குக்கண்டான், ஊங்குக்கண்டான் என்பனவும்; அன்றுபார்த்தேன், இன்றுபார்த்தேன், பண்டுவந்தான், முந்து சென்றான் என்பனவும் சொன்னிலையால் அல்வழிப் பொருளும். பொருணிலையால் ஏழாம் வேற்றுமையின் இடப் பொருளும் காலப் பொருளும் உணர்த்தி வருவதால் முறையே மிக்கும், இயல்பாயும் முடிந்தன எனக்கொள்க.

**(31)**

**181. இடைத்தொட ராய்தத் தொடரொற் றிடையின்**
**மிகாநெடி லுயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை.**

**இடைத்தொடர் ஆய்தத் தொடர் ஒற்று இடையின்**
**மிகா நெடில் உயிர்த்தொடர் முன் மிகா வேற்றுமை**

itaiṭṭotar āyṭaṭ ṭotar oṟṟu itaiyiṉ
mika hnetil uyirṭṭotar muṉ mikā vēṟṟumai

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

When short u is preceded by a medial consonant, a guttural a single Long vowel without an intervening mute consonant (line āttu), or by any other vowel, — the Hard initials which follows it **casually, are not doubled.**

## ஒப்புமைப் பகுதி

இடையொற்றுத் தொடரும் ஆய்தத் தொடரும்
நடைஆ இயல என்மனார் புலவர்

(தொல்.: 414)

ஒற்றிடை யினமிகா மொழியுமா ருளவே
அத்திறத் தில்லை வல்லெழுத்து மிகலே

(தொல்.: 413)

இடைத்தொட ராய்தத் தொடரொற் றிடையின்
மிகாநெடி லுயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை

(இ.வி.: 101)

இடைத்தொட ராய்தத் தொடரியல் பாகும்

(மு.வீ.: 394)

ஒற்றிடை மிகாக்குற் றுகரமு முளவே
வல்லின மிகலத் திறத்தினு ளிலவே.

(மு.வீ.: 393)

## மயிலை நாதர்

எ-ன், எய்தியது ஒருமருங்கு மறுத்தல் நுதலிற்று.

இ-ள்.:- [1]இடைத்தொடர் ஆய்தத்தொடர்க் குற்றுகரங்கள் முன்னும் இடையில் ஒற்றுமிகாத நெடிலுயிர்த்தொடர்க் குற்றுகரங்கள் முன்னும் வரும் வல்லெழுத்துக்கள் வேற்றுமைக்கண் இயல்பாம், எ - று.

வ - று.:-

[2]தெள்குகடுமை, எஃகுகடுமை; சிறுமை, தீமை, பெருமை என இடைத்தொடர் முன்னும் ஆய்தத்தொடர் முன்னும் வல்லெழுத்துக்கள் இயல்பாயின.நாகுகால்; செவி, தலை, புறம் எனவும், வரகு கதிர்; சோறு, தாள், பதர் எனவும் ஒற்றிடையின் மிகாத நெடிலுயிர்த்தொடர் முன் இயல்பாயின.

---

பாட வேறுபாடு.:-

1. இடையொற்றுத்தொடர்
2. தொள்கு

இவற்றின்முன் இயல்பா மெனவே ஒழிந்து நின்ற வன்றொடரும் மென்றொடரும் ஒற்றிடையே மிகும் நெடிற்றொடரும் உயிர்த்தொடரும் உயிரீற்றுப் பொதுவிதியானே மிக்கு முடியு மென்க. அவை: கொக்குக்கால், குரங்குக்கால், ஆட்டுக்கால், பாற்றுக்கால், முருட்டுக்கால், முயிற்றுக்கால்; செவி, தலை, புறம் எனவரும். பிறவுமன்ன.

## சங்கர நமச்சிவாயர்

## சிவஞான முனிவர்

**எ – னின், இதுவும் அது.**

இ–ள்.:– இடைத்தொடர் முன்னும், ஆய்தத்தொடர் முன்னும், ஒற்று இடையே மிகாத நெடிற்றொடர் முன்னும், உயிர்த்தொடர் முன்னும் வரும் வல்லினம் மிகா, வேற்றுமைக்கண், எ – று.

உ–ம்.: –

*தெள்கு கால், சிறை, தலை, புறம் எனவும்; எஃகு கடுமை, சிறுமை, தீமை, பெருமை எனவும்; நாகு கால், செவி, தலை, புறம் எனவும்; வரகு கதிர், சோறு, தாள், பதர் எனவும் வரும்.*

*ஒற்று இடையின்மிகா என்பதனை உயிர்த்தொடர் என்பதனோடும் கூட்டுக.*

*ஒற்று இடையின் மிகும் அவ்விரு குற்றுகரங்களும் வரும் சூத்திரத்தால் கூறுப. அவற்றிற்கு முன்வரும் வல்லினம் மிகும் என்று உணர்க.*

*"ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும் வேற்றுமை யாயின் ஒற்றிடை யின்மிகத் தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி"*

*"ஒற்றிடை யின்மிகா மொழியுமா ருளவே அத்திறத் தில்லை வல்லெழுத்து மிகலே"*

*"இடையொற்றுத் தொடரும் ஆய்தத் தொடரும் நடையா யியல என்மனார் புலவர்"*

*என்றார் ஆசிரியர் தொல்காப்பியரும் என்க.*

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் கூறியது.

இ-ள்.:- இடைத்தொடர் ஆய்தத்தொடர்-இடைத்தொடர்க் குற்றுகரமும் ஆய்தத்தொடர்க் குற்றுகரத்தின் முன்னும், ஒற்றிடையின் மிகா நெடில் - இடையே ஒற்று மிகாத நெடிற்றொடர்க் குற்றுகரத்தின் முன்னும், உயிர்த்தொடர்முன் - உயிர்த்தொடர்க் குற்றுகரத்தின் முன்னும், மிகாவேற்றுமை-வல்லினம் வேற்றுமைக்கண் இயல்பாம் என்றவாறு.

உ-ம்.:-

தெள்கு, எஃகு, கடுமை, சிறுமை; தீமை, பெருமை எனவும்; நாகுகால், செவி, தலை, புறம் எனவும்; காசு, காது, காபு: கடுமை, சிறுமை, தீமை, பெருமை எனவும் ஒற்றிடையிலே மிகாத நெடிற்றொடர்க் குற்றுகரம் இயல்பாயின. வரகு கதிர், சோறு, தாள், பதர் எனவும்; முரசு, மருது, துரபு கடுமை, சிறுமை, தீமை, பெருமை எனவும் ஒற்று இடையிலே மிகாத உயிர்த்தொடர்க் குற்றுகரத்தின் முன் இயல்பாயின.

இவை இயல்பாம் எனவே வன்றொடரும் மெற்றொடரும் ஒற்றிடையிலே மிகும் நெடிற்றொடர் உயிர்த்தொடர் இரண்டும் உயிரீற்றுப் பொதுவிதியான் மிக்கு முடியுமென்க. அவை கொக்குக் கால், குரங்குக்கால், ஆட்டுக்கால், முயிற்றுக்கால், செவி, தலை, புறம் என வரும்.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

இ-ள்.:- இடைத்தொடர் (முன்) - இடைத்தொடர் முன்னும், ஆய்தத்தொடர் (முன்) - அய்தத்தொடர் முன்னும், ஒற்றிடையின் மிகா நெடிற் (றொடர்முன்) - ஒற்றிடையே மிகாத நெடிற்றொடர் முன்னும், உயிர்த்தொடர் முன்-உயிர்த்தொடர் முன்னும், வேற்றுமை-வேற்றுமையில், மிகா-வருகிற வல்லினம் இயல்பாம், எ-று.

உ-ம்.:-

தெள்கின்கடுமை, எஃகின்கடுமை, நாகின்கடுமை, வரகின்கடுமை; சிறுமை, தீமை, பெருமை என வல்லெழுத்து மிகாது "இதற்கிது சாரியை" யென்னுஞ் சூத்திரத்தால் இன்சாரியை பெற்று வந்தது, (வரகு கதிரெனச் சாரியை பெறாது வருதலுங் கொள்க)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

வேற்றுமைக்கண்ணே வல்லினம் மிகாத குற்றுகரங்கள் எவை?

இடைத்தொடராய்தத் தொடர்ரொற் றிடையின்

மிகாநெடி லுயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை.

(இடைத்தொடர், ஆய்தத்தொடர், ஒற்று இடையின் மிகா நெடில், உயிர்த்தொடர், முன்மிகா வேற்றுமை.)

இ-ள்.:- இடைத்தொடர் (முன்) - இடைத்தொடர் முன்னும், ஆய்தத் தொடர்(முன்) - ஆய்தத்தொடர் முன்னும், ஒற்று இடையின் மிகா நெடிற் (றொடர் முன்) - ஒற்று இடையே மிகாத நெடிற்றொடர்முன்னும், (ஒற்று இடையின் மிகா) உயிர்த்தொடர்முன் - ஒற்று இடையே மிகாத உயிர்த்தொடர் முன்னும் வரும் வல்லினம், வேற்றுமை மிகா - வேற்றுமையில் இயல்பாம், எ-று.

உ-ம்.:-

(1) தெள்குகால், சிறை, தலை, புறம் என இடைத்தொடர்க் குற்றியலுகரத்தின் முன் வேற்றுமையில் வலி இயல்பாயின. (தெள்கு-தெள்.)

(2)எஃகுகடுமை, சிறுமை, தீமை, பெருமை என ஆய்தத்தொடர்க் குற்றியலுகரத்தின்முன் வேற்றுமையில் இயல்பாயின.

(3) நாகுகால், செவி, தலை, புறம் என ஒற்றிடையே மிகாத நெடிற்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் வேற்றுமையில் இயல்பாயின.

(4) வாகுகதிர், சோறு, தாள், பதர் என ஒற்றிடையே மிகாத உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்தின் முன் வேற்றுமையில் இயல்பாயின.

இதுவும் "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதொருவழி விலக்குதல்.

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

இ-ள்.: இடைத்தொடர் ஆய்தத் தொடர் ஒற்றிடையின் மிகா நெடியலுயிர்த் தொடர் முன் - இந்த நான்கு குற்றுகர மொழி முன்னும், மிகா வேற்றுமை - வேற்றுமைக்கண் வல்லினம் வந்து புணரின் மிகாவாம்,

எ–று.

உ–ம்.:–

தெள்குகடுமை, எஃகுகடுமை, நாகுகடுமை, வரகுகடுமை, சிறுமை, தீமை, பெருமை என வரும். தெள்கின் கடுமை, எஃகின் கடுமை எனச் சாரியை கூட்டி வல்லெழுத்து மிகாமைக்கு உதாரணங் காட்டுவாருமுளர். அது கூடாமைக்கு அவர் காட்டிய வரகுகதி ரென்னு முதாரணமே சான்றாத லுணர்க. நாக்கு என்பது ஒற்றிடையின் மிக்கு நெடிற்றொட ரொன்றாரை நோக்கி, நாகு என்பது – ஒற்றிடையின் மிகா நெடிலென்றார்.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :–** **இடைத்தொடர்** – இடைத்தொடரும், **ஆய்தத் தொடர்** – **ஒற்று இடையில் மிகா** – ஒற்று இடையே மிகாத, **நெடில் உயிர்த்தொடர்** – நெடிற்றொடரும் உயிர்த்தொடரும், **முன்** – ஆகிய இவற்றின் முன், **வேற்றமை மிகா** – (வருகிற வல்லினம்) வேற்றுமைப் புணர்ச்சியில் இயல்பாகும்.

உ–ம் :–

மார்பு + கடுமை = மார்பு கடுமை – இடைத்தொடர்
எஃகு + சிறுமை = எஃகு சிறுமை – ஆய்தத்தொடர்
நாகு + தீமை = நாகு தீமை – நெடிற்றொடர்
வரகு + பெருமை = வரகுபெருமை – உயிர்த்தொடர்

குறிப்பு :–

'ஒற்றிடையின்மிகா' என்றதை உயிர்த்தொடரோடுங் கூட்டுக. 'ஒற்றிடையின் மிகா நெடி லுயிர்த்தொடர்' என்றது, பெரும்பாலும் வருஞ் சூத்திரத்தாற் கூறப்படும் டுகர றுகர வீறுக ளொழிந்த மற்றைய வீறுகளை என்க.

'ஒற்றிடையின் மிகா நெடிலுயிர்த்தொடர் முன் மிகா வேற்றுமை' என்றதனால், வீடு – வீட்டு, வயிறு – வயிற்று என ஒற்றிடையில் மிகும் நெடிற்றொடர் உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களுக்கு முன்வரும் வல்லினம் வீட்டுச்சுவர், வயிற்றுக்கடுப்பு என வேற்றமையிலும், மூட்டுப்பூச்சி, வெளிற்றுப்பனை என அல்வழியிலும் மிகுந்து வருமென்று கொள்க.

எனவே, ஆறுவகைக் குற்றியலுகரங்களுள் இடைத் தொடர்,

ஆய்தத்தொடர், ஒற்றிடை மிகாத நெடிற்றொடர், ஒற்றிடை மிகாத உயிர்த்தொடர் இவற்றுக்கு முன் வேற்றுமை அல்வழி இரண்டிலும் வலி மிகா என்றும், மூட்டுப்பூச்சி, ஆட்டுக்கால் எனவும், வெளிற்றுப்பனை, கயிற்றுப் பின்னல் எனவும்; படித்துச் சென்றான், கொக்குக்கால் எனவும் முறையே ஒற்றிடை மிகும் நெடிற் றொடர், ஒற்றிடை மிகும் உயிர்த்தொடர், வன்றொடர் இவற்றின் முன் இருவழியிலும் வலிமிகும் என்றும்; வண்டுக்கால் என மென்றொடர் முன் வேற்றுமையில் வலி மிகும் என்றுங் கூறியதாயிற்று.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– இடைத்தொடர் (முன்) – இடைத்தொடர் முன்னும், ஆய்தத்தொடர் (முன்) – ஆய்தத்தொடர் முன்னும், **ஒற்று இடையின் மிகாநெடிற் (றொடர்முன்)** –ஒற்று இடையே மிகாத நெடிற்றொடர் முன்னும், (ஒற்று இடையின்மிகா) உயிர்த்தொடர் **முன்** – ஒற்று இடையே மிகாத உயிர்த்தொடர் முன்னும், வேற்றுமை மிகா–வரும் வல்லினம் வேற்றுமையில் இயல்பாம், எ–று.

உ–ம்.:–

(1) தெள்குகால், சிறை, தலை, புறம் என இடைத்தொடர்க் குற்றியலுகரத்தின் முன் வேற்றுமையில் வலி இயல்பாயின.

(2) எஃகுகடுமை, சிறுமை, தீமை, பெருமை என ஆய்தத்தொடர்க் குற்றியலுகரத்தின் முன் வேற்றுமையில் இயல்பாயின.

(3) நாகுகால், செவி, தலை, புறம் என ஒற்றிடையே மிகாத நெடிற்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் வேற்றுமையில் இயல்பாயின.

(4) வரகுகதிர், சோறு, தாள், பதர் என ஒற்றிடையே மிகாத உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்தின் முன் வேற்றுமையில் இயல்பாயின.

ஒற்றிடையே மிகும் நெடிற்றொடர் உயிர்த்தொடர்க் குற்றுகரங்கள் வருஞ் சூத்திரத்தாற் கூறப்படும்; அவற்றின் முன் வரும் வல்லினம் மிகும்.

இதுவும் "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத் தால் எய்திய தொருவழி விலக்குதல்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள்.:– இடைத்தொடர் (முன்)** – இடைத்தொடர் முன்னும், – **ஆய்தத் தொடர் (முன்)** – ஆய்தத்தொடர் முன்னும், – **ஒற்று இடையின் மிகா நெடிற் (றொடர்முன்)** – ஒற்று இடையே மிகாத நெடிற்றொடர் முன்னும், – (ஒற்று இடையின் மிகா) **உயிர்த்தொடர்முன்** – ஒற்று இடையே மிகாத உயிர்த்தொடர்முன்னும், – **வேற்றுமை மிகா** – வரும் வல்லினம் வேற்றுமையில் இயல்பாம். எ–று.

உ–ம்:–

(1) தெள்குகால், சிறை, தலை, புறம் என இடைத்தொடர்க்குற்றிய லுகரத்தின் முன் வேற்றுமையில் வலி இயல்பாயின.

(2) எஃகு கடுமை, சிறுமை, தீமை, பெருமை என ஆய்தத் தொடர்க் குற்றியலுகரத்தின்முன் வேற்றுமையில் வலி இயல்பாயின.

(3) நாகுகால், செவி, தலை, புறம் என ஒற்றிடையே மிகாத நெடிற்றொடர்க் குற்றியலுகரத்தின்முன் வேற்றுமையில் வலி இயல்பாயின.

(4) வரகுகதிர், சோறு, தாள், பதர் என ஒற்றிடையே மிகாத உயிர்த் தொடர்க்குற்றியலுகரத்தின் முன் வேற்றுமையில் வலி இயல்பாயின. ஒற்றிடையே மிகும் நெடிற்றொடர் உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்கள் வருஞ் சூத்திரத்தாற் கூறப்படும் அவற்றின்முன் வரும் வல்லினம் மிகும்.

இதுவும் '**இயல்பினும் விதியினும்**' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதொரு வழி விலக்குதல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: இடைத்தொடர் – இடைத்தொடரும், ஆய்தத்தொடர் – ஆய்தத்தொடரும், ஒற்று இடையில் மிகா நெடில் உயிர் தொடர் – ஒற்று இடையே மிகாத நெடிற்றொடரும் ஒற்று இடையே மிகாத உயிர்த்தொடரும், முன்–ஆகிய இவற்றின் முன், வேற்றுமை மிகா–(வருகிற வல்லினம்) வேற்றுமைப் புணர்ச்சியில் இயல்பாம்; எ–று.

உ–ம்.:–

மார்பு + கடுமை = மார்புகடுமை – இடைத்தொடர்

எஃகு + சிறுமை = எஃகுசிறுமை – ஆய்தத்தொடர்

நாகு+தீமை = நாகுதீமை – மிகா நெடிற்றொடர்.

வரகு+கதிர் = வரகுகதிர் – மிகா வுயிர்த்தொடர்.

'ஒற்றிடையின் மிகா' என்றதை, உயிர்த்தொடரோடும் கூட்டுக: 'ஒற்றிடையின் மிகா நெடிலுயிர்த்தொடர்' என்றது, வருஞ் சூத்திரத்தாற் கூறப்படும் டுகர றுகர வீறுகளொழிந்த மற்றைய ஈறுகளை.

'ஒற்றிடையின் மிகா நெடிலுயிர்த்தொடர் முன் மிகா வேற்றுமை' என்றதனால், வீடு–வீட்டு, வயிறு–வயிற்று என ஒற்று இடையில் மிகும் நெடிற்றொடர் உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்கட்கு முன் வரும் வல்லினம் – வீட்டுச்சுவர், வயிற்றுக்கடுப்பு என வேற்றுமையிலும், மூட்டுப்பூச்சி, வெளிற்றுப்பனை என அல்வழியிலும் மிக்கு வருமென்று அறிக.

இங்குக் கூறப்படாத மென்றொடரின் முன்னும், வன்றொடரின் முன்னும் வண்டுக்கால், கொக்குச்சிறகு என வேற்றுமையில் வலிமிகு மென்க.

எனவே, ஆறுவகைக் குற்றியலுகரங்களுள் இடைத்தொடர், ஆய்தத் தொடர் (ஒற்றிடை மிகாத) நெடிற்றொடர், (ஒற்றிடை மிகாத) உயிர்த்தொடர் இவற்றுக்கு முன் வேற்றுமை அல்வழி இரண்டிலும் வலி மிகா வென்றும்; (ஒற்றிடை மிகும்) நெடிற்றொடர் (ஒற்றிடை மிகும்) உயிர்த்தொடர், வன்றொடர் இவற்றுக்கு முன் இருவழியிலும் வலி மிகுமென்றும், மென்றொடர் முன் அல்வழியில் மிகா, வேற்றுமையில் மிகுமென்றும் கூறியதாயிற்று.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– இடைத்தொடர் (முன்) – இடைத்தொடர் முன்னும், ஆய்தத்தொடர் (மூன்) – ஆய்தத்தொடர் முன்னும், ஒற்று இடையின் மிகா நெடிற் (றொடர்முன்)– ஒற்று இடையே மிகாத நெடிற்றொடர் முன்னும், )ஒற்று இடையின் மிகா) உயிர்த்தொடர்முன் – ஒற்று இடையே மிகாத உயிர்த்தொடர் முன்னும், வேற்றுமை மிகா – வரும் வல்லினம் வேற்றுமையில் இயல்பாம். எ–று.

உ–ம்.:–

மார்பு + கடுமை = மார்புகடுமை – இடைத்தொடர். எஃகு + சிறுமை = எஃகுசிறுமை – ஆய்தத் தொடர். நாகு + தலை = நாகுதலை – ஒற்றிடையின் மிகா நெடிற்றொடர். வரகு = பதர் = வரகுபதர் – ஒற்றிடையின் மிகா உயிர்த்தொடர். இவற்றின் முன் வேற்றுமையில் வலி இயல்பாயின.

ஒற்றிடையே மிகும்நெடிற்றொடர் உயிர்தொடர்க் குற்றுகரங்கள் வருஞ் சூத்திரத்தாற் கூறப்படும்; அவற்றின் முன் வரும் வல்லினம் மிகும்.

இதுவும் "இயல்பினும் விதியினும்" என்னும் 165 – ஆவது சூத்திரத்தால் எய்திய தொருவழி விலக்குதல்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:– இடைத்தொடர் (முன்) – இடைத்தொடர் முன்னும், ஆய்தத்தொடர் (முன்) – ஆய்தத்தொடர் முன்னும், ஒற்று இடையில் மிகா – மெய்யெழுத்து இடையே மிகாத, நெடில் உயிர்த் தொடர்முன் – நெடிற்றொடர் முன்னும் உயிர்த்தொடர் முன்னும், மிகா – (வருகிற வல்லினம்) இயல்பாம். எ–று.

பொ–ரை.:– இடைத்தொடர், ஆய்தத்தொடர், ஒற்று இடையில் மிகாத நெடிற்றொடர், உயிர்த்தொடர் ஆகிய இவற்றின்பின் வேற்றுமைவழியில் வல்லினம் இயல்பாய் வரும்.

உ–ம்.:–

தெள்கு+கடுமை = தெள்குகடுமை. – இடைத்தொடர் முன் வேற்றுமையில் வலிமிகாது இயல்பாயின.

+ சிறுமை = தெள்குசிறுமை.

+ தீமை = தெள்குதீமை.

+ பெருமை = தெள்குபெருமை.

எஃகு + கடுமை = எஃகுகடுமை. – ஆய்தத்தொடர்முன் வேற்றுமையில் வலிமிகாது இயல் பாயின.

+ சிறுமை = எஃகுசிறுமை.

+ தீமை = எஃகுதீமை.

+ பெருமை = நாகுபெருமை.

வரகு + கடுமை = வரகுகடுமை. – மெய் இடையில் இரட்டியாத உயிர்த்தொடர்முன்வேற்றுமையில் வலிமிநாது இயல்பாயின.

+ சிறுமை = வரகுசிறுமை.

+ தீமை = வரகுதீமை.

+ பெருமை = வரகுபெருமை.

'உற்றிடையின் மிகா' என்றதை, உயிர்த்தொடரோடும்

கூட்டுக; ஒற்றிடையின் மிகா நெடிலுயிர்த்தொடர்' என்றது வருஞ் சூத்திரத்தாற் கூறப்படும் டுகர றுகர வீறுகளொழிந்த மற்றைய ஈறுகளை.

வீடு–வீட்டு, வயிறு–வயிற்று என ஒற்று இடையின் மிகம் நெடிற்றொடர் உயிர்த்தொடர்களன்றி மற்றும் கு, சு, து, பு என்னும் ஈற்றினையுடைய நெடிற்றொடர் உயிர்த்தொடரி னையே கொள்க.

மேற்கூறிய டு–று ஈற்று நெடிற்றொடர் வேற்றமையில் வயிற்றுக்கடுப்பு என்றும், அல்வழியில் மூட்டுப்பூச்சி என்றும் மிகுந்து வருமெனக் கொள்க.

இங்குக் கூறப்படாத மென்றொடரின் முன்னும், வன்றொடரின் முன்னும் வண்டுக்கால், கொக்குச்சிறகு என வேற்றுமையில் வலி மிகுமென்க. எனவே ஆறு வகைக் குற்றியலுகரங்களுள் இடைத் தொடர், ஆய்தத் தொடர், (ஒற்றிடை மிகாத) நெடிற்றொடர், (உற்றிடை மிகாத) உயிர்த்தொடர் இவற்றுக்குமுன் வேற்றுமை அல்வழி இரண்டிலும் வலிமிகாவென்றும்; (ஒற்றிடை மிகும்) நெடிற்றொடர், (ஒற்றிடைமிகும்) உயிர்த்தொடர், வன்றொடர் இவற்றுக்கு முன் இருவழியிலும் வலிமிகு மென்றும், மென்றொடர்முன் அல்வழியில் மிகா; வேற்றுமையில் ÄFbk< W« T ¿ajhÆ%W .

## கா.நமச்சிவாய முதலியார்

இடைத்தொடர் (முன்) – இடைத்தொடர் முன்னும், ஆய்தத்தொடர் (முன்) – ஆய்தத்தொடர் முன்னும், ஒற்றிடையின் மிகா – மெய்யெழுத்து இடையே மிகாத, நெடிலுயிர்தொடர்முன் – நெடிற்றொடர் முன்னும் உயிர்த்தொடர் முன்னும், வேற்றுமை – வேற்றுமையில், மிகா – (வருகிற வல்லினம்) இயல்பாம்.

உதாரணம்:–

தெள்கு + கால் = தெள்குகால்

– இடைத்தொடர்முன் வலியியல்பு.

எஃகு + கடுமை = எஃகுகடுமை

– ஆய்தத்தொடர்முன் வலியியல்பு.

நாகு + கால் = நாகுகால்

– இடையில் ஒற்றுமிகாத நெடிற்றொடர்முன் வலியியல்பு.

வரகு + கதிர் = வரகுகதிர்

– இடையில் ஒற்றுமிகாத உயிர்த்தொடர்முன் வலியியல்பு.

எனவே மென்றொடர் முன்னும், வன்றொடர் முன்னும்

குரங்கு + குட்டி = குரங்குக்குட்டி

கொக்கு + கால் = கொக்குக்கால்

என வேற்றுமையில் வலிமிகுமென்க.

எனவே, குற்றியலுகரங்களுள் இடைத்தொடர், ஆய்தத் தொடர், ஒற்றிடை மிகாத நெடிற்றொடர், ஒற்றிடை மிகாத உயிர்தொடர் ஆகிய இவற்றுக்குமுன் இருவழியிலும் வலிமிகா என்பதும் ;

ஒற்றிடை மிகும் நெடிற்றொடர், ஒற்றிடை மிகும் உயிர்த்தொடர், வன்றொடர் ஆகிய இவற்றுக்கு முன் இருவழியிலும் வலிமிகும் என்பதும் ;

மென்றொடர்முன் அல்வழியில் மிகாதும் வேற்றுமையில் மிகுந்தும் வருமென்பதும் பெறப்படும்.

## மோசகு பொன்னையா

இடைத்தொடர், ஆய்தத்தொடர், இடையே ஒற்று மிகாத நெடில், உயிர்த்தொடர்கள் ஆகியவற்றின் முன்னர் வல்லெழுத்துக்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் மிகுவதில்லை, எ–று.

ஒற்றிடை மிகா என்பதை உயிர்த் தொடரோடும் ஒட்டுக.

எ–டு.:–

தெள்கு கால்,எஃகு கடுமை,நாகு கால்,வரகு கால்

– இடைத்தொடர், ஆய்தத்தொடர், ஒற்றிடைமிகா நெடிற்றொடர், ஒற்றிடை மிகா உயிர்த்தொடர் என்ற நான்கும் வேற்றுமையில் இயல்பாயின.

ஒற்றிடை மிகும் நெடிற்றொடரும், ஒற்றிடை மிகும் உயிர்த் தொடரும் முறையே வீட்டுத்தோட்டம், வயிற்றுப் பசி என வேற்றுமையில் மிக்கு முடிதலின், ஒற்றிடை மிகா நெடிற்றொடரையும், ஒற்றிடை மிகா உயிர்த்தொடரையும் வேறு பிரித்து இலக்கணம் விதித்தார்.

இவ்வாற்றால், குற்றியலுகரத் தொடர்களில் இடைத்தொடர், ஆய்தத் தொடர், ஒற்றிடைமிகா நெடிற்றொடர், ஒற்றிடைமிகா உயிர்த்தொடர் என்னும் இந்நான்கும் வலிவர இருவழியும் மிகா எனவும், ஒற்றிடை மிகும் நெடிற்றொடர் ஒற்றிடைமிகும் உயிர்த்தொடர், வன்றொடர் என்னுமிம் மூன்றும் வலிவர இருவழியும் மிகும் எனவும், மென்றொடர் வலிவர அல்வழியில் மிகாதாகி, வேற்றுமையில் மிகும் எனவும் தொகுத்துக் காண்க.

அழுகுக்கலை, மரபுத்தொழில் எனவிவ்வாறு ஒற்றிடைமிகா மிகா உயிர்த்தொடர் மிகுதலைப் புதியன புகுதலாகக் கொண்டு புறனடையான் அமைக்க.

(32)

**182. நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுள்**
**டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே.**

நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள்
ட ற ஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே

netilōtu uyirṭṭotark kuṟṟukaraṅkaḷuḷ
ṭa ṟa oṟṟu iraṭṭum vēṟṟumai mikavē

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Exceptional and Special rule**

In casual combination, short du and ru preceded by a single Long vowel or any other word vowel, are largely doubled before Hard initials.

## ஒப்புமைப் பகுதி

ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும்
வேற்றுமை யாயின் ஒற்றிடை இனம்மிகத்
தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி

(தொல்.: 412)

நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுட்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே

(இ.வி.: 102)

பாட வேறுபாடு:– 1. உகரம்பற்றுக்கோடாய்
2. டகரவொற்றிரண்டும்
3. புறம் என வரும்
4. வலுமை
5. வெளிற்றுப் பன்றி
6. களிற்றேனம்

ஒற்றிடை மிகூஉங்குற் றுகரமு முளவே

(மு.வீ.: 229)

நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுட்
டறவொற் றிரட்டும் வேற்றுமைப் பொருட்கே.

(மு.வீ.: 392)

## மயிலை நாதர்

எ–ன், எய்தியதன் மேற் சிறப்புவிதி யுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:–நெட்டெழுத்தீற்றினும் உயிர்த்தொடரீற்றினும் [1]உகரப் பற்றுக்கோடாய் வரும் வல்லெழுத்து ஆறனுள் [2]டகார றகாரமான இரண்டொற்றும் பெரும்பாலும் வேற்றுமைக்கண் மிகும், எ– று.

எனவே வேற்றுமைக்கட் சில மிகாமையும் அல்வழிக்கட் சில மிகுதலும் ஏனைமெய்களுள்ளும் சில மிகுதலும் உளவாமெனக் கொள்க.

வ–று.:–

ஆட்டுக்கால், பாற்றுக்கால் முருட்டுக்கால், முயிற்றுக்கால்; (ஆடு. . . முயிறு) + செவி, தலை, [3]புறம், நிறம், மயிர், யாப்பு, [4]வலிமை, அடி, ஆய்வு என வேற்றுமைக்கண் நாற்கணத்துடனும் மிக்கன. "நாடுகிழவோனே" "காடகமிறந்தார்க்கே, ஒடுமென் மனனே காண்", "கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை" என வேற்றுமைக்கண் மிகாவாயின. காட்டரண், குருட்டுக் கோழி, முருட்டுப்புலையன், களிற்றியானை, [5]"வெளிற்றுப் பனை" [6]"எயிற்றுப்பல்" என அல்வழிக்கண் மிக்கன. "வெருக்குக்கண்", எருத்துக் கால்; செவி, தலை, புறம் எனப் பிறமெய்கள் மிக்கன.

## சங்கர நமச்சிவாயர்
## சிவஞான முனிவர்

எ – னின், மேலை நிலைமொழிக்கு ஓர் புறனடையாய் எய்தாதது எய்துவித்தலும், *வருமொழிக்கு முதல் உயிரேல் இந்நிலை மொழிக்கு 'உயிர்வரின் உக்குறள்' என்னும் சூத்திரத்தான்* எய்தியதன் மேல் சிறப்புவிதியும் உணர்–ற்று.

இ–ள்.:–நெடிற்றொடர்க் குற்றுகர ஈற்று மொழிகளுள்ளும், உயிர்த்தொடர்க் குற்றுகர ஈற்று மொழிகளுள்ளும், அவ்வுகரப் பற்றுக்கோடாகிய வல்லெழுத்து ஆறனுள் டகார றகாரமான இரண்டு ஒற்றும் பெரும்பாலும் வேற்றுமைக்கண் இரட்டும், எ – று.

குற்றுகரங்கள் என்னும் எழுத்துக் குறிப்பு அம்மொழிகளை உணர்த்தி நின்றது. வருமொழி வரையாமையின் நாற்கணமும் கொள்க.

உ-ம்.:-

ஆட்டுக்கால், பாற்றுக்கால், முருட்டுக்கால், முயிற்றுக்கால், செவி, தலை, புறம், ஞாற்சி, நிறம், மயிர், யாப்பு, வன்மை, அடி என வரும்.

இவ்விரண்டு ஒற்றும் பெரும்பாலும் வேற்றுமைக்கண் இரட்டும் எனவே சிறுபான்மை வேற்றுமைக்கண் இரட்டாமையும், சிறுபான்மை அல்வழிக்கண் இரட்டுதலும், சிறுபான்மை பிற ஒற்று இரட்டுதலும் கொள்க.

வ - று.:-

"காவிரி புரக்கும் நாடுகிழ வோனே"

"காடகம் இறந்தார்க்கே ஓடுமென் மனனேகாண்"

"கறைமிட றணியலும் அணிந்தன் றக்கறை"

என வேற்றுமைக்கண் இரட்டாவாயின.

காட்டரண், களிற்று யானை என அல்வழிக்கண் இரட்டின.

"வெருக்குக் கண்வெங்கருனை", எருத்துக்கால் எனவும்; எருத்து மாடு எனவும் இருவழியும் பிற ஒற்று இரட்டின.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், எய்தியனதன் மேற்சிறப்பு விதி கூறியது.

இ-ள்.: நெடிலோடுயிர்த்தொடர் - நெட்டெழுத்தீற்றினும் உயிர்த் தொடரீற்றினும், குற்றுகரங்களுள் - உகரப் பற்றுக்கோடாகி வரும் வல்லெழுத்து ஆறனுள், டறவொற்றிரட்டும் - டகார றகாரமான இரண்டொற்றுக்களும் இரட்டிக்கும், வேற்றுமை மிகவே - பெரும்பாலும் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண், எ-று.

உ-ம்.:-

ஆட்டுக்கால், பாற்றுக்கால், முருட்டுக்கால், முயிற்றுக்கால், செவி, தலை, புறம். நிறம், மயிர், யாப்பு, வலிமை, அடி, ஆய்வு என வேற்றுமைக்கண் நாற்கணத்தோடும் மிக்கன. "நாடுகிழ வோனே" "காடக மிறந்தோர்க்கே ஓடமென் மனனே காண்", "கறைமிட றணியலு மணிந்தன்று" எனச் சிறுபான்மை வேற்றுமைக்கண் மிகாவாயின. காட்டரண், குருட்டுக்கோழி, முருட்டுப்புலையன், களிற்றியானை, வெளிற்றுப்பன்றி, எயிற்றேனம் எனச் சிறுபான்மை அல்வழிக்கண் மிக்கன. வெருக்குக்கண், வெருக்குக்கால், செவி, தலை, புறம் என உகரப் பற்றுக்கோடாகி பிற மெய்யும்

மிக்கது.

## விசாகப் பெருமாளையர்

இது, மேலை நிலைமொழிக்கோர் புறனடையாக எய்தாத தெய்துவித்தலும், உயிர் வந்தபோது அந்நிலைமொழிக்கு "உயிர்வரினுக்குறள்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதியும் உணர்த்துகின்றது.

இ–ள்.:– நெடிற் (றொடர்) – நெடிற்றொடர்களும், உயிர்த் தொடர்– உயிர்த்தொடர்களுமாகிய, குற்றுகரங்களுள்–குற்றியலுகர மொழிகளுள், ட றவொற்று–அவ்வுகர மேறி நின்ற டகர றகர மெய்கள், வேற்றுமை– வேற்றுமையில், மிக–பெரும்பாலும், இரட்டும்–இரட்டும், எ–று.

(வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க)

உ–ம்.:–

ஆடு+கால்–ஆட்டுக்கால், பாறு+கால்–பாற்றுக்கால், முருடு+கால்–முருட்டுக்கால், முயிறு+கால்–முயிற்றுக்கால், என வரும், செவி, தலை, புறம், ஞாற்சி, நிறம், மயிர், யாப்பு, வலிமை, அடி என்பவற்றை யொட்டிக் காண்க. இவ்விரண்டொற்றும் வேற்றுமையி லிரட்டு மெனவே "காவிரிபுரக்கு நாடுகிழவோனே" எனச் சிறுபான்மை வேற்றுமையி லிரட்டாமையும், காடு+அரண்–காட்டரண், களிறு+யானை–களிற்றியானை, எனச் சிறுபான்மை அல்வழியி லிரட்டுதலும், வெருகுகண்–வெருக்குக்கண் என வேற்றுமையிலும், எருது+மாடு–எருத்து மாடு, என அல்வழியிலுஞ் சிறுபான்மை பிறவொற் றிரட்டலுங் கொள்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

வேற்றுமையில் தன்னொற்றிரட்டும் குற்றுகரங்கள் யாவை?

நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுட் டறவொற்றிரட்டும் வேற்றுமை மிகவே.

(நெடிலோடு உயிர்த்தொடர்க்குற்றுகரங்களுள்

ட ற ஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே.)

இ–ள்.:–நெடிலோடு உயிர்த்தொடர்க்குற்றுகரங்களுள்– நெடிற்றொடர்களும் உயிர்த்தொடர்களுமாகிய குற்றியலுகர மொழிகளுள், டற ஒற்று – அவ்வுகரப் பற்றுக்கோடாகிய வல்லொற்றுள் டகர றகர மென்னும் இரண்டொற்றும், மிக வேற்றுமை இரட்டும் – பெரும்பாலும் வேற்றுமையில்

இரட்டும், எ–று.

இச்சூத்திரத்திற் கூறப்பட்ட வருமொழி முதலென்ன?

வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுமேயாம்.

உ–ம்.:–

ஆடு–கால்–ஆட்டுக்கால், பாறு–கால்–பாற்றுக்கால், முருடு–கால்–முருட்டுக்கால், முயிறு–கால்–முயிற்றுக்கால் என வரும். செவி, தலை, புறம், ஞாற்சி, நிறம், மயிர், யாப்பு, வன்மை, அடி என்பனவற்றையும் ஒட்டி, வேற்றுமையிலே டற வொற்றிரட்டுதல் காண்க.

"டறவொற்றிரட்டும் வேற்றுமை மிகவே" என்றதனாற் கொள்ளக் கிடப்பன யாவை?

இவ்விரண்டொற்றும் பெரும்பாலும் வேற்றுமையில் இரட்டும் எனவே, சிறுபான்மை வேற்றுமையில் இரட்டாமையும், சிறுபான்மை அல்வழியில் இரட்டுதலும் சிறுபான்மை இருவழியும் பிறவொற்றிரட்டுதலுங் கொள்க.

வ–று.:–

(1) "காவிரி புரக்கு நாடு கிழவோனே" காடகமிறந்தார்க்கே நாடுமென் மனனே காண்" "கறைமிடறணியலு மணிந்தன்றக்கறை" என்பனவற்றுள், நாடுகிழவோன், காடகம், மீடறணியல், என வேற்றுமையிலே டறவொற்றிரட்டாவாயின.

(2) காடு–அரண்–காட்டரண், ஏறு–ஏனம்–ஏற்றேனம், வரடு–ஆடு–வரட்டாடு, குருடு–கோழி–குருட்டுக்கோழி, வெளிறு பனை–வெளிற்றுப்பனை, என அல்வழியிலே டற வொற்றிரட்டின.

(3) வெருகு–கண்–வெருக்குக்கண். எருது–கால்–எருத்துக்கால் எனவும், எருது–மாடு–எருத்துமாடு எனவும், இருவழியும் பிறவொற்றிரட்டின.

## முகவை இராமானுச கவிராயர்

இது, மேற்கூறிய நிலைமொழிக்கு ஓர் புறனடையாக எய்தாதது எய்துவித்தலும் எய்தியதின் மேற் சிறப்புவிதியுங் கூறுகின்றது.

இ–ள்.:–நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள் – நெடிற்றொடரும் உயிர்த்தொடருமாகிய குற்றுகர மொழிகளுள், ட ற வொற்று – (அவ்வுகரப் பற்றுக்கோடாகிய வல்லொற்று ஆறினுள்) டகர றகர

வொற்றுக்களி ரண்டும், இரட்டும் வேற்றுமை மிக–பெரும்பாலும் வேற்றுமைச் சந்தியில் இரட்டித்து நிற்கும், எ–று.

வருமொழியை யெடுத்துச் சொல்லாததினாலே நாற்கணமுங் கொள்க.

உ–ம்.:–

ஆட்டுக்கால், பாற்றுக்கால், முருட்டுக்கால், முயிற்றுக்கால்; செவி, தலை, புறம், ஞாற்சி, நிறம், மயிர், யாப்பு, வன்மை, அடி என்பனவற்றோடு மொட்டி, வேற்றுமையில் டற வொற்று இரட்டித்து நிற்றல் காண்க. பாறு – பருந்து, முயிறு – மந்தி இவ்விரண்டொற்றும் பெரும்பாலும் வேற்றுமைக்கண் இரட்டு மெனவே சிறுபான்மை வேற்றுமைக்கண் இரட்டாமையும், சிறுபான்மை அல்வழிச் சந்தியில் இரட்டுதலும், சிறுபான்மை பிற வொற்றுக்கள் இரட்டுதலுங் கொள்க.

வ–று.:–

'காவிரி புரக்கு நாடு கிழவோனே', 'காடக மிறந்தார்க்கே', 'கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை' என வருவனவற்றுள், நாடு கிழவோன், காடகம், கறைமிட றணியல் என வேற்றுமைச் சந்தியில் புற வொற்று இரட்டாமை காண்க. காட்டரண், களிற்றியானை என்பன, காடாகியஅரண், களிறாகியயானை எனஅல்வழிச் சந்தியிற் சிறுபான்மை யிரட்டின. வெருக்குக்கண், வெங்கருனை, எருத்துக்கால் எனவும், எருத்துமாடு எனவும், இருவழியுங் ககர தகர வொற்றுக்களிரட்டின. பிறவுமன்ன.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :–** **நெடிலோடு உயிர்த்தொடர்** – நெடிற்றொடர்களும் உயிர்த் தொடர்களுமாகிய, **குற்றுகரங்களுள்** – குற்றியலுகர மொழிகளுள், **டறஒற்று** – (அவ்வுகரம் ஏறிநின்ற) டகர றகர மெய்கள், **வேற்றுமை** – வேற்றுமைப் புணர்ச்சியில், **மிக** – பெரும்பாலும், **இரட்டும்**

(வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க.)
நெடிற்றொடர் :–

உ–ம். :–

ஆடு + உயிர் = ஆட்டுயிர்.
ஆறு + ஒட்டம் = ஆற்றோட்டம்
ஆடு + கால் = ஆட்டுக்கால்

ஆறு + சுழி = ஆற்றுச்சுழி
ஆடு + மயிர் = ஆட்டுமயிர்
ஆறு + நீர் = ஆற்றுநீர்
ஆடு + வலி = ஆட்டுவலி
ஆறு + வளம் = ஆற்றுவளம்

உயிர்த்தொடர் :-

பகடு + அடி = பகட்டடி
களிறு + அடி = களிற்றடி
பகடு + கால் = பகட்டுக்கால்
களிறு+கால்=களிற்றுக்கால்
பகடு + நலம் = பகட்டுநலம்
களிறு+நலம்=களிற்றுநலம்
பகடு + வலி = பகட்டுவலி
களிறு + வலி = களிற்றுவலி

குறிப்பு :-

'பெரும்பாலும் வேற்றுமையில் இரட்டும்' எனவே, ட ற ஒற்றுச் சிறுபான்மை வேற்றுமையில் இரட்டாமையும்; வேற்றுமையில் பெரும்பாலும் இரட்டும் எனவே, ட ற ஒற்றுச் சிறுபான்மை அல்வழியில் இரட்டுதலும்; ட ற ஒற்றுப் பெரும்பாலும் வேற்றுமையில் இரட்டும் எனவே, பிற ஒற்றுக்கள் சிறுபான்மை இருவழியிலும் இரட்டுதலுங் கொள்க.

உதாரணம் :-

வீடு + புகுந்தான் = வீடுபுகுந்தான்
கிணறு + குதித்தான் = கிணறுகுதித்தான்
– ட ற ஒற்றுக்கள் வேற்றுமையில் இரட்டாவாயின.
காடு + அரண் = காட்டரண்
களிறு + யானை = களிற்றியானை
– ட ற ஒற்றுக்கள் அல்வழியில் இரட்டின.
வெருகு + கண் = வெருகுக்கண் –வேற்றுமை

எருது + மாடு = எருத்துமாடு – அல்வழி
– பிற ஒற்றுக்கள் இருவழியிலும் இரட்டின.

இனி, 'மிக' என்பதற்கு – வருமொழி முதலில் வரும்

வல்லெழுத்து மிக எனப் பொருள்கொள்ளுதலும் ஒன்று.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:– நெடிற் (றொடர்) உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள் –** நெடிற்றொடர்களும் உயிர்த்தொடர்களுமாகிய குற்றியலுகர மொழிகளுள், **ட ற ஒற்று –** அவ்வுகரப் பற்றுக்கோடாகிய வல்லொற்றாறனுள், டகர றகர மென்னும் இரண்டொற்றும், **மிக வேற்றுமை இரட்டும்**–பெரும்பாலும் வேற்றுமையில் இரட்டும், எ–று.

வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுங் கொள்க.

உ–ம்.:–

ஆடு+கால்= ஆட்டுக்கால், பாறு+கால்= பாற்றுக்கால், முருடு+கால்= முருட்டுக்கால், முயிறு+கால்= முயிற்றுக்கால் என வரும். செவி, தலை, புறம், ஞாற்சி, நிறம், மயிர், யாப்பு, வன்மை, அடி என்பனவற்றையும் ஒட்டி, வேற்றுமையிலே, ட ற வொற்றிரட்டுதல் காண்க.

இவ் விரண்டொற்றும் பெரும்பாலும் வேற்றுமையில் இரட்டும் எனவே, சிறுபான்மை வேற்றுமையில் இரட்டாமையும், சிறுபான்மை அல்வழியில் இரட்டுதலும், சிறுபான்மை இருவழியும் பிற வொற்றிரட்டுதலுங் கொள்க.

வ–று.:–

(1) "காவிரி புரக்கு நாடு கிழவோனே" "காடக மிறந்தார்க்கே நாடுமென் மனனேகாண்" "கறைமிட றணியலுமணிந்தன் றக்கறை" என்பனவற்றுள், நாடுகிழவோன், காடகம், மிடறணியல் என வேற்றுமையிலே ட ற வொற்றிரட்டாவாயின.

(2) காடு + அரண் = காட்டரண், ஏறு + ஏனம் = ஏற்றேனம், வரடு + ஆடு = வரட்டாடு, குருடு + கோழி = குருட்டுக் கோழி, வெளிறு + பனை = வெளிற்றுப்பனை என அல்வழியிலே ட ற வொற்றிரட்டின.

(3) வெருகு + கண் = வெருக்குக்கண், எருது + கால் = எருத்துக்கால் எனவும், எருது + மாடு = எருத்துமாடு எனவும், இருவழியும் பிறவொற்றிரட்டின.

ட ற வொற்று, மெய் வரின் இரட்டும் என்றது எய்தாத தெய்துவித்தல்; உயிர் வரின் இரட்டும் என்றது "உயிர்வரி னுக்குறள்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்பு

விதி.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள்.:— நெடிற்றொடர் உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள் —** நெடிற்றொடர்களும் உயிர்த்தொடர்களுமாகிய குற்றியலுகரமொழிகளுள், — **டற ஒற்று —** அவ்வுகரப் பற்றுக் கோடாகிய வல்லொற்றாறனுள் டகர றகரமென்னும் இரண்டொற்றும், — **மிக வேற்றுமை இரட்டும்,** — பெரும்பாலும் வேற்றுமையில் இரட்டும். எ—று.

உ—ம்.:—

ஆடு + கால் =ஆட்டுக்கால், பாறு+கால்=பாற்றுக்கால், முருடு+கால் = முருட்டுக்கால், முயிறு+கால்= முயிற்றுக் கால் என வரும். செவி, தலை, புறம், ஞாற்சி, நிறம், மயிர், யாப்பு, வன்மை, அடி என்பவற்றையும் ஒட்டி வேற்றுமையிலே டறவொற்றிரட்டுதல் காண்க.

இவ்விரண்டொற்றும் பெரும்பாலும் வேற்றுமையில் இரட்டும் எனவே, சிறுபான்மை வேற்றுமையில் இரட்டாமையும், சிறுபான்மை அவ்வழியில் இரட்டுதலும், சிறுபான்மை இருவழியும் பிறவொற்றிரட்டுதலுங் கொள்க.

வ—று.:—

(1)'காவிரிபுரக்குநாடு கிழவோனே' 'காடகமிறந்தார்கே நாடுமென்மனனேகாண்'கறைமிடறணி யலுமணிந் தன்றக்கறை' என்பனவற்றுள், நாடுகிழவோன், காடகம், மிடறணியல்என வேற்றுமையிலே டறவொற்றிரட்டா வாயின.

(2) காடு + அரண்+காட்டரண், எறு + ஏனம் = ஏற்றேனம், வாடு + ஆடு = வாட்டாடு, குருடு + கோழி = குருட்டுக்கோழி, வெளிறு + பனை = வெளிற்றுப்பனை என அவ்வழியிலே டறவொற் றிரட்டின.

(3) வெருகு + கண் = வெருகுக்கண், 'எருது + கால் = எருதுக்கால், எ—ம். எருது + மாடு = எருத்துமாடு. எ—ம். இருவழியும் பிறவொற்றிரட்டின.

வேற்றுமை மிகவே என்பதற்கு வேற்றுமையிலே பெரும்பாலும் என்றுரைத்தலுமன்றி, வேற்றுமையில் வருமொழி வல்லெழுத்து மிகும்படி டகர றகர ஒற்றுக்கள் நிலைமொழியில் இரட்டுமென்றும் பொருளுரைக்க.

டறவொற்று மெய்வரின் இரட்டும் என்றது எய்தாததெய்துவித்தல்; உயிர்வரின் இரட்டும் என்றது

'உயிர்வரினுக்குறள்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதி.

## வை.மு.சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.:– நெடிலோடு உயிர்த் தொடர்** – நெடிற்றொடர்களும் உயிர்த் தொடர்களுமாகிய, **குற்றுகரங்களுள்** – குற்றியலுகர மொழிகளுள், ட ற **ஒற்று**–(அவ்வுகரம் ஏறி நின்ற) டகர றகர மெய்கள், **வேற்றுமை**–வேற்றுமைப் புணர்ச்சியில், **மிக** – பெரும்பாலும், **இரட்டும்**, எ–று.

வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமும் கொள்க.

உ–ம்.:–

| நெடிற்றொடர் | உயிர்த்தொடர் |
|---|---|
| ஆடு + கால் = ஆட்டுக்கால் | முரடு+மனிதன் = முரட்டுமனிதன். |
| சோறு + வளம்= சோற்றுவளம் | வயிறு + இடை = வயிற்றிடை |

(1) 'பெரும்பாலும் வேற்றுமையில் இரட்டும்' எனவே, ட ற ஒற்றுச் சிறுபான்மை வேற்றுமையில் இரட்டாமையும்; (2) 'வேற்றுமையில் பெரும்பாலும் இரட்டும்' எனவே, ட ற ஒற்றச் சிறுபான்மை அல்வழியில் இரட்டுதலும்; (3) 'டற ஒற்றுப் பெரும்பாலும் வேற்றுமையில் இரட்டும்' எனவே பிற ஒற்றுக்கள் சிறுபான்மை இருவழியிலும் இரட்டுதலும் கொள்க.

(உதாரணம்)

காடு + சென்றான் = காடு சென்றான் வேற்றுமையில் ட ற ஒற்றுக்கள் இரட்டாவாயின.

கிணறு + மூழ்கினான் = கிணறுமூழ்கினான், காடு + அரண் = காட்டரண் அவ்வழியில் டற ஒற்றுக்கள் இரட்டின.

களிறு + யானை = களிற்றியானை, வெருகு+கண் = வெருக்குக்கண் – வேற்றுமை, இருவழியிலும் பிற ஒற்றுக்கள் இரட்டின, எருது+மாடு = எருதுமாடு – அல்வழி

இனி, 'மிக' என்பதற்கு, வருமொழி முதலில் வரும் வல்லெழுத்து மிக எனப் பொருள் கொள்ளுதலும் ஒன்று.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:– நெடிற் (றொடர்) உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள் –**

நெடிற்றொடர்களும் உயிர்த்தொடர்களுமாகிய குற்றியலுகர மொழிகளுள், ட ற ஒற்று – அவ்வுகரப் பற்றுக்கோடாகிய வல்லொற்றாறனுள் டகர றகர மென்னும் இரண்டொற்றும், மிக வேற்றுமை இரண்டும் – பெரும்பாலும் வேற்றுமையில் இரட்டும். எ–று.

வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுங் கொள்க.

உ–ம்.:–

ஆடு + கால் = ஆட்டுக்கால், பாறு + கால் = பாற்றுக்கால் – நெடிற்றொடர்; முருடு + கால் = முருட்டுக்கால், முயிறு + கால் = முயிற்றுக்கால் – உயிர்த்தொடர்: என வேற்றுமையிலே ட ற வொற்றிரட்டுதல் காண்க.

வ–று.:–

(1) "காவிரிபுரக்கு நாடு கிழவோனே" (நாடு+ கிழவோன் = நாடு கிழவோன்.) "காடக மிறந்தார்க்கே நாடுமென் மனனே காண்" (காடு + அகம் = காடகம்.) "காறைமிடறணியலு மணித்நன்றக் கறை" (மிடறு + அணியலும் = மிடறணியலும்) இவற்றுள், நாடு கிழவோன், காடகம், மிடறணியல் என வேற்றுமையிலேட ற வொற் றிரட்டாவாயின.

(2) காடு + அரண் = காட்டரண், ஏறு + ஏனம் = ஏற்றேனம் – நெடிற்றொடர். வரடு + ஆடு = வரட்டாடு, வெளிறு + பனை = வெளிற்றுப்பனை – உயிர்த்தொடர். (அல்வழியிலே ட ற வொற்றிரட்டின.)

(3) வெருகு + கண் = வெருக்குக்கண் – வேற்றுமை. எருது + மாடு = எருத்துமாடு – அல்வழி. (இருவழியும்பிறவொற் றிரட்டின.)

ட ற வொற்று. மெய் வரின் இரட்டும் என்றது எய்தாததெய்துவித்தது; உயிர் வரின் இரட்டும் என்றது "உயிர்வரினுக்குறள்" என்னும் 164 ஆவதுசூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதி.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:– நெடிலோடு உயிர்த்தொடர் குற்றியலுகரங்களுள் – நெடிற்றொடர்களும் உயிர்த்தொடர்களுமாகிய குற்றிய லுகர மொழிகளுள், ட ற ஒற்று – (அவ் வுகரமேறிநின்ற) டகர றகர மெய்கள், வேற்றுமை – வேற்றுமையில், மிக இரட்டும் – பெரும் பாலும் இரட்டும். எ–று.

பொ–ரை.:– நெடிற்றொடர், உயிர்த்தொடர் ஆகிய குற்றியலுகரங்களை யுடைய மொழிகளுள், அந்த உகரம் ஏறிநிற்கும் டகாரறகர ஒற்றுக்கள் வேற்றுமையில் பெரும்பாலும் இரட்டிக்கும்.

வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க.

உ–ம்.:–

ஆடு + கால் = ஆட்டுக்கால்.
+ செவி + ஆட்டுச்செவி.
+ தலை = ஆட்டுத்தலை.
+ புறம் = ஆட்டுப்புறம்.
ஆடு + ஞாற்சி = ஆட்டுஞாற்சி.
+ நிறம் = ஆட்டுநிறம்.
+ மயிர் = ஆட்டுமயிர்.
+ யாப்பு = ஆட்டுயாப்பு.
+ வலிமை = ஆட்டுவலிமை.
+ அடி = ஆட்டடி.
பாறு + கால் = பாற்றுக்கால்.
+ செவி = பாற்றுச்செவி.
+ தலை = பாற்றுத்தலை.
+ புறம் = பாற்றுப்பறம்.
+ ஞாற்சி = பாற்றுஞாற்சி.
+ நிறம் = பாற்றுநிறம்.
+ மயிர் = பாற்றுமயிர்.
+ யாப்பு = பாற்றியாப்பு.
+ வலிமை = பாற்றுவலிமை.
+ அடி = பாற்றடி.

என நெடிற்றொடர்க் குற்றியலுகரத்தில் ட ற ஒற்றுக்கள் இரட்டின.

முருடு + கால் = முருட்டுக்கால்.

+ செவி = முருட்டுச்செவி.

+ தலை = முருட்டுத்தலை.

+ புறம் = முருட்டுப்புறம்.

+ ஞாற்சி = முருட்டுஞாற்சி.

+ நிறம் = முருட்டுநிறம்.

+ மயிர் = முருட்டுமயிர்.

+ யாப்பு = முருட்டுயாப்பு.

+ வலிமை = முருட்டுவலிமை.

+ அடி = முருட்டடி.

முயிறு + கால் = முயிற்றுக்கால்.

+ செவி = முயிற்றுச்செவி.

+ தலை = முயிற்றுத்தலை.

முயிறு +புறம் = முயிற்றுப்புறம்.

+ ஞாற்சி = முயிற்றுஞாற்சி.

+ நிறம் = முயிற்றுநிறம்.

+ மயிர் = முயிற்றுமயிர்.

+ யாப்பு = முயிற்றுயாப்பு.

+ வலிமை = முயிற்றுவலிமை.

+ அடி = முயிற்றடி.

என உயிர்த்தொடர் குற்றியலுகரத்தில் டற ஒற்று இரட்டின.

இவ்விரண்டொற்றும் பெரும்பாலும் வேற்றுமைக்கண் இரட்டு மெனவே, சிறுபான்மை வேற்றுமைக்கண் இரட்டாமையும், சிறுபான்மை அல்வழிக்கண் இரட்டுதலும், சிறுபான்மை இருவழிக் கண் பிறவொற்றுக்கள் இரட்டுதலும் கொள்க.

உ-ம்.:-

காவிரி புரக்கு நாடுகிழவோனே. - வேற்றுமையில் ட
ற
ஒற்றுக்கள் இரட்டாவாயின.

காடகமிறந் தார்க்கே.
கறைமிடறணியலும்.
காட்டரண் – அல்வழியில் ட ற ஒற்றுக்கள் இரட்டின.
களிற்றியானை
வெருக்குக்கண் – இருவழியிலும் பிற ஒற்றுக்கள் இரட்டின.
எருத்துக்கால்
எருத்துமாடு
(மென்றொடரின் முன் நாற்கணம் : இருவழி.)

## கா.நமச்சிவாய முதலியார்

நெடிற் (றொடர்) – நெடிற் றொடர்களும், உயிர்த்தொடர், உயிர்த்தொடர்களுமாகிய, குற்றுகரங்களுள் – குற்றிய லுகர மொழிகளுள், டற ஒற்று – அவ்வுகரமேறி நின்ற டகர றகரமெய்கள், வேற்றுமை – வேற்றுமையில், மிக – பெரும்பாலும், இரட்டும் – இரட்டும். வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க.

**உதாரணம்:–**

| | | | | |
|---|---|---|---|---|
| ஆடு | + | கால் | = | ஆட்டுக்கால் |
| பாறு | + | கால் | = | பாற்றுக்கால் |
| முருடு | + | கால் | = | முருட்டுக்கால் |
| முயிறு | + | கால் | = | முயிற்றுக்கால் |

என வரும்.

செவி, தலை, புறம், ஞாற்சி, நிறம், மயிர், யாப்பு, வலிமை, அடி என்பவற்றையும் ஒட்டிக் காண்க.

பாறு = பருந்து, முருடு = ஓர் வாத்தியம். முயிறு = ஓர் வகை எறும்பு.

இவ்விரண்டொற்றும் வேற்றுமையில் பெரும்பாலும் இரட்டுமெனவே 'நாடுகிழவோனே' எனச் சிறுபான்மை (1) வேற்றுமையி லிரட்டாமையும்,

காடு + அரண்=காட்டரண்
களிறு + யானை = களிற்றியானை

எனச் சிறுபான்மை (2) அல்வழியி லிரட்டுதலும்,

வெருகு + கண் = வெருக்குக்கண்

என வேற்றுமையிலும்,

எருது + மாடு=எருத்துமாடு

என அல்வழியிலுஞ் சிறுபான்மை (3) பிற வொற்றி ரட்டலுங் கொள்க.

## மோசசு பொன்னையா

நெடிற்றொடர், உயிர்த்தொடர் என்னும் இரு குற்றியலுகரத் தொடர்மொழி களுள்ளும் பற்றுக்கோடாக அமையும் வல்லொற்றுக்கள் ஆறினுள் டகர றகர மென்னும் இரண்டொற்றும் வேற்றுமையில் மிகுதியும் இரட்டும், எ—று.

வருமெழுத்து சொல்லப்படாமையின் நாற்கணமும் கொள்க.

எ—டு.:-

ஆட்டுக்கால்; முருட்டுக்கால்
பாற்றுக்கால்; முயிற்றுக்கால்
வேற்றுமை மிகவே என்றதனால் 'நாடுகிழவோனே', 'கிணறு மூழ்கினான்' என்பனபோல் வேற்றுமையில் ட, ற இரட்டாமையும்; காட்டரண், குருட்டுக்கோழி, வெளிற்றுப்பனை என்பனபோல் அல்வழியில் ட, ற இரட்டுதலும் வெருக்குக் கண், எருத்துமாடு என்பனபோல் பிற ஒற்றுக்கள் இருவழியும் இரட்டுதலும் கொள்க.

(33)

**183. மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையில்
தம்மின வன்றொட ராகா மன்னே.**

மென்தொடர் மொழியுள் சில வேற்றுமையில்
தம் இன வன்தொடர் ஆகா மன்னே

mentotar moliyul sila vērrumaiyil
tam ina vantotar ākā mannē

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Words ending in a u after soft consonants**

In the Casual combination of words ending in Short u preceded by a Nasal, there are many that do not change the Nasal into a Surd.

## ஒப்புமைப் பகுதி

வன்றொடர் மொழியும் மென்றொடர் மொழியும்
வந்த வல்லெழுத் தொற்றிடை மிகுமே
மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற் றெல்லாம்
வல்லொற் றிறுதி கிளையொற் றாகும்.

(தொல்.: 415)

மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையிற்
றம்மின வன்றொட ராகா மன்னே

(இ.வி.: 103)

வன்றொடர் மென்றொட ரிற்சில வலிக்கும்

(மு.வீ.: 395)

அவற்றுள்
மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையிற்
றம்மினம் வன்றொட ராகா மன்னே.

(மு.வீ.: 396)

## மயிலை நாதர்

எ - ன், எய்தாத தெய்துவித்தல் நுதலிற்று.

இ-ள்.: மெல்லொற்றுத் தொடர்மொழிக் குற்றுகரங்களுட் சில மொழிகளின் இடையில் நின்ற மெல்லெழுத்துத் தமக்கினமான

---

பாட வேறுபாடு:-

1. (1) திரியாதனவாம் வேற்றுமை
   (2)திரிவன சில;திரியாதன பல
2. எற்புடம்பு
3. சேங்கிலை ,சேம்பிலை
4. புன்குக்காய்
5. குரக்கடி, குரங்கடி
6. குரங்குக்கால் குரங்கின்கால்

வல்லெழுத்தாகத் [1]திரிவனவுமுள; பல திரியாதனவாம்; வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக்கண், எ – று.

வ–று.:–

குரக்குக்கால், கழச்சுக்கோல், எட்குக்குட்டி, மருத்துப்பை, பாப்புக்கால், [2]எற்புச்சட்டகம் எனத் திரிந்தன; நாற்கணத்தோடு மொட்டுக. ஞெண்டுக் கால், வண்டுக்கால், பந்துத்திரட்சி, கோங்கிலை, [3]இசங்கிலை, [4]புன்கங்காய், அடும்பம்பூ, பொதும்பிற் பூவை, குறும்பிற்கொற்றன் என்றற் றொடக்கத்தன திரியாவாயின.இதனுள், 'மன்னே' என்ற மிகையானே, ஒன்றுதானே ஓரிடத்துத் திரிந்தும் ஓரிடத்துத் திரியாதும் வருவது முண்டெனக் கொள்க.

வ–று.:–

[5]குரக்குக்கடி, [6]குரங்கின்கடி; வேப்பங்காய், வேம்பின் காய்; பாப்புத்தோல், பாம்பின்றோல் என்றற் றொடக்கத்தன வேற்றுமைக்கண் திரிந்தும் திரியாதும் வந்தன.

## சங்கர நமச்சிவாயர்
## சிவஞான முனிவர்

எ–னின், மென்றொடர்க் குற்றுகர மொழிகளுள் சில நிலைமொழிக்கு,*மூவினமும் வரின்* எதிர்மறை முகத்தான் எய்தாதது எய்துவித்தலும், *உயிர்வரின் அவ்வெதிர்மறை முகத்தான்* எய்தியதன் மேல் சிறப்புவிதியும் உணர்–ற்று.

இ–ள்.:– மென்றொடர்க் குற்றுகர மொழிகளுள் சில, வேற்றுமைக்கண் தமக்கு இனமான வன்றொடராதலை ஒழிந்தன பெரும்பால, எ–று.

சில என்னும் எழுவாய், ஆகா என்னும் எதிர்மறை வினையாலணையும் பெயரகத்து முதல்நிலையோடு முடிந்தது.

வருமொழி வரையாமையின், நாற்கணமும் கொள்க.

உ–ம்.:–

மருத்துப்பை, கருப்புநாண், கருப்புவில், கற்றா என வரும்.இவ்வாறு சில வருதலையும் எதிர்மறை முகத்தாற்

கூறினமையின், வழக்கின்கண்ணும் சான்றோர் செய்யுட் கண்ணும் ஏற்ற பெற்றி கொள்க.

வண்டுக் கால், பந்துத் திரட்சி முதலியன எல்லாம் வன்றொடராகாதன என்க.

சில வன்றொடராம் எனவே ஆகாதன பல என்பது தாமே போதரவும், மன்னே என்ற மிகையானே எற்புடம்பு, அற்புத்தளை, குரக்குமனம் என அல்வழிக்கண் அருகி வன்றொடராதலும் கொள்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், மெற்றொடர்க் குற்றுகரம் புணருமாறு கூறியது.

**இ–ள்.:–** **மென்றொடர் மொழியுட் சில** – மென்றொடர் மொழிக் குற்றுகரங்களுட் சில மொழிகள், **வேற்றுமையில்** – வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்ணே, **தம்மினம்** – இடையே நின்ற மெல்லெழுத்துத் தமக்கினமான, **வன்றொடராகா** – வல்லெழுத்தாகத் திரிந்து வருவனவும் திரியாமல் நிற்பனவுமாம்; **மன்னே** – பெரும்பாலும் எ–று.

உ–ம்.:–

குரக்குக்கால், கழைச்சுக்கோல், எட்குக்குட்டி, மருத்துப்பை, பாப்புக்கால், எற்புடம்பு எனத் திரிந்தன. நாற்கணத்தோடும் ஒட்டுக. ஞெண்டுக்கால், வண்டுக்கால், பந்துத்திரட்சி, கோங்கிலை, புன்கங்காய், அடம்பம்பூ, பொதும்பிற்பூவை, குறும்பிற்கொற்றன் எனத் திரியாமல் நின்றன.

"மன்னே" யென்ற மிகையானே ஒன்றுதானே ஓரிடத்துத் திரிந்தும் திரியாதும் வருவனவும் உளவெனக் கொள்க. அவை குரக்கடி குரங்குடி, குரக்குக்கால் குரங்கின்கால், வேப்பங்காய் வேம்பின்காய், பாப்புத்தோல் பாம்பின்தோல் என வேற்றுமைக்கண் திரிந்தும் திரியாமலும் வந்தன.

## விசாகப் பெருமாளையர்

இது, மென்றொடர் குற்றியலுகர மொழிகளுட் சில நிலைமொழிக்கு மூவினமும் வரின் எய்தாத தெய்துவித்தலும், உயிர்வரின் எய்தியதன் மேற் சிறப்புவிதியும் உணர்த்துகின்றது,

**இ–ள்.:–** **மென்றொடர் மொழியுள்**–மென்றொடர் குற்றியலுகர மொழிகளுள், **சில**–சிலமொழிகள், **வேற்றுமையில்**–வேற்றுமைக்கண், **தம்மினம்**–தமக்கினமாகிய, **வன்றொடர்**–வன்றொடர் குற்றியலுகர

மொழிகளாக, ஆகா—ஆதலை யொழிந்தன, மன்—பெரும்பாலன, எ—று.

வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க.

உ—ம்.:—

மருந்து+பை—மருத்துப்பை, கரும்பு + வில்—கருப்புவில், கன்று + ஆ—கற்றா எனவரும். (சிலவா மெனவே ஆகாதன பல வென்பதும் "மன்னே" என்ற மிகையால் அன்பு + தளை—அற்புத்தளை, எனச் சிறுபான்மை அல்வழிக்கண் வன்றொடராதலுங் கொள்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

வன்றொடர்க் குற்றியலுகரமாகும் மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளு முளவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையிற்
றம்மின வன்றொட ராகா மன்னே.

(மென்றொடர் மொழியுள் சில வேற்றுமையில் தம் இன வன்றொடர் ஆகா; மன்னே.)

இ—ள்.:— மென்றொடர் மொழியுள் சில — மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளுள்ளே சில மொழிகள், வேற்றுமையில் தம் இன வன்றொடர் ஆகா; மன்— வேற்றுமையிலே தமக்கினமாகிய வன்றொடர்க் குற்றியலுகர மொழிகளாகாதன. ஆவன பெரும்பாலன, எ—று.

இச்சூத்திரத்திற் கூறப்பட்ட வருமொழி முதலென்ன?

வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுமாம்.

இச்சூத்திரத்தில் எதிர்மறைமுகத்தாற் கூறப்பட்டன வெத்துணைய?

வன்றொடர் ஆகாதன சிலவெனவே ஆவன பலவென்றாராயிற்று.

ஆகாதன சிலவற்றிற்கு உதாரணம் யாவை?

வண்டுக்கால், பந்துத்திரட்சி முதலியன வன்றொடராகாதன.

ஆவன பலவற்றிற்கு உதாரணம் யாவை?

உ—ம்.:—

மருந்து — பை — மருந்துப்பை, சுரும்பு — நான் — சுழுப்புநாண், கரும்பு — வில்— கருப்புவில், கன்று — ஆ— கற்றா என வரும்.

மன் என்ற மிகை யாதுபயன்குறித்து வைக்கப்பட்டது?

சில வன்றொடராகா எனவே, ஆவன பலவென்பது தானேவந்தியையவும், மன்னே என்ற மிகையாலே, என்பு–உடம்பு–எற்புடம்பு, அன்பு–தளை–அற்புத்தளை, குரங்கு–மனம்– குரக்குனம், எனச் சிறுபான்மை அல்வழிக்கண் வண்றொடராதலுங் கொள்ளுமாறு வைக்கப்பட்டது.

சில மென்றொடர்க் குற்றியலுகர மொழிகள் மூவினமும் வரிற் றம் மின வன்றொடராம் என்றது எய்தாததெய்து வித்தல்; உயிர்வரிற் றம்மின வன்றொடராம் என்றது "உயிர்வரினுக் குறள்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்பு விதி.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** மென்றொடர்க் குற்றுகர மொழிகளுள்ளே சில நிலைமொழிகளுக்கு எய்தாதது எய்துவித்தலும் எய்தியதன் மேற் சிறப்பு விதியும் உணர்த்திற்று.

**இ–ள்.:–மென்றொடர்மொழியுள்–**மென்றொடர்க் குற்றுகர மொழிகளுள், **வேற்றுமையில் தம்மின வன்றொடர் சில–**வேற்றுமைச் சந்தியில் தம் இனவன்றொடர்க் குற்றுகர மொழிகளாகத் திரிவன சிலவாம், **ஆகா மன் –** ஆகாதன பலவாம், எ–று.

**உ–ம்.:–**

மருந்து – மருத்துப்பை, சுரும்பு–சுருப்புநாண், கரும்பு–கருப்புவில், கன்றுஆ–கற்றா, குரங்கு–குரக்குக்கால், கழுஞ்சு–கழச்சுக்கோல், எண்கு–எட்குக்குட்டி, பாம்பு–பாப்புக்கால் என வரும். வண்டுக்கால், பந்துத்திரட்சி, ஞெண்டுக்கால், குறும்பிற் சான்றோர், பறம்பிற் பாரி என்றாற் போலவன வன்றொடராகாதன. சில வன்றொடரா மெனவே, ஆகாதன பல வென்பது தாமே வந்து இியையவும், மன் என்ற மிகையாலே என்பு–எற்புடம்பு, குரங்கு – குரக்குமனம் என அல்வழியிலுஞ் சிறுபான்மை வன்றொடராதலும், குரங்குக்குட்டி–குரக்குக்குட்டி, பாம்புத்தோல் – பாப்புத்தோல் என வேற்றுமையில் விகற்பித்து வருதலும், அன்புத்தளை–அற்புத்தளை என இது, அன்பாலாகிய தளை – அன்பாகியதளை என வருதலால், அல்வழி வேற்றுமை யிரண்டிலும் ஒன்றுதானே விகற்பித்து வருதலுங் கொள்க. பிறவுமன்ன. இச் சூத்திரத்தில் சில என்றதினால் பல வென்பதும், ஆகா என்றதினால் ஆவன என்பதுந் தாமே வந்தியைந்தன ஆதலால் ஆவன சில ஆகா பல என முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :–** மென்றொடர் மொழியுள் – மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளுள், சில – சிலமொழிகள், வேற்றுமையில் –, தம் இனம் – தமக்கு இனமாகிய, வன்றொடர் – வன்றொடர்க் குற்றியலுகரமாகத் திரியும்; ஆகா மன் – அவ்வாறு திரியாதன பலவாம்.

(வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க.)

உ–ம் :–

கரும்பு + ஆலை : கருப்பாலை
மருந்து + பை : மருத்துப்பை
குரங்கு + முகம் : குரங்குமுகம் –வேற்றுமையில் வன்றொடராயின.
கரும்பு + வில் : கருப்புவில்
எறும்பு + ஒழுங்கு : எறும்பொழுங்கு
வண்டு + கால் : வண்டுக்கால்
பந்து + நலம் : பந்துநலம்
ஞெண்டு + வளை : ஞெண்டுவளை – வேறுமையில் வன்றொடராகாதன.

குறிப்பு :–

சில வன்றொடராமெனவே, ஆகாதன 'பல' என்பது தானே வந்து இயையும், 'மன்' என்ற மிகையால், அல்வழியிலுஞ் சிறுபான்மை வன்றொடராதலும், இருவழியிலும் விகற்பித்து வருதலுங் கொள்க.

உ–ம் :–

நஞ்சு + பகைமை : நச்சுப்பகைமை
இரும்பு + மனம் : இருப்புமனம் – அல்வழியில் வன்றொடராயின
குரங்கு + குட்டி : குரங்குக்குட்டி, குரக்குக்குட்டி – வேற்றுமையில் விகற்பித்தன.
பாம்பு + தோல் : பாம்புத்தோல், பாப்புத்தோல்
அன்பு + தளை : அன்புத்தளை, அற்புத்தளை

– அல்வழியில் விகற்பித்தது.

இனி, இச்சூத்திரத்திற்கு "மெல்லொற்றுத்தொடர் மொழிக்குற்று கரவீற்று மொழிகளுட் சில மொழிகளே வேற்றுமைக்கண் தமக்கு இனமாகிய வல்லொற்றத் தொடர்மொழி ஆகாதன; ஆவனபல" என உரைப்பர் **இலக்கண விளக்க நூலுடையார்.**

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– **மென்றொடர் மொழியுள் சில** – மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளுள்ளே சில மொழிகள், **வேற்றுமையில் தம் இன வன்றொடர்**–வேற்றுமையிலே தமக்கினமாகிய வன்றொடர்க் குற்றியலுகர மொழிகளாக, **ஆகா மன்**–ஆதலை யொழிந்தன பெரும்பாலன, எ–று.

வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுங் கொள்க.

உ–ம்.:–

மருந்து + பை= மருத்துப்பை, சுரும்பு+நாண் = சுருப்புநாண், கரும்பு+வில் = கருப்புவில், கன்று+ஆ = கற்றா என வரும்.

வண்டுக்கால், பந்துத்திரட்சி முதலியன வெல்லாம் வன்றொடராகாதன.

சில வன்றொடராம் எனவே, ஆகாதன பல வென்பது தானே வந்தியையவும், மன்னே என்ற மிகையாலே, எற்புடம்பு, அற்புத்தளை, குரக்குமனம் எனச் சிறுபான்மை அல்வழிக்கண், வன்றொடராதலுங் கொள்க.

சில மென்றொடர்க் குற்றியலுகர மொழிகள் மூவினமும் வரிற் றம்மின வன்றொடராம் என்றது எய்தாத தெய்துவித்தல்; உயிர்வரிற் றம்மின வனறொடராம் என்றது "உயிர்வரினுக்குறள்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதி.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– **மென்றொடர் மொழியுள் சில** – மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளுள்ளே சிலமொழிகள். – **வேற்றுமையில் தம் இனவன்றொடர்** – வேற்றுமையிலே தமக்கினமாகிய

வன்றொடர்க்குற்றியலுகரமொழிகளாம், – **ஆகாமன்** – ஆதலையொழிந்தன பெரும்பாலன. எ–று.

வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுங்கொள்க.

உ–ம்.:–

மருந்து + பை = மருத்துப்பை, சுரும்பு + நாண் = சுருப்புநாண், கரும்பு + வில் = கருப்புவில், கன்று + ஆ = கற்றா எனவரும்.

வண்டுக்கால், பந்துத்திரட்சி முதலியனவெல்லாம் வன்றொடராகாதன.

சிலவன்றொடராம் எனவே, ஆகாதன பலவென்பது தானேவந் தியைபவும், மன்னே என்ற மிகையாலே, எற்புடம்பு, அற்புத்தளை, குரக்கு மனம் எனச் சிறுபான்மை அல்வழிக்கண் வன்றொடராதலுங் கொள்க.

சிலமென்றொடர்க் குற்றியலுகரமொழிகள் மூவினமும் வரிற் றம்மின வன்றொடராம் என்றது எய்தாததெய்துவித்தல், உயிர்வரிற் றம்மின வன்றொடராம் என்றது 'உயிர்வரினுக்குறள்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: மென்றொடர் மொழியுள்–மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளுள், சில–சில நிலைமொழிகள், **வேற்றுமையில் –** , **தம்இனம் –** தமக்கு இனமாகிய, வன்றொடர் – வன்றொடர்க் குற்றியலுகர மொழிகளாகத் திரியும்: மன்–பல, ஆகா–அவ்வாறு வன்றொடர்க் குற்றியலுகரமாகத் திரியா, எ–று.

வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமும் கொள்க.

உ–ம்.:–

மருந்து + பை = மருத்துப்பை,

குரங்கு + மனம் = குரக்குமனம்,

இரும்பு + வலிமை = இருப்புவலிமை,

கன்று+ஆ= கற்றா

–வேற்றுமையில் வன்தொடராயின.

வண்டு + கால் = வண்டுக்கால்,

பந்து + நலம் = பந்துநலம்,

ஞெண்டு + வளை = ஞெண்டுவளை,

சங்கு + இனம் = சங்கினம்

– வேற்றுமையில்

வன்தொடராகாதன.

'சில வன்றொடராம்' எனவே ஆகாதன பலவென்பது தானே வந்து இயையவும், 'ஆகா மன்' என்ற மிகையால், அல்வழியிலும் சிறுபான்மை வன்றொடராதலும், இருவழியிலும் விகற்பித்து வருதலும் கொள்க.

உ–ம்.:–

(1) நஞ்சு + பகைமை = நச்சுப்பகைமை,

இரும்பு + மனம் = இருப்பு மனம்

– அல்வழியில் வன்றொடராயின.

(2) குரங்கு + குட்டி = குரங்குக்குட்டி,

= குரக்குக்குட்டி;

பாம்பு + தோல் = பாம்புத்தோல்,

= பாப்புத்தோல்;

அன்பு + தளை = அன்புத்தளை,

= அற்புத்தளை

– அல்வழியில் விகற்பித்தன.

(இனி, இச் சூத்திரத்திற்கு மென்றொடர்க் குற்றியலுகரங்களுள் சில வேற்றுமையில் பெரும்பாலும் வன்றொடராகாதன என ஒரே வாக்கியமாகவும் உரைக்கலாம். பல வேற்றுமையில் வன்றொடரா மென்றும், சில அல்வழியிலும் வன்றொடரா மென்றும் கருத்து அமையும்.)

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– மென்றொடர் மொழியுள் சில – மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளுள்ளே சில மொழிகள், வேற்றுமையில் தம் இன வன்றொடர் – வேற்றுமையிலே தமக்கினமாகிய வன்றொர்டர்க்குற்றியலுகர

மொரிகளாகும், ஆகா மன் – ஆகாதன பெரும்பாலன. எ–று.

வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுங் கொள்க.

உ–ம்.:–

மருந்து + பை = மருத்துப்பை, சுரும்பு + நாண் = சுருப்புநாண், கரும்பு + வில் = கருப்புவில், கன்று + ஆ = கற்றா – வேற்றுமையில் வன்றொடராயின.

வண்டுக்கால், பந்துத்திரட்சி முதலியனவெல்லாம் வன்றொடராகாதன.

சில வன்றொடராம்எனவே, ஆகாதன பலவென்பது தானே வந்தியையுவும், மன்னே என்ற மிகையாலே, சிறுபான்மை அல்வழிக் கண் வன்றொடராதலும், இருவழியிலும்விகற்பித்து வருதலும்கொள்க.

உ–ம்.:–

என்பு + உடம்பு = எற்புடம்பு; நஞ்சு + பகைமை = நச்சுப்பகைமை– என அல்வழியில் வன்றொடராயின. குரங்கு + மனம் = குரங்குமனம், குரக்குமனம்; குரங்கு + குட்டி = குரங்குக்குட்டி, குரங்குக்குட்டி – என முறையே அல்வழியிலும் வேற்றுமையிலும் விகற்பித்து வந்தன.

சில மென்றொடர்க் குற்றியலுகர மொழிகள் மூவினமும் வரிற் றம்மின வன்றொடராம்என்றது எய்தாததெய்து வித்தல்; உயிர்வரிற் றம்மின வன்றொடராம் என்றது "உயிர்வரினுக்குறள்" என்னும் 164 ஆவது சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:– மென்றொடர் மொழியுள் சில – மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளுள் சில மொழிகள், வேற்றுமையில் – வேற்றுமைக்கண். தம் இனம் – தமக்கினமாகிய, வன்றொடர் – வன்றொடர்க் குற்றியலுகர மொழிகளாக (ஆகும்) ஆகா மன் – பெரும்பாலன (அப்படி வன்றொடர்) ஆதலை பொழிந்தன. எ–று.

பொ–ரை.:– மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளுள் சில மொழிகள், வேற்றுமைவழியில். தமக்கு இனமானவன்றொடராதலை ஒழிந்தன பெரும்பாலன.

வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க.

உ–ம்.:–

கழஞ்சு + கோல் = கழச்சுக்கோல் – வன்றொடராயின.

எண்கு + குட்டி = எட்குக்குட்டி.

மருந்து + பை = மருத்துப்பை.

சுரும்பு + நாண் = சுருப்புநாண்.

கரும்பு + வில் = கருப்புவில்.

கன்று + ஆ = கற்றான்.

'சில வன்றொடராம்' எனவே ஆகாதன பல என்பது தானே வந்தியையவும், 'ஆகாமன்' என்ற மிகையாலே அல்வழியிலும் சிறுபான்மை வன்றொடராதலும், இருவழியிலும் விகற்பித்து வருதலும் கொள்க.

உ–ம்.:–

வண்டு + கால் = வண்டுக்கால். – வன்றொடராகாதன.

பந்து + திரட்சி = பந்துத்திரட்சி.

ஞெண்டு+கால் = ஞெண்டுக்கால்.

குறும்பு+சான்றோர்=குறும்பிற்சான்றோர்.

பறம்பு+பாரி =பறம்பிற்பாரி.

என்பு + உடம்பு = எற்புடம்பு.

– அல்வழியில் வன்றொடராயின.

இரும்பு + மனம் = இருப்புமனம்.

குரங்கு + குட்டி = குரங்குக்குட்டி.

– வேற்றுமையில் விகற்பித்தன.

= குரக்குக்குட்டி.

பாம்பு + தோல் = பாம்புத்தோல்.

= பாம்புத்தோல்.

அன்பு + தளை = அன்புத்தளை.

= அற்புத்தளை.

– அல்வழியில் விகற்பித்தன.

(அன்புத்தளை என்பது அன்பாகிய தளை, அன்பாலாகிய

தளை என வருதலால், அல்வழி வேற்றுமை இரண்டிலும் ஒன்றுதானே விகற்பித்து வருதலுங் கொள்க.)

இச் சூத்திரத்தில் சில என்றதனால் பல என்பதும், ஆகா றதனால் ஆவன என்பதும் தாமே வந்து இயைந்தன. ஆதலால் ஆவன சில, ஆகா பல எனக் கொள்க.

## கா.நமச்சிவாய முதலியார்

மென்றொடர் மொழியுள் – மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளுள், சில – சிலமொழிகள், வேற்றுமையில் – வேற்றுமைக்கண், தம்மினம் – தமக்கினமாகிய, வன்றொடர் – வன்றொடர்க் குற்றிய லுகர மொழிகளாகும் ; மன் ஆகா – பெரும்பாலான ஆகாவாம்.

வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க.

**உதாரணம்.:–**

| | | | |
|---|---|---|---|
| மருந்து | + | பை | : மருத்துப்பை |
| சுரும்பு | + | நாண் | : சுருப்புநாண் |
| கரும்பு | + | வில் | : கருப்புவில் |

– வேற்றுமையில் வன்றொடராயின.

| | | | |
|---|---|---|---|
| கன்று | + | ஆ | : கற்றா |
| வண்டு | + | கால் | : வண்டுக்கால் |
| பந்து | + | நலம் | : பந்துநலம் |
| ஞெண்டு | + | வளை | : ஞெண்டுவளை |
| எறும்பு | + | ஒழுங்கு | : எறும்பொழுங்கு |

– வேற்றமையில் வன்றொடராகாதன

சில வன்றொடராம் எனவே,ன ஆகாதன பலவென்பது தானே வந்து இயைபவும், 'மன்' என்ற மிகையாலே,

(1) அல்வழியிலுஞ் சிறுபான்மை வன்றொடராதலும்,

(2) இருவழியிலும் விகற்பித்து வருதலுங் கொள்க.

**உதாரணம்.:–**

(1)நஞ்சு + பகைமை : நச்சுப்பகைமை

இரும்பு + மனம் : இருப்புமனம்

–அல்வழியில் வன்றொடராயின

(2) குரங்கு + குட்டி : குரங்குக்குட்டி

: குரக்குக்குட்டி

பாம்பு + தோல் : பாம்புத்தோல்

: பாப்புத்தோல்

–வேற்றுமையில் விகற்பித்து
வந்தன
அன்பு + தளை = அன்புத்தளை, அற்புத்தளை –
– அல்வழியில் விகற்பம்.

## மோசகு பொன்னையா

மென்றொடர்க் குற்றியலுகரத் தொடர்மொழிகளுட் சில வேற்றுமைப் புணர்ச்சியில் தமக்கு இனமான வன்றொடர்க் குற்றியலுகர மொழிகளாக ஆகாதன மிகுதி, எ–று.

சில ஆகா என வினை முடிக்க, வருமெழுத்தை வரையாமையின் நாற்கணமுங் கொள்க.

எ–டு.:–

மருத்துப்பை, சுருப்பு நாண்; கருப்புவில்; கற்றா.
ஆகா மன்னே என்றதனால் வண்டுக்கால் பந்துத் திரட்சி என்றிவ்வாறு வழக்கின்கண்ணும் செய்யுட்கண்ணும் வருவன வெல்லாம்கொள்க. இனி, எற்புடம்பு, அற்புத்தளை குரக்குமாட்சி என அல்வழிக்கண் அருகி வருவனவற்றையும் அதனாலே அமைக்க.
இவ்வாசிரியர் 'தம்மின வன்றொடர்' ஆதலை விதித்தார். தொல்காப்பியர்,

*'மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற் றெல்லாம்*
*வல்லொற் றிறுதி கிளையொற் றாகும்'*

என்றார். கிளை ஒற்று என்றது இன வல்லெழுத்து என்ற பொருளதாய் எண்கு என்பது எட்கு எனவும்; அன்பு என்பது அற்பு எனவும்; என்பு என்பது எற்பு எனவும் இறுதி கிளையொற்றாதலை அமைத்து நடக்கின்றது. இந்நூற்பா அம்முறையில் குறைபட்டு நிறப்தை அறிக.

(34)

---

**184. ஐயீற் றுடைக்குற் றுகரமு முளவே.**

ஐ ஈற்று உடைக் குற்று உகரமும் உளவே.

ai īṟṟu utaik kuṟṟu ukaramum uḻavē.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Final shortened u changed into ai**

There are also (a few words) ending in Short u (preceded by a Nasal), which (in combination take the increment ai.

## ஒப்புமைப் பகுதி

ஐயீற் றுடைக்குற் றுகரமு முளவே

(இ.வி.: 104)

அடைமொழி உக்குறள் ஐஆ தலுமாம்

(தொ.வி.: 28)

## மயிலை நாதர்

எ – ன், எய்தியதன் மேற் சிறப்புவிதி யுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: ஐகாரத்தைத் தம்மீற்றிலே [1]பெற்றுவரும் குற்றுகரமு முள, எ – று.

வ – று.:–

ஒராட்டையான், ஈராட்டையான், ஐயாட்டையான், [2]அற்றைக்கூத்தன், [3]பண்டைச்சான்றோர் என வரும்.

பாட வேறுபாடு.:–

1. பெற வரும்
2. அன்றைக்கூத்தன்
3. பண்டைச் சான்றோர் என வரும்

## சங்கர நமச்சிவாயர்

எ – னின், இதுவும், மேலே நிலைமொழிக்கு மூவினமும் வரின் எய்தாதது எய்துவித்தலும், உயிர் வரின் எய்தியதன் மேற் சிறப்புவிதியும் உணர்–ற்று.

இ–ள்.:– ஐகாரச் சாரியையை இறுதியிலே பெற்று வரும் மென்றொடர்க் குற்றுகர மொழிகளும் சில உள, எ – று.

மேலைச் சூத்திரத்தைச்சார வைத்தமையான், இதுவும் மென்றொடர் என்பது பெற்றாம். வருமொழி வரையாமையின், நாற்கணமும் கொள்க.

உ-ம்.:-

பண்டைக்காலம், இற்றைநாள் எனவும்; அற்றைக் கூலி, இற்றை நலம் எனவும் வரும். பிறவும் அன்ன.

மேலைச் சூத்திரத்தைச் சார வைத்தாரேனும், 'ஐயீற்றுடைக் குற்றுகரம்' எனப் பொதுப்படக் கூறினமையின், நேற்றைப் பொழுது எனப் பிற தொடர்கள் ஐகாரம் பெறுதலும், ஐயீற்றுடைக் குற்றுகரம் என உடைமையாக்கிக் கூறினமை யின் வருமொழிப் புணர்ச்சியான் அன்றி ஒற்றை இரட்டை வேட்டை என ஒருமொழியாய் நின்று ஐகாரம் பெறுதலும், ஈராட்டை மூவாட்டை எனத் தொடர்மொழியாய் நின்று ஐகாரம் பெறுதலும் கொள்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், குற்றியலுகர வீற்று ஐகார வீறாமெனக் கூறியது.

**இ-ள்.:** **ஐயீற்றுடைக்**-ஐகாரத்தைத் தம்மீற்றிலே பெற வரும், **குற்றுகரமு முளவே** - குற்றியலுகரங்களும் உள, எ-று.

**உ-ம்.:-** ஓராட்டை நெல், ஈராட்டைப் பொன், ஐயாட்டைக் கடமை, அன்றைக் கூத்தன், பண்டைச் சான்றோர் என வரும்.

## விசாகப் பெருமாளையர்

**இது**, முன்சொன்ன நிலைமொழிக்கு எய்தாத தெய்துவித்தலும், எய்தியதன் மேற் சிறப்புவிதியும் உணர்த்துகின்றது,

**இ-ள்.:-** **ஐ** - ஐகாரச்சாரியை, **ஈற்றுடை** - இறுதியிலே பெற்று வருகிற, **குற்றுகரமும்** - மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளும், **உள**- சிலவுண்டு, எ-று.

வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க.

உ-ம்.:-

பண்டு+காலம்-பண்டைக்காலம், இன்று+நாள்-இற்றைநாள், எனவும், அன்று+கூலி-அற்றைக்கூலி, இன்று+நலம்-இற்றைநலம், எனவும், இருவழியிலும் வரும், (மேலைச் சூத்திரத்தைச் சார வைத்தலால் மென்றொடரென்றும், ஆயினும் குற்றுகரம் எனப் பொதுப்படச் சொன்னமையால் நேற்றுபொழுது-நேற்றைப் பொழுது, என வன்றொடர் ஐகாரச் சாரியை பெறுதலும் "ஐயீற்றுடைக் குற்றுகரமும்" என உடைமை யாக்கிக்

கூறினமையால் ஒற்றைவேட்டை, ஈராட்டை என வருமொழி நோக்காது அச்சாரியை பெறலுங் கொள்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஒருவகைக் குற்றுகரவீற்றுக்கு நிலைமொழிச் செய்கையாக விகாரங் கூறுஞ் சூத்திரம் யாது?

ஐயீற் றுடைக்குற் றுகரமு முளவே.

(ஐ ஈற்று உடைக் குற்றுகரமும் உளவே.)

**இ-ள்.:-** ஐ ஈற்று உடைக் குற்றுகரமும் உள ஐகாரச் சாரியையை இறுதியிலே பெற்று வரும் மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளுஞ் சிலவுளவாம், எ-று.

மேலைச் சூத்திரத்தைச் சாரவைத்தமையால், இதுவும் மென்றொடரென்பது பெற்றாம். வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுங் கொள்க.

உ-ம்.:-

பண்டு-காலம்-பண்டைக்காலம், இன்று-நாள்-இற்றை நாள் எனவும், அன்று-கூலி அற்றைக்கூலி, இன்று-நலம் இற்றைநலம் எனவும் இருவழியும் வரும்.

மேலைச் சூத்திரத்தைச் சாரவைத்தாரேனும், ஐயீற்றுடைக் குற்றுகரம் எனப் பொதுப்படக் கூறினமையால் நேற்று - பொழுது நேற்றைப் பொழுது எனவும் நேற்று-கூலி- நேற்றைக்கூலி எனவும் இருவழியும் வன்றொடர் ஐகாரச்சாரியை பெறுதலும், ஐயீற்றுடைக் குற்றுகரம் என உடைமையாக்கிக் கூறினமையால், வருமொழி நோக்காது ஒன்று ஒற்றை, இரண்டு இரட்டை, என ஒருமொழியாக நின்று ஐகாரம் பெறுதலும்; ஓராண்டு-ஓராட்டை, ஈராண்டு- ஈராட்டை, எனத் தொடர்மொழியாக நின்று ஐகாரம் பெறுதலுங் கொள்க.

சிலமென்றொடர்க் குற்றியலுகரமொழிகள் ஐகாரச்சாரியை பெறும் என்றது எய்தாததெய்துவித்தல்; வன்றொடராத லோடு ஐகாரச்சாரியையும் பெறும் என்றது "மென்றொடர் மொழி" என்னும் மேலைச் சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி.

## முகவை இராமானுச கவிராயர்

இதுவும் மேலை நிலைமொழிக்கு எய்தாதது எய்துவித்தலும் எய்தியதன் மேற் சிறப்பு விதியு முணர்த்துகின்றது.

**இ–ள்.:–** ஐகாரச் சாரியையை இறுதியிலே பெற்றுவரு மென்றொடர்க் குற்றுகர மொழிகளுஞ் சில வுளவாம், எ–று.

மேலைச் சூத்திரத்தைச் சார வைத்ததினாலே இதுவு மென்றொடரெனக் கொள்க.

உ–ம்.:–

பண்டு–பண்டைக்காலம், இன்று–இன்றைத் தினம், எனவும், அன்று–அற்றைக் கூலி, இன்று–இற்றை நலம் எனவும் வரும். 'ஐயீற் றுடைக்குற் றுகர' மெனப் பொதுப்படக் கூறினதினாலே, நேற்று–நேற்றைப்பொழுது என வன்றொடர் ஐகாரம் பெறுதலும், 'ஐயீற்றுடை'யென வுடைமையாக்கிக் கூறினதினாலே வருமொழிப் புணர்ச்சி யின்றி, ஒன்று–ஒற்றை, இரண்டு–இரட்டை, வெட்டு–வெட்டை என வொருமொழியாய் நின்று ஐகாரம் பெறுதலும், ஓராண்டு–ஓராட்டை, ஈராண்டு–ஈராட்டை எனத் தொடர்மொழியாய் நின்று ஐகாரம்பெறுதலுங் கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :– ஐ – ஐகாரச் சாரியையை, ஈறு உடை – இறுதியில் பெற்றுவருகின்ற, குற்றுகரமும் – (மென்றொடர்க்) குற்றியலுகர மொழிகளும், உள – சில உண்டு.

குறிப்பு :–

மேற்சூத்திரத்தைச் சாரவைத்தமையால், மென்றொடர் என்பது பெறப்பட்டது. வருமெழுத்தைச் சொல்லா மையால் நாற்கணமுங் கொள்க.

உ–ம் :–

| | | | |
|---|---|---|---|
| பண்டு + காலம் | = | பண்டைக்காலம். | |
| இன்று + நாள் | = | இற்றைநாள். | – அல்வழி. |
| அன்று + வளம் | = | அற்றைவளம். | |
| இன்று + அழகு | = | இற்றையழகு | –வேற்றுமை. |

மேலைச் சூத்திரத்தைச் சாரவைத்தாராயினும், 'ஐயீற்றுடைக் குற்றுகரம்' எனப் பொதுப்படக் கூறினமையால், நேற்று + பொழுது = நேற்றைப் பொழுது, நேற்று + கூலி = நேற்றைக்கூலி எனவும்; பொழுது + செலவு = பொழுதைச்

செலவு எனவும் பிறதொடர்களும் ஐகாரச்சாரியை பெறுதலும்; 'ஐயீற்றுடைக் குற்றுகரம்' என உடைமையாக்கிக் கூறினதனால், வருமொழிப் புணர்ச்சியை நோக்காமல், ஒன்று = ஒற்றை, இரண்டு = இரட்டை, வேடு = வேட்டை, ஏறு = ஏற்றை என ஒரே மொழி யாய் நின்று ஐகாரம் பெறுதலும்; ஓராண்டு = ஓராட்டை, ஈராண்டு = ஈராட்டை எனத் தொடர் மொழியாய் நின்று ஐகாரம் பெறுதலுங் கொள்க.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– ஐ ஈற்று உடைக் குற்றுகரமும் உள – ஐகாரச் சாரியையை இறுதியிலே பெற்று வரும் மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளுஞ் சிலவுளவாம், எ– று.

மேலைச் சூத்திரத்தைச் சாரவைத்தமையால், இதுவும் மென்றொடரென்பது பெற்றாம். வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுங் கொள்க.

உ–ம்.:–

பண்டு+காலம்= பண்டைக்காலம், இன்று+ நாள்= இற்றைநாள் எனவும், அன்று+கூலி= அற்றைக்கூலி, இன்று+நலம்= இற்றைநலம் எனவும், இருவழியும் வரும்.

மேலைச் சூத்திரத்தைச் சார வைத்தாரேனும், ஐயீற்றுடைக் குற்றுகரம் எனப் பொதுப்படக் கூறினமையால், நேற்று+ பொழுது= நேற்றைப்பொழுது எனவும், நேற்று+கூலி= நேற்றைக் கூலி எனவும், இருவழியும் வன்றொடர் ஐகாரச் சாரியை பெறுதலும், ஐயீற்றுடைக் குற்றுகரம் என உடைமை யாக்கிக் கூறினமையால், வருமொழி நோக்காது ஒன்று ஒற்றை, இரண்டு இரட்டை என ஒருமொழியாக நின்று ஐகாரம் பெறுதலும், ஓராண்டு ஓராட்டை, ஈராண்டு ஈராட்டை எனத் தொடர்மொழியாக நின்று ஐகாரம் பெறுதலுங் கொள்க.

சில மென்றொடர்க் குற்றியலுகர மொழிகள் ஐகாரச் சாரியை பெறும் என்றது எய்தாத தெய்துவித்தல்; வன்றொடராதலோடு ஐகாரச் சாரியையும் பெறும் என்றது "மென்றொடர்மொழி" என்னும் மேலைச் சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதி.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். ஐ ஈற்று உடைக் குற்றுகரமும் உள – ஐகாரச்சாரியையை இறுதியிலே பெற்றுவரும் மென்றொடர்க் குற்றியலுகரமொழிகளுஞ் சிலவுளவாம்.

மேலைச் சூத்திரைத்தைச் சாராவைத்தமையால், இதுவும் மென்றொடரென்பது பெற்றாம். வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க.

உ–ம்.:–

பண்டு + காலம் = பண்டைக்காலம், இன்று + நாள் = இற்றைநாள் எனவும் அன்று + கூலி = அற்றைக்கூலி, இன்று + நலம் = இற்றைநலம், எனவு. இருவழியும் வரும்.

மேலைச்சூத்திரத்தைச் சாரவைத்தாரேனும், ஐயீற்றுடைக் குற்றுகரம் எனப் பொதுப்படக் கூறினமையால், நேற்று + பொழுது = நேற்றைப் பொழுது எனவும் நேற்று + கூலி = நேற்றைக்கூலி. எனவும் இருவழியும் வன்றொடர் ஐகாரச்சாரியை பெறுதலும், ஐயீற்றுடைக் குற்றுகரம் என உடைமை யாக்கிக் கூறினமையால், வருமொழி நோக்காது ஒன்று ஒற்றை, இரண்டு இரட்டை என ஒருமொழியாக நின்று ஐகாரம்பெறுதலும், ஓராண்டு ஓராட்டை, ஈராண்டு ஈராட்டை எனத் தொடர்மொழியாக நின்று ஐகாரம் பெறுதலும் கொள்க.

சிலமென்றொடர்க் குற்றியலுகரமொழிகள் ஐகாரச் சாரியை பெறும் என்றது எய்தாததெய்துவித்தல்; வன்றொடரா தலோடு ஐகாரச்சாரியையும் பெறும் என்றது "மென்றொடர் மொழி" என்னும் மேலைச் சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: ஐ–ஐகாரச் சாரியை, ஈறு உடை – இறுதியிற் பெற்று வருகிற, குற்றுகரமும் – குற்றியலுகர மொழிகளும், உள – (சில) உண்டு; எ–று.

மேற் சூத்திரத்தைச் சார வைத்ததனால், மென்றொடரென்பது பெறப்படும். வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமும் கொள்க.

உ-ம்.:-

பண்டு + காலம் = பண்டைக்காலம்,

இன்று + நாள் = இற்றைநாள் – அல்வழி.

முந்து + வளம் = முந்தைவளம்

அன்று + அழகு = அற்றையழகு – வேற்றுமை.

மேலைச் சூத்திரத்தைச் சார வைத்தாராயினும், 'ஐயீற்றுடைக் குற்றுகரம்' எனப் பொதுப்படச் சொன்னதனால், நேற்று + பொழுது = நேற்றைப் பொழுது, நேற்று+கூலி = நேற்றைக் கூலி எனவும்; பொழுது + செலவு = பொழுதைச்செலவு எனவும் பிற தொடர்களும் ஐகாரச் சாரியை பெறுதலும்; 'ஐயீற்றுடைக் குற்றுகரம்' என உடைமை யாக்கிக் கூறியதனால் வருமொழிப் புணர்ச்சியை நோக்காமலே ஒன்று – ஒற்றை, இரண்டு – இரட்டை, வேடு – வேட்டை, ஏறு– ஏற்றை எனத் தனிமொழியாக நின்று ஐகாரம் பெறுதலும்; ஓராண்டு–ஓராட்டை, ஈராண்டு – ஈராட்டை என அடையடுத்த மொழியாக நின்று ஐகாரம் பெறுதலும் கொள்க.

## ‌ிவானந்தம் பிள்ளை

**இ-ள்.:-** ஐ ஈற்று உடைக் குற்றுகரமும் உள – ஐகாரச்சாரிபையை இறுதியிலே பெற்று வரும் (மென்றொடர்க்) குற்றியலுகர மொழிகளுஞ் சில வுளவாம். எ–று.

மேலைச் சூத்திரத்தைச் சாரவைத்தமையால், இதுவும் மென்றொடரென்பதுபெற்றாம். வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுங் கொள்க.

உ-ம்.:-

பண்டு + காலம் = பண்டைக்காலம்,

இன்று + நாள் = இற்றைநாள் – அல்வழி.

அன்று + கூலி = அற்றைக்கூலி,

இன்று + நலம் = இற்றைநலம் – வேற்றுமை.

மேலைச் சூத்திரைத்தைச் சாரவைத்தாரேனும், ஐயீற்றுடைக் குற்றுகரம்எனப் பொதுப்படக் கூறினமையால், நேறு + பொழுது = நெற்றைப்பொழு, நேற்று + கூலி = நேற்றைக்கூலி. என இருவழியும் வன்றொடர் ஐகாரச்

சாரியை பெறுதலும்; ஐயீற்றுடைக் குற்றுகரம் என உடைமை யாக்கிக் கூறினமையால், வருமொழி நோக்காது ஒன்று – ஒற்றை, இரண்டு – இரட்டை என ஒருமொழியாக நின்று ஐகாரம் பெறுதலும்; ஓராண்டு – ஓராட்டை, ஈராண்டு – ஈராட்டை எனத் தொடர்மொழியாக நின்று ஐகாரம் பெறுதலுங் கொள்க.

சில மென்றொடர்க் குற்றிலுகர மொழிகள் ஐகாரச் சாரியை பெறும் என்றது எய்தாத தெய்துவித்தல்; வன்றொடராதலோடு ஐகாரச் சாரியையும் பெறும் என்றது "மென்றொடர்மொழி" என்னும் மேலைச் சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:– ஐ ஈறு உடை – ஐகாரச் சாரியையை இறுதியிலே பெற்று வருகிற, குற்றுகரமும் – (மென்றொடர்க்) குற்றிய லுகர மொழிகளும், உள – சில உண்டு. எ–று.

பொ–ரை.:–

ஐகாரச் சாரியையை இறுதியிலே பெற்றுவருகின்ற (மென்றொடர்க்) குற்றியலுகர மொழிகளும் சில உண்டு.

வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமும் கொள்க.

உ–ம்.:–

பண்டு + காலம் = பண்டைக் காலம். – அல்வழி.
இன்று + நாள் = இற்றை நாள்.
அன்று + கூலி = அற்றைக்கூலி. – வேற்றுமை.
இன்று + நலம் = இற்றை நலம்.

மேலைச் சூத்திரத்தைச் சார வைத்ததினால் இதுவும் மென்றொடர் என்பதும், ஐயீற்றுடைக் குற்றுகரம் எனப் பொதுப்படச் சொன்னமையால், நேற்று + பொழுது = நேற்றைப் பொதுழு என வன்றொடர் ஐகாரச் சாரியை பெறுதலும், ஐயீற்றுடைக் குற்றுகரம், என உடைமையாக்கிக் கூறியதனால் வருமொழிப் புணர்ச்சி யின்றி, ஒன்று – ஒற்றை, இரண்டு – இரட்டை, வேடு – வேட்டை, ஏறு – ஏற்றை எனத் தனிமொழியாக நின்று ஐகாரம் பெறுதலும், ஓராண்டு – ஓராட்டை, ஈராண்டு – ஈராட்டை எனத்

தொடர்மொழியாய் நின்று ஐகாரம் பெறதலும் கொள்க.

## கா.நமச்சிவாய முதலியார்

ஐ – ஐகாரச் சாரியை, ஈறு உடை – இறுதியிலே பெற்று வருகிற, **குற்றுகரமும்** – மென்றொடர்க் குற்றிய லுகர மொழிகளும், உள – சிலவுண்டு.

வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க.

**உதாரணம்:–**

பண்டு + காலம் : பண்டைக்காலம்
இன்று + நாள் : இற்றைநாள்

–அல்வழி

அன்று + கூலி : அற்றைக்கூலி
இன்று + நலம் : இற்றைநலம்

வேற்றுமை

மேலைச் சூத்திரத்தைச் சாரவைத்தலால் இவ்விதி மென்றொடர்க்கே என்று கொள்ளலாமாயினும், 'குற்றுகரம்' எனப் பொதுப்படச் சொன்னமையால்,

நேற்றைப்பொழுது
நேற்றைக்கூலி

என வன்றொடர் ஐகாரச்சாரியை பெறுதலும் ;

'ஐயீற்றுடைக் குற்றுகரமும்' என உடைமையாக்கிக் கூறினமையால் ஒற்றை, இரட்டை, ஏற்றை, வேட்டை, ஓராட்டை, ஈராட்டை என வருமொழி நோக்காது ஐகாரச்சாரியை ஏற்றலுங் கொள்க. ஓராட்டை – ஒரு வருடம்.

## மோசகு பொன்னையா

ஐகாரச் சாரியையை ஈற்றிலே பெற்று வரும் குற்றியலுகரத் தொடர்மொழிகளும் சில உளவாம். எ–று.

**பொதுவாகக் கூறினமையின் ஏற்பனவற்றையெல்லாம் அமைக்க.**

எ–டு.:–

பண்டைக்காலம்; இற்றைநாள்,
நேற்றைப்பகல்; நேற்றைக்கூலி.
ஒற்றை; இரட்டை; ஓராட்டை.
இவ்வாசிரியர் குற்றியலுகர வீற்றுச் சொற்கள் நிலை

மொழியாய் இருக்குங்காலும் இவ்வாறு ஐகாரச் சாரியை பெறும் எனப் பொருள்படுமாறு நூற்பா செய்துள்ளார். தொல்காப்பியர்,

'அல்லது கிளப்பினும் எல்லா மொழியும்
சொல்லிய பண்பின் இயற்கை யாகும்'

என நூற்பா செய்தாராக, அந்நூற்பாவிற்கு இளம்பூரணர், 'பண்பின் என்றதனான் ஐ என்னும் சாரியை பெற்றுவரும் அல்வழி முடிபுங் கொள்க. அற்றைக் கூத்தன், பண்டைச் சான்றார், ஓராட்டை யானை, மற்றை யானை என வரும்' என்றார். அதனைத் தழுவியே இவ்வாசிரியர் நூற்பா செய்தார் ஆதலின், புணர்ச்சியில் ஐகாரச்சாரியைபெறும் குற்றியலுகரமும் உள என்பதே பொருளாகக் கொள்க.

(35)

**185. திசையொடு திசையும் பிறவுஞ் சேரின்**
**நிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்**
**றகரம் னலவாத் திரிதலு மாம்பிற.**

திசை ஒடு திசையும் பிறவும் சேரின்
நிலை ஈற்று உயிர்மெய் கவ் ஒற்று நீங்கலும்
றகரம் ன ல ஆத் திரிதலும் ஆம் பிற

ṭisai oṭu ṭisaiyum piṛavum sērin̲
nilai īṛṛu uyirmey kav oṛṛu nīṅkalum
ṛakaram n̲a la āṭ ṭiriṭalum ām piṛa

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Words in shortened u indicating points of compass

In the combination of Names of the Cardinal points, with themselves, or with other words, the final Vowel-consonant is

---

பாட வேறுபாடு.:–

1. நிலைமொழியீற்றினின்ற
2. லகாரமாய்
3. தென்றலை
4. மேற்றலை
5. மிகையானே
6. கீழென்றாக்கி

dropped and then if the proceeding consonant is k), it (too) is ; but if it is r it is changed into n or l.

## ஒப்புமைப் பகுதி

திரிபுவேறு கிளப்பின் ஒற்றும் இறுதியும்
கெடுதல் வேண்டும் என்மனார் புலவர்"
ஒற்றுமெய் திரிந்து னகார மாகும்
தெற்கொடு புணருங் காலை யான

(தொல்.: 433)

திசையொடு திசையும் பிறவுஞ் சேரி
னிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் னலவாய்த் திரிதலு மாம்பிற.

(இ.வி.: 105)

திசையொடு திசையும் பிறவுஞ் சேரி
னிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் னலவாய்த் திரிதலு மாம்பிற

(மு.வீ.: 415)

## மயிலை நாதர்

எ – ன், எய்தாத தெய்துவித்தல் நுதலிற்று.

இ–ள்.:– குற்றுகர வீற்று நாற்பெருந் திசைகளும் தம்முன் தாம் மாறியும் பிறவற்றோடும் புணருமிடத்து [1]நிலைமொழி யீற்றுயிர் மெய்யும் அதன்மேல் நின்ற கவ் வொற்றும் நீங்குதலும், றகரம் னகர [2]லகரங்களாகத் திரிதலுமாம், எ – று.

வ – று.:–

வடகிழக்கு, வடமேற்கு, "வடவேங்கடம்", "வடகடல்", வடபால், வடமலை; தென்கிழக்கு, தென்மேற்கு, "தென்குமரி", தென்கடல், தென்பால், [3]தென்மலை; மேல்கடல், [4]மேல்சார், மேல்பால்; குணகடல், குணபால்; குடகடல், குடபால் என வரும்.

பிறவென்ற [5]விதப்பினானே கிழவென்பதனைக் [6]கீழென

பாட வேறுபாடு.:–

1. தொடக்கத்தனவுட்டிரியாமல்
2. திரிபும்

நிறுவி, கீழ்பால், கீழ்சார், கீழ்கரை என வருவனவும், மேற்றிசை யென்றற் [7]றொடக்கங்களுள் திரியாமையும் வருமொழித் [8]திரிபுகளும் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், குற்றுகர ஈற்றுத் திசைப்பெயர்க்கு எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ–ள்.:– திசைச்சொல்லோடு திசைச்சொல்லும் பிற சொற்களும் புணருமிடத்து, நிலைமொழியீற்றில் நின்ற உயிர்மெய்யும் அதன் மேல் நின்ற ககர ஒற்றும் கெடுதலும், அங்ஙனம் நின்ற றகர ஒற்று னகர ஒற்றாயும் லகர ஒற்றாயும் திரிதலும் ஆம், எ–று.

உ–ம்.:–

வடகிழக்கு, வடமேற்கு, வடதிசை, வடமலை, வடவேங்கடம், தென் கிழக்கு, தென் மேற்கு, தென் குமரி, தென் வீதி, தென்மலை, மேல்பால், மேனாடு, குடதிசை, குடநாடு, குணகடல், குணபால் என வரும்.

பிற என்றமையானே மேற்றிசை, மேலைத்திசை, கீழ்த்திசை, கீழைத்திசை, கீழ்மேற்றென்வடல் எனவும், கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, வடக்கூர், தெற்கூர், வடக்குமலை, தெற்குமலை என இங்ஙனம் காட்டிய விகாரமின்றியும் வரும் எனவும், இவ்விதி யெல்லாம் ஏற்ற பெற்றி கோடல் வேண்டும் எனவும் கொள்க.

வடகிழக்கு என்பது வடக்கும் கிழக்குமாயதோர் கோணம் என உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. வடதிசை என்பது வடக்காயதிசை எனப் பண்புத் தொகை. வடமலை என்பது வடக்கின்கண் மலை என ஏழாம் வேற்றுமைத்தொகை. கீழ்மேற்றென்வடல் என்பது கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு என உம்மைத் தொகை. பிறவும் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், நாற்றிசையிலுள்ள குற்றுகரம் புணருமாறு கூறியது.

இ–ள்.: **திசையொடு திசையும்** – குற்றியலுகர வீற்றின் நாற்பெருந்திசைகளும் தம்மோடு தாம் மாறிப் புணருமிடத்தும், **பிறவும் சேரின்** – பிறவற்றோடும் புணருமிடத்தும், **நிலையீற்றுயிர்மெய்** – நிலைமொழி யீற்று உயிர்மெய் கெடுதலும், **கவ்வொற்று நீங்கலும்** – அதன் மேனின்ற கவ்வொற்று நீங்குதலும், **றகரம் னலவாத் திரிதலும்** – அதன் மேனின்ற

றகாரம் னகாரம் லகாரமாகத் திரிதலும், ஆம் பிற - இத்தன்மை விதியும் பிற விதியும் பெறும், எ-று.

உ-ம்.:-

வடகிழக்கு, வடமேற்கு, வடவேங்கடம், வடபால், வடகடல், வடமலை, தென்கிழக்கு, தென்மேற்கு, தென்குமரி, தென்கடல், தென்பால், தென்றலை, மேற்கடல், மேல்பால், குணகடல், குணபால், குடகடல், குடபால்.

"பிற" வென்ற விதப்பானே கிழவென்பதனைக் கீழெ்ன நிறுவிக் கீழ்பால், கீழ்சார், கீழ்கரை என வரும்.

## விசாகப் பெருமாளையர்

இது, குற்றியலுகர வீற்றுத் திசைப்பெயர்களுக்கு எய்தாத தெய்துவிக்கின்றது.

இ-ள்.:- திசையொடு-திசைச்சொல்லோடு, திசையும்-திசைச்சொல்லும், பிறவும் - பிறசொல்லும், சேரின்-புணருமிடத்து, நிலையீற்று-நிலைமொழி யீற்றிலே நின்ற, உயிர்மெய்-உயிர்மெய்யும், கவ்வொற்று-அதன் பின்னின்ற ககர மெய்யும், நீங்கலும்-கெடுதலும், றகரம்-அவ்விடத்து நின்ற றகர்மெய், னலவா-னகர மெய்யாகவும் லகர மெய்யாகவும், திரிதலும்-திரிதலும், ஆம்-ஆகும், எ-று.

உ-ம்.:-

வடக்கு + கிழக்கு-வடகிழக்கு, மேற்கு, திசை, மலை, வேங்கடம் என உயிர்மெய்யுங் ககர மெய்யுங் கெட்டது. குடக்கு + திசை -குடதிசை, குணக்கு + கடல் - குணகடல், இவையுமப்படியே, தெற்கு + கிழக்கு-தென்கிழக்கு, தென்மேற்கு, தென்மலை என உயிர்மெய் கெட னகர மெய்யாயிற்று. மேற்கு + பால் - மேல்பால், மேற்கு + நாடு - மேனாடு, என உயிர்மெய் கெட னகரமெய் லகர மெய்யாயிற்று.

"பிற" என்றதனால் மேற்கு+ சேரி-மேல்சேரி, மேற்சேரி, மேலைச்சேரி, கிழக்கு+ திசை- கீழ்திசை, கீழ்த்திசை, கீழைத்திசை எனவும், கீழ்மேற்றென் வடல் எனவும், விகாரப்பட்டும் சிறுபான்மை கிழக்கு மேற்குத் தெற்கு, வடக்கு, வடக்கூர், தெற்குமலை என விகார மில்லாமலும் வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

குற்றுகரவீற்றுத் திசைப்பெயர்களுக்கு விதி கூறுஞ் சூத்திரம் யாது?

திசையொடு திசையும் பிறவுஞ் சேரின்

நிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் னலவாத் திரிதலு மாம்பிற.
(திசையொடு திசையும் பிறவும் சேரின்
நிலை ஈற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் ன ல ஆத் திரிதலும் ஆம்பிற.)

இ–ள்.:– **திசையொடு திசையும் பிறவும் சேரின்** – திசைப்பெயரோடு திசைப்பெயரும் பிறபெயர்களும் புணருமிடத்து, நிலை ஈற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்–நிலைமொழியீற்றிலேநின்ற உயிர்மெய்யும் அதன் மேனின்ற ககரமெய்யுங் கெடுதலும், றகரம் **ன ல ஆத்திரிதலும் ஆகும்** – அவ்விடத்து நின்ற றகரமெய் னகர மெய்யாகவும் லகரமெய்யாகவும் திரிதலும் ஆகும், எ–று.

திசையொடு திசை புணரும்போது நிலைமொழியாக நிற்றற்குரிய திசைகள் யாவை?

பிற என்ற மிகையினாலே, திசைப்பெயரோடு திசைப்பெயர் புணரும் போது நிலைமொழி பெருந்திசையாகிய வடக்குந் தெற்குமாம்.

வருமொழியாக வந்து புணரும் திசைகள் யாவை?

வருமொழி கோணத்திசையாகிய கிழக்கும் மேற்குமாம். நிலை மொழியாய் நிற்பன வடக்குந் தெற்குமே.

பெருந்திசையும் கோணத்திசையும் வருமொழியோடு எவ்வாறு புணரும்?

தெற்கென்பதன் றகரம் னகரமாகவும் மேற்கென்பதன் றகரம் லகரமாகவுந் திரியாது எனவும், மேற்கென்பதன் றகரந் தகரம் வரும் வழித் திரியாது எனவும், கிழக்கென்பதன் ழகரத்து அகரங் கெட்டு முதனீண்டே வரும் எனவுங் கொள்க.

உ–ம்.:–

வடக்கு–வடமேற்கு, வடதிசை, வடபால், வடமலை, வடவேங்கடம் எனவும், தெற்கு–தென்கிழக்கு, தென்மேற்று, தென்குமரி, தென்மலை, தென்வீதி எனவும், மேற்கு–மேல்கடல், மேனாடு, மேல்வீதி, மேற்றிசை எனவும், குடக்கு–குட்திசை, குடகடல், குடநாடு எனவும், குணக்கு–குணதிசை, குணகடல், எனவும். கிழக்கு–கீழ்கரை, கீழ்சார், கீழ்த்திசை எனவும், வரும்.

இன்னும், பிற என்ற மிகையாலே, கீழைக்குளம், கீழைச்சேரி, மேலைக்குளம், மேலைச்சேரி என ஐகாரம் பெறுதலும், வடக்கூர், வடக்குமலை; தெற்கூர் தெற்குமலை, என மேற்காட்டிய விகாரமின்றியும் வருதலும், பெருந்திசையோடு பெருந்திசை புணரும்போது தெற்குவடக்கு, வடக்குத் தெற்கு; கிழக்குமேற்கு, மேற்குக்கிழக்கு எனப் பொதுவிதி

பெறுதலுங் கொள்க. வடகிழக்கென்பது வடக்குங் கிழக்குமாயதோர் கோணம் என உம்மைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாக விரியும். வடதிசையென்பது வடக்காகியதிசை எனப் பண்புத்தொகை. வடமலை யென்பது வடக்கின்கண்மலை என ஏழாம் வேற்றுமைத் தொகை. தெற்குவடக்கென்பது தெற்கும் வடக்கும் என உம்மைத் தொகை.

இஃது எய்தாததெய்துவித்தல்.

## முகவை இராமானுச கவிராயர்

**இது, குற்றுகர வீற்றுத் திசைப்பெயர்க்கு எய்தாதது எய்துவிக்கின்றது.**

இ–ள்.: **திசையொடு திசையும் பிறவுஞ் சேரின்** – குற்றுகர வீற்றுத் திசைப் பெயரொடு திசைப் பெயரும் பிற பெயரும் புணருமாயின், **நிலையீற்றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்** – நிலைமொழி யீற்றிலே நின்ற உயிர்மெய்யும் அதன் மேல்நின்ற ககர வொற்றுங் கெடுதலும், **றகரம் னலவாய்த் திரிதலுமாம்** – அங்கே நின்ற றகர வொற்று னகர வொற்றாகவும் லகர வொற்றாகவும் திரிவதுமாம், எ–று.

பிறவென்ற மிகையாலே, திசையொடு திசைபுணரும் போது, நிலைமொழி பெருந்திசை எனவும், வருமொழி சிறுதிசை எனவும், நிலைமொழியாய் நிற்பன வடக்குத் தெற்குமே எனவுங் கொள்க.

உ–ம்.:–

வடக்கு – வடகிழக்கு, வடமேற்கு, வடதிசை எனவும், வடமலை, வடவேங்கடம் எனவும், தெற்கு–தென்கிழக்கு, தென்மேற்கு, எனவும், தென்குமரி, தென்மலை, தென்வீதி எனவும், மேற்கு–மேற்றிசை, மேல்பால், மேனாடு எனவும், குடக்கு–குடதிசை, குடநாடு எனவும், குணக்கு–குணகடல், குணதிசை, குணபால் எனவும் வரும். இன்னும் பிற வென்ற மிகையாலே, மேற்கு–மேற்றிசை மேலத்திசை மேலைத்திசை எனவும், கிழக்கு–கீழ்திசை, கீழ்த்திசை, கீழ்கரை, கீழக்கரை, கீழைச்சேரி எனவும், கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு என்பன; கீழ்மேற்றென்வடல் எனவும், வடக்கூர் தெற்கூர் வடக்குமலை தெற்குமலை என விகார மின்றியும் வருமெனவும். இவ்விதிகளெல்லா மேற்றபடி கொள்ளல் வேண்டு மெனவுங் கொள்க. வடகிழக்கென்பது – வடக்குங் கிழக்குமாகியதோர் கோணம் என உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. வடதிசை என்பது– வடக்காகிய திசை எனப் பண்புத்தொகை. வடமலை என்பது – வடக்கின்கண் மலை என ஏழாம்

வேற்றுமைத்தொகை. கீழ்மேற்றென் வடல் என்பது கிழக்கும் மேற்குத் தெற்கும் வடக்கும் என உம்மைத்தொகை. பிறவுமன்ன.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– திசை** – (குற்றுகரவீற்றுத்) திசைப்பெயரோடு, **திசையும்** – திசைப்பெயரும், **பிறவும்** – பிறபெயர்களும், **சேரின்** – புணருமிடத்து, **நிலை ஈறு** – நிலைமொழி யிறுதியிலே நின்ற, **உயிர் மெய்** – கு என்னும் உயிர் மெய்யும், **க ஒற்று** – (அதன் அயலில் நின்ற) ககர மெய்யும், **நீங்கலும்** – கெடுதலும், **றகரம்** – (ஈற்றியலில் நின்ற) றகர மெய்யானது, **னல ஆ திரிதலும்** – னகர மெய்யாகவும் லகர மெய்யாகவும் திரிதலும் **ஆம்** – ஆகும்.

குறிப்பு :–

நிலையீற்றுயிர்மெய் கவ்வொற்று நீங்குதல் கிழக்கு, குணக்கு, குடக்கு, வடக்கு, என்பவற்றிலும், றகரம் ன ஆதல் தெற்கு என்பதிலும், ற–ல ஆதல் மேற்கு என்பதிலும் என அறிக.

**உதாரணம்.:–**

வடக்கு + கிழக்கு = வடகிழக்கு.

வடக்கு + வேங்கடம் = வடவேங்கடம்

வடக்கு + மேற்கு = வடமேற்கு.

வடக்கு + அயோத்தி = வடவயோத்தி

வடக்கு + திசை = வடதிசை.

குடக்கு + திசை = குடதிசை

வடக்கு + மலை = வடமலை

குணக்கு + கடல் = குணகடல்

– உயிர்மெய்யுங் ககரமெய்யுங் கெட்டுவந்தன.

தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு.

தெற்கு + மலை = தென்மலை

தெற்கு + மேற்கு = தென்மேற்கு.

தெற்கு + யாறு= தென்யாறு

தெற்கு + குமர் = தென்குமரி.

தெற்கு + அரங்கம் = தென்னரங்கம்

– உயிர்மெய்கெட றகரம் னகரமாயிற்று.

**மேற்கு + காற்று = மேல்காற்று**

**மேற்கு + வீதி = மேல்வீதி**

மேற்கு + நாடு = மேனாடு.

மேற்கு + ஊர் = மேலூர்

– உயிர்மெய்கெட றகரம் லகரமாயிற்று.

'பிற' என்றதனால் திசைப்பெயரோடு திசைப்பெயர் விகாரப்பட்டுப் புணரும்போது வடக்குந் தெற்குமே நிலைமொழியாய் நிற்கும் எனவும், கிழக்கு என்பது ழகரத்தின் அகரங்கெட்டு முதல் நீண்டேவரும் எனவுங் கொள்க.

உ–ம்.:–

கிழக்கு + ஊர் = கீழூர்
கிழக்கு + காற்று = கீழ்காற்று
கிழக்கு + நாடு = கீழ்நாடு
கிழக்கு + யாறு = கீழ்யாறு

– ஈற்றுயிர் மெய்யுங் ககரவொற்றும் அகரமும் கெட்டு முதல் நீண்டது.

இன்னும் 'பிற' என்றதனால், 'கீழைக்குளம்', 'கீழைச்சேரி' 'மேலைக்குளம்', 'மேலைச்சேரி', என ஐகாரம் பெறுதலும்; 'வடக்கூர்', 'வடக்குமலை', 'தெற்கூர்', 'தெற்குமலை' என மேற்காட்டிய விகாரமின்றியும் வருதலும்; திசையோடு திசை புணரும்போது 'தெற்குவடக்கு', 'வடக்குத்தெற்கு', 'கிழக்குமேற்கு' 'மேற்குக்கிழக்கு' எனப் பொதுவிதி பெறுதலுங் கொள்க.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– **திசையொடு திசையும் பிறவும் சேரின்** – திசைப்பெயரோடு திசைப்பெயரும் பிற பெயர்களும் புணருமிடத்து, **நிலைஈற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்** – நிலைமொழி யீற்றிலே நின்ற உயிர்மெய்யும் அதன் மேனின்ற ககர மெய்யுங் கெடுதலும், **றகரம் ன ல ஆத் திரிதலும் ஆம்** – அவ்விடத்து நின்ற றகர மெய் னகர மெய்யாகவும் லகர மெய்யாகவும் திரிதலும் ஆகும், எ–று.

பிற என்ற மிகையினாலே, திசைப்பெயரோடு திசைப்பெயர் புணரும்போது நிலைமொழி பெருந்திசை, வருமொழி கோணத்திசை எனவும், நிலைமொழியாய் நிற்பன வடக்குந் தெற்குமே எனவும், தெற்கென்பதன் றகரம் னகர மாகவும் மேற்கென்பதன் றகரம் லகரமாகவுந் திரியும் எனவும், மேற்கென்பதன் றகரந் தகரம் வரும்வழித் திரியாது எனவும், கிழக்கென்பதன் ழகரத்து அகரங்கெட்டு முதனீண்டே வரும் எனவுங் கொள்க.

உ–ம்.:–

வடக்கு–வடமேற்கு, வடதிசை, வடபால், வடமலை, வடவேங்கடம் எனவும், தெற்கு–தென்கிழக்கு, தென்மேற்கு, தென்குமரி, தென்மலை, தென்வீதி எனவும், மேற்கு–மேல்கடல், மேனாடு, மேல்வீதி, மேற்றிசை எனவும், குடக்கு–குடதிசை, குடகடல், குடநாடு எனவும், குணக்கு–குணதிசை, குணகடல் எனவும், கிழக்கு–கீழ்கரை, கீழ்சார், கீழ்த்திசை எனவும் வரும்.

இன்னும், பிற என்ற மிகையாலே, கீழைக்குளம், கீழைச்சேரி; மேலைக்குளம், மேலைச்சேரி என ஐகாரம் பெறுதலும், வடக்கூர், வடக்குமலை; தெற்கூர், தெற்குமலை என மேற்காட்டிய விகார மின்றியும் வருதலும், பெருந்திசையோடு பெருந்திசை புணரும்போது தெற்குவடக்கு, வடக்குத் தெற்கு, கிழக்குமேற்கு, மேற்குக்கிழக்கு எனப் பொதுவிதி பெறுதலுங் கொள்க.

வடகிழக் கென்பது வடக்குங் கிழக்குமாயதோர் கோணம் என உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. வடதிசை யென்பது வடக்காகிய திசை எனப் பண்புத்தொகை. வடமலை யென்பது வடக்கின்கண்மலை என ஏழாம் வேற்றுமைத்தொகை. தெற்கு வடக்கென்பது தெற்கும் வடக்கும் என உம்மைத்தொகை. இது எய்தாத தெய்துவித்தல்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள்.:– திசையொடு திசையும் பிறவும் சேரின்** – திசைப்பெயரோடு திசைப்பெயரும் பிறபெயர்களும் புணருமிடத்து – **நிலை ஈற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்** – நிலைமொழியீற்றிலே நின்ற உயிர்மெய்யும் அதன்மேனின்ற ககரமெய்யுங் கெடுதலும், – **றகரம் னல ஆத்திரிதலும் ஆம்** – அவ்விடத்துநின்ற றகரமெய் னகரமெய்யாகவும் லகரமெய்யாகவுந் திரிதலும் ஆகும் – எ–று.

பிற என்ற மிகையினாலே, திசைப்பெயரோடு திசைப்பெயர் புணரும் போது நிலைமொழியாய் நிற்பன வடக்குந் தெற்குமே, எனவும், தெற்கென்பதன் றகரம் னகரமாகவும் மேற்கென்பதன் றகரம் லகரமாகவும் திரியும் எனவும், மேற்கென்பதன் றகரந் தகரம்வரும்வழித் திரியாது எனவும், கிழக்கென்பதன் ழகரத்து அகரங் கெட்டு முதனீண்டேவரும் எனவுங் கொள்க.

உ–ம்.:–

வடக்கு – வடமேற்கு, வடதிசை, வடபால், வடமலை, வடவேங்கடம், எனவும் தெற்கு – தென்கிழக்கு,

தென்மேற்கு, தென்குமரி, தென்மலை, தென்வீதி, எனவும் மேற்கு – மேல்கடல், மேனாடு, மேல்வீதி, மேற்றிசை, எனவும், குடக்கு – குடதிசை – குடகடல், குடநாடு, எனவும், குணக்கு – குணதிசை, குணகடல் – எனவும் கிழக்கு – கீழ்கரை, கீழ்சார், கீழ்த்திசை, எனவும் வரும்.

இன்னும், பிற என்ற மிகையாலே, கீழைக்குளம், கீழைச்சேரி, மேலைக்குளம், மேலைச்சேரி என ஐகாரம் பெறுதலும், வடக்கூர், வடக்குமலை, தெற்கூர், தெற்கு மலை என மேற்காட்டிய விகாரமின்றியும் வருதலும், சில திசையொடு திசை புணரும்போது தெற்கு வடக்கு, வடக்குத் தெற்கு, கிழக்கு மேற்கு, மேற்குக்கிழக்கு எனப் பொதுவிதி பெறுதலுங் கொள்க.

வடகிழக்கென்பது வடக்குங் கிழக்குமாயதோர் கோணம் என உம்மைத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை வடதிசையென்பது வடக்காகிய திசை எனப் பண்புத்தொகை, வடமலையென்பது வடக்கின் கண்மலை என ஏழாம் வேற்றுமைத்தொகை, தெற்குவடக்கென்பது தெற்கும் வடக்கும் என உம்மைத் தொகை.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.:–** **திசையொடு**–(குற்றியலுகர வீறாகிய) திக்கைக் குறிக்கும் பெயரோடு, **திசையும்**–திக்கைக் குறிக்கும் பெயரும், **பிறவும்** – வேறு பொருள்களைக் குறிக்கிற பெயர்களும், **சேரின்** – (வருமொழியாக) வந்து புணருமிடத்து, **நிலை ஈறு**–நிலைமொழி யிறுதியில் நின்ற, **உயிர்மெய்** – 'கு' என்னும் உயிர்மெய்யும், **க ஒற்று** – (அதன் அயலின் நின்ற,) ககர மெய்யும், **நீங்கலும்** – கெடுதலும், **றகரம்** –(ஈற்றயலில் நின்ற) றகர மெய், **ன ல ஆ திரிதலும்** – னகர மெய்யாகவும் லகர மெய்யாகவும் திரிதலும், **ஆம்** – ஆகும்; எ–று.

திசைப்பெயர் – திக்கைக் குறிக்கும் பெயர்.

ஏற்புழிக்கோடல் என்னும் உத்தியால், நிலையீற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்குதல்–கிழக்கு குணக்கு குடக்கு வடக்கு என்பவற்றிற்கும், றகரம் னகரமாகத் திரிதல் – தெற்கு என்பதற்கும், றகரம் லகரமாகத் திரிதல்– மேற்கு என்பதற்கும் எனக் கொள்க. (குணக்கு – கிழக்கு. குடக்கு–மேற்கு.)

'பிற' என்ற மிகையால், கிழக்கு என்பது ழகரத்தின் அகரம் கெட்டு முதல் நீண்டு வருதல் கொள்க.

**உ–ம்.:–**

வடக்கு + கிழக்கு = வடகிழக்கு, குடக்கு + திசை =

குடதிசை, குணக்கு + நாடு = குணநாடு உயிர்மெய்யும், ககர மெய்யும் கெட்டு வந்தன.

தெற்கு +மேற்கு = தென்மேற்கு, தெற்கு + யாறு தென்யாறு, மேற்கு + காற்று = மேல்காற்று, உயிர்மெய் கெட, றகரம் னகரமாயிற்று.

மேற்கு + ஊர் = மேலூர் உயிர்மெய் கெட, றகரம் லகரமாயிற்று.

கிழக்கு= காற்று–கீழ்காற்று, கிழக்கு+ நாடு = கீழ்நாடு உயிர்மெய்யும் ககர வொற்றும் அகரமும் கெட்டு முதல் நீண்டது.

இன்னும் 'பிற' என்றதனால், கீழைக்குளம், கீழைச்சேரி: மேலைக்குளம் மேலைச்சேரி என ஐகாரம் பெறுதலும்; வடக்கூர், வடக்குமலை, தெற்கூர் தெற்குமலை என மேற்காட்டிய விகாரமின்றியும் வருதலும்; திசையோடு திசை புணரும்போது தெற்குவடக்கு, வடக்குத்தெற்கு, கிழக்குமேற்கு, மேற்குக்கிழக்கு எனப் பொதுவிதி பெறுதலும் கொள்க. வடதிசைக் காற்றுக்கு வழங்குகிற வாடை யென்ற பெயரில் வடக்கு என்ற பகுதி முதல் நீண்டதும் இங்கேயே அமைக்கப்படும். 'கவ்வொற்று நீங்கலும்' என்றதன் குறிப்பால், வருமொழி முதல்வலி மிகாமை பெறப்படும்.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:– திசையொடு திசையும் பிறவும் சேரின்** – திசைப்பெயரோடு திசைப்பெயரும் பிற பெயர்களும் புணருமிடத்து, **நிலை ஈற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்** – நிலைமொழியீற்றிலே நின்ற உயிர் மெய்யும் அதன்மேனிற் ககர மெய்யுங் கெடுதலும், **றகரம் ன ல ஆத் திரிதலும்அம்** – அவ்விடத்து நின்ற றகரமெய் னகர மெய்யாகவும் லகர மெய்யாகவுந் திரிதலும்ஆகும். எ–று.

'பிற' என்ற மிகையினாலே, திசைப்யெரரோடு திசைப்பெயர் புணரும்போது நிலைமொழி பெருந்திசை வருமொழி கோணத்திசை எனவும், நிலைமொழியாய் நிற்பன வடக்குந் தெற்குமே எனவும், தெற்கென்பதன் றகரம்னகரமாகவும் மேற்கென்பதன் றகரம் லகரமாகவுந் திரியும்எனவும், மேற்கென்பதன் றகரந் தகரம்வரும் வழித் திரியாது எனவும், கிழகென்பதன் ழகரத்து அகரங்கெட்டு முதனீண்டே வரும் எனவுங் கொள்க.

**உ–ம்.:–**

வடக்கு – வடகிழக்கு, வடமேற்கு, வடதிசை, வடபால், வடமலை, வடவேங்கடம், தெற்கு – தென்கிழக்கு,

தென்மேற்கு, தென்குமரி, தென்மலை, தென்வீதி, மேற்கு – மேல்கடல், மேனாடு, மேல்வீதி, மேற்றிசை, குடக்கு – குடதிசை, குடகடல், குடநாடு. குணக்கு – குணதிசை, குணகடல். கிழக்கு – கீழ்கரை, கீழ்சார், கீழ்த்திசை.

இன்னும், பிற என்ற மிகையாலே, கிழக்கு + குளம் = கீழைக்குளம், கிழக்கு + சேரி = கீழைச்சேரி, மேற்கு + குளம் = மேலைக்குளம், மேற்கு + சேரி = மேலைச்சேரி என ஐகாரம் பெறுதலும்; வடக்கு + ஊர் = வடக்கூர், வடக்கு + மலை = வடக்குமலை; தெற்கு + ஊர் = தெற்கூர், தெற்கு + மலை = தெற்குமலை என மேற்காட்டிய விகாரமின்றியும் வருதலும்; பெருந்திசையோடு பெருந்திசை புணரும் போது தெற்குவடக்கு, வடக்குத்தெற்கு, கிழக்குமேற்கு, மேற்குக் கிழக்கு எனப் பொதுவிதி பெறுதலுங் கொள்க.

வடகிழக்கென்பது வடக்குங் கிழக்குமாயதோர் கோணம் என உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. வடதிசை யென்பது வடக்காகிய திசை எனப் பண்புத் தொகை. வடமலையென்பது வடக்கின் கண்மலை என ஏழாம் வேற்றுமைத்தொகை. தெற்கு வடக்கென்பது தெற்கும் வடக்கும் என உம்மைத்தொகை.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:–திசையொடு திசையும் – திசைச்சொல்லோடு திசைச் சொல்லும், பிறவும்–பிறசொல்லும், சேரின் – புணருமிடத்து, நிலை ஈறு உயிர்மெய் – நிலைமொழி யீற்றிலே நின்ற (கு என்னும்) உயிர்மெய்யும், க ஒற்று – (அதன் பின் நின்ற) ககரமெய்யும், நீங்கலும்–கெடுதலும், றகரம் – (அவ்விடத்து நின்ற) றகரமெய், ன ல ஆக – னகர மெய்யாகவும் லகர மெய்யாகவும், திரிதலும் – திரிதலும், ஆம் – ஆகும். எ–று.

பொ–ரை.:–

திசைச் சொல்லோடு திசைச் சொல்லும் பிற சொல்லும் புணருமிடத்து, நிலைமொழி யீற்றிலே நின்ற உயிர்மெய்யும் (அதன்பின் நின்ற) ககர மெய்யும் கெடுதலும், (அவ்விடத்து நின்ற) றகரமெய் னகர மெய்யாகவும் லகர மெய்யாகவும் திரிதலும் ஆகும்.

நிலையீற்றுயிர்மெய் கவ்வொற்று நீங்கல் – கிழக்கு குணக்கு குடக்கு வடக்கு என்பவற்றிற்கும், றகரம் னகரமாகத் திரிதல் தெற்கு என்பதற்கும், றகரம் லகரமாகத் திரிதல் மேற்கு என்பதற்கும் என அறிக.

உ–ம்.:–

வடக்கு + கிழக்கு = வடகிழக்கு.
+ மேற்கு = வடமேற்கு
+ திசை = வடதிசை.
+ மலை = வடமலை.
+ வேங்கடம் = வடவேங்கடம்.
குடக்கு + திசை = குடதிசை.
+ நாடு = குடநாடு.
குணக்கு + கடல் = குணகடல்.
+ திசை = குணதிசை.
+ பால் = குணபால்.
– உயிர்மெய்யும் ககர வொற்றும் கெட்டு வந்தன.
தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு.
+ மேற்கு = தென்மேற்கு.
+ மலை = தென்மலை.
+ வீதி = தென்வீதி.
– உயிர்மெய் கெட றகரம் னகரமாயிற்று.
மேற்கு + பால் = மேல்பால்.
+ நாடு = மேனாடு.
+ திசை = மேற்றிசை.
– உயிர்மெய் கெட றகரம் லகர மாயிற்று.

'பிற' என்றமையால், திசைப்பெயரோடு திசைப்பெயர் விகாரப்பட்டுப் புணரும்போது நிலைமொழியாய் நிற்பன வடக்கு தெற்கு என்னும் பெருந் திசைகளேயாம். கிழக்கு என்பது ழகரத்தின் அகரம் கெட்டு முதல் நீண்டு வரும்.

உ–ம்.:–

கிழக்கு + காற்று = கீழ்காற்று.
+ நாடு = கீழ்நாடு.
+ யாறு = கீழ்யாறு.
+ ஊர் = கீழூர்.
– ஈற்றுயிர் மெய்யும் ககர வொற்றும் அகரமும் கெட்டு முதல் நீண்டது.

இன்னும் 'பிற' என்ற மிகையால், கீழைக் குளம், மேலைச்

சேரி என ஐகாரம் பெறுதலும், வடக்கூர், தெற்கு மலை என விகாரமின்றி வரலும், தெற்கு வடக்கு, வடக்குத்தெற்கு, கிழக்கு மேற்கு, மேற்குக்கிழக்கு எனப் பொதுவிதி பெறுதலும் கொள்க.

## கா. நமச்சிவாய முதலியார்

(1) **திசையொடு** – திசைச் சொல்லோடு, **திசையும்** – திசைச்சொல்லும், **பிறவும்** – பிறசொல்லும், **சேரின்** – புணருமிடத்து, **நிலையீற்று** – நிலைமொழி யீற்றிலே நின்ற, **உயிர்மெய்** – உயிர்மெய்யும், **கவ்வொற்று** – அதன் பின்னின்ற ககர மெய்யும், **நீங்கலும்** – கெடுதலும் ;

(2) **றகரம்** – அவ்விடத்து நின்ற றகரமெய், **னல ஆ** – னகர மெய்யாகவும் லகர மெய்யாகவும், **திரிதலும்** – திரிதலும், **ஆம்** – ஆகும்.

**உதாரணம்.;–**

(1)வடக்கு + கிழக்கு – வடகிழக்கு
+ மேற்கு – வடமேற்கு

வடக்கு +திசை =வடதிசை
+மலை = வடமலை
+ வேங்கடம் = வடவேங்கடம்
– திசையொடு பிற வந்து உயிர்மெய்யுங் ககரமெய்யுங் கெட்டன.

குடக்கு + திசை =குடதிசை
குணக்கு + கடல் = குணகடல்
–இவையு மப்படியே.

(2) தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு
+ மேற்கு = தென்மேற்கு
+ மலை = தென்மலை – திசையொடு பிற
– என உயிர்மெய் கெட, றகரமெய் னகர மெய்யாயிற்று.

மேற்கு + காற்று = மேல்காற்று
– என உயிர்மெய் கெட, றகரமெய் லகரமெய்யாயிற்று.

'பிற' என்றதனால்,

மேற்கு + சேரி = மேல்சேரி, மேற்சேரி, மேலைச்சேரி ;

கிழக்கு + திசை = கீழ்திசை, கீழ்த்திசை, கீழைத்திசை

எனவும், கீழ்மேற் றென்வடல் என விகாரப்பட்டும்,
சிறுபான்மை கிழக்கு மேற்கு, தெற்கு வடக்கு, வடக்கூர்,
தெற்குமலை என இவ்விகாரங்களில்லாமலும் வரும்.

## மோசசு பொன்னையா

திசைப் பெயரோடு திசைப்பெயரும் பிறவும் புணருமிடத்து, நிலைமொழி ஈற்றில் நின்ற கு என்னும் உயிர்மெய்யும் அதன் முன்னர் நின்ற ககர ஒற்றும் கெடுதலும், அவ்விடத்தில் நின்ற றகரம் ஏற்ற பெற்றி லகர னகர மெய்யாகத் திரிதலும் ஆகும், எ–று.

எ–டு.:–

வடமேற்கு, வடதிசை, வடபால், வடமலை, வடவேங்கடம்; தென்கிழக்கு, தென்மேற்கு, தென்குமரி, தென்மலை, தென்வீதி; மேல்கடல், மேனாடு, மேல்வீதி, மேற்றிசை; குடதிசை, குடகடல், குடநாடு; குணதிசை, குணகடல்; பிற என்ற மிகையானே கிழக்கு என்பதின் ழகரத்தின் அகரங்கெட்டு முதல் நீண்டு கீழ்கரை, கீழ்திசை எனப் புணருவதையும்; ஐகாரச் சாரியை பெற்றுக் கீழைக்குளம், மேலைச்சேரி எனப் புணருவதையும்; தெற்கூர், வடக்குத் தெரு, கிழக்கு மேற்கு, மேற்குத் தெற்கு எனப் பொது விதி பெற்றுப் புணர்ந்து நிற்றலையுங் கொள்க. தொல்காப்பியர் திசைப்பெயர்ப் புணர்ச்சியைக் குறிக்கும்,

*'இருதிசை புணரின் ஏஇடை வருமே'*
*'திரிபு வேறு கிளப்பின் ஒற்றும் இறுதியும்*
*கெடுதல் வேண்டும் என்மனார் புலவர்*
*ஒற்றுமெய் திரிந்து னகார மாகும்*
*தெற்கொடு புணருங் காலை யான.'*

என்ற இரு நூற்பாக்களைஅமைத்துள்ளார். அவற்றால் அவர் காலத்தில் வடக்கே குணக்கு; தெற்கே குடக்கு என இடையே ஏகாரம் பெற்றுப் புணரும் மரபு இருந்ததாகத் தெரிகிறது. ஒற்று திரிந்து னகரம் ஆதலை மட்டும் தெற்குக்கு விதித்ததால், மேற்கு கிழக்கு என்னும் திசைப்பெயர்கள் அவர் காலத்தில் வழக்கில் இல்லை என்பதும்; குடக்கு குணக்கு என்பனவே அவ்விரு

---

பாட வேறுபாடு.:– 1. மொழியின்

திசைகளைக் குறித்து வழங்கின என்பதும் போதரும்.

(36)

**186. தெங்குநீண் டீற்றுயிர் மெய்கெடுங் காய்வரின்.**

**தெங்கு நீண்டு ஈற்று உயிர்மெய் கெடும் காய் வரின்**

ṭeṅku nīṇṭu īṟṟu uyirmey keṭum kāy varin

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Special rule for teṅku

When tenku combines with kay, **te** is lengthened and **ku** dropped.

## மயிலை நாதர்

இதுவுமது.

இ—ள்.: காயென்னு மொழி வரின், தெங்கென்னும் [1]மொழிமுதல் நீண்டு ஈற்றுயிர்மெய் கெடும், எ—று.

வ—று.:— தேங்காய் எனவரும்.

இவ்வாறு வழக்குண்மையின் இதுவும் எடுத்தோதினா ரென்க.

## சங்கர நமச்சிவாயர்

எ—னின், தெங்கு என்னும் பெயர்க்கு எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ—ள்.:— காய் என்னும் சொல் வருமாயின், தெங்கு என்னும் நிலைமொழி முதல் நீண்டு ஈற்று உயிர்மெய் கெடும், எ—று.

ஈறு கெடும் என்றமையான் முதல் நீளும் என்பது பெற்றாம்.

உ—ம்.:—

தேங்காய் என வரும்.

தெங்கு நீண்டு ஈற்று உயிர்மெய் கெட்டே புணரும் என இயல்பை விலக்காமையின், தெங்கங்காய் என வரும் முடிபும் கொள்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், தெங்கென்னும் சொல் காயென்னும் சொல்லொடு புணருமாறு கூறியது.

இ–ள்.:– தெங்கு நீண்டு – தெங்கென்னும் நிலைமொழியின் முதல் நீண்டு, ஈற்றுயிர்மெய் கெடும் – அச்சொல்லின் ஈற்றுயிர்மெய்யும் கெடும், காய் வரின் – வருமொழி காயென்னும் சொல் வந்தால் என்றவாறு.

உ–ம்.:–

தேங்காய் என வரும்.

## விசாகப் பெருமாளையர்

இது, தெங்கு என்னும் பெயர்க்கு எய்தாத தெய்துவிக்கின்றது.

இ–ள்.: காய்–காயென்னுஞ் சொல், வரின்–வந்தால், தெங்கு–தெங்கென்னு நிலைமொழி, நீண்டு–முதனீண்டு, ஈற்றுயிர்மெய்–ஈற்றிலுள்ள வுயிர்மெய், கெடும்–நீங்கும், எ–று.

உ–ம்.:–

தெங்கு–காய்–தேங்காய் என வரும். (கெட்டே வருமென்னாமையால் தெங்கங்காய் என வருவதுங் கொள்க.)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஒரோவழி முதனீண்டு ஈற்றுயிர்மெய்கெட்டுப் புணரும் மென்றொடர்க் குகற்றுகரமொழியு முளதெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

தெங்கு நீண் டீற்றுயிர் மெய்கெடுங் காய்வரின்.

(தெங்கு நீண்டு ஈற்று உயிர் மெய் கெடும் காய்வரின்.)

இ–ள்.:– காய்வரின் –காயென்னுஞ் சொல் வருமாயின், தெங்கு நீண்டு ஈற்று உயிர்மெய் கெடும் – தெங்கென்னு நிலைமொழி முதனீண்டு, ஈற்றிலுள்ள உயிர்மெய் நீங்கும், எ–று.

இதிற் கூறப்படும் விகாரமெத்தனை?

தெங்கு தேங்கு என முதல்நீளலும் ஈற்றுயிர் மெய்யாகிய கு கெடுதலும் ஆகிய விகாரங்கள் இரண்டு.

உ–ம்.:–

தெங்கு–காய்–தேங்காய், எனவரும். கெட்டே புணருமென்னாமையால், தெங்கங்காய் என வருவதுங் கொள்க.

## முகவை இராமானுச கவிராயர்

இது, எய்தாதது எய்துவிக்கின்றது.

இ—ள்.: காய் வரின் – காயென்னுஞ் சொல்வந்து புணருமாயின், தெங்கு நீண்டு – தெங்கென்னும் குற்றுகரமொழி முதல் நீண்டு, ஈற்றுயிர்மெய் கெடும் – இறுதியிலே நின்ற குகர வுயிர்மெய் கெட்டுப்போம், எ—று.

உ—ம்.:—

தேங்காய் என வரும். கெட்டே புணரு மென்னாத தினாலே, தெங்கங்காய் என வருதலுங் கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :— காய் வரின் – 'காய்' என்னுஞ் சொல் (வருமொழியாக) வந்தால், தெங்கு – 'தெங்கு' என்னும் நிலைமொழி, நீண்டு – (முதல்) நீண்டு, ஈறு உயிர்மெய் – ஈற்றிலுள்ள கு என்னுமுயிர்மெய், கெடும் – நீங்கும்.

உ—ம்.:—

தெங்கு + காய் = தேங்காய்.

குறிப்பு :— கெட்டேவரும் என்னாமையால் 'தெங்கங்காய்' என வருதலுங் கொள்க.

## ஆறுமுக நாவலர்

இ—ள்.:— காய்வரின் – காயென்னுஞ் சொல் வருமாயின், தெங்கு நீண்டு ஈற்று உயிர்மெய் கெடும் – தெங்கென்னு நிலைமொழி முதனீண்டு ஈற்றிலுள்ள உயிர்மெய் நீங்கும், எ – று.

உ—ம்.:—

தெங்கு+காய் = தேங்காய் என வரும். கெட்டே புணரு மென்னாமையால், தெங்கங்காய் என வருவதுங் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

இ—ள்.:— காய்வரின் – காயென்னுஞ் சொல்வருமாயின், – தெங்கு நீண்டு ஈற்று உயிர்மெய் கெடும், – தெங்கென்னு நிலைமொழி முதனீண்டு ஈற்றிலுள்ள உயிர்மெய் நீங்கும். எ—று.

உ—ம்.:—

தெங்கு + காய் = தேங்காய் எனவரும். கெட்டே புணருமென்னாமையால், தேங்கங்காய் என வருவதுங் கொள்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– காய் வரின் – காய் என்னுஞ் சொல் (வருமொழியாக) வந்தால், தெங்கு–தெங்கு என்னும் நிலைமொழி, நீண்டு– (முதல்) நீண்டு, ஈறு உயிர்மெய் கெடும் – ஈற்றிலுள்ள 'கு' என்னும் உயிர்மெய் நீங்கும்; எ–று.

உ–ம்.:–

தெங்கு+காய் = தேங்காய். இது, வேற்றுமைப்புணர்ச்சி.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– காய்வரின் – காயென்னுஞ் சொல் வருமாயின், தெங்கு நீண்டு ஈற்று உயிர்மெய் கெடும் – தெங்கென்னு நிலைமொழி முதனீண்டு ஈற்றிலுள்ள உயிர்மெய் நீங்கும். எ–று.

உ–ம்.:–

தெங்கு + காய் = தேங்காய். கெட்டே புணருமென்னாமையால், தெங்கங்காய் என வருவதுங் கொள்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:– காய் வரின் – காய் என்னுஞ் சொல் (வருமொழியாக) வந்தால், தெங்கு நீண்டு – தெங்கு என்னும் நிலைமொழி முதல் நீண்டு, ஈற்று உயிர்மெய் கெடும் – ஈற்றிலுள்ள உயிர்மெய் நீங்கும். எ–று.

பொ–ரை.:– காய் என்னுஞ் சொல் வந்தால் தெங்கு என்னும் நிலைமொழி முதல் நீண்டு ஈற்றிலுள்ள உயிர்மெய் நீங்கும்.

உ–ம்.:–

தெங்கு + காய் = தேங்காய்.

கெட்டே வரு மென்னாமையால், தெங்கங்காய் என அம் சாரியை பெற்று வருவதுங் கொள்க.

## கா.நமச்சிவாய முதலியார்

காய் – காயென்னுஞ் சொல், வரின் – வந்தால், தெங்கு – தெங்கென்னும் நிலைமொழி, நீண்டு – முதனீண்டு, ஈற்றுயிர் மெய் – ஈற்றிலுள்ள உயிர்மெய், கெடும் – நீங்கும்.

உதாரணம்:–

தெங்கு + காய் = தேங்காய் என வரும்.

கெட்டேவரு மென்னாமையால் தெங்கங்காய் என வருதலுங் கொள்க.

**மோசசு பொன்னையா**

காய் என்னும் வருமொழியின் முன்னர் நின்ற தெங்கு என்னும் சொல்லின் முதல் நீண்டு ஈற்று உயிர்மெய் கெடும், எ—று.

எ—டு.:-

தேங்காய்

தொல்காப்பியர் இதனைக் கூறவில்லை.

(37)

187. எண்ணிறை யளவும் பிறவு மெய்தின்
ஒன்று முதலெட் டீறா மெண்ணுள்
முதலீ ரெண்முத னீளு மூன்றா
றேழ்குறு கும்மா றேழல் லவற்றின்
ஈற்றுயிர் மெய்யு மேழ னுயிரும்
ஏகு மேற்புழி யென்மனார் புலவர்.

எண் நிறை அளவும் பிறவும் எய்தின்
ஒன்று முதல் எட்டு ஈறு ஆம் எண்ணுள்
முதல் ஈர் எண் முதல் நீளும் மூன்று ஆறு
ஏழ் குறுகும் ஆறு ஏழு அல்லவற்றின்
ஈற்று உயிர் மெய்யும் ஏழன் உயிரும்
ஏகும் ஏற்புழி என்மனார் புலவர்

eṇ niṟai aḷavum piṟavum eyṭiṉ
oṉṟu muṭal eṭṭu īṟu ām eṇṇuḷ
muṭal īr eṇ muṭal nīḷum mūṉṟu āṟu
ēḷ kuṟukum āṟu ēḷu allavaṟṟiṉ
īṟṟu uyir meyyum ēḷaṉ uyirum
ēkum ēṟpuḷi eṉmaṉār pulavar

**இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)**

**Nouns of number**

When the eight Numerals—from onru to ettu—combine with the other Numerals, with Names of weight and measure, and with other Nouns.—onru and irantu lengthen their initials,

while munru, aru and elu shorten them; the final vowel-consonant of all except aru and elu, and the final Vowel of the latter (elu) may be dropped —These changes, the learned say take place in (all) appropriate cases.

## ஒப்புமைப் பகுதி

அளந்தறி கிளவியும் நிறையென் கிளவியும்
கிளந்த இயல தோன்றுங் காலை.

(தொல்.: 446)

முதலீ ரெண்ணின்முன் உயிர்வரு காலைத்
தவலென மொழிப உகரக் கிளவி
முதனிலை நீடல் ஆவயி னான

(தொல்.: 455)

மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும்
மூன்ற னொற்றே பகார மாகும்

(தொல்.: 441)

அளவு நிறையும் எண்ணும் வருவழி
நெடுமுதல் குறுகலும் உகரம் வருதலும்
கடிநிலை யின்றே ஆசிரியர்க்க

(தொல்.: 390)

எண்ணிறை யளவும் பிறவு மெய்தி
னொன்று முதலெட் டீறா மெண்ணுண்
முதலீ ரெண்முத னீளுமூன் றாறு
குறுகு மாறல் லவற்றினீற் றுயிர்மெய்
யேகு மேற்புழி யென்மனார் புலவர்.

(இ.வி.: 106)

ஒன்று முதலெட் டீறா மெண்ணுள்
முதலீ ரெண்முத னீளுமூன் றாறேழ்
குறுகு மாறே ழல்ல வற்றின்
ஈற்றுயிர் மெய்யு மேழ னுயிரும்
ஏகு மேற்புழி யென்மனார் புலவர்.

(மு.வீ.: 421)

## மயிலை நாதர்

எ-ன், எண்பெயருடனே எண்ணாதிப்பெயர் புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்.: எண் நிறை அளவும் பிறவும் எய்தின் - இந் நால்வகைப்

பெயரும் வருமொழியாய் வரின், **ஒன்றுமுதல் எட்டீறாமெண்ணுள்** – ஒன்று முதலாக நின்ற எண்வகை யெண்களுள் வைத்துக் கொண்டு, **முதலீரெண் முதனீளும்**–முதற்கணின்ற [1]ஒன்றிரண்டென்னும் இவ்விரண்டின் முதலுயிரும் நீளும், எ–று.

வ–று.:–

[1]ஓரொன்று, [2]ஓரெடை, ஓருழக்கு, [3]ஓராண்டு; ஈரொன்று, [4]ஈரெடை, ஈருழக்கு, [5]ஈரிலைப்போந்து என வரும்.

மூன்று ஆறு ஏழ் குறுகும் என்பது இம் மூன்றெண்ணும் முதலுயிர் குறுகும், எ–று.

வ–று.:–

முப்பது, முக்கழஞ்சு, [6]முக்கலம், முப்பழம்; அறுபது, அறுகழஞ்சு, அறுகலம் அறுமீன்; எழுபது, எழுகழஞ்சு, எழுகலம், எழுபிறப்பு எனவரும்.

ஆறேழல்லவற்றின் ஈற்றுயிர் மெய்யும் ஏழனுயிரும் ஏகும் என்பது ஆறும் ஏழும் ஒழிந்த எண்களின் ஈற்றில் நின்ற உயிர்மெய்யும் ஏழன் ஈற்று உயிரும் கெடும், எ–று.

வ–று.:–

ஒன், இரண், மூன், நான், ஐந், ஏழ், எட் என வரும்.

ஏற்புழி என்பது இவ் விதிகள் யாண்டும் ஆகா; தமக்குப் பொருந்திய வழியே வருவனவாம், எ–று.

என்மனார் புலவர் என்பது என்று சொல்லுவர் அறிவுடையோர், எ – று.

இதனுள் 'எண்ணிறையளவும் பிறவுமெய்தின்' என்பதனை மேல்வரும் ஐந்து சூத்திரத்தோடு கூட்டியும், 'ஏற்புழி' என்பதனை இப்பொருண்மை அதிகாரம் முற்றுமளவு உய்த்தும் உரைக்க.

பாட வேறுபாடு.:–

1. ஒன்றும் இரண்டும் முதனீளும்
2. ஓரடை
3. ஓரியாண்டு
4. ஈரடை
5. ஈரிலைபோந்தன
6. முக்காலி

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், ஒன்று முதல் எட்டு ஈறாம் எண்ணுப் பெயர்க்கு, உயிர் வரின் எய்தியதன்மேல் சிறப்புவிதியும், மெய் வரின் எய்தாதது எய்துவித்தலும் நுதலிற்று.

இ–ள்.:– எண்ணுப்பெயரும் நிறைப்பெயரும் அளவுப் பெயரும் பிற பெயரும் வரின், நிலைமொழியாக நின்ற ஒன்று முதல் எட்டு ஈறாம் எண்களுள் முதற்கண்ணவாய ஒன்று இரண்டு என்னும் இரண்டு எண்ணும் முதல் நீளும்; மூன்றும் ஆறும் ஏழும் முதல் குறுகும்; ஆறும் ஏழும் அல்லாத ஆறு எண்களின் ஈற்று உயிர்மெய்யும் ஏழென்னும் எண்ணின் ஈற்று உயிரும் கெடும், ஏற்குமிடங்களில் என்று சொல்லுவர் புலவர், எ–று.

இச் சூத்திரத்துள் கூறிய விகாரமும், இப் புணர்ச்சி முற்ற முடித்தற்குப் பின் ஐந்து சூத்திரத்தால் கூறும் விகாரமும், உயிர் வரின் உகரம் மெய்விட்டு ஓடுதலையும் ஒழிந்த கணங்கள் வரின் தன்னியல்பின் நிற்றலையும் விலக்கிய அல்ல; இவ் விகாரம் மனைத்தும் ஒருங்கு வேண்டும் என்னும் நியதிய அல்ல; இவ் விகாரம் பண்புத்தொகைக்கே யுரிய என்பார் ஏற்புழி என்றும், ஏழ் என்பதனை உயிரீற்று மொழியாகக் கொள்வார் சிலர் ஒற்றீற்று மொழியாகக் கொள்வார் சிலர் யாம் ஒருதலை துணிந்தாம் என்பார் என்மனார் புலவர் என்றும், ஒற்றீறும் விலக்கப்படுவதன்று என்பார் உடம்பொடு புணர்த்தி ஒற்றீறாக ஏழ் குறுகும் என்றும் கூறினார்.

ஏழு என்பது, முற்றுகர ஈற்றதேனும், ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல் என்னும் உத்தியான் ஈண்டுக் கூறப்பட்டதென்க.

உ–ம்.:–

அறுபது, எழுபது: கழஞ்சு, நாழி, மீன் எனவும்; ஏழ்கடல் எனவும் வரும். ஏனையவற்றிற்கு உதாரணம் பின்னர்க் காட்டுதும். இரண்டாயிரம், ஏழாயிரம் என உயிர்வரின் குற்றுகரமும் முற்றுகரமும் கெட்டுப் புணர்ந்தன. இரண்டு கழஞ்சு, மூன்று படி, நான்கு பொருள், ஏழுகடல் எனத் தன்னியல்பினின்று புணர்ந்தன. பிறவும் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், எண்பெயருடனே எண்ணாதி நாற்பெயரும் புணருமாறு கூறியது.

**இ—ள்.:—** **எண்ணிறை யளவும் பிறவும்** — எண்ணுப்பெயரும் நிறைப் பெயரும் அளவுப்பெயரும் பிறபெயரும், **எய்தின்** — இந் நால்வகைப் பெயரும் வருமொழியாக வரில், **ஒன்று முதல் எட்டீறாம்** — ஒன்று முதலாக எட்டீறாக, **எண்ணுள்** — நின்ற எண் வகை எண்களுக்கு, **முதலீரெண்**—முதற்கணின்ற ஒன்றென்னும் எண்ணும் இரண்டென்னு மெண்ணும், **முதனீளும்** — இவ் விரண்டெண்ணும் முதலுயிர் நீளும், **மூன்றாறேழ் குறுகும்** — மூன்று ஆறு ஏழு என்னும் இம் மூன்றெண்ணும் முதலுயிர் குறுகும், **ஆறேழல்லவற்றின்** — ஆறும் ஏழும் ஒழிந்த எண்களினின்ற, **ஈற்றுயிர்மெய்யும்** — ஈற்றுயிர்மெய்யும் கெடும், **ஏழனுயிரும் ஏகும்** — ஏழென்னும் எண்ணின் ஈற்றினின்ற உயிரும் கெடும், **ஏற்புழி என்மனார் புலவர்** — ஏற்றுமிடத்தென்று சொல்லுவர் அறிவுடையோர், எ—று.

**உ—ம்.:—**

ஒரொன்று, ஓரிடை, ஒருழக்கு, ஓர்யாண்டு, ஈரொன்று, ஈரிடை, ஈருழக்கு, ஈரிலையென முதல் ஈரெண் முதல் நீண்டன. முப்பது, முக்கழஞ்சு, முக்கலம், முப்பழம் எனவும்; அறுபது, அறுகழஞ்சு, அறுகலம், அறுமீன் எனவும்; எழுபது, எழுகழஞ்சு, எழுகலம், எழுபிறப்பு எனவும் மூன்று, ஆறு, ஏழ் குறுகின. ஒன், இரண், மூன், நான், ஐந், எட், என ஆறேழ் அல்லவற்றின் ஈற்றுயிர்மெய் கெட்டன. ஏழ் என ஏழு என்னும் எண்ணின் ஈற்றுயிரும் ஏகிற்று.

இதனுள் "எண்ணிறை யளவும் பிறவும்" என்பதனை மேல் வரும் ஐந்து சூத்திரத்தோடும் கூட்டுக. "ஏற்புழி" என்பதனை இப் பொருண்மை அதிகாரம் முற்றும் எடுத்துக் கொள்க.

## விசாகப் பெருமாளையர்

இது, ஒன்றுமுத லெட்டீறா மெண்ணுப் பெயர்களுக்கு உயிர்வரின் எய்தியதன்மேற் சிறப்புவிதியும் மெய்வரின் எய்தாத தெய்து வித்தலுஞ் சொல்லுகின்றது.

**இ—ள்.:** **எண்**—எண்ணுப் பெயரும், **நிறை**—நிறைப் பெயரும், **அளவும்**—அளவுப் பெயரும், **பிறவும்**—பிற பெயர்களும், **எய்தின்**—வந்தால், **ஒன்று முதல்**—ஒன்று முதல், **எட்டீறாம்**—எட்டீறாகும், **எண்ணுள்**—எண்களுள், **முதலீரெண்**—முதலிலுள்ள இரண்டெண் களும், **முதனீளும்**—முதற் குறினீளும், **மூன்றாறேழ்**—மூன்றும் ஆறும் ஏழும், **முதல் குறுகும்**—முதனெடில் குறுகும், **ஆறேழல்லவற்றின்** — ஆறுமேழுமல்லாத ஆறெண்களினுடைய, **ஈற்றுயிர் மெய்யும்** — இறுதியிலுள்ள உயிர்மெய்களும்,

ஏழன்–ஏழனுடைய, (ஈற்)றுயிரும் –இறுதியிலுள்ள உயிரும், ஏகும்– கெடும், ஏற்புழி–ஏற்குமிடங்களில், என்மனார்–என்று சொல்லுவார், புலவர்–புலவர், எ–று.

இவ் விகாரம் பண்புத்தொகைக்கே யுரியவாகும். ஏழு என்பது முற்றியலுகர வீறாயினும் 'ஒன்றினமுடித்த றன்னினமுடித்தல்' என்பதனால் இங்கே சொல்லப்பட்டது.

உ–ம்.:

ஆறு+பத்து–அறுபது, ஆறு + கழஞ்சு – அறுகழஞ்சு,

ஆறு+நாழி–அறுநாழி, ஆறு + மீன்–அறுமீன்,

ஏழு+பத்து–எழுபது, ஏழு + கழஞ்சு–எழுகழஞ்சு,

நாழி+எழுநாழி, ஏழு + மீன்–எழுமீன்,

– ஆறும் ஏழும் குறுகின.

ஏழு+கடல்–ஏழ்கடல்,

– ஏழனீற்றுயிர் கெட்டது,

மற்றவைகளுக்கு உதாரணம் பின்னே காட்டப்படும். ஏற்புழி, என்றதனால் பொதுவிதியால் இரண்டாயிரம், ஏழாயிரம், இரண்டு கழஞ்சு, மூன்றுபடி, நான்குபொருள், ஏழுகடல் என நிற்பனவும் உண்டென்று கொள்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

குற்றுகரவீற்று எண்ணுப்பெயர் எண் முதலிய பெயரோடு புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

எண்ணிறை யளவும் பிறவு மெய்தின்
ஒன்று முதலெட் டீறா மெண்ணுண்
முதலீ ரெண்முத னீளு மூன்றா
றேழ்குறு கும்மா றேழல் லவற்றின்
ஈற்றுயிர் மெய்யு மேழ னுயிரும்
ஏகு மேற்புழி யென்மனார் புலவர்.

(எண் நிறை அளவும் பிறவும் எய்தின்
ஒன்று முதல் எட்டு ஈறு ஆம் எண்ணுள்
முதல் ஈரெண் முதல் நீளும் மூன்று
ஆறு ஏழ் குறுகும் ஆறு ஏழு அல்லவற்றின்
ஈற்று உயிர் மெய்யும் ஏழன் உயிரும்
ஏகும் ஏற்புழி என்மனார் புலவர்.)

**இ–ள்.:– எண் நிறை அளவும் பிறவும் எய்தின்** – எண்ணுப் பெயரும் நிறைப்பெயரும் அளவுப்பெயரும் பிறபெயர்களும் வரின், ஒன்று முதல் எட்டு

ஈறு ஆம் எண்ணுள் - நிலைமொழியாக நின்ற ஒன்று முதல் எட்டீறாகும் எண்களுள், முதல் ஈர் எண் முதல் நீளும் - முதலிலுள்ள இரண்டெண்களும் முதல் குறில் நீளும்; மூன்று ஆறு ஏழ் குறுகும் - மூன்றும் ஆறும் ஏழும் முதனெடில் குறுகும்; ஆறு ஏழு அல்லவற்றின் ஈற்று உயிர்மெய்யும் ஏழன் உயிரும் ஏகும் ஏற்புழி என்மனார் புலவர் - ஆறும் ஏழுமல்லாத ஆறெண்களினுடைய இறுதிலுள்ள உயிர்மெய்களும் ஏழனுடைய இறுதியிலுள்ள உயிருங் கெடும் ஏற்குமிடத்து என்று சொல்லுவர் புலவர், எ-று.

இச்சூத்திரத்துட் கூறிய விகாரமும், இப்புணர்ச்சி முற்ற முடித்தற்குப் பின் ஐந்து சூத்திரத்தாற் கூறும் விகாரமும், பண்புத்தொகைக்கே உரியனவாம்.

உ-ம்.:-

ஆறு-பத்து-அறுபது, அறு கழஞ்சு, அறுநாழி, அறுவட்டி என ஆறு நெடுமுதல குறுகி முடிந்தது. ஏழு - பத்து எழுபது எழுகழஞ்சு எழுநாழி, எழுவகை என ஏழு நெடுமுதல் குறுகி முடிந்தது. ஏழு கடல்- ஏழ்கடல் என ஏழனீற்றுயிர் கெட்டது. ஏழாயிரம் என உயிர்வருமிடத்து உகரங் கெடுதல் "முற்றுமற்றொரோவழி" என்பாதனாற் கொள்க.

மற்றவைகளுக்கு உதாரணம் பின்னே காட்டப்படும்.

இன்னும், ஏற்புழி என்றதனால், ஒன்றுமுத லெட்டீறா மெண்ணுள் இரண்டு முதலியன, இரண்டுகழஞ்சு, மூன்றுபடி, நான்கு பொருள், ஐந்துபூதம், ஆறுகணம், ஏழுகடல், எட்டுக்கோடி எனப் பொதுவிதியான் முடிதலும், "ஒன்று தேரினா னொருவன் கூற்றமே" எனச் சிறுபான்மை ஒன்றும் அங்ஙனமுடிதலுங் கொள்க.

எண்ணிறையளவும் பிறவுமெய்தின் என்பதனை மேல் ஐந்து சூத்திரத்தோடும், ஏற்புழி என்பதை இப்பொருண்மை யதிகாரம் முற்றுமளவும் உய்த்துரைத்துக் கொள்க.

இச்சூத்திரத்திலே நிலைமொழிக்குக் கூறப்படும் விகாரங்களெத்தனை?

முதனீளல், நெடுமுதல்குறுகல், ஈற்றுயிர் மெய்யும் உயிரும் கெடுதல் ஆகிய விவகாரங்கள் மூன்றுமாம்.

முதனீளும் எண்ணுப்பெயர்கள் எவை?

"எண்ணிறை யளவும் பிறவு மெய்தின் ஒன்றுமுதலெட்

டீறா மெண்ணுண் முதலீ ரெண்முதனீளும்"

நெடுமுதல் குறுகுவன எவை?

"மூன்றாறேழ் குறுகும்"

ஈற்றுயிர்மெய் கெடுவன எவை?

"ஆறேழல்லவற்றி னீற்றுயிர் மெய்...ஏகும்?"

ஈற்றுயிர் கெடுவது எது?

"ஏழனுயிரும் ஏகும்"

முதலிரண்டெண்ணும் முதனீள்வது எவ்விடத்து?

"முதனீள்வது உயிர்வரு வழியாம்"

உ–ம்.:–

ஓராடை, ஈராண்டு.

மூன்றும் ஆறும் ஏழும் முதல்குறுகுவது எவ்விடத்து?

மூன்றும் ஆறும் ஏழும் முதல் குறுகுவது மெய்வழு வழியாம்.

உ–ம்.:–

முக்கழஞ்சு, அறுகால், எழுகடல், மும்மலை.

ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து எட்டு இவை ஈற்றுயிர்மெய் கெடப் பெறுவது எவ்விடத்து?

ஈற்றுயிர்மெய் கெடுவது நாற்கணமும் வருவழியாம்.

உ–ம்.:–

மேல்வருஞ் சூத்திரவுரைகளிற் காண்க.

ஏழு ஈற்றுயிர் கெடுவது எவ்விடத்து?

முதல் குறுகாத வழியாம்.

உ–ம்.:–

ஏழ்கடல்.

இச்சூத்திரத்தில் குற்றியலுகரவீற்றுச் சொற்களேயன்றி வேறு ஈற்றுச் சொல்லும் கூறப்பட்டுள்ளதோ?

ஏழு என்பது, முற்றியலுகரவீறாயினும், ஒன்றின முடித்தறன்னின முடித்தலென்னும் உத்தியால் அஃது இங்கே சொல்லப்பட்டது,

பின்னே ஒன்றுமுதல் எட்டீறாகத் தனித்தனி எடுத்து விகாரங் கூறலின்

இச்சூத்திரத்தின் பயன் யாதாமோ?

> இச்சூத்திரம் அவ்வெட்டினுக்கும் பொதுவிகாரங் கூறுகின்றது. மேல்வரும் ஐந்து சூத்திரங்களும் சிறப்புவிகாரங் கூறுவன.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** ஒன்று முதலெட்டீற்று எண்ணுப் பெயர்களுக்கு உயிர் வரின் எய்தியதன் மேற் சிறப்புவிதியும், மெய்வரின், எய்தாதது எய்துவித்தலு முணர்த்திற்று.

**இ-ள்.:- எண்ணிறையளவும் பிறவு மெய்தின்** - எண் ணலளவுப் பெயரும் நிறுத்தலளவுப் பெயரும் முகத்தலளவுப்பெயரும் பிற பெயர்களும் வருமொழியாக வந்து புணருமாயின், **ஒன்று முதலெட்டீறா மெண்ணுள்**- ஒன்று முதலாக எட்டிறுதியாகக்கிடந்த எண்ணுப் பெயர்களுள், **முதலீரெண் முதனீளும்**-முதலிலே நின்ற ஒன்று இரண்டு என்னு மிரண் டெண்களும் முதல் நீண்டு முடியும், **மூன்றா றேழ் குறுகும்**-இம் மூன்று பெயர்களும் முதல் நின்ற நெட்டெழுத்துக்கள் குறுகப்பெறும், **ஆறேழல்லவற்றின்** - ஆறுமேழுமல்லாத எண்ணுப் பெயர்களுடைய, **ஈற்றுயிர்மெய்யு மேழனுயிரும்** - இறுதியிலே நின்ற உயிர்மெய்களும் ஏழென்பதின் இறுதி யுயிரும், **ஏகுமேற்புழி என்மனார் புலவர்**-ஏற்குமிடங்களிலே கெடு மென்று சொல்லுவர் புலவர், எ-று.

> இச் சூத்திரத்துட் கூறிய விகாரமும் இப் புணர்ச்சி முற்ற முடித்தற்குப் பின் ஐந்து சூத்திரத்தாற் கூறும் விகாரமும் உயிர் வரினுகர மெய்விட்டோடுதலையும் மற்றக் கணங்கள் வரின் தன்னியல் பினிற்றலையும் விலக்கினவல்ல. இவ் விகாரமெல்லா முழுவதும் வேண்டுமென்னும் நியதிய வல்ல, பண்புத்தொகைக்கே யுரிய வென்று சொல்ல வந்தவர் ஏற்புழி யென்றார். ஏழென்பதை உயிரீறாகவும் ஒற்றீறாகவுங் கொள்வர். இவர் முற்றுகர ஈறாகக் கொண்டு **ஒன்றின் முடித்தறன்னின் முடித்த** லென்பதனால், குற்றுகரங்களோடு கூட்டிக் கூறினார்.

**உ-ம்.:-**

ஓராயிரம் ஈராயிரம் முப்பது அறுபது எழுபது எனவும்;
ஓர்கழஞ்சு, ஈர்கழஞ்சு, முக்கழஞ்சு, அறுகழஞ்சு, எழுகழஞ்சு,

எனவும்; ஓர்கலம், ஈர்கலம், முக்கலம், அறுகலம், எழுகலம், எனவும்; ஓர்மரம், ஈர்மரம், மும்மீன், அறுமீன், எழுமீன், எனவும், முறையே முதலிரெண் முதனீண்டதும், மூன்று ஆறு ஏழ் குறுகினதுங் காண்க. ஏழ்கடல் என ஏழனுயிர் கெட்டது. ஆறேழல்லவற்றின் ஈற்றுயிர் போதலுக்கும் பிறவற்றிற்கும் உதாரணம் வருஞ் சூத்திரங்களுட் காண்க. இரண்டாயிரம் ஏழாயிரம் என உயிர் வரக் குற்றுகரமும் முற்றுகரமுங் கெட்டுப் புணர்ந்தன. இரண்டுகழஞ்சு மூன்றுபடி நான்குபொருள் ஏழுகடல் எனத் தன்னியல்பினின்று புணர்ந்தன; பிறவுமன்ன.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :–** **எண்** – எண்ணலளவுப் பெயரும், **நிறை** – நிறுத்தலளவுப் பெயரும், **அளவும்** – மற்றை முகத்தலளவு நீட்டலளவுப் பெயர்களும், **பிறவும்** – பிற பெயர்களும், **எய்தின்** – (வருமொழியாக) வந்தால், **ஒன்று முதல் எட்டு ஈறாம் எண்ணுள்** – (நிலைமொழியாக நின்ற) ஒன்று முதல் எட்டீறாகிய எண்களுள், **முதல் ஈர் எண்** – முதலிலுள்ள (ஒன்று இரண்டு என்னும்) இரண்டெண்களும், **முதல் நீளும்** – முதலில் உள்ள குறில் நீளும்; **மூன்று ஆறு ஏழ்** – மூன்றும் ஆறும் ஏழும், **குறுகும்** – (முதலில் உள்ள நெடில்) குறுகும்; **ஆறு ஏழு அல்லவற்றின்** – ஆறும் ஏழும் அல்லாத (ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து எட்டு என்னும்) ஆறெண்களினுடைய, **ஈறு உயிர் மெய்** – இறுதியிலுள்ள உயிர்மெய்களும், **எழன்** – ஏழு என்பதனுடைய, **உயிரும்** – (இறுதியிலுள்ள) உகர உயிரும், **ஏகும்** – கெடும்; ஏற்புழி ஏற்குமிடங்களில், **என்மனார் புலவர்** – என்று சொல்லுவர் அறிவுடையோர்.

குறிப்பு :–

'ஏற்புழி' என்றதனால் இச்சூத்திரத்துக் கூறிய விகாரமும், வரும் ஐந்து சூத்திரங்களிற் கூறும் விகாரங்களும் பெரும்பான்மை பண்புத் தொகைக்கு என அறிக. 'ஏற்புழி' என்பதை மேல்வரும் நான்கு சூத்திரங்களிலுங் கூட்டிக் கொள்க. 'ஏழு' என்பது முற்றியலுகர வீறாயினும் ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல் என்னும் உத்தியால் குற்றிய லுகரங்களோடு சேர்த்துக் கூறினார்.

உதாரணம் :–

ஆறு+ பத்து = அறுபது.

ஏழு+பத்து=எழுபது

ஆறு + கழஞ்சு = அறுகழஞ்சு

ஏழு+ கழஞ்சு = எழுகழஞ்சு

ஆறு+ நாழிகை = அறுநாழிகை.

ஏழு+நாழிகை=எழுநாழிகை

ஆறு+ சாண் = அறுசாண்

ஏழு+ சாண் = எழுசாண்

ஆறு+ வட்டி = அறுவட்டி

ஏழு+ வள்ளல் = எழுவள்ளல்

ஏழு + கடல் = ஏழ்கடல்

ஏழன்

ஈற்றுயிர் கெட்டது.

மற்றவைகளுக்கு உதாரணம் பின்னே அந்தந்த எண்களின் சிறப்புச் சூத்திரங்களிற் காட்டப்படும்.

இன்னும், 'ஏற்புழி' என்றதனால் ஒன்று முதல் எட்டீறா மெண்ணுள் இரண்டு முதலியன – 'இரண்டு கழஞ்சு', 'மூன்று படி', 'நான்கு பொருள்', 'ஐந்து பூதம்', 'ஆறு குணம்' 'ஏழு கடல்', 'எட்டுக் கோடி' எனப் பொதுவிதியால் முடிதலும்; 'ஒன்று தேரினான்', 'ஒன்றிரண்டு' எனச் சிறுபான்மை ஒன்றும் அங்ஙனம் முடிதலுங் கொள்க.

ஆசிரியர் தொல்காப்பியர் மெய்யீறாகக் கொண்ட 'ஏழ்' என்பதனை, 'ஏழு' என இவ்வாசிரியர் உயிரீறாகக் கொண்டது முதனூலினும் தமது வழிநூலில் விகற்பந் தோன்றற்கென்க.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– எண் நிறை அளவும் பிறவும் எய்தின் – எண்ணுப் பெயரும் நிறைப் பெயரும் அளவுப் பெயரும் பிற பெயர்களும் வரின், ஒன்று முதல் எட்டு ஈறு ஆம் எண்ணுள் – நிலைமொழியாக நின்ற ஒன்று முதல் எட்டீறாகும் எண்களுள், முதல் ஈரெண் முதல் நீளும் – முதலிலுள்ள இரண்டெண்களும் முதற் குறினீளும், மூன்று ஆறு ஏழ் (முதல்) குறுகும் – மூன்றும் ஆறும் ஏழும் முதனெடில் குறுகும், ஆறு ஏழு அல்லவற்றின் ஈற்று உயிர்மெய்யும் ஏழன் (ஈற்று) உயிரும் ஏகும் – ஆறும் ஏழுமல்லாத ஆறெண்களினுடைய இறுதியிலுள்ள உயிர்மெய்களும் ஏழனுடைய இறுதியிலுள்ள உயிருங் கெடும், ஏற்புழி என்மனார் புலவர் – ஏற்குமிடங்களில் என்று சொல்லுவர் புலவர், எ – று.

இச் சூத்திரத்துட் கூறிய விகாரமும், இப் புணர்ச்சி முற்ற முடித்தற்குப் பின் ஐந்து சூத்திரத்தாற் கூறும் விகாரமும், பண்புத்தொகைக்கே உரியனவாம்.

ஏற்புழி என்றதனால், முதலிரண்டெண்ணும் முதனீள்வது உயிர் வருவழி எனவும், மெய் வருவழி நீளா எனவும், மூன்றும் ஆறும் ஏழும் முதல் குறுகுவது மெய் வருவழி எனவும், உயிர் வருவழிக் குறுகா எனவும், ஆறும் ஏழும் அல்லாதவைகளின் ஈற்றுயிர் மெய்கெடுவது நாற்கணமும் வருவழி எனவும், ஏழு என்பதன் ஈற்றுயிர் கெடுவது முதல் குறுகாவழி எனவுங் கொள்க. ஏற்புழி என்பதை இப் பொருண்மை யதிகாரம் முற்றுமளவும் உய்த்துரைத்துக் கொள்க.

ஏழு என்பது, முற்றியலுகர வீறாயினும், ஒன்றின முடித்தறன்னின முடித்த லென்னும் உத்தியால் இங்கே சொல்லப்பட்டது.

உ–ம்.:–

ஆறு+பத்து = அறுபது, அறுகழஞ்சு, அறுநாழி, அறுவட்டி என ஆறு நெடு முதல் குறுகி முடிந்தது.

ஏழு+பத்து= எழுபது, எழுகழஞ்சு, எழுநாழி, எழுவகை என ஏழு நெடுமுதல் குறுகி முடிந்தது. ஏழு+கடல்= ஏழ்கடல் என ஏழனீற்றுயிர் கெட்டது. ஏழாயிரம் என உயிர் வருமிடத்து உகரங் கெடுதல் 'முற்றுமற்றொரோவழி' என்பதனாற் கொள்க.

மற்றவைகளுக்கு உதாரணம் பின்னே காட்டப்படும்.

இன்னும், 'ஏற்புழி' என்றதனால், ஒன்று முதலெட்டீறா மெண்ணுள், இரண்டு முதலியன, இரண்டுகழஞ்சு, மூன்றுபடி, நான்குபொருள், ஐந்துபூதம், ஆறுகுணம், ஏழுகடல், எட்டுக்கோடி எனப் பொதுவிதியான் முடிதலும், "ஒன்று தேரினானொருவன் கூற்றமே" எனச் சிறுபான்மை ஒன்றும் அங்ஙன முடிதலுங் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– எண் நிறை அளவும் பிறவும் எய்தின் – எண்ணுப்பெயரும் நிறைப்பெயரும் அளவுப் பெயரும் பிறபெயர்களும் வரின், – ஒன்றுமுதல் எட்டு ஈறு ஆம் எண்ணுள் – நிலைமொழியாக நின்ற ஒன்று முதல் எட்டீறாகும், எண்ளுள், முதல் ஈரெண் முதல் நீளும் – முதலிலுள்ள இரண்டெண்களும் முதற்குறினீளும், – மூன்று ஆறு ஏழ் (முதல்) குறுகும், – மூன்றும் ஆறும் ஏழும் முதனெடில் குறுகும், – ஆறு ஏழு அல்லவற்றின் ஈற்று உயிர்மெய்யும் ஏழன் (ஈற்று) உயிரும் ஏகும், – ஆறாம் ஏழுமல்லாத ஆறெண்களினுடைய இறுதியிலுள்ள உயிர்மெய்களும் ஏழனுடைய இறுதி

யிலுள்ள உயிருங் – கெடும். – ஏற்புழி என்மனார் புலவர் – ஏற்குமிடங்களில் என்று சொல்லுவர் புலவர். எ—று.

இச்சூத்திரத்துட் கூறிய விகாரமும், இப்புணர்ச்சி முற்ற முடித்தற் குப்பின் ஐந்து சூத்திரத்தாற் கூறும் விகாரமும், பண்புத்தொகைக்கே உரியனவாம்.

ஏற்புழி என்றதனால், முதலிரண்டெண்ணும் முதனீள்வது உயிர் வரு வழி எனவும், மெய்வருவழி நீளா எனவும், மூன்றும் ஆறும் ஏழும் முதல்குறுகுவது மெய்வருவழி எனவும், உயிர்வருவழிச் குறுகா எனவும், ஆறும் எழும் அல்லாதவைகளின் ஈற்றுயிர்மெய்கெடுவது நாற்கணமும் வருவழியெனவும், ஏழு என்பதன் ஈற்றுயிர் கெடுவது முதல்குறுகாவழி எனவுங் கொள்க. ஏற்புழி என்பதை இப்பொருண்மை யதிகாரம் முற்றுமளவும் உய்த்துரைத்துக் கொள்க.

ஏழு என்பது, முற்றியலுகரவீறாயினும், ஒன்றினமுடித்த றன்னின முடித்தலென்னும் உத்தியால் இங்கே சொல்லப் பட்டது.

உ—ம்.:–

ஆறு + பத்து = அறுபது, அறுகழஞ்சு, அறுநாழி, அறுவட்டி என ஆறுநெடு முதல் குறுகிமுடிந்தது.

ஏழு+பத்து = எழுபது, எழுகழஞ்சு, எழுநாழி, எழுவகை என ஏழு நெடுமுதல் குறுகி முடிந்தது. ஏழு+கடல்=ஏழ்கடல் என ஏழனீற்றுயிர் கெட்டது. ஏழாயிரம் என உயிர்வருமிடத்து உகரங்கெடுதல் 'முற்றுமற்றொரோவழி' என்பதனாற் கொள்க.

மற்றவகைளுக்கு உதாரணம் பின்னே காட்டப்படும்.

இன்னும் ஏற்புழி என்றதினால், ஒன்று முதலெட்டீறாமெண்ணுள், இரண்டு முதலியன இரண்டு கழஞ்சு, மூன்றுபடி, நான்குபொருள், ஐந்துபூசம், ஆறுகுணம், ஏழுகடல், எட்டுக்கோடி எனப் பொதுவிதியான் முடிதலும், 'ஒன்றுதேரினானொருவன் கூற்றமே' எனச் சிறுபான்மை ஒன்றும் அங்ஙன முடிதலுங் கொள்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.:–எண்–எண்ணலளவுப் பெயரும், நிறை–நிறுத்தலளவுப் பெயரும், அளவும்–மற்றை முகத்தலளவு நீட்டலளவுப் பெயர்களும், பிறவும்–

பிற பெயர்களும், எய்தின்–(வருமொழியாக) வந்தால், **ஒன்று முதல் எட்டு ஈறு ஆம் எண்ணுள்** – (நிலைமொழியாக நின்ற) ஒன்று முதல் எட்டு ஈறாகிய எண்களுள், **முதல் ஈர் எண்** – முதலிலுள்ள (ஒன்று இரண்டு என்னும்) இரண்டெண்களும், **முதல் நீளும்**–முதற்குறில் நீளும்; **மூன்று ஆறு ஏழு** – மூன்றும் ஆறும் ஏழும், **குறுகும்** – (முதல்நெடில்) குறுகும்; **ஆறு ஏழு அல்லவற்றின்** – ஆறும் ஏழும் அல்லாத (ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து எட்டு என்னும்) ஆறு எண்களினுடைய, **ஈறு உயிர்மெய்யும்** – இறுதியிலுள்ள உயிர்மெய்களும், **ஏழன்** – ஏழு என்பதனுடைய, **உயிரும்**–(இறுதியிலுள்ள) உகர உயிரும், **ஏகும்** – கெடும்; **ஏற்பு உழி** – ஏற்கும் இடங்களில், **என்மனார் புலவர்** – என்று சொல்வர் அறிவுடையோர்; எ–று.

இச் சூத்திரத்துக் கூறிய விகாரமும், இப் புணர்ச்சியை முற்ற முடித்தற்காக அடுத்த ஐந்து சூத்திரங்களிற் கூறும் விகாரங்களும் பெரும்பாலும் பண்புத்தொகைக்கே உரியனவாமென்பார், 'ஏற்புழி' என்றார். இன்னும் அதனால், ஏழு என்பது முதல் குறுகுமிடத்து உகரம் கெடா தென்றும், உகரம் கெடுமிடத்து முதல்குறுகா தென்றும் கொள்க.

'ஏற்புழி' என்பதை, மேல்வரும் நான்கு சூத்திரங்களிலும் கூட்டுக.

ஏழு என்பது முற்றியலுகர வீறாயினும், 'ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல்' என்னும் உத்தியால், குற்றியலுகரங்களோடு சேர்த்துக் கூறினார்.

**உ–ம்.:–**

ஆறு +பத்து = அறுபது, ஏழு+பத்து = எழுபது

ஆறு +கழஞ்சு = அறுகழஞ்சு, ஏழு+கழஞ்சு = எழுகழஞ்சு

ஆறு + நாழி = அறுநாழி, ஏழு+நாளி = எழுநாழி

ஆறு + சாண் = அறுசாண், ஏழு+சாண் = எழுசாண்

ஆறு + வகை = அறுவகை, ஏழு+வகை = எழுவகை

ஆறும் ஏழும் முதல் குறுகின.

ஏழு + கடல் = ஏழ்கடல் – ஏழன் ஈற்றுயிர் கெட்டது.

மற்றவற்றிற்கு உதாரணம், பின்னே அந்தந்த எண்களின் சிறப்புச் சூத்திரங்களிற் காட்டப்படும்.

இன்னும் 'ஏற்புழி' என்றதனால், ஒன்று முதல் எட்டீறாம் எண்களுள் இரண்டு முதலியன இரண்டு கழஞ்சு, மூன்று படி, நான்கு பொருள், ஐந்து படை, ஆறு குணம், ஏழு கடல், எட்டுக் கோடி எனப் பொதுவிதியால் முடிதலும்; "ஒன்றுதேரினான்", "ஒன்றிரண்டு" எனச் சிறுபான்மை

ஒன்றும் அங்ஙனம் முடிதலும் கொள்க.

'ஏழ் குறுகும்மாறு' என்று பாடமோதுவாரு முளர்.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– **எண் நிறை அளவும் பிறவும் எய்தின்** – எண்ணுப்பெயரும் நிறைப்பெயரும் அளவுப் பெயரும் பிறபெயர்களும்வரின், **ஒன்று முதல் எட்டீறு ஆம் எண்ணுள்** – நிலைமொழியாக னிற் ஒள்று முதல் எட்டீறாகும் எண்களுள், **முதல் ஈரெண் முதல் நீளும்** – முதலிலுள்ள இரண்டெண்களும் முதற் குறினீளும்; **மூனறு ஆறு ஏழ் (முதல்) குறுகும்** – மூன்றும்ஆறும் ஏழும் முதனெடில்குறுகும்; **ஆறு ஏழு அல்லவற்றின் ஈற்று உயிர்மெய்யும ஏழன் (ஈற்று) உயிரும் ஏகும்** – ஆறும் ஏழுமல்லாத ஆறெண்களினுடைய இறுதி யிலுள்ள உயிர்மெயகளும் ஏழனுடைய இறுதியிலுள்ள உயிருங் கெடும், **ஏற்புழி என்மனார் புலவர்** – ஏற்குமிடங்களில் என்று சொல்லுவர் புலவர். எ–று.

இச்சூத்திரத்துட் கூறிய விகாரமும், இப்புணர்ச்சி முற்ற முடித்தற்குப் பின் ஐந்துசூத்திரத்தாற் கூறும் விகாரமும், பண்புத்தொகைக்கே உரியனவாம்.

'ஏற்புழி' என்றதனால் முதலிரண்டெண்ணும் முதனீள்வது உயிர் வருவழி எனவும், மெய் வருவழி நீளா எனவும்; மூன்றும் ஆறும் ஏழும் முதல் குறுகுவது மெய் வருவழி எனவும், உயிர்வருவழிக் குறுகா எனவும்; ஆறும் ஏபம் அல்லாதவைகளின் ஈற்றுயிர் மெய் கெடுவதுநாற்கணமும் வருவழி எனவும், ஏப என்பதன் ஈற்றுயிர் கெடுவது நாற்கணமும் வருவழி எனவும், ஏழு என்பதன் ஈற்றுயிர் கெடுவது முதல் குறுகாவழி எனவுங் கொள்க. 'ஏற்புழி' என்பதை இப்பொருண்மையதிகாரம் முறறுமளவும் உய்த்துரைத்துக் கொள்க.

'ஏழு' என்பது முற்றியலுகர வீறாயினும், ஒன்றின 'முடித்தறன் னினமுடித்த' லென்னும் உள்த்தியால் இங்கே சொல்லப்பட்டது.

உ–ம்.:–

ஆறு + பத்து= அறுபது. அறுகழஞ்சு, அறுநாழி, அறுவட்டி – என ஆறு நெடுமுதல் குறுகி முடிந்தது.

ஏழு + பத்து = எழுபது, எழுகழஞ்சு, எழுநாழி, எழுவகை என ஏழு நெடுமுதல் குறுகி முடிந்தது. ஏழு + கடல் = ஏழ்கடல் என ஏழனீற்றுயிர் கெட்டது. ஏழு + ஆயிரம் = ஏழாயிரம் என உயிர்வருமித்து உகரங்கெடுதல் "முற்றுமற்றொரோவழி"

(சூ–164) என்பதனாற் கொள்க.

மற்றவைகளுக்கு உதாரணம் பின்னே காட்டப்படும்.

இன்னும், 'ஏற்புழி' என்றதனால், ஒன்று முதலெட்டிறாமெண்ணுள், இரண்டு முதலியன, இரணஸடகழஞ்சு, மூன்றுபடி, நான்கு பொருள், ஐந்துபூதம், ஆறுகணும், ஏழுகடல், எட்டுக்கோடி எனப் பொதுவிதியான் முடிதலும், "ஒன்று தேரினான் ஒருவன் கூற்றமே" எனச் சிறுபான்மை ஒன்றும் அங்ஙன முடிதலுங் கொள்க.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) எண் – எண்ணுப்பெயரும், நிறை – நிறைப்பெயரும், அளவும் – அளவுப்பெயரும், பிறவும் – பிறபெயர்களும், எய்தின் – வந்தால், ஒன்று முதல் எட்டீறாம் – ஒன்று முதல் எட்டு ஈறாக வரும், எண்ணுள் – எண்களுள், முதலீரெண் – முதலிலுள்ள இரண்டெண்களும், முதல்நீளும் – முதற்குறில் நீளும் ;

(2) மூன்றாறேழ் – மூன்றும் ஆறும் ஏழும், (முதல்) குறுகும் – முதனெடில் குறுகும் ;

(3) ஆறேழல்லவற்றின் – ஆறுமேழு மல்லாத ஆறெண்களினுடைய, ஈற்றுயிர் மெய்யும் – இறுதியிலுள்ள உயிர் மெய்களும்,

(4) ஏழன் – ஏழனுடைய, (ஈற்) றுயிரும் – இறுதியிலுள்ள உயிரும், ஏகும் – கெடும், ஏற்புழி – ஏற்குமிடங்களில், என்மனார் புலவர் – என்று சொல்லுவார் புலவர்.

> இவ்விகாரங்கள் பண்புத்தொகைக்கே யுரியவாகும். ஏழு என்பது முற்றியலுகர வீறாயினும் 'ஒன்றினமுடித்த றன்னின முடித்தல்' என்பதனால் இங்கே சொல்லப்பட்டது.

உதாரணம்.:–

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (2) | ஆறு | + | பத்து | = | அறுபது | – எண் |
| | ஆறு | + | கழஞ்சு | = | அறுகழஞ்சு | – நிறை |
| | ஆறு | + | நாழி | = | அறுநாழி | – அளவு |
| | ஆறு | + | மீன் | = | அறுமீன் | – பிறபெயர் |
| | ஏழு | + | பத்து | = | எழுபது | – எண் |
| | ஏழு | + | கழஞ்சு | = | எழுகழஞ்சு | – நிறை |
| | ஏழு | + | நாழி | = | ஏழுநாழி | – அளவு |
| | ஏழு | + | மீன் | = | ஏழுமீன் | – பிறபெயர். |

– என ஆறும் ஏழும் குறுகின.

(4) ஏழு + கடல் = ஏழ்கடல், என ஏழனீற்றுயிர் கெட்டது.

மற்றவைகளுக்கு உதாரணம் அவ்வச்சிறப்புச் சூத்திரங்களில் காட்டப்படும்.

'ஏற்புழி' என்றதனால் பொதுவிதிப்படி இரண்டாயிரம், ஏழாயிரம், இரண்டு கழஞ்சு, மூன்றுபடி, நான்குபொருள், ஏழுகடல் என நிற்பனவும் உண்டென்று கொள்க.

## மோசகு பொன்னையா

எண், நிறை, அளவுப் பெயர்களும் பிற பெயர்களும் வர, நிலைமொழியாக நின்ற ஒன்றுமுதல் எட்டு ஈறாக உள்ள எண்களுள் முதல் இரண்டின் முதல் குறில் நீளும்; மூன்று, ஆறு, ஏழு என்பவற்றின் முதல் நெடில் குறுகும்; ஆறும் ஏழும் அல்லாதவற்றின் ஈற்று உயிர்மெய் கெடும்; ஏழன் உயிர் ஏற்புழிக் கெடும் என்பர் புலவர், எ–று.

ஏழ் என ஒற்றீற்று எண்ணுப் பெயராகவும் ஏழு வழங்கும் என்றற்கும்; தொல்காப்பியர் அதனை 'ஏழ்' என்றே கொண்டு புணர்ச்சி விதி கூறியுள்ளார் என்பதை அறிவித்தற்கும், ஏழ் குறுகும் என உடம்பொடு புணர்த்திக் கூறினார். ஏழு என்பது முற்றியலுகர வீற்று எண்ணுப் பெயரெனினும், ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல் என்னும் உத்தியால் குற்றுகரவீற்று.எண்ணுப் பெயர்களுடன் ஒருங்கே வைத்துப் புணர்ச்சி இலக்கணங் கூறினார். ஏற்புழி என்றதனால் ஏழு என்பதன் ஈற்றுயிர் கெடுவது முதல் குறுகாதவிடத்தே எனக் கொள்க.

அதனாலே, எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி முற்ற முடித்துக் காட்டப்படும் ஒன்றன்று; வழக்கு நோக்கியே ஏற்ற பெற்றி அமைத்துக்கொள்ளப்படும் என்றார் எனவுங் கொள்க. இன்னும் அதனாலே எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி முடிவுகள் அனைத்தும் பண்புத் தொகைக்கே எனவுங் கொள்க.

எ–டு.:–

அறுபது; அறுகழஞ்சு; அறுநாழி; அறுவகை – ஆறு நெடுமுதல் குறுகிற்று.

எழுபது; எழுகழஞ்சு; எழுநாழி; எழுவகை – ஏழு நெடுமுதல் குறுகிற்று.

---

பாட வேறுபாடு.:–

1. னகரவொற்று
2. அதனயல்ரகாரமிசை

ஏழ்கடல் – ஏழன் ஈற்றுயிர் கெட்டது.

ஏனையவற்றிற்கு எடுத்துக்காட்டுக்கள் அவற்றின் சிறப்பு நூற்பாக்களிற் காட்டப்படும்.

ஏற்புழி என்றதனாலே, பொது விதி பெற்று இரண்டு கழஞ்சு, மூன்று படி, நான்கு பொருள், ஐந்து பூதம், ஆறு குணம், ஏழு கடல், எட்டுக்கோடி என முடிவனவற்றையுங் கொள்க.

(38)

**188. ஒன்றன் புள்ளி ரகர மாக**
**இரண்ட னொற்றுயி ரேகவுவ் வருமே.**

ஒன்றன் புள்ளி ரகரம் ஆக
இரண்டன் ஒற்று உயிர் ஏக உவ் வருமே

onṟaṉ puḷḷi rakaram āka
iraṇṭaṉ oṟṟu uyir ēka uv varumē

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Special rule for onru, irantu**

Onru (which becomes or by the above rule) changes n into r; irantu (which is iran) drops añ (and becomes ir); and u may be added (to the final r of both.)

## ஒப்புமைப் பகுதி

முதலீ ரெண்ணி னொற்று ரகரம் ஆகும்
உகரம் வருதல் ஆவயி னான.

(தொல்.: 439)

இடைநிலை ரகரம் இரண்டென் எண்ணிற்கும்
நடைமருங் கின்றே பொருள்வயி னான.

(தொல்.: 440)

ஒன்றன் புள்ளி ரகர மாக
விரண்ட னொற்றுயி ரேகவுவ் வருமே.

(இ.வி.: 107)

ஒன்ற னொற்றே ரகார மாகும்
இரண்ட னொற்றுயி ரேகவுவ் வருமே.

பாட வேறுபாடு.:–

1. ஒருபணம்,இருபணம்;ஒரு இரு
எனவரும்

(மு.வீ.: 422)

## மயிலை நாதர்

இதுவுமது.

இ–ள்.: எண்முதல் நாற்பெயரும் வருமிடத்து ஒன்றென்னும் எண்ணிடை நின்ற னகரம் ரகரமாக இரண்டென்னும் எண்ணிடை நின்ற ணகர வொற்றும் ரகர மிசை நின்ற அகரமும் போக அவ்விரண் டெண்ணின் ரகரத்தின் மேலும் உகரம் வரும், எ–று.

வ – று.:–

ஒருபது, இருபது; கழஞ்சு, கலம், கல் என வரும்.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், இதுவும் அது.

இ–ள்.: மேற்கூறிய நால்வகைப் பெயரும் வருமிடத்து, ஈற்று உயிர்மெய் ஏகும் என்றமையான் இறுதி உயிர்மெய் கெட நின்ற ஒன்று என்னும் எண்ணினது னகர ஒற்று ரகர ஒற்றாக, இரண்டு என்னும் எண்ணினது ணகர ஒற்றும் ரகர ஒற்றை ஊர்ந்து நின்ற அகர உயிரும் கெட, அவ்விரண்டு ரகரத்தின் மேலும் உகரம் வரும், எ–று.

உ–ம்.:–

ஓராயிரம், ஈராயிரம், ஒருபது, இருபது, ஒரு கழஞ்சு, இரு கழஞ்சு, ஒரு நாழி, இரு நாளி, ஒருவகை, இருவகை என வரும். ஓராயிரம், இராயிரம் என்புழி உகரக்கேடு முற்றுமற்றொரோவழி என்பதனாற் கொள்க. பிறவும் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், ஒன்று இரண்டு என்னும் இருவகை எண்ணின் முன் எண்ணாதி நால்வகைப் பெயரும் புணருமாறு கூறியது.

இ–ள்.:– **ஒன்றன் புள்ளி ரகரமாக** – ஒன்றென்னும் எண்ணிடை நின்ற னகர வொற்று ரகர வொற்றாக, **இரண்டனொற்றுயிரேக** – இரண்டென்னும் எண்ணிடை நின்ற ணகரமும் ரகரமிசை நின்ற அகரமும் போக, **உவ்வருமே** – இவ் விரண்டெண்ணின் ரகரத்தின் மேலும் உகரம் வரும், எ–று.

உ–ம்.:–

ஒருபது, ஒரு கழஞ்சு, ஒரு கலம், ஒரு பிறப்பு எனவும்
இருபது, இரு கழஞ்சு, இரு கலம், இரு பிறப்பு எனவும் வரும்.

## விசாகப் பெருமாளையர்

இ–ள்.:– ஒன்றன் – ஈற்றுயிர் மெய்கெட நின்ற வொன்றென்னு மெண்ணினது, புள்ளி–னகர மெய்யானது, ரகரமாக–ரகர மெய்யாக, இரண்டன்–இரண்டனுடைய, ஒற்று–ணகர மெய்யும், உயிர்–அகர வுயிரும், ஏக–கெட, உவ் வரும்–அவ் விரண்டு ரகர மெய் மேலும் உகரம் வரும், எ–று.

உ–ம்.:–

ஒன்று+ஆயிரம்–ஓராயிரம், இரண்டு +ஆயிரம் – ஈராயிரம், என வுயிர் வர முதன் நீண்டு ஈற்றுயிர்மெய் கெட்டு, உகரம் பெற்று "முற்று மற்றொரோவழி" என்பதனால் அவ்வுகரமுங் கெட்டு வந்தன. ஒன்று + பத்து –ஒருபது, இரண்டு+பத்து– இருபது, என மெய் வர முதனீளாது ஈற்றுயிர் மெய் கெட்டு உகரம் பெற்று வந்தன. இங்கே சொல்லியபடி மற்ற திரிபு முதலானவை வருதலுங் காண்க.சிறுபான்மை ஓராயிரம், இராயிரம் என வருதலு முண்டு.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

முதலிரண்டெண்ணுக்கும் சிறப்புவிதி கூறுஞ் சூத்திரம் யாது?

ஒன்றன் புள்ளி ரகரம் ஆக
இரண்ட னொற்றுயி ரேகவுவ் வருமே.
(ஒன்றன் புள்ளி ரகரம் ஆக
இரண்டன் ஒற்று உயிர் ஏக உவ் வருமே.)

இ–ள்.:– ஒன்றன் புள்ளி ரகரம் ஆக – (எண்முதலிய பெயர் வருமிடத்து ஈற்றுயிர் மெய்கெட நின்ற) ஒன்றென்னும் எண்ணினது னகரமெய் ரகரமெய்யாக, இரண்டன் ஒற்று உயிர் ஏக உவ்வரும்– இரண்டென்னும் எண்ணினது ணகரமெய்யும் ரகரத்தை ஊர்ந்து நின்ற அகரவுயிருங் கெட அவ்விரண்டு ரகரமெய்மேலும் உகரம் வரும் (ஏற்புழி)– ஏற்குமிடத்து, எ–று.

ஏற்புழி என்றதனால், ரகரமெய் உகரம் பெறுவது மெய்வரின் எனவும், உயிர்வரின் உகரம் பெறாதெனவும் கொள்க.

உ–ம்.:–

ஒருபது, இருபது, ஒருகழஞ்சு, இருகழஞ்சு, ஒருநாழி, இருநாழி, ஒருவகை, இருவகை எனவும், ஒரொன்று, ஈரொன்று, ஒரெடை ஈரெடை; ஒருழக்கு, ஈருழக்கு, ஈருழக்கு, ஓரிலை, ஈரிலை, எனவும் வரும்.

இன்னும், ஏற்புழி என்றதனால், ஆயிரம் வருமிடத்து, ஓராயிரம் ஈராயிரம் என முடிதலேயன்றி, ஓராயிரம் இராயிரம்

என முதனீளாது முடிதலும், யகரம் வருமிடத்து, ஒருயானை, இருயானை என முடிதலேயன்றி, ஓர்யானை, ஈர்யானை என உகரம் பெறாது, முதனீண்டு முடிதலுங் கொள்க.

ஒன்று என்பது உயிர்வரின் எவ்வாறு புணரும்?

ஒன்று என்பது ஆடை என்பதனோடு புணருமிடத்து "எண்ணிறையளவும் பிறமெய்தின் ஒன்று முதலெட்டீறா மெண்ணுண் முதலீ ரெண்முதனீளும்" என்ற விதிப்படி ஒன்று என நீண்டு, "ஆறேழல்லவற் றீற்றுயிர்மெய் ஏகும்" என்ற விதிப்படி ஈற்றுயிர்மெய் கெட்டு ஓன் என நின்று "ஒன்றன்புள்ளி ரகரமாக" என்ற விதிப்படி னகரவொற்று, ரகரவொற்றாய் ஓர் என நின்று, "உடல்மேல் உயிர்வந்தொன்றுவ தியல்பே" என்ற விதிப்படி ரகத்தின்மேல் வருமொழி ஆகாரமேறி "ஓராடை" எனப் புணரும்.

இரண்டு என்பது உயிர்வரின் எவ்வாறு புணரும்?

"எண்ணிறையளவும் பிறவு மெய்தின் ஒன்று முதலெட்டீறா மெண்ணுண் முதலீ ரெண் முதனீளும்" என்றதனால் ஈரண்டு என்றாகி, ஈற்றுயிர்மெய் ஏகும்" என்றதனால் ஈரன் எனநின்று, "இரண்டனொற்றுயிர் ஏக" என்றதனால் ணகரவொற்றும் ரகாரமிசைநின்ற அகரவுயிரும் கெட்டு ஈர் என நின்று, மேலே கூறியபடி வருமொழி உயிரேறி ஈராடை என இவ்வாறு புணரும்.

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

**இ–ள்.: ஒன்றன் புள்ளி** ரகரமாக–(மேற்கூறிய நால்வகைப் பெயரும் வந்து புணருமிடத்து ஈற்றுயிர்மெய் யேகு மென்றவாறே இறுதி உயிர்மெய் கெட்டு நின்ற) ஒன்றென்னு மெண்ணுப் பெயரினது னகர வொற்று ரகர வொற்றாகத் திரிய, **இரண்டனொற்றுயிரேக**–(அவ்வாறு நின்ற) இரண் டென்னும் எண்ணினது ணகர வொற்றும் அதற்குமேல் ரகரத்தை யூர்ந்து நின்ற அகர வுயிருங் கெட, **உவ் வரும்**–அவ் விரண்டு ரகரத்தின் மேலும் உகரம் வந்து நிற்கும், எ–று.

**உ–ம்.:–**

ஓராயிரம், ஈராயிரம் என விவை யுகரம் பெறாது நின்றன. ஒருபது இருபது ஒருகழஞ்சு இருகழஞ்சு ஒருநாழி இருநாழி ஒருவகை இருவகை என வருமிவை உகரம் பெற்று நின்றன. ஒராயிரம் இராயிரம் என வரின் உகரக்கேடு 'முற்றுமற் றொரோவழி' யென்பதனாற் கொள்க. பிறவுமன்ன.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :– ஒன்றன் – (ஈற்றுயிர்மெய் கெட்டு நின்ற) ஒன்று என்னும் எண்ணினது, புள்ளி – னகரமெய்யானது, ரகரம் ஆக – ரகர மெய்யாக, இரண்டன் – (ஈற்றுயிர் மெய்கெட்டு நின்ற) இரண்டு என்னும் எண்ணினது, ஒற்று – ணகர மெய்யும், உயிர் – (ரகர மெய்யின்மேல் உள்ள) அகரவுயிரும், ஏக – கெட, உவரும் – (அவ்விரண்டு ரகரமெய்யின் மேலும்) உகரம் வரும் : (ஏற்புழி) – ஏற்குமிடத்து.

குறிப்பு :–

'ஏற்புழி' என்றதனால் முதல் நீண்டவிடத்து உகரம் வாராதெனவும், உகரம் வருமிடத்து முதல் நீளாதெனவும் கொள்க.

உ–ம் :–

ஒன்று+ஆயிரம்=ஓராயிரம்

ஒன்று + கலம் = ஓர் கலம்

ஒன்று + நாழி = ஓர் நாழி

ஒன்று + யானை = ஓர் யானை

– ஒன்று முதல் நீண்டு
ஈற்றுயிர்மெய்கெட்டு
னகரம் ரகரமாயிற்று.

இரண்டு + ஆயிரம் = ஈராயிரம்
இரண்டு + கலம் = ஈர்கலம்
இரண்டு + நாழி = ஈர்நாழி
இரண்டு + யானை = ஈர்யானை

– இரண்டு முதல்
நீண்டுஈற்றுயிர்மெய்யும்
ணகர மெய்யும் அகர
உயிரும் கெட்டன.

ஒன்று + ஆயிரம் = ஒராயிரம்.

இரண்டு+ஆயிரம்=இராயிரம்

ஒன்று + கழஞ்சு = ஒருகழஞ்சு.

இரண்டு+கழஞ்சு=இருகழஞ்சு

ஒன்று + நாள் = ஒருநாள்.

இரண்டு+நாள்=இருநாள்

ஒன்று + வழி = ஒருவழி

இரண்டு + வழி = இருவழி.

– முதல் நீளாமல் ரகர
மெய்மேல் உகரம்பெற்று
வந்தன.

ஒரு + ஆயிரம் = ஓராயிரம் என உகரங்கெட்டுப் புணர்தலை "முற்று மற்றொரோ வழி" என்பதனாற் கொள்க. 'ஓர் கலம்', 'ஓர்நாள்', 'ஓர்வகை' என இவ்வாறு செய்யுளில் வருதல் உரையிற்கோடல் என்னு முத்தியால்

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– ஒன்றன் புள்ளி ரகரம் ஆக – ஈற்றுயிர்மெய் கெட நின்ற ஒன்றென்னும் எண்ணினது னகர மெய் ரக்ர மெய்யாக, இரண்டன் ஒற்று உயிர் ஏக–இரண்டென்னும் எண்ணினது ணகர மெய்யும் ரகரத்தை ஊர்ந்து நின்ற அகரவுயிருங் கெட, உவ் வரும் – அவ்விரண்டு ரகர மெய் மேலும் உகரம் வரும், (ஏற்புழி) – ஏற்குமிடத்து, எ– று.

'ஏற்புழி' என்றதனால், ரகரமெய் உகரம் பெறுவது மெய்வரின் எனவும், உயிர் வரின் உகரம் பெறா எனவுங் கொள்க.

உ–ம்.:–

ஒருபது, இருபது: ஒருகழஞ்சு, இருகழஞ்சு; ஒருநாழி இருநாழி; ஒருவகை, இருவகை எனவும், ஒரொன்று, ஈரொன்று; ஒரெடை, ஈரெடை; ஒருழக்கு, ஈருழக்கு; ஓரிலை, ஈரிலை எனவும் வரும்.

இன்னும், 'ஏற்புழி' என்றதனால், ஆயிரம் வருமிடத்து, ஓராயிரம், ஈராயிரம் என முடிதலே யன்றி, ஒராயிரம், இராயிரம் என முதனீளாது முடிதலும், யகரம் வருமிடத்து, ஒரு யானை, இருயானை என முடிதலே யன்றி, ஓர் யானை, ஈர் யானை என உகரம் பெறாது முதனீண்டு முடிதலுங் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– ஒன்றன் புள்ளி ரகம் ஆக – ஈற்றுயிர்மெய் கெடநின்ற ஒன்றென்னும் எண்ணினது னகரமெய் ரகரமெய்யாக, இரண்டன் ஒற்று உயிர் ஏக – இரண்டென்னும் எண்ணினது ணகரமெய்யும் ரகரத்தை ஊர்ந்து நின்ற அகரவுயிருங்கெட, உவ்வரும் – அவ்விரண்டு ரகரமெய்ம்மேலும் உகரம்

வரும், – (ஏற்புழி) – ஏற்குமிடத்து. எ–று.

ஏற்புழி என்றதனால், ரகரமெய் உகரம்பெறுவது மெய்வரின் எனவும், உயிர்வரின் உகரம் பெறா எனவுங் கொள்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– ஒன்றன் – (ஈற்று உயிர்மெய் கெட்டு நின்ற) ஒன்று என்னும் எண்ணினது, புள்ளி – னகர மெய்யானது, ரகரம் ஆக – ரகர மெய் யாக, இரண்டன் – (ஈற்று உயிர்மெய் கெட்டு நின்ற) இரண்டு என்னும் எண்ணினது, ஒற்று – ணகர மெய்யும், உயிர் – (ரகர மெய்யின் மேல் உள்ள) அகர வுயிரும், ஏக – கெட, உ வரும் – (அவ் விரண்டும் ரகர மெய்யின் மேலும்) உகரம் வரும்; ஏற்பு உழி – ஏற்குமிடத்து; எ–று.

ஏற்புழி' என்றதனால், முதல் நீண்டவிடத்து உகரம் வாராதென்றும், உகரம் வருமிடத்து முதல் நீளாதென்றும் கொள்க.

உ–ம்.:–

ஒன்று + ஆயிரம் = ஓராயிரம்
ஒன்று + கலம் = ஓர்கலம்
ஒன்று + நாழி = ஓர்நாழி
ஒன்று + யானை = ஓர்யானை

– ஒன்று முதல் நீண்டு ஈற்றுயிர்மெய் கெட்டு னகரம் ரகரமாயிற்று.

இரண்டு + ஆயிரம் = ஈராயிரம்
இரண்டு + கலம் = ஈர்கலம்
இரண்டு + நாழி = ஈர்நாழி
இரண்டு + யானை = ஈர்யானை

– இரண்டு முதல்நீண்டு ஈற்றுயிர் மெய்யும் அகரவுயிரும் கெட்டன.

ஒன்று, இரண்டு +ஆயிரம் = ஓராயிரம், இராயிரம்
ஒன்று, இரண்டு + கழஞ் = ஒருகழஞ்சு, இருகழஞ்சு
ஒன்று, இரண்டு + நாள் = ஒருநாள், இருநாள்
ஒன்று, இரண்டு + வழி = ஒருவழி, இருவழி

– முதல் நீளாமல் ரகர மெய்யின் மேல் உகரம் பெற்று வந்தன.

ஒரு + ஆயிரம் = ஓராயிரம் என உகரங் கெட்டுப்

புணர்தலை "முற்றுமற்றொரரோவழி" என்றதனாற் கொள்க. ஓர்கலம், ஓர்நாள், ஓர்வகை என முதல் நீளாமலும் உகரம்பெறாமலும் வருதல், **உரையிற்கோட லால்** அமையும்.

## பவானந்தம் பிள்ளை

**இ-ள்.:-** **ஒன்றன் புள்ளி ரகரம் ஆக** - ஒன்றென்னும் எண்ணினது னகரமெய் ரகரமெய்யாக, **இரண்டன் ஒற்று உயிர் ஏக** - இரண்டென்னும் எண்ணினது ணகர மெய்யும் ரகரத்த ஊர்ந்து நின்ற அகர வுயிருங் கெட **உவ் வரும்** - அவ்விரண்டு ரகர மெய்மேலும் உகரம் வரும். **ஏற்புழி** - ஏற்குமிடத்து. **எ-று.**

'ஏற்புழி' என்றதனால், ரகரமெய் உகரம் பெறுவது மெய்வரின் எனவும், உயிர் வரின் உகரம் பெறா எனவுங் கொள்க.

**உ-ம்.:-**

ஒன்று + கழஞ்சு = ஒருகழஞ்சு.
இரண்டு + நாழி = இருநாழி.
ஒன்று + உழக்கு = ஒருழக்கு.
இரண்டு + இலை = ஈரிலை.

இன்னும், ஏற்புழி என்றதனால், ஆயிரம் வருமிடத்து, ஓராயிரம், ஈராயிரம்என முடிதலேயன்றி, ஓராயிரம் இராயிரம் என முதனீளாது முடிதலும், யகரம்வருமிடத்து, ஒரு யானை, இருயானை என முடிதலேயன்றி, ஓர்யானை, ஈர்யானை என உகரம் பெபாது முதனீண்டு முடிதலும், ஓர்வகை, ஓர் ஓர் புடை எனப் பறி மெய்களுக்கு முன்னும் அவ்வாறு வருதலுங் கொள்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ-ள்.:-** **ஒன்றன் புள்ளி** - (ஈற்றுயிர்மெய் கெடநின்ற) ஒன்று என்னும் எண்ணினது னகரமெய்யானது, **ரகரம் ஆக** - ரகரமெய்யாக, **இரண்டன் ஒற்று** - இரண்டு என்பதினுடைய ணகர மெய்யும், **உயிர்** - அகர உயிரும், **ஏக** - கெட, **உ வரும்** - (அவ்விரண்டு ரகர மெய்களின் மேலும்) உகரம் வரும், எ-று.

பொ-ரை.:-

(ஈற்றுயிர்மெய் கெட நின்ற) ஒன்று என்னும் எண்ணினது னகரமெய்யானது ரகரமெய்யாக, இரண்டு என்பதினுடைய ணகரமெய்யும் அகர வுயிரும் கெட, (அவ்விரண்டு ரகர மெய்களின் மேலும்) உகரம் வரும்.

உ–ம்.:–

ஒன்று + ஆயிரம் = ஓராயிரம்.

இரண்டு + ஆயிரம் = ஈராயிரம்.

என உயிர் வர முதல் நீண்டு, ஈற்றுயிர்மெய் கெட்டு உகரம் பெற்று, "முற்றுமற் றொரொரோவழி" என்பதனால், அவ் வுகரமுங் கெட்டு வந்தன.

ஒன்று + பத்து = ஒருபது.

இரண்டு + பத்து = இருபது.

என மெய் வர முதல் நீளாது ஈற்றுயிர்மெய் கெட்டு உகரம் பெற்று வந்தன; ஒருகழஞ்சு, இருகழஞ்சு; ஒரு நாள், இருநாள்; ஒருவழி, இருவழி என்பனவும் அவை.

சிறுபான்மை ஒராயிரம், இராயிரம் எனவருதலும் உண்டு.

மெய்வரின் ஓர்கலம், ஒர்கலம்; ஓர் நாள், ஒர் நாள், ஓர் யானை ஒர் யானை, ஓர்வகை, ஒர்வகை என முதல் நீளலும், நீளாமலும் உகரம் பெறாமலும் வருதல் உரையிற் கோடலால் அமையும்.

(ஒன்று, இரண்டு என்னும் எண்கள் ஓர், ஈர் என நிற்பது வருமொழி முதலில் உயிர்வருமிடத்தே எனவும், முதல் நீளாது உகரம் பெற்று ஒரு இரு என நிற்பது மெய்வருமிடத்தே எனவும் கொள்க.)

## கா.நமச்சிவாய முதலியார்

**ஒன்றன்** – ஈற்றுயிர்மெய் கெடநின்ற ஒன்று என்னும் எண்ணினது, புள்ளி – னகர மெய்யானது, ரகரமாக – ரகர மெய்யாக, இரண்டன் – இரண்டனுடைய, ஒற்று – ணகர மெய்யும், உயிர் – அகரவுயிரும், ஏக – கெட, உவரும் – அவ்விரண்டு ரகர மெய் மேலும் உகரம் வரும்.

உதாரணம்:–

ஒன்று + ஆயிரம் = ஓராயிரம்
இரண்டு + ஆயிரம் = ஈராயிரம்

– என உயிர்வர முதனீண்டு ஈற்றுயிர்மெய் கெட்டு உகரம் பெற்று 'முற்றுமற் றொரோரோவழி' (சூ – 164) என்பதனால் அவ்வுகரமுங் கெட்டு வந்தன.

ஒன்று+பத்து=ஒருபது

இரண்டு + பத்து = இருபது

– என மெய்வர முதனீளாது, ஈற்றுயிர்மெய் கெட்டு உகரம் பெற்று வருதலுங் காண்க. சிறுபான்மை ஓராயிரம், இராயிரம் என வருதலு முண்டு.

## மோசசு பொன்னையா

முதல் நீண்டு ஈற்றுயிர்மெய் கெட்டு நின்ற ஓன், இரண் என்பவற்றின் முன் அந்நால்வகைப் பெயரும் வர, முன்னதன் ஒற்று ரகரமாகவும், பின்னதன் ஒற்றும் அதன் முன்னர்நின்ற உயிர்மெய்யின் அகரமும் கெட, அவ்விரண்டன் ரகர மெய் மேலும் உகரம் வரும், எ–று.

ஏற்புழி என்றதனால் உகரம் வருதல் மெய்முதன் மொழி வருமொழி யாகுங்காலே எனவும்; உகரம் வரின் நீண்ட முதல் குறுகும் எனவுங் கொள்க.

எ–டு.:-

ஒருபது, இருபது, ஒரு கழஞ்சு, இரு கழஞ்சு; ஒரு நாழி, இரு நாழி; ஒரு வகை, இரு வகை – வருமொழி முதல் மெய் வந்த முடிபு.

ஓரொன்று, ஈரொன்று, ஓரெடை; ஈரெடை, ஒருழக்கு, ஈருழக்கு; ஓரிலை, ஈரிலை – வருமொழி முதல் உயிர் வந்த முடிபு.

(39)

**189. மூன்றனுறுப் பழிவும் வந்தது மாகும்.**

**மூன்றன் உறுப்பு அழிவும் வந்ததும் ஆகும்.**

mūṉṟaṉ uṟuppu aḻivum vantatum ākum.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

## Special rule for munru

**Munru** either drops the (now final) n or changes into the consonant initial which meets it.

### ஒப்புமைப் பகுதி

**மூன்றன் ஒற்றே வந்த தொக்கும்**

(தொல்.: 447)

**மூன்றனுறுப் பழிவும் வந்தது மாகும்**

(இ.வி.: 108)

**மூன்றன் புள்ளி வந்தது மாகும்**

(மு.வீ.: 429)

### மயிலைநாதர்

இதுவுமது.

இ-ள்.:- எண்ணாதிப் பெயர் வருமிடத்து மூன்றென்னும் எண்ணிடை நின்ற ஒற்று, கெடுதலும் வந்த ஒற்றாகத் திரிதலுமாம், எ-று.

வ - று.:-

மூவொன்று, மூவெடை, மூவுழக்கு மூவுலகு எனவும்;
முப்பது, முக்கழஞ்சு, முந்நாழி, எனவும் வரும்.

### சங்கர நமச்சிவாயர்

எ-னின், இதுவும் அது.

இ-ள்.: நால்வகைப் பெயரும் வருமிடத்து, இறுதி உயிர்மெய் கெட நின்ற மூன்று என்னும் எண்ணினது னகர ஒற்றுக் கெடுதலும், வரும் ஒற்றாகத் திரிதலும் ஆம், எ - று.

உ-ம்.:-

மூவொன்று, மூவெடை, மூவுழக்கு, மூவுலகு எனவும்;
முப்பது, முக்கழஞ்சு, முந்நாழி, மும்மொழி எனவும்
வரும்.

### கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், மூன்றென்னும் எண்ணின் விகாரம் கூறியது.

**இ—ள்.:— மூன்றனுறுப்பழிவும்** — மூன்றென்னும் எண்ணிடை நின்ற ஒற்றுக் கெடுதலும், **வந்தது மாகும்** — வருமொழி முதல் வந்த ஒற்றாய்த் திரிதலுமாம், எ—று.

உ—ம்.:—

மூவொன்று, மூவெடை, மூவுழக்கு, மூவுலகு எனவும்;
முப்பது, முக்கழஞ்சு, முந்நாழி, மும்மொழி எனவும்
வரும்.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ—ள்.: மூன்றன்** — இறுதி யுயிர்மெய் கெட நின்ற மூன்றென்னு மெண்ணினது, **உறுப்பு**—மெய்யானது, **அழிவும்**—கெடுதலும், **வந்ததும்** — வருகிற மெய்யாகத் திரிதலும், **ஆகும்**—ஆகும், எ—று.

உ—ம்.:—

மூன்று + ஒன்று—மூவொன்று எனவுயிர் வர முதல் குறுகாது ஈற்றெழுத்தும் னகர மெய்யுங் கெட்டன. மூன்று + பத்து — முப்பது என மெய் வர ஈறுகெட்டு னகரமெய் வந்த மெய்பாய்த் திரிந்தது, மற்றவைகளு மிப்படியே.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

மூன்றினுக்குச் சிறப்புவிதி கூறுஞ் சூத்திரம் யாது?

மூன்றனுறுப் பழிவும் வந்தது மாகும்.

(மூன்றன் உறுப்பு அழிவும் வந்ததும் ஆகும்)

**இ—ள்.:— மூன்றன் உறுப்பு அழிவும் வந்ததும் ஆகும்** — (எண் முதலிய பெயர் வருமிடத்து இறுதியுயிர்மெய் கெட நின்ற) மூன்றென்னும் எண்ணினது னரகமெய் கெடுதலும் வருமெய்யாகத் திரிதலும் ஆகும் (ஏற்புழி) ஏற்குமிடத்து, எ—று.

மூன்று என்னுஞ்சொல் புணர்ச்சிக்கண் எத்தனை விகாரங்களைப் பெறும்?

"எண்ணிறையளவும்" என்னுஞ் சூத்திரத்தால் ஈற்றுயிர் மெய் கெடுதலும், "மூன்றனுறுப்பழிவும் வந்ததுமாகும்" என்னுஞ் சூத்திரத்தால் னகரமெய் கெடுதலும் அந்த னகரமெய் வருமெய்யாகத் திரிதலுமாகிய மூன்று விகாரங்களைப் பெறும்.

மூன்றன் ஈற்றுயிர்மெய்யும் னகரவொற்றுங் கெடுவது எவ்வழி?

உயிர்க்கணம் வந்துழியாம்.

உ–ம்.:–

மூவொன்று, மூவெடை, மூவுழக்கு, மூவுலகு.

மூன்றன்முன் வன்கணமும் மென்கணமும் வரின் எவ்வாறாம்?

நெடுமுதல் குறுகி ஈற்றுயிர் மெய்கெட்டு னகரவொற்று வருமொற்றாகும்.

உ–ம்.:–

முப்பது, முக்கழஞ்சு, முந்நாழி, முந்நூல், முவ்வட்டி என வரும்.

வகரம்வருமிடத்து எவ்வாறு முடியும்?

வகரம் வருமிடத்து முவ்வட்டி என முடிதலேயன்றி மூவட்டி என முதல்குறுகாது னகரமெய் கெட்டும் முடியும்.

யகரம் வருமிடத்து எவ்வாறு முடியும்?

முவ்யானை என னகரமெய் வருமெய்யாகத் திரியாது வகரமெய்யாகத் திரிந்து முடியும்.

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

**இ–ள்.:– மூன்றனுறுப் பழிவும்** – (ஈற்றுயிர் மெய்கெட நின்ற) மூன்றென்னும் எண்ணுப் பெயரினது னகர வொற்றுக் கெடுதலும், **வந்தது மாகும்** – அவ் வொற்று வந்த வொற்றாகத் திரிதலுமாம், எ–று.

உ–ம்.:–

மூவொன்று, மூவெடை, மூவுழக்கு, மூவெயில் என நால்வகைப் பெயரும் வந்து புணர னகர வொற்றுக் கெட்டது. முப்பது, முக்கழஞ்சு, முந்நாழி, மும்மொழி, என அவ் வொற்று வந்ததாகத் திரிந்தது. பிறவுமன்ன.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– மூன்றன்** – (இறுதி உயிர்மெய் கெட்டு நின்ற) மூன்று என்னும் எண்ணினது, **உறுப்பு** – னகர மெய்யானது, **அழிவும்** – கெடுதலும், **வந்ததும்** – வருமொழி முதலில் வந்த மெய்யாகத் திரிதலும், **ஆகும்** –.

குறிப்பு :–

'ஏற்புழி' என்றதனால் மெய்வரு மிடத்து முதல் குறுகும்

எனவும், அவ்விடத்து னகரமெய் வருமெய்யாகத் திரியுமெனவும்; உயிர்வருமிடத்து னகரமெய் கெடும் எனவும், அவ்விடத்து முதல் குறுகாதெனவும் கொள்க.

உதாரணம் :-

மூன்று + ஆயிரம் = மூவாயிரம்.
மூன்று + உலகு = மூவுலகு

— உயிர்வர முதல் குறுகாமல்
ஈ ற் று யி ர் மெ ய் யு ம்

னகரமெய்யுங்
கெட்டன.

மூன்று + கலம் = முக்கலம்
மூன்று + நூறு = முந்நூறு
மூன்று + வட்டி = முவ்வட்டி

—மெய்வர முதல் குறுகி ஈற்றுயிர் மெய் கெட்டு னகர
மெய் வந்த மெய்யாகத் திரிந்தது.

இன்னும் 'ஏற்புழி' என்றதனால் வகரம் வருமிடத்து 'முவ்வழி' என முடிதலேயன்றி, 'மூவழி' என முதல் குறுகாமல் னகரமெய் கெட்டு முடிதலும், யகரம் வருமிடத்து 'முவ்யானை' என னகரமெய் வகரமெய்யாகத் திரிந்து முடிதலும்; 'மூழக்கு', 'மூழாக்கு' என மருவி முடிதலுங் கொள்க.

## ஆறுமுக நாவலர்

இ—ள்.:— மூன்றன் உறுப்பு — இறுதி யுயிர்மெய் கெட நின்ற மூன்றென்னும் எண்ணினது னகர மெய், அழிவும் — கெடுதலும், வந்ததும் ஆகும் — வருமெய்யாகத் திரிதலும் ஆகும். (ஏற்புழி)—ஏற்குமிடத்து, எ—று.

'ஏற்புழி' என்றதனால், னகரமெய் கெடுவது உயிர் வருமிடத் தெனக் கொள்க.

உ—ம்.:—

மூவொன்று, மூவெடை, மூவுழக்கு, மூவுலகு எனவும், முப்பது, முக்கழஞ்சு, முந்நாழி, முந்நூல், முவ்வட்டி எனவும் வரும்.

இன்னும் ஏற்புழி என்றதனால், வகரம் வருமிடத்து முவ்வட்டி என முடிதலே யன்றி, மூவட்டி என முதல் குறுகாது னகர மெய் கெட்டு முடிதலும், யகரம் வருமிடத்து முவ்யானை என னகர மெய் வகர

மெய்யாகத் திரிந்து முடிதலுங் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். மூன்றன் உறுப்பு – இறுதியுயிர் மெய்கெடநின்ற மூன்றென்னும் எண்ணினது ணகரமெய், – அழிவும் – கெடுதலும், – வந்ததாகும் – வருமெய்யாகத் திரிதலும் ஆகும், (ஏற்புழி – ஏற்குமிடத்து).

ஏற்புழி என்றதனால், ணகரமெய் கெடுவது உயிர்வருமிடத்தெனக் கொள்க.

உ–ம்.:–

மூவொன்று, மூவெடை, மூவுழக்கு, மூவுலகு, எனவும். முப்பது, முக்கழஞ்சு, முந்நாழி, முந்நூல், முவ்வட்டி, எனவும் வரும்.

இன்னும் ஏற்புழி, என்றதனால், வகரம் வருமிடத்து முவ்வட்டி என முடிதலேயன்றி, மூவட்டி என முதல்குறுகாது ணகரமெய்கெட்டு முடிதலுங் கொள்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– மூன்றன் – (இறுதி உயிர்மெய் கெட்டு நின்ற) மூன்று என்னும் எண்ணினது, உறுப்பு – ணகர மெய்யானது, அழிவும் – கெடுதலும், வந்ததும் – (வருமொழி முதலில்) வந்த மெய்யாகத் திரிதலும், ஆகும்–: (ஏற்பு உழி) – ஏற்குமிடத்து; எ–று.

'ஏற்புழி' என்றதனால், முதல் குறுகுதல் மெய் வருமிடத்து என்றும், அவ் விடத்து ணகரமெய் வருமெய்யாகத் திரியு மென்றும்; ணகரமெய் கெடுதல் உயிர் வருமிடத்து என்றும், அவ்விடத்து முதல் குறுகாது என்றும் கொள்க.

உ–ம்.:–

மூன்று + ஆயிரம் = மூவாயிரம் உயிர்வர முதல் குறுகாமல் ஈற்றுயிர் மெய்யும் ணகர மெய்யும் கெட்டன.

மூன்று + உலகு = மூவுலகு, மூன்று + கலம் = முக்கலம் மெய் கெட்டு மெய்வர முதல்குறுகி ஈற்றுயிர் ணகர மெய் வந்த மெய்யாகத் திரிந்தது.

மூன்று +நூறு = முந்நூறு, மூன்று + வட்டி = முவ்வட்டி

இன்னும், 'ஏற்புழி' என்றதனால், வகரம் வருமிடத்து முவ்வழி என முடிதலே யன்றி, மூவழி என முதல் குறுகாமல் னகர மெய் கெட்டு முடிதலும்; யகரம் வருமிடத்து முவ்யானை என னகர மெய் வகர மெய்யாகத் திரிந்து முடிதலும் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– மூன்றன் உறுப்பு – இறுதியுயிர்மெய் கெட நின்ற மூன்றென்னும் எண்ணினது னகர மெய், அழிவும் – கெடுதலும், வந்ததும் ஆகும் – வருமெய்யாகத் திரிதலும் ஆகும், ஏற்புழி – ஏற்குமிடத்து, எ–று.

'ஏற்புழி' என்றதனால், முதல் குறுகுதல் மெய் வருமிடத்து எனவும், அவ்விடத்து னகரமெய் வருமெய்யாகத் திரியும்எனவும்; னகர மெய் கெடுவது உயிர் வருமிடத்தெனவும் கொள்க.

உ–ம்.:–

மூன்று + கலம் = முக்கலம்

மூன்று + நூறு = முந்நூறு

மூன்று + வட்டம் = முவ்வட்டம்.

மூன்று + ஆயிரம் = மூவாயிரம்

மூன்று + உலகு = மூவுலகு.

இன்னும், ஏற்புழி என்றதனால், வகரம் வருமிடத்து முவ்வட்டம் என முடிதலேயன்றி, மூவட்டம் என முதல் குறுகாது னகரமெய் கெட்டு முடிதலம், யகரம் வருமிடத்து முவ்யானை என னகரமெய் வகரமெய்யாகத் திரிந்து முடிதலுங் கொள்க.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) மூன்றன் – இறுதியுயிர்மெய்கெடநின்ற மூன்றென்னு மெண்ணினது. உறுப்பு – மெய்யானது. அழிவும் – கெடுதலும் ;

(2) வந்ததும் – வருகிற மெய்யாகத் திரிதலும். ஆகும் – ஆகும்.

உதாரணம்:–

(1) மூன்று + ஆயிரம் = மூவாயிரம்

– என உயிர்வர முதல் குறுகாது ஈற்றெழுத்தும்

னகர மெய்யும் கெட்டன.

(2) மூன்று + பத்து = முப்பது

– என மெய்வர ஈறுகெட்டு னகரமெய்
வந்த மெய்யாய்த் திரிந்தது.
மற்றவைகளு மிப்படியே.

## மோசகு பொன்னையா

நெடுமுதல் குறுகி ஈற்றுயிர் மெய்கெட்டு நின்ற மூன் என்பதன் முன்னர் அந்நால்வகைப் பெயரும் வர இறுதி மெய் கெடுதலையும், வருமொழி முதல்மெய்யாகத் திரிதலையும் பொருந்தும், எ–று.

ஏற்புழி என்றதனால் னகர மெய் கெடுவது உயிர் வருமிடத்தே எனவும்; னகரங்கெடின் குறுகிய முதல் நீளும் எனவுங் கொள்க.

எ–டு.:–

மூவொன்று; மூவெடை; மூவுழக்கு; மூவுலகு
முப்பது; முக்கழஞ்சு; முந்நாழி; முந்நூல்

(40)

**190. நான்கன் மெய்யே லறவா கும்மே.**

**நான்கன் மெய்யே ல ற ஆகும்மே**

nāṉkaṉ meyyē la ṟa ākummē

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Special rule for nanku**

Nanku (which is now without its ku) changes its n into l or r.

## ஒப்புமைப் பகுதி

**நான்க னொற்றே றகாரம் ஆகும்**

(தொல்.: 442)

---

பாட வேறுபாடு.:–

1. நாலியானை

நான்கன் மெய்யே லறவா கும்மே

(இ.வ.: 109)

நான்கன் மெய்யே றகார மாகும்

(மு.வீ.: 424)

## மயிலை நாதர்

இதுவுமது.

இ—ள்.: எண்ணாதிப்பெயர் வருமிடத்து நான்கென்னும் எண்ணிடை நின்ற னகரம் லகரமும் றகரமுமாகத் திரியும், எ — று.

வ — று.:—

நாலொன்று, நாலெடை, நாலுழக்கு, [1]நால்யானை
எனவும்; நாற்பது, நாற்கழஞ்சு, நாற்கலம், நாற்கவி
எனவும் வரும்.

## சங்கர நமச்சிவாயர்

எ — னின், இதுவும் அது.

இ — ள்.:— நால்வகைப்பெயரும் வருமிடத்து, இறுதி உயிர்மெய் கெட நின்ற நான்கு என்னும் எண்ணினது னகர ஒற்று லகர ஒற்றாயும் றகர ஒற்றாயும் திரியும், எ — று.

உ — ம்.:—

நாலொன்று, நாலெடை, நானாழி, நான்மணி எனவும்;
நாற்பது, நாற்கழஞ்சு, நாற்கலம், நாற்கவி எனவும்
வரும்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், நான்கென்னும் எண்ணின் விகாரம் கூறியது.

இ—ள்.:— நான்கன் மெய்யே — நான்கென்னும் எண்ணிடை நின்ற னகர ஒற்று, லறவாகும்மே — லகாரமும் றகாரமுமாய்த் திரியும், எ—று.

உ—ம்.:—

நாலொன்று, நாலிடை, நாலுழக்கு, நால்யானை
எனவும்; நாற்பது, நாற்கழஞ்சு, நாற்கலம், நாற்கவி
எனவும் வரும்.

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

இ–ள்.:– நான்கன் மெய் – ஈற்றுயிர்மெய் போக நின்ற நான் கென்னும் எண்ணுப் பெயரினது னகர வொற்று, ல ற வாகும்–லகர வொற்றாகவும் றகர வொற்றாகவுந் திரியும், எ–று.

உ–ம்.:–

நாலொன்று, நாலெடை, நாலாழாக்கு, நால்வீதி எனவும்; நாற்பது, நாற்கழஞ்சு, நாற்கலம், நாற்கவி எனவும்; லகர றகர வொற்றுக்களாய்த் திரிந்தது காண்க. பிறவுமன்ன.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

இ–ள்.:– நான்கன் – இறுதி யுயிர்மெய் கெட நின்ற நான்கென்னு மெண்ணினது, மெய்–னகர மெய், லறவாகும்–லகர மெய்யாகவும் றகர மெய்யாகவுந் திரியும், எ–று.

உ–ம்.:–

நான்கு+ஆயிரம்–நாலாயிரம், நான்கு + வழி – நால்வழி, என உயிரும் இடையெழுத்தும் வர ஈற்றுயிர்மெய் கெட்டு னகர மெய் லகர மெய்யாயிற்று, நான்கு+மணி–நான்மணி, என லகர மெய்யோடு மயங்காத மெல்லெழுத்து வரின் னகர மெய் இயல்பா மென்க. நான்கு+ பத்து–நாற்பது, என வல்லெழுத்து வர ஈற்றுயிர்மெய் கெட்டு னகர மெய் றகர மெய்யாயிற்று, மற்றவைகளு மிப்படியே.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

நான்கு என்னுஞ் சொல்லினுக்குச் சிறப்புவிதி கூறுஞ் சூத்திரம் யாது?

நான்கன் மெய்யே லறவாகும்மே.

(நான்கன் மெய்யே ல ற ஆகும் எ)

இ–ள்.: நான்கன் மெய் – (எண்முதலிய பெயர்கள் வருமிடத்து இறுதியுயிர்மெய் கெட நின்ற) நான்கென்னும் எண்ணினது னகரமெய், ல ற ஆகும் – லகர மெய்யாகவும் றகரமெய்யாகவுந் திரியும், ஏற்புழி – ஏற்குமிடத்து, எ–று.

நான்கு என்பது உயிர்க்கணம் இடைக்கணங்களோடு எவ்வாறு புணரும்?

நான்கு என்பது உயிர் இடைக்கணங்கள் வந்துழி ஈற்றுயிர்மெய் கெட்டும் மேல்நின்ற னகரவொற்று லகர வொற்றாய்த் திரிந்து புணரும்.

உ-ம்.:-

நாலென்று, நாலெடை, நாலுழக்கு, நாலடி எனவும் நால்வட்டி எனவும் வரும்.

வல்லினம் வருமிடத்து எவ்வாறு புணரும்?

ஈற்றுயிர்மெய் கெட்டு னகரம் றகரமாய்த் திரிந்து புணரும்.

உ-ம்.:-

நாற்பது, நாற்கழஞ்சு.

மெல்லினம் வருமிடத்து எவ்வாறு புணரும்?

னகரவீற்றுப் புணர்ச்சிபோற் புணரும்.

உ-ம்.:-

நான்மணி, நானாழி.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :- நான்கன் – (இறுதி உயிர்மெய் கெட்டு நின்ற) நான்கு என்னும் எண்ணினது, மெய் – னகர மெய்யானது, லறஆகும் – லகர மெய்யாகவும் றகர மெய்யாகவுந் திரியும்; ஏற்புழி ) – ஏற்குமிடத்து.

குறிப்பு :-

உயிரும் இடையினமும் வருமிடத்து னகரமெய் லகர மெய்யாகத் திரியும் எனவும், வல்லினம் வருமிடத்து றகரமெய்யாகத் திரியும் எனவும், மெல்லினம் வருமிடத்துத் திரியாதெனவுங் கொள்க.

உ-ம் :-

நான்கு + ஆயிரம் = நாலாயிரம்
நான்கு + வகை = நால்வகை

– உயிரும் இடையினமும் வரஈறுகெட்டு ன ல ஆயிற்று.

நான்கு + கவி = நாற்கவி
நான்கு + பால் = நாற்பால்

– வலிவர ஈறுகெட்டு ன ற ஆயிற்று

நான்கு + மணி = நான்மணி
நான்கு + நாழி = நானாழி

– மெலிவர ஈறுகெட்டு ன இயல்பாயிற்று.

இன்னும், மூவின மெய்களும் வருமிடத்து 'நாலு குதிரை', 'நாலு நாள்', 'நாலு வழி', என ஈறுகெட்டு னகரம் லகரமாய் உகரம் பெற்று வருதலையும், 'ஏற்புழி' என்றதில் அடக்கிக் கொள்க. 'நான்மணி', 'நானாழி' என்பவற்றில் 'நால்' எனவும் பிரிக்கலாம்.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– நான்கன் மெய் – இறுதி யுயிர்மெய் கெட நின்ற நான்கென்னும் எண்ணினது னகர மெய், ல ற ஆகும் – லகர மெய்யாகவும் றகர மெய்யாகவும் திரியும், (ஏற்புழி) – ஏற்குமிடத்து, எ – று.

'ஏற்புழி' என்றதனால், னகர மெய் லகரமாகத் திரிவது உயிரும் இடையினமும் வருமிடத்தெனவும், றகரமாகத் திரிவது வல்லினம் வருமிடத்தெனவும், மெல்லினம் வருமிடத்து னகர வீற்றுப் புணர்ச்சி போன் முடியும் எனவுங் கொள்க.

உ–ம்.:–

நாலொன்று, நாலெடை, நாலுழக்கு, நாலடி எனவும், நால்வட்டி எனவும், நாற்பது, நாற்கழஞ்சு எனவும், நான்மணி, நானாழி எனவும் வரும்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– நான்கன் மெய் – இறுதியுயிர்மெய் கெடநின்ற நான்கென்னும் எண்ணினது னகரமெய், லற ஆகும் – லகர மெய்யாகவும் றகர மெய்யாகவும் திரியும், (ஏற்புழி – ஏற்குமிடத்து) எ–று.

ஏற்புழி என்றதனால், னகரமெய் லகரமாகத் திரிவது உயிரும் இடையினமும் வருமிடத்தெனவும், றகரமாகத் திரிவது வல்லினம் வருமிடத்தெனவும், மெல்லினம் வருமிடத்து னகரவீற்றுப் புணர்ச்சிபோன் முடியும் எனவுங் கொள்க.

உ–ம்.:–

நாலொன்று, நாலெடை, நாலுழக்கு நாலடி, எனவும் நால்வட்டி, எனவும் நாற்பது, நாற்கழஞ்சு – எனவும் நாண்மணி, நானாழி, எனவும் வரும்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ—ள்.:-** நான்கன் (இறுதி உயிர்மெய் கெட்டு நின்ற) நான்கு என்னும் எண்ணினது, மெய்—னகர மெய், ல ற ஆகும் — லகர மெய்யாகவும் றகர மெய்யாகவும் திரியும் (ஏற்பு உழி — ஏற்குமிடத்து); எ—று.

'ஏற்புழி' என்றதனால், னகர மெய் லகரமாகத் திரிவது உயிரும் இடையினமும் வருமிடத்து என்றும், றகரமாகத் திரிவது வல்லினம் வருமிடத்து என்றும், மெல்லினம் வருமிடத்துத் திரியாது என்றும் கொள்க.

உ—ம்.:-

நான்கு + ஆயிரம் = நாலாயிரம், நான்கு + வகை நால்வகை உயிரும் இடையினமும் வர ஈறுகெட்டு னகரம் லகரமாயிற்று.

நான்கு + கவி = நாற்கவி, நான்கு + பால் = நாற்பால் வலிவர ஈறுகெட்டு னகரம் றகரமாயிற்று.

நான்கு + மணி = நான்மணி, நான்கு+ நாழி = நானாழி மெலிவர ஈறுகெட்டு னகரம் திரியாது நின்றது.

இன்னும் 'ஏற்புழி' என்றதனால், மூவின மெய்களும் வருமிடத்து நாலுகுதிரை, நாலுநாள், நாலுவழி என ஈறுகெட்டு னகரம் லகரமாய் உகரம் பெற்று வருதலும் கொள்க.

நான்மணி, நானாழி என்றவற்றில் நால் என்றும் பிரிக்கலாம்.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள்.:-** நான்கன் மெய் — இறுதி உயிர்மெய் கெட நின்ற நான்கென்னும் எண்ணினது னகர மெய், ல ற ஆகும் — லகர மெய்யாகவும், றகர மெய்யாகவும் திரியும், ஏற்புழி — ஏற்குமிடத்து. எ—று.

'ஏற்புழி' என்றதனால், னகரமெய் லகரமாகத் திரிவுது உயிரும் இடையினமும் வருமிடத்தெனவும், றகரமாகத் திரிவது வல்லினம்வருமிடத்தெனவும், மெல்லினம் வருமிடத்து னதவவீற்றுப் புணர்ச்சி போன் முடியும்எனவுங் கொள்க.

உ—ம்.:-

நான்கு + அடி = நாலடி.

நான்கு + வட்டம் = நால்வட்டம்.

நான்கு + கழஞ்சு = நாற்கழஞ்சு.

நான்கு + மணி = நான்மணி.

நான்கு + நாழி = நானாழி.

## கா.நமச்சிவாய முதலியார்

நான்கன் – இறுதியுயிர்மெய்கெட நின்ற நான்கென்னு மெண்ணினது, மெய் – னகரமெய், ல ற ஆகும் – (1) லகர மெய்யாகவும், (2) றகர மெய்யாகவும் திரியும்.

உதாரணம்:–

(1)நான்கு+ஆயிரம்=நாலாயிரம்
நான்கு + வழி = நால்வழி

– என உயிரும் இடையெழுத்தும் வர ஈற்றுயிர்மெய் கெட்டு னகர மெய் லகரமெய்யாயிற்று.

நான்கு + மணி = நான்மணி

– என லகரமெய்யோடு மயங்காத மெல்லெழுத்து வரின்,

னகரமெய்

இயல்பாமென்க.

(2) நான்கு + பத்து = நாற்பது

– என வல்லெழுத்து வர ஈற்றுயிர்மெய் கெட்டு னகர மெய் றகர மெய்யாயிற்று.

## மோசசு பொன்னையா

ஈற்றுயிர்மெய் கெட்டு நின்ற நான் என்பதன் முன்னர் அந்நால்வகைப் பெயரும் வர, இறுதியில் நின்ற மெய் லகரமாகவோ, றகரமாகவோ திரிந்து முடியும், எ–று.

---

பாட வேறுபாடு.:–

1. கெட்டும் இம்மூன்றினாலு முடியும்
2. ஐவ்வட்டம்
3. ஐ விரல் எனவும் அடைவதும் இனமும் கேடடைவதும் அடைவே காண்க

ஏற்புழி என்றதனால் றகரமாகத் திரிதல் வலிமுதன் மொழி வருமிடத்தே எனக் கொள்க.

எ-டு.:-

நாலொன்று, நாலெடை, நாலுழக்கு, நாலடி, நாற்பது,
நாற்கழஞ்சு.
இந்நூற்பாவில் றகரத்தைக் கூறியது மிகை என அறிக.

**(41)**

**191. ஐந்தனொற் றடைவது மினமுங் கேடும்.**

**ஐந்தன் ஒற்று அடைவதும் இனமும் கேடும்.**

aintaṉ oṟṟu ataivatum iṉamum kētum.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Special rule for aintu**

Aintu changes it (final) n into the coming initial consonant, or into its kindred (if it is a tense); or drops it (before a Vowel initial)

## ஒப்புமைப் பகுதி

ஐந்தன் ஒற்று மகாரம் ஆகும்
(தொல்.: 443)

ஐந்த னொற்றடைவது மினமுங் கேடும்
(இ.வி.: 110)

ஐந்த னொற்றே மெல்லெழுத் தாகும்
மு.வீ.: 430)

## மயிலை நாதர்

இதுவுமது.

**இ-ள்.:** எண்ணாதிப்பெயர் வருமிடத்து ஐந்தென்னு மெண்ணிடை நின்ற ஒற்று வருமொற்றாகியும் அதற்கினமாகியும் [1]கெட்டும் முடியும். எ-று.

வ-று.:-

ஐம்மூன்று, ஐம்மஞ்சாடி, [2]ஐவ்வட்டி, ஐவ்வண்ணம் எனவும்,
ஐம்பது, ஐங்கழஞ்சு, ஐங்கலம், ஐஞ்சந்தி எனவும்,
ஐயொன்று, ஐயெடை, ஐயாழாக்கு, [3]ஐயோடை எனவும்

வரும்.

## சங்கர நமச்சிவாயர்

## சிவஞான முனிவர்

எ–னின், இதுவும் அது.

இ–ள்.:– நால்வாகைப் பெயரும் வருமிடத்து இறுதி உயிர் மெய் கெட நின்ற ஐந்து என்னும் எண்ணினது நகர ஒற்று வரும் ஒற்றாகியும், அதற்கு இனமாகியும், கெட்டும் முடிவதாம், எ–று.

உ–ம்.:–

ஐம்மூன்று, ஐம்மஞ்சாடி, ஐவ்வட்டி, ஐவ்வண்ணம் எனவும்;
ஐம்பது, ஐங்கழஞ்சு, ஐங்கலம், ஐம்பொறி எனவும்;
ஐயொன்று, ஐயெடை, ஐயாழாக்கு, ஐயம்பு எனவும் வரும்.

அடைவதும் இனமும் என்றமையின், அருத்தாபத்தியான் ஐந்நூறு, ஐந்தூணி என்புழி ஒற்றுத் தன்னியல்பின் நிற்றலும் கொள்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், ஐந்தென்னும் எண்ணின் விகாரம் கூறியது.

இ–ள்.:– ஐந்தனொற்று – ஐந்தென்னும் எண்ணிடையே நின்ற நகார ஒற்று, அடைவதும் – வருமொழி முதல் வந்த ஒற்றாய்த் திரிதலும், இனமும் கெடும் – அதற்கு இனமாய்த் திரிதலும் கெடுதலும் இம் மூன்றினாலும் முடியும். எ–று.

உ–ம்.:–

ஐம்மூன்று, ஐம்மஞ்சாடி, ஐவ்வட்டம், ஐவ்வண்ணம் என வந்த ஒற்றாய்த் திரிந்தது. ஐம்பது, ஐங்கழஞ்சு, ஐங்கலம், ஐஞ்சந்தி என வந்ததற்கு இனமாய்த் திரிந்தது. ஐயொன்று, ஐயிடை, ஐயாழாக்கு ஐவிரல் என ஒற்று கெட்டது.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

இ–ள்.: ஐந்தன் – இறுதி யுயிர் மெய் கெட நின்ற ஐந்தென்னு மெண்ணினது, ஒற்று – நகர மெய்யானது, அடைவதும் – வருகிற மெய்யாகியும், இனமும்–அதற்கினமாகியும், கேடும்–கெட்டும் வரும், எ–று.

உ–ம்.:–

ஐந்து+மூன்று–ஐம்மூன்று, என மெல்லெழுத்து வர ஈற்றுயிர்மெய் கெட்டு நகர மெய் வந்த மெய்யாத் திரிந்தது.

ஐந்து + கழஞ்சு – ஐங்கழஞ்சு, என வல்லெழுத்து வர ஈற்றுயிர்மெய் கெட்டு நகரமெய் வந்த வெழுத்திற்கு இனமாயத் திரிந்தது, ஐந்து + ஆயிரம் – ஐயாயிரம், ஐந்து + வழி – ஐவழி, என உயிரும் இடையெழுத்தும் வர ஈற்றுயிர்மெய்யுடன் நகர மெய்யுங் கெட்டது, மற்றவைகளு மிப்படியே, (ஒரோவிடத்து ஐவ்வண்ணம் என வரும். 'அடைவதுமினமும்' என்றமையால் அருத்தாபத்தியால் ஐந்நூறு, ஐந்தூணி என நகர மெய் யியல்பாதல் கொள்க.)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஐந்தினுக்குச் சிறப்புவிதி கூறுஞ் சூத்திரம் யாது?

ஐந்தனொற் றடைவது மினமுங் கேடும்.

(ஐந்தன் ஒற்று அடைவதும் இனமும் கேடும்)

**இ–ள்.: ஐந்தன் ஒற்று** – (எண்முதலிய பெயர்கள் வருமிடத்து இறுதியுயிர்மெய் கெட நின்ற) ஐந்தென்னும் எண்ணினது நகரமெய், **அடைவதும் இனமும் கேடும்** –வருமெய்யாகத் திரிதலும் வருமெய்க்கினமாகத் திரிதலும் கெடுதலுமாம் (ஏற்புழி)–ஏற்குமிடத்து, எ–று.

ஐந்து உயிர்வரின் எவ்வாறு புணரும்?

மேலைப் பொதுவிதியான் ஈற்றுயிர்மெய் கெட்டு இடைநின்றவொற்று "ஐந்தனொற்றடைவது மினமுங் கேடும்" என்னுஞ் சிறப்புவிதியாற் கெட்டுப் புணரும்.

உ–ம்.:–

ஐயொன்று, ஐயிரண்டு.

மென்கணம் வரின் எவ்வாறு புணரும்?

ஈற்றுயிர்மெய் கெட்டு நகரவொற்று வருமொற்றாய்த் திரிந்து புணரும். நகரம் வரின் நகரவொற்றுத் திரியாது தானே நிற்கும்.

உ–ம்.:–

ஐம்மூன்று, ஐம்மஞ்சாடி, ஐம்மண்டை, ஐம்மணி,
ஐஞ்ஞாண், ஐந்நூறு, ஐந்நாழி, ஐந்நூல்.

வன்கணம் வரின் எவ்வாறு புணரும்?

ஈற்றுயிர்மெய் கெட்டு நகரவொற்று வருமொற்றிற்கு இனமாய்த் திரிந்தும் புணரும். தகரம் வரின் நகரவொற்றுத் திரியாது தானே நிற்கும்.

உ–ம்.:–

ஐம்பஃது, ஐங்கழஞ்சு, ஐங்கலம், ஐந்தலை.

இடையினம் வரின் எவ்வாறு புணரும்?

ஒற்றும் உயிர்மெய்யுங் கெட்டும், உயிர்மெய் கெட்டு ஒற்று வருமொற்றாய்த் திரிந்தும் புணரும்.

உ–ம்.:–

ஐவட்டி, ஐவண்ணம், ஐயாறு, ஐய்யாறு.

எனவே ஐந்து என்னுஞ் சொல் வருமொழியோடு புணரும்போது படுஞ் செய்கைகள் எத்தனை?

ஈற்றுயிர்மெய் கெடுதல், இடைநின்ற நகரம் வருமெய்யாகத் திரிதல், அதற்கினமாதல், கெடுதல் என நான்கு செய்கைகளாம்.

ஏற்புழி என்றதனால், நகரமெய் வருமெய்யாகத் திரிவது மெல்லினம் வருமிடத்தேனவும், இனமாகத் திரிவது, வல்லினம் வருமிடத்தெனவும் கெடுவது உயிரும் இடையினமும் வருமிடத்தெனவுங் கொள்க.

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

**இ–ள்.:–** ஐந்த **னொற்று** – ஈற்றுயிர்மெய் போக நின்ற, ஐந்தென்னு மெண்ணுப் பெயரிடை நின்ற நகர வொற்றானது, **அடைவதும்** – வந்த வொற்றாகத் திரிதலும், **இனமும்** – வந்ததற்கு இனமாகத் திரிதலும், **கேடும்** – கெடுதலுமாம், எ – று.

உ–ம்.:–

ஐம்மூன்று, ஐம்மஞ்சாடி, ஐவ்வண்ணம், என வந்ததாகத் திரிந்தது. ஐம்பது, ஐங்கழஞ்சு, ஐங்கலம், ஐம்பொறி என வந்ததற்கு இனமாகத் திரிந்தது. ஐயாயிரம், ஐயெடை, ஐயாழாக்கு, ஐயம்பு, எனக் கெட்டது. 'அடைவது மினமு' மென்றதினால் நகர தகரங்கள் வந்து புணரின் அருத்தாபத்தியால், ஐந்நூறு – ஐந்தூணி என அவ் வொற்றுத் தன்னியல்பாக நிற்றலுங் கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– ஐந்தன்** – (இறுதி உயிர்மெய் கெட்டுநின்ற) ஐந்து என்னும் எண்ணினது, **ஒற்று** – நகரமெய்யானது, **அடைவதும்** – (வருமொழி முதலில்) வருகிற மெய்யாகத் திரிதலும், **இனமும்** – அதற்கினமாகத் திரிதலும், **கேடும்** – கெடுதலுமாம்; (ஏற்புழி) – ஏற்குமிடத்து.

குறிப்பு :–

'ஏற்புழி' என்றதனால், மெல்லினம் வருமிடத்து நகர மெய் வருமெய்யாகத் திரியும் எனவும், வல்லினம் வருமிடத்து

இனமாகத் திரியும் எனவும், உயிரும் இடையினமும் வருமிடத்துக் கெடும் எனவும் கொள்க.

உ-ம் :-

ஐந்து + மூன்று = ஐம்மூன்று

– ந வருமெய்யாகத் திரிந்தது.

ஐந்து + பால் = ஐம்பால்

– வருமெழுத்துக்கு இனமாயிற்று

ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம்

ஐந்து + வகை = ஐவகை

நகரமெய் கெட்டது.

'அடைவதும் இனமும்' என்றமையின், அருத்தாபத்தியால் நகர தகரங்கள் வருமிடத்து நகரமெய் இயல்பாய் நிற்றலுங் கொள்க.

## ஆறுமுக நாவலர்

இ-ள்.: ஐந்தன் ஒற்று – இறுதி யுயிர்மெய் கெட நின்ற ஐந்தென்னும் எண்ணினது நகரமெய், அடைவதும் – வருமெய்யாகத் திரிதலும், இனமும் – வருமெய்க்கினமாகத் திரிதலும், கேடும் – கெடுதலுமாம், (ஏற்புழி) – ஏற்குமிடத்து, எ – று.

'ஏற்புழி' என்றதனால், நகர மெய் வருமெய்யாகத் திரிவது மெல்லினம் வருமிடத் தெனவும், இனமாகத் திரிவது வல்லினம் வருமிடத் தெனவும், கெடுவது உயிரும் இடையினமும் வருமிடத் தெனவுங் கொள்க.

உ-ம்.:-

ஐம்மூன்று, ஐஞ்ஞாண் எனவும், ஐம்பது, ஐங்கழஞ்சு, ஐங்கலம், ஐம்பொறி எனவும், ஐயொன்று எனவும், ஐவட்டி எனவும் வரும்.

அடைவதும் இனமும் என்றமையின், அருத்தாபத்தியால், நகர தகரங்கள் வருமிடத்து ஐந்நூறு ஐந்தூணி என நகரமெய் தன்னியல் பினிற்றலுங் கொள்க.

இன்னும், 'ஏற்புழி' என்றதனால், வகரம் வருமிடத்து ஐவண்ணம் என முடிதலே யன்றி, ஐவ்வண்ணம் என நகர மெய் வருமெய்யாகத் திரிந்து முடிதலுங் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

இ-ள். ஐந்தன் ஒற்று – இறுதியுயிர்மெய் கெடநின்ற ஐந்தென்னும்

எண்ணினது நகரமெய் - **அடைவதும்** - வருமெய்யாகத் திரிதலும்.

இன்னும், ஏற்புழி என்றதனால், வகரம்வருமிடத்து ஐ வண்ணம் என முடிதலேயன்றி, ஐவ்வண்ணம் என நகரமெய் வருமெய்யாகத் திரிந்து முடிதலுங் கொள்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ-ள்.:-** **ஐந்தன்** - (இறுதி உயிர்மெய் கெட்டு நின்ற) ஐந்து என்னும் எண்ணினது, **ஒற்று** - நகரமெய்யானது, **அடைவதும்** - (வருமொழி முதலில்) வருகிற மெய்யாகத் திரிதலும், **இனமும்** - அதற்கு இனமாகத் திரிதலும், **கெடும்** - கெடுதலுமாம்; (ஏற்பு உழி)-ஏற்குமிடத்து; எ-று.

'ஏற்புழி' என்றதனால், நகர மெய் வருமெய்யாகத் திரிவது மெல்லினம் வருமிடத்து என்றும், இனமாகத் திரிவது வல்லினம் வருமிடத்து என்றும், கெடுவது உயிரும் இடையினமும் வருமிடத்து என்றும் கொள்க.

**உ-ம்.:-**

ஐந்து + மூன்று = ஐம்மூன்று

- நகர வருமெய்யாகத் திரிந்தது.

ஐந்து + பால் = ஐம்பால்

- வருமெழுத்துக்கு இனமாயிற்று.

ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம், ஐந்து + வகை = ஐவகை

- நகர மெய் கெட்டது.

'அடைவதும் இனமும்' என்றமையின், அருத்தாபத்தியால் ஐந்நூறு, ஐந்தொழில் என நகர தகரங்கள் வருமிடத்து நகரமெய் இயல்பாய் நிற்கும்.

## பவானந்தம் பிள்ளை

**இ-ள்.:-** **ஐந்தன் ஒற்று** - இறுதி யுயிர்மெய் கெட நின்ற ஐந்தென்னும் எண்ணினது நகரமெய், **அடைவதும்** - வருமெய்யாகத்திரிதலும், **இனமும்** - வருமெய்க்கினமாகத் திரிதலும், **கேடும்** - கெடுதலுமாம், (ஏற்புழி - ஏற்குமிடத்து. எ-று.

ஏற்புழி என்றதனால், நகரமெய் வருமெய்யாகத் திரிவது மெல்லினம் வருமிடத்தெனவும், இனமாகத் திரிவது வல்லினம் வருமிடத்தெனவும், கெடுவதுஉயிரும்

இடையினமும் வருமிடத் தெனவுங் கொள்க.

உ-ம்.:-

ஐந்து + மூன்று = ஐம்மூன்று.

ஐந்து + கலம் = ஐங்கலம்

ஐந்து + ஒன்று = ஐயொன்று.

ஐந்து + வகை = ஐவகை.

'அடைவதும் இனமும்' என்றமையின், அருத்தாபத்தியால், நகர தகரங்கள் வருமிடத்து ஐந்நூறு ஐந்தூணி என நகரமெய் தன்னியல் பினிற்றலுங் கொள்க.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) **ஐந்தன்** - இறுதியுயிர் மெய்கெட நின்ற ஐந்தென்னு மெண்ணினது, **ஒற்று** - நகர்மெய்யானது, **அடைவதும்** - வருகிற மெய்யாகியும் ;

(2) **இனமும்** - அதற்கினமாகியும் ;

(3) **கேடும்** - கெட்டும் வரும்.

உதாரணம்.:-

(1) ஐந்து + மூன்று = ஐம்மூன்று

என மெல்லெழுத்து வர ஈற்றுயிர்மெய் கெட்டு நகரமெய் வந்த மெய்யாகத் திரிந்தது.

(2) ஐந்து + கழஞ்சு = ஐங்கழஞ்சு

என வல்லெழுத்துவர ஈற்றுயிர்மெய் கெட்டு நகரமெய் வந்த வெழுத்திற்கு இனமாகத் திரிந்தது.

(3)ஐந்து+ஆயிரம்= ஐயாயிரம்
ஐந்து + வழி = ஐவழி

என உயிரும் இடையெழுத்தும் வர, ஈற்றுயிர் மெய்யுடன் நகர மெய்யுங் கெட்டது.

**'அடைவது மினமும்'** என்றமையின் அருத்தாபத்தியால் ஐந்நூறு, ஐந்தூணி என நகரமெய் இயல்பாதல் கொள்க.

## மோசசு பொன்னையா

ஈற்றுயிர்மெய் கெட்டு நின்ற ஐந் என்பதன் முன்னர் அந்நால்வகைப் பெயரும் வர, இறுதியில் நின்ற மெய், வரும் மெய்யாகத் திரிதலையும், வரும் மெய்க்கு இனமாகத் திரிதலையும் கெடுதலையும் ஏற்புழிப் பொருந்தும்,

எ – று.

ஏற்புழி என்றதனால் வழிமொழியாய்த் திரிதல் மெலிவருமிடத்து எனவும், இனமாய்த்திரிதல் வலிவருமிடத்து எனவும், கெடுதல் உயிரும் இடையும் வருமிடத்து எனவும் கொள்க.

ஐ மூன்று; ஐஞ்ஞாண்; ஐம்பது; ஐங்கழஞ்சு; ஐங்கலம்; ஐம்பொறி; ஐயொன்று; ஐவட்டி.

(42)

**192. எட்ட னுடம்பு ணவ்வாகு மென்ப.**

**எட்டன் உடம்பு ணவ் ஆகும் என்ப.**

ettaṉ utampu ṇav ākum eṉpa.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Special rule for ettu**

Ettu (which has dropped the final tu) changes its t into n.

## ஒப்புமைப் பகுதி

எட்டன் ஒற்றே ணகாரம் ஆகும்

(தொல்.: 444)

எட்டன் ஒற்றே ணகார மாகும்

(இ.வி.: 111)

எட்ட னுடம்புண வ் வாகு மென்ப

(மு.வீ.: 426)

## மயிலை நாதர்

இதுவுமது.

இ–ள்.: என்னாதி நாற்பெயரும் வருமிடத்து எட்டென்னும் எண்ணிடை நின்ற ஒற்று ணகாரமாகத் திரியுமென்று சொல்லுவர், புலவர், எ – று.

வ – று.:–

எண்பது, எண்கழஞ்சு, எண்கலம், எண்குணம் என வரும். இவற்றுட் சில குற்றுகரங்கள் முற்றுகரமாகத் திரிந்து புணர்ச்சிக்கண் இயல்புச் சந்தியாக முடிவன வெல்லாம், “மூன்றாறுருபு” என்னும் சூத்திர விதியுட் கண்டுகொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ—னின்,** இதுவும் அது.

**இ—ள்.:** நால்வகைப் பெயரும் வருமிடத்து, இறுதி உயிர் மெய் கெட நின்ற எட்டு என்னும் எண்ணினது டகர ஒற்று ணகர ஒற்றாகும் என்று சொல்லுவர் புலவர், எ—று.

உ—ம்.:—

எண்பது, எண்கழஞ்சு, எண்கலம், எண்குணம் என வரும்.

'எண்ணிறை அளவும்' என்னும் சூத்திரத்துள் கூறிய புணர்ச்சிக்கு வேண்டும் விகாரம் இதுகாறும் என்பது தோன்ற, அச் சூத்திரத்துள் கூறிய 'புலவர்' என்னும் எழுவாயைச் சுட்டி, அதன் பயனிலையாக இச் சூத்திரத்து இறுதிக்கண் 'என்ப' என்றார்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், எட்டென்னும் எண்ணின் விகாரம் கூறியது.

இ—ள்.:— எட்டனுடம்பு — எட்டென்னும் எண்ணிடை நின்ற டகர வொற்று, ணவ்வாகு மென்ப — ணகரமாய்த் திரியு மென்று சொல்லுவர் புலவர், எ—று.

உ—ம்.:—

எண்பது, எண்கழஞ்சு, எண்கலம், எண்குணம் என வரும்.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

இ—ள்.:— எட்டன் — இறுதியுயிர் மெய் கெட நின்ற எட்டென்னு மெண்ணினது, உடம்பு — டகர மெய்யானது, ணவ்வாகும் — ணகர மெய்யாகும், என்ப—என்று சொல்லுவர் புலவர், எ — று.

உ—ம்.:—

எட்டு + ஆயிரம்—எண்ணாயிரம், என ஈற்றுயிர்மெய் கெட்டு டகர மெய் ணகர மெய் யாயிற்று, மற்றவைகளு மிப்படியே.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

எட்டினுக்குச் சிறப்புவிதி கூறுஞ் சூத்திரம் யாது?

எட்ட னுடம்புணவ் வாகுமென்ப.

(எட்டன் உடம்பு ண ஆகும் என்ப.)

இ-ள்.:- எட்டன் உடம்பு ண ஆகும் என்ப-(எண்முதலிய பெயர்கள் வருமிடத்து இறுதியுயிர்மெய் கெட நின்ற) எட்டென்னும் எண்ணினது டகரமெய் நாற்கணமும் வர ணகரமெய்யாகத் திரியும் என்று சொல்லுவர் புலவர், எ-று.

உ-ம்.:-

எண்பது, எண் கழஞ்சு, எண்கலம், எண்குணம் எனவும்,
எண்ணாழி எனவும், எண்வகை எனவும், எண்ணைந்து
எனவும் வரும்.

"எண்ணிறையளவும்" என்னுஞ் சூத்திரத்துட் கூறிய புணர்ச்சிக்கு வேண்டும் விகாரம் எச்சூத்திரம் வரையும் கூறப்படுகின்றது?

இச்சூத்திரம்காறுமே.

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

இ-ள்.: எட்டனுடம்பு - ஈற்றுயிர்மெய் கெட நின்ற எட்டென்னு மெண்ணுப் பெயரிடை நின்ற டகர வொற்று, ணவ்வாகு மென்ப-ணகர வொற்றாகத் திரியு மென்று சொல்லுவர் புலவர், எ-று.

உ-ம்.:-

எண்பது, எண்கழஞ்சு, எண்கலம் என வரும். 'எண்ணிறை யளவு' மென்னுஞ் சூத்திரத்திற் கூறிய புணர்ச்சிக்கு வேண்டும் விகாரம் இதுவரைக்கு மென்பது தோன்ற அச் சூத்திரத்திற் கூறிய புலவ ரென்னு மெழுவாயைக் குறித்து அதன் பயனிலையாக இச் சூத்திரத்தின் இறுதியிலே 'என்ப' எனக் கூறினார்.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை** :- **எட்டன்** - (இறுதி உயிர்மெய் கெட்டுநின்ற) எட்டு என்னும் எண்ணினது, **உடம்பு** - டகர மெய்யானது, **ண ஆகும்** - (நாற்கணமும் வர) ணகர மெய்யாகும், **என்ப** - என்று சொல்லுவர் (புலவர்.)

உ-ம் :-

எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம்

எட்டு + நாழி = எண்ணாழி

எட்டு + கழஞ்சு = எண்கழஞ்சு

எட்டு + வகை = எண்வகை

குறிப்பு:-

வழக்கில் 'எட்டுக் குதிரை', 'எட்டெழுத்து' என இயல்பாதலுங் கொள்க.

## ஆறுமுக நாவலர்

இ-ள்.: எட்டன் உடம்பு - இறுதி யுயிர்மெய் கெட நின்ற எட்டென்னும் எண்ணினது டகர மெய், ண ஆகும் என்ப - நாற்கணமும் வர ணகர மெய்யாகத் திரியும் என்று சொல்லுவர் புலவர், எ-று.

உ-ம்.:-

எண்பது, எண்கழஞ்சு, எண்கலம், எண்குணம் எனவும்,
எண்ணாழி எனவும், எண்வகை எனவும், எண்ணைந்து
எனவும் வரும்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ-ள். எட்டன் உடம்பு- இறுதியுயிர்மெய் கெடநின்ற எட்டென்னும் எண்ணினது டகரமெய், - ண ஆகும் என்ப - நாற்கணமும்வர ணகரமெய்யாகத் திரியும் என்று சொல்லுவர் புலவர். - எ-று.

உ-ம்.:-

எண்பது, எண்கழஞ்ச, எண்கலம், எண்குணம், எனவும்
எண்ணாழி எனவும் எண்வகை எனவும் எண்ணைந்து.
எனவும் வரும்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ-ள்.:- எட்டன் - (இறுதி உயிர்மெய் கெட்டு நின்ற) எட்டு என்னும் எண்ணினது, உடம்பு - டகர மெய்யானது, ண ஆகும் - (நாற்கணமும் வர) ணகர மெய்யாகத் திரியும், என்ப - என்று சொல்வர் (புலவர்); எ-று.

உ-ம்.:-

எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம்,
எட்டு + நாழி = எண்ணாழி,
எட்டு +கழஞ்சு = எண்கழஞ்சு,

எட்டு +வகை = எண்வகை.

## பவானந்தம் பிள்ளை

இ-ள்.:- எட்டன் உடம்பு - இறுதியுயிர்மெய் கெட நின்ற எட்டென்னும் எண்ணினது டகரமெய், ண ஆகும் என்ப - நாற்கணமும் வர ணகர மெய்யாகத் திரிவும் என்று சொல்லுவர் புலவர். எ-று.

எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம்.

எட்டு + கலம் = எண்கலம்.

எட்டு + நாழி = எண்ணாழி

எட்டு + வகை = எண்வகை.

## கா.நமச்சிவாய முதலியார்

எட்டன் - இறுதியுயிர்மெய் கெட நின்ற எட்டென்னு மெண்ணினது, உடம்பு - டகரமெய்யானது, ணவ்வாகும் - ணகர மெய்யாகும், என்ப - என்று சொல்லுவர் புலவர்.

**உதாரணம்:-**

| | | | | |
|---|---|---|---|---|
| எட்டு | + | ஆயிரம் | = | எண்ணாயிரம் |
| | + | கழஞ்சு | = | எண்கழஞ்சு |
| | + | நாழி | = | எண்ணாழி |
| | + | வகை | = | எண்வகை |

என ஈற்றுயிர்மெய் கெட்டு, டகரமெய் ணகரமெய் ஆயிற்று.

## மோசசு பொன்னையா

ஈற்றுயிர்மெய் கெட்டு எட் என்பதன் முன்ர் அந்நால்வகைப் பெயரும் வர இறுதியில் நின்ற மெய் ணகரமாகத் திரியும் என்பர்.

எ-டு.:-

எண்பது; எண்கழஞ்சு; எண்கலம்; எண்குணம்;

எண்ணாழி; எண்வகை; எண்ணைந்து.

(43)

**193.** ஒன்பானொடு பத்து நூறு மொன்றின்
முன்னதி னேனைய முரணி யொவ்வொடு
தகர நிறீஇப் பஃதகற்றி னவ்வை
நிரலே ணளவாத் திரிப்பது நெறியே.

ஒன்பான் ஒடு பத்து நூறும் ஒன்றின்

முன்னதின் ஏனைய முரணி ஒவ் ஒடு
தகர நிறீஇப் பஃது அகற்றி னவ்வை
நிரலே ண ள ஆத் திரிப்பது நெறியே.

onpān otu pattu nūrum onrin
munnatin ēnaiya murani ov otu
takara nirīip pakhtu akarri navvai
niralē na la āt tirippatu neriyē.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Special rule for onpatu before pattu and nuru**

When onpatu combines with pattu and nuru the latter like 'onpatu' itself, are respectively changed into nur and ayiram; (then) t is refixed to the initial o, pattu is dropped, and n changed into n or l (according as the following Numeral is **nuru** or ayiram) this is the proper method.

## ஒப்புமைப் பகுதி

ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்
முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்
பஃதென் கிளவி யாய்தபக ரங்கெட
நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி
ஒற்றிய தகரம் றகாரம் ஆகும்

(தொல்.: 445)

ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே
முந்தை யொற்றே ளகாரம் இரட்டும்
நூறென் கிளவி நகார மெய்கெட
ஊஆ வாகும் இயற்கைத் தென்ப
ஆயிடை வருதல் இகார ரகாரம்
ஈறுமெய் கெடுத்து மகாரம் ஒற்றும்

---

பாட வேறுபாடு:-

1. எண்ணின்
2. ஒன்றூனமான பத்தானேபத்தும் நூறுமானமொழிகள்
3. ணகார ளகாரமாக
4. இரட்டியாது

(தொல்.: 463)

ஒன்பா னொடுபத்து நூறதனை ஓதுங்கால்
முன்பாந் தகரணள முன்பிரட்டும் – பின்பான
எல்லாங்கெட் டாறிரண் டாவியின்பின் வல்லுகரம்
நல்லாய் இகரமீறாய் நாட்டு

(நேமி.: 21)

ஒன்பா னொடுபத்து நூறு மொன்றி
னொன்றிய விரண் மூறு மாயிரமு
மென்று திரிய விறுதிய கெடுவழி
நின்ற னகர நிரலே ணளவா
யிரட்ட வொகரமிசைத் தகர மொற்றும்.

(இ.வி.: 112)

ஒன்பா னொடுபத்து நூறு மொன்றின்
முன்னதி னேனைய முரணி யொவ்வொடு
தகர நிறீஇப்பஃ தகற்றி னவ்வை
நிரலே ணளவாய்த் திரிப்பது நெறியே

(மு.வீ.: 444)

## மயிலை நாதர்

எ–ன், தொண்ணூறும் தொள்ளாயிரமும் முடிக்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– ஒன்பதென்னும் [1]எண் முன்னர்ப் பத்தும் நூறுமான எண்கள் வரின், நிலைமொழியான [2]ஒன்றூனப் பத்தானே வருமொழி களிரண்டையு மாறி அதன்பின் அதன் ஒகாரத்துடனே ஒரு தகரவொற்றைச் சேர்த்துப் பஃதென்பதனை யொழித்து முறையே [3]ணகரமும் ளகரமுமாக னகர வொற்றறைத் திரிப்பது முறைமை, எ–று.

ஒன்றூனமானபத்து – ஒன்பது; அஃது அக் காலச்சொல்.

வ – று.:–

தொண்ணூறு, தொள்ளாயிரம் என வரும்.

எட்டாற் பெருக்கின பத்து எண்பதானாற் போலவே ஒன்றூனப் பத்தாற் பெருக்கின பத்தும் நூறும் தொண்ணூறும் தொள்ளாயிரமுமா மென்க. 'நெறி' என்றதனான் ஒற்று [4]இரட்டாது தொளாயிரமென்பதும் கொள்க.

**சங்கர நமச்சிவாயர்**
**சிவஞானமுனிவர்**

எ–னின், ஒன்பது என்னும் எண்ணுப்பெயர்க்கு எய்தாதது எய்துவித்தலும், அதனோடு புணரும் பத்து நூறு என்னும் வருமொழிகட்கு *'இயல்பினும் விதியினும்' என்னும் சூத்திரத்தானும் 'எண்மூ எழுத்தீற்று' என்னும் சூத்திரத்தானும்* எய்தியது விலக்கிப் பிறிதுவிதியும் உணர்–ற்று.

இ–ள்.:– ஒன்பஃதுடனே பத்து என்பதும் நூறு என்பதும் வந்து புணருமாயின், அந் நிலைமொழி வருமொழிகளுள் முன்னர்த்தாகிய நிலைமொழி யினின்றும் ஏனை வருமொழி யாகிய பத்தையும் நூற்றையும் நிரனிறை வகையானே நூறு எனவும் ஆயிரம் எனவும் திரித்து, நிலைமொழிக்கு முதற்கண் ஒகர உயிரோடு தகர மெய்யை அதற்கு ஆதாரமாக நிறுத்தி, அந் நிலைமொழி யிறுதிக்கண் பஃதைக் கெடுத்து, அம் மொழிமுதற்கு அயல் நின்ற னகர ஒற்றை முறையே ணகர ஒற்றாயும் ளகர ஒற்றாயும் திரிப்பது முறைமையாம், எ – று.

*முன்னதின் என்னும் இன்னுருபு நீங்கற்பொருட்டாய், ஏனைய என்னும் இடைச்சொல் லடியாகத் தோன்றிய வினைக் குறிப்புப்பெயர் கொண்டது.*

*நிலைமொழித் திரிபுபோல வருமொழித் திரிபும் வகைபடக் கூறாது பொதுப்பட முரணி என்றாரேனும்.*

"ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்
முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்
பஃதென் கிளவி ஆய்தபக ரம்கெட
நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி
ஒற்றிய தகரம் றகர மாகும்"

*எனவும்,*

"ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே
முந்தை ஒற்றே ளகாரம் இரட்டும்
நூறென் கிளவி நகார மெய்கெட
ஊஆ வாகும் இயற்கைத் தென்ப
ஆயிடை வருதல் இகார ரகாரம்
ஈறுமெய் கெடுத்து மகரம் ஒற்றும்"

*எனவும் ஆசிரியர் தொல்காப்பியர் கூறியவாற்றால் அவற்றின் திரிபு அறிந்து திரித்துக் கொள்க.*

*நெறியே என்ற இலேசானே தனிக்குறில்முன் ஒற்று இரட்டித்தலும் கொள்க.*

உ-ம்.:-

தொண்ணூறு எனவும், தொள்ளாயிரம் எனவும் வரும். தொளாயிரம் என இக்காலத்து மரீஇயிற்று.

ஒன்பஃது நின்று புணரினும் ஒன்பது நின்று புணரினும் இம் முடிபேயாம் என்பார், பஃதகற்றி என்பதனோடு பொருந்த ஒன்பஃதொடு என்னாது ஒன்பானொடு என்றும், தகர ஒற்றை ஒகர வுயிர்க்கு உடம்பாக நிறுத்துக என்பார் ஒவ்வொடு என்றும், இப் புணர்மொழிகள் ஒகரவுயிர் ஒன்று ஒழிய விகாரப்பட்டுக் கிடந்தமையின் குறிப்பின்றி முடியும் மரூஉ முடிபு என்று கொள்ளற்க என்பார், திரிவது என்னாது திரிப்பது என்றும், இவற்றை இலக்கண முடிபாகத் தொல்லாசிரியர் முடித்தவாறு முடித்தாம் என்பார், நெறியே என்றும் கூறினார்.

இச் சூத்திரத்து முன்னதின் ஏனைய முரணி என்பதற்கு இவ்வாறு பொருள்கொள்ளாது ஒன்பஃதினானே பத்தையும் நூற்றையும் பெருக்கி எனப் பொருள் கொள்வாரும் உளர்.

முரணி என்னும் சொற்கு அது பொருளன்றாதலானும், அது பொருளாமேனும் அதனால் வருமொழி இவ்வாறு திரிந்த எனத் தோன்றாமையானும், தோன்றின் நிலைமொழிக்கு விகாரம் கூற வேண்டாமையானும் அது பொருந்தாது என்க.

***இன்னும், முன்னதின் ஏனைய முரணி என்பதற்கும்,*** நிலை மொழியாய எட்டின்மேல் ஒன்று ஒன்பஃது எனப் பஃது என்னும் இறுதியாய்த் திரிந்து நின்றாற்போல, வருமொழியாய எண்பதின் மேல் பத்தை நூறு எனவும் எண்ணூற்றின்மேல் நூற்றை ஆயிரம் எனவும் ***திரித்துப் பொருள்கோடலும் ஒன்று.***

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், தொண்ணூறும் தொள்ளாயிரமும் முடிக்குமாறு கூறியது.

இ-ள்.:- **ஒன்பானொடு பத்தும்** - ஒன்பதென்னும் எண் முன்னர்ப் பத்தும், **நூறுமொன்றின்** - நூறுமான எண்கள் வந்து பொருந்தின், **முன்னதின்** - முன் நிலைமொழியாய் நின்ற ஒன்பதென்னும் எண்ணாவது எட்டும் ஒன்றும் சேர்ந்து எட்டு ஒன் ஒன்றாய் ஒன்று பத்தாய் ஒன்பது ஆனவாறு போல, **ஏனைய முரணி** - வருமொழிகள் இரண்டையும் நூறென்றும் ஆயிரமென்றும் மாறி, **ஒவ்வொரு தகர நிறீஇ** - நிலைமொழி முதனின்ற ஒகாரத்துடனே ஒரு தகரவொற்றைச் சேர்த்து, **பஃதகற்றி** - பஃதென்பதனை ஒழித்து, **னவ்வை நிரலே ண ள வாய்த் திரிப்பது நெறியே** - நிகழும் மொழியீற்றி னின்ற னகர வொற்றை முறையே ணகாரமும்

ளகாரமுமாய்த் திரிப்பது முறையாம், எ—று.

உ—ம்.:—

தொண்ணூறு, தொள்ளாயிரம் என வரும்.

## விசாகப் பெருமாளையர்

இது, ஒன்பதிற்கு எய்தாத தெய்துவித்தலும் அதனோடு புணரும் பத்திற்கும் நூற்றிற்கும் "இயல்பினும்" என்பதனாலும் "எண்மூவெழுத்து" என்பதனாலும் எய்தியது விலக்கிப் பிறிது விதியும் உணர்த்துகின்றது,

இ—ள்.:— **ஒன்பானொடு** — ஒன்பஃதுடனே, **பத்தும்** — பத்தென்பதும், **நூறும்** — நூறென்பதும், **ஒன்றின்** — வந்து புணருமாயின், **முன்னதின்** — முன்னதாகிய நிலைமொழினின்றும், **ஏனைய** — மற்றை வருமொழிகளாகிய பத்தையும் நூற்றையும், **முரணி** — முறையே, நூறெனவும் ஆயிரமெனவுந் திரித்து, **ஒவ்வொடு** — நிலைமொழி முதலிலுள்ள ஒகர வுயிரோடு, **தகரம்** — தகர மெய்யை, **நிறீஇ** — அதற்கு ஆதாரமாக நிறுத்தி, **பஃது**—அந் நிலைமொழி யிறுதியிலுள்ள பஃதை, **அகற்றி**—கெடுத்து, **னவ்வை** — அம் மொழி முதற் கயனின்ற னகர மெய்யை, **நிரலே** — முறையே, **ணளவா**—ணகர மெய்யாகவும் ளகர மெய்யாகவும், **திரிப்பது** — திரிப்பது, **நெறி**—முறையாகும், எ — று.

"நெறியே" என்ற விலேசானே தனிக்குறின் முன்னொற்றி ரட்டித்தலுங் கொள்க.

உ—ம்.:—

ஒன்பஃது + பத்து — தொண்ணூறு, ஒன்பஃது + நூறு — தொள்ளாயிரம் என வரும். தொளாயிர மென விக்காலத்தில் வழங்குகின்றது (பஃதகற்றி, என்பதனோடு பொருந்த ஒன்பஃதனோ டென்னாது "ஒன்பானோடு" என்றமையால் ஒன்பது நின்று புணரினு மிவ்விதியே பெறுமென்றறிக.)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஒன்பதென்னும் எண்முன்னர்ப் பத்தும் நூறும் வந்து புணர்வழிப்படும் விகாரங் கூறுங் சூத்திரம் யாது?

ஒன்பா னொடுபத்து நூறு மொன்றின்
முன்னதி னேனைய முரணி யொவ்வொடு
தகர நிறீ இப்பஃ தகற்றி னவ்வை
நிரலே ணளவாத் திரிப்பது நெறியே.

(ஒன்பானொடு பத்தும் நூறும் ஒன்றின்
முன்னதின் ஏனைய முரணி ஒவ்வொடு

தகரம் நிறீஇ பஃது அகற்றி னவ்வை
நிரலே ணள ஆத் திரிப்பது நெறி)

இ–ள்.:– ஒன்பான் ஒடு பத்தும் நூறும் ஒன்றின்–ஒன்பதுடனே பத்தென்பதும் நூறென்பதும் வந்து புணருமாயின், முன்னதின் – முன்னதாகிய பத்தினாலே, ஏனைய முரணி–மற்றை வருமொழியாகிய பத்தையும் நூற்றையும் பெருக்குமாற்றால் நூறெனவும் ஆயிரமெனவும் திரித்து, நிறுத்தி, ஒவ்வொடு தகரம் நிறீஇ – நிலை மொழி முதலிலுள்ள ஒகரவுயிரோடு தகரமெய்யை அதற்கு ஆதாரமாகநிறுத்தி, பஃது அகற்றி – அந்நிலைமொழி யிறுதியிலுள்ள பஃதைக் கெடுத்து, நிரலே ண ள ஆத் திரிப்பது நெறி – அம்மொழி முதற்கு ளகரமெய்யாகவுந் திரிப்பது முறையாகும், எ–று.

நெறியே என்ற இலேசானே, தனிக்குறின் முன்னொற் றிரட்டித்தலுங் கொள்க.

(1) ஒன்பது–பத்து–(1) ஒன்பதுநூறு, (2) தொன்பதுநூறு, (3) தொன்நூறு, (4) தொண்நூறு, (5) தொண்ணூறு

ஒன்பது–பத்து–என்பதில் பத்து என்பதை நூறு எனத் திரித்து தகரமெய்யை ஏற்றி, தொன்பது நூறு என ஆக்கி தொன்பது என்பதனீற்றிலுள்ள பஃது என்பதை அகற்றித் தொன்நூறு என்றாக்கி, தொன் என்பதன் னகரமெய்யை ணகரமெய்யாக்கித் தொண்நூறு என்றாக்கித் தொண்ணூறு எனப் புணர்த்துக.

(2) ஒன்பது–நூறு– (1) ஒன்பது ஆயிரம், (2) தொன்பது ஆயிரம், (3) தொன் ஆயிரம், (4) தொள் ஆயிரம் (5) தொள்ளாயிரம், (6) தொளாயிரம் என இக்காலத்து மருவியது.

பஃதகற்றி யென்பதனோடு பொருந்த ஒன்பஃதனோ டென்னாது ஒன்பானொடென்றமையால், ஒன்பது நின்று புணரினும் இவ்விதியே பெறுமென்றறிக.

## முகவை இராமானுச கவிராயர்

இது, ஒன்பதென்னு மெண்ணுப் பெயர்க்கு எய்தாதது எய்துவித்தலும், அதனொடு புணரும் பத்து நூறு என்னும் வருமொழிகட்கு எய்தியது விலக்கிப் பிறிது விதியு முணர்த்துகின்றது.

இ–ள்.:– ஒன்பானொடு பத்துநூறு மொன்றின் – ஒன்பதுடனே பத்தென்பதும் நூறென்பதும் வந்து புணருமாயின், முன்னதின் –எட்டின் மேலொன்று வரத் திரிந்த அவ் வொன்ப தென்னும் நிலைமொழியைப் போல,

ஏனைய – மற்றைப் பத்தையும் நூற்றையும், முரணி – திரித்து, ஒவ்வொடு தகர நிறீஇ – நிலைமொழிக்கு முன்னின்ற ஒகர வுயிரொடு தகர மெய்யை அதற்கு ஆதாரமாக நிறுத்தி, பஃதகற்றி – அந்த நிலைமொழி யீற்றிலே நின்ற பத்தைக் கெடுத்து, னவ்வை– (அம்மொழி முதற்கு அயலிலே நின்ற) னகர வொற்றை, நிரலே – வரிசையாகவே, ணளவாத் திரிப்பது நெறி– பத்தின் திரிபாகிய நூற்றின் புணர்ச்சிக்கு ணகரமாகவும் நூற்றின் திரிபாகிய ஆயிரத்தின் புணர்ச்சிக்கு ளகரமாகவுந் திரித்துக் கொள்வது முறையாகும், எ–று.

உ–ம்.:–

தொண்ணூறு எனவும், தொள்ளாயிரம் எனவும் வரும். இது, தொளாயிர மென இக்காலத்து வழங்கிற்று.

ஒன்பஃது நின்று புணரினும், ஒன்பது நின்று புணரினும், இந்த முடிபே யாமென்பார், 'பஃதகற்றி' யென்பதனோடு பொருந்த ஒன்பஃதோ டென்னாது, 'ஒன்பானோ' டென்றும், இவ்வாறாதலிற் சொல் முழுதும் விகாரப்படு மென்று சொல்ல வந்தவர் 'ஒன்றின்' என்றும், ஒன்பஃது என்பது இறுதியிலே பஃதென்னும் ஒலி தோன்ற முரணிற்றென்பார், அதனை யுவமையாக்கி முன்னதி னென்றும், ஒன்றுபத்தானாற் போலப் பத்தை நூறாகவும் நூற்றை யாயிரமாகவுந் திரிக்க வென்பார், 'முரணி'யென்றும், இப் புணர்மொழிகள் ஒகர வுயிரொன் றொழிய விகாரப்பட்டுக் கிடந்தமையால் குறிப்பின்றி முடியும் மரூஉ முடிபென்று கொள்ளாதொழிக வென்பார், திரிவதென்னாது 'திரிப்ப'தென்றும், இவற்றைத் தொல்லாசிரியர் முடித்தவாறே முடித்தா மென்பார் நெறியே யென்றுங் கூறினார்.

"ஒன்பா னொகரமிசைத் தகர மொற்று·
முந்தை யொற்றே ணகார மிரட்டும்
பஃதென் கிளவி யாய்த பகரங்கெட
நிற்றல் வேண்டு மூகாரக் கிளவி
யொற்றிய தகரம் றகார மாகும்"

எனவும்,

"ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே
முந்தை யொற்றே ளகாரமிரட்டும்
நூறென் கிளவி நகார மெய்கெட
ஊவா வாகு மியற்கைத் தென்ப

ஆயிடை வருத லிகார ரகார

மீறுமெய் கெடுத்து மகார மொற்றும்"

எனவும், ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலுங் காண்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :-

ஒன்பானொடு – ஒன்பதுடனே, பத்தும் – பத்து என்பதும், நூறு நூறு என்பதும், ஒன்றின் – (வருமொழியாக வந்து) புணருமாயின், முன்னதின் – முன்னதாகிய நிலைமொழியினின்றும், ஏனைய – மற்றை வருமொழிகளாகிய பத்தையும் நூற்றையும், முரணி – (முன்றயே நூறெனவும் ஆயிரமெனவும்) திரித்து, ஒவ்வொடு – (நிலைமொழி முதலிலுள்ள) ஒகர உயிரோடு – தகரம் – தகர மெய்யை, நிரீஇ – (அதற்கு ஆதாரமாக முன்) நிறுத்தி, பஃது – அந்நிலைமொழி யிறுதிலுள்ள) பஃதை, அகற்றி – கெடுத்து, னவ்வை – (அயிலில் நின்ற) னகரமெய்யை, நிரலே – முறையே, ணள ஆ – (பத்தின் திரிபாகிய நூற்றின் புணர்ச்சிக்கு) ணகர மெய்யாகவும் (நூற்றின் திரிபாகிய ஆற்றின் புணர்ச்சிக்கு) ளகர மெய்யாகவும் திரிப்பது – திரித்துக் கொள்வது, நெறி – முறைமையாகும்.

குறிப்பு.:-

'நெறி' என்றதால், தனிக்குறில் முன்னொற்றாகிய ளகர மெய் ஆயிரம் வரும்பொழுது இரட்டுதலுங் கொள்க.

உ–ம்.:-

ஒன்பஃது + பத்து = ஒன்பஃது நூறு = தொன்பஃது நூறு = தொன்நூறு = தொண்நூறு = தொண்ணூறு.

ஒன்பஃது + நூறு = ஒன்பஃது ஆயிரம் = தொன்பஃது ஆயிரம் = தொன் ஆயிரம் = தொள் ஆயிரம் = தொள்ளாயிரம். (இது தொளாயிரம் எனவும் வழங்கும்.)

'பஃதகற்றி' என்பதனோடு பொருந்த, 'ஒன்பஃதனொடு' என்னாமல், 'ஒன்பானொடு' என்றமையால், ஒன்பது

நின்று புணரினும் இவ்விதியே பெறுமென்றறிக. (முரணுதல் – ஓரிலக்கம் ஏற்றிமாற்றுதல்).

இப்புணர்மொழிகள் ஒகர உயிர் ஒன்றொழிய மற்றவையெல்லாம் விகாரப்பட்டுக் கிடந்தமையால், மரூஉ என்று கொள்ளாமைப் பொருட்டுத் 'திரிவது' என்னாமல் 'திரிப்பது' என்றும்; தொல்லாசிரியர் முடித்தவாறே முடித்துக்காட்டினோ மென்பார் 'நெறி' என்றுங் கூறினார்

என்க.

## ஆறுமுக நாவலர்

இ-ள்.:- ஒன்பானொடு பத்தும் நூறும் ஒன்றின் - ஒன்பதுடனே பத்தென்பதும் நூறென்பதும் வந்து புணருமாயின், முன்னதின் ஏனைய முரணி - முன்னதாகிய நிலைமொழியினின்றும் மற்றை வருமொழிகளாகிய பத்தையும் நூற்றையும் முறையே நூறெனவும் ஆயிரமெனவுந் திரித்து, ஒவ்வொடு தகரம் நிறீஇ - நிலைமொழி முதலிலுள்ள ஒகர வுயிரோடு தகர மெய்யை அதற்கு ஆதாரமாக நிறுத்தி, பஃது அகற்றி - அந் நிலைமொழி யிறுதியிலுள்ள பஃதைக் கெடுத்து, னவ்வை நிரலே ண ள ஆத் திரிப்பது நெறி - அம் மொழி முதற்கு அயனின்ற னகர மெய்யை முறையே ணகர மெய்யாகவும் ளகர மெய்யாகவுந் திரிப்பது முறையாகும், எ - று.

'நெறியே' என்ற இலேசானே, தனிக்குறின் முன்னொற்றி ரட்டித்தலுங் கொள்க.

உ-ம்.:-

ஒன்பது + பத்து = (1) ஒன்பது நூறு, (2) தொன்பது நூறு, (3) தொன் நூறு, (4) தொண் நூறு, (5) தொண்ணூறு.

ஒன்பது + நூறு (1) ஒன்பது ஆயிரம், (2) தொன்பது ஆயிரம், (3) தொன் ஆயிரம், (4) தொள் ஆயிரம், (5) தொள்ளாயிரம். இது தொளாயிரம் என இக்காலத்து மருவியது.

பஃதகற்றி யென்பதனோடு பொருந்த ஒன்பஃதனோ டென்னாது ஒன்பானொ டென்றமையால், ஒன்பது நின்று புணரினும் இவ் விதியே பெறுமென்றறிக.

## வ. குமாரசாமிப் புலவர்

இ-ள்.:- ஒன்பானொடு பத்தும் நூறும் ஒன்றின் - ஒன்பதுடனே பத்தென்பதும் நூறென்பதும் வந்து புணருமாயின், முன்னதின் ஏனையமுரணி - (எட்டின் மேலொன்று அவ்வொன்றுவரத் திரிந்து நின்ற பத்து என்னுந்) நிலைமொழியைப் போல (வருமொழியாகிய) பத்தையுந் நூற்றையும் முறையே நூறு எனவும் ஆயிரம் எனவுங் திரிந்து, ஒவ்வொடு தகரம் நிறீஇ - நிலைமொழி முதலிலுள்ள ஒகரவுயிரோடு தகரமெய்யை அதற்கு ஆகாரமாக நிறுத்தி, பஃது அகற்றி - அந் நிலைமொழி யிறுதியிலுள்ள பஃதைக் கெடுத்து, - னவ்வை நிரலே ண ள ஆத்திரிப்பது நெறி - அம்மொழி முதற்கு அயனின்ற னகரமெய்யை முறையே ணகர மெய்யாகவும் ளகர மெய்யாகவும் திரிப்பது முறையாகும். எ-று.

நெறியே என்ற இலேசானே. தனிக்குறின் முன்னொற்

றிரட்டித்தலுங் கொள்க.

உ–ம்.:–

(1) ஒன்பது + பத்து = (ஒன்பது நூறு, தொன்பதுநூறு, தொன்னூறு, தொண்நூறு) தொண்ணூறு.

(2) ஒன்பது + நூறு = (ஒன்பது ஆயிரம், தொன்பது ஆயிரம், தொல்ஆயிரம், தொள்ஆயிரம்) தொள்ளாயிரம். இது தொளாயிரம் என இக்காலத்து மருகியது.

முன்னதின் என்பதில் இன் ஒப்புப்பொருளில் வந்த ஐந்தனுபுரு. ஒப்புப் பொருளாகக் கொள்ளாவிடின் அத்திரிபு இன்னரூபமாயிருக்கு மென்று விளங்காமற் போம். விளங்குதற்பொருட்டு உவமைமுகத்தாற் கூறினர்.

பஃதென்னுந் தானத்திற்கு வரமாட்டாத குறைவுடைய ஒன்பஃது பஃதென்னு மிறுதியைப் பெற்றதுபோல, நூறென்னுந் தானத்திற்குறைந்த நிலையிலிருக்கின்ற பத்து நூறு என்று திரிந்தும், ஆயிரம் என்னுந் தானத்திற்குறைந்த நிலையிலிருக்கிற நூறு என்பது ஆயிரம் என்று திரிந்தும் வருமொழியாகவந்து மற்றவிகாரங்களும் பெற்று முடிந்தன காண்க.

ஒன்பானொடு பத்தும் நூறும் ஒன்றின் என்றதினால் நிலைமொழி ஒன்றும், வருமொழி தனித்தனி இரண்டு மாதலால், ஏனைய என்றபன்மை இங்கே வருமொழிகளைக் குறித்துநின்றன.

பஃதகற்றியென்பதனொடு பொருந்த ஒன்பஃதனோ டென்னாது ஒன்பானொடென்றமையால், ஒன்பதுநின்று புணரினும், இவ்விதியே பெறுமென்றறிக.

## வை.மு. சடகோபராமானு சாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.:–** **ஒன்பானொடு** – ஒன்பஃதுடனே, **பத்தும்** – பத்து என்பதும், **நூறும்** – நூறு என்பதும், **ஒன்றின்** – (வருமொழியாக வந்து) புணருமாயின், **முன்னதின் ஏனைய** – முன்னதாகிய நிலைமொழி தவிர மற்றை வருமொழிகளாகிய பத்தையும் நூற்றையும், **முரணி** – (முறையே நூறெனவும் ஆயிரமெனவும்) திரித்து, **ஒவ்வொடு** – (நிலைமொழி முதலிலுள்ள) ஒகர வுயிரோடு, **தகரம்** – தகர மெய்யை, **நிறீஇ**–(அதற்கு ஆதாரமாக முன்) நிறுத்தி, **பஃது** – (அந் நிலைமொழி யிறுதியி லுள்ள) பஃதை, **அகற்றி** – கெடுத்து, **னவ்வை** – (அயலில் நின்ற) னகர மெய்யை, **நிரலே** – முறையே,

ண ள ஆ – (பத்தின் திரிபாகிய நூற்றின் புணர்ச்சிக்கு) ணகர மெய்யாகவும் (நூற்றின் திரிபாகிய ஆயிரத்தின்) புணர்ச்சிக்கு ளகர மெய்யாகவும், திரிப்பது – திரித்துக் கொள்வது, நெறி–முறைமையாம்; எ–று.

முரணுதல் – ஓரிலக்கம் மேலேற்றி மாற்றுதல்.

('முன்னதின்' என்பதிலுள்ள 'இன்' உருபு–ஐந்தாம் வேற்றுமை நீக்கப் பொருளதாய். 'ஏனைய' என்னும் இடைச்சொல் லடியாகத் தோன்றிய குறிப்பு வினையாலணையும் பெயரைக் கொண்டது. இனி, முன்னதின் – முன்னதாகிய பத்தினாலே, ஏனைய முரணி – மற்றை வருமொழியாகிய பத்தையும் நூற்றையும் பெருக்குமாற்றால் நூறெனவும் ஆயிரமெனவுந் திரித்து என்று உரைப்பாரு முளர்; இப்பொருளுக்கு, 'இன்' உருபு–ஏதுப்பொருளது. இனி, இதற்கு மற்று ஓர் உரை வருமாறு:– முன்னதின் – நிலைமொழியாகிய ஒன்பஃது என்பதனைப் போல, ஏனைய முரணி – வருமொழியாகிய பத்தையும் நூற்றையும் முறையே திரித்து என்று பொருள்; அதாவது:– எட்டையடுத்த எண்ணாகிய ஒன்பஃது அல்லது ஒன்பது என்பதிலுள்ள பஃது அல்லது பது என்பது, அதற்கு அடுத்த எண்ணாகிய பத்து என்பதன் விகாரம் போன்றிருத்தலால், அதற்கு ஏற்ப, எண்பது என்பதற்கு அடுத்த தானத்து எண்ணில் (ஒன்பது பத்தில்) வருமொழியாகிய பத்தை அதற்கு அடுத்த தானத்து எண்ணாகிய நூறு என்றும், எண்ணூறு என்பதற்கு அடுத்த தானத்து எண்ணில் (ஒன்பது நூறு என்பதில்) வருமொழியாகிய நூறு என்பதை அதற்கு அடுத்த தானத்து எண்ணாகிய ஆயிரம் என்றும் திரித்து என்றபடி: பத்து என்னுந் தானத்திற்கு வரமாட்டாத குறைவுடைய ஒன்பது என்பது பது என்னும் இறுதியைப் பெற்றது போல, நூறு என்னுந் தானத்திற் குறைந்த நிலையிலிருக்கின்ற பத்து என்பது நூறு என்று திரிதலையும், ஆயிரமென்னுந் தானத்திற் குறைந்த நிலையி லிருக்கிற நூறு என்பது ஆயிரம் என்று திரிதலையும் பெறுமென்க. இவ்வுரைக்கு, 'இன்' உருபு – ஒப்புப்பொருளது.)

**உ–ம்.:–**

**ஒன்பஃது + பத்து = (1) ஒன்பஃதுநூறு, (2) தொன்பஃது நூறு, (3) தொள் நூறு, (4) தொண் நூறு, (5) தொண்ணூறு**

**ஒன்பஃது + நூறு = (1) ஒன்பஃது ஆயிரம், (2) தொன்பஃது**

ஆயிரம், (3) தொன் ஆயிரம், (4) தொள் ஆயிரம், (5) தொள்ளாயிரம்; இது, தொளாயிரம் எனவும் வழங்குகின்றது.

'பஃதகற்றி' என்பதோடு பொருந்த 'ஒன்பஃதொடு' என்னாமல் 'ஒன்பானொடு' என்றமையால், ஒன்பது நின்று புணரினும் இவ் விதியே பெறும்.

இப் புணர்மொழிகள் ஒகரவுயிர் ஒன்று ஒழிய மற்றவை யெல்லாம் விகாரப்பட்டுக் கிடந்தமையால் மரூஉவென்று கொள்ளாமல், தொல்லாசிரியர் முடித்தவாறே முடித்துக் காட்டினோ மென்பார், 'நெறி' என்றாரென்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– ஒன்பானொடு பத்தும் நூறும் ஒன்றின் – ஒன்பதுடனே பத்தென்பதும் நூறென்பதும் வந்து புணருமாயின், முன்னதின் ஏனைய முரணி – முன்னதாகிய நிலை மொழியினின்றும் மற்றை வருமொழிகளாகிய பத்தையும் நூற்றையும் முறையே நூறெனவும் ஆயிரமெனவுந் திரித்து, ஒவ்வொடு தகரம் நிறீஇ – நிலை மொழி முதலிலுள்ள ஒகரவுயிரோடு தகரமெய்யை அதற்கு ஆதாரமாக நிறுத்தி, பஃது அகற்றி – அந் நிலைமொழி யிறுதியிலுள்ள பஃதைக் கெடுத்து, னவ்வை நிரலே ண ள ஆத் திரிப்பது நெறி – அம் மொழிமுதற்கு அயனின்ற னகரமெய்யை முறையே ணகர மெய்யாகவும் ளகர மெய்யாகவுந் திரிப்பது முறையாகும், எ–று.

'நெறியே' என்ற இலேசானே, தனிக்குறின்மென் னொற்றிரட்டித்தலுங் கொள்க.

உ–ம்.:–

(1) ஒன்பஃது + பத்து = (1) ஒன்பஃது நூறு,

(2) தொன்பழுது நூறு, (3) தொன்நூறு, (4 தொண்நூறு, (5) தொண்ணூறு.

(2) ஒன்பஃது + நூறு = (1) ஒன்ப'து ஆயிரம், (2) தொன்பஃது ஆயிரம், (3) தொன் ஆயிரம், (4) தொள் ஆயிரம், (5) தொள்ளாயிரம். (இது தொளாயிரம் என இக்காலத்து மருவியது.)

பஃதகற்றி யென்பதனோடு பொருந்த ஒன்பஃதனோடென்னாது ஒன்பானொடென்றமையால், ஒன்பது நின்று பணுரினும். இவ்விதியே பெறுமென்றறிக.

## கா.நமச்சிவாய முதலியார்

**ஒன்பானொடு** – ஒன்பஃதுடனே, **பத்தும்** – பத்தென்பதும், **நூறும்** – நூறென்பதும், **ஒன்றின்** – வந்து புணருமாயின், **முன்னதின்** – முன்னதாகிய நிலைமொழியி னின்றும், **ஏனைய** – மற்றைவருமொழிகளாகிய பத்தையும் நூற்றையும், **முரணி** – முறையே நூறெனவும் ஆயிரமெனவும் திரித்து, **ஒவ்வொடு** – நிலைமொழி முதலிலுள்ள ஒகர வுயிரோடு, **தகரம்** – தகரமெய்யை, **நிறீஇ** – அதற்கு ஆதாரமாக நிறுத்தி, **பஃது** – அந்நிலைமொழி இறுதியிலுள்ள பஃதை, **அகற்றி** – கெடுத்து, **னவ்வை** – அம்மொழிமுதற்கு அயனின்ற னகரமெய்யை, **நிரலே** – முறையே, **ணளவா** – ணகர மெய்யாகவும் ளகரமெய்யாகவும், **திரிப்பது** – திரிப்பது, **நெறி** – முறையாகும்.

'நெறியே' என்ற இலேசானே, தனிக்குறிலின் முன்னொற்றி ரட்டித்தலுங் கொள்க.

'பஃதகற்றி' என்பதனோடு பொருந்த ஒன்பஃதனோ டென்னாது 'ஒன்பானொடு' என்றமையால் ஒன்பது நின்று புணரினு மிவ்விதியே பெறுமென்றறிக.

**உதாரணம்**

ஒன்பது + பத்து
ஒன்பஃது + பத்து

– தொண்ணூறு

ஒன்பது + நூறு
ஒன்பஃது + நூறு

– தொள்ளாயிரம்

என வரும். தொளாயிரமென இக்காலத்தில் வழங்குகின்றது.

## மோசசு பொன்னையா

ஒன்பது என்னும் எண்ணுப் பெயருடன்பத்து,நூறு என்னும் எண்ணுப் பெயர்கள் வந்து புணரின், அவ்விரண்டையும் முன்னதாகிய பத்தினோடு முரணி, நிலைமொழியின் ஒகர உயிருக்குத் தகர மெய்யை உடம்பாக நிறுத்திப் பஃது என்னும் இறுதிநிலையை நீக்கி இடை நின்ற னகரத்தை முறையே ணகர, ளகரமாகத் திரித்து முடிப்பது மரபாகும். எ–று.

எ–டு.:–

தொண்ணூறு, தொள்ளாயிரம்.

நெறி என்றதனால் ஒற்றிரட்டாது தொள்ளாயிரம் என முடிவதையுங் கொள்க.

தொல்காப்பியர் முதல், இலக்கண ஆசிரியர் அனைவரும் ஒன்பது தொண்ணூறு, தொள்ளாயிரம் என்னுஞ் சொற்களுக்குப் புணர்ச்சி விதி கூறுவதில் பெரிதும் முயன்றும், வலிந்தும் முடிவு கூறியுள்ளனர். இக்கால அறிஞர் பலரும்அம்மூன்று சொற்களையும் பற்றி ஆராய்ந்து தம் முடிவுகளை வெளியிட்டுள்ளனர். எனினும், எல்லோரும் ஏற்கும் முடிவைத் தமிழ் உலகம் இன்னும் எதிர்நோக்கி நிற்கின்றது.

தொள்ளை என்பதற்குக் குறையுடையது என்பது பொருள். அஃது அண்ணச் சாயல் பெற்று இக்காலத்தில் சொள்ளை என்று வழங்குகிறது. அதனையே நொள்ளை என்று வழங்குதலும் உண்டு. அதன் அடிச்சொல் தொள் என்பதாகும்.

இக்காலத்தும் பத்தை நிறைய பத்து என்றும், ஒன்பதைக் குறைய பத்து என்றும் வழங்கும் முறைமை தென்றமிழ் நாட்டில் உண்டு. உரோமர் ஒன்பதை ஐஓ என்றும் தொண்ணூறை ஓஊ என்றும் ஆயிரத்தை ஊஆ என்றும் எழுதுவதற்கும் இவ்வழக்கிற்கும் தொடர்பு உண்டோ என்பது ஆய்வுக்குரியது.

அம்முறைப்படியே பண்டைத் தமிழர் பஃது, தொள் பஃது என்று வழங்கினர். ஒன்பதை ஆகுபெயர்ப் பொருளில் தொள் + து –தொண்டு என்றும் வழங்கினர். தொள் பஃது என்பதே தொண்பது ழு தொன்பது ழு ஒன்பது என்று ஆயிற்று. அவ்வாறே அமைந்த தொள்நூறு, தொள்ளாயிரம் என்பன அவ்வடிவிலேயே இன்றளவும் மாற்றமின்றி வழங்கி வருகின்றன என்பது மனங்கொளத் தக்கது.

(44)

**194.** **முதலிரு நான்கா மெண்முனர்ப் பத்தின்**
**இடையொற் றேக லாய்த மாகல்**
**எனவிரு விதியு மேற்கு மென்ப.**

முதல் இரு நான்கு ஆம் எண் முனர்ப் பத்தின்

---

பாட வேறுபாடு.:–

1. சொல்லுவர் எ – று.

இடை ஒற்று ஏகல் ஆய்தம் ஆகல்
என இரு விதியும் ஏற்கும் என்ப

mutal iru nāṉku ām eṇ muṉarp paṭṭiṉ
itai oṟṟu ēkal āytam ākal
eṉa iru vitiyum ēṟkum eṉpa

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Special rule for pattu after numerals onru to ettu**

(The learned) say that when pattu is added to the first eight numerals, the middle t is either dropped or changed into guttural.

## ஒப்புமைப் பகுதி

ஒன்றுமுத லெட்டீற் றெண்முனர்ப் பத்தி
னிடையொற் றேக லாய்த மாக
லெனவிரு விதியு மேற்கு மென்ப.

(இ.வி.: 113)

ஒன்று முதலொன் பான்முற் பத்திடை
மெய்கெட வாய்த மாறல்லா வழியே.

(மு.வீ.: 420)

ஒன்றுமுத லொன்பான் இறுதி முன்னர்
நின்ற பத்த னொற்றுக்கெட ஆய்தம்
வந்திடை நிலையும் இயற்கைத் தென்ப
கூறிய இயற்கைக் குற்றிய லுகரம்
ஆற னிறுதி அல்வழி யான

(தொல்.: 438)

## மயிலை நாதர்

எ—ன், எண்ணோடு எண் புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.:— ஒன்று முதலாகிய எட்டு எண் முன்னும் வரும் பத்தென்னும் எண்ணிடை நின்ற தகர வொற்று ஒருகாற் கெடுதலும் ஒருகால் ஆய்தமாகலு மென்னும் இவ்விரு விதியுமாமென்று சொல்லுவர் புலவர், எ — று.

வ—று.:—

ஒருபது, இருபது, எண்பது எனவும்; ஒருபஃது, இருபஃது, எண்பஃது எனவும் வரும்.

## சங்கர நமச்சிவாயர்
## சிவஞான முனிவர்

எ–னின், ஒன்று முதலாகிய எட்டு எண்களின் முன்வரும் பத்து என்னும் எண்ணிற்கு. ம் *'இயல்பினும் விதியினும்' என்னும் சூத்திரத்தான்ம்* எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ–ள்.:– ஒன்று முதலாகிய எட்டு எண்களின் முன்னும் வரும் பத்து என்னும் எண்ணிடை நின்ற தகர ஒற்று ஒருகால் கெடுதலும்,* ஒருகால் இடையே தகரம் நின்ற நிலைக்களத்து அது கெட ஆய்தம் வருதலும் என்னும் இவ்விரண்டு விதியையும் ஏற்கும் என்று சொல்லுவர் புலவர், எ – று.

இடை என்பதனைப் பின்னும் கூட்டுக.

இடையே ஆய்தமாகல் என்றமையின், அவ்வழித் தகரக் கேடு கூறாதே அமையும் என்க.

உ–ம்.:–

ஒருபது, இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது, அறுபது, எழுபது, எண்பது எனவும்; ஒருபஃது, இருபஃது, முப்பஃது, நாற்பஃது, ஐம்பஃது, அறுபஃது, எழுபஃது, எண்பஃது எனவும் வரும்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், எண்ணுடன் எண் புணருமாறு கூறியது.

இ–ள்.:– முதலிரு நான்கா மெண்முனர் – ஒன்று முதலாக எட்டு ஈறாகவுள்ள எண் முன்னர், பத்தின் இடையொற்று ஏகல் – வரும் பத்தென்னும் எண்ணிடை நின்ற தகர வொற்று ஒருகாற் கெடுதலும், ஆய்தமாகல் – அவ்வொற்று ஒருகால் ஆய்தமாகலும், எனவிரு விதியும் ஏற்குமென்ப – என்னும் இவ்விரண்டு விதியும் பெறும் என்று சொல்லுவர், எ–று.

உ–ம்.:–

ஒருபது, இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது, அறுபது, எழுபது, எண்பது எனவும் ஒருபஃது, இருபஃது, முப்பஃது, நாற்பஃது, ஐம்பஃது, அறுபஃது, எழுபஃது, எண்பஃது எனவும் வரும்.

## விசாகப் பெருமாளையர்

இது ஒன்று முத லெட்டெண்களின் முன் வருகிற பத்தென்னு மெண்ணிற்கு "இயல்பினும்" என்பதனால் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

**இ-ள்.:-** முதல் - ஒன்று முதலாகிய, **இருநான்காமெண்முனார்** - எட்டெண்களின் முன்னும் வருகிற, **பத்தின்** - பத்தென்னு மெண்ணினது, **இடை** - நடுநின்ற, **ஒற்று**-தகர மெய்பானது, **ஏகல்**-கெடுதலும், **ஆய்தமாதல்** - தகர நின்றவிடத்து அதுகெட ஆய்தம் வருதலும், **என விருவிதியும்** - என்னு மிவ்விரண்டு விதியையும், **ஏற்கும்** - ஏற்கும், **என்ப** - என்று சொல்லுவர் புலவர்.

**உ-ம்.:-**

ஒன்று+பத்து - ஒருபது, ஒருபஃது, இரண்டு-பத்து- இருபது, இருபஃது என வரும்; மற்றவைகளு மிப்படியே.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

வருமொழிப்பத்தின் செய்தி கூறுஞ் சூத்திரம் யாது?

முதலிரு நான்கா மெண்முனர்ப் பத்தின்
இடையொற் றேக லாய்த மாகல்
எனவிரு விதியு மேற்கு மென்ப.

(முதல் இரு நான்கு ஆம் எண்முனர்ப் பத்தின்
இடை ஒற்று ஏகல் ,ஆய்தம் ஆகல்
என இருவிதியும் ஏற்கும் என்ப)

**இ-ள்.:-** முதல் **இருநான்கு ஆம் எண் முனர்** - ஒன்று முதலாகிய எட்டெண்களின் முன்னும் வரும், **பத்தின் இடை ஒற்று ஏகல்** - பத்தென்னும் எண்ணினது நடுநின்ற தகரமெய் கெடுதலும், **ஆய்தம் ஆகல்** - தகர நின்ற விடத்து அது கெட ,ஆய்தம் வருதலும், **என இருவிதியும் ஏற்கும் என்ப** - என்னும் இவ்விரண்டு விதியும் பொருந்தும் என்று சொல்லுவர் புலவர், எ-று.

பத்தின் இடையொற்றுக் கெடுதலும் ஆய்தமாகத் திரிதலும் எவ்வழி?

"முதலிரு நான்கா மெண்முனர்"

**உ-ம்.:-**

**ஒரு-பத்து-ஒருபது, ஒருபஃது, இருபது, இருஃது, முப்பது, முப்பஃது, நாற்பது, நாற்பஃது, ஐம்பது, ஐம்பஃது; அறுபது, அறுபஃது, எழுபது, எழுபஃது, எண்பது எண்பஃது; எனவரும்.**

## முகவை இராமானுச கவிராயர்

இது, சில வெண்ணுப் பெயர்கள் முன் வரும் பத்தென்னும் எண்ணிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ–ள்.:– முதலிரு நான்கா மெண்முனர் – ஒன்று முதலாகிய எட்டெண்களின் முன் வரும், பத்தி னிடையொற் றேகல் – பத்தென்னு மெண்ணுப் பெயரிடை நின்ற தகர வொற்றுக் கெடுதலும், ஆய்த மாகல் – கெட்ட விடத்து ஆய்தந் தோன்றுதலும், என விரு விதியு மேற்கு மென்ப – என்றிவ் விரண்டு விதிகளையு மேற்கு மென்று சொல்லுவர் புலவர், எ–று.

உ–ம்.:–

ஒருபது, இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது, அறுபது, எழுபது, எண்பது எனவும், ஒருபஃது, இருபஃது, முப்பஃது, நாற்பஃது, ஐம்பஃது, அறுபஃது, எழுபஃது, எண்பஃது எனவும் வரும். இதனுள் புலவரென்னும் பயனிலை குறைந்து நின்றது.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :– முதல் – (ஒன்று) முதலாகிய, இருநான்கு ஆம் எண்முனர் – எட்டு எண்களின் முன்னும் வருகிற, பத்தின் – 'பத்து' என்னும் எண்ணினது, இடை – நடுவில் நின்ற, ஒற்று – தகரமெய்யானது, இகல் – கெடுதலும், ஆய்தம் ஆகல் – ஆய்தமாகத் திரிதலும், என இருவிதியும் – என்ற இவ்விரண்டு விதிகளையும், ஏற்கும் –, என்ப – என்று சொல்லுவர் (புலவர்)

உதாரணம் :–

ஒன்று + பத்து = ஒருபது, ஒருபஃது; இருபது, இருபஃது.
மூன்று + பத்து = முப்பது, முப்பஃது; நாற்பது, நாற்பஃது.
ஐந்து + பத்து = ஐம்பது, ஐம்பஃது; அறுபது, அறுபஃது.
ஏழு + பத்து = எழுபது, எழுபஃது; எண்பது, எண்பஃது.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– முதல் இருநான்கு ஆம் எண் முனர்ப் பத்தின் – ஒன்று முதலாகிய எட்டெண்களின் முன்னும் வரும் பத்தென்னும் எண்ணினது, இடை ஒற்று ஏகல் – நடு நின்ற தகர மெய் கெடுதலும், ஆய்தம் ஆகல் – தகர நின்ற விடத்து அது கெட ஆய்தம் வருதலும், என இரு விதியும் ஏற்கும் என்ப – என்னும் இவ்விரண்டு விதியும் பொருந்தும் என்று சொல்லுவர் புலவர், எ – று.

உ ம்.:-

ஒருபது, ஒருபஃது, இருபது, இருபஃது, முப்பது, முப்பஃது, நாற்பது, நாற்பஃது, ஐம்பது, ஐம்பஃது, அறுபது, அறுபஃது, எழுபது, எழுபஃது, எண்பது, எண்பஃது என வரும்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ-ள்.:- முதல் இருநான்கு ஆம் எண் முனர்ப்பத்தின் - ஒன்று முதலாகிய எட்டெண்களின் முன்னும் வரும் பத்தென்னும் எண்ணினது, இடை ஒன்று ஏகல் - நடுகின்ற நகரமெய் கெடுதலும், ஆய்தம் ஆகல் - தகர நின்றவிடத்து அதுகெட ஆய்தம் வருதலும், என இருவிதியும் ஏற்கும் என்ப - என்னும் இவ்விரண்டு விதியும் பொருந்தும் என்ற சொல்லுவர் புலவர், எ-று.

உ-ம்.:-

ஒருபது, ஒருபஃது, இருபது, இருபஃது, முப்பது, முப்பஃது, நாற்பது, நாற்பஃது, ஐம்பது, ஐம்பஃது, அறுபது, அறுஃபது, எழுபது, எழுபஃது, எண்பது, எண்பஃது எனவரும்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ-ள்.:- முதல் - முதலிலுள்ளவையான, இரு நான்கு ஆம் எண் முனர் - எட்டு எண்களின் முன்னும் வருகிற, பத்தின் - பத்து என்னும் எண்ணினது, இடை - நடுவில் நின்ற, ஒற்று - தகர மெய்யானது, ஏகல் - கெடுதலும், ஆய்தம் ஆகல் - ஆய்தமாகத் திரிதலும், என- என்று, இருவிதியும் - இவ்விரண்டு விதிகளையும், ஏற்கும் - , என்ப - என்று சொல்வர், (புலவர்); எ-று.

முதலிரு நான்காம் எண் - ஒன்று முதல் எட்டு ஈறாயின.

உ-ம்.:-

ஒன்று, இரண்டு + பத்து- ஒருபது, ஒருபஃது, இருபது, இருபஃது;

மூன்று, நான்கு+ பத்து- முப்பது, முப்பஃது, நாற்பது, நாற்பஃது;

ஐந்து, ஆறு + பத்து - ஐம்பது, ஐம்பஃது, அறுபது, அறுபஃது;

ஏழு, எட்டு + பத்து- எழுபது, எழுபஃது, எண்பது, எண்பஃது;

## பவானந்தம் பிள்ளை

இ—ள்.:— முதல் இருநான்கு ஆம் எண்முனர்ப் பத்தின் – ஒன்று முதலாகிய எட்டெண்களின் முன்னும் வரும் பத்தென்னும் எண்ணினது, இடை ஒற்று ஏகல் – நடு நின்ற தகரமெய் கெடுதலும், ஆய்தம் ஆகல் – தகர நின்ற விடத்து அதுகெட ஆய்தம் வருதலும். என இரு விதியும் ஏற்கும் என்ப – என்னும் இவ்விரண்டு விதியும் பொருந்தும் என்று சொல்லுவர் புலவர், எ—று.

உ—ம்.:—

ஒன்று + பத்து = ஒருபது, ஒருபஃது; இரண்டு + பத்து = இருபது, இருபஃது; மூன்று + பத்து = முப்பது, முப்பஃது; நான்கு + பத்து = நாற்பது, நாற்பஃது; ஐந்து + பத்து = ஐம்பது, ஐம்பஃது; ஆறு + பத்து = அறுபது, அறுபஃது; ஏழு + பத்து = எழுபது, எழுபஃது; எட்டு + பத்து = எண்பது, எண்பஃது.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) முதல் – ஒன்று முதலாகிய, இருநான்கா மெண்முனர் – எட்டெண்களின் முன்னும் வருகிற, பத்தின் – பத்தென்னுமெண்ணினது, இடை – நடுநின்ற, ஒற்று – தகர மெய்யானது, ஏகல் – கெடுதலும் ;

(2) ஆய்தமாகல் – தகரம் நின்ற விடத்து அதுகெட ஆய்தம் வருதலும், என இருவிதியும் – என்னுமிவ்விரண்டு விதியையும், ஏற்கும் – ஏற்கும், என்ப – என்று சொல்லுவர் புலவர்.

உதாரணம்.:—

| | | | | (1) | (2) |
|---|---|---|---|---|---|
| ஒன்று | + | பத்து | = | ஒருபது, | ஒருபஃது |
| இரண்டு | + | பத்து | = | இருபது, | இருபஃது |
| மூன்று | + | பத்து | = | முப்பது, | முப்பஃது |
| நான்கு | + | பத்து | = | நாற்பது, | நாற்பஃது |
| ஐந்து | + | பத்து | = | ஐம்பது, | ஐம்பஃது |
| ஆறு | + | பத்து | = | அறுபது, | அறுபஃது |
| ஏழு | + | பத்து | = | எழுபது, | எழுபஃது |
| எட்டு | + | பத்து | = | எண்பது, | எண்பஃது |

பாட வேறுபாடு.:—

1. ஒருபது முதலாகிய

2. ஆய்தமழிந்த அவ்விடத்து

வரும் தகரவொற்று

## மோசகு பொன்னையா

ஒன்று முதல் எட்டு எண்களின் முன் வந்து புணரும் பத்து என்னும் எண்ணின் நடுவில் நின்ற தகர மெய் கெடுதலும், அது நின்ற இடத்தில் ஆய்தம் வருதலும் என்னும் இரு விதியும் பொருந்தும் என்பர், எ–று.

எ-டு.:–

ஒருபது, இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது, அறுபது, எழுபது, எண்பது – தகரமெய் கெட்டது. ஒருபஃது, இருபஃது, முப்பஃது, நாற்பஃது, ஐம்பஃது, அறுபஃது, எழுபஃது, எண்பஃது – தகரமெய் நின்ற இடத்தில் ஆய்தம் வந்தது.

(45)

**195. ஒருபஃ தாதிமுன் னொன்றுமுத லொன்பான்**
**எண்ணு மவையூர் பிறவு மெய்தின்**
**ஆய்த மழியவாண் டாகுந் தவ்வே.**

**ஒரு பஃது ஆதி முன் ஒன்று முதல் ஒன்பான்**
**எண்ணும் அவை ஊர் பிறவும் எய்தின்**
**ஆய்தம் அழிய ஆண்டு ஆகும் தவ்வே.**

oru pak͟h̲ṭu āṭi mun̲ on̲ṛu muṭal on̲pān̲
eṇṇum avai ūr piṛavum eyṭin̲
āyṭam aḷiya āṇṭu ākum ṭavvē.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Special rule for compound ending in pattu or pahtu

In the combinations of the first eight numerals beginning with orupahtu, with the nine numerals from onru to onpatu and others to which these may be prefixed—the guttural is removed and t inserted in its place.

## ஒப்புமைப் பகுதி

ஒருப தொருபஃ தாதியொன் றாதி
யொன்பது மவையூர் பிறவு மெய்திற்
கெடுதலுந் திரிதலு மில்லென மொழிப.

(இ.வி.: 114)

இரண்டொழித் தேனைய விருநான் கெண்களும்
பத்தின் முன்வருங் காலை யான
குற்றிய லுகரம் முற்றக் கெடுமே

ஒன்பா னொழியவின் னொடுவரு மென்ப.

(மு.வீ.: 416)

ஒன்றுமுத லாகிய பத்தூர் கிளவி
ஒன்றுமுத லொன்பாற் கொற்றிடை மிகுமே
நின்ற ஆய்தங் கெடுதல் வேண்டும்

(தொல்.: 475)

அளவும் நிறையும் ஆயியல் திரியா

(தொல்.: 477)

## மயிலை நாதர்

இதுவுமது.

இ–ள்.:– [1]ஒருபஃது முதலாம் எட்டெண்ணின் முன்னும் ஒன்றாதி ஒன்பதெண்ணும் அவையூர்ந்த பிறவும் வந்தால், [2]ஆய்தமழிய அந்த நிலையிலே தகர வொற்று வரும், எ–று.

வ–று.:–

ஒருபத்தொன்று, இருபத்தொன்று, எண்பத்தொன்று, ஒருபத்தொன்பது, இருபத்தொன்பது, எண்பத் தொன்பது எனவும், ஒருபத்தொருகழஞ்சு, இருபத் தொரு கழஞ்சு, முப்பத்துமுக்கலனேதூணி, எண்பத்து முக்கலனே தூணி, எண்பத்தொன்பதின்கலனே தூணி, எண்பத்தெண்காதம், எண்பத்தொன்பதின்காதம், எண்பத் தெட்டியாண்டு, எண்பத்தொன்பதாண்டு எனவும் வரும்.

## சங்கர நமச்சிவாயர்

## சிவஞான முனிவர்

எ – னின், மேலைச் சூத்திரத்தான் எய்திய ஒருபஃது ஆதியாய நிலைமொழிக்கு, ***உயிர்வரின் 'உயிர்வரினுக்குறள்' என்னும் சூத்திரத் தான்*** எய்தியதன் மேற் சிறப்புவிதியியும், ***ம்மெய்வரின்ம்*** எய்தாதது எய்துவித்தலும் நுதலிற்று.

இ – ள்.:– ஒருபஃதாதியாய எட்டு எண்களின் முன்னும் ஒன்றாதி ஒன்பது எண்ணும் அவை ஊர்ந்த பிறவும் வந்து புணருமாயின், ஆய்தம் கெட, அந் நிலைக் களத்து இயல்பாய தகரம் வரும், எ–று.

ஐயமறுத்தற்கு அவையூர் பிறவும் என்றார்.

உ–ம்.:–

ஒருபத்தொன்று, இருபத்தொன்றே காலே யரைக்கால்,

முப்பத்தொருகழஞ்சு, எழுபத்தொன்பதின்கலனே தூணி, எண்பத் தொன்பதியாண்டு என வரும். பிறவும் அன்ன.

ஆய்தம் அழிய ஆண்டு ஆகும் தவ்வே என்றமையான், ஆய்தம் அழிந்தவற்றிற்கும் ஒருபது முதலிய முற்றுகர ஈற்று எண்ணுப்பெயர்கட்கும் வேற்றுமையின்மையின், அருத்தா பத்தியான் அவற்றோடு இவ்வருமொழிகள் புணரினும் ஆண்டு ஆகுந் தவ்வே என்றாராயிற்று. இவற்றிற்கும் காட்டு அவையே யாம் என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், எண்களுடனே எண் புணருமாறு கூறியது

**இ-ள்.:- ஒருபஃதாதிமுன்** - ஒருபஃது முதலாய் ஒன்பது ஈறாயுள்ள எண்களின் முன்னர், **ஒன்று முதல் ஒன்பான் எண்ணும்** - ஒன்று முதலாக ஒன்பதெண்ணும் வருமொழியாக வரினும், **அவையூர் பிறவும் எய்தின்** - அவ்வொன்பது எண்ணின் மேலும் சேர்ந்த பிற சொற்கள் வரினும், **ஆய்தம் அழிய** - நிலைமொழிப் பஃதென்னும் எண்ணிடை நின்ற ஆய்தம் கெட, **ஆண்டாகும் தவ்வே** - அந்த நிலையிலே தகர வொற்று வரும், எ-று.

**உ-ம்.:-**

ஒருபத்தொன்று, இருபத்தொன்று எனவும் இருபத்தொரு கழஞ்சு, முப்பத்து முக்கலனே தூணி, எழுபத்தேழி யாண்டு எனவும் வரும்.

## விசாகப் பெருமாளையர்

**இது,** மேலைச் சூத்திரத்தா லெய்திய ஒருபஃது முதலாகிய நிலைமொழிகளுக்கு உயிர்வரின் "உயிர்வரினுக்குறள்" என்பதனால் எய்தியதன் மேற் சிறப்பு விதியும் மெய்வரின் எய்தாத தெய்துவித்தலுஞ் சொல்லுகின்றது.

**இ-ள்.:- ஒருபஃதாதிமுன்** - ஒருபஃது முதலாகிய எட்டெண்களின் முன், **ஒன்று முதல்**-ஒன்று முதலாகிய, **ஒன்பானெண்ணும்** - ஒன்பதெண்களும், **அவை**-அவ் வெண்களை, **ஊர்**-ஊர்ந்த, **பிறவும்** - மற்றவையும், **எய்தின்** - வந்து புணருமாயின், **ஆய்தம்** - நிலைமொழி யிடையிலே நின்ற வாய்தமானது, **கழிய**-கெட, **த**-இயல்பாகிய தகரம், **ஆண்டு** - அவ் வாய்தம் நின்றவிடத்து, **ஆகும்** - வரும், எ-று.

**உ-ம்.:-**

ஒருபஃது + ஒன்று - ஒருபத் தொன்று, இருபது + மூன்றரை இருபத்துமூன்றரை என வரும். மற்றவைகளு மிப்படியே.

("ஆய்தங் கெடத் தகரம் வரும்" என்றமையால் அருத்தா பத்தியத்தால் ஆய்தமில்லாத ஒருபது முதலானவைகளும் தகரம் பெறுமென்ற தாயிற்று).

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

மேலைச் சூத்திரத்தானெய்திய ஒருபஃது முதலிய நிலைமொழிகள் எவை வந்தால் தமக்கு இயல்பாகிய தகரம் பெற்று நிற்கும்?

ஒருபஃ தாதிமுன் னொன்று முதலொன்பான்
எண்ணுமவை ஊர் பிறவுமெய்தின்
ஆய்தம் மழியவாண் டாகுந் தவ்வே.

(ஒருபஃது ஆதிமுன் ஒன்றுமுதல் ஒன்பான்
எண்ணும் அவை ஊர் பிறவும் எய்தின்
ஆய்தம் அழிய ஆண்டு ஆகும் தவ்வே.)

இ–ள்.:– **ஒருபஃது ஆதிமுன்** – ஒருபஃது முதலாகிய எட்டெண்களின் முன்னும், **ஒன்றுமுதல் ஒன்பான் எண்ணும் அவை ஊர் பிறவும் எய்தின்** – ஒன்று முதலாகிய ஒன்ப தெண்களும் அவ்வெண்களை ஊர்ந்த மற்றவையும் வந்து புணருமாயின்அவ்வெண்களை ஊர்ந்த மற்றவையும் வந்து புணருமாயின், **ஆய்தம் அழியத ஆண்டு ஆகும்**– நிலைமொழியிலே நின்ற ஆய்தங் கெட இயல்பாகிய தகரம் அவ்வாய்த நின்றவிடத்து வரும், எ–று.

உ–ம்.:–

ஒருபத்தொன்று, இருபத்தொன்றே காலேயரைக்கால், முப்பத்தொரு கழஞ்சு, எழுபத்தெண்கலனே தூணி, எண்பத்தொன்பதியாண்டு, எனவரும். மற்றவைகளும் இப்படியே.

ஆய்தங்கெடத் தகரம் வரும் என்றமையின், அருத்தா பத்தியால் ஆய்தமில்லாத ஒருபது முதலானவைகளுந் தகரம் பெறு மென்றாராயிற்று.

## முகவை இராமானுச கவிராயர்

இது, ஒரு பஃதாதியாகிய நிலைமொழிக்கு எய்தியதன் மேற் சிறப்பு விதியும், எய்தாதது எய்துவித்தலு முணர்த்திற்று.

இ–ள்.: **ஒரு பஃதாதி முன்** – ஒருபஃது முதலிய எட்டெண்களின் முன், **ஒன்று முதலொன்பா னெண்ணும்** – ஒன்றாதி யொன்ப தெண்ணுப் பெயர்களும், **அவையூர் பிறவு மெய்தின்** – அவை தொடர்ந்த பிற வெண்ணுப் பெயர்களும் வந்து புணருமாயின், **ஆய்த மழிய வாண்டாகுந் த** – ஆய்தங்

கெட அவ் விடத்தியல்பாகிய தகரம் வரும், எ—று.

ஐய மறுத்தற்கு 'அவையூர் பிறவு' மென்றார்.

உ—ம்.:-

ஒருபத்தொன்று, இருபத்தொன்றே காலே யரைக்கால், முப்பத்தொரு கழஞ்சு, எழுபத்தெண் கலனே தூணி, எண்பத்தொன்பதி யாண்டு, என வரும். பிறவுமன்ன. 'ஆய்த மழிய வாண்டாகுந் தவ்' வென்றதினாலே, ஆய்த மழிந்த வற்றிற்கும் ஒருபது முதலிய முற்றுகர வீற்று எண்ணுப் பெயர்கட்கும் வேற்றுமை யில்லாததினாலே அருத்தா பத்தியால், அவற்றோடு இவ்வருமொழிகள் புணரினும் ஆண்டாகுந் தவ்வென்றாராயிற்று. அவற்றிற்கு முதாரண மிவையே யாமென்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :- **ஒருபஃது ஆதிமுன்** - ஒருபஃது முதலாகிய எட்டு எண்களின் முன், **ஒன்றுமுதல்** – ஒன்று முதலாகிய, **ஒன்பான் எண்ணும்** – ஒன்பது எண்களும், **அவை** – அவ்வெண்களை, **ஊர்** – ஊர்ந்த, **பிறவும்** – மற்றவையும், **எய்தின்** – வந்து புணருமாயின், **ஆய்தம்** – (நிலைமொழி இடையிலே நின்ற) ஆய்தமானது, **அழிய** – கெட, **த** – இயல்பாகிய தகரம், **ஆண்டு** – அவ்வாய்தம் நின்றவிடத்து, **ஆகும்** – வரும்.

உ—ம் :-

ஒருபஃது + ஒன்று = ஒருபத்தொன்று – எண்.
இருபஃது + மூன்றரை = இருபத்துமூன்றரை – பிற.

குறிப்பு :-

மற்றவைகளும் இப்படியே. ஐயமொழித்தற்கு 'அவையூர் பிறவு' மென்றார். 'ஆய்தங்கெடத் தகரம்வரும்' என்றதுபற்றி அருத்தா பத்தியால் ஆய்தமில்லாத ஒருபது முதலானவை களும் இவ்வாறு தகரம் பெறுமென்க.

## ஆறுமுக நாவலர்

இ—ள்.:- **ஒருபஃது ஆதி முன்** – ஒருபஃது முதலாகிய எட்டெண்களின் முன்னும், **ஒன்று முதல் ஒன்பான் எண்ணும்** – ஒன்று முதலாகிய ஒன்பதெண்களும், **அவை ஊர் பிறவும் எய்தின்** – அவ் வெண்களை ஊர்ந்த மற்றவையும் வந்து புணருமாயின், **ஆய்தம் அழியாத ஆண்டு ஆகும்** – நிலைமொழியிலே நின்ற ஆய்தங் கெட இயல்பாகிய தகரம்

அவ்வாய்த நின்ற விடத்து வரும், எ-று.

உ-ம்.:-

ஒருபத்தொன்று; இருபத்தொன்றேகாலே யரைக்கால், முப்பத்தொருகழஞ்சு, எண்பத்தெண்கலனே தூணி, எண்பத் தொன்பதி யாண்டு என வரும். மற்றவைகளும் இப்படியே.

ஆய்தங் கெடத் தகரம் வரும் என்றமையின், அருத்தா பத்தியால், ஆய்தமில்லாத ஒருபது முதலானவைகளுந் தகரம் பெறுமென்றாராயிற்று.

## வ. குமாரசாமிப் புலவர்

இ-ள். ஒரு பஃது ஆதிமுன் - ஒருபஃது முதலாகிய எட்டெண்ணின் முன்னும், - ஒன்று முதல் ஒன்பான் எண்ணும் - ஒன்று முதலாகிய ஒன்பதெண்களும், - அவை ஊர் பிறவும் எய்தின் - அவ்வெண்களை ஊர்த்த மற்றவையும் வந்து புணருமாயின், - ஆய்தம் அழியத்த ஆண்டு ஆகும் - நிலைமொழியிலே நின்ற ஆய்தங்கெட இயல்பாகிய நகரம் அவ்வாய்த நின்றவிடத்து வரும். எ-று.

உ-ம்.:-

ஒருபத்தொன்று, - இருபத்தென்றேகாலேயரைக்கால், முப்பத்தொருகழஞ்சு, எழுபத்தெண்கலனேதூணி, எண்பத் தொன்பதியாண்டு என்வரும் மற்றவைகளும் இப்படியே. ஆய்தங்கெடத் தகரம் வரும் என்றமையின், அருத்தா பத்தியால், ஆய்தமில்லாத ஒருபது முதலானவை களுந் நகரம் பெறுமென்றாராயிற்று.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ-ள்.:- ஒருபஃது ஆதி முன் - ஒருபஃது முதலாகிய எட்டு எண்களின் முன், ஒன்று முதல் - ஒன்று முதலாகிய, ஒன்பான் எண்ணும் - ஒன்பது எண்களும், அவை - அவ்வெண்களை, ஊர் - ஊர்ந்த, பிறவும் - மற்றவையும், எய்தின் - வந்து புணருமாயின், ஆய்தம் - (நிலைமொழியிடையிலே நின்ற) ஆய்தமானது, அழிய - கெட, த - (இயல்பாகிய) தகரம், ஆண்டு ஆகும் - அவ்வாய்தம் நின்றவிடத்து வரும்; எ - று.

உ-ம்.:-

ஒருபஃது + ஒன்று = ஒருபத்தொன்று - எண்.

இருபஃது + மூன்றுகலம் = இருபத்துமூன்றுகலம் – எண்ணொடு பிறிது. மற்றவையும் இப்படியே. ஐயமொழித் தற்கு, 'அவையூர்பிறவும்' என்றார்.

'ஆய்தங் கெடத் தகரம் வரும்' என்றமையின், அருத்தாபத்தியால் ஆய்தமில்லாத ஒருபது முதலானவை களும் இவ்வாறு தகரம் பெறும் என்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– ஒருபஃது ஆதிமுன் – ஒருபஃது முதலாகயி எட்டெண்களின் முனனும், ஒன்று முதல் ஒன்பான் எண்ணும் – ஒன்று முதலாகிய ஒன்பதெண்களும், அவை ஊர் பிறவும் எய்தின் – அவ்வெண்களை ஊர்ந்த மற்றவையும் வந்துபுணருமாயின், ஆய்தம் அழிய த ஆண்டு ஆகும் – நிலைமொழியிலே நின்ற ஆய்தங் கெட இயல்பாகிய தகரம் அவ்வாய்த நின்றவிடத்து வரும். எ–று.

உ–ம்.:–

ஒருபஃது + ஒன்று = ஒருபத்தொன்று, இருபஃது + ஒன்றேகால் = இருபத்தொன்றேகால். (மற்றவைகளும் இப்படியே.)

ஆய்தங்கெடத் தகரம்வரும் என்றமையின், அருத்தாபத்தியர்ல், ஆய்தமில்லாத ஒருபது முதலான வைகளுந் தகரம் பெறுமென்றாராயிற்று.

## கா.நமச்சிவாய முதலியார்

**ஒருபஃதாதிமுன்** – ஒருபஃது முதலாகிய எட்டெண்களின்முன், **ஒன்றுமுதல்** – ஒன்று முதலாகிய, **ஒன்பானெண்ணும்** – ஒன்பதெண்களும், **அவை** – அவ்வெண்களை. **ஊர்** – ஊர்ந்த, **பிறவும்** – மற்றவையும், **எய்தின்** – வந்து புணருமாயின், **ஆய்தம்** – நிலைமொழி யிடையிலே நின்ற ஆய்தமானது, **அழிய** – கெட, **த** – இயல்பாகிய தகரம், **ஆண்டு** – அவ்வாய்தம் நின்றிவிடத்து, **ஆகும்** – வரும்.

**உதாரணம்.:–**

ஒருபஃது + ஒன்று = ஒருபத்தொன்று. ஒன்று என்னும் எண்.

இருபஃது + மூன்றுகலம் = இருபத்து மூன்று கலம். எண் ஊர்ந்த பிற பெயர்.

முப்பஃது + நான்கு = முப்பத்து நான்கு

நாற்பஃது + ஐந்து = நாற்பத்தைந்து

ஐம்பஃது + ஆறு = ஐம்பத்தாறு

அறுபஃது + மூன்று = அறுபத்து மூன்று

எழுபஃது + நான்கு = எழுபத்து நான்கு

எண்பஃது + ஒன்பது = எண்பத்தொன்பது

என வரும்.

'ஆய்தங்கெடத் தகரம் வரும்' என்றமையின் அருத்தாபத்தியால், ஆய்தமில்லாத ஒருபது முதலான வைகளும் தகரம்பெறும் என்றதாயிற்று.

## மோசசு பொன்னையா

ஒருபஃது முதலிய எட்டு எண்களின் முன்னர் ஒன்று முதல் ஒன்பது ஈறாக உள்ள எண்களும், அவ்வெண்களை ஊர்ந்த பிறவும் வந்து புணரின், நிலைமொழியின் ஆய்தம் கெட அவ்விடத்தில் இயல்பாகிய தகரம் வரும், எ–று.

எ–டு.:–

ஒருபத்தொன்று; இருபத்தொன்றேகால்;

நாற்பத்தெண் கழஞ்சு; எழுபத்தேழ் கலனே தூணி

ஆய்தம் இல்லாத ஒருபது, இருபது முதலியவற்றின் முன்னர் அவை புணரினும் அவ்வாறே முடியும் என்பது தகரப்பேறு விதிக்கப்பட்டமையால் அருத்தாபத்தியாற் கொள்ளப்படும்.

(46)

**196.** **ஒன்றுமுத லீரைந் தாயிரங் கோடி**
**எண்ணிறை யளவும் பிறவரிற் பத்தின்**
**ஈற்றுயிர் மெய்கெடுத் தின்னு மிற்றும்**
**ஏற்ப தேற்கு மொன்பது மினைத்தே.**

ஒன்று முதல் ஈர் ஐந்து ஆயிரம் கோடி
எண் நிறை அளவும் பிற வரின் பத்தின்
ஈற்று உயிர்மெய் கெடுத்து இன்னும் இற்றும்
ஏற்பது ஏற்கும் ஒன்பதும் இனைத்தே.

onṟu mutal īr aintu āyiram kōti
eṇ niṟai aḷavum piṟa varin pattin
īṟṟu uyirmey ketuttu iṉṉum iṟṟum
ēṟpatu ēṟkum oṉpatum iṉaittē.

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Special rule for pattu and onpatu before other numerals**

When pattu combines with the numerals **one to ten, one thousand, ten million**, with names of weight and measure, and with others, its final vowel consonant is dropped, and the (increment)in or irru is added according as whichever is appropriate. And the same of **onpatu.**

ஒப்புமைப் பகுதி

ஒன்றுமுத லாக எட்ட னிறுதி
எல்லா எண்ணும் பத்தன் முன்வரின்
குற்றிய லுகரம் மெய்யொடும் கெடுமே
முற்றஇன் வரூஉம் இரண்டலங் கடையே.

(தொல்.: 434)

ஆயிரம் வரினும் ஆயியல் திரியாது.

(தொல்.: 436)

நிறையு மளவும் வரூஉம் காலையும்
குறையா தாகும் இன்னென் சாரியை

(தொல்.: 437)

ஒன்பா னிறுதி உருபுநிலை திரியாது
இன்பெறல் வேண்டும் சாரியை மொழியே

(தொல்.: 459)

நூறு முன் வரினுங் கூறிய இயல்பே

(தொல்.: 460)

ஒன்றுமுத லீரைந் தாயிரங் கோடி
யெண்ணிறை யளவும் பிறவரிற் பத்தி
னீற்றுயிர் மெய்கெடுத் தின்னு மிற்று

பாட வேறுபாடு.:-

1. அடுப்பதொன்று

மேற்ப தேற்கு மொன்பது மினைத்தே

(இ.வி.: 115)

ஒன்றுமுத லாகிய பத்தூர் கிளவி
ஒன்றுமுத லொன்பாற் கொற்றிடை மிகுமே

(மு.வீ.: 455)

ஆயிரம் வரினே யின்னே சாரியை
ஆவயி னொற்றிடை மிகாதியல் பாகும்

(மு.வீ.: 456)

அளவு நிறையு மாயிய றிரியா

(மு.வீ.: 457)

## மயிலை நாதர்

எ–ன், எண்பெயரோடு எண்ணாதி நாற்பெயரும் புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– ஒன்றாதி பத்தே ஆயிரமே கோடியே என்றிவ் வெண்களே நிறையே அளவே இவை யல்லாப் பொருளே யென்றிவை வரின், பத்தென்பதின் ஈற்று நின்ற உயிர்மெய்யைக் கெடுத்து இன்னாதல் இற்றாதல் ஆண்டைக்கு [1]ஏற்பதொன்று வரும். ஒன்பதென்பதன் பின்பும் இவை வந்தால் இவ்விரண்டனுள் ஒன்றாகும், எ – று.

இரண்டும் ஒன்பதும்–மேலே வருமாயின், அவற்றிற்கு இன்னொழியக் கொள்க.

வ – று.:–

பதினொன்று, பதின்மூன்று, பதினான்கு, பதினெட்டு, பதினாயிரம், பதின்கோடி; பதின்கழஞ்சு, பதின்றுலாம்; பதினாழி, பதின்கலம்; பதின்மர், பதின்மடங்கு என இன் பெற்றன. பதிற்றொன்று, பதிற்றிரண்டு, பதிற்றொன்பது, பதிற்றுப்பத்து, பதிற்றுக்கோடி; பதிற்றுக்கழஞ்சு; பதிற் றுழக்கு, பதிற்றுத்தூணி; பதிற்றடுக்கு, எண்பதிற் றொன்று, எண்பதிற்றுக்கழஞ்சு, எண்பதிற்றுத் தூணி; எண்பதிற் றடுக்கு, எண்பதிற்று மடங்கு என எண்ணாதி இற்றுப் பெற்றன. ஒன்பதினாயிரம் ஒன்பதின்கோடி, ஒன்பதின் கழஞ்சு; ஒன்பதின்கலம் ஒன்பதின்மர் ஒன்பதிற் றொன்று; ஒன்பதிற்றுக்கோடி, ஒன்பதிற்றுக் கழஞ்சு, ஒன்பதிற்றுத் தூணி, ஒன்பதிற்றடுக்கு என ஒன்பது இன்னும் இற்றும் பெற்றன.

'ஏற்பதேற்கும்' என்பதனாற் பத்தின்முன் இரண்டும் ஒன்பதும் பத்தும் வருவழி இன்னும், ஆயிரம் வருவழி இற்றும், ஒன்பதன் முன் ஒன்று முதற் பத்தெண்ணும் வருவழி இன்னும் வாராவெனக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

## சிவஞான முனிவர்

எ—னின், பத்து என்னும் நிலைமொழிக்கு, ***உயிர்வரின் 'உயிர்வரினுக்குறள்' என்னும் சூத்திரத்தான்*** எய்தியது விலக்கிப் பிறிது விதியும், ***மெய்வரின்*** எய்தாதது எய்துவித்தலும், ஒன்பது என்னும் நிலைமொழிக்கு, ***உயிர்வரின் 'உயிர்வரினுக் குறள்' என்னும் சூத்திரத்தான்*** எய்தியதன் மேற் சிறப்புவிதியும், ***மெய்வரின்*** எய்தாதது எய்துவித்தலும், உணர் — ற்று.

இ — ள்.:— ஒன்று முதலாகிய பத்தும் ஆயிரமும் கோடியும் என்னும் எண்ணுப்பெயரும் நிறைப்பெயரும் அளவுப்பெயரும் பிறபெயரும் வந்து புணருமாயின், நிலைமொழியாகிய பத்து என்னும் எண்ணினது ஈற்றுயிர் மெய்யைக் கெடுத்து, அந் நிலைக்களத்து இன் சாரியை யேனும் இற்றுச் சாரியை யேனும் ஆண்டைக்கு ஏற்பது ஏற்று நிற்கும். ஒன்பது என்னும் நிலைமொழியும், இங்ஙனம் விதந்த எண்ணாதிப்பெயர் வந்து புணருமாயின், இன்னேனும் இற்றேனும் ஆண்டைக்கு ஏற்பது ஏற்று நிற்கப்பெறும், எ— று.

உ — ம்.:—

பதினொன்று, பதின்மூன்று, பதினாயிரம், பதின்கழஞ்சு, பதின்கலம், பதின்மடங்கு எனவும்; பதிற்றொன்று, பதிற்றிரண்டு, பதிற்றுமூன்று, பதிற்றுக்கோடி, பதிற்றுத் தூணி எனவும்; ஒன்பதினாயிரம், ஒன்பதின்கழஞ்சு, ஒன்பதின்கலம், ஒன்பதின் மடங்கு எனவும்; ஒன்பதிற் றொன்று, ஒன்பதிற்றிரண்டு, ஒன்பதிற்றுக் குறுணி எனவும் வரும். பிறவும் அன்ன.

பதினொன்று என்பது உம்மைத்தொகை. பதிற்றொன்று என்பது பண்புத்தொகை. பிறவும் கண்டுகொள்க.

பத்துக்கோடி, ஒன்பதுகோடி என இந் நிலைமொழிகள் தம் இயல்பின் நிற்றலே யன்றி வழக்கின்கண்ணும் சான்றோர் செய்யுட்கண்ணும் இவ்வாறு அமைந்து கிடந்தனவும் கொள்க என்பார் ஏற்பது ஏற்கும் என்றும், ஒன்பதன் ஈற்றுயிர்மெய்யைக் கெடாது குற்றுகர ஈற்றுப்

பொது விதியான் உயிர் ஒன்றுமே கெட இன்னும் இற்றும் ஏற்பது ஏற்று நிற்றலின் ஒன்பதும் இற்றே எனத் தன்மையணி யாக்காது உவமையணி யாக்கி இனைத்தே என்றும் கூறினார். ஒன்பது என்பதன் இறுதி, பத்து என்பது போல முரணி நிற்றலின், அதனோடு இதனை மாட்டெறியப்பட்டது எனினும் அமையும்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், பத்தும் ஒன்பதுமான எண்பெயரொடு எண்ணாதி நாற்பெயரும் வந்து புணருமாறு. . .

இ–ள்.:– **ஒன்று முதலீரைந்தாயிரங் கோடியெண்** – ஒன்றாதியாகப் பத்தும் ஆயிரமும் கோடியும் என்றிவ்வெண்ணுப் பெயரும், **நிறையளவும் பிறவரின்** – நிறைப் பெயரும், அளவுப்பெயரும் மற்றும் பொருட்பெயரும் இவை வருமொழியாக வரில், **பத்தினீற்றுயிர்மெய் கெடுத்து** – நிலையாக நின்று பத்தென்பதன் ஈற்று நின்ற உயிர்மெய்யைக் கெடுத்து, **இன்னும் இற்றும் ஏற்பதேற்கும்** – இன்னாதல் இற்றாதல் ஆண்டைக்கு அடுப்பது ஒன்றை ஏற்கும், **ஒன்பதும் இனைத்தே** – ஒன்பதென்னும் எண்ணின் பின் இவ் வெண்ணாதிப் பெயர் வந்தால் இவ் விரண்டனுள் ஒன்று ஆண்டுமாம், எ–று.

உ–ம்.:–

பதினொன்று, பதின்மூன்று, பதினான்கு, பதினைந்து, பதினாறு, பதினேழு, பதினெட்டு எனவும் பதினாயிரம், பதின்கோடி, பதின் கழஞ்சு, பதின்றுலாம், பதினாழி, பதின்கலம், பதின்மர், பதின்மடங்கு என இன் சாரியை பெற்றன. பதிற்றொன்று, பதிற்றிரண்டு, பதிற்றுமூன்று, பதிற்றுநான்கு, பதிற்றைந்து, பதிற்றாறு, பதிற்றேழு, பதிற்றெட்டு, பதிற்றொன்பது, பதிற்றுப்பத்து, பதிற்றுக் கோடி, பதிற்றுக்கழஞ்சு, பதிற்றுத்துலாம், பதிற்றுத்தூணி, பதிற்றுநாழி என இற்றுப் பெற்றன. ஒன்பதினாயிரம், ஒன்பதின்கோடி, ஒன்பதின்கழஞ்சு, ஒன்பதின்கலம், ஒன்பதின்மர் என இன் சாரியை பெற்றன. ஒன்பதிற்றொன்று, ஒன்பதிற்றிரண்டு, ஒன்பதிற்றுமூன்று, ஒன்பதிற்று நான்கு, ஒன்பதிற்றைந்து, ஒன்பதிற்றாறு, ஒன்பதிற்றேழு, ஒன்பதிற்றெட்டு, ஒன்பதிற்றொன்பது, ஒன்பதிற்றுப்பத்து, ஒன்பதிற்றுக்கோடி, ஒன்பதிற்றுக் கழஞ்சு, ஒன்பதிற்றுத் தூணி, ஒன்பதிற்று மடங்கு என இற்றுச் சாரியை பெற்றன.

"ஏற்பதேற்கும்" என்பதனால் பத்தின்முன் இரண்டும் ஒன்பதும் பத்தும் வரும் வழி இன் சாரியை பெறாதென்க; ஆயிரம் வரும்வழி இற்றுச் சாரியை பெறாதென்க; இன்வரும், ஒன்பதின்முன் ஒன்று முதல் பத்தெண்ணும் வரும்வழி இன் சாரியை பெறாதென்க.

## விசாகப் பெருமாளையர்

இது, பத்தென்னு நிலைமொழிக்கு 'உயிர்வரினுக்குறள்' என்பதனால் எய்தியது விலக்கிப் பிறிது விதியும் மெய்வரின் எய்தாத தெய்துவித்துலும், ஒன்பதென்னு நிலைமொழிக்கு உயிர் வரின் அச் சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்பு விதியும் மெய்வரின் எய்தாத தெய்துவித்தலும் உணர்த்துகின்றது.

இ–ள்.:– **ஒன்று முதலீரைந்து**–ஒன்று முதலாகிய பத்தெண்களும், **ஆயிரம்**–ஆயிரமும், **கோடி**–கோடியுமாகிய, **எண்**–எண்ணுப் பெயரும், **நிறை**–நிறைப் பெயரும், **அளவும்** – அளவுப் பெயரும், **பிற**–பிற பெயரும், **வரின்** – வந்து புணருமாயின், **பத்தின்**–நிலைமொழியாகிய பத்தினது, **ஈற்றுயிர்மெய்**–இறுதியிலுள்ள தகர வுயிர்மெய்யை, **கெடுத்து** – அழித்து, **இன்னும்** – இன் சாரியை யாயினும், **இற்றும்**– இற்றுச் சாரியை யாயினும், **ஏற்பது** – அவ்விடத்திற் கேற்பது, **ஏற்கும்** – ஏற்று நிற்கும், **ஒன்பதும்** – ஒன்பதென்னும் நிலைமொழியும், **இனைத்து** – இப்படியே எண்ணுப்பெயர் முதலானவை வந்து புணருமாயின் இன்னாயினும் இற்றாயினும் அவ்விடத்திற்கு ஏற்பது ஏற்று நிற்கப் பெறும், எ – று.

**உ–ம்.:–**

பத்து+ஒன்று–பதினொன்று, பதிற்றொன்று ஒன்பது. ஆயிரம்–ஒன்பதினாயிரம்–ஒன்பதிற்றாயிரம் என வரும், மற்றவைகளும் இப்படியே. (பதினொன்று – உம்மைத்தொகை பதிற்றொன்று பண்புத்தொகை. 'ஏற்பதேற்கும்' என்றதனால் பத்துக்கோடி, ஒன்பதுகோடி எனப் பொதுவிதிப்படியே முடிந்து நிற்றலுங் கொள்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

பத்து ஒன்பது என்பனவற்றின் முன்னே எண்முதலிய நாற் பெயரும் வந்து புணரின் எவ்வாறாம்?

ஒன்றுமுத லீரைந் தாயிரங் கோடி
எண்ணிறை யளவும் பிறவரிற் பத்தின்
ஈற்றுயிர் மெய்கெடுத் தின்னு மிற்றும்
எற்ப தேற்கு மொன்பது மினைத்தே.

(ஒன்று முதல் ஈரைந்து ஆயிரம் கோடி
எண் நிறை அளவும் பிறவரின் பத்தின்
ஈற்று உயிர்மெய் கெடுத்து இன்னும் இற்றும்
ஏற்பது ஏற்கும் ஒன்பதும் இனைத்து.)

இ–ள்.:– **ஒன்றுமுதல் ஈரைந்து ஆயிரம்கோடி எண் நிறை அளவும் பிறவரின்** – ஒன்றுமுதலிய பத்தும் ஆயிரமுங் கோடியுமாகிய எண்ணுப் பெயரும் நிறைப்பெயரும் அளவுப்பெயரும் பிற பெயரும் வந்து புணருமாயின், **பத்தின் ஈற்று உயிர்மெய்கெடுத்து** – நிலைமொழியாகிய பத்தினது இறுதியிலுள்ள தகர வுயிர்மெய்யை அழித்து, **இன்னும் இற்றும் ஏற்பது ஏற்கும்** – இன்சாரியையாயினும் இற்றுச் சாரியையாயினும் அவ்விடத்திற்கேற்பது ஏற்றுநிற்கும், **ஒன்பதும் இனைத்து** –ஒன்பதென்னும் நிலைமொழியும் இப்படியே எண்ணுப்பெயர் முதலானவை வந்து புணருமாயின் இன்னாயினும் இற்றாயினும் அவ்விடத்திற்கு ஏற்பது ஏற்று நிற்கப்பெறும். எ–று.

பத்து ஈற்றுயிர்மெய் கெட்டு இன்சாரியையாயினும் இற்றுச் சாரியையாயினும் பெற்று நிற்றல் எவ்வழி?

"ஒன்றுமுத லீரைந் தாயிரங் கோடி எண்ணிறை யளவும் பிறவரிற் பத்தின் ஈற்றுயிர் மெய்கெடுத் தின்னு மிற்றும் ஏற்பதேற்கும்"

ஒன்பதின் செய்தியென்னை?

"ஒன்பதும் இனைத்தே"

அற்றாயின் ஒன்பதை வேறுபிரித்துக் கூறிய தென்னை?

பத்து ஈற்றுயிர்மெய் கெட்டு இன்னும் இற்றுமேற்று நிற்கும்; ஒன்பது அங்ஙனம் ஈற்றுயிர்மெய் கெடாது. சாரியை மாத்திரம் பெறுமென்ப துணர்த்தற்கா மென்க.

உ–ம்.:–

பதினொன்று, பதின்மூன்று, பதினாயிரம், பதின்கழஞ்சு, பதின்கலம், பதின்மடங்கு எனவும், பதிற்றொன்று, பதிற்றிரண்டு, பதிற்றுமூன்று, பதிற்றுக்கோடி, பதிற்றுத் தூணி, எனவும், ஒன்பதினாயிரம், ஒன்பதின்கழஞ்சு, ஒன்பதின்கலம், ஒன்பதின் மடங்கு எனவும், ஒன்பதிற்றொன்று, ஒன்பதிற்றிரண்டு, ஒன்பதிற்றுக் குறுணி எனவும் வரும். மற்றவைகளும் இப்படியே. பதினொன்று உம்மைத் தொகை. பதிற்றொன்று பண்புத்தொகை.

ஏற்பதேற்கும் என்றதனால், பத்துக்கோடி, ஒன்பதுகோடி,

பத்திரட்டி எனப் பொதுவிதிப்படியே முடிந்து நிற்றலுங் கொள்க.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** பத்தென்னு நிலைமொழிக்கு எய்தியது விலக்கிப் பிறிது விதியும், எய்தாதது எய்துவித்தலும், ஒன்பதென்னு நிலைமொழிக்கு எய்தியதன் மேற் சிறப்பு விதியும் எய்தாதது எய்துவித்தலும் உணர்த்திற்று.

**இ—ள்.:— ஒன்றுமுத லீரைந்து**—ஒன்று முதலாகிய பத்தும், **ஆயிரங்கோடி** — ஆயிரமுங் கோடியுமாகிய, **எண்ணிறை யளவும் பிறவரின்** — எண்ணுப் பெயரும் நிறைப் பெயரும் அளவுப் பெயரும் பிற பெயரும் வந்து புணருமாயின், **பத்தி னீற்றுயிர் மெய் கெடுத்து**—நிலைமொழியாகிய பத்தென்னு மெண்ணினது ஈற்றுயிர்மெய்யை நீக்கி, **இன்னு மிற்றும்** — (அவ்விடத்தில்) இன் சாரியை யாயினும் இற்றுச் சாரியை யாயினும், **ஏற்ப தேற்கும்** — பொருந்துவது ஒன்றை யேற்று நிற்கும், **ஒன்பது மினைத்து**— ஒன்பதென்னு நிலைமொழியும் மேற்காட்டிய வருமொழிகள் வந்து புணரின் இவ் விரண்டு சாரியையுள் ஒன்றைக் கொண்டு அதுபோல நிற்கப் பெறும், எ—று.

**உ—ம்.:—**

பதினொன்று, பதின்மூன்று, பதினாயிரம், பதின்கழஞ்சு, பதின்கலம், பதின்மடங்கு எனவும், பதிற்றொன்று, பதிற்றிரண்டு, பதிற்றுமூன்று, பதிற்றுப்பத்து, பதிற்றுக் கோடி, பதிற்றுத்தூணி எனவும், ஒன்பதினாயிரம், ஒன்பதின்கழஞ்சு, ஒன்பதின்கலம், ஒன்பதின்மடங்கு எனவும், ஒன்பதிற்றொன்று, ஒன்பதிற்றிரண்டு, ஒன்பதிற்றுக்குறுணி, எனவும் வரும். பிறவுமன்ன. பதினொன்று—உம்மைத்தொகை, பதிற்றொன்று—பண்புத்தொகை, பிறவுங் கண்டு கொள்க.

பத்துக்கோடி, ஒன்பதுகோடி என இந் நிலைமொழிகள் தன்னியல்பின் நிற்றலே யன்றி வழக்கிடத்துஞ் செய்யுளிடத்தும் இவ்வாறு அமைந்து கிடந்தனவுங் கொள்க என்று சொல்ல வந்தவர், 'ஏற்பதேற்கு' மென்றும், ஒன்பதின் ஈற்றுயிர்மெய் கெடாது குற்றுகர வீற்றுப் பொதுவிதியால், உயிரொன்றுமே கெட இன்னும் இற்றும் ஏற்பதேற்று நிற்றலின், ஒன்பதுமிற்றே எனத் **தன்மையணி** யாக்காது. **'ஒன்பது மினைத்தே'** என **உவமையணி** யாக்கியுங் கூறினார். ஒன்பது என்பதன் இறுதி பத்தென்பது போல நிற்றலின் அதனோடு இதனை மாட்டெறியப்பட்ட தென்க. **இது மாட்டெறிந்தொழுக லென்னும் உத்தி.** இப்

புணர்ச்சியேற்கும், ஒன்பதும் இனைத்து என இரு முடிபாக்குக.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை** :- **ஒன்றுமுதல் ஈரைந்து** - ஒன்று முதலாகிய பத்து எண்களும், **ஆயிரம்** - ஆயிரமும், **கோடி** - கோடியும் ஆகிய, **எண்** - எண்ணுப்பெயரும், **நிறை** - நிறைப்பெயரும், **அளவு** - அளவுப்பெயரும், **பிற** - பிறபெயரும், **வரின்** - (வருமொழியாக) வந்து புணருமாயின், **பத்தின்** - (நிலைமொழியாகிய) பத்தினது, **ஈறு உயிர்மெய்** - இறுதியிலுள்ள 'து' என்னும் உயிர்மெய்யை, **கெடுத்து** - அழித்து, **இன்னும்** - இன்சாரியை யாயினும், **இற்றும்** - இற்றுச் சாரியை யாயினும், **ஏற்பது** - (அவ்விடத்துக்குப்) பொருந்துவது ஒன்றை, **ஏற்கும்** - ஏற்று நிற்கும்; **ஒன்பதும்** - 'ஒன்பது' என்னும் நிலைமொழியும், **இனைத்தே** - இப்படிப்பட்டதேயாம். (இவ்விரண்டு சாரியைகளுள் ஒன்றை ஏற்று நிற்கும்).

**உ-ம்** :-

பத்து + ஒன்று = பதினொன்று, பதிற்றொன்று.
ஒன்பது + ஆயிரம் =
ஒன்பதினாயிரம், ஒன்பதிற்றாயிரம்.

குறிப்பு :-

(பதினொன்று - உம்மைத்தொகை. பதிற்றொன்று - பண்புத்தொகை.) 'ஏற்பதேற்கும்' என்றமையால், பதினொன்று, பதினாயிரம் என முறையே உம்மைத் தொகை பண்புத்தொகைகளில் இன்சாரியை வரும் எனவும், இற்றுச்சாரியை பண்புத் தொகைக்கே வருமெனவும், ஒன்பதன் ஈற்றுயிர்மெய் கெடாமல் நிற்குமெனவும், 'பத்துக்கோடி', 'ஒன்பதுகோடி' எனப் பொதுவிதிப்படியே முடியுமெனவுமறிக.

## ஆறுமுக நாவலர்

**இ-ள்.: ஒன்று முதல் ஈரைந்து ஆயிரம் கோடி எண்** - ஒன்று முதலிய பத்தும் ஆயிரமுங் கோடியுமாகிய எண்ணுப் பெயரும், **நிறை**-நிறைப் பெயரும், அளவும்-அளவுப் பெயரும், **பிற வரின்** - பிற பெயரும் வந்து புணருமாயின், **பத்தின் ஈற்று உயிர் மெய் கெடுத்து** - நிலைமொழியாகிய பத்தினது இறுதியிலுள்ள தகர வுயிர் மெய்யை அழித்து, **இன்னும் இற்றும் ஏற்பது ஏற்கும்** - இன் சாரியை யாயினும் இற்றுச் சாரியை யாயினும் அவ்விடத்திற் கேற்பது ஏற்று நிற்கும், **ஒன்பதும் இனைத்து** - ஒன்பதென்னும் நிலைமொழியும் இப்படியே எண்ணுப்பெயர் முதலானவை வந்து புணருமாயின்

இன்னாயினும் இற்றாயினும் அவ்விடத்திற்கு ஏற்பது ஏற்று நிற்கப் பெறும், எ – று.

உ – ம்.:–

பதினொன்று, பதின்மூன்று, பதினாயிரம், பதின்கழஞ்சு, பதின்கலம், பதின்மடங்கு எனவும்; பதிற்றொன்று, பதிற்றிரண்டு, பதிற்றுமூன்று, பதிற்றுக்கோடி, பதிற்றுத் தூணி எனவும்; ஒன்பதினாயிரம், ஒன்பதின் கழஞ்சு, ஒன்பதின்கலம், ஒன்பதின் மடங்கு எனவும்; ஒன்பதிற்றொன்று, ஒன்பதிற்றிரண்டு, ஒன்பதிற்றுக் குறுணி. எனவும் வரும். மற்றவைகளும் இப்படியே. பதினொன்று உம்மைத்தொகை, பதிற்றொன்று பண்புத்தொகை.

ஏற்பதேற்கும் என்றதனால், பத்துக்கோடி ஒன்பதுகோடி எனப் பொது விதிப்படியே முடிந்து நிற்றலுங் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள்.:– ஒன்று முதல் ஈரைந்து ஆயிரம் கோடி எண்** – ஒன்றுமுதலிய பத்தும் ஆயிரமுங் கோடியுமாகிய எண்ணுப் பெயரும், – **நிறை** – நிறைப் பெயரும், – **அளவும்** – அளவுப்பெயரும், – **பிறவரின்** – பிறபெயரும் வந்து புணருமாயின், – **பத்தின் ஈற்று உயிர்மெய் கெடுத்து** – நிலைமொழியாகிய பத்தினது இறுதியிலுள்ள தகரவுயிர்மெய்யை அழித்து, – **இன்னும் – இற்றும் ஏற்பது ஏற்கும்** – இன்சாரியையாயினும் இற்றுச்சாரரியையாயினும் அவ்விடத்திற் கேற்பது ஏற்று நிற்கும் – **ஒன்பதும் இணைத்து** – ஒன்தென்னும் நிலைமொழியும் இப்படியே எண்ணுப்பெயர் முதலானவை வந்து புணருமாயின் இன்னாயினும் இற்றாயினும் அவ்விடத்திற்கு ஏற்பது ஏற்று நிற்கப்பெறும். எ–று.

**உ–ம்.:–**

**பதினொன்று, பதின்மூன்று, பதினாயிரம், பதின்கழஞ்சு, பதின்கலம், பதின்மடங்கு. எனவும் பதிற்றொன்று, பதிற்றிரண்டு, பதிற்றுமூன்று, பதிற்றுக்கோடி, பதிற்றுத் தூணி, எனவும் ஒன்பதினாயிரம், ஒன்பதின் கழஞ்சு, ஒன்பதின்கலம், ஒன்பதின் மடங்கு எனவும் ஒன்பதிற் றொன்று, ஒன்பதிற்றிரண்டு, ஒன்பதின மடங்கு எனவும் ஒன்பதிற்றொன்று, ஒன்பதிற்றிரண்டு, ஒன்பதிற்றுக்குறுணி, எனவும் வரும் மற்றவைகளும் இப்படியே பதினொன்று உம்மைத் தொகை, பதிற்றொன்று பண்புத்தொகை.**

**ஏற்பதேற்கும் என்றதனால், பத்துக்கோடி ஒன்பது கோடி**

எனப் பொதுவிதிப்படியே முடிந்துநிற்றலுங் கொள்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.:–** **ஒன்று முதல் ஈரைந்து** – ஒன்று முதலாகிய பத்து எண்களும், **ஆயிரம்** – ஆயிரமும், **கோடி** – கோடியும் ஆகிய, **எண்** – எண்ணுப் பெயரும், **நிறை** – நிறைப் பெயரும், **அளவும்** – அளவுப் பெயரும், **பிற** – பிற பெயரும், **வரின்** – (வருமொழியாக) வந்து புணருமாயின், **பத்தின்** – (நிலைமொழியாகிய) பத்தினது, **ஈறு உயிர்மெய்** – இறுதியிலுள்ள 'து' என்னும் உயிர் மெய்யை, **கெடுத்து** – போக்கி, **இன்னும்** – இன் சாரியை யாயினும், **இற்றும்** – இற்றுச் சாரியை யாயினும், **ஏற்பது** – (அவ்விடத்திற்குப்) பொருந்துவது ஒன்றை, **ஏற்கும்** – ஏற்று நிற்கும்; **ஒன்பதும்** – ஒன்பது என்னும் நிலைமொழியும், **இனைத்தே** – இத் தன்மையதே யாம். (இவ் விரண்டு சாரியைகளில் ஒன்றை ஏற்று நிற்கும்); எ–று.

**உ–ம்.:–**

பத்து + ஒன்று = பதினொன்று, பதிற்றொன்று.

ஒன்பது + ஆயிரம் = ஒன்பதினாயிரம், ஒன்பதிற்றாயிரம்.

பதினொன்று – உம்மைத்தொகை. பதிற்றொன்று – பண்புத்தொகை. ஒன்பதினாயிரம், ஒன்பதிற்றாயிரம் இரண்டும் பண்புத்தொகை. உம்மைத்தொகை – கூட்டலும், பண்புத்தொகை – பெருக்கலுமாம்.

'ஏற்பதேற்கும்' என்றதனால், பதினொன்று பதினாயிரம் என இன் சாரியை உம்மைத்தொகை பண்புத்தொகை இரண்டிலும் ஏற்றபடி வருதலும், இற்றுச் சாரியை பண்புத்தொகைக்கே வருதலும், ஒன்பதன் ஈற்று உயிர்மெய் கெடாமல் நிற்றலும், பத்துக்கோடி ஒன்பதுகோடி எனப் பொது விதிப்படியே முடிதலும் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:– ஒன்று முதல் ஈரைந்து ஆயிரம் கோடி எண்** – ஒன்று முதலிய பத்தும் ஆயிரமுங் கோடியுமாகிய எண்ணுப்பெயரும், **நிறை** – நிறைப்பெயரும், **அளவும்** – அளவுப்பெயரும், **பிறவரின்** – பிறபெயரும் வந்து புணருமாயின், **பத்தின் இற்று உயிர்மெய் கெடுத்து** – நிலைமொழியாகிய பத்தினது இறுதியிலுள்ள தகரவுயிர்மெய்யை அழித்து, **இன்னும் இற்றும்**

ஏற்பது ஏற்கும்- இன் சாரியையாயினும் இற்றுச் சாரியையாயினும் அவ்விடத்திற்கேற்பது ஏற்று நிற்கும். **ஒன்பதும்இனைத்து** – ஒன்பதென்னும் நிலைமொழியும் இப்படியே எண்ணுபெயர் முதலானவை வந்துபுணருமாயின் இன்னாயினும் இற்றாயினும் அவ்விடத்திறகு ஏற்பது ஏற்று நிற்கப் பெறும். எ–று.

**உ–ம்.:–**

பத்து + ஒன்று = பதினொன்று, பதிற்றொன்று. ஒன்பது + ஆயிரம் = ஒன்பதனாயிரம், ஒன்பதிற்றாயிரம். பதினொன்று உம்மைத்தொகை, பதிற்றொன்று பண்புத் தொகை. பத்து + கழஞ்சு = பதின்கழஞ்சு, பத்து +கலம் = பதின்கலம். பத்து + மடங்கு= பதின்மடங்கு. பத்து + கோடி = பதிற்றுக்கோடி. பத்து + தூணி = பதிற்றுத்தூணி.

ஒன்பதினாயிரம், ஒன்திற்றாயிரம் இரண்டும் பண்புத்தொகை. (உம்மைத்தொகை கூட்டலும் பண்புத்தொகை பெருக்கலுமாம்)

ஏற்பதேற்கும் என்றதனால், பதினொன்று, பதினாயிரம் என இன்சாரியை உம்மைத் தொகை பண்புத் தொகை இரண்டிலும் ஏற்றபடி வருதலும், இற்றுச்சாரியை பண்புத்தொகைக்கே வருதலும், பத்துக்கோடி, ஒன்பதுகோடி எனப் பொது விதிப்படியே முடிந்துநிற்றலுங் கொள்க.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) **ஒன்றுமுதல் ஈரைந்து** – ஒன்றுமுதலாகிய பத்தெண்களும், **ஆயிரம்** ஆயிரமும், **கோடி** – கோடியுமாகிய, **எண்** – எண்ணுப்பெயரும், **நிறை** – நிறைப்பெயரும், **அளவும்** – அளவுப் பெபரும், **பிற** – பிறபெயரும், **வரின்** – வந்து புணருமாயின், **பத்தின்** – நிலைமொழியாகிய பத்தினது, **ஈற்றுயிர் மெய்** – இறுதியிலுள்ள தகர வுயிர்மெய்யை, **கெடுத்து** – போக்கி, **இன்னும்** – இன்சாரியை யாயினும், **இற்றும்** – இற்றுச்சாரியை யாயினும், **ஏற்பது** – அவ்விடத்திற்கேற்பது, **ஏற்கும்** – ஏற்று நிற்கும் ;

(2) **ஒன்பதும்** – ஒன்பது என்னும் நிலைமொழியும், **இனைத்து** – இப்படியே (எண்ணுப்பெயர் முதலானவை வந்து புணருமாயின் இன்னாயினும் இற்றாயினும் அவ்விடத்திற்கு ஏற்பது ஏற்று) நிற்கப்பெறும்.

**உதாரணம்:–**

(1) பத்து + ஒன்று = பதினொன்று, பதிற்றொன்று

(2) ஒன்பது + ஆயிரம் = ஒன்பதினாயிரம், ஒன்பதிற்றாயிரம் எனவரும்

பதினொன்று – உம்மைத்தொகை, பதிற்றொன்று – பண்புத்தொகை. ஒன்பதினாயிரம், ஒன்பதிற்றாயிரம் இவ்விரு தொடரும் பண்புத்தொகை. 'ஏற்பதேற்கும்' என்றதனால், பத்துக்கோடி, ஒன்பதுகோடி எனப் பொதுவிதிப்படியே முடிந்துநிற்றலும் கொள்க.

## மோசசு பொன்னையா

ஒன்று முதல் பத்து ஆயிரம், கோடி என்னும் எண்ணுப் பெயர்களும், நிறைப் பெயரும், அளவுப் பெயரும், பிற பெயரும் வந்து புணரின், நிலைமொழியாக நின்ற பத்து என்னும் எண்ணுப்பெயர் தன் ஈற்று உயிர்மெய்யைப் போக்கி இன், இற்று என்னும் சாரியைகளுள் பொருந்தும் ஒன்றை ஏற்று நிற்கும்; ஒன்பது நிலைமொழியாக வந்து புணரினும் அவ்வாறே அவற்றுள் ஒன்றை ஏற்று நிற்கும்.

எ–டு.:–

பதினொன்று;பதிற்றொன்று

ஒன்பதினாயிரம்; ஒன்திற்றாயிரம்.

பதினொன்று உம்மைத்தொகை; ஏனைய பண்புத்தொகை.

ஏற்பதேற்கும் என்றதனால் பத்துக்கோடி, ஒன்பது கோடி எனப் பொது விதியால் முடிவனவற்றையுங் கொள்க.

தொல்காப்பியர் இன்சாரியை ஒன்றையே விதித்தார். தங்கால வழக்கு நோக்கியும், தமக்கு முற்பட்ட இலக்கிய வழக்கு நோக்கியும், இற்றுச்சாரியையும் இவ்வாசிரியர் விதித்தார்.

(47)

**197 இரண்டு முன்வரிற் பத்தினீற் றுயிர்மெய்
கரந்திட வொற்று னவ்வாகு மென்ப.**

**இரண்டு முன் வரின் பத்தின் ஈற்று உயிர்மெய்
கரந்திட ஒற்று னவ் ஆகும் என்ப.**

iranṯu muṉ variṉ paṯṯiṉ īṟṟu uyirmey
karantiṭa oṟṟu ṉav ākum eṉpa.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

## Special rule for pattu before irantu

But when pattu is followed by irantu, its final consonant being removed the t is changed into n.

## ஒப்புமைப் பகுதி

பத்தனொற் றுக்கெட னகாரம் இரட்டல்
ஒத்த தென்ப இரண்டுவரு காலை

(தொல்.: 435)

இரண்டு முன்வரிற் பத்தினீற் றுயிர்மெய்
கரந்திட வொற்றுனவ் வாகு மென்ப

(இ.வி.: 116)

இரண்டு முன்வரிற் பத்தினீற் றுயிர்மெய்
கரந்திர வொற்று னவ்வாகு மென்ப

(மு.வீ.: 417)

## மயிலை நாதர்

எ–ன், எண் பெயரோடு எண்பெயர் புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: இரண்டென்பது வரிற் பத்தென்னும் நிலைமொழி யெண்ணீற்று உயிர்மெய் கெடத் தகரவொற்று னகரமாகத் திரியும், எ – று.

வ – று.:–

பன்னிரண்டு என் வரும்.

## சங்கர நமச்சிவாயர்

## சிவஞான முனிவர்

எ–னின், இதுவும் பத்து என்னும் நிலைமொழிக்கு 'உயிர்வரின் உக்குறள்' (164) என்னும் சூத்திரத்தான் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ–ள்.:– இரண்டு என்பது வரின், பத்து என்னும் நிலைமொழியினது ஈற்று உயிர்மெய் கெடத் தகர வொற்று னகர வொற்றாகத் திரியும் என்று சொல்லுவர் புலவர், எ – று.

உ –ம்.:–

பன்னிரண்டு என வரும்.

உம்மைத்தொகைக்கண்ணும் பண்புத்தொகைக்கண்ணும் இரண்டு என்னும் எண் வருமொழியாய் வருமேனும், முன்வரின் என வருதலைச் சிறப்பித்தமையான். ஒருசொல்

நீர்மையாய்ச் சிறந்த உம்மைத்தொகைக்கு இவ்விதி கூறினார் என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், பத்தென்னும் எண்முன் இரண்டென்னும் எண் புணருமாறு கூறியது.

**இ-ள்.:- இரண்டு முன்வரில்** - இரண்டென்பது வருமொழியா வரில், **பத்தின் ஈற்றுயிர்மெய் கரந்திட** - பத்தென்னும் எண்ணின் நிலைமொழி ஈற்றுயிர்மெய் கெட, **ஒற்று னவ்வாகு மென்ப** - இடையே நின்ற தகர ஒற்று னகர வொற்றாய்த் திரியுமென்று உரைப்பர் புலவர், எ-று.

உ-ம்.:-

பத்து இரண்டு என்பது பன்னிரண்டு என வரும்

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

பத்தென்னு நிலைமொழிக்கு, 'உயிர்வரினுக்குறள்' என்பதனால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

**இ-ள்.:- இரண்டு**-இரண்டென்பது, **முன்வரின்**-முன் வருமாயின், **பத்தின்**-பத்தென்னு நிலைமொழியினது, **ஈற்றுயிர்மெய்**-ஈற்றிலுள்ள துகர வுயிர்மெய்யானது, **கரந்திட**- கெட, **ஒற்று**-தகரமெய், **னவ்வாகும்**-னகர மெய்யாகத் திரியும், **என்ப**- என்று சொல்லுவர் புலவர், எ - று.

உ-ம்.:-

பத்து + இரண்டு - பன்னிரண்டு என வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

இரண்டு முன்வரின் பத்து எவ்வாறாம்?

இரண்டு முன்வரிற் பத்தினீற் றுயிர்மெய்
கரந்திட வொற்றுனவ் வாகு மென்ப.

(இரண்டு முன்வரின் பத்தின் ஈற்று உயிர்மெய்
கரந்திட ஒற்று ன ஆகும் என்ப.)

**இ-ள்.: இரண்டு முன் வரின்** - இரண்டென்பது முன்வருமாயின், **பத்தின் ஈற்று உயிர்மெய் கரந்திட** - பத்தென்னு நிலைமொழியினது ஈற்றிலுள்ள துகரவுயிர்மெய் கெட, **ஒற்று ன ஆகும் என்ப** - தகரமெய் னகரமெய்யாகத் திரியும் என்று சொல்லுவர் புலவர், எ-று.

இச்சூத்திரம் எச்சூத்திரத்தான் எய்தியவிதியை விலக்குவது?

பத்து இரண்டு–பத்திரண்டு என முடியாது பன்னிரண்டென முடிதலின் "உயிர்வரி னுக்குறண்மெய்விட்டோடும்" என்னுஞ் சூத்திரவிதியை விலக்குவது.

உ–ம்.:–

பன்னிரண்டு எனவரும். இது உம்மைத் தொகை.

## முகவை இராமானுச கவிராயர்

இதுவும், பத்தென்னு நிலைமொழிக்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

இ–ள்.:– **இரண்டு முன் வரின்**–இரண்டென்பது. வருமொழியாக வந்து புணரின், **பத்தி னீற்றுயிர்மெய்**–பத்தென்னும் நிலைமொழி யிறுதி யுயிர்மெய்யானது, **கரந்திட**–கெட்டுப் போக, **ஒற்று னவ்வாகு மென்ப**–நடு நின்ற தகர வொற்று னகர வொற்றாகத் திரியு மென்று சொல்லுவர் புலவர், எ–று.

உ–ம்.:–

பன்னிரண்டு என வரும். உம்மைத்தொகை யிடத்தும் பண்புத்தொகை யிடத்தும் இரண்டென்னு மெண் வருமொழியாய் வருமாயினும் முன்வரின் என வருதலைச் சிறப்பித்ததினாலே ஒருசொற் குணமாய்ச் சிறந்த உம்மைத்தொகைக்கே இவ்விதி கூறினாரென்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– இரண்டு** – இரண்டு என்பது, **முன்வரின்** – (வருமொழியாக) முன்வருமாயின், **பத்தின்** – 'பத்து' என்னும் நிலைமொழியினது, **ஈறு உயிர் மெய்** – ஈற்றிலுள்ள துகர உயிர்மெய், **கரந்திட** – கெட, **ஒற்று** – (நடுநின்ற) தகரமெய், **ன ஆகும்** – னகர மெய்யாகத் திரியும், **என்ப** – என்று சொல்லுவர் (புலவர்).

உ–ம் :–

பத்து + இரண்டு = பன்னிரண்டு.

குறிப்பு :–

'முன்வரின்' என வருதலைச் சிறப்பித்ததனால், இது ஒரு சொற்குணமாய்ச் சிறந்த உம்மைத் தொகைக்கேயாம் என்க.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– இரண்டு முன் வரின் – இரண்டென்பது முன் வருமாயின், பத்தின் ஈற்று உயிர்மெய் கரந்திட – பத்தென்னு நிலை மொழியினது ஈற்றிலுள்ள துகர வுயிர்மெய் கெட, ஒற்று ன ஆகும் என்ப – தகர மெய் னகர மெய்யாகத் திரியும் என்று சொல்லுவர் புலவர், எ – று.

உ–ம்.:–

பன்னிரண்டு என வரும். இது உம்மைத்தொகை.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். இரண்டு முன்வரின் – இரண்டென்பது முன்வருமாயின் – பத்தின் ஈற்று உயிர்மெய் கரந்திட – பத்தென்னுநிலைமொழியினது ஈற்றிலுள்ள துகரவுயிர்மெய் கெட, – ஒற்று ன ஆகும் என்ப – தகரமெய் னகர மெய்யாகத் திரியும் என்று சொல்லுவர் புலவர். எ–று.

உ–ம்.:–

பன்னிரண்டு எனவரும். இது உவமைத் தொகை.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– இரண்டு – இரண்டு என்பது, முன் வரின் (வருமொழியாக) முன் வருமாயின், பத்தின் – பத்து என்னும் நிலைமொழியினது, ஈறு உயிர் மெய் – ஈற்றிலுள்ள 'து' என்னும் உயிர்மெய், கரந்திட – கெட, ஒற்று – (நடுநின்ற) தகர மெய், ன ஆகும் – னகர மெய்யாகத் திரியும், என்ப – என்று சொல்வர்; எ – று.

(இங்கு 'என்ப' என்பதை அசையாகக் கொள்ளுதல் பொருத்தம்; 'என்ப' என்பதை அசை யென்பர், தொல்காப்பிய வுரையிலும், சீவகசிந்தாமணி யுரையிலும் நச்சினார்க்கினியர்.)

உ–ம்.:–

பத்து + இரண்டு = பன்னிரண்டு. இவ்விதி, உம்மைத்தொகைக்கே.

பத்து + நான்கு = பன்னான்கு, பத்து + மூன்று =

---

பாட வேறுபாடு.:–

1. மிகைநெறி

பன்மூன்று, பத்து + ஒன்று = பன்னொன்று எனச் சிறுபான்மை வருதலையும் இச் சூத்திரத்தில் அடக்கிக் கொள்க; இனி, அவற்றை மரூஉவின் பாற்படுத்தலும் ஒன்று.

## பவானந்தம் பிள்ளை

இ-ள்.:- இரண்டு முன் வரின் - இரண்டென்பது முன் வருமாயின், பத்தின் ஈற்று உயிர்மெய் கரந்திட - பத்தென்னு நிலைமொழியினது ஈற்றிலுள்ள துகரவுயிர்மெய் கெட, ஒற்று ன ஆகும் என்ப - தகர மெய் னகர மெய்யாகத் திரியும் என்று சொல்லுவர் புலவர். எ-று.

உ-ம்.:-

பத்து+ இரண்டு = பன்னிரண்டு

(இது உம்மைத்தொகை.)

## கா.நமச்சிவாய முதலியார்

இரண்டு - இரண்டென்பது, முன்வரின் - முன்வருமாயின், பத்தின் - பத்து என்னும் நிலைமொழியினது, ஈற்றுயிர் மெய் - ஈற்றிலுள்ள 'து' என்னும் உயிர்மெய் யானது, கரந்திட - கெட, ஒற்று - தகரமெய், னவ்வாகும் - னகர மெய்யாகத் திரியும், என்ப - என்று சொல்லுவர் புலவர்.

பத்து + இரண்டு = பன்னிரண்டு
எனவரும். இவ்விதி உம்மைத் தொகைக்கே கொள்க.

## மோசசு பொன்னையா

இரண்டு வருமொழியாக முன்வரின், பத்து என்னும் நிலைமொழியின் ஈற்று உயிர்மெய் கெட நடுநின்ற தகரமெய் னகரமாய்த் திரியும் என்பர், எ-று.

எ-டு.:-

---

பாட வேறுபாடு.:-

1. தம்முன் தான் வரின்
2.அவ்வந்தவையும்
3.உடனேமிகுகை
4.மூன்றுநான்குஆறேழென்பவற்றிற்கு

பன்னிரண்டு,
பன்னிரண்டு உம்மைத்தொகை.

(48)

198. ஒன்ப தொழித்தவெண் ணொன்பது மிரட்டின்
முன்னதின் முன்னல வோட வுயிர்வரின்
வவ்வு மெய்வரின் வந்தது[1] மிகனெறி.

ஒன்பது ஒழித்த எண் ஒன்பதும் இரட்டின்
முன்னதின் முன் அல ஒடு உயிர்வரின்
வவ்வும் மெய்வரின் வந்தது மிகல்நெறி

oṉpaṭu oḷiṭṭa eṇ oṉpaṭum irattiṉ
muṉṉaṭiṉ muṉ ala ōtu uyirvariṉ
vavvum meyvariṉ vanṭaṭu mikalneṟi

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Special rule for numerals repeated**

When all the numerals except onpatu are repeated, all but the initial are dropped, and v is inserted if the approaching initial is a vowel but if it is a consonant that consonant is itself doubled.

ஒப்புமைப் பகுதி

ஒன்ப தொழிந்த வெண் ணோரெட்டு மிரட்டின்
முன்னதின் முன்னல வோட வுயிர்வரின்
வவ்வு மெய்வரின் வந்தது மிகனெறி

(இ.வி.: 117)

மயிலை நாதர்

இதுவுமது.

இ–ள்.: ஒன்பதென்னும் எண் ஒன்றனையும் ஒழித்து நின்ற ஒன்றாதி பத்தீறான ஒன்பதெண்ணும் [1]தம்முன் தாம்வரின் முதல்நின்ற எண்ணின் முதலெழுத்து ஒன்றும் நிற்க அல்லன வெல்லாம் கெட உயிர் முதலான

எண்ணிற்கு வவ்வும் மெய் முதலான வெண்ணிற்கு [2]வந்த அவ்வம்மெய்களும் [3]இடையே மிகுகை வரலாற்று முறைமை, எ–று.

வ – று.:–

ஒவ்வொன்று, இவ்விரண்டு, மும்மூன்று, நந்நான்கு, ஐவ்வைந்து, அவ்வாறு, எவ்வேழு, எவ்வெட்டு, பப்பத்து என வரும்.

'நெறி' என்ற மிகையானே, [4]மூன்றும் நான்கும் ஆறும் ஏழும் என்பவற்றிற்குக் குறுக்கமும், பத்துப்பத்து பதிற்றுப்பத் தென்னும் விகற்பமும், ஐவைந்து என்புழி வகரம் இரட்டாமையும், ஒரோவொன் றென்பதும், கழக்கழஞ்சு, கலக்கலம் என்றற் றொடக்கத்தனவும், ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து என்பன, ஒன்று, கழஞ்சு, கலம், தலையெனும் எண்ணாதி நான்கொடும் இயையுங்கால் இயல்பாதலுங் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

## சிவஞான முனிவர்

எ – **னின்,** ஒன்பது ஒழித்த ஒன்பது எண்களாய நிலை மொழிகளுள், மூன்று ஆறு ஏழற்கு ***'எண்ணிறையளவும் பிறவும் எய்தின்' என்னும் சூத்திரத்துள் 'மூன்றாறேழ் குறுகும்' என*** எய்தியதன் மேற் சிறப்புவிதியும், எல்லாவற்றிற்கும் உயிர்வரின் எய்தியது விலக்கிப் பிறிது விதியும், மெய்வரின் எய்தாதது எய்துவித்தலும் நுதலிற்று.

இ – ள்.:– ஒன்பது என்னும் எண்ணொன்றனையும் ஒழித்து நின்ற ஒன்றாதி பத்தீறான எண் ஒன்பதனையும் இரட்டித்துக் கூறின், நிலைமொழி முதலெழுத்து ஒன்று நிற்க, அல்லன எல்லாம் கெட, உயிர் முதலான எண் வரின் வகர ஒற்றும், மெய் முதலான எண்வரின் அவ்வந்த ஒற்றும் மிகுதல் முறைமையாம், எ – று.

உ –ம்.:–

ஒவ்வொன்று, இவ்விரண்டு, மும்மூன்று, நந்நான்கு, ஐவைந்து, அவ்வாறு, எவ்வேழு, எவ்வெட்டு, பப்பத்து என வரும்.

நெறி என்றமையானே, நான்கிற்குக் குறுக்கமும், ஐவைந்து என்புழி ஐகாரக் குறுக்கத்தின் முன் ஒற்று இரட்டாமையும், ஒரோவொன்று, ஒன்றொன்று, கழக்கழஞ்சு, கலக்கலம் என இரட்டித்து வருவனவும், குற்றுகரப்புணர்ச்சி விதியுள்

கூறாதொழிந்த நெறிப்பட வருவனவுளவேல் அவையும் கொள்க.

ஒவ்வொன்று கொடு என்றால் இம்முறையே பலவற்றையும் கொடு எனப் பொருள் தந்து நிற்றலின், இஃது அடுக்கன்று; வேற்றுமையல்லன எல்லாம் அல்வழி யாதலின் தழாத்தொடராய அல்வழியுள் ஒன்றாம் என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், ஒன்று முதல் பத்தீறாகவுள்ள எண்கள் தம்மொடு தாம் புணருமாறு கூறியது.

இ–ள்.:– **ஒன்பதொழித்த** – ஒன்பதென்னும் எண் ஒன்றனையு மொழிந்து நின்ற, **எண்ணொன்பதும்** – ஒன்றாதி பத்தீறான் எண் ஒன்பதும், **இரட்டின்** – தம்முன்னர்த் தாம் வந்து புணருமிடத்து, **முன்னதின் முன்னலவோட** – நிலைமொழியாக நின்றதன் முதலெழுத்து ஒன்று நிற்க அல்லன வெல்லாம் கெட ஆண்டு, **உயிர்வரின் வவ்வும்** – வருமொழி முதலாக உயிர் வந்தால் இடையே வகர வொற்றும், **மெய் வரின் வந்தது மிகல்** – வருமொழி முதலாக மெய் வந்தால் வந்தவெழுத்து இரட்டித்தலும், **நெறி** – முறையாம், எ–று.

உ–ம்.:–

ஒவ்வொன்று, இவ்விரண்டு, மும்மூன்று, நந்நான்கு, ஐவ்வைந்து, அவ்வாறு, எவ்வேழு, எவ்வெட்டு, பப்பத்து என வரும் விகற்பமும் ஐவைந்து என்புழி வகரம் இரட்டாமலும் ஒரோவொன்றென்பதும் கழக்கழஞ்சு, கலக்கலம் என்பதும் கொள்க.

## விசாகப் பெருமாளையர்

இது, ஒன்பதை நீக்கிய ஒன்ப தெண்களாய் நிலைமொழிகளுள் மூன்றாறேழற்கு, 'மூன்றாறேழ் குறுகுமெனா' எய்தியதின் மேற் சிறப்பு விதியும் உயிர்வரின் எல்லாவற்றிக்கும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதியும் மெய்வரின் எய்தாத தெய்துவித்தலுஞ் சொல்லுகின்றது.

இ–ள்.:– **ஒன்பது** – ஒன்பதென்கிற எண்ணொன்றையும், **ஒழித்த** – ஒழித்து நின்ற, **எண்ணொன்பதும்** – ஒன்று முதற் பத்தீறாகிய ஒன்பதெண் ணினையும், **இரட்டின்** – இரட்டித்துச் சொன்னால், **முன்னதின்** – நிலைமொழியினது, **முன்னல** – முதலெழுத் தல்லாதவைகளெல்லாம், **ஓட**– கெட, **உயிர் வரின்**–உயிர் முதலான வெண் வரின், **வவ்வும்**–வகர மெய்யும், **மெய் வரின்**–மெய் முதலான வெண் வரின், **வந்ததும்** – வந்த மெய்யும், **மிகல்**–மிகுதல், **நெறி**–முறையாம், எ – று.

உ-ம்.:-

ஒன்று + ஒன்று - ஒவ்வொன்று, இரண்டு + இரண்டு - இவ்விரண்டு, நான்கு+ நான்கு - நந்நான்கு, பத்து+பத்து- பப்பத்து என வரும். 'நெறி' யென்றமையால் நந்நான்கு என நான்கிற்குக் குறுக்கமும் ஒரோவொன்று-ஒன்றொன்று- கழக்கழஞ்சு என விரட்டித்தலும், இன்னுங் குற்றியலுகரப் புணர்ச்சியுள் அடங்காதனவுங் கொள்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஒன்பதொழிந்த ஒன்றுமுதற் பத்தீறாகிய ஒன்பதெண்களையும் இரட்டித்துச் சொல்லுமிடத்து எவ்வாறாம்?

ஒன்ப தொழித்தவெண் ணொன்பது மிரட்டின்
முன்னதின் முன்னல வோட வுயிர்வரின்
வவ்வு மெய்வரின் வந்தது மிகநெறி.

(ஒன்பது ஒழித்த எண் ஒன்பதும் இரட்டின்
முன்னதின் முன் அல ஒட உயிர்வரின்
வவ்வும் மெய்வரின் வந்ததும் மிகல்நெறி.)

**இ-ள்.:- ஒன்பது ஒழித்த எண் ஒன்பதும் இரட்டின்**-ஒன்பதென்னும் எண்ணொன்றனையும் ஒழித்து நின்ற ஒன்று முதற் பத்தீறாகிய ஒன்பதெண்ணினையும் இரட்டித்துச் சொல்லின், **முன்னதின் முன் அல ஓட**- நிலைமொழியினது முதலெழுத்தல்லா தவைகளெல்லாங் கெட, **உயிர்வரின் வவ்வும்** - உயிர் முதலான எண் வரின் வகரமெய்யும், **மெய்வரின் வந்ததும் மிகல் நெறி**-மெய் முதலான எண்வரின் வந்தமெய்யும் மிகுதல் முறையாம், எ-று.

உ-ம்.:-

ஒவ்வொன்று, இவ்விரண்டு, மும்மூன்று, நந்நான்கு, ஐவ்வைந்து, அவ்வாறு, எவ்வேழு, எவ்வெட்டு, பப்பத்து எனவரும்.

நெறி என்றமையால், மூன்று நான்கு ஆறு ஏழு என்பனவற்றிற்குக் குறுக்கமும், ஒரோவொன்று, ஒன்றொன்று, கழக்கழஞ்சு என இரட்டித்தலும், பத்துப்பத்து, பத்து பத்து என்னும் விகற்பமும், நானான்கு என்னுந் திரிபும், ஐயைந்து, ஐவ்வந்து, என்னு முறழ்ச்சியும் இன்னுங் குற்றியலுகரப் புணர்ச்சியுள் அடங்காதனவுங் கொள்க.

உடம்படுமெய்யாயின் இய்யிரண்டென வரற்பாலதாகிய

இவ்விரண்டு என்பது கொண்டு, அவ்வாறு ஒவ்வொன்று என்பனவற்றின் வகரம் உடம்படுமெய்யன்மை யுணர்க.

குற்றுகரவீற்றுப் புணர்ச்சிக்குச் சிறப்புவிதி எச்சூத்திரமுதல் எச்சூத்திரம் வரையுங் கூறப்பட்டது?

"வன்றொடரல்லன" என்னுஞ் சூத்திரமுதல் "ஒன்ப தொழித்த" வென்னுஞ் சூத்திரங் காறும்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, ஒன்று முதலிய பத்தெண்களுள் ஒன்ப தொழிந்தவற்றுள் மூன்று ஆறு ஏழிற்கு எய்தியதன் மேற் சிறப்பு விதியும், எல்லாவற்றிற்கும் உயிர் வரின் எய்தியது விலக்கிப் பிறிது விதியும், மெய் வரின் எய்தாதது எய்துவித்தலு முணர்த்துகின்றது.

இ–ள்.:– **ஒன்பதொழித்த வெண்ணொன்பதுமிரட்டின்** – ஒன்ப தென்பதை யொழித்து நின்ற ஒன்றாதி பத்து முடிவாகிய ஒன்பதெண்களையும் இரட்டித்துக் கூறினால், **முன்னதின் முன்னல வோட**–முன்னின்ற நிலைமொழியின் முதலெழுத் தல்லாதன வெல்லாங் கெட, **உயிர்வரின் வவ்வும்** – உயிர் முதலான எண் வந்து புணரின் வகர வொற்றும், **மெய் வரின் வந்ததும்** – மெய் முதலான எண் வந்து புணரின் அவ் வந்த மெய்யெழுத்தும், **மிகனெறி** – மிக்கிருப்பது முறையாம், எ–று.

உ–ம்.:–

ஒவ்வொன்று இவ்விரண்டு, மும்மூன்று, நந்நான்கு, ஐவைந்து, அவ்வாறு, எவ்வேழு, எவ்வெட்டு, பப்பத்து என வரும். 'நெறி'யென்றதனால், நான்கிற்குக் குறுக்கமும்; ஐகாரக் குறுக்கத்தின் முன் ஒற்றிரட்டா மையும், ஒரோவொன்று, ஒன்றொன்று, கழக்கழஞ்சு, கலக்கலம், என விரட்டித்தலும், குற்றுகரப் புணர்ச்சி விதியுட் கூறாதொழிந்து நெறிப்பட வருவனவுள வாயின் அவையுங் கொள்க.

ஒவ்வொன்று கொடு வென்றால் இம் முறையே பலவற்றை யுங் கொடு வெனப் பொருள் தந்து நிற்றலால் இது அடுக்குத் தொடரன்று; வேற்றுமை யல்லன வெல்லாம் அல்வழி யாதலால் – தழாஅத் தொடராகிய அல்வழியுள் ஒன்றென்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை** :– **ஒன்பது ஒழித்த** – 'ஒன்பது' என்கிற எண் ஒன்றனையும் ஒழித்து நின்ற, **எண் ஒன்பதும்** – (ஒன்று முதல் பத்து ஈறாகிய) ஒன்பது எண்களும், **இரட்டின்** – இரட்டித்து (தனக்கு முன்னே தான்) வந்தால் **முன்னதின்** – நிலைமொழியினது, **முன் அல** – முதலெழுத்தல்லாத

வைகளெல்லாம், **ஓட** – கெட (முதலெழுத்து மாத்திரம் நிற்க,) **உயிர்வரின்** – வருமொழி உயிர் முதன்மொழியாயின், **வவ்வும்** – வகரமெய்யும், **மெய் வரின்** – வருமொழிமெய்ம் முதன்மொழியாயின், **வந்ததும்** – வந்தமெய்யும், **மிகல்** – மிகுதல், **நெறி** – முறைமையாம்.

உ–ம்.:–

ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று, இவ்விரண்டு, மும்மூன்று, நந்நான்கு, ஐவைந்து, அவ்வாறு, எவ்வேழு, எவ்வெட்டு, பப்பத்து என வரும்.

குறிப்பு :–

'நெறி' என்றதனால் நந்நான்கு என 'நான்கு' குறுகலும்; ஒரோவொன்று, ஒவ்வொன்று என வருதலும்; வேறு + வேறு = வெவ்வேறு, பாதி + பாதி = பப்பாதி எனப் பிறபெயர்கள் இரட்டிக்கும்போது, இங்ஙனம் விகாரமடைதலும்; இன்னும் குற்றியலுகரப் புணர்ச்சியுள் அடங்காதனவுங் கொள்க. இவற்றுள் 'வெவ்வேறு', 'பப்பாதி' என்பன மரூஉ மொழியாக் கொள்ளலுமாம். ஒவ்வொன்று முதலியன அடுக்கு அன்று என்பதை உய்த்துணர்க.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:– ஒன்பது ஒழித்த எண் ஒன்பதும் இரட்டின்** – ஒன்பதென்னும் எண்ணொன்றனையும் ஒழித்து நின்ற ஒன்று முதற் பத்தீறாகிய ஒன்பதெண்ணினையும் இரட்டித்துச் சொல்லின், **முன்னதின் முன் அல ஓட** – நிலைமொழியினது முதலெழுத் தல்லாதவைகளெல்லாங் கெட, **உயிர் வரின் வவ்வும்** – உயிர் முதலான எண் வரின் வகர மெய்யும், **மெய் வரின் வந்ததும்** – மெய் முதலான எண் வரின் வந்த மெய்யும், **மிகல் நெறி** – மிகுதல் முறையாம், எ–று.

உ–ம்.:–

ஒவ்வொன்று, இவ்விரண்டு, மும்மூன்று, நந்நான்கு, ஐவைந்து, அவ்வாறு, எவ்வேழு, எவ்வெட்டு, பப்பத்து என வரும்.

'நெறி' என்றமையால், நந்நான்கு, என நான்கிற் குறுக்கமும், ஒரோவொன்று, ஒன்றொன்று, கழக்கழஞ்சு என இரட்டித்தலும், இன்னுங் குற்றியலுகரப் புணர்ச்சியுள் அடங்காதனவுங் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– ஒன்பது ஒழித்த எண் ஒன்பதும் இரட்டின் – ஒன்பதென்னும் எண்ணொன்றனையும் ஒழித்து நின்ற ஒன்று முதற் பத்தீறாகிய ஒன்பதெண் ணினையும் இரட்டித்துச் சொல்லின், முன்னதின் முன் அல ஓட – நிலைமொழியினது முதலெழுத்தல்லாதவைகளெல்லாங் கெட, உயிர்வரின் வவ்வும் – உயிர் முதலான எண்வரின் வகரமெய்யும், மெய் வரின் வந்ததும் – மெய் முதலான எண்வரின் வந்தமெய்யும், மிகல் நெறி – மிகுதல் முறையாம். எ–று.

உ–ம்.:–

ஒவ்வொன்றும், இவ்விரண்டு, மும்மூன்று, நந்நான்கு, ஐவைந்து, அவ்வாறு, எவ்வேழு, எவ்வெட்டு, பப்பத்து எனவரும்.

நெறி என்றமையால், நந்நான்கு என நான்கிற்குக் குறுக்கமும், ஒரோவொன்று, ஒன்றொன்று, கழக்கழஞ்சு என இரட்டித்தலும், இன்னுங் குற்றியலுகரப் புணர்ச்சியுள் அடங்காதனவுங் கொள்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– ஒன்பது ஒழித்த – ஒன்பது என்கின்ற எண் ஒன்றனையும் ஒழித்து நின்ற, எண் ஒன்பதும் – (ஒன்று முதல் பத்து ஈறாகிய) ஒன்பது எண்களும், இரட்டின் – இரட்டித்து (தனக்கு முன்னே தான்) வந்தால், முன்னதின் – நிலைமொழியினது, முன் அல – முதலெழுத்தல்லாதவை களெல்லாம், ஓட – கெட (முதலெழுத்து ஒன்று மாத்திரமே நிற்க), உயிர் வரின் – வருமொழி மெய்ம் முதல் மொழியாயின், வவ்வும் – வகர மெய்யும், மெய் வரின் – வருமொழி உயிர் முதல்மொழியாயின், வந்ததும் – வந்த மெய்யும், மிகல் – மிகுதல், நெறி – முறைமையாம்; எ – று.

உ–ம்.:–

ஒவ்வொன்று, இவ்விரண்டு, மும்மூன்று, நந்நான்கு, ஐவைந்து, அவ்வாறு, எவ்வேழு, எவ்வெட்டு, பப்பத்து.

'நெறி' என்ற மிகையால் நன்நான்கு என நான்கு குறுகுதலும்; ஒரோவொன்று, ஒன்றொன்று என இவ்வாறு வருதலும்; வேறு + வேறு = வெவ்வேறு, பாதி + பாதி = பப்பாதி எனப் பிறபெயர்கள் இரட்டிக்கும் போது இவ்வாறு விகாரமடைதலும்; இன்னும் குற்றியலுகரப் புணர்ச்சி விதியுட் கூறாதவை உளவாயின் அவையும் கொள்க. இவற்றில் வெவ்வேறு, பப்பாதி என்பவை மரூஉ மொழியுமாம்.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:–** **ஒன்பது ஒழித்தஎண் ஒன்பதும் இரட்டின்** – ஒன்பதென்னும் எண்ணொன்றனையும் ஒழித்துநின்ற ஒன்று முதற் பத்தீறாயகிய ஒன்பதெண்ணினையும் இரட்டித்துச் சொல்லின், **முன்னதின் முன் அல ஓட** – நிலைமொழியினது முதலெழுத்தல்லாதவைக ளெல்லாங் கெட, **உயிர் வரின் வவ்வும்** – உயிர் முதலான எண்வரின் வகரமெய்யும், **மெய் வரின் வந்ததும்** – மெய் முதலான எண்வரின் வந்தமெய்யும், **மிகல் நெறி** – மிகுதல் முறையாம். எ–று.

**உ–ம்.:–**

ஒன்று ஒன்று = ஒவ்வொன்று; இரண்டு இரண்டு = இவ்விரண்டு. மூன்று மூன்று = மும்மூன்று. நான்கு நான்கு = நந்நான்கு. ஐந்து ஐந்து – ஐவைநஸத. ஆறு ஆறு = அவ்வாறு; ஏழு ஏழு –எவ்வேழு. எட்டு எட்டு = எவ்வெட்டு; பத்து பத்து = பப்பத்து.

'நெறி' என்றமையால், நந்நான்கு, என நான்கிற்கு குறுக்கமும், ஒரோவொன்று, ஒன்றொன்று, கழக்கழஞ்சு என இரட்டித்தலும், இன்னுங் குற்றியலுகரப் புணர்ச்சியுள் அடங்காதனவுங் கொள்க.

## கா.நமச்சிவாய முதலியார்

**ஒன்பது** – ஒன்பது என்னும் எண்ணொன்றனையும், **ஒழித்த** – ஒழித்துநின்ற, **எண் ஒன்பதும்** – ஒன்றுமுதற் பத்தீறாகிய ஒன்பது எண்ணினையும், **இரட்டின்** – இரட்டித்துச் சொன்னால், **முன்னதின்** – நிலைமொழியினது, **முன்னல** – முதலெழுத்தல்லாதவைக ளெல்லாம், **ஓட** – கெட, **உயிர்வரின்** – உயிர்முதலான எண்வரின், **வவ்வும்** – வகரமெய்யும், **மெய்வரின்** – மெய்முதலான எண்வரின், **வந்ததும்** – வந்த மெய்யும், **மிகல்** – மிகுதல், **நெறி** – முறையாம்.

**உதாரணம்.;–**

ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று

~~இரண்டு + இரண்டு = இவ்விரண்டு~~

மூன்று + மூன்று = மும்மூன்று

நான்கு + நான்கு = நந்நான்கு

ஐந்து + ஐந்து = ஐவ்வைந்து

ஆறு + ஆறு = அவ்வாறு

ஏழு + ஏழு = எவ்வேழு

எட்டு + எட்டு = எவ்வெட்டு

பத்து + பத்து = பப்பத்து

"நெறி" என்றமையால், நந்நான்கு என நான்கிற்குக் குறுக்கமும், ஒரோவொன்று, ஒன்றொன்று, கழக்கழஞ்சு, வெவ்வேறு என இரட்டித்தலும், இன்னுங் குற்றியலுகரப் புணர்ச்சியுள் அடங்காதனவுங் கொள்க.

## மோசசு பொன்னையா

ஒன்றுமுதல் பத்துவரை உள்ள எண்களில் ஒன்பது ஒன்றும் ஒழிய, ஏனை ஒன்பது எண்களும் இரட்டித்து (தனக்கு முன்தான்) வரின், நிலைமொழியின் முதலெழுத்தல்லாதவை கெட, வருமொழி முதலெழுத்து உயிராயின் வகர ஒற்றும், மெய்யாயின் வந்தமெய்யும் மிக்கு முடிதல் முறையாம், எ–று.

எ–டு.:–

ஒவ்வொன்று, இவ்விரண்டு, மும்மூன்று, நன்நான்கு, ஐவைந்து, அவ்வாறு, எவ்வேழு, பப்பத்து.

நெறி என்ற மிகையால் நான்கின் முதல் குறுகுதலும், ஒரோவொன்று, ஒன்றொன்று என்று இரட்டித்து முடிதலையுங் கொள்க.

(49)

**199. பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்.**

பூப் பெயர் முன் இன மென்மையும் தோன்றும்

pūp peyar mun̲ in̲a men̲maiyum ṭōn̲ṟum

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

# WORDS WITH û AS FINALS

## Special rule for pû.

In the combination of pu with hard initials even kindred nasals may be (occasionally) inserted.

### ஒப்புமைப் பகுதி

பூஎன ஒருபெயர் ஆஇயல் பின்றே
ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே

(தொல்.: 269)

பூப்பெயர் முன்னின மெல்லெழுத்து மிகுதலும்
போற்றல் வேண்டும் வேற்றுமைக் கண்ணே

(இ.வி.: 96)

பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்

(மு.வீ.: 278)

### மயிலை நாதர்

எ—ன், எய்தியதன் மேற் சிறப்புவிதி யுணர்த்துத னுதலிற்று.

இ—ள்.:— பூ வென்பதன் முன் வல்லெழுத்து மிகலே யன்றி வருவதன் இனமான மெல்லெழுத்து வரவும் பெறும், எ—று.

வ — று.:—

பூங்கொடி; [1]சோலை, தா்மம், பந்து என வரும்.

உம்மையாற் பூக்கொடி முதலானவும் கொள்க.

பாடவேறுபாடு.:—

1. மென்மையும் புணரும்

2.சாலை

### சங்கர நமச்சிவாயர்
### சிவஞான முனிவர்

எ—னின், ஊகார ஈற்றுப் பூ என்னும் பலபொருளொரு சொல்முன் வரும் வல்லினத்திற்கு *'இயல்பினும் விதியினும்'* *என்னும் சூத்திரத்தான்* எய்தியதன் மேல் சிறப்புவிதி உணர் — ற்று.

இ—ள்.:— பூ என்னும் பலபொருட் பெயர்ச்சொல் முன் வல்லினம் வரின்,

பொதுவிதியால் க ச த ப மிகுதலே யன்றி, அவற்றிற்கு இனமாகிய மெல்லொற்றுக்களும் மிகும், எ – று.

இப் பொருட்டாய பூப்பெயர் என விதவாமையின், பலபொருளொருசொல் என்பது பெற்றாம்.

உ – ம்.:–

பூங்கொடி, பூஞ்சோலை, பூந்தடம், பூம்பணை என வரும். இவற்றுள் பூ என்பது மலரேல், இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனும் உடன் தொக்க தொகையாகவும், பொலிவேல் பண்புத்தொகையாகவும், பூங்கணை என்பது மலர் என்னும் ஒரு பொருட்டாய் மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையாகவும், பண்புத்தொகையாகவும், பூங்கரும்பு என்பது பொலிவு என்னும் ஒருபொருட்டாய்ப் பண்புத்தொகையாகவும் வருவன காண்க.

உறழ்ந்து வரும் என உறுதி கூறாது பூக்கொடி என வல்லின மிகுதலை உம்மையால் தழிஇக் கொண்டமையின் இவ்விருவகைத் தோன்றலும் ஏற்றபெற்றி கொள்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், ஊகார வீற்றிற்கு எய்தியதன் மேற் சிறப்புவிதி கூறியது.

இ–ள்.: **பூப்பெயர் முன்** – பூவென்று சொல்லப்படும் பெயர் முன்னர், **இனமென்மையும் புணரும்** – வல்லெழுத்து மிகலே யன்றி வருவதற் கினமான மெல்லெழுத்தும் வரப்பெறும், எ–று.

உ–ம்.:–

பூங்கொடி, சோலை, தாமம், பந்து என வரும்.

உம்மையாற் பூக்கொடி முதலானவும் கொள்க.

## விசாகப் பெருமாளையர்

**இது**, பூவென்கிற ஊகார வீற்றுச்சொன் முன் வருகிற வல்லினத்திற்கு 'இயல்பினும்' என்பதனால் எய்தியதன் மேற் சிறப்புவிதி யுணர்த்துகின்றது.

இ–ள்.:– **பூப்பெயர் முன்** – பூ வென்னும் பலபொரு ளொருசொல் முன், **இன மென்மையும்**–வருகிற வல்லின மிகுதலல்லாமல் அவற்றிற் கினமாகிய மெல்லினமும், **தோன்றும்** – மிகும், எ – று.

உ–ம்.:–

பூங்கொடி, பூஞ்சோலை, பூந்தடம், பூம்பணை என வரும்.

மலராயின் இரண்டாம் வேற்றுமைத் தொகையும் அழகாயிற் பண்புத் தொகையுமாம்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

"இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன் கசதப மிகும்" என்னுஞ் சூத்திர விதியில் முற்றும் அடங்காத ஊகாரவீற்றுச் சொல் ஒன்றற்குச் சிறப்புவித கூறுஞ் சூத்திரம் யாது?

பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்.

(பூப்பெயர்முன் இனமென்மையும் தோன்றும்.)

**இ–ள்.:– பூப்பெயர் முன்** – பூவென்னும் பலபொருட் பெயர்ச்சொல்லின் முன், **இன மென்மையும் தோன்றும்** – வல்லினம் வரிற் பொது விதியான் மிகுதலே யன்றி அவற்றிற் கினமாகிய மெல்லினமும் மிகும், **எ–று.**

உ–ம்.:–

பூங்கொடி, பூஞ்சோலை, பூந்தடம், பூம்பணை. எனவரும்.

இவைகளுள்ளே, பூவென்பது மலராயின், இரண்டாம் வேற்றுமைத்தொகை; அழகாயிற் பண்புத்தொகை.

மென்மையுந் தோன்றுமென்ற வும்மையாற் கொள்ளக்கிடப்பது யாது?

பூக்கொடி என "இயல்பினும் விதியினும்" என்னும்சூத்திரவிதியால் வன்மையுந் தோன்றுமென்பது.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** பூவென்னும் ஊகார வீற்றுப் பலபொருளொரு சொல்லின் முன் வரும் வல்லினத்திற்கு எய்தியதன் மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

**இ–ள்.:–** பூப்பெயர்முன்– பூ வென்னும் பலபொருட் பெயர்ச்சொன் முன், **இனமென்மையுந் தோன்றும்.** – வல்லினம் வரிற் பொதுவிதியாற் கசதப மிகுதலே யன்றி அவற்றிற்கு இனமாகிய மெல்லொற்றுக்களு மிகும், **எ–று.**

இப் பொருளை யுடைய பூப் பெயரென்று எடுத்துச் சொல்லாததினாலே, பலபொரு ளொருசொல்லெனக் கொள்க.

உ–ம்.:–

பூங்கொடி, பூஞ்சோலை, பூந்தடம், பூம்பணை என வரும். இவற்றுள், பூ வென்பது மலராயின் இரண்டாம் வேற்றுமை

யுருபும் பொருளு முடன்தொக்க தொகையாகவும், அழகாயினும், பூங்கரும் பெனப் பொலிவாயினும், பண்புத் தொகை யாகவும் வருமெனக் கொள்க.

விகற்பித்து வருமென்று உறுதி கூறாமல், பூக்கொடி யென வல்லின மிகுதலை உம்மையால் தழுவிக் கொண்டதினாலே இவ் விருவகைத் தோன்றல் விகாரங்களும் ஏற்றபடி வருமெனக் கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :–** பூ பெயர் முன் – 'பூ' என்னும் பெயர்ச்சொல்லின் முன், **இனம் மென்மையும்** – (வருகிற வல்லினம் பொதுவிதியால் மிகுதலேயல்லாமல் அவற்றிற்கு) இனமாகிய மெல்லினமும், **தோன்றும்** – மிகும்.

**உ–ம் :–**

பூ + கொடி = பூங்கொடி, பூஞ்சோலை, பூந்தடம், பூம்பணை

குறிப்பு :–

இவற்றுள் 'பூ' என்பது மலராயின், 'பூவையுடைய கொடி' என இரண்டாம் வேற்றுமையுருபும் பயனும் உடன்தொக்க தொகை; அழகாயின், 'பூவாகியகொடி' எனப் பண்புத்தொகை. 'பூக்கொடி' என வலிமிக்கு வருதலை உம்மையால் தழுவிக் கொண்டார்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:–** **பூப்பெயர் முன்** – பூ வென்னும் பலபொருட் பெயர்ச் சொல்லின் முன், **இன மென்மையும் தோன்றும்** – வல்லினம் வரிற் பொது விதியான் மிகுதலே யன்றி அவற்றிற் கினமாகிய மெல்லினமும் மிகும், எ–று.

**உ –ம்.:–**

பூங்கொடி, பூஞ்சோலை, பூந்தடம், பூம்பணை என வரும். இவைகளுள்ளே பூவென்பது மலராயின், இரண்டாம் வேற்றுமைத் தொகை; அழகாயிற் பண்புத்தொகை.

இனமென்மையுந் தோன்றும் என்றது 'இயல்பினும் விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதி.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள்.** **பூப்பெயர்முன்** – பூவென்னும் பலபொருட்பெயர் சொல்லின்முன், – **இன மென்மையும் தோன்றும்** – வல்லினம்வரிற்

பொதுவிதியான் மிகுதலேயன்றி அவற்றிற்கினமாகிய மெல்லினமும் மிகும். எ—று.

உ—ம்.:—

பூங்கொடி, பூஞ்சோலை, பூந்தடம், பூம்பணை எனவரும். இவைகளுள்ளே பூவென்பது மலராயின். இரண்டாம் வேற்றுமைத் தொகை; அழகாயிற் பண்புத்தொகை.

இனமென்மையுந் தோன்றும் என்றது 'இயல்பினும் விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதி.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

**இ—ள்.:— பூ** பெயர் முன் — பூ என்னும் பெயர்ச்சொல்லின் முன், **இனம் மென்மையும் தோன்றும்** — (வருகிற வல்லினம் பொது விதியால் மிகுதலே யல்லாமல்) அவற்றிற்கு இனமாகிய மெல்லினமும் மிகும்; **எ—று.**

உ—ம்.:—

பூ + கொடி = பூங்கொடி, பூஞ்சோலை, பூந்தடம், பூம்பொழில்.

இவற்றுள் பூ என்பது மலராயின், பூவையுடைய கொடி என இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையும்; அழகாயின், பூவாகிய கொடி எனப் பண்புத் தொகையுமாம்.

## பவானந்தம் பிள்ளை

இ—ள்.:— பூப்பெயர் முன் — பூவென்னும் பலபொருட் பெயர்ச் சொல்லின் முன், **இன மென்மையும் தோன்றும்** — வல்லினம் வரிற் பொது விதியான் மிகுலேயன்றி அவற்றிற்கினமாகிய மெல்லினமும் மிகும். எ—று.

உ—ம்.:—

பூ + கொடி = பூங்கொடி

பூ + சோலை = பூஞ்சோலை

பூ + தடம் = பூந்தடம்

பூ + பொழில் = பூம்பொழில்.

இவைகளுள்ளே பூவென்பது மலராயின், இரண்டாம் வேற்றுமை உருபும்பயனும் உடன் தொக்க தொகை:

அழகாயின், பண்புத் தொகை.

இனமென்மையுந் தோன்றும் என்றது "இயல்பினும் விதியினும்" என்னும் 165 ஆவது சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்பு விதி.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:– பூப்பெயர் முன் – பூ (என்னும் பலபொருள் ஒரு) பெயர்ச்சொல் முன், **இன மென்மையும்** – (வருகிற வல்லின மிகுதலல்லாமல் அவற்றிற்கு) இனமாகிய மெல்லினமும், தோன்றும் மிகும். எ–று.

பொ–ரை.:– பூ (என்னும் பல பொருள் ஒரு) பெயர்ச்சொல்ன்மு (வல்லினம் வரின் (பொதுவிதியான் க, ச, த, ப மிகுதலே அன்றி அவற்றிற்கு) இனமாகிய மெல்லொற்றுக்களு மிகும்.

உ–ம்.:–

பூ + கொடி = பூங்கொடி.

பூ + சோலை = பூஞ்சோலை.

பூ + தடம் = பூந்தடம்.

பூ + பணை = பூம்பணை.

இவற்றுள் – பூ என்பது மலராயின், பூவை யுடைய கொடி என இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையும், அழகாயின், பூவாகிய கொடி எனப் பண்புத் தொகையுமாம்.

## கா.நமச்சிவாய முதலியார்

பூப்பெயர் முன்–பூ என்னும் பலபொருள் ஒரு சொன்முன், **இனமென்மையும்** – வருகிறவல்லினம் மிகுதலல்லாமல் அவற்றிற் கினமாகிய மெல்லினமும், **தோன்றும்** – மிகும்.

**உதாரணம்.:–**

பூ + கொடி = பூங்கொடி

பூ + சோலை = பூஞ்சோலை

பூ + தடம் = பூந்தடம்

பூ + பணை = பூம்பணை

மலராயின் இரண்டாம் வேற்றுமைத் தொகையும், அழகாயின் பண்புத் தொகையுமாம்.

## மோசசு பொன்னையா

பூ என்னும் பெயர்ச் சொல்லின் முன் வல்லினம் வரின் பொது விதியால் வந்தவல்லெழுத்து மிகுதலேயன்றி அவ்வவ்வற்றிற்கு இனமான மெல்லினம் மிகுதலும் ஆகும், எ—று.

எ—டு.:—

பூக்கொடி, பூச்சோலை, பூத்தோட்டம், பூப்பொழில் — வலிமிக்கது.

பூங்கொடி, பூஞ்சோலை, பூந்தோட்டம், பூம்பொழில் — மெலிமிக்கது.

பூ மலராயின் இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை; அழகாயின் பண்புத்தொகை என்க.

(50)

**200. இடைச்சொ லேயோ முன்வரி னியல்பே.**

இடைச்சொலே ஏ முன் வரின் இயல்பே

itaissolē ē muṉ variṉ iyalpē

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### WORDS WITH ê,ö, FINALS

The hard initials are not doubled after the particles e and o.

## ஒப்புமைப் பகுதி

மாறுகொள் எச்சமும் வினாவும் எண்ணும்
கூறிய வல்லெழுத்து இயற்கை யாகும்
(தொல்.: 276)

மாறுகொள் எச்சமும் வினாவும் ஐயமும்
கூறிய வல்லெழுத்து இயற்கை யாகும்
(தொல்.: 291)

ஒழிந்ததன் நிலையும் ஒழிந்தவற் றியற்றே
(தொல்.: 292)

இடைச்சொல் லேயோ முன்வரி னியல்பே
(இ.வி.: 99)

எகாரத் தேற்ற மியல்பா கும்மே
(மு.வீ.: 282)

ஐயவோ வினாவலி மிகாதியல் பாகும்

(மு.வீ.: 292)

ஒழிசை யோவு மாறுகொ ளெச்சமு
மிகாதியல் பாகு மென்மனார் புலவர்

(மு.வீ.: 294)

## மயிலை நாதர்

எ–ன், எய்தியது விலக்குதல் நுதலிற்று.

இ–ள்.:– இடைச் [1]சொல்லாய் வரும் ஆறு ஏகாரமும் எட்டு ஒகாரமுமான இவற்றின் முன் வரும் வல்லினம் இயல்பாம். எ – று.

வ–று.:–

அவனே கொண்டானென்பது பிரிநிலை; நீயே கொண்டாயென்பது வினா; காலே கையே செவியே தலையே என்பது எண்; "கழியே, [2]சிறுகருநெய்தல் . . . [3]பாடோவாதே' என்பது ஈற்றசை; அவனே கொண்டா னென்பது தேற்றம்; ஏஎதனை யென்றோ ரிருடிவினவ" என்பது இசைநிறை. கொளலோ கொண்டானென்பது ஒழியிசை; அவனோ அல்லனோ சொன்னானென்பது வினா; ஓஒ பெரிய னென்பது சிறப்பு; யானோ கொண்டே னென்பது எதிர்மறை; நன்றோ தீதோவன்றென்பது தெரிநிலை; அவனோபோனா னென்பது கழிவு; "காணிய வம்மினோ கங்குலது நிலையே" என்பது அசைநிலை; அவனோகொண்டா னென்பது பிரிநிலை; இயல்பா யினவாறு காண்க.

பாட வேறுபாடு.:–

1. சொல்லென

2.(1) சிறுநெய்தல் (2) கருநெய்தல்

3.பாடொவ்வாதே

## சங்கர நமச்சிவாயர்

## சிவஞான முனிவர்

எ–னின், ஏகார ஒகார இடைச்சொற்கள் முன் வரும் வல்லினத்திற்கு ***'இயல்பினும் விதியினும்' என்னும் சூத்திரத்தான்*** எய்தியது விலக்கல் நுதலிற்று.

இ-ள்.:- இடைச்சொல்லாய ஆறு ஏகாரத்தின் முன்னும், எட்டு ஒகாரத்தின் முன்னும் வல்லினம் வருமாயின் பொது விதியான் மிகாது இயல்பாம், எ-று.

உ-ம்.:-

அவனே கொண்டான் என்பது பிரிநிலையும் வினாவும் ஈற்றசையும் தேற்றமுமாம். அறமே பொருளே காமமே துறவே என்பன எண். "ஏஎதனை யென்றோ ரிருடி வினவ" என்பது இசைநிறை. அவனோ கொண்டான் என்பது ஒழியிசை முதலிய எட்டுமாம். இவற்றுள் வல்லனம் இயல்பாதல் காண்க. இவ்விடைச்சொல் ஒன்று பலபொருள் தருமாறு இடைச்சொல்லியலுள் காட்டுதும்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், இடைச்சொல் ஏகார ஒகார ஈறு புணருமாறு கூறியது.

இ-ள்.:- இடைச்சொல் லேயோ முன் - இடைச்சொல்லாய் வரும் ஆறு ஏகார முன்னும் எட்டு ஒகார முன்னும், வரின் இயல்பே - வருமொழி முதல் வல்லினம் வரின் இயல்பாய் முடியும், எ-று.

உ-ம்.:-

அவனே கொண்டான் என்பது பிரிநிலை, நீயே கொண்டாய் என்பது வினா, காலே செவியே கையே தலையே என்பது எண், "கழியே, சிறுநெய்தல் நாடொவ்வாதே" என்பது ஈற்றசை, சாத்தனே கொண்டான் என்பது தேற்றம், "ஏஎதெனை யென்றோ ரிருடி வினவவே" என்பது இசைநிறை எனவும்; கொளலோ கொண்டான் என்பது ஒழியிசை, அவனோ சொன்னான் என்பது வினா, ஒஒ பெரியன் என்பது சிறப்பு, யானோ கொண்டேன் என்பது எதிர்மறை, நன்றோ தீதோ என்பது தெரிநிலை, அவனோ போனான் என்பது கழிவு, "காணிய வம்மினோ கங்குலது நிலையே" என்பது அசைநிலை, அவனோ கொண்டான் என்பது பிரிநிலை எனவும் இயல்பாயின.

## விசாகப் பெருமாளையர்

இது, ஏகார ஒகார இடைச்சொற்களின் முன் வருகிற வல்லினத்திற்கு இயல்பினு மென்பதனால் எய்தியது விலக்குகின்றது.

இ-ள்.:- இடைச்சொல் - இடைச்சொல்லாகிய, ஏ - (முன்)

ஆறேகாரத்தின் முன்னும், ஓ (முன்) – எட்டோகாரத்தின் முன்னும், வரின் – வல்லினம் வந்தால், இயல்பு–பொதுவிதியான் மிகாது இயல்பாகும், எ–று.

உ–ம்.:–

அவனே கொண்டான் – இது பிரிநிலையும் வினாவும் ஈற்றசையுந் தேற்றமுமாம். அறமே பொருளே காமமேதுறவே – எண். ஏயெதனை யென்றோரிருடி வினவ–இசைநிறை, அவனோகொண்டான் என்பது ஒழியிசை முதலிய வெட்டுமாம்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

"இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரவிதியில் அடங்காத ஏகார ஒகாரவீற்று இடைச்சொற்களுக்குச் சிறப்புவிதி கூறுஞ் சூத்திரம் யாது?

இடைச்சொல் லேயோ முன்வரி னியல்பே

(இடைச்சொல் ஏ ஓ முன்வரின் இயல்பே.)

இ–ள்.:– இடைச்சொல் ஏ ஓ முன் – இடைச்சொல்லாகிய ஆறேகாரத்தின் முன்னும் எட்டோகாரத்தின் முன்னும், வரின் இயல்பு – வல்லினம் வரிற் பொதுவிதியான் மிகாது இயல்பாகும்.

உ–ம்.:–

நீயே கொண்டாய்; இது வினா.

காலே கையே, இஃது எண்.

அவருள் இவனே கொண்டான்; இது பிரிநிலை.

யானே கொண்டேன்; இது எதிர்மறை.

"கடல்போற் றோன்றல் காடிறந்தோரே" இஃது ஈற்றசை. அவனே கொண்டான்; இது தேற்றம்.

கொளலோ கொண்டான்; இஃது ஒழியிசை.

நீயோ கொண்டாய்; இது வினா.

யானோ கொண்டேன்; இஃது எதிர்மறை.

அவனோ போனான்; இது கழிவு.

யானோ தேறே னவர்பொய் வழங்கலரே; இது பிரிநிலை. புற்றோ புதரோ: இஃது ஐயம்.

களிறென்கோ கொய்யுளைமாவென்கோ: இஃது எண்.

காணியவம்மினோ கங்குலது நிலையே: இஃது அசைநிலை.

இவையெல்லாம் இயல்பாயவாறு காண்க.

## முகவை இராமானுச கவிராயர்

இது, வரும் வல்லினத்திற்கு எய்திபது விலக்குகின்றது.

**இ—ள்.:— இடைச்சொல் லேயோ முன்** — இடைச்சொல்லாகிய ஆறு ஏகாரமும் எட்டு ஒகாரமு மாயவற்றின் முன், **வலியியல்பு** — வல்லினம் வருமாயிற் பொதுவிதியால் மிகாது இயல்பாம், எ — று.

**உ—ம்.:—**

அவனே கொண்டான் என்பது பிரிநிலையும், வினாவும், ஈற்றசையும், தேற்றமுமாம். அறமே பொருளே காமமே துறவே என்பன எண். 'ஏயே தனையென் றோரிருடி வினவ' என்பது இசைநிறை. 'அவனோ கொண்டான்' என்பது ஒழியிசை முதலிய எட்டுமாம். இவற்றுள் வல்லினம் இயல்பாயினவாறு காண்க. இவ் விடைச்சொல் பலபொருளைத் தருதல் இடைச்சொல்லிபலுள்ளே காண்க.

## கா. கோபாலாசாரி — தி.கோ.ரங்காசாரி

**உரை :— இடைச்சொல்** — இடைச்சொற்களாகிய, ஏ ஓ **முன்** — ஏ ஒ என்பவற்றின், **வரின்** — (வல்லினம்) வந்தால், **இயல்பே** — (பொதுவிதியால் மிகாமல்) இயல்பேயாகும்.

**உ—ம் :—**

அவனே + கண்டான் = அவனேகண்டான், அவனோ கண்டான்.

குறிப்பு :—

வினாப்பொருளில் வரும் ஏகார ஓகாரங்களின் முன்வலி இயல்பாதல் கீழ் ''ஈற்றியா வினாவிளிப்பெயர்'' என்ற சூத்திரத்தில் கூறப் பட்டதனால், இவ்விதி அவை மற்றப் பொருள்களில் வருமிடத்து என அறிக.

## ஆறுமுக நாவலர்

**இ—ள்.:— இடைச்சொல் ஏ (முன்) ஓ முன்** — இடைச் சொல்லாகிய ஆறேகாரத்தின் முன்னும் எட்டோகாரத்தின் முன்னும், **வரின் இயல்பு** — வல்லினம் வரிற் பொதுவிதியின் மிகாது இயல்பாகும், எ—று.

**உ—ம்.:—**

(1) அவனே கொண்டான் என்பது பிரிநிலையும் வினாவும் ஈற்றசையுந் தேற்றமுமாம்.

''ஏயே தனையென்றோ ரிருடி வினவ'' என்பது இசைநிறை.

(2) அவனோ கொண்டான் என்பது ஒழியிசை முதலிய

எட்டுமாம்.

ஏ ஒ முன் வரின் இயல்பு என்றது, "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கல்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். இடைச்சொல் ஏ (முன்) ஒ முன் – இடைச்சொல்லாகிய ஆறேகாரத்தின் முன்னும் எட்டோகாரத்தின் முன்னும், – வரின் இயல்பு – வல்லினம்வரிற் பொதுவிதியான் மிகாது இயல்பாகும். எ–று.

உ–ம்.:–

(1)அவனே கொண்டான் என்பது பிரிநிலையும் வினாவும் ஈற்றசையுந் தேற்றமுமாம். "ஏயேதனையென்றோரிருடி வினவ" என்பது இசைநிறை.

(2)அவனோகொண்டான் என்பது ஒழியிசை முதலிய எட்டுமாம். ஏகாரவோகாரத்துக்கு முன்னியல்பாதல் "ஈற்றியாவினாவிளிப்பெயர் முன் வலியியல்பே" என்னுஞ்சூத்திரத்திலடங்காதோ வேறு கூறவேண்டுவது என்னையெனின்; அங்கே வினாப்பொருளில் வரும் ஏகாரவோகரங்கள் மாத்திரம் அடங்குமன்றி, மற்றப் பொருள்களில்வரும் ஏகார வோகாரங்கள் அடங்கமாட்டா ஆதலின் வேறு கூறப்பட்டன என்றறிக. இவ்விடத்துக்கு உதாரணம் வினாப்பொருளில் வராத ஏகார ஒகாரங்களிற் கொள்க.

வினாப் பொருளில் வந்த ஒகாரவோகரங்களுக்குதாரணம் 'ஈற்றியாவினாவிளிப்பெயர்' என்னுஞ் சூத்திரத்திற் காண்க.

ஏகார வோகாரங்கள் பலபொருளில் வருமென்பது இடைச்சொல்லியலிற் காண்க.

அறமே பொருளே காமமே துறவே நிலமே காற்றே தேயுவே ககனமே என்பன எண்ணுப் பொருளன.

ஏ ஒ முன் வரின் இயல்பு என்றது 'இயல்பினும் விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– இடைச்சொல் – இடைச்சொற்களாகிய, ஏ ஒ முன் – ஏ ஒ என்பவற்றின் முன், வரின் – (வல்லினம்) வந்தால், இயல்பே – (பொது

விதியால் மிகாமல்) இயல்பே யாகும்; எ—று.

உ—ம்.:—

அவனே + கண்டான் = அவனே கண்டான்; அவனோகண்டான்.

வினாப்பொருளில் வரும் ஏகார ஓகாரங்களின் முன் வலி இயல்பாதல் கீழ் "ஈற்றியாவினா" என்னுஞ் சூத்திரத்திற் கூறப்பட்டதனால், இவ் விதி மற்றைப் பொருள்களில் வருமிடத்து எனக் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

இ—ள்.:— இடைச்சொல் ஏ (முன்) ஓ முன் — இடைச்சொல்லாகிய ஏகாரத்தின் முன்னும்ஓகாரத்தின் முன்னும், வரின் இயல்பு — வல்லினம் வரிற் பொதுவிதியான் மிகாது இயல்பாகும். எ—று.

உ—ம்.:—

அவனே கொண்டான். அவனோ கொண்டான்.

'ஏஓ முன் வரின் இயல்பு' என்றது "இயல்பினும் விதியினும்" என்னும் 165 சூத்திரத்தால் எய்தியது விலக்கல்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ—ள்.:—இடைச்சொல் — இடைச்சொல்லாகிய, ஏ (முன்) — (ஆறுவகை) ஏகாரத்தின் முன்னும், ஓ முன் — (எட்டுவகை) ஓகாரத்தின் முன்னும், வரின் — (வல்லினம்) வந்தால், இயல்பும் — (பொது விதியால் மிகாது) இயல்பாகும். எ—று.

பொ—ரை.:— இடைச்சொல்லாகிய ஏகாரத்தின் முன்னும், ஓகாரத்தின் முன்னும் வல்லினம் வந்தால் பொது விதியால் மிகாது இயல்பாகும்.

உ—ம்.:—

அவனே + கொண்டான் = அவனேகொண்டான் — பிரிநிலையும், வினாவும், ஈற்றசையும், தேற்றமுமாம்.

அறமே பொருளே காமமே துறவே — எண்.

எயேதனை யென்றோரிருடிவினவ — இவை நிறை.

அவனோ கொண்டான் — ஒழியிசை முதலிய எட்டுமாம்.

## கா.நமச்சிவாய முதலியார்

இடைச்சொல் — இடைச்சொல்லாகிய, ஏ (முன்)—(ஆறு) ஏகாரத்தின் முன்னும், ஓ முன் (எட்டு) ஓகாரத்தின் முன்னும், வரின் — வல்லினம் வந்தால்,

இயல்பு – (பொதுவிதியால் மிகாது) இயல்பாகும்.

உதாரணம்:–

அவனே கொண்டான்

இது பிரிநிலையும் வினாவும் ஈற்றசையும் தேற்றமுமாம்.

அறமே பொருளே காமமே துறவே – எண்.
அவனோ கொண்டான் – பிரிநிலை.
ஏனைய ஒகாரங்களோடும் இப்படியே ஒட்டிக் காண்க.

## மோசகு பொன்னையா

இடைச் சொற்களாகிய ஏ, ஓ என்பவற்றின் முன்னர் வலிவரின் இயல்பாக முடியும், எ–று.

எ–டு.:–

யானே கள்வன்; நீயோ பெரும.

(52)

**201. வேற்றுமை யாயி னைகா னிறுமொழி
ஈற்றழி வோடுமம் மேற்பவு முளவே.**

**வேற்றுமை ஆயின் ஐகான் இறுமொழி
ஈற்று அழிவோடு அம் ஏற்பவும் உளவே.**

vē̱ṟṟumai āyiṉ aikāṉ iṟumoḻi
īṟṟu aḻivōṭu am ēṟpavum uḷavē.

## இலாசரகு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### WORDS WITH ai AS FINALS

In the casual combination of ai finals (with hard initials) there are some in which the (increment) is added, whether the ai is retained or not.

## ஒப்புமைப் பகுதி

பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்
நினையுங் காலை அம்மொடு சிவணும்

ஐயென் இறுதி யரைவரைந்து கெடுமே
மெய்அவண் ஒழிய என்மனார் புலவர்

(தொல்.: 284)

மெல்லெழுத்து மிகுநவும் வல்லெழுத்து மிகுநவு
மம்மிடை வருநவு முறழ்ச்சி யெய்துநவு
மென்றொருநால் வகைய மரப்பெய ரன்னவை
வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்

(இ.வி.: 83)

ஆவிரை பனையயை, யம்மோடு சிவணும்

(மு.வீ.: 287)

அவற்றுள்
ஆவிரை பனையிறு வையுயி ரழியும்

(மு.வீ.: 288)

## மயிலை நாதர்

எ –ன், எய்தியதன் மேற் சிறப்புவிதி யுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: வேற்றுமை யிடத்து ஐகார வீற்றுச் சொற்களுள், பொது விதியான் வரும் வல்லெழுத்துப் பேறே யன்றி ஐகாரங் கெட்டு அம்முப் பெற்று முடிவனவும் சில உளவாம், எ–று.

வ–று.:–

ஆவிரங்கோடு, வழுதுணங்காய், [1]தூதுளங்காய், தில்லங்காய், பாவட்டங்காய், (ஆவிரை, வழுதுணை, தூதுளை, தில்லை, பாவட்டை) + ([2]செதிள், தோல், பூ) எனவும், ஒலம்போழ் எனவும் வரும். 'ஈற்றழி வோடுமம் மேற்பவு முளவே' [3]என்றதனான் ஈற்றழி வின்றியே அம்மேற்பவும் உளவெனக் கொள்க: அவை, அரையங்காய், [4]பனையங் கோல் எனவரும். 'ஏற்பவும்' என்றது, பொதுவிதி வல்லெழுத்து விலக்காமற் கோடற்கெனக் கொள்க.

பாட வேறுபாடு.:–

1. துணங்காய்
2. செதுள்
3. என்பதனால்
4. மனையங்கோல்

## சங்கர நமச்சிவாயர்

எ – னின், ஐகார ஈற்று நிலைமொழிக்கு எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ-ள்.:- ஐகார ஈற்றுச்சொல் வேற்றுமைக்கண் வருமாயின், இறுதி ஐகாரம் கெடாது அம்முச் சாரியை பெற்று முடிவனவும், ஐகாரம் கெட்டு அம்முச் சாரியை பெற்று முடிவனவும் சிலவுளவாம், எ-று.

உம்மைகள் இரண்டனுள், முன்னையது எதிர்மறைக் கண்ணும், பின்னையது எதிர்மறையோடு இழிவு சிறப்பின் கண்ணும் வந்தன.

உ-ம்.:-

புன்னையங்கானல், கொல்லையஞ்சாரல், கொன்றையந் தீங்குழல், முல்லையம்புறவம் எனவும்; வழுதுணங்காய், ஆவிரம் பூ, வேர் எனவும் வரும்.

தகுதியாக்காது ஏற்பன என்றமையான், முல்லைப்புறவம் என வரினும் கொள்க. அம்மும் என்னாமையின், உம்மையான் வல்லினம் தழீஇயதன்றென்க. வருமொழி வரையாமையின் நாற்கணத்துள் ஏற்பன கொள்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், ஐகாரவீறு புணருமாறு கூறியது.

இ-ள்.:- வேற்றுமையாயின் - வேற்றுமைப் புணர்ச்சிக்கண்ணே வல்லினம் வந்ததாயின், ஐகானிறு மொழி - ஐகார வீற்று நிலைமொழி, ஈற்றழிவோடும் - தன்னீற்று ஐகாரம் கெடுதலுடனே, அம்மேற்பவும் உளவே - அம்முச் சாரியை பெறுதலும் உள, எ-று.

உ-ம்.:-

ஆவிரங்கோடு, வழுதுணங்காய், தூதுணங்காய், தில்லங்காய், பாவட்டங்காய், செதிள், தோல், பூ எனவும் ஓலம்போழ் எனவும் வரும்.

"ஈற்றழிவோடம் மேற்பவும்" என்பதினானே ஈற்றழி வின்றி அம்மேற்பவுமுள. அவை அரையங்காய், மனையங்காய் எனவும் வரும். வல்லெழுத்துப் பேறும் கொள்க.

## விசாகப் பெருமாளையர்

இது, ஐயீற்று நிலைமொழிக்கு எய்தாத தெய்துவிக்கின்றது.

இ-ள்.:- ஐகானிறு மொழி - ஐகார வீற்றுச் சொற்கள், வேற்றுமை யாயின் - வேற்றுமைக்கண் வருமாயின், ஈற்றழிவோடும் - ஈற்றைகாரங் கெடுதலுடனே, அம் - அம்முச் சாரியை, ஏற்பவும் - பெற்று முடிவனவும், உள - சிலவுள, எ-று.

அழிவோடு மென்றமையால் அழியாமையோடும் அம் ஏற்பவு முளவெனக் கொள்க. வருமெழுத்துச் சொல்லாமையால் நாற்கணமுன் கொள்க.

உ-ம்.:-

புன்னை+கானல் - புன்னையங் கானல், முல்லை+புறவம் - முல்லையம் புறவம், வழுதுணை+ காய் - வழுதுணங்காய், ஆவிரை + வேர் - ஆவிரம் வேர் என வரும். ஏற்பவுமுள வென்றதனால் முல்லைப்புறவு என வரினுங் கொள்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஐகாரவீற்றுச் சிறப்புவிதி கூறுஞ் சூத்திரம் யாது?

வேற்றுமை யாயி னைகா னிறுமொழி
ஈற்றழி வோடுமம் மேற்பவு முளவே.

(வேற்றுமை ஆயின் ஐகான் இறுமொழி
ஈற்று அழிவோடும் அம் ஏற்பவும் உளவே.)

**இ-ள்.:- ஐகான் இறுமொழி வேற்றுமை ஆயின் -**ஐகாரவீற்றுச் சொற்கள் வேற்றுமைக்கண் வருமாயின், **ஈற்று அழிவோடும் அம் ஏற்பவும்** உள- ஈற்றைகாரங் கெடுதலுடனே அம்முச்சாரியை பெற்று முடிவனவும் சிலவுள, எ-று.

"ஈற்றழி வோடுமம் மேற்பவு முளவே" என்றமையாற் பெறக்கிடப்பது யாது?

ஈற்றழிவின்றியு மம்மேற்பவு முளவென்பது.

உ-ம்.:-

(1) வழுதுணை-காய்-வழுதுணங்காய், தாழை-பூ- தாழம்பூ, ஆவிரை-வேர்-ஆவிரம்வேர், என ஈற்றைகாரங் கெட்டு அம்முச்சாரியை பெற்றன.

(2) புன்னை-கானல்-புன்னையங்கானல், முல்லை- புறவம்-முல்லையம்புறவம், என ஈற்றைகாரங் கெடாமல் அம்முச்சாரியை பெற்றன.

ஏற்பவுமுள என்றதனால், முல்லைப்புறவம் எனவரினுங் கொள்க, இது எய்தாததெய்வதுவித்தல்.

## முகவை இராமானுச கவிராயர்

**இது**, ஐகாரவீற்று நிலைமொழிக்கு எய்தாதது எய்துவிக்கின்றது.

**இ–ள்.:– வேற்றுமை யாயி னைகா னிறுமொழி** – ஐகார ஈற்றுச்சொல் வேற்றுமைச் சந்தியில் வருமாயின், **ஈற்றழிபொடு மம்மேற்பவு முள** – இறுதி ஐகாரங் கெட்டு அம் சாரியை பெற்று முடிவனவும் கெடாது அம்முச் சாரியை பெற்று முடிவனவுஞ் சில வுளவாம், எ–று.

'அழிபொடு' மென்ற உம்மையால் அழியாமையோடு அம்முச் சாரியை பெற்று முடிவனவுமுள வெனப் பொருளுரைக் கப்பட்டது.

**உ–ம்.:–**

வழுதுணங்காய், ஆவிரம்பூ, தாழங்காய்; பூ, பழம் எனவும்; புன்னையங்கானல், கொல்லையஞ்சாரல், கொன்றையந் தீங்குழல், முல்லையம்புறவம் எனவு முறையே காண்க. 'அம்மேற்பவு' மென்ற இழிவு சிறப்பு உம்மையால், முல்லைப்புறவம், கொல்லைச்சாரல் என வரினுங் கொள்க. வருமொழியை யெடுத்துச் சொல்லாததினாலே நாற் கணத்துள் ஏற்பன கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– ஐகான் இறுமொழி** – ஐகாரவீற்றுச் சொற்கள், **வேற்றுமை ஆயின்** – வேற்றுமைப் புணர்ச்சியில் வருமாயின், **ஈறு அழிவோடு** – ஈற்று ஐகாரங் கெடுதலுடனே, **அம்** – அம்சாரியை, **ஏற்பவும்** – பெற்று முடிவனவும், **உள** – சில உள்ளன.

குறிப்பு :–

'அழிவோடும்' என்ற உம்மையால், அழியாமையோடு 'அம்' ஏற்பவும் உள எனக்கொள்க.

உதாரணம்.:–

மாதுளை + கனி = மாதுளங்கனி
எலுமிச்சை + மரம் = எலுமிச்சமரம்

–ஐ அழிவோடு அம் ஏற்றன.

ஆவிரை + வேர் = ஆவிரம்வேர்
புன்னை + கானல் = புன்னையங்கானல்
முல்லை + தொடை = முல்லையந்தொடை

– ஐ அழியாமையோடு அம் ஏற்றன.

'ஏற்பவுமுள' என்றதனால், முல்லை + புறவு = முல்லைப்புறவு, கொல்லை + சாரல் = கொல்லைச்சாரல் எனப் பொதுவிதி பெற்று வருதலுங் கொள்க.

(வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணத்துள் ஏற்பன கொள்க.)

## ஆறுமுக நாவலர்

**இ—ள்.:—** ஐகான் இறுமொழி — ஐகார வீற்றுச் சொற்கள், **வேற்றுமை ஆயின்** — வேற்றுமைக்கண் வருமாயின், **ஈற்று அழிவோடும் அம் ஏற்பவும் உள** — ஈற்றைகாரங் கெடுதலுடனே அம்முச் சாரியை பெற்று முடிவனவும் சிலவுள, எ — று.

அழிவோடும் என்றமையால், அழியாமையோடும் அம் ஏற்பவுமுளவெனக் கொள்க. வருமெழுத்துச் சொல்லாமையால், நாற்கணத்துள் ஏற்பன கொள்க.

உ — ம்.:—

(1) வழுதுணை + காய் = வழுதுணங்காய், தாழை + பூ = தாழம்பூ, ஆவிரை + வேர் = ஆவிரம்வேர் என ஈற்றைகாரங் கெட்டு அம்முச் சாரியை பெற்றன.

(2) புன்னை + கானல் = புன்னையங்கானல், முல்லை+புறவம் = முல்லையம்புறவம் என ஈற்றைகாரங் கெடாமல் அம்முச் சாரியை பெற்றன.

'ஏற்பவுமுள' என்றதனால், முல்லைப்புறவம் என வரினுங் கொள்க.

இது எய்தாததெய்துவித்தல்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ—ள்.:— ஐகான் இறுமொழி — ஐகாரவீற்றுச்சொற்கள், — **வேற்றுமை ஆயின்** — வேற்றுமைக்கண்வருமாயின், — **ஈற்று அழிவோடும் அம் ஏற்பவும் உள** — ஈற்றைகாரங் கெடுதலுடேனே அம்முச்சாரியை பெற்று முடிவனவும் சிலவுள, — எ—று.

அழிவோடும் என்றமையால், அழியாமையோடும் அம் ஏற்பவு முள வெனக் கொள்க. வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணத்துள் ஏற்பனகொள்க.

உ—ம்.:—

(1)வழுதுணை+காய்=வழுதுணங்காய், தாழை+பூ=தாழம்பூ ஆவிரை + வேர் = அவிரம்வேர் என ஈற்றைகாரங்கெட்டு அம்முச்சாரியை பெற்றன.

(2)புன்னை + கானல் = புன்னையங்கானல். முல்லை+ புறவம் = முல்லையம்புறவம் என ஈற்றைகாரங்கெடாமல் அம்முச்சாரியை பெற்றன.

ஏற்பவுமுள என்றதனால், முல்லைப்புறவம் என வரினுங்

கொள்க.

முல்லைப்புறவம் என்பதற்கு முல்லைகளையுடைய புறவமென்று வேற்றுமைவழிப் பொருள்கொள்ளுக. இது எய்தாததெய்துவித்தல்.

## வை.மு. சடகோபராமானு சாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ-ள்.:- ஐகான் இறு மொழி - ஐகார வீற்றுச் சொற்கள், வேற்றுமை ஆயின் - வேற்றுமைப் புணர்ச்சியில் வருமாயின், ஈறு அழிவோடும் - ஈற்று ஐகாரம் கெடுதலுடனே, அம் - 'அம்' சாரியையை, ஏற்பவும் - பெற்று முடிவனவும், உள - சிலவுள்ளன; எ-று.

'அழிவோடும்' என்ற உம்மையால், அழியாமையோடு அம் ஏற்பவும் உள என்க. வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணத்துள் ஏற்பன கொள்க.

உ-ம்.:-

தாழை + பூ = தாழம்பு

எலுமிச்சை + மரம் = எலுமிச்சமரம்

ஆவிரை + வேர் = ஆவிரம்வேர் - ஐ அழிவோடு அம் ஏற்றன.

புன்னை + கானல் = புன்னையங்கானல்

முல்லை + தொடை = முல்லையந்தொடை - ஐ அழியாமையோடு அம் ஏற்றன.

'ஏற்பவுமுள' என்றதனால், முல்லை + புறவு = முல்லைப்புறவு, கொல்லை + சாரல் = கொல்லைச்சாரல் எனப் பொதுவிதி பெற்று வருதலும் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

இ-ள்.:- ஐகான் இறுமொழி - ஐகார வீற்றுச் சொற்கள், வேற்றுமை ஆயின் - வேற்றுமைக்கண் வருமாயின், ஈற்று அழிவோடும் அம் ஏற்பவும் உள - ஈற்றைகாரங் கெடுதலுடனே அம் என்னும் சாரியை பெற்று முடிவனவும் சிலவுள. எ-று.

'அழிவோடும்' என்றமையால், அழியாமையோடும் அம் ஏற்பவுமுளவெனக் கொள்க. வருமெழுத்துச் சொல்லாமையால், நாற்கணத்துள் ஏற்பன கொள்க.

உ-ம்.:-

(1) வழுதுணை + காய் = வழுதுணங்காய், தாழை + பூ = தாழம்பூ, ஆவிரை + வேர் = ஆவிரம்வேர் - ஈற்றைகாரங் கெட்டு அம்முச் சாரியை பெற்றன.

(2) புன்னை + கானல் = புன்னையங்கானல், முல்லை + புறவம் = முல்லையம்புறவம் – ஈற்றைகாரங் கெடாமல் அம்முச்சாரியை பெற்றன. 'ஏற்பவுமுள' என்றதனால், முல்லைப்புறவம் என வரினுங் கொள்க. இது எய்தாததெய்து வித்தல்

## கா.நமச்சிவாய முதலியார்

ஐகானிறுமொழி – ஐகாரவீற்றுச் சொற்கள், **வேற்றுமையாயின்**– வேற்றுமைக்கண் வருமாயின், ஈற்றழிவோடும் – ஈற்றைகாரங் கெடுதலுடனே, **அம்** – அம்முச் சாரியை, ஏற்பவும் – பெற்று முடிவனவும், உள – சிலவுள.

'அழிவோடும்' என்றமையால், அழியாமையோடும் அம் ஏற்பவு முளவெனக் கொள்க. வருமெழுத்துச் சொல்லாமையால் நாற்கணத்துள்ளும் ஏற்பன கொள்க.

புன்னை + கானல் = புன்னையங்கானல்

முல்லை + புறவம் = முல்லையம்புறவம்

– ஐ கெடாது அம்முப் பெற்றன.

வழுதுணை + காய் = வழுதுணங்காய்
ஆவிரை + வேர் – ஆவிரம்வேர்

– ஐ கெட அம்முப் பெற்றன.

தாழை + பூ = தாழம்பூ
'ஏற்பவு முள' என்றதனால், முல்லைப்புறவு என வரினுங் கொள்க.

## மோசசு பொன்னையா

ஐகார ஈற்றுச் சொற்கள்வேற்றுமைப் புணர்ச்சியின்கண் இறுதி ஐகாரங் கெட்டும் அம்முச்சாரியை பெற்றும் ஏற்றபெற்றி முடிவன உள, எ–று.

அழிவோடும் என்றதனால், அழியாமையோடு அம் ஏற்பனவும் கொள்க.

எ–டு.:–

வழுதுணங்காய்; தாழம்பூ; ஆவிரம்வேர்
– ஈற்று ஐ கெட்டு அம் பெற்றன.

புன்னையங்கானல்; முல்லையம்புறவம்
– ஈற்று ஐ கெடாது அம் பெற்றன.

ஏற்பனவும் என்றதனால், முல்லைப்புறவம் எனப் பொது விதியால் முடிவனவற்றையுங் கொள்க.

(52)

**202.** பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்
ஐபோ யம்முந் திரள்வரி னுறழ்வும்
அட்டுறி னைகெட்டந் நீள்வுமாம் வேற்றுமை.

பனை முன் கொடி வரின் மிகலும் வலி வரின்
ஐ போய் அம்மும் திரள் வரின் உறழ்வும்
அட்டு உறின் ஐ கெட்டு அம் நீள்வும் ஆம் வேற்றுமை.

panai mun koti varin mikalum vali varin
ai pōy ammum ṭiraḷ varin uraḷvum
attu urin ai kettu am nīḷvum ām vērrumai.

## ஒப்புமைப் பகுதி

கொடிமுன் வரினே ஐயவண் நிற்பக்
கடிநிலை யின்றே வல்லெழுத்து மிகுதி

(தொல்.: 286)

பனையின் முன்னர் அட்டுவரு காலை
நிலையின் றாகும் ஐயென் உயிரே
ஆகாரம் வருதல் ஆவயி னான

(தொல்.: 285)

பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரி
னைபோ யம்முந் திரள்வரி னுறழ்வு
மட்டுறி னைக்கெட் டாவு மாம்பிற.

(இ.வி.: 84)

பனைமுன் கொடிவரின் மிகுமென மொழிப

(மு.வீ.: 289)

அட்டு வரினா வாகு மென்ப

(மு.வீ.: 290)

## மயிலை நாதர்

எ–ன், எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று

இ–ள்.: பனை யென்னும் பெயர்முன் கொடி யென்பது வரின், வந்தது மிகலும், வல்லெழுத்து வரின் ஐகாரங் கெட்டு [1]அம்முப் பெறுதலும், திரளென்னு மொழிவரின் அம்முடன் உறழ்தலும், அட்டென்பது வரின் ஐகாரங் கெட்டு [2]வருமொழி முதல்நீளுதலுமாம், வேற்றுமைக்கண், எ – று.

வ–று.:–

பனைக்கொடி எனவும், பனங்காய், [2]பனஞ்செறும்பு, பனந்தூண், பனம்பழம் எனவும், பனைத்திரள் பனந்திரளெனவும், பனாட்டு எனவும் முறையே காண்க.

இதற்குவரும் அகலம் உரைத்துக்கொள்க;

"அகல மென்பதாசறக் கிளப்பின்,
விகல மின்றி விரித்துரைப் பதுவே"
(காரி – உரை)

## சங்கர நமச்சிவாயர் சிவஞான முனிவர்

எ – னின், பனை என்னும் நிலைமொழிக்கும் அதனோடு புணரும் சில வருமொழிகட்கும், *'இயல்பினும் விதியினும்' என்னும் சூத்திரத் தானும் மேலைச் சூத்தித் தானும்* எய்தியவற்றை இகந்துபடாமற் காத்தலும், *'இ ஈ ஐ வழி' என்னும் சூத்திரத்தான்* எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தலும் நுதலிற்று.

இ–ள்.:– பனை என்னும் பெயர்முன், கொடி என்னும் பெயர் வருமாயின் வந்தது மிகுதலும், க ச த பக்கள் வரின் நிலைமொழி யீற்று ஐகாரம் கெட்டு அம்முப் பெறுதலும், திரள் என்னும் பெயர் வருமாயின் வந்தது மிகுந்தும் ஐ போய் அம்முப் பெற்றும் தம்முள் உறழ்தலும், அட்டு என்னும் பெயர் வருமாயின் ஐகாரங் கெட வருமொழி அகரம். ஆகாரமாதலுமாம். வேற்றுமைக்கண், எ–று.

கெட்டு என்பது செயவெனெச்சம் திரிந்து நின்றது.

உ–ம்.:–

பனைக்கொடி எனவும்;

பனங்காய், செறும்பு, தூண், பழம் எனவும்;

பனைத்திரள், பனந்திரள் எனவும்; பனாட்டு எனவும் வரும்.

பனைக்கொடி என்பது பனையை எழுதிய கொடி. பனாட்டு என்பது பனையினது தீங்கட்டி

பாட வேறுபாடு.:–

1. அம்முறுதலும்
2. வருமொழிக்கு

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், பனையென்னும் ஐகாரவீற்றுப் புணர்ச்சி கூறியது.

இ–ள்.: பனைமுன் கொடிவரின் – நிலையாக நின்ற பனை யென்னும்

பெயர் முன்னர் சேரன் அணியும் கொடி வரின், மிகலும் – வந்த கொடி முதன் வன்மை மிகலும், வலி வரின் – மற்றும் வன்மை வந்தால், ஐபோயம்மும் – நிலையாக நின்ற தன் ஈற்றைகாரம் போய் அம்முச் சாரியை பெறுதலும், திரள் வரின் உறழ்வும் – திரள் என்பது வரின் அப் பெற்றிடலொடு விகற்பித்தும், அட்டுறின் – அட்டு என்பது வரின், ஐகெட்டந் நீள்வுமாம் – ஈற்றினின்ற ஐகாரம் போய் வந்த அகரம் ஆகாரம் ஆதலுமாம், வேற்றுமை – வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண், எ–று.

உ–ம்.:–

பனைக்கொடி, பனங்காய், செறும்பு, தூண், பழம் எனவும்;
பனந்திரள், பனை திரள் எனவும்;

பனாட்டு எனவும் முறையே காண்க. இதற்கு வரும் அகலமும் உரையிற் கொள்க.

## விசாகப் பெருமாளையர்

இது, பனை யென்கிற நிலைமொழிக்கும் அதனோடு புணருஞ் சில வருமொழிக்கும் இயல்பினு மென்பதனாலு மேலைச் சூத்திரத்தாலும் எய்தியவற்றை யிகந்து படாமைக் காத்தலும், இ ஈ ஐ வழி யென்பதனால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தலுஞ் சொல்லுகின்றது,

இ–ள்.:– பனைமுன்–பனை யென்னும் பெயர் முன், கொடி வரின்–கொடி யென்னும் பெயர் வருமாயின், மிகலும் – வந்தது மிகலும், வலி வரின்–க ச த பக்கள் வருமாயின், ஐ போய் – நிலைமொழி யீற்றைகாரங் கெட்டு, அம்மும் – அம்முப் பெறுதலும், திரள்வரின் – திரளென்னும் பெயர் வருமாயின், உறழ்வும் – வந்தது மிகுந்தும் ஐ போய் அம்முப் பெற்றும் விகற்பித்தலும், அட்டுறின் – அட்டென்னும் பெயர் வருமாயின் ஐ கெட்டு ஐகாரங் கெட்டு, அந் நீளவும் – வருமொழி அகரம் ஆகாரமாதலும், ஆம்–ஆகும், வேற்றுமை–வேற்றுமைக்கண், எ– று.

உ–ம்.:–

பனைக்கொடி எனவும், பனங்காய்+செறும்பு, தூண், பழம் எனவும்; பனைத்திரள்–பனத்திரள் எனவும், பனாட்டு எனவும் வரும்.

## ஆ· முத்துத்தம்பிப் பிள்ளை

மேலைச் சூத்திரவிதியில் அடங்காத ஐகாரவீற்றுச் சொல் ஒன்றற்கு விதி கூறுஞ் சூத்திரம் யாது?

பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்
ஐபோ யம்முந் திரள்வரி னுறழ்வும்

அட்டுறி னைகெட்டந் நீள்வுமாம் வேற்றுமை.

(பனை முன் கொடிவரின் மிகலும் வலிவரின்
ஐபோய் அம்மும் திரள்வரின் உறழ்வும்
அட்டு உறின் ஐ கெட்டு அம்நீள்வும் ஆம் வேற்றுமை)

**இ-ள்.: பனைமுன் கொடிவரின் மிகலும்** - பனையென்னும் பெயர்முன் கொடியென்னும் பெயர் வருமாயின் வந்தது மிகலும், **வலிவரின் ஐபோய் அம்மும்** - க ச த பக்கள் வருமாயின் நிலை மொழி யீற்றைகாரங் கெட்டு அம்முப் பெறுதலும், **திரள்வரின் உறழ்வும்** - திரளென்னும் பெயர் வருமாயின் வந்தது மிகுந்தும் ஐபோய் அம்முப்பெற்றும் விகற்பித்தலும், **அட்டு உறின் ஐகெட்டு அம் நீள்வும் ஆம் வேற்றுமை** - அட்டென்னும் பெயர் வருமாயின் ஐகாரங் கெட்டு வருமொழி அகரம் ஆகாரமாதலும் ஆகும் வேற்றுமைக்கண், எ-று.

பனைமுன் வல்லினம் மிகுவது எவ்வழி?

"பனைமுன் கொடிவரின் மிகலாம் வேற்றுமை"

**உ-ம்.:-**

பனைக்கொடி.

பனை ஐபோய் அம்பெறுவது எவ்வழி?

"பனை முன் வலிவரின் ஐபோ யம்மாம் வேற்றுமை"

**உ-ம்.:-**

பனங்காய், பனஞ்செறும்பு, பனந்தூண், பனம்பழம்.

பனைமுன் திரள்வரின் எவ்வாறாம்?

"பனைமுன் திரள்வரின் உறழ்வாம் வேற்றுமை"

**உ-ம்.:-**

பனைத்திரள், பனந்திரள்.

பனை ஐபோய் அம் நீளப்பெறுவது எவ்வழி?

"அட்டுறின் ஐகெட் டந்நீள்வாம் வேற்றுமை"

**உ-ம்.:-**

பனாட்டு. பனைமுன் கொடிவரின் மிகும் என்றது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்திய

திகந்து படாமைக் காத்தல். வலிவரின் ஐ போய் அம்முப்பெறும் என்றது "வேற்றுமையாயின்" என்னும் மேலைச்சூத்திரத்தால் எய்தியதிகந்து படாமைக்காத்தல்; திரள் வரின் உறழ்வாம் என்றது "இயல்பினும்" என்பதனாலும், மேலைச்சூத்திரத்தாலும் எய்தியதிகந்து படாமைக்காத்தல்; அட்டுறின் ஐ கெட்டு அம் நீளும் என்றது " இ ஈ ஐ வழி" என்பதனால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** பனை யென்னு நிலைமொழிக்கும் அதனொடு புணருஞ் சில வருமொழிகட்கும் எய்தியது பிறழாமற் காத்தலும், விலக்கிப் பிறிது விதி வகுத்தலு முணர்த்துகின்றது.

**இ–ள்.:– பனைமுன் கொடிவரின் மிகலும்** – பனை யென்னும் ஐகார வீற்றுப் பெயர்முன் கொடி யென்னுஞ் சொல் வந்து புணரின் ககர வல்லெழுத்து மிகலும், **வலிவரி னைபோ யம்மும்** – கசதபக்கள் வரின் நிலைமொழி யீற்று ஐகாரங் கெட்டு அம்முச் சாரியை பெறுதலும், **திரள் வரி னுறழ்வும்** – திரளென்னுஞ் சொல் வந்து புணரின் வந்தது மிகுந்தும் ஐகாரங் கெட்டு அம்முப் பெற்றுந் தம்முள் விகற்பித்தலும், **அட்டுறின்** – அட்டென்னுஞ் சொல் வந்து புணரின், **ஐகெட்டு** – ஐகாரங் கெட்டு, **அந்நீளலுமாம் வேற்றுமை** – அவ் வருமொழிக்கு முதனின்ற அகரம் ஆகார மாதலுமாம் வேற்றுமைச் சந்தியில், எ–று.

'கெட' என்கின்ற செய வென்னெச்சம் கெட்டு எனத் திரிந்து நின்றது.

உ–ம்.:–

பனைக்கொடி எனவும்,

பனங்காய், பனஞ்செதும்பு, பனந்தூண், பனம்பழம் எனவும்,

பனைத்திரள், பனந்திரள் எனவும்,

பனாட்டு எனவும் வரும். பனைக்கொடி – பனையை யெழுதிய கொடி யெனவும், பனாட்டு – பனையினது தீங்கட்டி எனவும் விரியும். மிகலும், அம்மும், உறழ்வும் நீளலும் ஆம் என முடித்துக் கொள்க.

"பனையு மரையு மாவிரைக் கிளவியும் நினையுங்
காலை யம்மொடு சிவணு மையெனிறுதி
யரைவரைந்து கெடுமே மெய்யவ ணொழிய
வென்மனார் புலவர்" – எனவும்,

"பனையின் முன்ன ரட்டு வரு காலை
நிலையின் றாகு மையெ னுயிரே
யாகாரம் வருத லாவயி னான" – எனவும்,

"கொடிமுன் வரினே ஐயவ ணிற்பக்
கடிநிலை யின்றே வல்லெழுத்து மிகுதி"

எனவும் ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலுங் காண்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– பனை முன்** – 'பனை' என்னும் பெயரின் முன், **கொடி வரின்** – 'கொடி' என்னும் பெயர் வருமாயின், **மிகலும்** – (வந்த ககரம்) மிகுதலும்; **வலிவரின்** – கசதபக்கள் வருமாயின், **ஐபோய்** – (நிலைமொழி ஈற்று) ஐகாரங் கெட்டு, **அம்மும்** – அம்முச்சாரியை பெறுதலும், **திரள்வரின்** – 'திரள்' என்னும் பெயர் வருமாயின், **உறழ்வும்** – (வந்த தகரம் மிகுந்தும் ஐபோய் அம்சாரியை பெற்றும்) விகற்பித்தலும்; **அட்டு உறின்** – 'அட்டு' என்னும் பெயர் வருமாயின், **ஐ கெட்டு** – (நிலைமொழியீற்று) ஐகாரங் கெட்டு, **அ நீள்வும்** – வருமொழி முதல் அகரம் ஆகாரமாதலும், **ஆம்** – ஆகும்; **வேற்றுமை** – வேற்றுமைப் புணர்ச்சியில்.

**உதாரணம். :–**

பனை + கொடி = பனைக்கொடி – (மிகுந்தது).
பனை+காய்=பனங்காய் பனஞ்செறும்பு, பனந்தூண்,
பனம்பழம் – ஐ போய் அம் பெற்றது.

பனை + திரள் = பனைத்திரள், பனந்திரள்–
(உறழ்ந்தது)

பனை + அட்டு = பனாட்டு – அ நீண்டது

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: பனை முன்** – பனையென்னும் பெயர் முன், **கொடி வரின் மிகலும்** – கொடி யென்னும் பெயர் வருமாயின் வந்தது மிகுதலும், **வலி வரின் ஐ போய் அம்மும்** – க ச த பக்கள் வருமாயின் நிலைமொழி யீற்றைகாரங் கெட்டு அம்முப் பெறுதலும், **திரள் வரின் உறழ்வும்** – திரளென்னும் பெயர் வருமாயின் வந்தது மிகுந்தும் ஐ போய் அம்முப் பெற்றும் விகற்பித்தலும். **அட்டு உறின் ஐ கெட்டு அந் நீள்வும்** – அட்டென்னும் பெயர் வருமாயின் ஐகாரங் கெட்டு வருமொழி அகரம் ஆகாரமாதலும், **ஆம் வேற்றுமை** – ஆகும் வேற்றுமைக்கண், எ – று.

**உ –ம்.:–**

பனைக்கொடி எனவும், பனங்காய், செறும்பு, தூண், பழம் எனவும், பனைத்திரள், பனந்திரள், எனவும், பனாட்டு எனவும் வரும். பனைக்கொடி - பனையை எழுதிய கொடி. பனாட்டு - பனையினது தீங்கட்டி.

'பனைமுன் கொடிவரின் மிகும்' என்றது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்திய திகந்துபடாமைக் காத்தல்; வலி வரின் ஐ போய் அம்முப் பெறும் என்றது, "வேற்றுமையாயின்" என்னும் மேலைச் சூத்திரத்தால் எய்திய திகந்துபடாமைக் காத்தல்; திரள் வரின் உறழ்வாம் என்றது "இயல்பினும்" என்பதனாலும் மேலைச் சூத்திரத்தாலும் எய்திய திகந்துபடாமைக் காத்தல்; அட்டுறின் ஐ கெட்டு அந்நீள்வும் என்றது "இ ஈ ஐவழி" என்பதனால் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ-ள்.:- பனைமுன் - பனையென்னும் பெயர்முன், - கொடிவரின் மிகலும் - கொடியென்னும் பெயர் வருமாயின் வந்ததுமிகுதலும் - வலிவரின் ஐ போய் அம்மும் - கசத பக்கள் வருமாயின் நிலைமொழியீற்றைகாரங் கெட்டு அம்முப்பெறுதலும், - திரள்வரின் உறழ்வும் - திரளென்னும்பெயர் வருமாயின் வந்தது மிகுந்தும் ஐபோய் அம்முடபெற்றும் விகற்பித்தலும், - அட்டு உறின் ஐ கெட்டு அ நீள்வும், - அட்டென்னும் பெயர் வருமாயின் ஐகாரங் கெட்டு வருமொழி அகரம் ஆகாரமாதலும், - ஆம் வேற்றுமை - ஆகும் வேற்றுமைக்கண். எ-று.

உ-ம்.:-

பனைக்கொடி, எனவும் பனங்காய், செறும்பு, தூண், பழம் எனவும் பனைத்திரன், பனந்திரன், எனவும் பனாட்டு எனவும் வரும். பனைக்கொடி - பனையை எழுதியகொடி, பனாட்டு - பனங்கனிச்சாரம் வெயிலிலுலர்த்தப்பட்டது.

பனைமுன் கொடிவரின் மிகும் என்றது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதிகந் துபடாமைக் காத்தல்; வலிவரின் ஐபோய் அம்முப்பெறும் என்றது "வேற்றுமையாயின்" என்னும் மேலைச் சூத்திரத்தால் எய்திய திகந்துபடாமைக் காத்தல்; திரள்வரின் உறழ்வும் என்றது "இயல்பினும்" என்பதனாலும் மேலைச் சூத்திரத்தாலும் எய்தியகந் துபடாமைக் காத்தல்; அட்டுறின் ஐ கெட்டு அந்நீளும் என்றது "இஈஐ வழி" என்பதனால்

எய்தியது விலக்கிப் பிறிதுவிதிவகுத்தல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ—ள்.:—** **பனைமுன்** — பனை என்னும் பெயரின் முன், **கொடி வரின்** — கொடி என்னும் பெயர் வருமாயின், **மிகலும்** — (வந்த ககரம்) மிகுதலும், **வலி வரின்** — க ச த பக்கள் வருமாயின், **ஐ போய்** — (நிலைமொழி யீற்று) ஐகாரம் கெட்டு, **அம்மும்** — 'அம்' சரியை பெறுதலும், **திரள் வரின்**—திரள் என்னும் பெயர் வருமாயின், **உறழ்வும்** — (வந்த தகரம் மிகுந்ததும், ஐ போய் 'அம்'சாரியை பெற்றும்) விகற்பித்தலும், **அட்டு உறின்** — அட்டு என்னும் பெயர் வருமாயின், **ஐ கெட்டு** — (நிலைமொழியீற்று) ஐகாரம் கெட்டு, **அ நீள்வும்** (வருமொழி முதல்) அகரம் ஆகாரமாதலும், **ஆம்** — ஆகும்; **வேற்றுமை** — வேற்றுமைப் புணர்ச்சியில்; எ—று.

**உ—ம்.:—**

(1) பனை + கொடி = பனைக்கொடி — மிக்கது.

(2) பனை + காய் = பனங்காய் — ஐகெட்டு 'அம், பெற்றது.

(3) பனை + திரள் = பனைத்திரள், பனந்திரள் — உறழ்ந்தது.

(4) பனை + அட்டு = பனாட்டு — ஐ கெட்டு அ நீண்டது.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள்.:—** **பனைமுன்** — பனையென்னும்பெயர்முன், **கொடிவரின் மிகலும்** — கொடியென்னும் பெயர் வருமாயின் வந்தது மிகுதலும், **வலி வரின் ஐ போய் அம்மும்** — க ச த பக்கள் வருமாயின் நிலைமொழியிற்றைகாரங் கெட்டு அம்முப் பெறுதலும். **திரள்வரின் உறழ்வும்** — திரளென்னும் பெயர் வருமாயின் வந்தது மிகுந்தும் ஐ போய் அம்முப் பெற்றும் விகற்பித்தலும். **அட்டு உறின் ஐ கெட்டு அ நீள்வும்** — அட்டென்னும் பெயர்வருமாயின் ஐகாரங் கெட்டு வருமொழிஅகரம் அகாரமாதலும். **ஆம் வேற்றுமை** — ஆகும் வேற்றுமைக்கண். எ—று.

**உ—ம்.:—**

பனை + கொடி = பனைக்கொடி — மிகுந்தது.

பனை + காய் = பனங்காய் — ஐ கெட்டு அம் ஏற்றது.

பனை + திரள் = பனைத்திரள், பனந்திரள் — உறழ்வு.

பனை + அட்டு – பனாட்டு, ஐ கெட்டு அ நீண்டது

(பனைக்கொடி – பனையை எழுதிய கொடி. பானட்டு – பனையினது தீங்கட்டி)

பனைமுன் கொடி வரின் மிகும் என்றது "இயல்பினும் விதியினும்" என்னும் 165 ஆவது சூத்திரத்தால்எய்திய திகந்து படாமைக்காத்தல்; வலி வரின் ஐ போய் அம்முப் பெறும் என்றது "வேற்றுமையாயின்" என்னும் மேலைச்சூத்திரத்தால் எய்திய திகந்துபடாமைக் காத்தல்.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) பனைமுன் – பனையென்னும் பெயர்முன், **கொடிவரின்** – கொடி என்னும் பெயர் வருமாயின், **மிகலும்** – வந்தது மிகலும் ;

(2) **வலிவரின்** – க ச த பக்கள் வருமாயின், **ஐபோய்** – நிலைமொழியீற்று ஐகாரங் கெட்டு, **அம்மும்** – அம்முப் பெறுதலும் ;

(3) **திரள்வரின்** – திரள்என்னும் பெயர்வருமாயின், **உறழ்வும்** – (வந்தது மிகுந்தும் ஐபோய் அம்முப்பெற்றும்) விகற்பித்தலும்;

(4) **அட்டுறின்** – அட்டு என்னும் பெயர் வருமாயின், **ஐகெட்டு** – ஐகாரங்கெட்டு, **அ நீள்வும்** – வருமொழி அகரம் ஆகாரமாதலும், **ஆம்** – ஆகும், **வேற்றுமை** – வேற்றுமைக்கண்.

(1) பனை + கொடி = பனைக்கொடி – மிகுந்தது.

(2) பனை + காய் = பனங்காய்
+ செறும்பு = பனஞ்செரும்பு – ஐ கெட்டு அம்பெற்றது.
+ தூண் = பனந்தூண்
+ பழம் = பனம்பழம்

(3) பனை + திரண் = பனைத்திரண், பனந்திரள் – உறழ்ந்தது.

(4) பனை + அட்டு = பனாட்டு – ஐ கெட்டு அ நீண்டது.

## மோசகு பொன்னையா

வேற்றுமைப் புணர்ச்சியில் பனை என்னும் பெயர் முன்னர் கொடி என்னும் பெயர் வரின், ககரம் மிகலும், கசதபக்கள் வரின், நிலைமொழியின் ஈற்று ஐகாரம் கெட்டு அம்சாரியை பெறுதலும், திரள் என்னும் பெயர் வரின், வந்த வலிமிகுதலும், அம்சாரியை பெறுதலுமாக விகற்ப முடிவேற்றலும், அட்டு என்னும் பெயர் வரின், நிலைமொழியின் ஈற்று ஐகாரம் கெட்டு வருமொழி

முதல் அகரம் நீளலும் ஆகும். எ-று.

எ-டு.:-

பனைக்கொடி, பனங்குடை, பனைத்திரள், பனந்திரள், பனாட்டு.

பனைக்கொடி -பனை எழுதிய கொடி.பனாட்டு - பனை வெல்லம்.

மரம் என்ற சொல் மர என விகாரப்பட்டு நின்று அடி என்ற அகர முதன் மொழியோடு புணரின் மராஅடி என முடியும் என அறிகிறோம். அவ்வாறே பனை என்ற சொல்லும் ஐகாரம் ஒரு மாத்திரையளவாகி அகரமொத்து ஒலித்துப் பன என விகாரப்பட்டு நின்று அட்டு என்ற அகர முதன் மொழியோடு புணரின் பனாஅட்டு என முடியும் என்பதே இயல்பாகும். தொல்காப்பியரும்

*பனையின் முன்னர் அட்டுவரு காலை*
*நிலையின் றாகும் ஐயென் உயிரே*
*ஆகாரம் வருதல் ஆவயி னான.*

எனக் கூறி அது பனாஅட்டு எனப் புணரும் என்றே விதி கூறினார். இவ்வாசிரியர் காலத்தில் பனாட்டு என வழங்கிற்றுப் போலும்.

(53)



உயிரீற்றுப்புணரியல் முற்றிற்று.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
### சென்னை - 600 113

## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை-ஒப்பனையியல் | 250.00 |
| தமிழிலக்கியக் குறியீடுகள் அகராதி | 225.00 |
| அரங்கேற்றுகாதை ஆராய்ச்சி | 140.00 |
| பழந்தமிழ் அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள் | 45.00 |
| Essays and Tributes on Tirukkural (1886-1986) | 100.00 |
| இந்தியச் சூழலில் மொழிஇழப்பு ஒரு சமுதாய மொழியியல் பார்வை | 60.00 |
| நீறணி பவளக் குன்றம் | 35.00 |
| உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார் | 35.00 |
| கலீலியோ முதல் கலாம் வரை | 35.00 |
| குலோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுர தீபம் | 60.00 |
| தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள் | 30.00 |
| நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி | 30.00 |
| ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம் | 30.00 |
| சிறுபஞ்சமூலம்- ஒரு சமூகவியல் பார்வை | 30.00 |
| சங்கத் தமிழ் பகுதி 1 | 100.00 |
| சங்கத் தமிழ் பகுதி 2 | 100.00 |
| சங்கத் தமிழ் பகுதி 3 | 115.00 |
| சங்கத் தமிழ் பகுதி 4 | 130.00 |
| சங்கத் தமிழ் பகுதி 5 | 110.00 |
| ம.பொ.சி.யின் வாழ்க்கை வரலாற்று இலக்கியங்கள் | 60.00 |
| தொல்காப்பியம், சங்க இலக்கியம் பதிப்பும் பதிப்பாளரும் | 160.00 |
| இந்தி நாடகப்பனுவல் (ஆடிமாதத்தில் ஒரு நாள்) | 50.00 |
| திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையின் பங்கு | 40.00 |
| பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம் | 70.00 |
| காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஓர் ஆய்வு | 40.00 |
| Freudism in the Novels of James Joyce and T.Jankiraman: A comparative study | 125.00 |
| இலக்கணத்தொகை யாப்பு பாட்டியல் | 290.00 |
| தென்கிழக்கு ஆசியா நாடுகளில் தமிழ்ப்பண்பாடு | 310.00 |
| பதிற்றுப்பத்து மூலமும் ஆராய்ச்சிப்புத்துரையும் | 170.00 |
| தமிழ் மொழிபெயர்ப்பு முன்னோடிகள் | 185.00 |
| மனிதப் புனிதர் கக்கன் | 110.00 |
| மொழிபெயர்ப்பு:ஒரு கவின்கலை | 75.00 |
| மூவர்தமிழ் மூன்று பார்வைகள் | 50.00 |
| காமன்வெல்த் நாடுகளின் கவிதைகள் | 100.00 |
| அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா | 145.00 |
| அறிஞர் அண்ணா-மொபசான் சிறுகதைகள்-ஒப்பாய்வு | 160.00 |
| இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள் | 55.00 |
| கடலடியில் தமிழர் நாகரிகம் | 55.00 |
| கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்) | 150.00 |
| சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள் | 55.00 |
| சங்க அகப்பாடல்கள் தோழி கூற்று | 170.00 |

**695 நன்னூல் உரைவளம் 7 (உயிரீற்றுப் புணரியல் 2) 160.00**